மாநில அளவில் அதிக விற்பனை ஆகும் புத்தகம்

## கே. விஜயகுமார்



50,000 பிரதிகளுக்கு மேல் விற்பனையில்

விரிவான விளக்கமும்,
தகவல்களும் கொண்டு
வாசகர்களைக் கவரும் புத்தகம்.
- அக்ஷய் குமார்.

சந்தன கடத்தல்

# வீரப்பன் வேட்டை

தமிழில்: ஜி.கே.இந்திரன்


மாநில அளவில் அதிக விற்பனை ஆகும் புத்தகம்
கே. விஜயகுமார்


50,000
பிரதிகளுக்கு
மேல்
விற்பனையில்
விரிவான விளக்கமும்,
தகவல்களும் கொண்டு
வாசகர்களைக் கவரும் புத்தகம்.
- அக்ஷய் குமார்.
சந்தன கடத்தல்
வீரப்பன்
வேட்டை


தமிழில்: ஜி.கே.இந்திரன்

**கே. விஜயகுமார்,** முன்னாள் இந்திய காவல்துறை அதிகாரி, ஸ்பெஷல் டாஸ்க் ஃபோர்ஸின் (STF) தலைவர்; 2004 இல் ஆபரேஷன் குக்கூன் மூலம் இந்த தீவிர கொள்ளைக்காரனை கொன்றவர். திரு. குமார், 1975 பாட்ச் அதிகாரி, தமிழ்நாடு பிரிவு. சர்தார் வல்லபாய் படேல் நேஷனல் ரிசர்வ் போலீஸ் அகடமி, ஐதராபாத்தில் 2008 இல் தலைமை வகித்து டைரக்டர் ஜெனரல் ஆஃப்

சென்டரல் ரிசர்வ் போலீஸ் ஃபோர்ஸ் (CRPF) ஆகவும் 2010லிருந்து 2012 வரைக்கும் பணிபுரிந்தார். தற்பொழுது அவர் சீனியர் செக்யூரிட்டி அட்வைசராக உள்துறை அமைச்சகத்தில் பணியாற்றி வருகிறார்.

நிறைய கதைகள், நிறைய மொழிகள்

**ஏகா என்றால் ஒற்றுமை. 'பலவற்றை' 'ஒன்றாகக்' கொண்டுவருவது என்று பொருள்.** இந்தியாவிலுள்ள பல மொழிகளில் பிரசுரிக்கப்பட எழுத்துக்களைச் சேகரித்து, நாட்டில் சிறப்பானவர்களின் புத்தகங்களை பிரசுரித்து, மற்றவர்களும் அவற்றைப் படிக்க உதவுவது தான், வெஸ்ட்லேண்டின் புதிய மொழி (இம்ப்ரின்ட்) அச்சிட்டின் உருவாக்கத்தின் நோக்கம் ஆகும். குறுக்கு—மொழிபெயர்ப்புகள் மூலம், இலக்கியத்தை பலதரப்பட்ட வித்தியாசமான மொழிச்சந்தைகளுக்கு எடுத்துச் சென்று, எழுத்தாளர்களையும், வாசகர்களையும் கலாசாரம் மற்றும் சூழல்களின் வித்தியாசங்கள் இன்றி இணைப்பது தான் ஏகாவின் குறிக்கோள். நம் நாட்டில் இருபத்தி—மூன்று பணித்துறை சார்ந்த மொழிகளும், 700 கிளை மொழிகளும் உள்ளன; அதனால் மொழிபெயர்ப்பு ஒரு அலங்காரம் அல்ல—அவசர தேவை.

பத்து மொழிகளில் சுயமாக எழுதும் எழுத்தாளர்களின் புத்தகங்களை ஏகா பிரசுரிக்கும்: ஹிந்தி, உருது, பெங்காலி, குஜராத்தி, மராத்தி, ஒடியா, கன்னடம், தெலுங்கு, தமிழ் மற்றும் மலையாளம். இந்த மொழிகளில் ஒன்றுக்கொன்று மொழிபெயர்க்கப்படும் படைப்புகள், மேலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் படைப்புகளும் பிரசுரிக்கப்படும். 2019 ஆண்டில் வெளி வர இருக்கும் 100 புத்தகங்களின் எழுத்தாளர்கள் பட்டியலில் சிலர்: மனோரஞ்சன் ப்யாபாரி (பெங்காலி), சிர்ஷோ பந்த்யோபாத்யை (பெங்காலி), விவேக் ஷான்பாக் (கன்னடம்), வசுதேந்த்ரா (கன்னடம்), பெருமாள் முருகன் (தமிழ்), கைஃபி அஸ்மி மற்றும் ஜான் நிஜார் அக்தர் (உருது), வோல்கா (தெலுங்கு), உன்னி. ஆர் (மலையாளம்), வீ ஜே ஜேம்ஸ் (மலையாளம்), ஜானி மிராண்டா (மலையாளம்), விஷ்வாஸ் பாட்டில் (மராத்தி), ரஞ்சித் தேசாய் (மராத்தி), சிவாஜி சாவந்த் (மராத்தி), பவன் கே வர்மா, சஞ்சீவ்

சன்யால், அமீஷ், அஷ்வின் சாங்கி, சேதன் பகத், ராஜேஷ்குமார் (தமிழ்), அனு சிங் சௌதரி (ஹிந்தி).

கடந்த சில ஆண்டுகளாக வெஸ்ட்லேண்ட் மொழிபெயர்ப்புகளில் சிறந்த வெற்றியைக் கண்டிருக்கிறது. ஏகாவின் பேராவல், அகில உலக அளவில் சிறந்த முறையில் விற்பனையாகும் படைப்புகளையும், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் கஜுவோ இஷிகுரோவின் ***வென் வீ வேர் ஆர்பன்ஸ்*** மற்றும் ***த ரிமெய்ன்ஸ் ஆப் தடே,*** மிகவும் பிரபலமான ஸ்வீடிஷ் எழுத்தாளர் ஸ்டெய்க் லார்சனின் ***மிலேனியம் ட்ரைலாஜி,*** ஜப்பானிய எழுத்தாளர் கெய்கோ ஹிகாஷினோவின் ***த டிவோஷன் ஆப் சஸ்பெக்ட் எக்ஸ்*** மற்றும் ஜெப்ரி ஆர்ச்சரின் ***கேன் அண்ட் ஏபல்.***

வெஸ்ட்லேண்டுடன் இணைந்து இந்தப் புதிய பயணம் **ஏகா** வை மேற்கொள்ள அனைவரையும் வரவேற்கிறோம்.

சந்தன கடத்தல்

# வீரப்பன்

## வேட்டை

**கே. விஜயகுமார்**

தமிழில்:

தமிழில்: ஜி.கே.இந்திரன்

eka

First published in English as *Veerappan: Chasing the Brigand* in 2017 by Rupa Publications

First published in Tamil as *Santhana Kadathal Veerappan Veattai* in 2019 by Eka, an imprint of Westland Publications Private Limited

1st Floor, A Block, East Wing, Plot No. 40, SP Infocity, Dr MGR Salai, Perungudi, Kandanchavadi, Chennai 600096

Westland, the Westland logo, Eka and the Eka logo are the trademarks of Westland Publications Private Limited, or its affiliates.

Copyright © K. Vijay Kumar, 2019

ISBN: 9789388754118

The views and opinions expressed in this work are the author's own and the facts are as reported by him, and the publisher is in no way liable for the same.
All rights reserved

No part of this book may be reproduced, or stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without express written permission of the publisher.

# உள்ளே...


வீரப்பன் வேட்டை...

பொறியில் சிக்கப்போவது வீரப்பனா? இல்லை எங்களது இரண்டு உயிர்களா?

ஐ.ஏ.ஏஸ் பாஸாகியும் காக்கிச் சீருடையை காதலித்தேன்!

நடுரோட்டில் ரவுடியுடன் மோதல்!

ஆல்ப்ஸ் மலையில் எனக்கு கிடைத்த தண்டனை?

ஜெயலலிதாவிடமிருந்து அழைப்பு!

வீரப்பன்... பயங்கர தொழில்காரன்?

விருந்து... கொண்டாட்டம்...கூண்டோடு கைலாசம்!

வீரப்பன் அன்றுதப்பிக்காமல் இருந்தால்...?

விஷம் குடித்தாள் வீரப்பன் தங்கை!

கே.விஜயகுமார் ஐ.பி.எஸ். ஸ்ரீனிவாஸின் தலையை

குழந்தையைக் கொல்லும் அரக்கக்குணம்?

வீரப்பனைப் பிடிக்க கர்நாடகா எஸ்.பி. விரித்த வலை!

போலீஸ் நிலையம் துவம்சம்!

“முதலில் யாரை கொலை செய்ய?”

கர்நாடகாவுக்கு சோகமான ஆகஸ்ட் 15?

22 உயிர்களை பலிவாங்கிய புனித வெள்ளி!

ஜெயலலிதா காட்டிய வேகம்... தேர்வான வால்டர் தேவாரம்... ஆயிரக்கணக்கில் குவிந்த விண்ணப்பம்!

வால்டரிடம் வீரப்பன் தப்பிய கதை!

“வீரப்பனுமா விழுந்துட்டான்...?”

அன்று வால்டரிடம் தப்பித்தவர்கள்...?

“வீரப்பனை மீண்டும்நழுவ விட்டோம்!”

ஒரு கையால் ஜீப் ஓட்டி எஸ்.பி. உயிரைக் காப்பாற்றிய டிரைவர்?

அதிர்ஷ்ட தேவதை எனக்கும் கருணை காட்டினாள்?
45 பேரும் கண்ணிவெடியில்ஓடினோம்... ஆனால்...?
“சவரப்பெட்டி ரூபத்தில் கிடைத்த சவப்பெட்டியை தொலைத்தோம்!”
நடுக்காட்டில் தப்பி ஓடிய முத்துலட்சுமி சிக்கியது எப்படி?
சுட்டான்...! கழுத்தை வெட்டினான்...! எரித்தான்...?
திம்பம் காட்டில் ஏற்பட்ட திருப்புமுனை!
அதிரடிப்படையின் முதல் பலி செந்தில்
டி.எஸ்.பி.யை பிடித்துக்கொண்டு ரூ.1000 கோடி கேட்ட வீரப்பன்!
“கிரானைட் குவாரி... கமாண்டோ பாதுகாப்பு...?” கேட்டது வீரப்பன் திறுதிறுத்தது அரசு
வீரப்பன் தம்பி சயனைடு சாப்பிட்டது எப்படி?
வீரப்பன் பதுங்கிய கிராமத்தை சுற்றி வளைத்ததும்...!
17 தோட்டாக்கள் அந்த வீரனின் உடலை துளைத்தன!
வீரப்பனும் நவாஸும் நேருக்கு நேர் துப்பாக்கியோடு...!
பிடிபட்டால் தற்கொலை செய்யும் முடியில் நவாஸ்? நேருக்கு நேராக வீரப்பன் துப்பாக்கியோடு...
பேபி வீரப்பனை என்கவுன்ட்டர் செய்தது யார்?
வீரப்பன் கொடுத்த 2 மரண தண்டனை!
24 மணி நேரத்தில் இரண்டு முறை தப்பித்த வீரப்பன்!
ரஜினி இல்ல... மு.க.ஸ்டாலினை கடத்தினால்...? வீரப்பன் முகாமில் விவாதம்
ராஜ்குமார் கடத்தல்!
பர்வதம்மாளுக்கு ஜோதிடர் சொன்ன குறிப்பு!?
துப்பு கொடுத்தவரை துச்சமாக நடத்தினால்...?
“காவிரி பிரச்சினையை சர்வதேசநீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும்!”
“ராஜ்குமாரை மீட்க காட்டுக்குச் செல்கிறேன்!” வாய்ஸ் கொடுத்த ரஜினி
வீரப்பனை வெட்ட அரிவாளை எடுத்து ஓங்கிய போது...?
ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பன் முடிவெடுத்தது ஏன்?
சபரிமலை பக்தர் வேடத்தில் தப்பித்த வீரப்பனை காட்டிக் கொடுத்த அய்யப்பன்?
உலகத்திலே முதல்முறையாக 3 பேருக்காக மொபைல் டவர்!

₹₹₹₹₹ஈஷா ஆசிரமத்திலிருந்து வெளிநாட்டுப் பயணிகளைக்கடத்த திட்டம்?
பசி—குளிர் நரக வேதனையில் துடித்தான் வீரப்பன்!
ஜெயலலிதாவின் கேள்வியும் தர்மசங்கடமும்!
ஒரு என்கவுன்டரில் ரவுடி காலி...! அடுத்த என்கவுன்டரில் சிக்கல்?
வீரப்பனை வளைக்கும் திட்டத்தில் கேரள மதத்தலைவர்?
வீரப்பன் தலை மீது பாறாங்கல் தூக்கிப் போடும் நொடியில்...?
ஊடுருவிய 4 பேரை பத்திரமாகவிட்ட வீரப்பன்
மாஜி அமைச்சர் கடத்தல்! ரூ.100 கோடி பேரம்?
நாகப்பா மரணமும் வீரப்பனின் சரிவும்!
சர்வதேச பத்திரிகைகளில் வலம் வந்த வீரப்பன்?
புதிய திட்டம்...! புதிய உற்சாகம்...!
ஏ.கே. 47 துப்பாக்கி ஏந்திய கைகளில் பைபிள்?
ஊட்டி கெஸ்ட் அவுசில் முத்துலட்சுமி — வீரப்பன் சந்திக்கும் திட்டம்!
முத்துலட்சுமியின் தோழியாக நடித்தவருக்கு ஏற்பட்ட பயம்?
டீ எஸ்டேட் திட்டம் தவிடுபொடியானது!
வீரப்பனைக் குழப்ப உதவியது தொழில்நுட்பம்!
எங்களுக்குக் கிடைத்தவரப்பிரசாதம் 'டிரேடர்'?
ஒற்றனின் உறவு திடீர் துண்டிப்பு?
"அவரு எம்.ஜி.ஆரின் மருமகனா?" உறுமிய வீரப்பன்
எலிப்பொறியில் சிக்கிய தொழிலதிபர்?
ஆயுத வியாபாரியாக மாறிய அதிரடிப்படை வீரர்!
காட்டிலிருந்து வெளியே வருகிறான் வீரப்பன்?
ஆபரேஷன் குக்கூன்! மிஸ்டர் எக்ஸிடம் தெளிவாக சொன்னார் ரெட்.
ஆம்புலன்சில் ஏற்பட்ட தவறு?
"யாரை கடத்தப் போகிறோம்" என்ற உண்மையை...?
லாட்டரிச் சீட்டு பரிசாகவந்தான் வீரப்பன்!
குறுக்கே வந்த மோட்டர் சைக்கிள்?
வீரப்பனுக்கு இறுதி வாய்ப்பு!
20 வருடப் போராட்டம் 20 நிமிடத்தில் முடிந்தது!
பிரதமரின் பிரத்யேக பாராட்டு!

வீரப்பனின் ஜாதகக் கோளாறு!

# வீரப்பன் வேட்டை...

ஒளிந்து கொள்பவர்களுக்கும் தேடுபவர்களுக்கும் இடையில் நடக்கும் போட்டியில் பத்துக்கு ஒன்பது முறை ஒளிந்து கொள்பவர்கள் தான் வெற்றி பெறுகிறார்கள் — ரிச்சர்ட் கிளார்க்.

கிட்டத்தட்ட போலீஸ் பணியிலும் இப்படித்தான் ஒன்பது முறை தப்பிவிடுவான் திருடன். பத்தாவது முறை ஜெயிப்பது போலீஸ் தான்.

ஆனால், வீரப்பன் பத்து முறை அல்ல. 30 ஆண்டுகளுக்கு மேலாக போலீஸுக்கு ‘தண்ணி’ காட்டிய நபர்.

பல ஆண்டுகளாக காட்டில் வசித்து, சந்தனமரக் கடத்தல் தொழில் செய்த வீரப்பனை ஒரே முறை தான் போலீஸ் கைது செய்து சட்டத்தின் முன்பு நிறுத்தியது. அதன் பிறகு, போலீஸில் பிடிபடவேயில்லை.

1987—ம் ஆண்டுக்குப் பிறகு வன அதிகாரி சிதம்பரநாதன் என்பவரைக் கடத்தி கொலை செய்த பிறகு, வீரப்பனைப் பிடிக்க போலீஸார் முற்பட்டு, சட்டத்தின் முன்னிறுத்த முற்பட்டது பெருஞ்சுமையான பணி.

அந்தப் பணியில், தமிழக காவல்துறையின் பல ஆண்டுகள் வீணாகியது. அதுமட்டுமா, ஏராளமான போலீஸாரின் வாழ்க்கையையும் காவு வாங்கியது. இப்படி எத்தனையோ சோதனையும் வேதனையும் இருந்தாலும், வீரப்பனைத் தேடும் பணியை காவல்துறை விடவில்லை.

இந்தப் பணியில் எங்களுக்குக் கிடைத்த அனுபவம், தந்திரம், நுணுக்கமான திட்டமிடுதல் போன்றவற்றின் பலனாக, கடைசியில் அதிர்ஷ்டம் இன்ச் எங்களோடு இணைந்து நாங்கள் வெற்றி பெற உதவியது.

துணிச்சல் மிக்க காவலர்கள், அதிகாரிகள் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் தைரியமான பொதுமக்களும் வீரப்பனைப் பிடிக்க உதவினர். தனிப்பட்ட முறையில், பொதுமக்களில் சிலர் எதிர்கொண்ட ஆபத்துக்களும் அவர்கள் செய்த தியாகங்களும் மறக்கவே முடியாது.

தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையின் பக்கம் நின்று இந்தப் புத்தகம் எழுதப்பட்டதற்காக நான் குற்றம் சாட்டப்படலாம். ஆனால், உண்மை என்றும் யாராலும் மறைக்கவே முடியாது. சிறப்பு அதிரடிப்படை செய்த நன்மைகளை நாளை வரலாறுதான் தீர்மானிக்கும்.

மேலும் இடப்பற்றாக்குறை காரணமாக காவல்துறையின் ஏராளமான சாகசங்களை வெறும் குறிப்புகளாகச் சுருக்கிச் சொல்லி இருக்கிறேன். அதற்காக அவர்களின் பங்கை நான் குறைத்து மதிப்பிட்டதாகக் கருத முடியாது.

என்னால் முடிந்த வரையில் எனது அறிவுக்கு சரி என்று பட்டவரையில் நடந்த சம்பவங்களை உண்மையாகக் கொடுப்பதற்கே முழு முயற்சி எடுத்திருக்கிறேன்.

ஆனால் இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்ட பல விஷயங்கள், பல்வேறு நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து நான் பெற்ற தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை. எனவே, ஒரே சம்பவத்தின் இரு வேறு முரண்பட்ட செய்திகளை நான் சமாளிக்க வேண்டியிருந்தது.

அப்படி இரண்டு விதமாக ஒரே சம்பவம் தோற்றமளிக்கும்போது, எனக்குள்ளே நானே தர்க்கரீதியாகப் போராடி, துல்லியமானது எது என்று ஆய்வு செய்து அந்தக் குழப்பத்தைச் சரி செய்ய முயற்சித்திருக்கிறேன்.

அதே நேரத்தில், இப்புத்தகத்தில் நான் ஒரு விஷயத்தை எப்படி விவரித்திருக்கிறேனோ அப்படியே அந்தச் சம்பவங்கள் நடந்தன என்று உறுதியாகச் சொல்வது கடினம்.

இதுபோன்ற தேடுதல் வேட்டைகள் ஒவ்வொன்றிலும் துணிச்சலையும் நற்பண்புகளையும் போல தனிமனித சிறுமைத்தனங்களையும் கண்டிருக்கிறேன். இது குறித்துச் சொல்லும் போது யாரையும் குறைத்துச் சொல்வது எனது நோக்கமல்ல. முடிந்த வரையில் சம்பவங்களை உண்மையாகச் சொல்ல முயற்சிக்கிறேன்.

ஒரு சில சந்தர்ப்பங்களில், அதிரடிப்படை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் ரகசியத்தைக் காப்பாற்றுவதற்காகவும், இந்த உணர்வுப்பூர்வமான நடவடிக்கையில் உதவிய நபர்கள் குறித்த ரகசியங்களைக் காப்பாற்றுவதற்காகவும் வேண்டுமென்றே நான் சில விவரங்களை மறைத்துச் சொல்லியிருக்கிறேன். காரணம், அந்த நபர்களில் சிலர் இப்போது கூட தேச நலனுக்காக தங்களின் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான்.

இந்த ஒட்டுமொத்த அனுபவத்தையும் தொகுத்துச் சொன்னால் எனது நெருங்கிய தோழர் கே.என்.மிர்ஜி சொன்னதைத்தான் சொல்ல வேண்டும்:

“இது ஒரு கால்பந்து குழுவைப் போன்றது. பதினோரு பேரும் விளையாடுவார்கள். ஆனால் ஒருவர்தான் கோல் போடுவார்!”

**கே.விஜயகுமார் ஐ.பி.எஸ்.** (ஓய்வு)
**புதுடில்லி.**

# பொறியில் சிக்கப்போவது வீரப்பனா? இல்லை... எங்களது இரண்டு உயிர்களா?

“கனவுகள் என்பது தூக்கத்தில் நாம் காண்பவை அல்ல. நம்மை ஒருபோதும் தூங்கவிடாமல் பார்த்துக்கொள்பவைதான் நமது கனவுகளாக இருக்க வேண்டும்.” இந்த அருமையான வரிகளைச் சொன்னவர் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம்.

இந்த வார்த்தை எத்தனை உன்னதமானது.

2004 அக்டோபர் 18, இரவு 10 மணி.

இந்த நாள் தான் என் கனவு நனவானது. அந்த கனவு தான் என்னை பல நாட்களாக தூங்கவிடாமல் செய்தது.

அது திங்கட்கிழமை. இரவு 10 மணியாகியும் இரவு உணவுக்காக என் வயிறு பசிக்காமல் இருந்தது.

காரணம், என் லட்சியப் பசிக்காக வயிற்றுப்பசியே ஓய்வு எடுத்துக் கொண்டது. நேரம் மெதுவாகக் கடந்து கொண்டிருந்தது. ஆனால் எண்ணங்கள் வேகம் பிடித்தன. மாற்றமே இல்லாமல் ஒவ்வொன்றும் தவறாகவே நடந்து கொண்டிருக்கிறது என்று நினைக்கத் தோன்றுகிறது.

குறிப்பாக, ஒரு வாழ்வா – சாவா போராட்டத்தில் கண்ணிமைக்கும் நேரத்தில் தனது திட்டத்தை மாற்றிக் கொண்டு ஒவ்வொரு முறையும் ஆபத்தானவனாகவும் முன்கூட்டியே அனுமானிக்க முடியாதவனாகவும்

இருக்கும் அவனைப் பற்றிய ஒரு கேள்வியோடு இறங்கியிருக்கும் நேரத்தில், அப்படியே அவன் இப்போதும் செய்து விட்டால்?

பீதி ஒரு பக்கம் இருந்தாலும் மற்றொரு புறம் எதிர்பார்ப்பு அதிகரித்ததை உணர்ந்தேன். மாதக்கணக்கில் போட்ட திட்டங்கள் மற்றும் கடினமான முயற்சிக்குப் பிறகு கடைசியாக எங்களின் இலக்கை இந்த முறை நாங்கள் பிடித்துவிடும் இரவாக இது இருக்கலாம்.

எல்லாம் நாங்கள் வைத்த பொறியில் இருந்தது. கடந்த 20 வருடங்களாக சாதிக்க முடியாததை இந்த முறை நாங்கள் சாதித்து விடுவோமா?

‘‘அப்படியே நடக்கட்டும். கடவுளே தயவு செய்து அப்படியே நடக்கட்டும்’’ என்று வேண்டினேன்.

தூக்கக் கலக்கத்தில் அடிக்கடி எழுந்து கொள்வதும் பிறகு ஓய்வெடுப்பதற்காக வம்பாகப் படுக்கையில் படுப்பதுமாக இருந்தேன். ஆனால், கண்ணை மூடினாலும் உறக்கம் வர மறுத்தது.

எனது கவலை மறுபடியும் மேலெழுந்தது. நாங்கள் இடைமறித்து நிறுத்தப்போகும் அந்த வாகனத்தில் இருப்பது யார்? என்பது என்னைத் தவிர நான்கு பேருக்கு மட்டும்தான் தெரியும்.

இரண்டு மாநிலங்களை பல ஆண்டுகளாக கிட்டத்தட்ட தன்வசம் பணயமாக வைத்திருந்த அந்தக் காட்டுக் கொள்ளையன் கூஸ் முனுசாமி வீரப்பனுக்காகத்தான் நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் என்பது எங்களுக்கு மட்டும்தான் தெரியும்.

அந்த நான்கு பேரில் ஒருவர் எங்களால் அன்போடு கண்ணன் என்று அழைக்கப்படும் காவல் கண்காணிப்பாளர் என்.கே.செந்தாமரைக்கண்ணன். அவர் எனக்கு அடுத்து நின்று கொண்டிருந்தார். இந்தத் தேடுதல் வேட்டையில் முறைப்படியான திட்டம் மற்றும் தர்க்கரீதியான வழிகாட்டியாக ஒரு முக்கியமான பங்காற்றியவர் அவர்.

இன்னொருவர் குமரேசன். சிறப்பு அதிரடிப் படையின் ரகசிய கான்ஸ்டபிள். எங்களுக்கு தகவல் கொடுப்பதற்காக நடுவழியில் கண்காணிப்புடன் காத்துக் கொண்டிருந்தார். மற்ற இருவரும் அந்த வாகனத்தில் இருந்தனர்.

தமிழகத்தின் சேலத்தில் உள்ள ஒரு மருத்துவமனைக்குச் சொந்தமான ஆம்புலன்ஸைப் போல வடிவமைக்கப்பட்டிருந்த வாகனம் அது. அந்த இருவரில், அதிரடிப்படை காவலர் சரவணன்தான் அதை ஓட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தார். மற்றொருவர் ரகசிய போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் வெள்ள துரை.

துரை என்று அவரை அழைப்போம். எதற்கும் துணிந்த தமிழ்நாடு காவல்துறை அதிகாரி. துரையின் பங்களிப்பு பிற அதிரடிப்படையினருக்குக் கூடத் தெரியாது. அவரது பணி என்ன என்பது எனக்கும் கண்ணனுக்கும் மட்டும்தான் தெரியும். அந்த ஆம்புலன்ஸை ஓட்டும் சரவணனுக்கும் கூட தெரியாது. இந்த ஆபரேஷனில் ஈடுபட்டிருக்கும் துரையை சில மணி நேரத்துக்கு முன்புதான் சரவணன் சந்திக்கிறார். எங்கள் இலக்கு வீரப்பனிடம் விடுதலைப்புலிகள் ஆதரவாளரைப் போல நடித்து, அவனை நாட்டை விட்டே கடத்தி இலங்கைக்கு எல்.டி.டி.ஈ. கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு கூட்டிக் கொண்டு போவதாக உறுதி அளித்து, அழைத்து வருவதுதான் துரையின் வேலை.

சரவணன் பதற்றப்பட்டு காட்டிக் கொடுத்து விடுவாரோ என்று நான் சந்தேகத்தில் இருந்தேன். முதலில் இந்த ஆபரேஷனில் அவரை தயார்படுத்தும் வேளையில், அவரை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டேன்.

உடனே ஓடிவந்து, தனக்கு இது கௌரவப் பிரச்சினை என்று கூறி எனது மனதை மாற்றினார். அவரது ஆத்மார்த்தமான பதிலைக் கேட்டதும் ‘சரி’ என்றேன்.

போலீஸ் தன்னைச் சுற்றி வளைத்துவிட்ட பகுதியில் இருந்து அந்த ஆம்புலன்ஸைப் பயன்படுத்தி வீரப்பன் தப்பிவிட்டால்... என்று எங்கள் குழு ஓரளவு அச்சத்துடனேயே இருந்தது.

ஆனால், அது வீரப்பனுக்காகவே ஆம்புலன்ஸ் ஆக மாற்றப்பட்ட ஒரு போலீஸ் வாகனம் என்பது அவனுக்குத் தெரியாது. எதிர்பாராத விதமாக எங்கள் குழுவைச் சேர்ந்தவர்கள் அவசரத்தில் அந்த வாகனத்தைத் தயார் செய்தபோது, அதில் எஸ்.கே.எஸ். ஹாஸ்பிடல், சேலம் என்று எழுதியதில் சேலத்திற்கு Salem என்று எழுதுவதற்குப் பதிலாக Selam என்று எழுத்துப் பிழையோடு எழுதிவிட்டார்கள்.

ஆனால் அவனோ அவனது நம்பிக்கைக்குரிய சகாக்களோ இந்தத் தவறைக் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை மட்டும் எங்களுக்கு இருந்தது.

ஆபத்து சூழும்போது அதை உணரும் வீரப்பனின் சிக்ஸ்த் சென்ஸ் வேலை செய்துவிட்டால் என்ன செய்வது...?

பல ஆண்டுகளாக மூன்று மாநில போலீஸையும் சமாளித்து வந்த அவனுக்கு இப்போதும் அது வேலை செய்து விட்டால் என்ன செய்வது...?

ஏற்கெனவே அவனது கையால் ஏராளமான போலீஸார் நசுக்கப்பட்டிருக்கின்றனர். எங்கள் திட்டம் தோற்று அந்தப் பட்டியலில் மேலும் இரண்டு பேர் சேர்ந்து விட்டால் என்ன செய்வது? ஆனால் அதை எதிர்பார்த்துத்தான் அவர்கள் இதில் இறங்கி இருந்தனர். அப்பாவிகள் யாரும் உயிரிழக்கக் கூடாது என்பதால், அவர்கள் உயிருக்கு ஆபத்து வரும் என்று தெரிந்தால் உடனே தப்பித்து விடுமாறு அவர்களிடம் கூறியிருந்தேன்.

அவர்கள் சாகப் போகிறார்கள் என்ற எண்ணத்தை மாற்றுவதற்காக என்னை நானே இப்படித் தேற்றிக் கொள்கிறேனா என்ற சந்தேகம் ஏற்பட்டது.

தலையை உலுக்கிக் கொண்டேன். எதிர்மறை எண்ணங்களை விட்டு வெளியே வர முயற்சித்தேன். “கடவுளை நம்புகிறேன். அவர் எங்களைக் கைவிட மாட்டார்” என்று முணுமுணுத்தேன்.

அந்த நேரத்தில் ரத்தினம் என்ற ஜோதிடர் சொன்னது எனக்கு நினைவுக்கு வந்தது. அவர் பொள்ளாச்சிக்காரர். பொதுவாக ஜோதிடம்

சொல்வதை எல்லாம் நான் நம்புவதில்லை. ஆனால் சில மாதங்களுக்கு முன் அவர் மிகுந்த நம்பிக்கையுடன் சொல்லியிருந்தார். “உங்களுக்கு அக்டோபர் 18 ஒரு தனிச்சிறப்பான நாளாக இருக்கும்.”

## ஐ.ஏ.ஏஸ் பாஸாகியும் காக்கிச் சீருடையை காதலித்தேன்!

2004, அக்டோபர் 18–ம் தேதி இரவுக்கு பத்து மாதங்களுக்கு முன்புதான் நான் சிறப்பு அதிரடிப் படையின் தலைவராகப் பொறுப்பெடுத்தேன். இதுபோன்ற பணிக்கு முன்பாக, இருமுறை குறுகியகாலப் பணிகளை வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டவன். அந்த இரண்டு பணிகள் கொடுத்த அனுபவங்கள், தாக்கங்கள் என்னை நன்றாகவே செதுக்கி இருந்தன.

தமிழகம் மற்றும் கர்நாடக சிறப்பு அதிரடிப் படைகளுக்கு உறுத்தலாக இருந்த கொள்ளைக்காரனைத் தேடிய வெற்றிகரமான வேட்டைக்கு அது என்னை அழைத்துச் சென்றது. அவைகளைப் பற்றி சொல்லாவிட்டால் இந்த தொடர் முழுமை பெறாது.

நான் போலீஸில் சேர்வது என்று எப்போது முதன்முதலாக முடிவெடுத்தேன் என்று அடிக்கடி என்னை நானே கேட்டுக் கொள்வேன். தமிழ்நாட்டின் ஐ.ஜி.யாக இருந்த எஃப்.வி.அருள் மற்றும் ரஸ்டோம்ஜி ஆகியோர் என்னைக் கவர்ந்தனர். அவர்களோடு போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்த என் அப்பா வி.கிருஷ்ணன் நாயரும் எனக்கு ஒரு ரோல் மாடல் தான். கல்லூரிப் படிப்பு முடிந்ததும், சிவில் சர்வீஸ் தேர்வு எழுதியபோது, 1975–ல் ஐ.பி.எஸ். தேர்வானேன். ஆனால், ஐ.ஏ.எஸ்–ஐ நூலிழையில் தவறவிட்டேன். எப்போதும் ஐ.பி.எஸ். ஆக வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனாலும் ஐ.ஏ.எஸ். அந்தஸ்தில் தேர்ச்சிக்குத் தகுதி அடையவில்லை, என்பதை எனக்குள் இருக்கும் போட்டி மனப்பான்மையால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மனத்தை மீண்டும் மீண்டும் உறுத்தவே, மறுபடியும் தேர்வு எழுதினேன். இத்தனைக்கும் அப்போது நான் ஐதராபாத்தில் உள்ள தேசிய போலீஸ் அகாடமிக்கு பயிற்சிக்காக சென்று விட்டேன்.

ஐதராபாத் அகாடமியில், நான் இருந்த அந்தக் காலகட்டம் மகத்தானது. அப்போது 'பாரத் தர்ஷன்' எனப்படும் அகில இந்திய சுற்றுலாவில் கொல்கத்தாவில் இருந்தேன். எனது பேட்ச் கூட்டாளிகள் சிலருடன் புரூஸ்லீ நடித்த 'என்டர் தி ட்ராகன்' பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் நான் ஐ.ஏ.எஸ். பாஸாகி விட்டேன் என்ற தகவல் வந்தது. என்னோடு இன்னொரு பத்துப் பேரும் பாஸாகி இருந்தனர்.

எங்கள் அகாடமியின் இயக்குநர் எஸ்.எம். தியாஸ், எங்களை இதமாகப் பாராட்டினார். ஆனால், "நீங்கள் இங்கு இருந்து மற்ற பயிற்சி பெறுபவர்களின் ஒழுக்கத்தைக் கெடுப்பதை நான் விரும்பவில்லை. உடனடியாக வெளியேறுங்கள்" என்று சொன்னார்.

அதற்குள் நான் அகாடமியில் செலவழித்திருந்த காலம், எனக்குள் ஒரு போலீஸ் அதிகாரி ஆக வேண்டும் என்ற எண்ணத்தை ஆழமாக்கியிருந்தது. கிட்டத்தட்ட காக்கிச் சீருடை மீது அத்தனை காதல் ஏற்பட்டுவிட்டது. இருப்பினும் விடுப்பு ஒருபுறம் என்னை அழைத்துக் கொண்டிருந்தது. அதாவது ஐ.ஏ.எஸ். தேர்வு முடிவு வருவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன் ஏற்பட்ட சின்னம்மையில் இருந்து நான் மீண்டு கொண்டிருந்தேன். எனவே கொஞ்சம் ஓய்வு எடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தேன்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு, போலீஸாகத் தொடர விரும்புவதாகவும் மீண்டும் திரும்பி வர எனக்கு அனுமதி அளிக்க வேண்டும் எனவும் இயக்குநருக்கு எழுதினேன். அவர் என்னை திரும்ப அழைத்துக் கொண்டது மட்டுமல்ல மற்ற பயிற்சியாளர்களுக்கு என்னைச் சுட்டிக்காட்டி, "இவர் ஐ.ஏ.எஸ். கிடைத்தும் அதை விட்டுவிட்டு ஐ.பி.எஸ்—ஐ தேர்வு செய்திருக்கிறார்" என பெருமிதத்தோடு கூறினார். விடுமுறை மகிழ்ச்சியை அனுபவித்த அதே சமயத்தில் அவரின் அனுமதி என்னை மேலும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது.

பயிற்சி முடிந்து பணியில் சேர்ந்ததும் ஒருசில வருடங்கள் தெளிவில்லாமல்தான் போய்க் கொண்டிருந்தன. இந்தக் காலகட்டத்தில்தான் சிறப்பு வாய்ந்த வால்டர் தேவாரத்திற்குக் கீழ் முதன்முதலாக பணியாற்றினேன். பின்னாளில் அவர்தான் தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையின் முதல் தலைவரானார்.

துப்பாக்கி சுடுவதில் வல்லவர். அவர்தான் துப்பாக்கி சுடுவதில் எனக்கு ஈர்ப்பை ஏற்படுத்தியவர். அகாடமியில் நான் பழகிய சூட்டிங்கில் நான் ஸ்கோர் செய்ததெல்லாம் ஒன்றுமே இல்லை. வால்டர்தான் துப்பாக்கி சுடுதலில் அயராமல் பயிற்சி எடுக்க எனக்கு உந்துதலைக் கொடுத்தார்.

பிரவுனிங் 9 — எம்.எம். கைத்துப்பாக்கிதான் எனக்கு மிகவும் பிடித்தது. அந்தத் துப்பாக்கியை ஒரு கணம்கூட பிரிந்திருக்க மாட்டேன். ஒன்று அது எனது டிராயரில் இருக்கும் அல்லது படுக்கையில் தலையணைக்கடியில் இருக்கும். 1984—ல் ஜோத்பூரில் நடந்த இன்டர் போலீஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க போதுமான பயிற்சியைப் பெற்றிருந்தேன்.

திபெத்திய எல்லை போலீஸைச் சேர்ந்த கான்ஸ்டபிளுக்கும் எனக்கும் போட்டி வந்தது. அதில் எனக்குத்தான் தங்கம் கிடைத்தது. ஆனால் அவர்கள் தொழில்நுட்பரீதியாக குறை சொல்லி எனக்குத் தங்கம் கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவருக்கே தங்கமெடலைக் கொடுக்கச் சொல்லிவிட்டேன்.

எனது குழுவினர் ‘உண்மையாகத் தான் சொல்கிறீர்களா?’ என்று கேட்டார்கள். அவரைப் பொறுத்தவரையில் அந்த மெடலால் அவருக்கு புரமோஷன் கிடைக்கும். ‘நான் ஒரு எஸ்.பி. ஒரு சீனியர் அதிகாரி. கான்ஸ்டபிளுடன் ஒரு மெடலுக்காக வீண் சண்டையிடுவது சிறுபிள்ளைத்தனமாக இருக்கும்’ என்று சொன்னேன்.

அதன்பிறகு துப்பாக்கி சுடும் போட்டி அதிக நாட்கள் நீடிக்கவில்லை. நிலையான இலக்கை சுடுவதற்கும் சண்டையில் உண்மையான மனிதனைச் சுடுவதற்கும் இடையே உள்ள கடினமான வித்தியாசத்தைக் கண்டேன்.

இருந்த போதிலும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இலக்கைக் குறிபார்த்து சுடும் பயிற்சியைத் தொடர்ந்தேன்.

போலீஸ் அகாடமியில் இருந்தபோது, ஒருமுறை விடுமுறையில் வீட்டுக்குச் சென்றிருந்தேன்.

அந்த விடுமுறையில் எனக்கு திருமணமும் நடந்தது. குடும்பத்துடன் சினிமாவுக்குப் போனபோது, நடுரோட்டில் ரவுடியுடன் மோத வேண்டிய நிலையும் ஏற்பட்டது. ரவுடியுடன் சண்டை போட்ட பிறகு, குடும்பத்தாருக்கு நான் செய்த சத்தியம் எல்லாம் அடுத்த வாரம் சொல்கிறேன்.

# நடுரோட்டில் ரவுடியுடன் மோதல்!

**போ**லீஸ் அகாடமியில் இருந்த போது, ஒருமுறை விடுமுறையில் வீட்டுக்குச் சென்றிருந்தேன்.

அப்போது எனது பெற்றோர், நான் திருமணம் செய்துகொள்ள இதுதான் சரியான சமயம் என்று கூறினர். எனது சகோதரி டாக்டர் உமா மாலினியும் மாமா டாக்டர் கங்காதரனும் எனக்குப் பெண் பார்த்தனர். அவர்கள் ஒரு டாக்டரின் மகளை எனக்கு முன்மொழிந்தனர்.

'நீயும் அந்தப் பெண்ணும் சந்திக்க வேண்டும்' என்று எனது பெற்றோர் என்னிடம் கூறினர். ஒரு ஆடு பலிபீடத்திற்குச் செல்கிறது என்ற எண்ணத்துடன் மெல்லத் தலையாட்டினேன்.

1976 ஜூலை 14 அன்று அந்த சந்திப்பு நடந்தது. பெரிய கண்களை உடைய ஒரு குட்டிப்பெண் அறைக்குள் நுழைந்தார். பெயர் மீனா. அந்தக் காலத்தில் நான் வீரப்பனைப் போல பெரிய மீசை வைத்திருந்தேன். அது மீனாவைப் பயமுறுத்தியதைக் கண்டேன்.

நெய் சாதமும் மட்டன் கறியுமாக ஒரு அற்புதமான சாப்பாட்டை எங்களுக்குப் பரிமாறினார்கள். கடைசியாக கேரளாவுக்கே உரித்தான பலாடா கீர் பரிமாறப்பட்டது. எனக்கு நிறைய பசி இருந்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், உணவு அற்புதம். அதிலேயே நான் மயங்கிப் போய்விட்டதாகத் தெரிந்தது.

'நல்லது. அவள் உண்மையில் நல்ல சமையல் தெரிந்தவளாகத்தான் இருக்க வேண்டும்' என்று நினைத்தேன். அதற்கு நேர்மாறாக அந்த உணவை

அவர்கள் வீட்டில் உள்ள வேறு பெண்கள் சமைத்திருந்தனர் என்பது பின்னாளில் எனக்குத் தெரிய வந்தது. ஆனால் சந்தர்ப்பவசமாக, மீனா எனக்கு ஒரு அற்புதமான சமையலாளர் ஆகத்தான் இருந்தார்.

1977 ஏப்ரல் 22—ல் குருவாயூரில் இரு குடும்பங்களைச் சேர்ந்த ஏராளமானோர் புடை சூழ எங்கள் திருமணம் நடந்தேறியது. அடிக்கடி இடமாற்றம், நேரம் காலம் இல்லாமல் வேலை பார்ப்பது என்ற எனது நிலையைக் குறித்து எந்த ஒரு வெறுப்பும் இல்லாமல் மீனா எங்கள் குடும்பத்தை நடத்தி வந்தார். எங்கள் தலைதீபாவளி அன்று இரவு முழுவதும் நான் வீட்டிலேயே இல்லை. சட்டவிரோத சூதாட்டக் கும்பலையும் கள்ளச்சாராய கும்பலையும் பிடிக்க தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தேன்.

மறுநாள் காலையில் நான் வீடு திரும்பியபோது, மீனா பொறுமையாக பால்கனியில் காத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். எந்த ஒரு வம்பும் செய்யாமல் எனக்கு காலை டிபனை பரிமாறினார். மீனாவின் அப்பா ஒரு பணக்கார டாக்டர். திடுதிப்பென்று ஒரு அரசு அதிகாரியின் சம்பளத்தில் குடும்பம் நடத்த வேண்டியிருந்தது. 1978—ல் எங்களுக்கு மகன் அர்ஜுனும் 1982—ல் மகள் அஸ்வினியும் பிறந்தது, ஏற்கனவே சொற்பமாக இருந்த எங்கள் பட்ஜெட்டை மேலும் சொற்பமாக்கியது.

ஆனால் எப்படியோ நிர்வாகம் செய்து கொண்டிருந்தார் மீனா. ஒருமுறை எங்கள் குடும்பத் தேவைகளை ஒரு சில நகைகளை வைத்து சமாளித்தார் என்பது நிறைய வருடங்களுக்குப் பிறகுதான் எனக்குத் தெரிந்தது.

மீனாவுக்கு நான் பரிசு வாங்கிக் கொடுத்ததே கிடையாது. ஒருமுறை காஷ்மீர் எல்லைப் பாதுகாப்புப் படையில் பணி நியமனம் செய்யப்பட்டபோது ஒரு பெண்டன்ட் வாங்கினேன். சிக்காரா ரைட் என்னும் நீண்ட படகுச் சவாரி ஒன்றிற்கு ஏற்பாடு செய்தேன். தால் ஏரியின் அழகை வியந்து பார்த்துக் கொண்டிருந்தபோது, ஆச்சரியப்படுத்தும் வண்ணம் அந்தப் பரிசை வெளியே எடுத்து மீனாவிடம் கொடுத்தேன். மீனாவின் அந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

நான் பெரும்பாலும் குழந்தைகளுடன் நேரம் செலவிடாத அப்பா. நான் இல்லாத குறையை மீனா திறமையாக சமாளித்தாள். எனது வேலையின் தன்மை குறித்து முடிந்தவரையில் குழந்தைகளுக்குத் தெரியாமல்தான் பார்த்துக் கொண்டோம். ஆனால் ஒருமுறை நான் அந்த எல்லையைக் கடந்து விட்டேன்.

சேலம் மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது, ஒரு ஜேம்ஸ்பாண்ட் படத்திற்கு எனது குடும்பத்தினரை அழைத்துச் சென்றேன். நான் காரை ஓட்டினேன். எனது டிரைவர் என் அருகில் முன்சீட்டில் அமர்ந்திருந்தார். மீனாவும் குழந்தைகளும் பின்சீட்டில் அமர்ந்திருந்தனர்.

வழியில் உள்ளூர் ரவுடி ஒருவன் பொதுமக்களிடம் தகராறு செய்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். அது என்னை ஆத்திரமூட்டியது. காரைவிட்டு வெளியே வந்தேன். அவன் என்னை கோபத்துடன் திரும்பிப் பார்த்தான். ஆள் வாட்டசாட்டமாக பெரிதாக இருந்தான். நடுரோட்டில் ஒரு ரவுடியுடன் மோதுவது சரியான முடிவா இல்லையா என்பதையெல்லாம் சிந்திக்கும் நிலையில் நான் இல்லை. பொதுமக்களை அடித்துக்கொண்டிருந்தவனை நோக்கி நான் செல்வதைக் கண்ட அவன், என்னைத் தாக்க கையை ஓங்கினான். அவனது கையைப் பிடித்து தடுத்து, ஓங்கி ஒரு அறைவிட்டேன். அடுத்து, எனது துப்பாக்கியைப் பார்த்ததும் சிறிது மிரண்டான்.

சாலையில் விழுந்து கிடந்த மரக்கிளை ஒன்றை எடுத்தேன். அவனது காலரைப் பிடித்து இழுத்து காரின் முன்சீட்டில் அவனைத் தள்ளினேன். போலீஸ் ஸ்டேஷன் வரும்வரையில் அவனை அந்த மரக்கிளையை வைத்து அடித்துக் கொண்டே வந்தேன்.

எனது குழந்தைகள் இருவரும் சினிமாவில் பார்ப்பதற்காக ஆர்வமாக இருந்த காட்சிகளை நிஜத்தில் பார்த்து மிரட்சியடைந்தனர். அவர்கள் பொருமினர், விம்மினர். அவர்களது கண்ணில் கண்ணீர் உடைத்துக் கொண்டு வெளியேறியது. மீனாவுக்கு கோபம் வந்தது.

ரவுடியை போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்த பிறகு, குழந்தைகள் முன்னால் இப்படி நான் நடந்து கொண்டதை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்பதை கடுமையாக சொல்லி முடித்தார் மீனா. அதன்பிறகு குடும்பத்தினர் முன்னிலையில் அப்படி ஒரு சம்பவம் மீண்டும் நடந்திருக்காது என்பதை நான் சொல்லத்தேவையில்லை.

அந்த நேரத்தில்தான் பிரதமர் ராஜீவ்காந்தி அலுவலகத்தில் திடீர் அழைப்பு வந்தது.

# ஆல்ப்ஸ் மலையில் எனக்கு கிடைத்த தண்டனை?

பிரதமர் ராஜீவ் காந்தி அலுவலகத்தில் இருந்து அழைப்பு வந்ததும் என்னவாக இருக்கும் என்று போனில் பேசியதும் மனது மகிழ்ச்சியில் ஊட்டி குளிர்ச்சிக்கு அழைத்துச் சென்றது.

ஆம்.

சேலம் மாவட்ட எஸ்.பி.யாக இருக்கும்போது ஒருமுறை அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியின் தேர்தல் பொதுக்கூட்டத்திற்கான பாதுகாப்புப் பணியை மேற்கொள்ளுமாறு என்னிடம் கேட்டுக் கொண்டனர். அந்தப் பணியை நல்லபடியாக செய்து முடித்தேன். கூட்டம் அமைதியாக முடிந்தது.

ஒரு சில நாட்களுக்குப் பிறகு தமிழ்நாடு டி.ஜி.பி. வி.ஆர்.லட்சுமி நாராயணனிடம் இருந்து ஒரு போன் வந்தது. ராஜீவ்காந்தி தேர்தல் பொதுக்கூட்டப் பாதுகாப்பு வேலையை நான் மேற்கொண்ட விதம் அவர்களுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டதாகக் கூறினார். அப்போது “இணையமைச்சராக இருந்த அருண்சிங் உன்னிடம் அந்த நிகழ்ச்சியின்போது பேசி இருப்பார் என நினைக்கிறேன். பிரதமருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு அளிப்பதற்காக ஒரு புதிய குழுவை அமைத்திருக்கிறார்கள். அதற்கு சிறப்புப் பாதுகாப்புக் குழு (எஸ்.பி.ஜி) என்று பெயர். அதில் சேர்வதற்கு விண்ணப்பிக்க விரும்புகிறாயா?” என்று என்னிடம் கேட்டார்.

நான் மிகுந்த சந்தோஷப்பட்டேன். அதன்பிறகு நேர்காணலில் தேர்ச்சி பெற்றேன் என்பதை அறிந்தபோது மேலும் மகிழ்ச்சியடைந்தேன். அதன்பிறகு

ஐந்து ஆண்டுகள் எஸ்.பி.ஜி. குழுவில் உற்சாகமும் சவால்களுமாக வாழ்க்கை கழிந்தது. நான் சேர்ந்து கொஞ்ச நாட்களில், 1986 அக்டோபர் 2—ம் தேதி ராஜ்காட்டில் ராஜீவ்காந்தி சுடப்பட்டார். ஆனால், அதிர்ஷ்டவசமாக அவர் தப்பித்தார். அந்தச் சம்பவம் அவருக்கு நெருக்கமான பாதுகாப்பு குழு (சி.பி.டி) அமைக்கக் காரணமாக அமைந்தது. அதிலேயும் சேர்வதற்கு நான் தேர்வு செய்யப்பட்டேன். அதாவது பிரதமரின் நெருங்கிய வளையத்திற்குள் அவரது நிழலைப் போலத் தொடர்வதற்குத் தேர்வு செய்யப்பட்டேன்.

ரஷ்ய அதிபர் மிக்கேல் கோர்ப்பச்சேவ் மற்றும் பலர் ராஜீவ் காந்தி பாதுகாப்பிற்காக எல்லா உதவியும் செய்ய தயாராக இருந்தனர். பாதுகாப்புக் காரணங்களுக்காக சி.பி.டி.யின் செயல்பாடுகள் குறித்து வெளியே சொல்ல முடியாது. நெருக்கடியான நேரங்களில் எங்களின் செயல்பாடுகள் எங்களின் துப்பாக்கிச் சுடும் திறன்கள் எப்படி அமைய வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுத்து எங்களைப் பட்டை தீட்டினார்கள்.

நான் நல்ல உடல்வாகோடு இருக்கிறேன் என்றுதான் எப்போதும் என்னைப் பற்றி நம்புகிறேன். ஆனால், சி.பி.டி. உறுப்பினர்களுடன், ஐரோப்பாவின் ஆல்ப்ஸ் மலைத்தொடர்களில் எனக்கு அளிக்கப்பட்ட பயிற்சி என்னை வேறு ஒரு மட்டத்திற்குத் தூக்கிச் சென்று விட்டது.

உணர்ச்சிகளைத் துறத்தல் எனும் பயிற்சி எங்களுக்கு அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியின்போது அனைத்தையும் இழந்தோம்.

ரோசி என்ற சிரிக்கவே சிரிக்காத ஒரு கனவான்தான் எங்களுக்கு பயிற்சியாளர். அற்புதமான உடல்வாகு கொண்டிருந்தார். அவர் மீது பெருமதிப்பை உருவாக்கும் ஈர்ப்பு இருந்தது. பாரா கமாண்டோக்கள், காராபினிரிகள், கடாபியின் பிரபலமான பெண் பாதுகாவலர்களுக்கு பயிற்சி அளித்தவர் எனக் கேள்விப்பட்டிருந்தேன்.

அவரது கழுத்தில் எப்போதும் ஒரு விசில் தொங்கிக்கொண்டிருக்கும். அவர் விசிலை அடித்து விட்டால் போதும் நீங்கள் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அதை அப்படியே போட்டுவிட்டு, அவரிடம் செல்ல

வேண்டும். மோசமான ஆச்சரியங்கள் என்பதைவிட, அவஸ்தைகளை கொடுப்பதை வழக்கமாக வைத்திருந்தார் ரோசி.

அமெரிக்கா, பிரிட்டன் அல்லது ரஷ்யாவின் பாதுகாவல் படைகளைச் சேராத ஒருவர் எங்களுக்கு பயிற்சி அளிப்பது குறித்து சந்தேகம் எழுந்தாலும் பயிற்சி அளிக்க ரோசி ஏன் தேர்வு செய்யப்பட்டார் என்பது எங்கள் பயிற்சி முழுவதும் முடிவடைந்த பிறகுதான் நிரூபணமானது.

முதல் நாள் எங்களுக்கு ஒரு அருமையான ஒயினுடன் கூடிய ஆடம்பரமான சாப்பாட்டுடன் விருந்து வைக்கப்பட்டது. துறப்பு என்பதற்கு ஒரு வித்தியாசமான அர்த்தத்தை வைத்திருந்தனர். நான் உணவில் மூழ்கி விட்டேன் என்று நினைத்தேன். சாப்பிட்டு முடித்து படுக்கைக்குப் போகத் தயாரானோம்.

அப்போது ஜீரோ டிகிரிக்கும் குறைவான குளிரில் எங்களை வெளியே கூட்டிச் சென்றார் ரோசி. ஒரு கதகதப்பான டின்னருக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை உடல் இயக்கத்தில் மிருகத்தனமான அதிர்ச்சியை அளித்தது.

நிலவொளியில், ஆல்ப்ஸ் மலை வினிகரில் கழுவி வைக்கப்பட்ட கண்ணாடி டம்ளர் போல பிரகாசித்தது. அங்கு ஒரு தார்ச் சாலையில் ஒரு வெள்ளை கார் நின்று கொண்டிருந்தது. ‘‘ரைட் ஜென்ட்டில்மேன்... அந்த காரில்தான் நீங்கள் பாதுகாப்புக் கொடுக்கும் மனிதர் இருக்கிறார். அந்த கார் இப்போதுதான் தாக்குதலுக்குள்ளானது. பயிற்சியை ஆரம்பியுங்கள்’’ என்றார்.

அவ்வளவுதான் ஏராளமான ஜம்ப்பிங், ஓட்டம், தரையில் உருளுதல் என கடுமையான சாகசங்கள்... கடைசியில் சந்தோஷமாக சாப்பிட்ட சாப்பாட்டைப் பலர் வாந்தி எடுத்து விட்டனர். ஒரு சிலருக்கு கடுமையான பிடிப்பு வலி ஏற்பட்டது. ஆல்ப்ஸ் மலையில் பனி உச்சிகள் அப்போது மகிழ்ச்சியளிப்பதாக இல்லை.

அடுத்த நாளும் அதே போன்றதொரு விருந்து. இந்தமுறை நாங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டாம். அளவோடு சாப்பிட்டோம். சாப்பிட்டு முடித்த பிறகும் சிலருக்குப் பசித்தது. ஆனால் அடுத்து நடக்கப் போவதை நினைத்து அதைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. ரோசி மற்றொரு பயிற்சிக்கு கட்டளை இடுவதற்காக எதிர்பார்ப்புடன் காத்திருந்தோம்.

ஆனால், அவர் உதடுகளில் மெலிதான புன்னகையைத் தவழவிட்டபடி, ‘‘ஒரு சில மணி நேரங்கள் ஓய்வெடுங்கள்’’ என்று சொல்லிவிட்டு அறையைவிட்டு வெளியேறி விட்டார். திகைத்துப் போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். எங்கள் வயிறுகள் சண்டை போடத் தொடங்கின. எங்கள் வாய்கள் உறுமத் தொடங்கின.

சில நாட்களுக்குப் பிறகு, ஒருவருக்கொருவர் நெருங்கி நின்று சண்டையிடும் பயிற்சி நடந்தது. நீண்ட நேரப் பயிற்சிக்குப் பிறகு, ‘‘டாய்லட் பிரேக் எடுத்துக் கொள்ள விரும்புகிறீர்களா’’ என்று கேட்டார் ரோசி.

உடனடியாக ஓடினோம். அப்போதுதான் ஜிப்பை அவிழ்த்திருப்போம். உடனே விசில் சத்தம் கேட்டது.

‘‘என்னை வைத்து விளையாடுகிறீர்கள்’’ என்று தேம்பினேன். ஆனால் விசில் சத்தம் மேலும் அலறியது. அதிகமானது. எங்களில் பாதிப்பேர் முழுசாகப் போகாமல் அவசரமாகத் திரும்பினர். ஒரு சிலரின் டிரவுசரைப் பார்த்தாலே தெரியும் அவர்கள் அரைகுறையாகப் போய் திரும்பியிருக்கிறார்கள் என்று.

சிலர் விசிலைப் பற்றிக் கவலையே படவில்லை. வேலையை முழுவதுமாக முடித்து விட்டுத்தான் திரும்பினார்கள். அதற்கு தண்டனையாக அவர்கள் கடினமான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இப்போது நினைத்தால் அது எல்லாம் வேடிக்கையாக இருக்கிறது. ஆனால் அப்போது அது அப்படி இல்லை.

அந்த ஆல்ப்ஸ் மலையில், இன்னொரு வேதனையான கொடும் தண்டனையை அனுபவித்தேன் பயிற்சி என்ற பெயரில்.

## ஜெயலலிதாவிடமிருந்து அழைப்பு!

ஆல்ப்ஸ் மலையில் பயிற்சி என் வாழ்க்கையில் இன்றியமையாதது. ஆனால், வார்த்தைகளாலும் உடலாலும் நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனைகளை அள்ளி வழங்குவதில் ரோசி மிகுந்த தாராளமாக இருந்தார். எங்களை ஷூவின் லேசைக் கழற்றி விட்டு திரும்ப மாட்டச் சொல்வது அவருக்குப் பிடித்த ஒன்று. யாராவது ஷூ லேசை மாட்டுவதற்காக உடலை முன்னோக்கி வளைத்தால் போதும் உடனடியாக தலையில் அடி விழும். கீழே குனிந்தால் காதில் ஒரு பட்டை மாட்டப்பட்டு மேலே இழுக்கப்படும்.

‘என்டர் தி ட்ராகன்’ படத்தில் கீழே குனிந்தால் அடி விழும் காட்சிதான் நினைவுக்கு வந்தது. விரைவிலேயே கீழே குனியாமல் தலையை நேராக வைத்துக் கொண்டு, ஒற்றைக் காலில் நின்று மற்றொரு கால் ஷூ லேசைக் கழட்டி மாட்டுவது எப்படி என்று நாங்கள் கற்றுக் கொண்டோம்.

‘சீறி வரும் புல்லட்டை தடுப்பவர்கள் கைகளுக்கு முன் அவரது கண்கள்தான் நம்பர் ஒன் ஆயுதம், அதன் பிறகுதான் அவரது ஆயுதம் பயனளிக்கும்’ என வீராவேச உரை நிகழ்த்திய படியே, பயிற்சியில் பின்தங்குபவரின் முதுகில் மடமடவென மத்தளம் வாசிப்பார் ரோசி. ஆனால் ஒரு விஷயம் எங்களுக்கு நிதர்சனமாகவும் தெளிவாகவும் புரிந்தது. எல்லா நேரமும் விழிப்போடு இரு.

பயிற்சிக்கு இடையில் ஆல்ப்ஸ் மலைக்குச் செல்லுமாறு எங்களுக்கு கட்டளை வந்தது. முதுகில் பெரும் பாரத்தை ஏற்றிக் கொண்டு குறுகிய கால அவகாசத்தில் நாங்கள் அந்த மலை ஏற்றத்தை முடித்துத் திரும்ப வேண்டும். ரோசி அப்போது எங்களுடன் வரவில்லை. அதற்கு பதிலாக உரிமம் பெற்ற வழிகாட்டி ஒருவர் எங்களுக்கு வழிகாட்டினார்.

என்னுடைய டீம் ஆட்கள் அனைவருமே உதவி ஆய்வாளர்கள். என்னை விட இளமையானவர்கள். சுறுசுறுப்பானவர்கள். எனது முதுகுச் சுமையைத் தூக்குவதற்கு நான் சிரமப்படுவதைப் பார்த்து ஒருவர், அதில் கொஞ்சத்தை எடுத்து தனது பையில் திணித்துக் கொண்டார். மீதிச் சுமையோடு தடுமாறி ஏறினேன்.

குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் அந்த மலையேற்றத்தை முடித்தோம். ஒரு பெரிய நிம்மதி பிறந்தது. அந்த மலையேற்றத்தில் உச்சகட்டக் குளிரை நாங்கள் தாங்க வேண்டியிருந்தது. குளிரும் சோர்வும் சேர்ந்து எனது இரு கால்களிலும் பிடிப்பை ஏற்படுத்தியிருந்தது. ஒரு வெந்நீர் குளியலுக்காகவும் உணவுக்காகவும் ஏங்கினேன்.

பிறகு அந்த வழிகாட்டியும் ரோசியும் பேசிக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். கையைக் கட்டிக் கொண்டு ரோசி என்னைப் பார்த்தார். எனது இதயம் நின்று போனது. ‘‘அய்யய்யோ. ஏதோ ஆபத்து வரப்போகிறது’’ என்று நினைத்தேன்.

‘‘உன்னுடைய சுமையை இன்னொருவரிடம் கொடுத்தாயா?’’ என்று ரோசி கேட்டார்.

நான் அவரது கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்தேன்.

ஒருவரைப் பார்த்து, ‘‘உனது முதுகுச் சுமையை அவனிடம் கொடு’’ என்று அவர் கட்டளையிட்டார்.

அவர் தயங்கினார்.

‘‘அவர் சொல்வதைச் செய்யுங்கள்’’ என்று நான் அவரிடம் சொன்னேன்.

எனது முதுகில் அந்தச் சுமை வைக்கப்பட்டது. டன் கணக்கில் செங்கல்கள் என் முதுகில் ஏற்றப்பட்டதைப் போல உணர்ந்தேன்.

“மற்ற அனைவரும் பஸ்சில் ஏறுங்கள்” என்று சொன்ன ரோசி, என்பக்கம் திரும்பி, “நாங்கள் இந்த நெடுஞ்சாலையில் எங்காவது இருப்போம். எங்களைக் கண்டுபிடி அல்லது நீ நடு ரோட்டிலேயே கிடக்க வேண்டியதுதான்” என்றார்.

பிறகு அவரும் பஸ்சில் ஏறி விட்டார். பஸ் கிளம்பிப் போனது.

அடுத்த ஒரு சில மணி நேரங்கள் என் வாழ்க்கையிலேயே மிக நீளமான நேரம். குளிர், தனிமை, சோர்வு. விளக்கு வெளிச்சம் மங்கியது. அது மேலும் இருளடையத் தொடங்கியது. குளிர் அதிகரிக்கத் தொடங்கியது. சதையும் எலும்பும் எல்லா இடத்திலும் வலித்தது.

மரணம் நெருங்கிக்கொண்டிருகிறது என்று உணர்ந்த பிறகு, மலைச்சரிவில் சின்ன ‘பப்’ ஒன்றைப் பார்த்தேன். அது ஒரு குடில். ரோசியும் மற்றவர்களும் கையில் மதுக் கோப்பைகளோடு தெரிந்தனர். அவர் என்னை மேலே வருமாறு சைகை காட்டினார்.

அந்தச் சாலை உயரே 70 டிகிரி வளைவில் இருந்தது. மிகுந்த போராட்டத்துடன் ஒரு சில மீட்டர்களை தவழ்ந்து கடந்தேன். ‘பலவீனமான கமாண்டர்... பலவீனமான கமாண்டர்’ என்று என்னைப் பார்த்து சொல்லிக் கொண்டிருந்தார் ரோசி.

மற்ற அனைவரது முகத்தையும் பார்த்தேன். அவர்கள் எனக்கு உதவ விரும்பினர். ஆனால் அதற்கு அவர்களுக்கு கட்டளை வரவில்லை. அந்த வலியை அவர்களது கண்களில் பார்த்தேன். எனக்குள் எழுந்த வெட்க உணர்வை வெளிப்படுத்தினேன். ஒரு பலவீனமான கமாண்டராக ஒருபோதும் இருக்கக்கூடாது என்று போராடியபடி, உச்சியை நான் அடைந்தபோது ரோசி என் கைகளைப் பிடித்து இழுத்தார். “நரக வேதனை அனுபவித்தவனைப் போல இருக்கிறாய்” என்றார்.

“அதே உணர்வுதான் எனக்கும்” என்று நினைத்தேன். ஆனால், புத்திசாலித்தனமாக அதை வெளியே சொல்லாமல் வாயை மூடிக்கொண்டேன்.

ரோசி எனது தோள்களைத் தட்டிக் கொடுத்து மதுக் கோப்பையை என் கையில் கொடுத்தார். அதற்குப் பிறகு அவர் எதுவும் சொல்லவில்லை. அவர் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டார். நானும் என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டேன்.

பயிற்சி முடிந்து மறுபடியும் பிரதமரின் நிழலாகத் தொடரும் பணிக்குத் திரும்பினேன். எனது நெருக்கடியான பணிகளுக்கு இடையிலும், எனது சொந்த மாநிலமான தமிழ்நாட்டில் அன்றாடம் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து வைத்துக் கொள்ள முயற்சித்தேன். கவலையளிக்கும் ஒரு வார்த்தையை அடிக்கடி கேட்கத் தொடங்கினேன். அந்த வார்த்தை வீரப்பன். போலீசாருக்கும் அரசாங்கத்திற்கும் அவன் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தான்.

1990—ல் இருந்து 2001 வரையிலான காலகட்டம் எனக்குக் கொடுத்த அனுபவங்கள் என்னை செழுமைப்படுத்தின. அதில் ஒன்று எல்லைப்பாதுகாப்புப்படை. 1998—ல் எல்லைப்பாதுகாப்புப் படையின் ஐ.ஜி.யாக, அப்படையின் டி.ஜி.பி.யான இ.என். ராம் மோகன் நியமித்தார். அதன்பிறகு நான் காஷ்மீரில் உள்ள தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தினேன். எல்லைப் பாதுகாப்புப் படையில் நான் பணியாற்ற வேண்டிய 5 ஆண்டு கால அவகாசத்தில் 2001—ல் மூன்று ஆண்டுகளை முடித்திருந்தேன்.

புதுடெல்லியில் எல்லைப் பாதுகாப்புப் படையின் சார்பில் கூட்டப்பட்ட அவசரக்கூட்டத்தில் பங்கேற்றிருந்தேன். கூட்டத்தின் நடுவே, என்னிடம் ஒரு துண்டுச்சீட்டு கொடுக்கப்பட்டது.

“போன்கால்... மிகவும் அவரசம்”

என்ன அவசரம் என்று எனக்குள் கேட்டுக்கொண்டபடியே கூட்ட அரங்கிலிருந்து வெளியே வந்தேன்.

அந்த போன் அழைப்பு... தமிழக முதல்வர்

ஜெயலலிதாவிடமிருந்து!

# வீரப்பன்... பயங்கர தொழில்காரன்?

தலைநகர் டெல்லியின் வெப்பமும் புழுக்கமும் நிறைந்த மற்றொரு நாள். ஒரு சின்ன இருமல் சத்தத்தைத் தொடர்ந்து எனது அலுவலகக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. பின்னர் கதவைத் திறந்துகொண்டு ஒரு இளம் பி.எஸ்.எப். அதிகாரி என்னை நோக்கி தயங்கித் தயங்கி நடந்து வந்தார். எல்லைப் பாதுகாப்புப் படையின் ஐ.ஜி. என்ற முறையில் முக்கியமான கூட்டத்தில் அப்போது கலந்து கொண்டிருந்தேன்.

அதில் உள்துறை அமைச்சகத்தின் துணை இராணுவப்படையின் மூத்த அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டிருந்தனர். கூட்டத்தின் நடுவே, என்னை நோக்கி அதிகாரி நெருங்கும் வேளையில், கூட்டத்தில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானவர்கள் என் பக்கம் திரும்பினர். என்னை நோக்கி வந்தவருக்கு என் எரிச்சல் பார்வை தெரிந்திருக்க வேண்டும். அந்த அதிகாரி அரைகுறையான புன்னகையோடு மன்னிப்புக் கேட்கும் தோரணையில் வந்து ஒரு துண்டுச்சீட்டை என் கையில் திணித்துவிட்டு அவசரமாகத் திரும்பிச் சென்றார்.

கீழே குனிந்து அந்தச் சீட்டைப் பார்த்தேன். "போன் கால். மிகவும் அவசரம்."

"அந்த அளவுக்கு என்ன அவசரம் இருக்கும்?" எனக்கு நானே கேட்டுக் கொண்டேன்.

'மன்னிக்கவும்' என்று சொல்லிவிட்டு, அந்தக் கூட்ட அறையை விட்டு வெளியேறி, என்னிடம் கொடுக்கப்பட்ட மொபைலில் "யெஸ்" என்றேன்.

“லைனிலேயே இருங்கள். அம்மா உங்களிடம் பேசுவார்கள்” பழக்கமான குரல் கூறியது. அது இணைச்செயலாளர் நடராஜனின் குரல் போலவே இருந்தது.

சற்று நேரம் மொபைல் ஸ்கிரீனையே உற்றுப் பார்த்தேன். அம்மா என்றால் ஒரே ஒரு நபரைத்தான் குறிக்கும். அந்த சிந்தனையில் இருந்த போதே, தமிழகத்தின் முதலமைச்சராக மீண்டும் பொறுப்பேற்றிருக்கும் செல்வி ஜெயலலிதாவின் கணீர் குரலைக் கேட்டேன்.

“மிஸ்டர் விஜயகுமார் எப்படி இருக்கிறீர்கள்?”

“குட் மார்னிங் மேம். நன்றாக இருக்கிறேன். நன்றி. உங்களின் மகத்தான வெற்றிக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்” என்று பதிலளித்தேன்.

“நன்றி” சொன்ன அவர், நேரடியாக விஷயத்திற்கு வந்தார். “தமிழ்நாடு மற்றும் கர்நாடக அதிரடிப்படையின் தலைவராக இருக்கும் வால்டர் தேவாரம் செயல்பட்டது போல தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையின் தலைவராகப் பணியாற்ற நான் உங்களை அழைத்திருக்கிறேன். சந்தனக்கட்டை கடத்தல்காரன் பிரச்சினை நீண்ட நாளாக நீடித்துக் கொண்டிருக்கிறது” என்றார்.

அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது முழுக்க, சந்தனக்கடத்தல் வீரப்பன் விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு மென்மையாக நடந்து கொண்டதாக குற்றம் சாட்டியிருந்தார். திரும்ப தான் ஆட்சிக்கு வந்தால் வீரப்பன் விஷயத்தில் கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என சபதம் செய்திருந்தார். அந்த சபதத்தை நிறைவேற்றும் நடவடிக்கையில் இறங்கி விட்டார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

இந்த இடைப்பட்ட காலத்தில், காஷ்மீரில் எல்லைப்பாதுகாப்புப்படையில், சில வருடங்கள் நான் பணியிலிருந்தேன். அப்போதெல்லாம் வீரப்பன் தப்பிச் சென்றது பற்றிய செய்தியைக் கேள்விப்படும் போதெல்லாம் ரத்தம் கொதிக்கும். கன்னட திரையுலக சூப்பர் ஸ்டார் டாக்டர் ராஜ்குமார்

கடத்தப்பட்ட உணர்ச்சிகரமான சம்பவம் உலகம் முழுவதும் தலைப்புச் செய்தியாக இருந்தது.

கடினமான காட்டுப்பகுதியில் அவனைப் பிடிக்கப் போகும்போது, கண்ணி வெடிகளிலும் துப்பாக்கிச் சூட்டிலும் இறந்த பல போலீசார் மற்றும் அதிகாரிகளை நான் அறிவேன். ஒவ்வொரு முறை அந்தச் செய்திகளை நான் படிக்கும்போதும், சிறப்பு அதிரடிப்படையின் அங்கமாக அவர்களுடன் தோளோடு தோள் நிற்க வேண்டும் என்ற அழுத்தமான எண்ணம் ஏற்படும். கடைசியில் எனது விருப்பம் நிறைவேறி விட்டதாகத் தோன்றியது.

“மேம். இது எனக்கு கவுரவம்” என்று முதலமைச்சரிடம் சொன்னேன்.

“நல்லது. உங்களின் நியமன ஆணையை விரைவில் பெறுவீர்கள்” என்று சொல்லிவிட்டு அவர் இணைப்பைத் துண்டித்தார்.

முதலமைச்சரிடமிருந்து அழைப்பு வந்த அந்த தருணம் எனது வாழ்க்கையின் மிகச் சிறப்பான தருணங்களில் ஒன்று. எல்லாவற்றிற்கும் மேல், நீண்ட நாட்களாக ஒருவர் விரும்பிய பணியில் இணைந்து கொள்ளுமாறு எல்லாருக்கும் அழைப்பு வந்து விடுவதில்லை.

ஆச்சரியப்படத்தக்க வகையில் எனது இடமாற்ற உத்தரவு அடுத்த நாளே எனது கைக்குக் கிடைத்தது. அந்த உத்தரவு தாங்கிய பேப்பரை பார்த்துக் கொண்டே இப்படி நினைத்துக் கொண்டேன். “முதலமைச்சர் நிச்சயமாக நினைத்ததைச் செய்து முடிக்கிறார்” என்று. உடனடியாக என் சக பணியாளர்களிடம் விடைபெற்றேன்.

ஒரு சில நாட்களுக்குப் பின், சத்தி என அறியப்படும் சத்தியமங்கலத்தில் சிறப்பு அதிரடிப்படை தலைமையகத்துக்கு வந்தேன். டி.ஐ.ஜி. தமிழ்ச்செல்வன் என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். டீ, பக்கோடா சாப்பிட்டபடி உரையாடினோம். அவர் இடது கையில் சிதைந்திருந்த மூன்று விரல்களை மறைத்த அந்த கருப்பு லெதர் கிளவுசை பார்ப்பதை என்னால் தவிர்க்க முடியவில்லை.

வீரப்பனுடன் அவர் நடத்திய உக்கிரமான துப்பாக்கிச் சண்டையின் அடையாளம் அது. அந்தக் காயத்தைச் சாக்கிட்டு, சிறப்பு அதிரடிப்படையை விட்டு சுலபமாக இடமாற்றம் பெற்று ஒரு எளிமையான பணிக்கு அவர் சென்றிருக்கலாம். ஆனால் மருத்துவமனையில் சிசிச்சை முடிந்து, பணிக்குச் செல்லலாம் என்று மருத்துவர்கள் சொன்னவுடன், அவர் மீண்டும் இந்தப் பணியைத்தான் தேர்வு செய்தார்.

அவரது கைகளைக் கூர்ந்து கவனிப்பதை உணர்ந்த அவர் என்னைப் பார்த்தார். சங்கடத்துடன் பார்வையைத் திருப்பிக் கொண்டேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, மூத்த எஸ்.டி.எஃப். அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் என்னைச் சந்திக்கக் காத்திருந்த ஹாலுக்குள் நுழைந்தேன். அவர்களைப் பார்த்தபடியே, ‘‘உங்களில் பலர் எனக்கு பழைய முகங்கள்தான். காட்டில் சுற்றிச் சுற்றி சற்று இளைமையை இழந்தாலும், நீங்கள் யாரும் உற்சாகத்தை இழக்கவில்லை என்பதை உங்கள் முகத்தில் தெரிகிறது’’ என்றேன்.

‘‘இத்தனை ஆண்டுகளாகப் போராடி 150 பேராக இருந்த ஒரு கும்பலை, சிங்கிள் டிஜிட் கொண்ட கும்பலாக சுருக்கி ஒரு மகத்தான பணியைச் செய்திருக்கிறீர்கள். ஆனால் எனக்கு ஒரு கேள்வி இருக்கிறது. நம்மால் ஏன் அந்தத் தலைவனைப் பிடிக்க முடியவில்லை?’’ என்று கேட்டதும் அங்கு அமைதி நிலவியது.

அதில் ஒருவர் பேசினார். ‘‘சார் அதற்கான வாய்ப்பு நமக்கு வராமல் போகவில்லை. பல நேரங்களில் அவனை நெருங்கிச் சென்றிருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு முறையும் அவனுக்கு அதிர்ஷ்டம் அடித்து விடுகிறது’’ என்றார் அவர்.

‘‘அவனைத் தப்பிக்கச் செய்யும் அத்தனை வழிகளையும் அடைத்து, அவனது அதிர்ஷ்டத்தை அவனுக்கு எதிராக நாம் பயன்படுத்த வேண்டி இருக்கிறது. அவனைத் தேடி நடந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் அனைத்து விஷயங்கள் அடங்கிய பைலை படிக்க விரும்புகிறேன். நாம் எங்கே

தவறு செய்தோம் என்பதைப் புரிந்துகொள்ள விரும்புகிறேன். அவனைப் பற்றி நம்மிடம் உள்ள அனைத்துத் தகவல்களையும் என்னிடம் கொடுங்கள். உங்களுக்கு 48 மணி நேரம் அவகாசம்'' என்றேன்.29

அந்த 48 மணி நேரம் முடியும் முன்பே, நெற்றி நிறைய விபூதி பூசிக்கொண்டே என் முன்னே ஒருவர் வந்து, ஒரு தகவலைச் சொன்னார். அதைக் கேட்ட அடுத்த நொடியிலே என்னால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை.

நெற்றி நிறைய விபூதியை அப்பிக் கொண்டு என் முன்னால் நின்று கொண்டிருந்த அந்த ஒல்லியான மனிதர், ‘‘அய்யா, வீரப்பன் பயங்கர தொழில்காரன்'' என்று சொன்னார்.

அந்த நபர் கருப்புசாமி!

## விருந்து... கொண்டாட்டம்... கூண்டோடு கைலாசம்!

ஜூலை 2001

நெற்றி நிறைய விபூதியை அப்பிக் கொண்டு என் முன்னால் நின்று கொண்டிருந்த அந்த ஒல்லியான கருப்புசாமி, “அய்யா, வீரப்பன் பயங்கர தொழில்காரன்” என்று சொன்னதால், என்னால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை.

கருப்புசாமி சின்ன வயதில் தமிழகத்தின் தென்கோடியில் வளர்ந்தவர். அவரது பெல்ட் சைஸ் இப்போதும் 28 இன்ச் தான். அவரது எடை 60 கிலோ. சந்தேகமில்லாமல் கண்டிப்பான அவரின் சைவ சாப்பாடுதான் இதற்குக் காரணம். “உண்மையில் இந்த மனிதன் சீருடை அணிந்திருக்கும் ஒரு யோகிதான்” என்று நினைத்தேன்.

1993—ல் முதன்முதலாகச் எஸ்.டி.எஃப்—ல் சேர்ந்த வாலண்டியர்களில் ஒருவரான அவர், எஸ்.டி.எஃப். பணி வெற்றிகரமாக நிறைவடையும் வரையில் உடனிருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

தங்குதடையில்லாமல் இந்தப் படையில் நீண்ட நாட்கள் இருந்த காரணத்தால் அந்தப் பகுதியின் பூகோள அமைப்பு, அங்கிருந்த மருத்துவச் செடிகள், வீரப்பன், அவனது நடவடிக்கைகள் மற்றும் புராணங்கள் பற்றிய ஒரு வகை என்சைக்கிளோபீடியாவாகவே மாறி இருந்தார் கருப்புசாமி.

எஸ்.டி.எஃப். நடவடிக்கைகள், தமிழகம் மற்றும் கர்நாடகத்தைச் சேர்ந்த சுமார் 400 கிராமங்களை உள்ளடக்கி இருந்தது. அந்த ஒவ்வொரு

கிராமத்துடனும் கருப்புசாமி தொடர்பு வைத்திருந்தார். அவரது கள்ளம் கபடமற்ற நேர்மை காரணமாக அவரை அனைவருக்கும் பிடித்திருந்தது.

வீரப்பனை உருவாக்கிய சம்பவங்கள் உட்பட அவனது எண்ண ஓட்டத்தைப் பற்றி அறிந்துகொள்ள பேச வேண்டிய சரியான நபர் கருப்புசாமிதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

அவரை இருக்கையில் அமரச் சொல்லி சைகை காண்பித்து விட்டு, நேரடியாக விஷயத்திற்கு வந்தேன்.31

''வீரப்பனின் வாழ்க்கை பற்றி நீங்கள் அறிந்ததைச் சொல்லுங்கள்'' என்றேன்.

அருமையான, த்ரில்லர் சினிமா போன்றதொரு கதையை அவர் விவரித்தார். திரைப்படத் தயாரிப்பாளர்களின் கற்பனையிலும் அதைப்போல் பொதுமக்களின் எண்ணத்திலும் ஏன் வீரப்பன் இடம் பிடித்திருந்தான்? இப்போது வரையில் அவன் மீது ஏன் ஒரு மோகம் நீடிக்கிறது? என்பதற்கான காரணத்தை அவர் சொல்வதிலிருந்து எளிதாக அறிய முடிந்தது.

வீரப்பன் அவனது பெற்றோருக்குப் பிறந்த ஐந்து குழந்தைகளில் இரண்டாவது குழந்தை. பசுமையான காட்டுப் பகுதியின் எல்லையோர கிராமங்களில் ஒன்றான கோபிநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவன். 1940—ல் ஸ்டான்லி அணை (மேட்டூர் அணை என்று பிரபலமாக அழைக்கப்படும் அணை) கட்டப்பட்ட போது இந்தப் பகுதியில் இருந்த நிறைய கிராமங்கள் நீரில் மூழ்கின.

எனவே இங்கு வசித்த மக்கள் இடம் பெயர்ந்தனர். பின்னாளில் 1956—ல் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது தமிழ் பேசும் மக்கள் கணிசமாக வசித்த கொள்ளேகால் தாலுக்கா, தமிழகத்தின் கோவை மாவட்டத்தில் இருந்து கர்நாடக எல்லைக்குள் சென்றுவிட்டது. இந்தத் தாலுக்காவில் தான் வீரப்பன் கிராமம் அமைந்திருந்தது.

இந்தப் பகுதி செழுமையான இயற்கை வளங்களைக் கொண்டிருந்தது. ஆனால் பொருளாதார ரீதியில் பின்தங்கியே இருந்தது. நிலையற்ற மிகக்குறைவான வருமானமுடைய அவர்கள், காட்டிலுள்ள வளங்களின் மூலம் உடனடி மற்றும் எளிதான வருமானத்தைப் பார்த்துக் கொண்டனர்.

கடவுளுக்கும் துப்பாக்கிக்கும் ஒரே மாதிரியான மரியாதைதான். இந்தப் பகுதியில் இரண்டு வீடுகளுக்கு ஒரு வீட்டில் உரிமம் பெறாத நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்தனர். அந்தத் துப்பாக்கியின் வாய் வழியாகத்தான் குண்டுகளை நிரப்ப முடியும். அவை பெரும் பாலும் காட்டுப்பன்றிகள் மற்றும் பிற காட்டு மிருகங்களிடமிருந்து தற்காத்துக்கொள்ள பயன்பட்டன. சில சமயங்களில் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டன.

அதைக் கேள்விப்பட்டு, காவல்துறையினரோ வனத்துறையினரோ கிராமத்தில் சோதனை நடத்தும் ஒவ்வொரு முறையும் ஒரு சில ஆயுதங்கள் கைப்பற்றப்படும். பெரும்பாலான ஆயுதங்களைப் பதுக்கி விடுவார்கள். சோதனை முடிந்ததும் ஒளித்து வைக்கப்பட்ட ஆயுதங்களெல்லாம் புழக்கத்தில் வந்து, வழக்கம் போல அனைத்தும் நடக்கும்.

துப்பாக்கிகள் புடைசூழ வளர்ந்த வீரப்பன் விரைவிலேயே துப்பாக்கி சுடுவதில் வல்லவன் என்ற பெயரைப் பெற்றான். மரத்திற்கு மரம் தாவும் குரங்குகளை அந்தரத்தில் வீரப்பன் சுட்டு வீழ்த்திய காட்சிகளை நேரில் கண்டதாக சத்தியம் செய்தனர் அந்தப்பகுதியில் வசித்த வயதானவர்கள். வாய்வழியே தோட்டாக்களை நிரப்பும் அந்தத் துப்பாக்கிகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் திறன் இருக்கும். அதை வைத்துக்கொண்டு அவன் அவ்வாறு சுட்டான் என்றால், அப்படியொரு கடினமான பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருந்தான் என்பது மறுக்க முடியாதது.

காட்டுப்பன்றியை வேட்டையாடியதாக அவன் மீது முதன்முதலாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஒரு வனத்துறை அதிகாரி அவனைத் தேடிச் சென்ற போது, காட்டுக்குள் தப்பிச் சென்று விட்டான். அப்போது அவன் ஒரு சிறுவன்தான். பின்னர் நடந்ததெல்லாம், அனைவரும் அறிந்த வரலாறு.

வீரப்பன் நெடு நாட்களுக்கு காட்டில் தனியாக இருக்கவில்லை. வீரப்பனின் வீரம், சட்டவிரோதமாக விலங்குகளை வேட்டையாடும் உள்ளூரைச் சேர்ந்த செவி கவுண்டர் என்பவரின் கவனத்தைக் கவர்ந்தது. செவி கவுண்டருக்குப் பின்னணியில் ஒரு உள்ளூர் எம்.எல்.ஏ. இருந்தார் என்று அந்தப் பகுதியிலுள்ள வயதானவர்கள் கூறினர்.

வீரப்பன் சிறுவனாக இருக்கும் போதே அவன் முதன்முதலாக ஒரு யானையைக் கொன்றிருக்கிறான் என்கிறார்கள். யானையை நெற்றியில் சுட்டு உடனடியாக அதை உயிரிழக்கச் செய்வதுதான் வீரப்பனுக்குப் பிடித்தமான வழிமுறை. ஏராளமான யானைகளை அவன் கொன்று குவித்திருந்தாலும், ஒரு யானையின் சடலம் பறவைகள், எறும்புகள் போன்ற லட்சக்கணக்கான உயிரினங்களுக்கு உணவாகிறது என்றும் யானையைக் கொல்வது தொண்டுதான் என்றும் அவன் வாதிடுவானாம்.

வீரப்பன் மிகவும் கருணை கொண்டவனெல்லாம் இல்லை. ஆனால் ஒரு தாராளமான முதலாளி. அந்தப் பகுதியில் இருந்த கிரானைட் குவாரிகள் மூடப்பட்டதால் அங்குள்ள பலர் வேலை இழந்தனர். இதனால் அவனது கும்பலில் வேலை செய்ய ஏராளமானவர்கள் தயாராகினர். காட்டில் வழிகாட்டி, கண்காணிப்பாளர், கடத்தல் பொருட்களை பத்திரமாக ஒப்படைப்பது என இவனது எல்லா வேலைகளுக்கும் ஆட்கள் கிடைத்தனர்.

சந்தன மரங்களை வெட்டவும் தமிழகம் மற்றும் கர்நாடக எல்லையில் பாலாற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கிராமங்களில் இருந்து அவற்றைக் கடத்தவும் உள்ளூர் ஆட்கள் பலரை அவன் வேலைக்கு அமர்த்தினான். அவனது கடத்தல் நடவடிக்கைகள் பெரிதாக வளர்ந்தது.

வறுமையில் சிக்கியிருந்த அந்த மக்களுக்கு அந்தப் பணம்தான் வாழ்வாதாரமாக இருந்தது. குறைந்த காலத்திலேயே, சட்டவிரோத வேட்டைக் கும்பலுக்குத் தலைவனாகி வழிநடத்தத் தொடங்கினான் வீரப்பன். அந்தப் பகுதியில் இருந்த பல வேட்டைக் கும்பல்களில் அதுவும் ஒன்றானது.

அந்த நேரத்தில்தான், வனச்செல்வங்களைக் கொள்ளையடிக்கும் கும்பலை வேட்டையாட, காவல்துறையினரும் வனத்துறையினரும் இணைந்து சில நடவடிக்கைகளை சுறுசுறுப்பாக எடுத்த நேரம்.33

இந்த சந்தர்ப்பத்தைத்தான் அருமையாகப் பயன்படுத்திக் கொண்டான். வீரப்பன் தனது மிகப்பெரிய எதிரி குழுவினரை எல்லாம் ஒரு விருந்துக்கு அழைத்தான். ‘‘ஒவ்வொரு குழுவும் நமக்குள் சண்டையிட்டுக் கொள்ளாமல், காட்டில் அவரவரின் வேட்டைப் பகுதியைப் பிரித்துக் கொள்வது குறித்துப் பேசலாம்’’ என்று விருந்துக்கு அழைத்திருந்தான்.

கிடா விருந்து முடிந்ததும் வந்திருந்த கும்பலைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றிலை சுபாக்கு கொடுக்கத் தொடங்கினான். அது ஒரு சிக்னல். அவன் வெற்றிலை சுபாக்கு பரிமாறிய உடன், மரத்தின் மேல் மறைந்திருந்த அவனது ஆட்கள், விருந்துக்கு வந்திருந்த அனைவரையும் சுட்டுக் கொல்ல வேண்டும் என முன் கூட்டியே கட்டளை இடப்பட்டிருந்தது. அவர்களும் அப்படியே செய்ய, வீரப்பனின் போட்டியாளர்கள் அனைவரும் துடைத்தெறியப்பட்டனர்.

இது அந்த காட்டையே அதிரச் செய்தது.

## வீரப்பன் அன்று தப்பிக்காமல் இருந்தால்...?

எதிரிகளை விருந்துக்கு அழைத்து பரலோகம் அனுப்புவது...

சமூக விரோதச் செயலைத் தடுக்கும் அதிகாரிகளை ஈவு இரக்கமின்றி கொலை செய்வது என மேற்கு மாவட்டங்களைக் கடந்து தமிழகம் முழுவதும் பரபரப்பான செய்திகளில் இடம் பெற்றுக்கொண்டிருந்தான் வீரப்பன்.

"விருந்துக்கு எதிரிகளை அழைப்பது உண்மையில் சுவாரஸ்யமான திகில் சினிமா" என்று சொல்லிக்கொண்டே

"தக்கிகள் என அழைக்கப்பட்ட பழங்கால தொழில்முறை கொள்ளையர்களில் ஒரு பிரிவினர் இதே போலத்தான் செய்வார்கள் தெரியுமா? தாங்கள் பழிவாங்க வேண்டும் என நினைப்பவர்களுடன் நட்பாகி, பாக்கு பரிமாறி, பின்னர் கழுத்தை நெறித்துக் கொலை செய்து விடுவார்கள்" என்றேன் கருப்புசாமியிடம்.

"குற்றவாளிகளின் தலைவர்கள் பெரும்பாலும் ஒரேமாதிரியாக சிந்திக்கிறார்களோ என்னவோ" என்று சொன்ன கருப்புசாமி, கதையைத் தொடர்ந்தார்.

அதன்பிறகு அந்தப் பகுதியில் உள்ள மிகப்பெரிய கூட்டத்திற்கு வீரப்பன் தலைவனாகி விட்டான். "விரைவிலேயே மற்ற கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் வீரப்பனுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இல்லையெனில் கொல்லப்படுவீர்கள்" என்று சுவற்றில் எழுதியிருந்தது தெள்ளத்தெளிவாக்கியது.

பயத்துடனும் பக்தியுடனும் வீரப்பன் மதிக்கப்பட்டான். அசல் வீரப்பனைவிட அவனைப் பற்றிய பிம்பம் பெரிதாக இருந்தது. அதை கவனமாக வளர்த்தெடுக்கவும் செய்தான். போலீசுக்கு தகவல் சொல்பவர்கள் மீது அவன் இரக்கமற்று நடந்து கொண்டான்.

வீரப்பனின் வேட்டைத் தொழில் செழித்து வளர்ந்தது. விரைவிலேயே அவன் அதை சந்தனக் கடத்தலுக்கு விரிவுபடுத்தினான். பெரும் காட்டு வழித்தடங்களை அழித்தான். 1983 ஆகஸ்ட் 27—ம் தேதி கர்நாடகாவின் மாவுக்கல் அருகே வனத்துறைக் காவலர் கே.எம். ப்ருதிவியை அவன் கொலை செய்தான். அவனது கும்பல் யானை வேட்டையில் இருந்தபோது அதைத் தடுக்க அவர் முயற்சித்ததற்காகக் கொல்லப்பட்டார். வளைந்து கொடுக்கும் வனத்துறை அதிகாரிகளுடன் உடன்பாட்டிற்கு வருவதை பெரும்பாலும் தேர்வு செய்த அதே நேரத்தில், நேர்மையான அதிகாரிகளை வீரப்பன் தவிர்த்தான்.

ஆனால் 1986—ல் வீரப்பன், முதன் முதலில் கைது செய்யப்பட்டதற்குப் பிறகு அனைத்தும் மாறியது. தோட்டா மற்றும் வெடிப்பொருட்கள் வாங்க வந்த இடத்தில் அந்த விற்பனையாளரிடம் வீரப்பன் தகராறு செய்ய, அந்த விற்பனையாளர் போலீசுக்குத் தகவல் கொடுத்தார். அந்த நேரத்தில் பெங்களூருவில் ஒரு சில நாட்கள் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய கூட்டமைப்பு மாநாடு (சார்க்) நடைபெற இருந்தது வீரப்பனுக்கு துரதிர்ஷ்டமாக அமைந்தது. பாதுகாப்புக் காரணங்களுக்காக அனைத்து சமூக விரோதிகளையும் போலீஸ் விரட்டிப் பிடித்து கைது செய்து கொண்டிருந்தது.

பெங்களூர் நகரின் ஒதுக்குப்புறமான ஓட்டலுக்கு வந்த வீரப்பனை, மோப்பம் பிடித்த போலீஸ் அங்கு வைத்து அவனைக் கைது செய்தது. கைவிலங்கு மாட்டப்பட்ட அவன் வனத்துறை பிரிவு எஸ்.பி. எம்.வி.மூர்த்தியிடம் ஒப்படைக்கப்பட்டான்.

பின்னாளில் அவனது மனதில் குத்திய முள்ளாக எப்போதும் வேதனை தரப் போகும் மனிதர் ஒருவரை, முதன்முதலாக வீரப்பன் அப்போதுதான் பார்த்தான். அவர் டெபுடி கன்செர்வேட்டர் ஆப் பாரஸ்ட் பி.ஸ்ரீனிவாஸ்.

பெருமுயற்சி எதுவும் இல்லாமலே வீரப்பன் தானாக வந்து மாட்டியதன் மூலம் அவருக்கு ஒரு ஜாக்பாட் அடித்திருந்தது. விரைவிலேயே அவனது கிரிமினல் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைத் திரட்டத் தொடங்கினார்.

ஒரு நாள், கர்நாடகாவில் பூடிபடகா வனத்தில் உள்ளடங்கி இருந்த ஒரு கெஸ்ட் ஹவுசுக்கு கைவிலங்கு பூட்டப்பட்ட வீரப்பனை, தனி டீம் மூலம் ஸ்ரீனிவாஸ் கொண்டு சென்றார். பிறகு அவனை அங்கிருந்த வேறு சில வனத்துறை காவலர்களிடம் ஒப்படைத்துவிட்டு, வேறொரு வேலை நிமித்தமாகச் சென்று விட்டார்.

அவர் வெளியே சென்றதும் தப்பிச் செல்வதற்கு இதுதான் சரியான சமயம் என்று உணர்ந்தான். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தான். வனக்காவலர்களிடம் தான் தலைவலியால் துடிப்பதாகவும் தலைவலி எண்ணெய் கொடுக்குமாறும் கெஞ்சினான். அதைக் கேட்டு ஒரு வனக்காவலருக்கு சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் எளிதில் ஏமாந்து விடக்கூடிய இன்னொருவர் அவனது கட்டாயத்திற்கு இணங்கி எண்ணெயைக் கொடுத்தார்.

இரவில் காவலர்கள் தூங்கிய பிறகு, வீரப்பன் தனது தலையில் இருந்த எண்ணெயை வாகாக தனது விலங்கு மாட்டிய கைகளில் தேய்த்தான்.

ஒரு சில நிமிடங்களில் விலங்கு வழுக்கிக் கொண்டு அவன் மணிக்கட்டில் இருந்து கழன்று வெளியே வந்தது. பின்னர் அங்கிருந்த சிறு ஜன்னல் வழியே தப்பி ஓடி இருட்டில் மறைந்தான். பதினான்கு வருடங்களுக்குப் பின், ராஜ்குமார் கடத்தல் வழக்கை விசாரித்தபோது, உச்ச நீதிமன்றம் இந்த அஜாக்கிரதையின் அபாய விளைவுகள் குறித்து பேசியது. இச்சம்பவம் தொடர்பான அனைத்து விவரங்களையும் கேட்டது.

வனக் காவலர்கள் இவ்வளவு பெரிய பிழையைச் செய்வார்கள் என நம்புவதற்குக் கடினமாக இருந்தது. வீரப்பன் கஸ்டடியில் இருந்திருக்கிறான். அப்படி இருந்தும் அவனால் தப்பிச் செல்ல முடிந்திருக்கிறது.

இப்படித்தான் அவன் அபாயகரமானவனாகவும் அதிபிரசித்திப் பெற்றவனாகவும் மாறியிருக்கிறான் என்ற சிந்தனை எனக்குள் ஓடிக்கொண்டிருக்க, “உண்மையில் இதுதான் நடந்ததா? உங்களால் நம்ப முடிகிறதா?” என்று கேட்டேன்.

கருப்புசாமி தோளைக் குலுக்கியபடி, “கோப்புகள் அப்படித்தான் சொல்கின்றன” என்றார்.

வீரப்பன் போலீஸ் காவலில் இருந்தபோதிலும் அவனது கைரேகை எடுக்கப்படவில்லை என்ற விவரம் உட்பட, ஒரு சில இதுபோன்ற விஷயங்களை நான் ஏற்கனவே படித்திருந்தேன்.

சந்தேகங்கள் அதிகாரபூர்வ தகவல்களை ஏளனம் செய்தன. வீரப்பன் அவனைப் பிடித்தவர்களுக்கு லஞ்சம் கொடுத்தான். அவர்கள் அவனைத் தப்பிக்க விட்டனர் என்று நம்புவது எளிதாக இருந்தது. உண்மை எதுவாக இருந்தாலும் வீரப்பன் மறுபடியும் ஒரு சுதந்திர மனிதனாகி விட்டான். இப்போது அவன் அதிகாரிகளின் மீது அளவு கடந்த கோபத்துடன் இருந்தான். காழ்ப்புணர்ச்சி கொண்ட அந்தக் கொள்ளையன் இறுதியாக ஸ்ரீனிவாசை பழிக்குப் பழி வாங்கத் தீர்மானித்தான்.

ஏன்...?

பழிவாங்கும் எண்ணத்தை அவன் உயிருக்கு உயிராக நேசித்தவரின் தற்கொலைதான் இன்னும் தூண்டியது.

# விஷம் குடித்தாள் வீரப்பன் தங்கை!

டெபுடி கன்செர்வேட்டர் ஆப் பாரஸ்ட் பி.ஸ்ரீனிவாஸ்.

இந்த பெயரை கேட்டாலே வீரப்பனுக்கு கோபம், எரிச்சல், ஆத்திரம்.

காரணம், வீரப்பனின் ஒவ்வொரு நடவடிக்கையையும் முடக்க கிராம மக்களிடம் ஸ்ரீனிவாஸ் எடுத்துக்கொண்ட நடவடிக்கைதான்.

அந்தப் பகுதியில் இருந்த பல கிரானைட் குவாரிகளில் பணம் பறிப்பதில் முதன்முதலாக வீரப்பனின் வளர்ச்சி ஆரம்பித்தது. அந்த குவாரி நடத்தியவர்கள் தனக்கு வெடிப்பொருட்களை தர வேண்டும் என கட்டாயப்படுத்தினான். இதனால் கர்நாடக அரசு வேறு வழி இல்லாமல் அந்தப் பகுதியில் வீரப்பன் இருந்த வரையில் குவாரிகளுக்குத் தடை விதித்தது. இதன் காரணமாக மாநில அரசின் வருவாயில் மிகப்பெரிய நஷ்டம் ஏற்பட்டது. அதே போல் உள்ளூர் மக்களும் வேலை இழந்தனர்.

வீரப்பனைத் தேடும் போலீசாரின் முயற்சியில் தடுமாற்றம் ஏற்பட்டது நிலைமையை மேலும் மோசமாக்கியது. 1990 ஏப்ரல் 9—ம் தேதி நிகழ்ந்த நம்பிக்கையைச் சீர்குலைக்கும் பின்னடைவுச் சம்பவம் ஒன்று அவர்களின் முயற்சிக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது. போலீஸ் ஜீப் ஒன்றை அவன் தாக்கியதில் அதில் இருந்த மிகுந்த சுறுசுறுப்பான எஸ்.ஐ. தினேஷ் உட்பட மூன்று சப்—இன்ஸ்பெக்டர்கள் உயிரிழந்தனர். ஒரு கான்ஸ்டபிள் படுகாயமடைந்தார்.

இப்போது வீரப்பனின் நடவடிக்கைகள் அசட்டை செய்ய முடியாத அளவுக்கு மிகுந்த அச்சமூட்டுபவையாக மாறின. 1990 ஏப்ரல் 16 அன்று கர்நாடக முதலமைச்சர் வீரேந்திர பாட்டீல் வீரப்பனைப் பிடிப்பதற்காக சிறப்பு அதிரடிப்படை (எஸ்.டி.எ.ஃப்) அமைக்கப்படுவதாக அறிவித்தார். ஏற்கனவே ராணுவத்தில் பணியாற்றிய கே.யு.ஷெட்டி எனும் ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவர்தான் எஸ்.டி.எ.ஃப்—ன் முதல் தலைவர்.

அமைக்கப்பட்ட உடனேயே தானாக முன்வந்து வாலண்டியர் ஒருவர் எஸ்.டி.எ.ஃப்—ஐ அணுகினார். அவர் வனத்துறை அதிகாரி பி.ஸ்ரீனிவாஸ்.

வீரப்பன் தப்பிச் சென்ற சம்பவம் ஸ்ரீனிவாசைத் துரத்திக் கொண்டிருந்தது. ஆனால், தன்னிடம் இருந்து தப்பித்த வீரப்பனை தன் கையாலேயே பிடிக்க வேண்டும் என்று வெறியுடன் இருந்தார் ஸ்ரீனிவாஸ்.

அதற்கு அவர் செய்த முதல் திட்டம், வீரப்பனின் கோபிநத்தம் பகுதியில் இருக்கும் கிராம மக்களை நட்பாக்கிக்கொண்டது தான். அங்கே பல நண்பர்களை உருவாக்கி, அங்கே முதலில் சிறிய கிளினிக் அமைத்தார். கிராம மக்களுக்கு மூலிகை வைத்தியம் செய்து, மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். பிறகு ஒரு கோயிலைக் கட்டினார்.

கொஞ்சம் கொஞ்சமாக, கோபிநத்தம் மக்கள் உதவியுடன் வீரப்பனின் தங்கை மாரி என்ற மாரியம்மாளை அழைத்து, தனது கிளினிக்கில் வேலைக்குச் சேர்த்தார். மாரி மூலம் வீரப்பனின் தம்பி அர்ஜுனனை நட்பாக்க முயற்சித்தார். ஆனால், ஸ்ரீனிவாஸை அவன் நம்பவில்லை.

ஸ்ரீனிவாஸ் மீது வீரப்பனின் கோபம் திரும்பியதற்கு முன், ஸ்ரீனிவாஸின் மென்மையானத் திட்டங்களை இங்கே சொல்லியாக வேண்டும்.

வீரப்பனை அடர்த்தி மிகுந்த காட்டில் தேடுவது என்பது கடினமானது மட்டுமல்ல, இந்த வேட்டை முடிய எத்தனை வருடம் ஆகப்போகிறது என்பதையும் உணர்ந்தவராகவே, கர்நாடக அரசு அமைத்த எஸ்.டி.எ.ஃப்—ல் இணைந்துகொண்டார் ஸ்ரீனிவாஸ்.

வீரப்பன் தப்பிச் சென்ற கதையைக் கேள்விப்பட்ட மற்ற எஸ்.டி.எ.ஃப். வீரர்களே "இந்த வீரப்பனுக்கு ஸ்ரீனிவாஸ் உதவி இருப்பாரோ" என சந்தேகப்பட்டனர். விரைவிலேயே அந்த சந்தேகம் மாறியது. அவரது சொந்த ஆயுதங்கள் மற்றும் கருவிகளை எடுத்துக் கொண்டு சென்று அவர்களின் கரடுமுரடான காட்டு வாழ்க்கையை, அன்றாடம் பகிர்ந்து கொண்டு, அவர்களின் மரியாதையைப் பெற்றார் ஸ்ரீனிவாஸ்.

ஸ்ரீனிவாஸ் திட்டத்தின் மென்மையான பகுதி என்பது, நன்றாக பணியாற்றியவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதில்தான் உண்மையில் தொடங்கியது. வீரப்பனின் சொந்த ஊரான கோபிநத்தத்திலியே ஸ்ரீனிவாஸ் முகாம் அமைத்தார். உள்ளூர் மக்களை நட்பாக்கிக் கொள்ள கடினமாக வேலை செய்தார். வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக அனுமதிக்கப்படும் தொகையை அவ்வப்போது கிராமத்தவர்களின் நன்மைக்காக பயன்படுத்தினார். கோபிநத்தத்தில் ஒரு சிறு கோவிலைக்கூடக் கட்டினார். அதற்கு தேவையான நிதியில் குறிப்பிட்ட அளவுக்கு வாலண்டியர்கள் கொடுத்திருந்தாலும் பெரும்பாலான தொகை அவரால்தான் கொடுக்கப்பட்டது.

இந்தப் பணிகளின் பின்னால் உள்ள உண்மை கிராமத்தினருக்கும் தெரியும் என அவர் அறிந்திருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கையான போலீஸ் இன்ஃபார்மர்கள் வலைப்பின்னலை அவர் உருவாக்கினார். கோபிநத்தத்தில் ஒரு மருத்துவ கிளினிக் அமைத்த பிறகு ஸ்ரீனிவாஸ் மேலும் பிரபலமானார். அவரது மூலிகை மற்றும் உள்ளூர் மருந்துகள் விரைவிலேயே அங்குள்ள நிறையப் பேரின் ஆரோக்கியத்தையும் நம்பிக்கையையும் கொடுத்தது.

வீரப்பனுக்கு மிகுந்த தொல்லையாக இருந்த ஒரு விஷயம் அவனது தம்பி, அர்ஜுனனை ஸ்ரீனிவாஸ் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொண்டிருந்ததுதான்.

அர்ஜுனன் அவனது அண்ணனைப் போல இல்லை. கொஞ்சம் ஊதாரி. அவனது அளவுக்கதிகமான குடிப்பழக்கம், புகைபிடிப்பது மற்றும் பெண் மோகம் கொண்டு அலையும் பழக்கங்களை வீரப்பன் அடிக்கடி கண்டிப்பான்

என உள்ளூர் ஆட்கள் சொல்வார்கள். 'இப்படி வீணாக வாழ்க்கையைக் கழிப்பதால் ஒரு நாள் நீ அழிந்து போவாய்' என்று வீரப்பன் எச்சரிப்பானாம். ஆனாலும் அண்ணன் தம்பி இருவரும் தொடர்பில்தான் இருந்தனர்.

அர்ஜுனனிடம் பேசி வீரப்பனை சரணடைய ஒப்புக் கொள்ள வைத்துவிடலாம் என்று ஸ்ரீனிவாஸ் நம்பினார். வீரப்பன் உறவினர்களில் அர்ஜுனனுடன் மட்டும் ஸ்ரீனிவாஸ் நட்பாக இருக்கவில்லை. வீரப்பனின் தங்கை, அந்த கிராமத்தில் அனைவருக்கும் பிடித்த, மாரி என்று அழைக்கப்படும் மாரியம்மாளும் ஸ்ரீனிவாஸின் கிளினிக்கில் ஒரு வாலண்டியர். ஸ்ரீனிவாஸ் மீது மாரியம்மாள் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார்.

வீரப்பன் மனைவி முத்துலட்சுமி வீட்டுச் சிறையில் இருந்து தப்பி வீரப்பனுடன் காட்டிற்குச் சென்று தங்கிய சம்பவங்கள் அரங்கேறின. இதற்கு உதவியதாக சந்தேகப்பட்டு ஒரு நாள் மாரியை ஒரு சில எஸ்.டி.எ.ஃப். படையினர் அழைத்து வந்து விசாரித்தனர். மாரியிடம் எந்த விஷயமும் பெற முடியவில்லை.

மாரியை விடுவிக்கும்போது, கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்து அனுப்பினார்கள். அதன்பிறகு, ஸ்ரீனிவாஸ் வீட்டுக்கு கண்ணீருடன் மாரி போய் பார்த்ததாக உள்ளூர் ஆட்கள் சொன்னார்கள். அங்கு ஸ்ரீனிவாஸும் மாரியும் என்ன பேசினார்கள் என்ற விவரம் வெளியே வரவில்லை.

இந்நிலையில், ஸ்ரீனிவாஸ் மேட்டூரில் இருந்த ஒரு திறமையான இன்ஃபார்மரைச் சந்திக்கச் சென்றார். அவர் கோபிநத்தம் திரும்பியபோது, மாரி பூச்சி மருந்து குடித்துத் தற்கொலை செய்து கொண்டதாகக் கேள்விப்பட்டார்.

தனது தங்கையின் துரதிர்ஷ்டவசமான சாவுக்கு ஸ்ரீனிவாஸை குற்றம் சாட்டினான். அதுமட்டுமல்ல, ஸ்ரீனிவாஸிடம் இருந்து தப்பித்துவிட்டதால், தன்னை பிடித்தாக வேண்டும் என்று சபதம் போட்டிருக்கும் ஸ்ரீனிவாஸை போட்டுத்தள்ள திட்டம் வகுத்தான்.

# கே.விஜயகுமார்_ஐ.பி.எஸ். ஸ்ரீனிவாஸின் தலையை

மூன்றரை வருடம் தேடியும் கிடைக்கவில்லை?

தனது தங்கை மாரி விஷம் குடித்து இறந்த சில நாட்களில், ஸ்ரீனிவாஸ் செய்த அதிரடி நடவடிக்கையால், வீரப்பன் ஒரு கணம் ஆடிப்போனான்.

வீரப்பன் பதுங்கி இருந்த காட்டில் அவனது மறைவிடம் ஒன்றில் வெற்றிகரமான தேடுதல் வேட்டையை நடத்தினார் ஸ்ரீனிவாஸ். அந்த வேட்டையில் கிட்டத்தட்ட 800 கிலோ சந்தனக்கட்டைகள் கைப்பற்றப்பட்டன. 20 கொள்ளையர்கள் சரணடைந்தனர். சந்தனக் கட்டைகளை இழந்தது சந்தேகமில்லாமல் வீரப்பனுக்கு ஒரு பெரிய அடியாக அமைந்தது. அவனது ஆட்கள் சரணடைந்தது, அதைவிட பெரிய அடி. ஸ்ரீனிவாஸின் தந்திரமான திட்டத்தை எப்படி வெற்றிகரமாக அவருக்கு எதிராகவே வீரப்பன் பயன்படுத்தினான் என்பதை சரணடைந்த அவனது கூட்டாளிகள் பின்னாளில் வெளிப்படுத்தினர்.

ஒரு நாள் இரவு ஸ்ரீனிவாஸ் கோபிநத்தத்தில் திருமண நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தபோது அர்ஜுனன் அவரைத் தனியே அழைத்தான்.

''அண்ணன் சரணடையத் தயார்'' என அவரிடம் அர்ஜுனன் ரகசியமாகச் சொன்னான். ''நாம்தெல்லியை (கோபிநத்தத்தில் இருந்து இரண்டு மணிநேர நடை தூரத்தில் உள்ள) நோக்கி நீங்கள் நடந்து செல்லுங்க. நடுவழியில்

அண்ணன் உங்களைச் சந்திப்பாங்க. அவரது தகவலுக்காகக் காத்திருங்கள்" என்றான்.

ஒரு சில நாட்களுக்குப் பிறகு தகவல் கிடைத்ததும் அர்ஜுனன் மற்றும் ஒரு சில கிராமத்தினருடன் உற்சாகத்தோடு ஸ்ரீனிவாஸ் அந்த சந்திப்புக்கு கிளம்பினார். வீரப்பன் சரணடையும் அந்தக் கணமும் அதன்பின் தொடரப் போகும் கொண்டாட்டக் காட்சிகளும் அவரது மனக் கண்ணில் தெரிந்திருக்க வேண்டும்.

அந்த மலைப்பாதையில் தன்னுடன் வந்த கிராமத்தவர் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக சத்தமில்லாமல் கழன்று கொண்டனர். அர்ஜுனன் மட்டுமே மிஞ்சி இருந்ததையும் ஸ்ரீனிவாஸ் கவனிக்கவில்லை.

ஒரு சேறு கலங்கிய குளத்திற்கு அருகே இருவரும் வந்து சேர்ந்தனர். அந்த நேரத்தில் அர்ஜுனன் நின்று விட்டான். அப்போது புதர்களுக்குள் இருந்து பலர் வெளியே வந்தனர். அவர்களில் ஒருவன் உயரமாக நீண்ட கால்களுடன் முறுக்கு மீசையுடன் இருந்தான்.

ஸ்ரீனிவாஸ் முதலில் வெற்றி பெற்றதாகத்தான் நினைத்தார். ஆனால் சற்று நேரத்திலேயே ஏதோ ஒன்று சரி இல்லை என்று உணர்ந்து கொண்டார். வீரப்பன் ஒரு துப்பாக்கி வைத்திருந்தான். அதை அவரை நோக்கி குறி வைத்தான்.

ஸ்ரீனிவாஸ் சுற்றுமுற்றும் பார்த்தார். யதார்த்தம் உறைத்தது. அர்ஜுனனுடன் அவர் மட்டும் தனியே இருந்தார் என்பதை உணர்ந்தார். வாழ்வின் கடைசி நிமிடங்களில் நின்றுகொண்டிருந்த ஸ்ரீனிவாஸைப் பார்த்து, வீரப்பனும் அவனது கூட்டாளிகளும் சிரிக்கத் தொடங்கினர்.

ஸ்ரீனிவாஸ் எதிர்வினையாற்றுவதற்குள் வீரப்பன் துப்பாக்கியால் சுட்டான். அவர் சரிந்து விழுந்து இறந்தார். ஆனால் அப்போதும் வீரப்பன் திருப்தி அடையவில்லை. ஸ்ரீனிவாஸின் தலையை வெட்டினான். கொடூரமான அந்த வெற்றிக் கோப்பையை தனது முகாமுக்குக் கொண்டு சென்றான். அங்கு

அவனும் அவனது கூட்டாளிகளும் அதை ஒரு கால்பந்தைப் போல உதைத்து விளையாடினர்.

ஸ்ரீனிவாஸ் கொல்லப்பட்ட செய்தி, அந்தப் பகுதி முழுவதும் அதிர்வலைகளைப் பரப்பியது. பிழை இல்லாமல் பரவிய செய்தி இதுதான். அந்தக் கொள்ளையனின் பழிவாங்கல் பட்டியலில் இருக்கும் ஒருவரும் பாதுகாப்பாக இருக்க முடியாது.

கொலையை விட, அவனின் அந்தச் செயல் மிகக் கொடூரமாக இருந்தது (கிட்டத்தட்ட மூன்று வருடம் வரையில் ஸ்ரீனிவாஸின் தலை மீட்கப்படவில்லை). இந்தச் சம்பவம் வீரப்பனின் செல்வாக்கை ஒரு அதிபயங்கரமானவன் என உயர்த்தியது.

பயங்கரமான இந்தக் கதையை கருப்புசாமி முடித்தபோது, ''ஸ்ரீனிவாஸ் கட்டிய அந்தக் கோயிலுக்கு என்ன ஆனது?'' என்று நான் கேட்டேன். அந்தக் கதையை கேட்ட போது எனக்கு தூக்கிவாரிப் போட்டது. அதை சமாளிக்க அவ்வாறு கேட்டு வைத்தேன்.

''அது இன்னும் அங்கேயேதான் இருக்கிறது'' என்று அவர் பதில் சொன்னார். அந்தக் கோயிலுக்கு அன்று மாலையே அவர் என்னை அழைத்துச் சென்றார்.

அந்தக் கோயில் சத்தியில் உள்ள எஸ்.டி.எஃப். தலைமையகத்தில் இருந்து நான்கு மணி நேரப் பயண தூரத்தில் இருந்தது. அங்கு ஸ்ரீனிவாஸின் மிகப்பெரிய படம் இருந்தது. அவரது வாழ்க்கைக்குறிப்புகள் அடங்கிய ஒரு போர்டு மற்றும் அவர் இறந்ததற்குப் பிறகு அவருக்கு வழங்கப்பட்ட, 'கீர்த்தி சக்ரா' விருது ஆகியவை இருந்தன. அந்த கிராமத்தினர், அவரை ஒரு யோகியைப் போல மதித்தனர்.

கொஞ்ச நேரம் அந்தக் கோயில் அருகில் இருந்தோம். ஸ்ரீனிவாஸ் படத்தின் முன் ஆரத்தி காட்டப்பட்டது. கொடூரமான முறையில் அவர் இறந்து

போயிருக்கிறார். ஆனால் அதற்கு முற்றிலும் நேர்மாறாக, அந்தப் பகுதி முழுவதும் ஒருவிதமான அமைதி பரவி இருந்தது.

‘‘ஸ்ரீனிவாஸ் கிராம மக்களின் மனங்களில் வாழலாம். ஆனால் அவருக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை’’ என்று நான் நினைத்தேன்.

அந்த கோயிலுக்குப் போனது எனது மனவுறுதியை மேலும் பலப்படுத்தியது. அந்தக் கொள்ளையனைத் தேடிக் கண்டுபிடிக்க என்னால் என்ன முடியுமோ அத்தனையும் முயற்சிக்க வேண்டும். அவனது அத்தனை குற்றங்களுக்கும் அவன் தண்டனை அனுபவிக்க வேண்டும். அவன் செய்த கொலைகளுக்கு உண்டான விலையை அவன் கொடுக்க வேண்டும் என்று நினைத்தபடியே என் அறைக்கு வந்தேன்.

அன்றும் எனக்கு கருப்புசாமி ஒரு கதையைச் சொன்னார்.

அது வீரப்பன் தனது சொந்த குழந்தையின் ரத்தம் குடித்ததுதான்...

உங்களால் நம்பமுடியவில்லை.

என்னாலும்தான் நம்பமுடியவில்லை.

# குழந்தையைக் கொல்லும் அரக்கக்குணம்?

வீரப்பனின் அட்டகாசங்கள் பற்றி கருப்புசாமி கதை கதையாக சொல்லிக் கொண்டே இருந்தார். ஆனால் குறிப்பாக அதில் ஒரு விஷயத்தை நம்புவது கடினமாக இருந்தது.

“தனது சொந்தக் குழந்தையைக் கொல்பவன் என்ன மனிதன்? இது உண்மைதானா அல்லது வதந்தியா?” என்று கேட்டேன்.

அதைக் கேட்டதும், கருப்புசாமி முகம் சுளித்தார். “சார், அவனை ஒரு தந்தையாக நீங்கள் பார்க்கவே முடியாது. அவனைப்பற்றி பர்கூர் காவல்நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

1993 ஜூலை 17—ம் தேதி இந்தியன் பீனல் கோட் 302—வது செக்ஷன்படி கொலை வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. வீரப்பன் தனது மகளைக் கொலை செய்த போது அவனுடன் இருந்தவன் நீதிபுரம் சின்னச்சாமி என்பவன். அவனை நாங்கள் கைது செய்த போது இதை உறுதிப்படுத்தினான்” என்றார்.

அந்த மரணம் குறித்து பதிவு செய்யப்பட்ட கோப்பை எடுத்தபடி, வீரப்பன் மற்றும் அவனது மனைவி முத்துலட்சுமி பற்றி மேலும் விவரங்களைச் சொல்லுமாறு நான் கருப்புசாமியிடம் கேட்டேன்.

போலீஸ் காவலில் இருந்து தப்பித்த பிறகு, ஒரு முடிவுக்கு வந்தான். எந்த நிலையிலும் தனது கவனத்தை யாராலும் திசைத்திருப்ப விடக்கூடாது என்பதுதான் அம்முடிவு. அதாவது, போதை வஸ்துக்கள் மற்றும் பெண்களிடமிருந்து விலகி இருப்பதில் உறுதியாக இருந்தான் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இதற்குக் காரணம், அவனைக் கண்டுபிடிக்கும்

வாய்ப்பை மீண்டும் ஒருபோதும் அதிகாரிகளுக்குக் கொடுத்து விடக்கூடாது என்பதில் அவன் மிகத் தெளிவாக இருந்தான்.

அவனது அந்த உறுதிக்கு மாறாக நெருப்பூர் கிராமத்தைச் சேர்ந்த அழகான, இளம்வயது கொண்ட முத்துலட்சுமியால் ஈர்க்கப்பட்டான். அதை அவனால் தடுக்க முடியவில்லை. வீரப்பன் அடிக்கடி தனது கிராமத்திற்கு வந்து செல்வதை விரைவிலேயே முத்துலட்சுமியும் கவனித்தாள். அவனது அடர்த்தியான மீசை, ஊடுருவிப் பார்க்கும் கண்கள், அதிகார தோரணை — கிராமத்தினர் மத்தியில் அவனைப்பற்றிப் பரவியிருந்த பயமும் பக்தியும் அவன் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அவனது பார்வைக்கு சாதகமாக அவளும் பதிலளிக்கத் தொடங்கினாள்.

முத்துலட்சுமியின் மீது வீரப்பன் ஆசை கொண்டது அரசல்புரசலாக அக்குடும்பத்துக்குத் தெரிந்தது. முத்துலட்சுமியின் தந்தை, “அவளுக்கு ஏற்கனவே உறவுக்காரப் பையன் ஒருவனுடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது” என்று வீரப்பனிடம் சொன்னார். ஆனால், வீரப்பன் விட்டுக் கொடுப்பதாயில்லை. அவனது விருப்பம் முத்துலட்சுமியின் தந்தையால் மறுக்கப்பட்ட ஒரு சில மாதங்களுக்குப் பிறகு, அவன் வீட்டிற்குத் தெரியாமல் முத்துலட்சுமியை அழைத்துச் சென்றான். இருவரும் காட்டுக்கோயில் ஒன்றில் திருமணம் செய்து கொண்டனர்.

விரைவிலேயே முத்துலட்சுமி கர்ப்பமடைந்தார். அதே நிலையில் எட்டு மாதங்கள் வரையில் காட்டுக்குள்ளேயே சமாளித்தார். கடைசியாக பிரசவத்திற்காக அவளது பெற்றோர் வீட்டிற்குத் திரும்பினார். மகளை கைது செய்து விடுவார்களோ என்ற கவலையில், முத்துலட்சுமியை அவரது தந்தை சென்னைக்கு அழைத்துச் சென்றார். அங்கு முத்துலட்சுமி போலீசில் சரணடைந்தார்.

ஒரு பெண்கள் விடுதியில் முத்துலட்சுமியை தங்க வைத்தனர். பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அப்போது, அதிரடிப்படை பணியில் இருந்த ஐ.பி.எஸ். அதிகாரி சைலேந்திர பாபு, அந்தக் குழந்தைக்கு வித்யா ராணி என்று பெயர் வைத்தார். பின்னர் நெருப்பூரில் உள்ள முத்துலட்சுமியின் தந்தை

வீட்டிற்கு, தாயையும் குழந்தையையும் போக அனுமதித்தனர். எனினும் முத்துலட்சுமியின் நடவடிக்கைகள் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டன.

ஒரு நாள் உறவினர் என்று சொல்லி வீரப்பனின் ஆள் ஒருவன் முத்துலட்சுமியின் வீட்டிற்கு வந்தான். ‘‘முத்துலட்சுமியைப் பிரிந்து வீரப்பனால் வாழ முடியவில்லை. அதனால் குழந்தையை இங்கே பெற்றோர்களிடம் விட்டுவிட்டு காட்டுக்குத் திரும்பி வந்து விடவேண்டும்’’ என்று அவன் சொன்னான்.

எந்த ஒரு தாயும் குழந்தையை அவ்வளவு எளிதாகப் பிரிந்து விட மாட்டாள். இரண்டு மாதங்கள் கடந்தும் முத்துலட்சுமி கணவனின் கட்டளையை கண்டுகொள்ளவில்லை. கடைசியாக தனது குழந்தை காட்டில் வளர்வதைக் காட்டிலும் கிராமத்தில் வளர்ந்தால் நல்ல எதிர்காலம் இருக்கும் என்று சமாதானம் செய்துகொண்டு, ரகசியமாக நெருப்பூரை விட்டு வெளியேறினார். அதன்பிறகு விரைவிலேயே வீரப்பனுடன் மறுபடியும் சென்று வாழத் தொடங்கினார்.

1992—ல் அவர்களுக்கு மற்றொரு பெண் குழந்தை பிரபா பிறந்தாள். சின்னப்பிள்ளை என்ற அனுபவம் நிறைந்த மருத்துவச்சி பிரசவம் பார்த்தார். ஒரு வருடம் கழித்து மற்றொரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால், புதிய குழந்தை கொண்டாட வேண்டிய விஷயம் என்பதற்கு பதில் வீரப்பனுக்கு கவலையளிக்கும் விஷயமாக இருந்தது.

அந்தக் குழந்தை பிறந்த நேரத்தில் அவனது குழு உறுப்பினர்கள் 100 பேராக அதிகரித்திருந்தனர். அதில் நிறையப் பெண்களும் வயதானவர்களும் அடக்கம். இது அவர்களின் இயக்கத்தின் வேகத்தை குறைத்துக் கொண்டிருந்தது.

வீரப்பனின் கோட்டை என்று கருதப்பட்ட போத மலையை எஸ்.டி.எ.ஃப். கைப்பற்றியது. மூன்று திசைகளில் இருந்தும் அதிரடிப்படையினர் நெருங்கி வந்தனர். வீரப்பன் குழுவினர் திம்பத்தில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதிக்கு

மாறிச் செல்ல வேண்டியிருந்தது. எஸ்.டி.எஃப். அவர்களை விடாமல் துரத்தியது.

இது ஒருபுறமிருக்க, குழந்தை எப்போது என்ன செய்யும் என முன்கூட்டியே அனுமானிக்க முடியாது. மறைந்திருக்கும் ஒரு இடத்தில் இருந்து திடீரென்று அதன் அழுகை, அந்த சத்தத்தை நிறுத்துவதற்கான வாய்ப்பு கூடக் கொடுக்காமல் வெளிப்படும்.

“அவள் ஒரு பெரிய பிரச்சினையாகி விட்டாளே” என்று கடுமையாக சிந்தித்தான் வீரப்பன். நீதிபுரம் சின்னச்சாமி சொன்னபடி, ஒரு நாள் குழந்தை உடம்புக்கு முடியாமல் அளவுக்கு அதிகமாக அழுதாள். வீரப்பன் அந்த மருத்துவச்சியைப் பார்த்தான். அச்சமூட்டும் சூழ்நிலையிலும் பிரசவம் பார்த்து குழந்தைகளைப் பாதுகாப்பாக பிறக்கச் செய்த பெருமைக்குரியவள் சின்னப்பிள்ளை.

மருத்துவச்சி எதையோ சொல்ல வந்தாள். பின்னர் வீரப்பன் விருப்பத்தை அறிந்து அதை மாற்றிக் கொண்டு, “கொஞ்சம் எருக்கம்பூ சாறு கொடுத்தால் அதோட மூச்சு நின்று போகும்” என்றாள் சின்னப்பிள்ளை.

“அதைச் செய்” என்று சுருக்கமாகச் சொன்னான் வீரப்பன். அந்தக் கூட்டத்திலேயே குழந்தைக்காக கண்ணீர் விட்டு அழுத ஒரே ஒரு நபர் முத்துலட்சுமி மட்டும்தான்.

1993 ஜூலை 13—ம் தேதி இன்ஸ்பெக்டர் ஜெகதீசன் தலைமையிலான கர்நாடக எஸ்.டி.எஃப். குழுவும் ஒரு பி.எஸ்.எப். படைப்பிரிவும் மாரி மடுவு என்று அழைக்கப்படும் ஒரு இடத்தில் சந்தேகத்திற்கிடமான மேடு ஒன்றைப் பார்த்தன. அதைத் தோண்டிப் பார்த்த போது, அங்கு குழந்தை ஒன்றின் உடலை மட்டுமே அவர்களால் காண முடிந்தது.

“அவன் பல அப்பாவிகளைக் கொலை செய்திருக்கிறான் என்று எனக்குத் தெரியும். ஆனால் சொந்தக் குழந்தையைக் கொல்வது மனிதத்தன்மையற்ற

செயல் என்று என்னால் கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை'' என்றேன்.

வீரப்பனைப் பொறுத்தவரை நீதி நியாயத்தை விட, அப்போதைய சூழலுக்கு எது சரியோ அதற்கே அதிக முக்கியத்துவம் தருவான் என்றார் கருப்புசாமி, எந்த சலனமும் இல்லாமல்.46

சின்னச்சாமி குறிப்பிட்டதைப் போல, வீரப்பனின் இந்தக் கொடிய செயல் அவனது மற்றொரு நோக்கத்தையும் நிறைவேற்றி இருந்தது. 'அவனுக்குக் கீழே வேலை பார்ப்பவர்கள் மத்தியில் அது நடுக்கத்தை ஏற்படுத்தியது. அவனது குழுவைச் சேர்ந்தவர்கள் விசுவாசமாக இருப்பதையும் அது உறுதிப்படுத்தியது' என்றார் கருப்புசாமி.

இந்த நேரத்தில், 'வீரப்பனைப் பிடிக்காமல் திருமணம் செய்துகொள்ள மாட்டேன்' என்று சத்தியம் செய்து ஒரு சப்—இன்ஸ்பெக்டர் அதிரடிப்படையில் இணைந்தார்.

அவர்?

## [வீரப்பனைப் பிடிக்க கர்நாடகா எஸ்.பி. விரித்த வலை!]

ஜூலை 2001

அதிரடிப்படையினரைக் காட்டிலும் வீரப்பனுக்கு இந்த அடர்ந்த காட்டின் ஒவ்வொரு அங்குலமும் அதன் அனைத்து ரகசியங்களும் நன்றாகவே தெரியும். அந்த கடினமான நிலப்பகுதி மட்டுமல்ல, அங்கிருந்த உள்ளூர் மக்கள் எங்களை பயத்துடன் பார்த்ததும் எங்களுக்குத் தடையாக இருந்தது. போலீசுடன் தாங்கள் நெருக்கமாக இருப்பதாகத் தெரிந்தால்கூட வீரப்பன் தங்களைச் சும்மா விடமாட்டான் என்ற பயம் அவர்களிடம் இருந்தது.

ஒரு குறிப்பிட்ட ரோந்து முடித்துவிட்டு, வாகனத்துக்காக காத்திருந்தோம்.

அப்போது எனக்கு ஐ.பி.எஸ். அதிகாரியான தமிழ்ச்செல்வனைப்பற்றி கொஞ்சம் நன்றாக அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. எஸ்.டி.எஃப்—ல் இருந்த கவரக் கூடிய அநேக கதாபாத்திரங்களில் சந்தேகமில்லாமல் அவரும் ஒருவர்.

வீரப்பனுடனான கசப்பான அனுபவங்களை விவரிக்கக் கூடிய விவரம் அறிந்தவரும் வீரப்பனுடன் நேரில் மோதிய ஒரு சிலரில் அவரும் ஒருவராக இருந்தார். அவர் பார்ப்பதற்கு காட்டுக்குள் நீண்ட தூர கடினமான மலையேற்றத்திற்கு உகந்தவராக இருக்க மாட்டார். ஆனால் அந்தக் குறைபாட்டை, அவர் தனது உற்சாகம், சுத்தமான சுயகட்டுப்பாடு, எங்கள் ரோந்துப் பணியை அதீத சுவாரஸ்யமாக்கும் புதுமையான உணவைப் பந்தி வைத்துப் பறிமாறுதல் போன்றவற்றால் ஈடுகட்டி விடுவார்.

அந்த விலைமதிக்க முடியாத கணத்தில் கோதுமை மாவை செயல்திறனோடு பிசைந்து, அதில் சிறிது உப்பையும் சர்க்கரையையும் தூவினார் தமிழ்ச்செல்வன். பின்னர் அந்த மாவை வட்டமாகத் தேய்த்து குச்சியின் மீது சுருட்டி நெருப்பில் வைத்தார். ஒரு நிமிடமோ அல்லது கொஞ்ச நேரம் கழித்தோ அதை எடுத்து தட்டில் வைத்தார். ‘‘அங்கே போங்கள் தமிழ்ச்செல்வனின் பிஸ்கட் கம் பிரட்ஸ்சுடிக் தயார்’’ என்று சொன்னார்.

என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. நானே சென்று அந்த தனிச்சிறப்பு மிக்க சிற்றுண்டியை டீயுடன் எடுத்துக் கொண்டேன். அது ஆனந்தமாக இருந்தது.

கடைநிலைப் பணியாளர்கள் எல்லாம் செல்வனைச் சுற்றி உருகினர். அவர்கள் மத்தியில் அவர் அளவுக்கு மீறிப் பிரபலமாகி இருந்தார். வீரப்பனின் தாக்குதலில் ஒருமுறை கடுமையான காயம் பட்டதற்குப் பிறகும் இந்தப் படையுடன் அவர் இருந்தது அவர்மீது ஏற்கனவே இருந்த மதிப்பை மேலும் அதிகரித்தது.

தமிழ்ச்செல்வன் பிழைத்தது அதிர்ஷ்டவசம். அந்த நேரத்தில், கர்நாடகத்தைச் சேர்ந்த இரண்டு எஸ்.டி.எஃப். அதிகாரிகள் வீரப்பன் நடத்திய தாக்குதல் ஒன்றில் உயிரிழந்தது நினைவுக்கு வந்து எனது மனம் இருண்டது.

1992—ன் ஆரம்பம்

‘‘சாகேப்ரூ (சார்) ஏரப்பனைப் பத்தி சில தகவல் வைச்சிருக்கேன்!’’ தொலைபேசியில் வந்த அந்தக் குரல் உள்ளூர் கர்நாடகப் பெயரில் வீரப்பனைத்தான் அப்படிக் குறிப்பிட்டது. ‘‘ஆனா ஏதாவது ஒரு உயர் அதிகாரி கிட்டத்தான் நான் பேச விரும்புறேன்’’ என்றது அந்தக் குரல்.

சிறிது நேரம் ஒரு அமைதி நிலவியது. ராமபுரா காவல்நிலையத்தில் இருந்த காவலர், ‘‘நாளைக்குக் காலையில கவுதல்லி இன்ஸ்பெக்ஷன் பங்களாவுக்கு வாங்க’’ என்று பதில் சொன்னார்.

அடுத்த நாள் காலையில், சந்திக்க வேண்டிய இடத்தில் ஒரு கர்நாடக எஸ்.டி.எஃப். ஜீப் வந்து நின்றது. அந்தப் படையின் மிகுந்த தைரியசாலிகளான இரண்டு அதிகாரிகள் அதிலிருந்து இறங்கினர். அவர்கள் சப்—இன்ஸ்பெக்டர் ஷகில் அகமது, எஸ்.பி. ஹரிகிருஷ்ணா. இதில் ஹரிகிருஷ்ணா எஸ்.டி.எஃப்—ல் சேர்ந்த நேரம் அவரது மனைவி கர்ப்பமாக இருந்தார். குழந்தையை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

ஷகில் அகமது, இரண்டாம் தலைமுறை காவலர். 1990—ல் மூன்று உதவி ஆய்வாளர்கள் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்டு, வீரப்பனைப் பிடிக்கும் வேட்டையில் தன்னையும் இணைத்துக்கொள்ள எம்.எம். மலைக்கு விரைந்து வந்து சேர்ந்தார். அதுமட்டுமல்ல அந்தக் கொள்ளையனைப் பிடிக்கும் வரையில் தான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்றும் அறிவித்தார்.

அந்த சந்திப்பை ராமபுராவில் உள்ள உள்ளூர் மதுபானக் கடை ஒன்றின் கேஷியர் நடராஜ் மற்றும் அந்தப் பகுதியில் ஒரு சிறிய உணவு விடுதி வைத்திருந்த முத்துராம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். அவர்கள் இருவரும் தங்களுடன் ஒருவரை அழைத்து வந்திருந்தனர். அவர்தான் முக்கியமான நபர்.

‘‘இது நாகராஜ். தினக்கூலித் தொழிலாளி. மூணு மாசமாக இவர்தான் வீரப்பனுக்கு ரேஷன் பொருட்களெல்லாம் கொடுத்துட்டு வர்றார். வீரப்பனை அவனது மறைவிடத்தில் நாலு முறை நேரில் பார்க்கவும் செஞ்சிருக்கார். இவருகூட சேர்ந்து குடிச்சிட்டு இருந்தபோது இந்த முழு விவரத்தையும் சொன்னார். போலீசுகிட்ட இதை எல்லாம் சொல்லுங்கன்னு சம்மதிக்க வைச்சோம். இதனால எங்களுக்கு கொஞ்சம் பேரு கிடைக்கலாம். பரிசுப் பணத்துல ஒரு பங்கும் கிடைக்கலாம்’’ என்றனர்.

இதைக் கேட்டு ஆர்வமான அதிகாரிகள், நாகராஜிடம் திரும்பத் திரும்ப பல விதமான கேள்விகளைக் கேட்டுத் துளைத்து, அவன் உண்மையில் வீரப்பனை நேரில் சந்தித்தவன்தானா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். அதன் பிறகு அவர்கள் ஒரு திட்டத்தை வகுத்தனர்.

வீரப்பனின் முகாமில் அவனை ஒருசில முறை சந்தித்ததற்குப் பிறகு நாகராஜ், அவனது முழுமையான நம்பிக்கையைப் பெற்றான். பெங்களூருவைச் சேர்ந்த ஒரு சில புரோக்கர்கள் யானைத் தந்தத்தை வீரப்பன் குழுவிடமிருந்து வாங்க விரும்புவதாகவும் அதற்குப் பதிலாக கணிசமான ஆயுதங்களையும் வெடிப் பொருட்களையும் தருவார்கள் என்றும் அவன் வீரப்பனிடம் சொன்னான்.

இதில் ஆர்வமான வீரப்பன், இந்தப் பணிக்காக தனது வலதுகரமாகத் திகழ்ந்த குருநாதன் என்பவனை நியமித்தான். குருநாதன் உயரமான, குண்டான ஒரு மனிதன். ஒரு சிறந்த துப்பாக்கி நிபுணன். வீரப்பனைப் போலவே நன்கு சுடக் கூடியவன்.

புரோக்கர்களைப் போல நடராஜும் முத்துராமும் குருநாதனை சந்தித்தனர். அவர்களிடம் வீரப்பன் கூட்டத்திற்கு துப்பாக்கிகளும் தோட்டாக்களும் தேவை எனச் சொல்லப்பட்டது. நடராஜும் முத்துராமும் மும்பை ஏஜென்ட்டுடன் வீரப்பன் தரப்பு சந்திக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தனர்.

ஒரு சில நாட்களில் அந்த ஏஜென்ட் வந்தார். அவர் வேறு யாருமல்ல. சாதாரண உடையில் இருந்த ஷகில் அகமதுதான். அது பின்னிரவு நேரம். நாகராஜ், முத்துராம், ஷகில் அகமது ஆகிய மூன்று பேரும் குருநாதன் மற்றும் அவனோடு வந்த சில மனிதர்களை காட்டுக்குள் சந்தித்தனர். ஆனால் அவனுடன் வந்த ஒரு பெண்ணைப் பார்த்து அவர்கள் கலவரமடைந்தனர். அவள் பெயர் சாந்தினி. அருகில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த பழங்குடியினப் பெண். அவளை முத்துராமுக்குத் தெரியும். எனவே அவர் கொஞ்சம் பீதியடைந்தார்.

அவர் அந்தப் பெண்ணுக்கு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, ‘அவள் ஏன் அங்கு இருக்கிறாள்’ என்று கேட்டார்.

அவள் வெட்கத்துடன் முகம் சிவக்க, குருநாதனை காதலிப்பதாகக் கூறினாள். முத்துராம், ஷகில் அகமது ஆகியோரை கமல நாயக்கா என்ற கிராமத்து ஆள் ஒருவர் குருநாதனுக்கு அறிமுகப்படுத்தினார். கமல நாயக்காதான், நாகராஜுக்கு வீரப்பனிடம் தொடர்பு ஏற்படக் காரணமானவர்.

ஷகில், சிவராஜ் என்ற பெயரில் குருநாதனுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். தோட்டாக்கள் நிறைந்த பெட்டி ஒன்றை அவர் வெளியே எடுத்தார். அதை உற்சாகத்துடன் பார்த்த குருநாதன், “இதுதான் எங்களுக்கு வேணும்” என்றான். மேலும் ஸ்டென் கன் வேண்டும் என்றும் அவன் கேட்டான். ஆயுதங்கள் கொடுத்தற்குப் பதிலாக சிவராஜ் யானைத் தந்தங்களை எடுத்துக் கொண்டார். யானைத் தந்தத்திற்கான விலை தொடர்பான பேரமெல்லாம் பேசி முடித்த பிறகு இருவரும் கைகுலுக்கினர்.

மெயின் ஏஜென்ட் மும்பையில் இருந்து இந்த டீலுக்காகவே வருவார் என்றும், அதுபற்றி ஓரிரு நாளில் முடிவாகி விடும் என்றும் சிவராஜ் (ஷகில்) அவர்களிடம் சொன்னார்.

அப்படி மெயின் ஏஜென்ட்டாக வந்த எஸ்.பி. விரித்த வலையில் குருநாதன் சிக்கினான். ஆனால், அவனை பிடித்து கைது செய்தது எத்தனை பெரிய தவறு என்பதை பின்புதான் அறிய முடிந்தது!

# போலீஸ் நிலையம் துவம்சம்!

1992 பிப்ரவரி 17—ம் தேதி சுமார் 35 பேர் சத்தியமங்கலத்தில் உள்ள தின்னல்லிக்குப் புறப்பட்டனர். அவர்களில் ஷகில், ஹரிகிருஷ்ணாவும் அடக்கம். டீ ஷர்ட்டும் ஜீன்ஸ் பேன்ட்டும் போட்டிருந்தனர். துப்பாக்கிகளை மறைத்து வைத்திருந்தனர். அந்த இரண்டு அதிகாரிகள், நடராஜ், நாகராஜ், முத்துராம், ஒரு டிரைவர் என ஒரு காருக்குள் நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்திருந்தனர். பின்னால் ஒரு அரை மைல் தள்ளி ஒரு லாரியில் 30 போலீஸ் கான்ஸ்டபிள்கள் வந்து கொண்டிருந்தனர்.

காட்டுக்கு அருகே கார் நின்றது. ஹரிகிருஷ்ணா நாகராஜிடம், ‘‘மும்பையில இருந்து அந்த ஆளு சரக்கோட வந்துட்டார்ன்னு சொல்லி குருநாதனை இங்க கூட்டிட்டு வா’’ என்று சொன்னார்.

ஒரு ஒன்றரை மணி நேரம் கழித்து நாகராஜ் திரும்பினான். ‘‘குருநாதன் உங்களைக் காட்டுக்குள்ள வரச் சொல்றான்’’ என்றான்.

‘‘மெயின் ஏஜென்ட் வந்திருக்காரு. ஆனா அவரு நகரத்துக்காரரு. அவரு காட்டுக்குள்ள வர பயப்படுறாரு. குருநாதன்தான் காருகிட்ட வரணும்னு அவங்கிட்ட சொல்லு’’ என்று ஹரிகிருஷ்ணா பதிலளித்தார்.

பதற்றமான ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு குருநாதன் சாந்தினியுடன் வந்தான். ஷகில் காரை விட்டு வெளியே வர குருநாதன் காருக்குள் அமர்ந்தான். அவனை அடுத்து ஷகில் அமர்ந்தார். நட்ராஜும் சாந்தினியும் வெளியே நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தனர்.

ஹரிகிருஷ்ணன்தான் மெயின் ஏஜெண்ட் என்று குருநாதனுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். அவர் தனது கையில் இருந்த காலியான ஸ்டென் கன்னை குருநாதனிடம் கொடுத்தார். ஒரு சிறு தயக்கத்திற்குப் பின், குருநாதன் தனது டபுள் பேரல்டு ரைபிளை ஷகிலிடம் கொடுத்து விட்டு, அவர் அளித்த ஆயுதத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்தான்.

ஷகில் அந்த ரைபிளை முத்துராமிடம் கொடுத்துவிட்டு தலையை அசைத்து சைகை செய்தார். ஷகிலும் ஹரிகிருஷ்ணாவும் அவர்களின் பாக்கெட்டில் இருந்த ரிவால்வார்களை வெளியே எடுத்தனர். அப்போதும் குருநாதனுக்கு சந்தேகம் எதுவும் எழவில்லை. ஸ்டென் கன்னைப் பரிசோதித்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் ஷகிலும் ஹரிகிருஷ்ணனும் குருநாதனின் தலையில் ஆளுக்கு ஒரு பக்கமாகத் துப்பாக்கியை வைத்தனர். அதிர்ந்து போனான் குருநாதன்.

முத்துராம் தனது கையில் இருந்த குருநாதனின் ரிவால்வாரை, அவனது நெஞ்சிலேயே வைத்தார்.

வெளியே நின்றிருந்த சாந்தினி இதைப் பார்த்து விட்டாள். அவளது கண்கள் விரியத் திறந்தன. ஆனால், அவள் எதுவும் செய்வதற்கு முன் நட்ராஜ் அவளிடமிருந்து துப்பாக்கியைப் பறித்து விட்டார். அவளது கூந்தலைப் பற்றி வளைத்துப் பிடித்தார். வலியால் துடித்த அவளது உதடுகளில் இருந்து ஈனஸ்வரத்தில் ஒரு குரல் வெளிப்பட, காருக்குள் இருந்த அவளது காதலன் குருநாதன் பயத்தில் அழுது கொண்டிருந்தான். அவனது கைகள் பின்னால் மடக்கப்பட்டன. விலங்கைப் பூட்டினார்கள்.

சாந்தினி எம்.எம். ஹில்ஸ் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிச் செல்லப்பட்டாள். முத்துராமுக்கு சாந்தினியையும் அவரது தாயாரையும் தெரியும். அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சாந்தினியை விடுவித்தார்கள். ஆனால், இனி ஒருபோதும் குற்றவாளிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என எச்சரித்து விடுவித்தனர். இதனிடையே வீரப்பன் பதுங்கி இருக்கும் இடத்திற்குப் போலீசைக் கூட்டிச் செல்வதாக குருநாதன் ஒப்புக் கொண்டிருந்தான்.

இதுபோன்றதொரு வெற்றிகரமான நடவடிக்கையைத் தொடர்ந்து விலைமதிக்க முடியாத சொத்தான வீரப்பன் வெற்றிகரமாகப் பிடிக்கப்பட்டு விடுவான் என்றுதான் அனைவரும் நினைத்திருப்பார்கள். ஆனால் இந்த விஷயத்தில் அப்படி நடக்கவில்லை. வீரப்பன் பிடிபடுவதற்கு முன்பே குருநாதன் இறந்துவிட்டான். இப்போது வரையில் குருநாதனின் இறப்பு ஒரு மர்மமாகவே இருக்கிறது.

அவன் எப்படி இறந்தான் என்பது குறித்து முரண்பட்ட தகவல்கள் சொல்லப்படுகின்றன. அலுவலகக் கோப்புகள், அவன் போலீஸ் காவலில் இருந்து தப்பிக்க முயன்றான். அப்போது கொல்லப்பட்டான் என்று சொல்கின்றன. ஆனால் குருநாதன் தான் வீரப்பனைக் கடைசியாகப் பார்த்த இடத்திற்கு போலீசைக் கூட்டிச் சென்றதாகவும் ஆனால் வீரப்பன் அதற்கு முன்பே அந்த இடத்தை விட்டு தப்பித்து விட்டான் என்றும் அங்குதான் கொடூரமான முறையில் குருநாதன் கொல்லப்பட்டான் என்றும் வீரப்பன் கூட்டத்திற்கு ஆதரவானவர்கள் அடித்துச் சொல்கின்றனர்.

குருநாதனைக் கைது செய்தது போலீஸ் செய்த மிகப் பெரிய தவறு. ஆனால், வீரப்பன் மீது அவர்கள் பழிபோட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் நடவடிக்கை வீரப்பனின் கோபத்தைத்தான் அதிகரித்தது. அப்போது வீரப்பன் போட்ட சபதமும் அதில் அவன் அடைந்த வெற்றியும் எனக்கு வேதனையைக் கொடுத்தது.

குருநாதன் கைது செய்யப்பட்டதின் எதிரொலியாக வீரப்பனின் பழிவாங்கும் படலம் தொடங்கியது. பழிவாங்கும் படலத்தின் முதல் நடவடிக்கையாக நிலையான ஒரு இடத்தின் மீது... ராமபுரா போலீஸ் ஸ்டேஷன் மீது நடைபெற்ற தாக்குதல் அமைந்தது. இதுவரையில் அவன் போகிறபோக்கில் போலீசார் மீது தாக்குதல் நடத்தி இருக்கிறான். இப்போதுதான் முதல்முறையாக போலீசாரின் பலமான இடத்தின் மீதே தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிட்டான்.

19 மே 1992, இரவு 1 மணி

அந்த இரவு வழக்கத்திற்கு மாறான இரவாகத் தோன்றியது. ராமபுரா போலீஸ் ஸ்டேஷனில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபிள் ராச்சப்பா கொட்டாவி விட்டபடி வராந்தாவில் படுத்தார். அவருடன் பணியாற்றும் சகதோழர்களும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். ஸ்டேஷனுக்கு உள்ளே இரண்டு போலீஸ்காரர்கள் இருந்தனர். மாவட்ட ஆயுதப்படைக்குச் சொந்தமான வேன் ஒன்று சாலையின் குறுக்கே நிறுத்தப்பட்டிருந்தது.

வீரப்பன் அச்சுறுத்தலைச் சமாளிக்க செய்யப்பட்ட சிறப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதி அது. அந்த வேனுக்குள்ளும் ஐந்து பேர் தூங்கிக் கொண்டிருந்தனர். சப்—இன்ஸ்பெக்டர் ராச்சய்யா, போலீஸ் ஸ்டேஷனில் இருந்து ஒரு கல்லெறி தூரத்தில் இருந்த தனது வீட்டில் இருந்தார்.

யாரும் கவனிக்காத நேரத்தில் காக்கி உடை அணிந்த உருவம் ஒன்று இருட்டுக்குள் இருந்து தோன்றியது. அந்த உருவம் சைகை செய்ததும், ஒரு சிலர் சத்தமில்லாமல் போலீஸ் ஸ்டேஷனைச் சூழ்ந்தனர். பின்னர் அந்த உருவம் தனது துப்பாக்கியைத் தூக்கியபடி, "ஒருத்தனை விடாம கொல்லுங்கடா" என உத்தரவு பிறப்பித்தது.

அவனது தாக்குதலில் போலீஸ் நிலையம் நிலை குலைந்தது ஒரு பக்கம். கர்நாடக அரசுக்கு பெரும் சோதனையும் வேதனையும் ஏற்பட்டது இன்னொரு பக்கம். மூன்றாவதாக, தன்னைப் பிடிக்க துரத்திக்கொண்டிருக்கும் எஸ்.பி.கிருஷ்ணாவுக்கும் சப்—இன்ஸ்பெக்டர் ஷகில் அகமதுக்கும் வீரப்பன் விரித்த வலைதான் மிக பயங்கரம்.

அதற்கு, ஒரு குடும்பத்தையே கொலை செய்யும் எண்ணத்தோடு புறப்பட்டான்.

அந்த குடும்பம் தப்பித்ததா...?

## "முதலில் யாரை கொலை செய்ய?"

ராமபுரா போலீஸ் நிலையம் மீது பாய்ந்த ஏராளமான துப்பாக்கி ரவைகள் வெடித்த சத்தம் அந்த இரவின் அமைதியைக் குலைத்தது. வராந்தாவில் படுத்துக் கிடந்த பெரும்பாலானவர்கள் அந்த கணத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களில் கான்ஸ்டபிள் நாகேஷ், தப்பிக்க இடம் தேடி ஓட முயற்சித்தார். ஆனால் அவரது இடது கையில் ஒரு தோட்டா பாய்ந்து, சரிந்து தரையில் விழுந்தார். பின்னர் தன்னைத்தானே இழுத்துக்கொண்டு சென்று, அங்கே நிறுத்தப்பட்டிருந்த எஸ்.ஐ.யின் மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால் மறைந்து கொண்டார்.

போலீஸ் ஸ்டேஷன் உள்ளே இருந்த, அசிஸ்ட்டென்ட் சப்—இன்ஸ்பெக்டர் சுப்பன்னாவும் கான்ஸ்டபிள் பசவராஜும் அவசரமாகக் கதவைச் சாத்திக் கொண்டு, உள்ளே இருந்து பதிலுக்குச் சுட்டனர். வெளியில் இருந்து வந்த துப்பாக்கி ரவைகள் சில கதவைத் துளைத்தன. எனினும் அதிர்ஷ்டவசமாக அவர்கள் இருவரையும் அவை தாக்கவில்லை.

வேனில் இருந்தவர்களில் நாகராஜு என்பவர் வெளியே வந்து எஸ்.ஐ. குடியிருப்பை நோக்கி ஓட முயற்சித்தார். ஆனால், அவரது இடது தொடையில் ஒரு குண்டு பாய்ந்து மயங்கி விழுந்தார். வேனுக்குள் இருந்தவர்கள் அவசரமாக அதற்குள்ளேயே மறைந்து கொண்டனர்.

வீரப்பனும் அவனது ஆட்களும் ஸ்டேஷனை நெருங்கினர். அவர்கள் ஸ்டோர் ரூமை உடைத்து, உள்ளே சென்றனர். அங்கிருந்து ஆறு சிங்கிள் பேரல் துப்பாக்கிகள் மற்றும் வெடிப்பொருட்களை எடுத்துக் கொண்டனர். அந்த ஆயுதங்களில் பல ஏற்கனவே வீரப்பன் கும்பலிடமிருந்து போலீசார்

கைப்பற்றியவை. மறுபடியும் எல்லாமே தனது கட்டுப்பாட்டில் வந்துவிட்டது என்று கேலியாகப் புன்னகைத்தான் வீரப்பன்.

போலீஸ் ஸ்டேஷனுக்கு உள்ளே பசவராஜு, அதி அவசரமாக வயர்லெஸ்சை எடுத்து தகவலைச் சொன்னார். அங்கிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஹன்னூர் போலீஸ் ஸ்டேஷன் அவசர தகவல் பெற்றது. அந்த ஸ்டேஷன் இன்சார்ஜ் ஆக இருந்த இன்ஸ்பெக்டர் வேங்கடசாமி அவசரமாக ஒருசில காவலர்களைக் கூட்டிக் கொண்டு ராமபுராவை நோக்கி விரைந்தார்.

முற்றுகையிடப்பட்ட தமது சகாக்களுக்கு உதவும் ஒரு மீட்புப் படையாக முழு வேகத்துடன் சீறிப் பாய்ந்தனர். வேங்கடசாமி பதற்றத்துடன் வயர்லெசில் வரும் சத்தத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். துப்பாக்கிச் சுடும் சத்தத்தை அதில் அவரால் தெளிவாகக் கேட்க முடிந்தது. நாம் அங்கே போவதற்குள் எல்லோரையும் முடித்து விடுவார்கள் என்று அவநம்பிக்கையான சிந்தனை அவருக்குள் எழுந்தது. பிறகு அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

‘‘நான் ஒரு பெரிய படையோடு வந்து கொண்டிருக்கிறேன். ஒரு சில நிமிடங்களில் நாங்கள் அங்கு இருப்போம். சண்டையைத் தொடருங்கள். அவர்களை நாம் பிடித்து விடலாம்’’ என்று வயர்லெசில் கத்திச் சொன்னார்.

அதிர்ஷ்டவசமாக ராமபுரா போலீஸ் ஸ்டேஷனில் இருந்த அந்த வயர்லெஸ் ஜன்னலுக்கு அருகே முழு சத்தத்துடன் வைக்கப்பட்டிருந்தது. அந்தத் துப்பாக்கிச் சத்தத்துக்கு இடையிலும் வேங்கடசாமி அளித்த உறுதியை வீரப்பனால் கேட்க முடிந்தது.

உடனடியாக நாம் கிளம்ப வேண்டும் என அவன் தனது ஆட்களுக்கு சைகை செய்தான்.

பின்னாளில் இந்த சம்பவத்தை வேங்கடசாமி என்னிடம் விவரித்தபோது, ‘நாங்கள் அங்கே போவதற்குள், கொள்ளையர்கள் காட்டுக்குள் தப்பிச் சென்றிருந்தனர். வராந்தாவில் ஐந்து பேர் இறந்து கிடந்தனர். நாகேஷும்

நாகராஜும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர். அவர்கள் நிறைய ரத்தத்தை இழந்திருந்தனர். அவசரமாக அவர்கள் கொல்லேகால் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்' என்று சொன்னார்.

வீரப்பனின் இந்த நடவடிக்கை, அவன் துணிச்சலுக்குப் பேர் போனவன் என்ற அவனது செல்வாக்குக்கு மேலும் வலுசேர்த்தது. அந்தப் பகுதியில் இருந்த ஒட்டுமொத்த போலீஸ் படையையும் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது. பின்னாளில் சரணடைந்த அவனது ஆட்கள், வீரப்பனின் பழிவாங்கும் தாகம் அப்போதும் அடங்கவில்லை என்று கூறினர். ஹரிகிருஷ்ணாவையும் ஷகில் அகமதுவையும் அவன் மறந்திருக்கவில்லை.

ஆகஸ்ட் 1992.

''கமல நாயக்கா மறுபடியும் அதே வேலையைச் செய்றான்ணே. அந்த விஷப்பாம்பு நாகராஜை நமக்கு அறிமுகப்படுத்தி வச்சவங்கள்ல இவனும் ஒருத்தன். அவன் இப்பவும் ஷகில் அகமதுவை அடிக்கடி சந்திச்சுப் பேசுறான்ணே'' என்று ஒற்றன் வந்து சொன்னதை கவனமாக கேட்டுக்கொண்டான் வீரப்பன்.

அவனை தீவிரமாகப் பார்த்து, ''ஷகில் அகமதுவா? என்னைக் கொல்லாம கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிக்கிட்டு இருக்கிறவன்தானே? பாவம் அவனோட அப்பா அம்மா. மகனுக்கு கல்யாணம் பண்ணிப் பார்க்கிற சந்தோஷத்தை அவங்க அனுபவிக்கவே போறதில்ல'' என்று சொன்னான் வீரப்பன்.

அவனுடைய ஆள் அந்த இடத்தைவிட்டுப் போனதும், தனியாக இருந்த வீரப்பனின் மனதில் சில மாதங்களாக நடந்த சம்பவங்கள் காட்சிகளாக ஓடின. ராமபுரா போலீஸ் ஸ்டேஷன் தாக்குதல் சம்பவம் முடிந்து கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு ஜூன் 15—ம் தேதி நல்லூர் கிராமத்தில் எஸ்.டி.எஃப். படையினருக்கும் வீரப்பன் கூட்டத்திற்கும் இடையே நடந்த மோதலில், வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த 4 பேர் கொல்லப்பட்டனர்.

இது தவிர வீரப்பனுக்கு ரேஷன் பொருட்கள் சப்ளை செய்கிறார்கள் என்ற சந்தேகத்திற்குரிய கிராமத்து ஆட்களையும் எஸ்.டி.எஃப். தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருந்தது. இது வீரப்பனிடம் அளவில்லாத ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அவனது ஆட்களைக் கொன்றது போதாது என்று அவனுக்கு வரும் ரேஷன் பொருட்களையும் தடை செய்ய ஷகில் அகமதுவும் ஹரிகிருஷ்ணாவும் பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருந்தனர்.

“அவனுங்களுக்கு சரியான பதிலடி கொடுக்கணும். அவனுங்களை (கெட்ட வார்த்தையில்) மொத்தமா ஒழிச்சுக் கட்டணும்” என்று நினைத்தான் வீரப்பன். “ஆனா எப்படி?”

அங்கேயே மணிக்கணக்கில் உட்கார்ந்து சிந்தித்தான். திட்டம் போட்டான். அப்போது ஒரு உத்தேசமான சிறு புன்னகை அவனது முகத்தில் தோன்றியது. அது அப்படியே பெரிதாக வளர்ந்தது.

அடுத்த நாள் அதிகாலை கமல நாயக்காவின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. இந்த நேரத்தில் யாராக இருக்கும்? என்று ஆச்சரியப்பட்ட அந்த போலீஸ் இன்ஃபார்மர் கண்களைத் தேய்த்துக் கொண்டார். அதற்குள் கதவு தட்டப்படும் ஓசை மேலும் அதிகரித்தது. “இந்தா வர்றேன் இந்தா வர்றேன்” என்று அவசரமாகச் சொல்லியபடி, தாழ்ப்பாளைத் திறந்தார் அவர்.

அடுத்த நொடியில் கதவு வெளியில் இருந்து தள்ளித் திறக்கப்பட்டது. திடீரென்று கதவு திறக்கப்பட்டதால் கமல நாயக்கா தரையில் விழுந்தார். அவரது தூக்கக் கலக்கம் சுத்தமாகப் போய் விட்டது. வீரப்பன் உள்ளே நுழைய பலத்த ஆயுதங்களுடன் அவனுக்குப் பின்னால் சிலர் வந்தனர். கமல நாயக்காவை தலைகீழாகத் தொங்கவிட்டனர். அவரது குடும்பத்தினர் சுற்றி வளைக்கப்பட்டனர்.

கமல நாயக்கா பக்கத்தில் வந்து, அவரது தலைமுடியை இறுகப் பிடித்தான் வீரப்பன். “எனக்குத் தெரியும் அந்த நாய் ஷகிலுக்கு தகவல் சொல்ற ஆள் நீ. அதை இல்லைன்னு சொல்லி என்னோட நேரத்தை வீணடிக்காத. இப்ப நீ ஒரு முக்கியமான முடிவு எடுக்கணும். உன்னோட

குடும்பத்தை உன்னோட கண்ணு முன்னாடியே கொல்லப் போறேன். யார மொதல்ல கொல்ல?" என்று உறுமினான்.

கமல நாயக்கா கதறி கதறி அழத் தொடங்கினார்.

## கர்நாடகாவுக்கு சோகமான ஆகஸ்ட் 15?

போலீஸ் இன்ஃபார்மர் கமல நாயக்கா வீட்டில் வீரப்பன் வெறியாட்டத்தைத் தொடங்கினான். 'உன் வீட்டில் இருப்பவர்களில் யாரை முதலில் கொல்வது என்று நீயே கை காட்டு' என்று கமல நாயக்காவைக் கதற வைத்துக் கொண்டிருந்தான்.

"தயவு செஞ்சு வேணாம். அவங்க அப்பாவிங்க. அவங்களுக்கு எதுவும் தெரியாது. ஒன்னைய கெஞ்சிக் கேட்டுக்கிறேன். என்னையக் கொல்லு. அவங்களை விட்டுடு" என்றார்.

வீரப்பன் அவரை நீண்ட நேரம் அழவிட்டான். "எதுக்கும் பிரயோஜனமில்லாத உன்னோட தோலையும் உன் குடும்பத்தோட உயிரையும் இப்பக்கூட நீ காப்பாத்திக்கிற வழி இருக்கு. செய்யறியா?" என்று கேட்டான்.

"சரி... சரி... நீ சொல்றது எதுவானாலும் நான் செய்யறேன். அவங்கள எதுவும் செய்யாத. கெஞ்சிக் கேக்கிறேன்" நாயக்கா மன்றாடினார். வீரப்பன் கொக்கரித்தான்.

ஒரு சில மணி நேரங்களுக்குப் பிறகு, குழப்பமான மனநிலையோடு ஷகில் அகமது அலுவலகத்திற்குள் அதிரடியாக நுழைந்தார் கமலநாயக்கா.

"என்ன விஷயம்?" என்று கேட்டார் ஷகில்.

"ஒரு உற்சாகமான செய்தி சார். வீரப்பனோட தம்பி அர்ஜுனன் பக்கத்துலதான் கேம்ப் அடிச்சிருக்கான். அவன் 40 கிலோ யானைத் தந்தம் வச்சிக்கிட்டு அதை வாங்க யாராவது கிடைப்பாங்களான்னு தேடிக்கிட்டு

இருக்கான். அவனுக்கு ஒரு திட்டம் சொன்னேன். இதுதான் அவனைப் பிடிக்கிறதுக்கு ஒரு சரியான சந்தர்ப்பம் சார்!''

ஷகில் துள்ளிக் குதித்தார். ''நான் ஆளுங்கள தயார் செய்யறேன். நாம உடனே கிளம்புறோம்'' என்றார்.

ஆனால் நாயக்கா அதோடு முடிக்கவில்லை. ஷகிலை அமைதிப் படுத்துவதற்காக அவரது கையை மெதுவாகப் பிடித்தார். ''சார். சரக்கு வாங்குறவங்க வெள்ளைக் கார்ல வெள்ளைக் கலர் டிரெஸ் போட்டுக்கிட்டு வரணும்னு அவங்க சொன்னாங்க. நாம முன்னால போக, பின்னால உங்க ஆளுங்க கொஞ்ச தூரத்துலே இருந்து மெதுவா பாலோ செய்யட்டும். நம்ம அர்ஜுனனை காண்டாக்ட் பண்ணுன உடனே உங்க ஆட்கள் ஸ்பாட்டுக்கு வேகமா வரட்டும். அதுக்கப்புறம் அவனையும் அவனது கேங்கையும் பிடிக்கலாம்'' என்றார் நாயக்கா.

ஷகில் தன்னுடைய இன்ஃபார்மரை சந்தேகப்பட எதுவுமில்லை. நாயக்கா சொன்னதை ஏற்றுக் கொண்டார். ஹரிகிருஷ்ணாவுக்கு தகவல் சொல்லப் போனார்.

ஷகில் போன் செய்த போது, ஹரிகிருஷ்ணா பெங்களூரில் இருந்தார். ''அந்த டீல ஒரு நாள் தள்ளிப் போடச் சொல்லி நாயக்காகிட்ட சொல்லுங்க. நான் வந்துடறேன். அந்தத் தாக்குதல் நடவடிக்கையில் நான் இல்லாம இருக்க முடியாது'' என்றார் ஹரிகிருஷ்ணா.

ஆகஸ்ட் — 14.

எஸ்.பி. ஹரிகிருஷ்ணா, ஷகில், கமலநாயக்கா ஆகிய மூவரும் மீன்யம் என்ற இடத்திற்கு ஒரு வெள்ளை அம்பாசிடரில் கிளம்பினர். இவர்களைத் தவிர காரில் மூன்று கான்ஸ்டபிள்களும் இருந்தனர். ஒரு லாரியில் 15 போலீஸ்காரர்கள் சாதாரண உடையில் காரைப் பின்தொடர்ந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் வந்து கொண்டிருந்தனர். ஹரிகிருஷ்ணாதான் காரை ஓட்டினார். அவரது மடியில் ஒரு ஏ.கே.47 இருந்தது.

மதியம் 1 மணியளவில் சாலையில் இருந்த ஒரு வளைவை நெருங்கினார்கள். அங்கே ஒரு சில பாறாங்கற்களைப் போட்டு பாதை மறிக்கப்பட்டிருந்ததை ஹரிகிருஷ்ணா கவனித்தார்.

‘‘சார் கொஞ்சம் நில்லுங்க. நான் அந்தப் பாறைகளை அப்புறப்படுத்துறேன்’’ என்று கமலநாயக்கா சொன்னார். கார் வேகம் குறைந்தது. நிற்பதற்குள் அவசரமாக கதவைத் திறந்து நாயக்கா குதித்தார்.

‘ஏன் இவ்வளவு வேகம்?’ என்று ஷகில் நினைத்தார். அதன் பிறகுதான் உண்மை அவருக்கு பளிச்சென்று புரிந்தது. அவர்கள் வெள்ளை நிறக்காரில் இருந்தனர். எல்லோருமே வெள்ளை நிற ஆடை அணிந்திருந்தனர். ஆனால், கமல நாயக்கா மட்டும் சிவப்பு நிறத்துண்டை தோளில் தொங்க விட்டிருந்தார். அந்தக் காட்டில் தூரத்தில் இருந்து பார்த்தாலும் சிவப்புத்துண்டு நன்றாகத் தெரியும்.

‘‘நம்மள சிக்க வைக்கிறதுக்கான திட்டம் இது’’ என்று ஷகில், ஹரிகிருஷ்ணாவைப் பார்த்துக் கத்தினார். இருவருமே தங்களின் ஆயுதங்களை எடுக்கப் பாய்ந்தனர். ஆனால், அவர்கள் எதுவும் செய்வதற்கு முன், காரை நோக்கி குண்டு மழை பொழிந்தது.

இருவருமே வீரத்துடன் போரிட்டனர். ஆனால் வீரப்பன் ஆட்கள் எண்ணிக்கையில் அதிகம். வீரப்பனின் ஆயுதங்கள் பழையவைதான். அவர்களின் பதுங்குமிடத்தில் இருந்து சுமார் 20 துப்பாக்கிகள் சுட்டுக்கொண்டிருந்தன. அந்த இடம் ஒரு மரணப் பொறி. தாக்குதல் நடத்த பொருத்தமான இடம் என அதை அவர்கள் தேர்வு செய்திருந்தனர்.

தோட்டாக்களின் மழையில் கார் குலுங்கியது. வீரப்பன் திருப்தியுடன் தலையை ஆட்டினான். ‘‘ஒருத்தன்கூட பிழைச்சிருக்க மாட்டான்’’ என்று அவன் நினைத்தான்.

அப்போது வேகமாக வரும் ஒரு லாரி சத்தத்தை அவன் கேட்டான். உடனே அவனது ஆட்களைப் பதுங்கி இருக்குமாறு சைகை செய்தான்.

லாரி வேகமாக வந்தது. அதில் இருந்த போலீஸ்காரர்கள், துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டு பதற்றமடைந்திருந்தனர். கார் நின்று கொண்டிருந்த இடத்தை அவர்கள் நெருங்கிய போது, வீரப்பன் மீண்டும் அவனது ஆட்களுக்கு சைகை காண்பித்தான். உடனே பெரிய பெரிய மரங்களை அவர்கள் உருட்டி விட்டனர். அது சாலையில் விழுந்து லாரி திரும்ப முடியாதபடி மறித்தது.

மீண்டும் வீரப்பனின் ஆட்கள் சுடத் தொடங்கினர். போலீஸ்காரர்களும் லாரியில் மறைந்திருந்து முடிந்த வரை பதிலுக்கு சுட்டனர். சிறிது நேரம் கழித்து மற்றொரு வாகனம் வரும் சத்தம் கேட்டது. உடனே வீரப்பன் தனது ஆட்களுக்கு சைகை காட்ட, அனைவரும் காட்டுக்குள் தப்பிச் சென்றனர்.

அந்த வாகனம் ஒரு பயணிகள் பேருந்து. மீன்யத்தில் இருந்து கொல்லேகாலுக்குப் போய்க் கொண்டிருந்தது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணையை மேற்கொண்டவர் வேங்கடசாமி. ராமபுரா போலீஸ் ஸ்டேஷன் தாக்குதல் சம்பவத்தின்போது, அங்கிருந்தவர்களை தனது சமயோஜிதத்தால் காப்பாற்றிய அதே வேங்கடசாமி.

வேங்கடசாமி பின்னாளில் இந்த சம்பவத்தை என்னிடம் விவரித்தார். அந்த சம்பவம் குறித்து அவர்கள் விசாரித்த ஆட்களில் ஒருவர் இன்ஸ்பெக்டர் மண்டப்பா. லாரியில் சென்ற போலீசாரில் அவரும் ஒருவர். துப்பாக்கிச் சூட்டில் அவரும் காயமடைந்தார். அன்று அவர் பார்த்த பயங்கரமான சம்பவம் பற்றி மறுபடி நினைக்கும் போதே நடுங்கினார்.

ஷகிலின் உடம்பில் ஆறு தோட்டாக்கள் துளைத்த காயங்கள் இருந்தன. ஹரிகிருஷ்ணாவின் உடம்பும் துப்பாக்கி ரவைகளால் துளைக்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு அதிகாரிகள் தவிர நான்கு போலீஸ்காரர்களும் அன்று நடந்த துப்பாக்கிச் சண்டையில் உயிரிழந்திருந்தனர். ஏழுபேர் படுகாயமடைந்திருந்தனர். கமலநாயக்காவும் அன்று உயிரிழந்தார்.

ஆனால் வீரப்பன் தரப்பில் ஒருவருக்குக்கூட காயமில்லை. இது அவனது செல்வாக்கு மேலும் வளரக் காரணமாக அமைந்தது. இந்தத் தாக்குதலுக்கு அவன் உரிமை கொண்டாடினான்.

ஹரிகிருஷ்ணன் ஒரு எஸ்.பி. கர்நாடகாவில் எஸ்.பி ஒருவர் முதல்முறையாக ஒரு கிரிமினலால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். அந்த ஆகஸ்ட் 15 கொடியேற்று விழா நிகழ்ச்சி, அவரது சகாக்களுக்கு ஒரு சோகமான நிகழ்ச்சியாக அமைந்தது.

வீரப்பனின் ஆட்டம் அதோடு முடியவில்லை. ஒரே நாளில் தமிழ்நாட்டு போலீஸார் 22 பேரை காவு வாங்கினான்.

அந்த நாள் ஒரு புனித வெள்ளி. ஆனால், தமிழ்நாட்டுக்கு அநீதி வெள்ளிக்கிழமையாக மாறிப்போனது.

# 22 உயிர்களை பலி வாங்கிய புனித வெள்ளி!

சத்தியமங்கலத்தில் தொடர் ரோந்துப் பணியிலேயே வாழ்க்கை கழிந்தது. அதில் பெரும்பாலானவை வழக்கமானதுதான். ஆனால், அதே சமயத்தில் அதில் ஆபத்து இல்லாமலும் இல்லை. ஒரு முறை ஒரு துப்புக் கிடைத்து அதைப் பின்தொடர்ந்து கேரளசுதமிழ்நாடு எல்லையில் உள்ள காட்டுப்பகுதியில் போய்க் கொண்டிருந்தோம். அப்போது ஒரு சரிவில் நான் சறுக்கி விட்டேன்.

எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த மெலிந்த நபர் ஒருவர், ‘‘சார் ஏதும் பிரச்சினை இல்லியே?’’ என்று அக்கறையோடு கேட்டார்.

‘இல்லை’ எனத் தலையாட்டிவிட்டு, ‘‘டி.எஸ்.பி. அசோக்குமாருடன் காட்டுக்குள் இப்படி ஒரு ரோந்து வரும்போது சில நேரங்களில் இப்படி சறுக்கித்தானே ஆக வேண்டும்?’’ என்றேன்.

அசோக் சின்னதாக புன்னகைத்தார். அவர் தனது காலில் கொப்பளங்களால் வேதனைப்படுவதையும் அதை மறைத்துக்கொள்வதையும் என்னால் கவனிக்க முடிந்தது.

அசோக்கின் காலைப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கும். காட்டுப்பூச்சி கடிகளால் அவரது கால்களில் பல கொப்பளங்களும் அதன் தழும்புகளும் இருக்கும். அந்த இடமே வெந்து போயிருக்கும். ஒரு சில இடங்கள் வெடித்துப் போயிருக்கும். சில வெடிக்க காத்திருப்பதைப்போல இருக்கும்.

‘‘ரொம்ப நாளா இதை நீங்கள் கண்டுக்காமலே விட்டுட்டீங்க. கொஞ்சம் டைம் எடுத்து நீங்க ஏன் ஒரு டாக்டரைப் போய் பார்க்கக்கூடாது?’’ என்று

கேட்டேன்.

“ஒவ்வொரு முறை டாக்டரைப் போய் பார்க்கணும்னு திட்டமிடும்போதும், புதுசா ஒரு துப்பு வந்துடுது. இந்த ஒரே ஒரு தேடுதல் வேட்டையை முடிச்சுடுவோம்னு முடிவு செஞ்சிடுறேன். ஆனா, இந்த முறை அது அதிர்ஷ்டகரமான ஒன்னா இருக்கலாம்” என்று அவர் சொன்னார்.

“1980 மற்றும் 1985–க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் வேலூரிலும் தர்மபுரியிலும் வால்டர் தேவாரம் தலைமையில் நடத்தப்பட்ட நக்சலைட் வேட்டையை அலங்கரித்த மிக முக்கியமான நபர்களில் இந்த மெலிந்த, மென்மையாகப் பேசக் கூடிய நபரும் இருந்தார் என்பதை யாரால் நம்ப முடியும்?” என்று நான் நினைத்தேன்.

அந்த பயங்கரமான என்கவுண்டரில் அசோக்குமாரும் இருந்தார். அந்த சம்பவம்தான் எஸ்.டி.எஃப். அமையக் காரணமாக அமைந்தது. மூன்று மாநில போலீஸ் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் அதிர்வு அலைகளை ஏற்படுத்திய நாள் அது.

1993 ஏப்ரல் 9–ம் தேதி இருபத்தியிரண்டு பேர் உயிரிழந்திருந்தனர். அப்போது வீரப்பனின் இலக்கு எல்லோராலும் பாசத்துடன் ‘ராம்போ’ என்று அழைக்கப்படும் தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த எஸ்.பி.யான கே.கோபாலகிருஷ்ணன்தான். ஆனால் 22 பேர் உயிரிழப்பு என்பது கூடுதல் சேதம்.

“எப்போதாவது நீங்கள் அந்த புனித வெள்ளி படுகொலையை நினைத்ததுண்டா?” என்று நான் அசோக்குமாரிடம் கேட்டபோது, தன்னைத் தானே நிலைப்படுத்திக் கொள்வதைப் போல ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். “புனித வெள்ளி பற்றி நினைக்காத நாள் இல்லை. நாங்கள் அவனைப் பிடிக்கும்வரை இந்த எண்ணம் ஓயாது” என்றார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த படைக்கு ‘ஜங்கிள் பேட்ரோல்’ என்று பெயர். அந்தப் பெயரில் அமைந்திருந்த 42 பேர் கொண்ட குழுவை தலைமை ஏற்று

வழி நடத்தினார் ராம்போ. 1992—ல் ஷகிலும் ஹரிகிருஷ்ணாவும் கொடூரமாகக் கொல்லப்பட்டதற்குப் பின்னால் ‘ஜங்கிள் பேட்ரோல் மேலும் வலிமைப்படுத்தப்பட்டது.

பெரிய புஜங்களுடன், மிகப்பெரும் வலிமை கொண்ட ‘ராம்போ’ ஆஜானுபாகுவான தோற்றத்தைக் கொண்டிருந்தார். ராம்போ கோபாலகிருஷ்ணனும் வீரப்பனைப் போல வன்னியர் சாதியைச் சேர்ந்தவர்தான். ராம்போ முன்னின்று அணியை வழிநடத்தக் கூடியவர். அதனால் அவர் அந்தப் பகுதியில் உள்ள பல மலை உச்சிகளில் ஏறி இறங்கியிருக்கிறார். அவரது டீம் உறுப்பினர்கள் மத்தியில் அவர் வலிமையான விசுவாசத்தைப் பெற்றிருந்தார்.

‘ஜங்கிள் பேட்ரோல்’ படையில் இடம் பிடித்தவர்களுக்கு சம்பளம் உரிய நேரத்தில் வராமல் போகும் சந்தர்ப்பங்களில் சொந்த சேமிப்பில் இருந்து டீம் உறுப்பினர்களுக்கு பணம் கொடுத்து உதவும் மனம் கொண்டவர்.

அவருக்கு கீழே பணி செய்த போலீஸ்காரர்களைத் தவிர, இன்ஃபார்மர்கள் மற்றும் வழிகாட்டிகள் — அவர்களில் பெரும்பாலானவர்கள் வீரப்பனுடன் கடந்த காலத்தில் ஏதோ ஒரு வகையில் தொடர்பு வைத்திருந்தவர்கள் அடங்கிய ஒரு விரிவான வலைப்பின்னலையும் வைத்திருந்தார்.

ராம்போவின் வழிகாட்டிகளில் ஒருவன் கொளந்தப்பையன். வீரப்பனின் நம்பிக்கைக்குரிய உதவியாளனான சேத்துக்குளி கோவிந்தனின் அண்ணன். வீரப்பன் யானை வேட்டையை முதன்மைத் தொழிலாகச் செய்து கொண்டிருந்த நாட்களில் அவனது கும்பலில் முக்கியமான ஆளாக இருந்தான் கொளந்தப்பையன். பின்னர் அந்தக் கூட்டத்தில் இருந்து விலகி, தற்போது ஒரு திருந்திய வாழ்க்கையை வாழ முயற்சித்துக் கொண்டிருக்கிறான்.

ஏப்ரல் 9.

அன்று அந்த ஆண்டின் புனித வெள்ளி. காலை ஒன்பது மணி. கொளத்தூர் கிராமத்தில் ஒரு பெரிய பேனர் வைக்கப்பட்டிருந்தது. தைரியமிருந்தால் வீரப்பனைப் பிடிக்க, 'சுரைகா மடுவு' என்ற இடத்திற்கு வருமாறு ராம்போவை இழிவுபடுத்தி, கொச்சையான தமிழில் அந்த பேனரில் எழுதப்பட்டிருந்தது.

இதனால் கொதிப்படைந்த ராம்போ அந்த சவாலை ஏற்பதென முடிவெடுத்தார். உடனே தயாராகுமாறு தனது டீமுக்கு கட்டளை இட்டார்.

“இது ஏதோ மாதிரி தெரியுது. எனக்கு நல்லதா படலை” என்று கொளந்தப்பையன் தனது தயக்கத்தைச் சொல்ல முயற்சித்தான்.

“நான் போறேன். என்ன நடந்தாலும் கவலை இல்லை. உனக்கு என்ன பிரச்சினை?” என்று கேட்டார் கோபாலகிருஷ்ணன்.

கொளந்தைப்பையன் ஏதோ சொல்ல வந்து பின்னர் மனதை மாற்றிக்கொண்டதைப் போல தெரிந்தது. பின்னர் தோளைக் குலுக்கியபடி அவனும் கிளம்பத் தயாரானான். “நாம ஜாக்கிரதையா இருக்கணும் சார்” என்றான்.

கோபாலகிருஷ்ணன் பாலாற்றை நெருங்கிய பொழுது, அவரும் அவரது ஆட்களும் சென்று கொண்டிருந்த ஜீப் பிரேக் டவுன் ஆனது. அந்த இடத்திலேயே ஜீப்பை விட்டு விட்டு, தமிழ்நாடு—கர்நாடக எல்லையில் இருந்த கர்நாடகப் போலீசாரிடம் இரண்டு பஸ்சைப் பெற்று அதில் சென்றனர். முன்னால் சென்ற பஸ்சில் கோபாலகிருஷ்ணன், 15 இன்ஃபார்மர்கள், நான்கு போலீஸ்காரர்கள், இரண்டு பாரஸ்ட் வாட்ச்சர்கள் சென்றனர்.

அடுத்த பஸ்சில் இன்ஸ்பெக்டர் அசோக்குமார், 6 தமிழக போலீசார், கர்நாடக போலீசில் இருந்து ஒரு எஸ்கார்ட் பார்ட்டி பின் தொடர்ந்தனர். முன்னால் சென்ற பஸ்சில் கதவுக்கு அருகிலேயே ராம்போ நிலைகொள்ளாமல் நின்று கொண்டிருந்தார். அவரது தோளில் ஏ.கே. 47 சாய்ந்திருந்தது.

வீரப்பன் இப்போது சாவகாசமாக ஒரு பாறையின் மீது சாய்ந்து கொண்டு, வறண்டு போன பாலாற்றுக்கு அந்தப்புறம் உள்ள பாதையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ராம்போவின் வாகனப் பரிவாரங்கள் வர வேண்டிய ஒரே பாதை அதுதான். அவனது நெருங்கிய சகாவும் வெடிகுண்டு நிபுணனுமான சைமன் தனது கடைசி கட்ட ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருப்பதை வீரப்பன் ஆழமாகப் பார்த்தான். சைமன் ஒரு நல்ல கிறிஸ்தவனாகத் தெரியவில்லை. ஏனெனில் இதுபோன்ற ஒரு புனிதமான நாளில் அவன் செய்யவிருக்கும் காரியமானது ஏராளமானோர் உயிரைப் பலி வாங்கும் சம்பவம். அது பற்றி சிறிதளவுகூட அவன் கவலைப்படவில்லை.

துப்பாக்கி பலம் எனப் பார்த்தால் ராம்போ படையோடு ஒப்பிடும்போது மிகவும் குறைவு. ஆனால், அதைத் தவிர அவனிடம் இருந்த வெடிகுண்டுகள் அவனுக்கு சாதகமாக இருந்தன. அவை அனைத்தும் அந்தப் பகுதியில் இருந்த கல்குவாரி உரிமையாளர்களிடம் இருந்து வலுக்கட்டாயமாகப் பறித்துச் சேர்த்தவை.

பஸ் என்ஜினின் உறுமல் சத்தத்தைக் கேட்டதுமே வீரப்பன் கும்பல் தயாரானது. ஆனால் ராம்போ வர வேண்டிய ஜீப் வரவில்லை. அவர்களது இரை தப்பி விட்டதோ என்ற சந்தேகத்தில் குழம்பினர். பிறகு வீரப்பனிடம் இருந்து வந்த சிக்னல் அவர்களது சந்தேகத்தைச் சிதறடித்தது.

பல ஆண்டுகளாக காட்டில் வாழ்ந்ததால் கூர்மையாகி இருந்த வீரப்பனின் கண்கள், நெடுந்தூரத்தில் இருந்தாலும் பஸ் வாசற்படியிலே நின்றுகொண்டிருந்த கோபாலகிருஷ்ணனைப் பார்த்து விட்டன.

அவர்கள் வரும் பாதையில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளோடு இணைக்கப்பட்டிருந்த 12 வோல்ட் கார் பேட்டரியின் இரண்டு வயர்களையும் சைமன் ஒட்ட வைத்தான். அவ்வளவுதான் அத்தனையும் வெடித்துச் சிதற ஆரம்பித்தது. பஸ்சுக்குக் கீழ் இருந்த சாலை மூவாயிரம் டிகிரி செல்சியஸ்

வெப்பத்தை உமிழ்ந்தபடி வெடித்தது. ஒன்றோடு ஒன்று மோதிய அதிர்வலைகள், அந்த பேருந்துகளை காற்றில் தூக்கி வீசின.

ராம்போ பயணம் செய்த முன்னால் வந்த பேருந்து சிதைந்து கண்ணிமைக்கும் நேரத்தில் சக்கரம் வைத்த சவப்பெட்டியாய் உருமாறியது.

பேருந்தில் இருந்து தூக்கி வீசி எறியப்பட்ட கோபாலகிருஷ்ணன் தனது இடது காலிலும் இடது கையிலும் முகத்திலும் பலத்த காயங்களுடன் அருகில் இருந்த குட்டையில் விழுந்தார். சிதைந்து போன உடல் உறுப்புகள், அந்தச் சாலையின் அருகாமையில் இருந்த புதர்களிலும் பாறைகளிலும் சிதறி விழுந்தன. ஒரு சில சதைத் துண்டுகள் அங்கிருந்த மரக்கிளைகளில் சிக்கின.

முதலில் வந்த பேருந்து, வெறும் உலோகத் துண்டாக உருக்குலைந்தது. அந்தப் படுகொலைக் காட்சியைப் பாறைக்குப் பின்னால் ஒளிந்து நின்று பார்த்த வீரப்பன்கூட ஸ்தம்பித்து விட்டான்.

## ஜெயலலிதா காட்டிய வேகம்... தேர்வான வால்டர் தேவாரம்... ஆயிரக்கணக்கில் குவிந்த விண்ணப்பம்!

வீரப்பன் வைத்த கண்ணிவெடியில் சிக்கிய பஸ் உருக்குலைந்தது. குண்டு வெடித்த காட்சியைப் பார்த்து வீரப்பனே நடுங்கியதாகச் சொன்னார்கள். காரணம், வெடித்த வெடி. அத்தனை சக்திவாய்ந்த வெடியை முதல்முறையாக பார்ப்பதுதான். அடுத்த சில நொடிகளிலே தன் நிலைக்குத் திரும்பினான் வீரப்பன்.

காரணம், 'ஜங்கிள் பேட்ரோல்' திருப்பித் தாக்கிக் கொண்டிருந்தது. இரண்டாவது பஸ்சில் பின்தொடர்ந்த அசோக்குமார், அன்று நடந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தார். தனக்கு முன்னால் சென்ற பேருந்து சுக்குநூறாக உடைந்து சிதறியதை அவர் பார்த்தார். சேறும் சகதியும் அவரது பேருந்தின் முன் கண்ணாடியில் விழுந்து தெறித்தது. டிரைவர் பிரேக்கை அழுத்தினார்.

அசோக்குமார் பேருந்தில் இருந்து இறங்கினார். ஹெட் கான்ஸ்டபிள் கிருஷ்ணசாமி ஒரு லைட் மெஷின் கன்னுடன் (லிவிநி) அவரைப் பின்தொடர்ந்தார். அருகாமையில் இருந்த புதர்களுக்குப் பின்னால் சிலர் மறைந்திருப்பதை அவர்களால் உணர முடிந்தது. யாரேனும் உயிரோடு இருந்தால் அவர்களை ஒழித்துவிட்டு, ஆயுதங்களைத் தூக்கிச் செல்ல அவர்கள் தயாராக இருந்தனர் என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

அசோக்குமார் உடனே தனது ஏ.கே. 47 துப்பாக்கியை எடுத்து சுடத் தொடங்கினார். கிருஷ்ணசாமியும் மற்ற போலீஸ்காரர்களும் சரமாரியாகச் சுட ஆரம்பித்தனர். அந்தப் பகுதி முழுவதும் துப்பாக்கி ரவைகள் பறந்தன. சிறிது நேரம் இருபுறமும் பரஸ்பரம் தாக்குதல் நடந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்தது. வீரப்பன் கும்பல் தப்பித்து விட்டது என்பதை அசோக்குமார் உணர்ந்து கொண்டார். கடுமையான கோபத்துடன் சுற்றுமுற்றும் ஆராய்ந்தார். அந்த இடத்தில் பதினான்கு குழிகள் பத்துப் பத்து அடி இடைவெளியில் தோண்டப்பட்டிருந்தன.

அந்தக் குழிகளில் பலமான கண்ணிவெடிகள் வைக்கப்பட்டு, அவை ஒரு நீளமான பியூஸ் வயருடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் வெளியே தெரியாதவாறு கற்களாலும் சகதியாலும் மூடிப் புதைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வயரானது 200 மீட்டர் தூரத்தில் உள்ள குன்றுப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. அங்குதான் வீரப்பன் ஆட்கள் 'ராம்போ' வருகைக்காக காத்திருந்திருக்கின்றனர். அவர் வந்த பஸ், கண்ணி வெடிப்பகுதிக்கு வந்த நேரத்தில் அவற்றை வெடிக்கச் செய்திருக்கின்றனர்.

அதிர்ச்சியில் உறைந்து போன அசோக்குமார், நடுக்கத்துடன் அங்கே எரிந்து கிடந்த 21 உடல்களை எண்ணினார். காயம்பட்டுக் கிடந்தவர்களின் முனகல் சத்தம் காற்றில் எழுந்தது. எச்சரிக்கையுடன் அவர் நடந்து கொண்டிருந்தபோது, இரண்டு கான்ஸ்டபிள்கள் ராம்போவைத் தூக்கி வந்ததைப் பார்த்தார்.

"அவரை அந்த பஸ்சுக்குக் கொண்டு போங்கள். காயம்பட்ட எல்லோரையும் இந்த இடத்தை விட்டு உடனடியாக வெளியேற்றுங்கள்" எனக் கத்தினார்.

துரதிர்ஷ்டவசமாக கொஞ்சம் தூரத்தில் உருண்டு கிடந்த சுகுமார் என்ற கான்ஸ்டபிளை அவர்கள் கவனிக்கவில்லை. பேருந்து கிளம்பிப் போன

பிறகுதான் அவர் அங்கு இருந்ததே தெரிய வந்தது. ஆனால் சிறிது நேரத்தில் அவர் அந்த இடத்திலேயே இறந்து போனார்.

கொளந்தப்பையன் இறந்த செய்தியை அவனது மனைவியிடம் சொன்ன போது, ‘‘வீரப்பன் சொன்ன எச்சரிக்கையை நீங்க அலட்சியப்படுத்துனீங்க... அதனாலதான இப்படி நடந்துச்சு’’ என்று சொல்லியபடி அவள் கதறி அழுதாள்.

புனித வெள்ளி படுகொலை நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன் ஏப்ரல் 6—ம் தேதி ஒரு சிறுவன், கொளந்தப்பையன் மனைவியைச் சந்தித்தான். கொளந்தப்பையனின் தம்பி கோவிந்தன், அவளை செட்டிப்பட்டி ஆற்றங்கரைக்கு வரச் சொன்னதாகத் தகவல் சொன்னான். அங்கே அவள் போன போது, அவளைச் சந்தித்த அடையாளம் தெரியாத நபர் ஒருவன், ‘‘உன் புருஷனை காட்டைவிட்டு வெளியே போகச் சொல்லு’’ என்று ரகசியமாகச் சொன்னான்.

இதைக் கேட்டதும், தனது நெற்றியில் இருந்த வியர்வையைத் துடைத்தபடி, இது எச்சரிக்கையா அல்லது மிரட்டலா என்று நினைத்தாள். அவனிடம் விளக்கம் கேட்பதற்காக முயற்சித்தாள். அதற்குள் அவன் காட்டுக்குள் சென்று விட்டான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அதே சிறுவன், அந்தப் பெண்ணிடம் அதே தகவலைச் சொல்ல, அவள் மிகுந்த கவலையடைந்தாள். கொளந்தப்பையனை எச்சரித்தாள். ராம்போ கோபாலகிருஷ்ணனுடன் வைத்திருக்கும் அத்தனை தொடர்புகளையும் துண்டித்துவிடுமாறு தனது கணவனிடம் கெஞ்சினாள்.

ஆனால், ஏதோ ஒரு காரணத்திற்காக கொளந்தப்பையன் அன்றைக்கு காட்டுக்குச் செல்வது என்று முடிவெடுத்து விட்டான். அவனது மனைவிக்கு வந்த எச்சரிக்கைத் தகவலை போலீசிடம் அவன் சொல்லியிருந்தால், ஒரு வேளை 22 பேர் கொல்லப்பட்ட அந்த இரக்கமற்ற சம்பவம் நடக்காமல் இருந்திருக்கலாம்.

அந்தப் புனித வெள்ளிப் படுகொலை தமிழகம், கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்களிலும் அதிர்வலைகளைப் பரப்பியது. அந்தச் சம்பவம் ஒரே இரவில் வீரப்பனுக்கு பெரும் பிரபலத்தைக் கொடுத்துவிட்டது. இப்போது அவனது தலைக்கான விலை நான்கு மடங்கு அதிகரித்து 20 லட்சம் ஆகி விட்டது. அவனது பெயர் பயத்துடனும் பிரமிப்புடனும் பார்க்கப்பட்டது. குறிப்பாக அவனது பகுதியில்.

அந்த குண்டு வெடிப்பில் ராம்போ பலத்த காயமடைந்திருந்தார். ஆனால் அவரைப் போன்ற அசாதாரணமானவர்களை மரணம் நெருங்குவது கடினம். அல்லது அவரது மலைப்போன்ற உடல்வாகு பாதிப்பைக் குறைத்திருக்கலாம். அவசரமாக அவர் சேலம் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் குழுவை அவர் உயிரோடு இருந்தது பிரமிக்க வைத்தது.

பல மணி நேரங்களுக்குப் பிறகு அவர் சுயநினைவு வந்து எழுந்தபோது, மறுபடியும் ஒரு அதிர்ச்சியில் ஆழ்ந்தார். அவருக்கு அருகே அப்போதைய முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா நின்று கொண்டிருந்ததைப் பார்த்தார்.

“நீங்க நல்லாயிட்டீங்கன்னு டாக்டர்கள் எங்கிட்ட சொன்னாங்க. சீக்கிரம் சரியாயிடுவீங்க” என்று சொன்னார்.

ராம்போ பிழைத்துக் கொண்டார். ஆனால் ஒரு வருடத்திற்கும் மேலாக அவர் மருத்துவ விடுப்பில் இருக்க வேண்டியிருந்தது. பன்னிரெண்டு அறுவைச் சிகிச்சையாவது அவருக்கு நடந்திருக்கும். அதிலிருந்து அவர் தொடர்ச்சியான வலியிலேயே வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார். பணியிலிருந்து அவர் ஓய்வு பெற்ற பிறகு, 2016 செப்டம்பர் 11—ம் தேதியன்று சென்னை மருத்துவமனை ஒன்றில் அவரது உயிர் பிரிந்தது.

ராம்போவை முதலமைச்சர் சந்தித்த போது, முதல்வரின் சிறப்பு பாதுகாப்புப் படையின் பொறுப்பாளர் என்ற முறையில் அவருக்குப் பின்னால்தான் நின்று கொண்டிருந்தேன். எஸ்.பி.ஜி.—யில் நான் பணியாற்றியதற்குப் பிறகு, மீண்டும் தமிழகத்திற்கு திரும்பியிருந்தேன்.

எல்.டி.டி.ஈ—க்கு எதிராக அவர் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததால் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தது.

குறிப்பாக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு. சிறப்புப் பாதுகாப்புப் படை என்ற பெயரில் முதலமைச்சருக்காகவே ஒரு மேம்பட்ட பாதுகாப்புக் குழுவை அமைக்கும் பணி எனக்கு அளிக்கப்பட்டது. நான் அந்தக் குழுவை எஸ்.பி.ஜி. மற்றும் என்.எஸ்.ஜி.யின் ஒரு கலவையாக அமைத்தேன்.

கோபாலகிருஷ்ணனைச் சந்தித்து விட்டுத் திரும்பிய போது ஜெயலலிதாவின் முகம் கடுமையாக இருந்தது. ‘‘இதை இப்படியே விட்டுவிடக் கூடாது’’ என்று உத்தரவிட்டார்.

பின்னர் கர்நாடக முதலமைச்சர் எம்.வீரப்ப மொய்லியை, முதல்வர் ஜெயலலிதா அடிக்கடி சந்தித்துப் பேசினார். வீரப்பனை நீதியின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கையில் இரு மாநிலங்களும் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும் என்று உடனடியாக ஒப்புக் கொண்டன.

தொடர்ச்சியான அந்த சந்திப்புகளின் விளைவாக தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை முறைப்படி அமைக்கப்பட்டது. எனது வழிகாட்டி வால்டர் தேவாரம்தான் அதன் முதல் தலைவர். முதல் வேலையாக வால்டர் தேவாரம் எஸ்.டி.எஃப்—க்கு ஆளெடுப்பு அறிவிப்பை வெளியிட்டார்.

அந்த அறிவிப்பைக் கேட்டு, தமிழ்நாடு போலீசில் இருந்து விண்ணப்பம் செய்தவர்கள் எண்ணிக்கை பல ஆயிரம் பேர். அதாவது 60 ஆயிரம் பேர் கொண்ட தமிழக காவல்துறையில் ஆயிரக்கணக்கானோர் விருப்பம் தெரிவித்து இன்ப அதிர்ச்சி அளித்தனர்.

# வால்டரிடம் வீரப்பன் தப்பிய கதை!

தமிழக சிறப்பு அதிரடிப்படையில் சேர நிறைய சப்—இன்ஸ்பெக்டர்கள் அவர்கள் சார்ந்த காவல் நிலையத்தின் பொது டைரியில், எஸ்.டி.எஃப்—ல் சேர்வதாக விருப்பம் தெரிவித்து அதில் சேர சென்றனர். ஆனால், வால்டர் அவர்களில் சிறந்தவர்களை மட்டுமே தேர்வு செய்தார். தமிழ்நாடு போலீஸ் படையில் இருந்து ஆயிரக்கணக்கில் விருப்பம் தெரிவித்தவர்களில் 250 பேரை மட்டுமே அவர் தேர்வு செய்தார்.

வீரப்பனைப் பிடிப்பதே தங்களின் வாழ்நாள் லட்சியம் என்ற எண்ணத்துடன் உள்ள அசோக்குமார் மற்றும் பலரைக் கொண்ட ராம்போவின் ‘ஜங்கிள் பேட்ரோல்,’ எஸ்.டி.எஃப். செயல்பாட்டுக் கருவாக அமைந்தது. இதே போல் அந்தப் படுகொலைச் சம்பவத்திற்குப் பிறகு கர்நாடக எஸ்.டி.எஃப்—ல் டி.ஐ.ஜி., சங்கர் பிதாரிக்குக் கீழ் எஸ்.பி.யாக கோபால் ஹோசூர் நியமிக்கப்பட்டு கர்நாடக படையும் புத்துணர்ச்சியூட்டப்பட்டது. சங்கர் பிதாரி அந்தப் படுகொலைச் சம்பவம் நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு டி.ஐ.ஜி.யாகச் சேர்ந்தவர்.

அதற்குப் பின், நானும்கூட எஸ்.டி.எஃப்—ல் சேர்ந்து வேலை செய்ய வேண்டும் என்று விடாப்பிடியாக விரும்பினேன். ஆனால், முதலமைச்சரின் பாதுகாப்புப் பணியில் இருந்து விடுவிக்கப்படுவது கடினம் என எனக்குத் தெரியும். எனினும் எஸ்.டி.எஃப்—ஐ ஒரு மேம்பட்ட குழுவாக்க என்னால் முடியும் அனைத்தையும் செய்ய வேண்டும் என முடிவு செய்தேன்.

எனது குழுவில் இருந்த ஏ.எஸ்.பி. சஞ்சய் அரோராவை அந்தப் படையில் சேர்ந்து கொள்கிறீர்களா எனக் கேட்டேன். உடனடியாக அவர் சேர்ந்தார்.

எஸ்.எஸ்.ஜி.யில் இருந்து யாரை வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் அவர் எடுத்துக் கொள்ளலாம் என்றும் கூறினேன். அதை இரண்டாவது முறை அவரிடம் கூற வேண்டிய அவசியம் இருக்கவில்லை. உடனடியாக அவர் ஒரு சில ஏ.கே.47 துப்பாக்கிகளைக் கேட்டார். (இதில் வேடிக்கை என்னவெனில், எல்.டி.டி.ஈ. யிடம் இருந்து அவை கைப்பற்றப்பட்டவை. இந்தியா ஆரம்ப காலத்தில் எல்.டி.டி.ஈ—க்கு உதவி செய்து கொண்டிருந்தது ஊரறிந்த ரகசியம். அந்தக் காலகட்டத்தில் எல்.டி.டி.ஈ. அமைப்புக்கு இந்தியா கொடுத்த அந்த ஆயுதங்கள் தான் திரும்ப வந்து விட்டது என்று எஸ்.டி.எஃப். உறுப்பினர்கள் மத்தியில் வேடிக்கையாகப் பேசப்படும்).

சிறந்த சப்—இன்ஸ்பெக்டர்கள் ஏழு பேரை அவர் தேர்வு செய்தார். மொத்தத்தில் எஸ்.எஸ்.ஜி.யில் இருந்து 15 பேர் எஸ்.டி.எஃப்—க்குச் சென்றனர். எஸ்.டி.எஃப். உறுப்பினர்கள் சென்னையின் புறநகர்ப்பகுதியில் இருந்த எங்களின் மையத்தில் பயிற்சியும் பெற்றனர்.

சில மாதங்கள் கழித்து அசோக்குமாரும் அவரது குழுவினரும் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், வீரப்பன் கும்பலில் இருந்த புனிதவெள்ளி படுகொலையில் ஈடுபட்ட சைமன் தப்பிப்பதற்காக ஒரு பெரிய பாறையில் இருந்து குதித்தான். ஆனால், அவன் கால் முறிந்தது. அது அவனது பாவத்திற்குரிய தண்டனையாக இருக்கலாம்.

சைமனை உடனடியாக அவனது குழுவினர் தூக்கிச் சென்று விட்டனர். ஆனால் ஒரு சில மாதங்கள் கழித்து அவன் திருப்பூரில் உள்ள மருத்துவமனை ஒன்றிற்குச் செல்ல வேண்டியிருந்தது. அது குறித்த துப்பு கிடைத்து, அங்கு அவன் கைது செய்யப்பட்டான். அவன் பலத்த காயமடைந்திருந்ததால், காட்டுக்குள் அவனை ஒரு பல்லக்கில் வைத்து எஸ்.டி.எஃப். ஆட்கள் தூக்கிச் சென்றனர்.

அப்போது அவன், தான் கண்ணிவெடிகள் புதைத்து வைத்த இடங்களை எல்லாம் காட்டினான். அவன் மற்றும் மூன்று பேருக்கு 2004—ம் ஆண்டு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அதே ஆண்டில்தான் வீரப்பன் கொல்லப்பட்டான்.

இன்னும் அவர்கள் மரண விளிம்பில்தான் இருக்கின்றனர். அவர்களின் கோரிக்கை மனு மீது உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பிப்பதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சைமன் சொன்ன ரகசியங்கள் அதன்பிறகு நிறையப் பேரின் வாழ்க்கையைக் காப்பாற்றியது. ஆனால், இந்த தகவல் எல்லாம் பாலாறு வெடிவிபத்து நடந்த சில மாதங்களுக்குப் பிறகுதான் தெரிய வந்தது. இந்த இடைப்பட்ட காலத்தில், ஒரு பெரிய எஸ்.டி.எஃப். படையும் நானும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியது தனிக் கதை.

ஜூலை 21

வால்டர் பொறுமையாக தனது ஒரு பூட்ஸ்ஸில் இருந்து இறந்துபோன இருபது அட்டைப்பூச்சிகளை வெளியே எடுத்துப் போட்டார். அவை அவரது ரத்தத்தைக் குடித்து வீங்கிப் போயிருந்தன. மற்றொரு பூட்ஸ்ஸில் இருந்தும் அதே எண்ணிக்கையில் ஒட்டிக் கொண்டிருந்த அட்டைப்பூச்சி களைப் பிய்த்து எடுத்தார். ஒரு தெளிவற்ற துப்புக் கிடைத்ததை வைத்துக் கொண்டு காட்டுக்குள் ஒரு நாள் முழுவதும் சுற்றிவிட்டு அப்போதுதான் கோவையில் உள்ள பயணியர் பங்களாவுக்கு வந்திருந்தார் அவர்.

அட்டைப்பூச்சிகளைப் பிய்த்துப் போடும் வேலை முடிந்ததும் வால்டர் ‘தி ஹன்ட் பார் கிமதி’ என்ற புத்தகத்தை என்னிடம் கொடுத்தார். ‘இது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். கென்யாவில் உள்ள மாவ் மாவ் தீவிரவாதிகள் பயன்படுத்தும் பல யுக்திகள் வீரப்பனின் யுக்திகளை ஒத்திருக்கின்றன. அவர்களுக்கு வாய்க்கும் மிகப் பெரிய அதிர்ஷ்டம்கூட ஒன்றுபோல இருக்கின்றன’ என்றார்.

வால்டர் சொன்னதை கேட்டு எனக்கு வியப்பாக இருந்தது. 60 வயதைத் தாண்டிய நிலையில் இன்றும் வியப்பளிக்கிற சூப்பர் காவலர் அவர். தனக்குக் கீழ் பணியாற்றும் அனைவரையும் ஊக்கப்படுத்த தனது துடிப்பையும் திறனையும் இன்னும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார். தனது கரடு முரடான மீசை, கட்டுக்கோப்பான உடல் ஆகியவற்றின் மூலம், தனது அசகாய

சாதனைகளைக் கேட்டிராத ஒருவரின் கவனத்தைக்கூட, உடனடியாக ஈர்த்துவிடக் கூடியவர் வால்டர்.

‘‘அந்தக் கொள்ளைக்காரன், ஒரு பூனையைப் போல அடிக்கடி அதிர்ஷ்டத்தால் உயிர் தப்பியிருக்கிறான். அவனுடைய ஆட்களுக்கும் அவனது அதிர்ஷ்டம் கொஞ்சம் ஒட்டிக் கொண்டிந்தது. ஆனால் நிச்சயமாக நாங்கள் ஒருநாள் அவனைப் பிடிப்போம்’’ என்று தொடர்ந்து சொன்னார்.

வால்டர் தற்போது தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் என இரு மாநில எஸ்.டி.எஃப்—களின் பணியையும் கவனித்துக் கொண்டிருந்தார். நான் அவருக்குக் கீழே பணியாற்றும் மகிழ்ச்சியான வாய்ப்பை மற்றொரு முறை பெற்றேன். 1981 மற்றும் 1985—க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் தர்மபுரியிலும் சேலத்திலும் நான் எஸ்.பி.யாகப் பணியாற்றிய போது வேலூர் டி.ஐ.ஜி.யாக இருந்த அவர்தான் எனக்கு பாஸ்.

அந்த ஐந்து ஆண்டுகளில் அந்தப் பகுதியில் நக்சலிஸத்தை கிட்டத்தட்ட துடைத்தெறிந்தவர் என்ற பெருமையைப் பெற்றவர் அவர். தமிழ்நாடு முழுவதிலுமுள்ள 1,100 போலீஸ் ஸ்டேஷன்களையும் பார்வையிடச் சென்ற ஒரே அதிகாரி என்ற சாதனை உட்பட நிறையச் சாதனைகளைச் செய்திருக்கிறார். அப்படி பார்வையிடச் சென்ற இடங்களில் அற்புதமான குறிப்புகளையும் எழுதி வைத்தவர் அவர்.

வால்டருக்குக் கீழ் பணியாற்றிய போது எனது பெரும்பாலான வார இறுதிநாட்கள், தேடுதல் வேட்டை அல்லது பாஸோட தலைமையில் மலைப்பயணம் என்றுதான் கழிந்தது. களத்தில் இறங்கிப் பணியாற்றுவதைத் தவிர வேறு எதையுமே விரும்பாதவர் அவர். எனக்கும் அது நேர்த்தியாகவே பொருந்தியது. ஏனெனில் மேஜையின் முன் அமர்ந்திருப்பதையோ வெறும் பேப்பர்களைப் புரட்டிக் கொண்டிருப்பதையோ நானும் மனப்பூர்வமாக விரும்புவதில்லை.

புனித வெள்ளிக்கிழமையில் 22 உயிர்களைக் குடித்த சம்பவம் நடந்து சரியாக ஒரு மாதத்திற்குப் பிறகு, வீரப்பனின் குகைக்குள்ளேயே எஸ்.டி.எஃப்.

நுழைந்தது. வீரப்பனுக்கு எதிராக வால்டர் தலைமையில் நடந்த முதல் சண்டை அது. அதில் கிட்டத்தட்ட அவர் அவனை நெருங்கி விட்டார். ஆனால் தந்திரமான அந்தக் கொள்ளைக்காரன் தப்பித்துச் சென்று விட்டான். ஆனால், வீரப்பனின் முக்கிய இடத்தில் எஸ்.டி.எஃப். நடத்திய அந்தத் தாக்குதல், எஸ்.டி.எஃப். வரலாற்றில் மிகவும் சுவாரஸ்யமான சம்பவங்களில் ஒன்றாக அமைந்தது.

“நான் அந்த சம்பவத்தை இதற்கு முன்பே கேட்டிருக்கிறேன். அதை விரிவாகச் சொல்ல முடியுமா சார்?” என்று கேட்டேன்.

வால்டர் சாய்ந்து உட்கார்ந்தார். கால் மேல் கால் போட்டுக் கொண்டு ஆரம்பித்தார்.

## "வீரப்பனுமா விழுந்துட்டான்...?"

வீரப்பன் தன்னிடம் இருந்து தப்பித்த சம்பவத்தை விவரிக்கத் தொடங்கினார் வால்டர்.

"ராம்போ மீது நடந்த தாக்குதலுக்குப் பிறகு எஸ்.டி.எஃப். அமைத்து கிட்டத்தட்ட ஒரு மாதம் முடிஞ்ச நேரம்."

1993 மே 8.

பதினைந்து பேர் கொண்ட அந்த பேட்ரோல் குழுவினர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அந்த நடுஇரவில் வால்டர் தேவாரம் அவர்களுடன் அணிவகுத்துச் சென்றார். நீதிபுரம், மாரிமடுவு மற்றும் சின்னமலைக் கணவாய் ஆகிய கிராமங்கள் சூழ்ந்த ஒரு புனல் வடிவிலான குண்டம் பகுதியை விட்டு அவர்கள் வெளியேறி இருந்தனர். அப்போது வால்டரும் அவர்களின் நடவடிக்கையில் இணைந்து கொண்டார். அந்தக் கிராமங்கள் முழுவதும் வீரப்பனுக்கு ஆதரவான பகுதிகள்.

அதிகாலை விடிந்து கொண்டிருந்த நேரம். வால்டர் அவரது பெரும்பாலான ஆட்களிடம், "தண்டாவுக்குத் திரும்புங்கள்" என்றார். தண்டா என்பது நாடோடிக் கூட்டமான லம்பாடி பழங்குடியினர் காட்டுக்குள் அமைக்கும் குடில்களின் கூட்டத்திற்குப் பெயர்.

அசைவே இல்லாமல் நீண்ட நேரம் படுத்துக் கிடப்பது வால்டரின் இயல்பல்ல. மூன்று நொடிகளில் இலக்கைச் சுட்டு வீழ்த்துவதில் அவர் நிறைய விருதுகளைப் பெற்றிருந்தார். ஆனால், இங்கே அவர் இலக்கைப் பார்க்க முடியாமல் ஆறு மணி நேரம் அமைதியாக படுத்துக் கொண்டிருந்தார்.

எந்த இயக்கமும் இல்லாத இரவின் முடிவில், அவர் அமைதியின்மையை உணர்ந்தார். அந்தப் பகுதியை ஓரளவுக்கு ஆராய முடிவு செய்தார். அவரது குழுவில் இருந்து நான்கு பேர் மட்டும் பிரிந்து, அவருடன் அவசர பேட்ரோலுக்குக் கிளம்புமாறு கேட்டுக் கொண்டார்.

வீரப்பனை தேடும் குழுவுக்கு வழிகாட்ட முன்னே செல்பவர், முன்னால் செல்ல, வால்டரும் மூன்று பேரும் அவரைப் பின்தொடர்ந்தனர். அப்போது வால்டர் தனது யூனிபார்மில் தோளில் அணிந்திருக்கும் பட்டையை கழற்றி வைத்திருந்தார். அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று எஸ்.டி.எஃப்—ல் உள்ள சாதாரணப் பணியாளர்களுக்கும் அவருக்கும் வித்தியாசம் தெரியாது. மற்றொரு காரணம், பல மைல்களுக்கு அப்பால் இருந்து பார்த்தாலும் அந்த பட்டையில் இருக்கும் சில்வர் நிற ஸ்டார்கள் ஒளிர்ந்து தெரியும்.

இப்படித்தான் 1988—ல் யாழ்ப்பாணத்தில், இந்திய அமைதிப் படையினரை, எல்.டி.டி.ஈ. துப்பாக்கிப் படையினர் தென்னை மரங்கள் மேலே இருந்து கண்டறிந்து தாக்கினர்.

ஐந்து பேரும் ஒருவருக்கொருவர் 15 அடி சீரான இடைவெளியில் நான்கு மணி நேரமாக தொடர்ந்து நடந்தனர். அவர்களின் காலைச் சிற்றுண்டியான ரொட்டித் துண்டுகளைச் சாப்பிடவில்லை. அதற்குப் பதிலாக மதியச் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு தொடர்ந்து நடந்தனர்.

முன்னால் சென்ற காவலர் திடீரென்று பின்னால் திரும்பினார். ‘சத்தம் போடாதீர்கள்’ என்பது போல வாயில் விரலை வைத்து சைகை செய்தார். மனிதர்களின் சத்தம்! மெதுவாக முன்னேறினார். இடது பாதத்தை ஒரு மரத்தின் மீது வைத்து தலையை உயர்த்தி எட்டிப் பார்த்தார். கால் விரல்களில் நின்றபடி எம்பி ஏதாவது தெரிகிறதா என்று பார்க்க முயற்சித்தார்.

மற்றவர்கள் எச்சரிக்கையுடன் காத்துக் கொண்டிருந்தனர். அவர் சைகை காட்டினார். எதிரியிடம் ஆயுதமில்லை என்பதுதான் அந்த சைகை.

எங்கள் குழுவின் காவலர், வீரப்பன் கும்பலின் காவலாளியைப் பார்த்தார். இவர்களின் ஊடுருவலை அவன் பார்க்கத் தவறியது மட்டுமல்ல, அந்த நேரத்தில் அவன் கவனம் முழுவதும் சிதறி இருந்தது. மரத்தின் மீது அவன் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும். ஆனால் அந்த நேரத்தில் வீரப்பன் கூட்டத்தில் இருந்த பெண்கள் அங்கிருந்த நதியின் வளைவான பகுதியில் குளித்துக் கொண்டிருந்தனர். அதனால் அந்தக் காவலாளி அவர்களைப் பார்க்க முடியாத வேறு இடத்தில் இருந்தான். மரத்தின் மீது ஏறக் கூடாது என அவனுக்கு கண்டிப்பாக சொல்லப்பட்டிருந்தது.

ரங்கஸ்வாமி என்னும் வீரப்பன் கும்பலைச் சேர்ந்த சமையல்காரர் பின்னாளில் போலீசில் சரணடைந்த போது, அன்று நடந்த சம்பவங்களை விளக்கமாகச் சொன்னார். அதுபோல சின்னப் பையன்களுக்கு வழக்கமாகச் சொல்வதுதான் அவனுக்கும் சொல்லப்பட்டிருந்தது என்றார். அந்த டீன்ஏஜ் காவலாளி, ஒரு மணி நேரமாக அந்தப் பெண்களைப் பார்க்க வேண்டும் என்ற தனது ஆசையைக் கட்டுப்படுத்தப் போராடிக் கொண்டிருந்தான். ஆனால், அந்தத் தடை செய்யப்பட்ட இடத்தில் இருந்து திடீரென்று எழுந்த பெண்களின் குபீர் சிரிப்பொலியால் அவன் தனது கட்டுப்பாட்டை இழந்தான்.

மெல்ல ஒரு இன்ச் நகர்ந்தான். கேம்ப்பில் இருப்பவர்கள் யாரும் தன்னைப் பார்க்க முடியாதவாறு மறைந்திருக்கிறோமா என்பதை உறுதி செய்து கொண்டான். குளித்துக் கொண்டிருப்பவர்களை பார்ப்பதற்கு வசதியாக கழுத்தைத் திருப்பினான். பெண்கள் பேசுவதை அவனால் தெளிவாகக் கேட்க முடிந்தது. ஆனால் அவர்களை நன்றாகப் பார்க்க முடியவில்லை. அவன் சரியான கோணத்தில் பார்க்க முயற்சித்து அசைந்த போது, பக்கவாட்டில் சில அசைவுகளை உணர்ந்தான்.

என்ன அது?

அரைவட்டத்தில் உடனடியாக திரும்பிப் பார்த்தான். ஐந்து ஊடுருவல் காரர்களை அவன் பார்த்தான். தனது வெறுங்கையைப் பார்த்தான்.

எங்கே துப்பாக்கி?

அது ஒரு மரத்தில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. அதை எடுப்பதற்காக விரைந்து தாவினான் துப்பாக்கியை நோக்கி.

வால்டரும் அவரது ஆட்களும் அந்தக் காவலாளியை சத்தமில்லாமல் தூக்கிவிட முடியும் என்று நம்பிக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த ஆச்சரியம் நடக்கவில்லை. காவலாளியின் துப்பாக்கி இப்போது அவர்களைக் குறிபார்த்துக் கொண்டிருந்தது. நாம் சுடவில்லை என்றால், எஸ்.டி.எஃப். பக்கம் உயிர் சேதாரம் ஏற்படும் என்று உணர்ந்த வால்டர் ‘‘சுடு’’ என கத்தினார்.

அடுத்த நொடியில், எஸ்.டி.எஃப். படையைச் சேர்ந்த ஐந்து படையினரும் சுடத் தொடங்கினர்.

எஸ்.டி.எஃப். தலைவரே நேரடியாக வருவார் என்று எதிர்பார்க்காத கொள்ளையர்கள் அருவி ஒன்றில் தங்களது துணிகளைத் துவைப்பதிலும் குளிப்பதிலும் மும்முரமாக இருந்தனர். அவர்களுக்கு நடப்பது எதுவும் சுத்தமாகத் தெரியவில்லை. ‘‘ஒரு வாரமாச்சு நாறுது. நல்லா குளிங்க’’ என்று தனது ஆட்களிடம் ஜோக் அடித்துக் கொண்டிருந்தான் வீரப்பன்.

அவன் தனது பேச்சை முடிப்பதற்கு முன்பு துப்பாக்கி ரவைகள் அந்த இடத்தில் பறந்தன. துப்பாக்கிச் சத்தம் பெண்களின் அலறலுடனும் குழம்பிப் போய் கேள்விகளாக எழுந்த ஆண்களின் குரலுடனும் கலந்து ஒலித்தது. அந்தக் குழப்பத்தில் வீரப்பனின் குரல் ஓங்கி ஒலித்தது.

‘‘ஓடுங்கடா’’ என்று கத்தினான்.

அந்தக் கூட்டத்திற்கு அதை மறுபடியும் சொல்ல வேண்டியதில்லை. ஏ.கே. 47 துப்பாக்கியில் இருந்து வெளிவந்த குண்டுகள் துரத்த, ஆண்களும் பெண்களும் தண்ணீரிலிருந்து வெளியேறி ஓடினர். கையில் கிடைத்த துணியை மேலே சுற்றிக் கொண்டு அவர்கள் ஓடிக்கொண்டிருந்தனர். சிலரது உடம்பில் துணியே இல்லை.

வால்டர் அணியில் இருந்த இரண்டு பேர் அவர்களைத் துரத்திச் சென்றனர். நீரோடையைத் தாண்டி பின்னர் ஒரு சிறுகுன்றில் ஏறி, பின்னர்

திடீரென செங்குத்தாக இறங்கிய பாதையில் ஓடினர்.

ஒரு கொள்ளைக் கும்பல் 50 மீட்டர் தள்ளி ஓடிக் கொண்டிருந்ததை வால்டர் பார்த்தார். அந்த தூரத்தில் துரிதகதியில் அசைந்து கொண்டிருக்கும் இலக்கை சுடுவது எளிதல்ல. ஆனால் 20 வருட துப்பாக்கி சாம்பியனான வால்டர் தயக்கமின்றிச் சுட்டார். விரைவில் தனது குழுவினர் இருந்த இடத்தை அடைந்தார்.

அவர்களில் ஒருவர் மிகுந்த ஆர்வமாக, “அய்யா மூணு பேரு விழுந்துட்டானுங்க” என்றார்.

“வீரப்பனுமா?” வால்டர் ஆர்வத்துடன் கேட்டார்.

# அன்று வால்டரிடம் தப்பித்தவர்கள்...?

சிறு குழுவை அழைத்துக்கொண்டு வீரப்பன் கூட்டத்தோடு துப்பாக்கிச்சண்டை நடத்திக் கொண்டிருந்தார் வால்டர் தேவாரம்.

அதிரடிப்படை சுட்டத்தில், மூன்று பேர் விழுந்து கிடக்க, “வீரப்பனுமா விழுந்துட்டான்” என்று ஆர்வம் பொங்க கேட்டார் வால்டர்.

“அது உறுதியா தெரியல... ஆனா நிச்சயமா மூணு பேரு விழுந்துட்டானுங்க” என்று சொன்னார் உடனிருந்த சாரணர்.

இருண்ட புதர்களுக்கு இடையில் வால்டர் கூர்ந்து பார்த்தார். காயம்பட்ட மனிதர்கள் யாரும் அங்கே இருப்பதற்கான அறிகுறியே தெரியவில்லை. அட்ரீனல் திடீரெனச் சுரக்க ஆரம்பிக்க, அவரது தந்திரமான மூளை அதைத்தாண்டி வேலை செய்யத் தொடங்கியது.

ஒரு வேளை கண்ணிவெடி புதைக்கப்பட்டு இருக்கும் ஒரு ஆற்றுப்படுகை மீது இருட்டில் ஓடுவது புத்திசாலித்தனமாக இருக்காது. அந்த நிலப்பகுதியைப் பற்றி நன்கு தெரிந்த எதிரி விரைவில் மீண்டும் படை திரட்டி வருவான். அவர்கள் பதில் தாக்குதல் நடத்தினால் என்ன செய்வது? எல்.எம்.ஜி. எனும் துப்பாக்கி ஏந்திய பதினைந்து பேர் கொண்ட குழு இருந்திருந்தால் உண்மையிலேயே உதவிகரமாகத்தான் இருக்கும். ஆனால் இப்போது வருத்தப்பட்டு நேரம் செலவிடுவதில் எந்த பயனும் இல்லை.

வயர்லெஸ் செட்டைப் பயன்படுத்தி, “லயன் காலிங் கண்ட்ரோல்” என்றார். பதில் இல்லை. மறுபடியும் முயற்சித்தார். தனது படையை

வலுப்படுத்த விரும்பினார். ஆனால், அதை அவரால் பெற முடியவில்லை. ரேடியோ ஆபரேட்டர் “இது மறைவுப்பிரதேசம் சார்” என்றார்.

அந்த பாழாய்ப்போன இடம் முழுவதும் வயர்லெஸ் கிடைக்காத பகுதி என்று வால்டர் சபித்தார். தனது குழு உறுப்பினர்களின் முதல் நடவடிக்கையே மண்ணைக் கவ்வியதால், தயக்கத்துடன் அவர்களை கேம்ப்புக்குத் திரும்பச் சொன்னார்.

மறுநாள் விடியும் போதே 15 பேர் அடங்கிய தனது முழுப்படையுடன் வால்டர் மீண்டும் அங்கு சென்றார். “சடலங்களை நெருங்கும்போது எச்சரிக்கையாக இருங்கள். அவைகளையே கொள்ளைக்காரர்கள் வெடிகுண்டுகளாக மாற்றி இருக்கலாம் அல்லது நம் மீது ஒரு தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருக்கலாம்” என்று தனது ஆட்களை எச்சரித்தார்.

அந்தப் பதினைந்து பேரும் மூன்று குழுக்களாகப் பிரிந்தனர். முதல் குழுவின் வழிகாட்டியாக செல்லும் காவலர்களும் அவரது நண்பர்களும் முதல் நாள் கொள்ளைக்காரர்களைத் துரத்தி ஓடிய பகுதிக்கு விரைந்தனர்.

திடீரென்று ஒரு காவலர் தனது வேகத்தைக் குறைத்தார். பிறகு நின்றார். அவரது முகத்தில் ஒரு குழப்பம் தெரிந்தது. அவரது தோளுக்கு மேல் எட்டிப் பார்த்த மற்றவர்கள் கூர்ந்து கவனித்தனர். வால்டர் அதைப் பார்த்து “அங்கே என்ன நடக்குது?” என்று கேட்டார். “பாடி எதுவும் இல்ல சார். வெறும் ரத்தக்கறைதான் இருக்கு” என்று காவலர் சொன்னார்.

வால்டர் அந்த நிலப்பகுதியை ஆராய்ந்தார். ஒரு சில மணி நேரத்திலேயே சிவப்பு நிறமான ரத்தம் டார்க் பிரவுன் ஆக மாறியிருந்தது. அவரது அனுபவம் வாய்ந்த கண்களுக்கு அந்த ரத்தக்கறை கொடுத்த அடையாளத்தை அறிய முடிந்தது. நுரைத்து நீர்க்குமிழி போல் ரத்தம் உறைந்து கிடந்தால், அது நுரையீரலில் இருந்து வெளியே வந்ததாக இருக்கும். கனமாகவும் மிருதுவாகவும் இருந்தால், அது தலையில் இருந்து வந்ததாக இருக்கும். நிறமற்று நீர்த்துப் போய் ஜெலட்டின் போல இருந்தால் அது அடிவயிற்றில்

இருந்து வந்ததாக இருக்கும். வயிற்றில் செரிமானமான திரவங்கள் கலந்ததால் அது அப்படி இருக்கலாம்.

ஆனால், அந்த ரத்தம் சாதாரணமாக இருந்தது. உடல் பகுதியில் இருந்து சிதறியதாக இருக்கலாம். பெருமளவு ரத்தம் வெளியே தெறித்திருக்கிறது. அவர்கள் காயமடைந்திருக்கின்றனர். ‘இந்த ரத்த இழப்பு உயிரை குடித்திருக்குமா’ என்று ஒரு கணம் வால்டர் யோசித்தார்.

பூமியில் ஊறியது போக அங்கு மீதமிருந்த ரத்தத்தின் மீது எறும்புகளும் பூச்சிகளும் மும்முரமாக ஊர்ந்து கொண்டிருந்தன. ஆனாலும், அங்கிருந்த சில பாறைகளின் மீது மூன்று வெவ்வேறு ரத்தக் கறைகள் காய்ந்து இருந்தன.

“அங்கே பாருங்க” எனச் சுட்டிக்காட்டினார் ஒருவர்.

அங்கு ரத்தக்காயம் பட்ட ஒருவர் வழி எல்லாம் ரத்தம் சிந்திவிட்டுப் போயிருந்த அடையாளம் இருந்தது. 50 மீட்டர் தள்ளி ஒரு பாறையில் மற்ற இரு ரத்தச் சிதறல்களுடன் அது வந்து சேர்ந்திருந்தது.

அவர்கள் மூன்று பேருக்கும் அங்கு தான் முதல் உதவி சிகிச்சை நடந்திருக்க வேண்டும்.

இரண்டாவது குழுவினர் மலைக்கு மேல் மற்றொரு 100 மீட்டருக்கு அப்பால், ரத்தச் சிதறல்களைப் பார்த்தனர். அது உறைந்து போயிருந்தது.

மூன்று மாதங்கள் கழித்து அந்த மூன்று பேரில் ஒருவன் சரணடைந்த போது, அவன் அன்று நடந்த சம்பவத்தை விவரித்த பிறகுதான் இந்த மர்ம முடிச்சு அவிழ்ந்தது.

சுண்டன் வெள்ளையன், அருணாக்காவீட்டு சின்னராஜ் மற்றும் சமையல் ரங்கசாமி ஆகிய மூன்று பேரும் அன்று துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து, நிறைய ரத்தம் சிந்தி இருந்தனர். ஆனால் அவர்கள் மீது பட்ட அந்த துப்பாக்கி குண்டுகள், உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் பாயவில்லை.

சுண்டன் வெள்ளையன் பலத்த காயமடைந்தான். நான்கு குண்டுகள் அவனது உடலில் பாய்ந்திருந்தன. ஒவ்வொன்றும் 2,000 ஜோல்ஸ் சக்தி கொண்டவை. சாதாரணமாக இப்படி குண்டு பாய்ந்திருந்தால் ஒன்று ஆள் குற்றுயிரும் குலையுயிருமாகியிருப்பான் அல்லது இறந்திருப்பான். ஆனால் அப்படி எதையும் செய்யாமல் அந்த துப்பாக்கி குண்டுகள் அவனைத் துளைத்துச் சென்றிருந்தன.

மூன்று ரவுண்டு துப்பாக்கி ரவைகளால் தாக்கப்பட்ட சின்னராஜ் மயக்கமடைந்து தரையில் விழுந்திருக்கிறான். சில நிமிடங்கள் வரை அவன் அப்படியே தரையில் விழுந்து கிடந்தான்.

அனைவரும் அவன் இறந்து விட்டான் என்று நினைத்தனர். ஆனால், புல்லட்டுகள் தனது முழு கைனடிக் எனர்ஜியை அவனது உடலில் செலுத்தாமலேயே வெளியேறி இருந்தன. எனவே, அவன் சிரமப்பட்டு தன்னைத்தானே தரையில் இழுத்துக் கொண்டு சென்று மற்ற இருவருடன் இணைந்தான். அங்கு மூவருக்கும் மூலிகை வைத்தியம் பார்க்கப்பட்டது. மற்றொரு புறம் வீரப்பனும் மற்றவர்களும் அழையா விருந்தாளிகள் வந்தால் அவர்களை எதிர்கொள்ள தயாராக இருந்தனர்.

அந்த என்கவுன்ட்டர் சம்பவம் பற்றி ரங்கசாமி ஒரு துரும்பு விடாமல் விவரித்தான். அவன் திடீரென்று தனது சட்டையைக் கிழித்து, உடலில் இருந்த தழும்புகளைக் காட்டும் வரை, அவன் சொல்வதில் ஒரு சிறு சந்தேகம் இருந்துகொண்டே இருந்தது.

துப்பாக்கி குண்டு அவனது முன் கை தசை மற்றும் எலும்பைத் தாக்கிவிட்டுச் சென்றிருக்கிறது. முக்கியமான தமனி, ரத்தக்குழாய் அல்லது நரம்பு எதையும் அது தாக்கவில்லை. அதிவேகம் கொண்ட துப்பாக்கி ரவைகள் இதயம், மூளை அல்லது சிறுநீர்ப்பை ஆகிய இடங்களில் தாக்கினால், அது பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். ஆனால் அவர்கள் மூன்று பேருக்குமே தசை மற்றும் எலும்புகளில் தான் அடி. அதனால் பெரிய தீங்கு நேராது.

வீரப்பனிடம் மீண்டும் சேர்ந்த மூவரும் பின்னாளில் எஸ்.டி.எஃப். துப்பாக்கிக்கு பலியானார்கள். ஆனால் அந்த நாளில், அந்த குண்டுகளில் அவர்கள் சாகவில்லை.

அவர்கள் உயிர் பிழைத்தது வீரப்பனின் அசட்டு தைரியத்தை அதிகரிக்கவே செய்தது. அதிலும் குறிப்பாக அந்த தாக்குதலில் வால்டரே நேரில் பங்கு கொண்டிருந்தார் என்பதை அறிந்த பிறகு வீரப்பன் அப்படித்தான் நினைத்தான்.

“கடவுளின் அன்பு எனக்கு இருக்கு. அவர் என்னைக் காப்பாற்றுகிறார். யாரும் என்னை மசுரக் கூடப் புடுங்க முடியாது” என்று அருகில் இருந்த தனது ஆட்களிடம் கொக்கரித்தான் வீரப்பன்.

அதன் பிறகும் வீரப்பனை நெருங்கியது எஸ்.டி.எஃப். இந்த முறையும் தந்திரமாக தனது கூட்டத்துடன் தப்பினான்.

அது!

# “வீரப்பனை மீண்டும் நழுவ விட்டோம்!”

எஸ்.டி.எஃப்.—ஐ மிஸ் பண்றீங்களா?” என சஞ்சய் அரோராவைப் பார்த்துக் கேட்டேன். இந்திய — நேபாள எல்லைப் போலீசில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றிவிட்டு டி.ஐ.ஜி.யாக தமிழ்நாட்டுக்கு அப்போதுதான் அவர் திரும்பி வந்திருந்தார்.

புன்னகைத்த அவர், “என்னோட மனைவிக்குப் பிடிக்கும்னு நான் நெனக்கல. எஸ்.டி.எஃப்—ல் நான் முதன்முதலாக வேலை பார்த்தபோது அதை நல்ல முறையில்தான் ஏற்றுக் கொண்டார். எங்க பையன் அப்ப கைக்குழந்தை. இந்த அசைன்மென்ட் ரொம்ப கஷ்டம் என்று நான் சொன்னபோதும், குழந்தையோட வந்து என்னோட அவர் இணைந்து கொண்டார். மேட்டூரில் இருந்த எஸ்.டி.எஃப். ஹெட்குவார்ட்டஸ்ல ஒரு ரூம்ல நாங்க தங்கியிருந்தோம். அது பத்தி ஒரு போதும், என் மனைவி குறை சொன்னதில்லை” என்றார்.

எஸ்.டி.எஃப். ஆட்களும் அதையே வழிமொழிந்தனர். உயரமான, பார்வைக்கு அழகான, உணர்ச்சிவசப்படாத அமைதியான சஞ்சய்க்கு செல்லப் பெயர் ஸ்டார்.

ஒரு பொறியியலாளராகப் பயிற்சி எடுத்த சஞ்சய், ஜெய்ப்பூரில் இருந்து வந்தவர். ஆனால், தமிழ் சரளமாகப் பேசினார். எஸ்.டி.எஃப்—ல் அவர் பணியாற்றுவதற்கு முன்பு முதலமைச்சர் பாதுகாப்புக் குழுவில் பணியாற்ற என்னால் தேர்வு செய்யப்பட்டார். எஸ்.டி.எஃப்—ல் அவர் வால்டருக்கு நம்பர்டுவாக பணியாற்றினார்.

சுற்றிவளைக்காமல், சஞ்சய் நேரடியாக விஷயத்திற்கு வந்தார். “ஏதாவது முக்கியமா என்னோட பேச விரும்புறீங்களா சார்?” என்று கேட்டார்.

‘‘வீரப்பனின் பதுங்குமிடத்தில் நீங்கள் நடத்திய வேட்டையைப் பத்தி உங்களிடம் கேட்க விரும்பினேன்’’ என்று பதில் சொன்னேன்.

மே 1993.

புனித வெள்ளி படுகொலையைத் தொடர்ந்து, வீரப்பனைப் பிடிக்க ராணுவம் வரப் போகிறது என்று ஊடகங்கள் பரபரப்பாக யூகங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தன. கடைசியில் அது ராணுவம் இல்லை. துணை ராணுவம்.

கர்நாடக அரசின் வேண்டுகோளைத் தொடர்ந்து ஒரு பி.எஸ்.எப். பட்டாலியன் வந்து இறங்கியது. மூன்று மாதத்தில் வேலையை முடித்து விடலாம் என்ற நம்பிக்கையோடு இருந்த மூத்த அதிகாரிகள் அதில் இடம் பெற்றிருந்தனர்.

எதிரி பதுங்கி இருக்கும் அந்த நிலப்பரப்பு நமக்கு அந்நியமானது. உள்ளூர் மக்களின் பழக்கவழக்கமும் மொழியும் நமக்கு அறிமுகமில்லாதது. ஆனால் படை வீரர்கள் ஒவ்வொரு முறையும் இதை பட்டுதான் தெரிந்து கொள்கின்றனர். அது வியட்நாம் தொடங்கி ஆப்கானிஸ்தான் வரை பெற்ற பாடமாக இருந்தாலும் சரி, இலங்கைக்குச் சென்ற இந்திய ராணுவம் கற்ற பாடமாக இருந்தாலும் சரி இதுதான் இறுதியில் நடக்கிறது.

பி.எஸ்.எப். தனது நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த, வீரப்பனின் கோட்டை எனப்படும் போதமலையின் அடிவாரத்திற்குச் செல்லும் குறுகிய மூன்று பாதைகளிலும் கண்ணி வெடிகளை வைத்திருக்கிறான் என்று எங்களின் இன்ஃபார்மர்கள் மூலம் தெரிந்து கொண்டோம்.

பூமியைத் தோண்டி கண்ணி வெடிகளை புதைத்துவிட்டு, அது தெரியாமல் இருப்பதற்காக மாடு மேய்ப்பவர்களைக் கட்டாயப்படுத்தி அவர்களின் மாடுகளை அந்தப் பகுதிகளில் பலமுறை மேய விட்டார்கள் என்பதை சேலம் எஸ்.பி. உறுதி செய்தார். இதில், அபாயகரமான விஷயம் என்னவெனில், பூமியில் புதைத்ததைத் தவிர்த்து மரங்களிலும் ஒரு சில கண்ணிவெடிகள்

தொங்க விடப்பட்டிருந்தன. அது ஒரு மிகப்பெரும் தந்திரமான அச்சுறுத்தலைக் கொடுத்தது. குறுகலான பாதையில் ஒரு ரோந்துப்படை குறிப்பாக இரவு நேரத்தில் செல்லும்போது மரக்கிளைகளில் தெரியாமல் உரச நேர்வது நிச்சயமாக சாத்தியம். அப்படி உரசினால் அது பேரழிவாக இருக்கும்.

1993 மே, 21—ல் வீரப்பனின் பதுங்குமிடத்தைப் பற்றிய துல்லியமான தகவல் ஒன்று கிடைத்தது. தேடுதல் வேட்டைக்கு உடனடியாக தயாராகுங்கள் என அவர் தனது குழுவினருக்கு கட்டளையிட்டார்.

அவரது குழு அணிவகுத்துச் சென்றது. இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அவர்கள் வல்லான் குழிப்பட்டியை அடைந்தனர்.

சஞ்சய்க்கு அடுத்து நின்று கொண்டிருந்த வழிகாட்டும் காவலர் பக்கத்தில் ஒரு இன்ஃபார்மர் இருந்தார். ‘இரண்டு நாட்களுக்கு முன்புதான், வீரப்பன் கும்பலோடு பிரட் சாப்பிட்டோம்’ என்றார்.

அவருக்கு வலது புறத்தில் அடர்ந்த புதர்களுக்கு இடையே சுரங்கப்பாதை ஒன்று இருந்ததை, அவர் தனது கட்டை விரலால் சுட்டிக் காண்பித்தார். சஞ்சய் குப்புறப்படுத்துக் கொண்டு தவழ்ந்து தவழ்ந்து செல்ல ஆரம்பித்தார். மற்றவர்களும் அப்படியே அவரைப் பின்தொடர்ந்தனர். அனைவரும் தங்கள் வயிற்றை வைத்து தவழ்ந்து தவழ்ந்து சென்றனர்.

“இந்த சுரங்கத்தை காட்டுப் பன்றியோ அல்லது மனிதர்களோ தோண்டி இருக்க வேண்டும்” என்று நினைத்தார் சஞ்சய். இது எளிதாக சிக்கவைக்கும் ஒரு பொறி என உணர்ந்தார். அவர்கள் திடீரென்று எதிர்ப்பக்கத்தில் இருந்து தங்களைத் தாக்க வந்தால் உண்மையில் நிலைமை களேபரமாகிவிடும்.

தவழ்ந்து சென்ற அந்த பதட்டம் நிறைந்த ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு, அவர்கள் 30 யார்ட் விட்டமுள்ள ஒரு சமவெளிப்பகுதியை வந்தடைந்தனர். எச்சரிக்கையுடன் அவர்கள் எழுந்து நின்றனர். இடது பக்கமும் வலது பக்கமும் கண்கள் பார்த்தன. ஏதேனும் அச்சுறுத்தல் இருக்கிறதா என்று ஒவ்வொரு இன்ச்சையும் ஆராய்ந்தனர்.

அடர்ந்த மேகங்களுக்கு இடையில் மறைந்திருந்த நிலவு திடீரென்று வெளியே வந்தது. அனைவரும் அவசரமாக தலையைத் தாழ்த்திக் கொண்டனர். மறைந்து கொள்ள இடம் கிடைக்காத சிலர் அப்படியை தரையில் படுத்துக்கொண்டனர். இல்லையென்றால் அந்த நிலவொளியில் எதிரியின் கண்ணில் பட்டுவிடும் அபாயம் இருந்தது.

அந்த ஒளியில், மைதானத்தின் மையத்தில் ஏதோ ஒரு இருண்ட உருவம் அமர்ந்திருந்ததைப் போல தெரிந்தது. ஆனால் அது என்ன என்று தெளிவாகத் தெரியவில்லை. அந்த நேரத்தில் திடீர் சத்தம் கேட்டது.

இருண்ட உருவம் கொண்டவன், கொஞ்சம் மணலை அள்ளி வீசியிருக்கிறான் என்று ஒரு காவலர் நினைத்தார். ஒரு நிமிடத்திற்கு அப்படியே இருந்தனர். நிலவு மறுபடியும் மேகங்களுக்கு இடையே மறைந்தது.

அனைவரும் தங்களது துப்பாக்கிகளைப் பார்த்துக் கொண்டனர். ஒரு கையசைவுக்காக அவர்கள் காத்துக் கொண்டிருந்தனர். ஒரு குண்டூசி சத்தம்கூட எழுப்பாமல், மொத்த குழுவினருக்கும் வரவேண்டிய கட்டளை வந்து விட்டது. அவர்கள் மெதுவாக அந்த கரிய உருவத்தை நோக்கி நெருங்கினர்.

அருகில் சென்று பார்த்தபோது அது ஒரு கிணறு என்று தெரிய வந்தது. காற்றில் நீர் அலை ஏற்படுத்திய சத்தம்தான், மணல் வீசியது போல உணர முடிந்தது.

வீரப்பனின் கூட்டத்தில் இருந்த ஆண்களும் பெண்களுமாக 100 பேருக்கு அந்தக் கிணறுதான் தண்ணீர் தந்து கொண்டிருந்தது. அந்த இடத்தை விட்டு வீரப்பன் ஆட்கள் வெளியேறி இருந்தனர். அந்த இடத்தை முழுமையாக ஆராய்ந்த போது, உணவுப் பொருட்கள், கிழிந்து போன உடைகள், விரிப்புகள் போன்றவற்றை விட்டு விட்டுச் சென்றிருந்தது தெரிய வந்தது. சமையல் செய்ததற்கான அடையாளமாக சாம்பலையும் காண முடிந்தது.

“அவர்கள் போய் விட்டார்கள் சார். குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்கு முன்னாலேயே அவர்கள் இந்த இடத்தை விட்டுச் சென்றிருப்பார்கள்” என்று ஒருவர் சொன்னார்.

வீரப்பனும் அவனது ஆட்களும் மேற்கு நோக்கி இடம் பெயர்வதற்கு வசதியாக எஸ்.டி.எ.ஃப்—க்கு உள்ளூர் ஆட்களால் தவறான தகவல்கள் தரப்பட்டு திசை திருப்பப்பட்டிருந்தது.

வீரப்பன் அவசரமாக தனது ஒன்றிரண்டு ஆட்களுடன் கோபிநத்தத்திற்குச் சென்று விட்டதாகத் தெரிய வந்தது. வீரப்பன் காணாமல் போன அந்தப் புதிரை சஞ்சய் மீண்டும் நினைவு கூர்ந்தார். “அவர்கள் எங்கே போயிருப்பார்கள்?” என்று அவர் அந்த நேரத்தில் நினைத்தார். ஆனால் அதற்கான பதில் விரைவிலேயே நடந்த ஒரு துப்பாக்கிச் சண்டையில் மற்றொரு உயர் அதிகாரியை இழந்ததற்குப் பிறகு தெரிய வந்தது.

## ஒரு கையால் ஜீப் ஓட்டி எஸ்.பி. உயிரைக் காப்பாற்றிய டிரைவர்?

ஜூலை 2001

"இந்த என்கவுண்டரில்தான் எத்தனை விதமான விளக்கங்கள்? வீரப்பன் ஆதரவாளர்கள் சொன்னதாக மீடியா ஒரு விஷயத்தைச் சொல்கிறது. எங்கள் தகவல்கள் வேறு ஒன்றைச் சொல்கின்றன. அந்தச் சண்டையின்போது அங்கு இருந்தவர்கள்கூட என்ன நடந்தது என்பதை ஏற்றுக் கொள்வதாக இல்லை." எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த நேரத்தில்தான் வீரப்பன் தொடர்பான பைல் ஒன்றைப் படித்து புரிந்துகொள்ள முயற்சித்தபோது, எனது தலை சுற்றியது.

தலையில் ஏற்பட்ட சுரீர் வலியைக் குறைக்க நான் நெற்றியைத் தேய்த்துக் கொண்டிருக்க, "அது குழப்பமான சண்டை சார்" என்றார் கருப்புசாமி. தொடர்ந்து அவர், "எல்லாம் அவசர கதியில் நடந்திருக்கிறது. அப்போது அங்கு இருந்தவர்களால் அந்த சம்பவத்தின் ஒரு சில துளிகளை மட்டுமே கவனிக்க முடிந்தது. நீங்கள் கூட அந்த நாளின் ஒரு அங்கமாக இருந்தீர்கள் நினைவிருக்கிறதா?" என்று கேட்டார்.

தலையை ஆட்டினேன். எனக்கும் ஒரு சரியான வாய்ப்புக் கிடைத்தது. வீரப்பனின் மிகவும் வியக்கத்தக்க தாக்குதல்களில் ஒன்றான அந்தத் தாக்குதலில் காயமடைந்த கர்நாடக எஸ்.டி.எஃப். எஸ்.பி.யான கோபால் ஹோசூரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது நான் அங்குதான் இருந்தேன்.

மே 1993.

வீரப்பனுக்கு தகவல் கொண்டு செல்பவன் பதற்றத்தில் இருந்தான். கிராமத்தில் இருந்து அவசரமாக போய்க் கொண்டிருந்தான். தன்னை யாரேனும் பின்தொடர்கிறார்களா என்று அவ்வப்போது திருட்டுத்தனமாக தன்னைச் சுற்றிப் பார்த்துக் கொண்டான். பழக்கமான குரல் அவனை அழைத்ததும் அவனது இதயம் அப்படியே நின்று விட்டது.

“டேய் பொன்னுசாமி எங்கடா இவ்வளவு அவசரமா போற” வீரப்பனின் உறவினன், அவனது கேங்கில் புதிதாக வளர்ந்து வந்த ஸ்டார் சேத்துக்குளி கோவிந்தன்தான் அப்படிக் கேட்டான்.86

பொன்னுசாமி நடுக்கத்துடன் சிரித்தான். “ஓ... நீ... நீயா... என்ன இங்க?” என்று கேட்டான்.

அவனது பின்னந்தலையில் கையை வைத்த படி, அவனை முறைத்துப் பார்த்தான். மெதுவாக அதே சமயத்தில் மிரட்டலாக, “கிண்டலா நான்தானடா மொதல்ல கேள்வி கேட்டேன். என்னோட கேள்விக்கு ஏண்டா பதில் சொல்ல மாட்டேங்கிற?” என்று கேட்டான் கோவிந்தன்.

பொன்னுசாமியின் தடுமாறிய நரம்புகள் நடுங்கின. அப்படியே மண்டி போட்டு விட்டான். “என்னை அடிக்காதீங்க. நான் எல்லாத்தையும் சொல்லிடுறேன்” என்று புலம்பினான்.

ஒரு சில மணி நேரத்திற்குப் பிறகு, வீரப்பன் முகாமுக்கு பொன்னு சாமியை இழுத்து வந்து கீழே தள்ளினான் கோவிந்தன். அந்தக் காட்சி யைப் பார்த்துப் பதற்றமடைந்த வீரப்பன், “என்ன ஆச்சு?” என்று கேட்டான்.

பொன்னுசாமி வீரப்பனின் காலில் விழுந்தான். காலை பிடித்துக்கொண்டு, “அண்ணா நன்னுனு சமிஷு (என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்). உங்களுக்குக் கெடுதல் செய்யணும்னு நான் நெனக்கல. அவங்க என்னையத் துப்பாக்கியை எடுக்கச் சொல்லி கட்டாயப்படுத்துனாங்க. நான் உங்க கூட்டத்துக்குள்ள புகுந்து சான்ஸ் கெடக்கும்போது உங்களை

கொன்னுடனும்னு அவங்க சொன்னாங்க. எல்லா உண்மையும் சொல்லிடுறேன். என்னைய விட்டுடுங்க. கெஞ்சி க் கேட்டுக்கிறேன்'' என்று அழுதான். இந்த விஷயத்தைப் பின்னாளில் பொன்னுசாமி போலீசிடம் சொன்னான்.

''யாரு அவங்க?'' வீரப்பன் கேட்டான்.

''அந்த எஸ்.டி.எஃப். நாயுங்கதான்'' என்றபடி பொன்னுசாமி அழுதான்.

வீரப்பன் முகத்தில் ஒரு புன்னகை தோன்றியது. கீழே குனிந்து காலில் விழுந்து கிடந்த பொன்னுசாமியை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தான்.

''கர்நாடக எஸ்.டி.எஃப். என்னைக் கொல்ல திட்டம் போடுறாங்களாடா? அவங்களுக்கும் ஒரு பாடம் கற்பிக்க இதுதான் சரியான சமயம்னு நெனைக்கிறேன்'' என்று பல்லைக் காட்டியபடி உறுமினான்.

1993 மே 24. ஒரு அழகான காலை நேரம். மைசூரில் இருந்து 150 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எம்.எம். மலை. மைசூருக்குச் செல்லும் அந்த சாலையில் ஏராளமான 'எஸ்' வளைவுகள். எங்கு பார்த்தாலும் பசுமை. சூரிய ஒளியில் அது ஒரு ஓவியம் போலக் காட்சியளித்தது. அந்த அழகு வீரப்பன் கண்களை ஈர்க்கவில்லை.

அந்த அழகான மலை வளைவில் செல்வது ஆனந்தமானது. ஆனால், அந்த மலையில்தான் கர்நாடக அதிரடிப்படையை வீரப்பன் மூர்க்கமாக தாக்க தயாராக இருந்தான். கர்நாடக எஸ்.டி.எஃப். வாகனங்கள் அந்தப் பாதையில் வரலாம் என்ற எதிர்பார்ப்போடு வீரப்பன் சாலையிலேயே கண்களை வைத்திருந்தான்.

காலை ஏழு மணி வாக்கில், வீரப்பனின் கூர்மையான காதுகள், வாகனங்கள் நெருங்கி வரும் சத்தத்தைக் கேட்டன. பதற்றமானான். கடுமையான முகத்துடன் தலையை அசைத்துக் கொண்டான். மூன்று போலீஸ் ஜீப்புகள் வருவது தெரிந்தது. முன்னால் வருவதும், பக்கவாட்டில் வருவதும் அனேகமாக எஸ்கார்ட் வாகனங்களாக இருக்கலாம்.

வீரப்பனின் கண்கள் நடுவில் வரும் வாகனத்தைக் குறிவைத்தன. அதில்தான் எம்.எம். மலை முகாமுக்குத் தலைமை தாங்கும் எஸ்.டி.எ்.ப். எஸ்.பி. கோபால் ஹோசூர் வந்து கொண்டிருந்தார். வீரப்பனின் தொண்டையில் குத்திய முள்ளாக உறுத்திக் கொண்டிருந்தவர் அவர்.

இறுகிய முகத்துடன் 'ரொம்ப நேரம் ஆகாது' என்று நினைத்தான். அவன் சுடுங்கள் என்று கட்டளை இடுவதற்கான கணத்திற்காக காத்திருந்தான்.

அந்த வாகனங்கள் பொறிக்குள் வந்து மாட்டுவதற்கு ஒரு சில வினாடிகளுக்கு முன்பே ஒரு துப்பாக்கிச் சத்தம் கேட்டது.

‘‘என்னடா செய்றீங்க... நான் சொல்றதுக்குள்ள எந்த முட்டாள்டா சுட்டது? அவனை நானே சாகடிக்கப் போறேன் இப்போ’’ வீரப்பன் உறுமினான்.

ஒரு சங்கிலித்தொடர் போல அடுத்து ஒருவனும் சுடத் தொடங்க, அந்தச் சத்தத்தில் வீரப்பனின் குரல் மூழ்கிப் போனது. அளவு கடந்த ஆத்திரத்தில் வீரப்பன் தனது துப்பாக்கியை எடுத்து அதில் உள்ள ரவைகள் தீரும் வரையில் அந்த வாகனங்கள் மீது சுட்டான்.

வீரப்பன் உத்தரவுக்கு முன்னே சுடத்தொடங்கி இருந்தாலும், அந்த வாகனங்கள் புல்லட்டுகளால் துளைக்கப்பட்டன. என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்வதற்கு முன்பே பெரும்பாலான எஸ்.டி.எ்.ப். ஆட்களை துப்பாக்கி குண்டுகள் தாக்கி இருந்தன. மற்றவர்கள் உடனடியாக ஜீப்பை விட்டு வெளியேறி மரங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு திருப்பிச் சுட்டனர்.

கோபால் ஹோசூரின் டிரைவர் ரவி, தனது வலது மணிக்கட்டில் ஒரு கூர்மையான வலியை உணர்ந்தார். அந்த இடத்தில் ஒரு புல்லட் துளைத்திருந்தது. வலியில் முணகிய அவர், உடனடியாக நிலைமையை புரிந்து கொண்டார்.

‘‘இனி எதுவும் செய்ய முடியாது’’ என்று நினைத்தவாறே திரும்பி பின் சீட்டைப் பார்த்தார். எஸ்.பி. கோபாலுக்கு அவரது கழுத்தில் இருந்து

அளவுக்கு அதிகமான ரத்தம் வெளியே வந்து கொண்டிருந்த போதிலும், தனது ஏ.கே. 47 துப்பாக்கியைத் தூக்கினார். அந்தக் காட்சி ரவியை உடனடியாக செயலில் இறங்கச் செய்தது.

வலுக்கட்டாயமாக ஜீப்பை எடுக்க முயற்சித்தார். ஆனால், அது அசையவே இல்லை. அவரது வலது கையைப் பார்த்த அவருக்குப் புதிராக இருந்தது. அதில் சக்தியே இல்லாததை உணர்ந்தார். பின்னர் ரவி தனது இடது கையால் ஸ்டியரிங்கை பிடித்து, எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக வண்டியைப் பின்னோக்கி ஓட்டினார்.

‘‘அவன் தப்பிச்சுப் போறான். துரத்துங்கடா’’ என்று வீரப்பன் கத்தினான்.

ஒளிந்திருந்த இடத்தை விட்டு அவனது ஆட்கள் வெளியே வந்து சாலையை நோக்கி ஓடினர். ஆனால் ஜீப் விரைவாக அந்த இடத்தை விட்டுப் பறந்து விட்டது.

வீரப்பன் வானத்தைப் பார்த்து விரக்தியில் ஓலமிட்டான். ‘‘இன்னொரு நாள் நான் உங்களப் பிடிப்பேன்டா’’ என்று அலறினான்.

இச்சம்பவம் நடந்தபோது, மேட்டூரில் இருக்கும் எஸ்.டி.எஃப். முகாமில் நான் இருந்தேன். அந்த முகாமை நோக்கி, ஒரு காவலர் ஓடி வந்து ‘‘சார் கெட்ட செய்தி’’ என்று மூச்சிரைக்கச் சொன்னார்.

# அதிர்ஷ்ட தேவதை எனக்கும் கருணை காட்டினாள்?

கர்நாடக எஸ்.டி.எஃப். வீரர்கள் வந்த வாகனத்தை, வீரப்பன் கும்பல் மூர்க்கமாக தாக்கியும் எஸ்.பி. கோபால் ஹோசூர் தப்பிவிட்டார்.

அவனது ஆட்கள் அந்த இடத்தை விட்டுச் செல்லத் தொடங்கினர். ஒரு ஜீப்பின் அருகில் நின்றான் வீரப்பன். அதில் இருந்த அனைவரும் இறந்து கிடந்தனர்.

“ஒரு சின்ன ஞாபகச் சின்னத்தை எடுத்துக்கிறேன்” என்று சொன்ன வீரப்பன் ஜீப்பில் இறந்து கிடந்த ஒரு துரதிர்ஷ்டசாலியின் 7.62 ரக துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். அந்த ஆயுதத்தை அவன் தனது கடைசி நாள் வரையில் தன்னுடன் வைத்திருந்தான்.

இச்சம்பவம் நடந்தபோது, நான் மேட்டூரில் உள்ள எஸ்.டி.எஃப். தலைமையகத்தில் இருந்தேன். ஒரு சில நாட்கள் விசிட் என்று சென்று அது கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு நீடித்து விட்டது. முதலமைச்சரின் சுற்றுப் பயணத் திட்டத்தில் ஒரு பெரிய இடைவேளை விடப்பட்டிருந்தது. கொஞ்ச நாட்களுக்கு அவர் பயணம் மேற்கொள்ளவில்லை.

நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட நம்பிக்கையான குழு புடைசூழ அவர் சென்னையில் இருந்தார். முதல்வரின் பாதுகாப்புப் படையில் என் தலைமையின் கீழ் பணியாற்றிய சவானி என்ற ஐ.பி.எஸ். அதிகாரியும் ரோஸியின் கடினமான பயிற்சிப் பள்ளியில் படித்த மாணவர். பாதுகாப்பு ஏற்பாடுகளை நன்கு

கவனிப்பவர் எனப் பெயரெடுத்தவர். அவர்தான் நான் இல்லாத நேரங்களில் எனது டீமைத் தலைமை ஏற்று வழிநடத்தினார்.

ஒருசில நாட்கள் விடுப்பு எடுத்து எஸ்.டி.எஃப்—ல் கொஞ்ச நாட்கள் செலவழிக்க எனக்கு அனுமதி அளிக்கும்படி முதலமைச்சரிடம் கேட்டுக் கொண்டேன். என்னைப் போன்ற ஆட்கள் மறுபடியும் இணைந்து பணியாற்றுவதில் வால்டர் தேவாரம் மகிழ்ச்சியடைந்தார். எம்.எம். மலைப்பகுதியில் நடந்த தாக்குதல் நாளில் நான் தலைமையகத்தில் இருக்க, வால்டர் தேவாரம் காட்டுக்குள் ஒரு குழுவை வழிநடத்திச் சென்றார்.

எஸ்.டி.எஃப். கேம்பில் உள்ள வயர்லஸ் ஆபரேட்டர் அவசரமாக என்னிடம் ஓடி வந்தார். அவரது முகத்தில் பதற்றம் தெரிந்தது. ‘‘கெட்ட செய்தி சார்’’ என மூச்சிரைக்கச் சொன்னார்.

‘‘எஸ்.டி.எஃப். குழுவை எம்.எம். மலையில தாக்கியிருக்காங்க. எஸ்.பி. மோசமா காயமடைஞ்சிருக்காரு. அவரை மைசூருக்குக் கூட்டிட்டுப் போனா அவங்களுக்கு ரொம்ப தூரம். நாம ஒரு மணி நேர பயண தூரத்துலதான் இருக்கோம். அவரை இங்கதான் கூட்டிட்டு வர்றாங்க. இப்ப பாலாறு செக்போஸ்டைக் கடந்துட்டாங்க’’ என்றார்.

எங்களிடம் இரண்டு டாக்டர்கள்தான் இருந்தனர். ஆனால், டாக்டர்கள் தயார்நிலையில் இருந்தனர். கோபாலின் காயத்திற்கு நிச்சயம் தீவிர சிகிச்சை தேவை.

‘‘அவங்கள ஹைவேயில் நம்மள மீட் பண்ணச் சொல்லுங்க. பக்கத்துல எங்க ஹாஸ்பிடல் இருக்கு?’’ என்று கேட்டேன்.

‘‘சேலத்துல. இங்கு இருந்து 50 கிலோ மீட்டர்’’ என்று சொன்னார்கள். புனித வெள்ளி குண்டு வெடிப்பு சம்பவத்தில் காயமடைந்த ராம்போ கோபாலகிருஷ்ணனுக்கு சிகிச்சை அளித்த அதே கோகுலம் ஹாஸ்பிடல்.

‘‘நல்லது சேலத்துக்குப் போறோம். வழியில இருக்குற எல்லா போலீஸ் ஸ்டேஷனுக்கும் கால் பண்ணுங்க. வழியில டிராபிக்கை கிளியர் பண்ணச்

சொல்லுங்க” என்று உத்தரவுகளைப் பிறப்பித்தபடியே, வாகனத்தில் ஏறினேன்.

உடனடியாக ஒரு சில வாகனங்களை ஏற்பாடு செய்தோம். ஹைவேயில் நாங்கள் கர்நாடக எஸ்.டி.எஃப். படையினரைச் சந்திக்க ஏற்கனவே திட்டமிட்டிருந்த இடத்திற்கு விரைந்தோம். கோபால் சுயநினைவிழந்திருந்தார். டாக்டர்கள் தேவையான முதலுதவியை அளித்து, அதன்பிறகு அவர் ஆம்புலன்ஸ்சில் ஏற்றப்பட்டார்.

முன்னால் சென்ற வாகனத்தில் நான் இருந்தேன். சேலம் சென்று சேரும் வரையில் ஆக்சிலேட்டரில் இருந்து காலை எடுக்கவே கூடாது என்று டிரைவருக்கு கட்டளை இட்டேன். டாக்டர்கள் அங்கு ஏற்கனவே தயாராக இருந்தனர். நாங்கள் மருத்துவமனையில் நுழையும்போது, ஆபரேஷன் தியேட்டரும் தயாராக இருந்தது.

தாக்குதலைப் பற்றி தகவல் அறிந்ததும் கர்நாடக முதலமைச்சர் வீரேந்திர பாட்டீல் ஹெலிகாப்டர் மூலம் சேலம் சென்று கோபாலைச் சந்தித்தார். கர்நாடக எஸ்.டி.எஃப். படை ஒன்றின் மீது நடந்த தாக்குதலால் கடும் கோபமடைந்திருந்தார் அதன் தலைவர் சங்கர் பிதாரி. அடுத்த சில நாட்களிலே அவரே நேரடியாக களத்தில் இறங்கி காட்டுக்குள் இடைவெளி இல்லாமல் அடுத்த 120 நாட்களுக்கு நடந்த ஆழமான தேடுதல் வேட்டைக்குத் தலைமை ஏற்று வழிநடத்தினார்.

துரிதமான, ஆனால் தீர்க்கமான பதில் தாக்குதல்கள் நடந்தன. ஒரு சில கடத்தல்காரர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் அந்த தந்திரமான வீரப்பன் மட்டும் மாட்டவில்லை.

கோபால் நெருக்கமாக மரணத்தை எதிர்கொண்டது இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது. மூன்று அதிர்ஷ்டகரமான விஷயங்கள் இணைந்த ஒரு அசாதாரணமான கலவை அவரைக் காப்பாற்றி இருந்தது. அவரது வாகன அணிவகுப்பின் மீது முன்கூட்டியே தாக்குதல் நடந்தது முதலாவது விஷயம்.

ஒரு வேளை வீரப்பனின் ஆட்கள் அவனுடைய கட்டளை வந்தபிறகு தாக்குதல் நடத்தி இருந்தால், அவர்கள் கோபாலைப் பொறியில் சிக்க வைப்பதில் மட்டுமல்ல. அவரது உயிர் போகும் அளவுக்கு காயம் ஏற்படுத்துவதிலும் வெற்றியடைந்திருப்பார்கள்.

இரண்டாவது அதிர்ஷ்டம் ரவி எனும் ஒரு திறமையான டிரைவரைப் பெற்றிருந்ததும் மட்டுமல்ல, அந்த ரவி நல்ல முன்னெச்சரிக்கை யோசனையோடு வாகனத்தை இயக்குபவர் என்பதும்தான். மீட்புப்படையினர் ஹோசூரின் ஜீப் அருகே சென்று பார்த்தபோது, ரவியின் காயம்பட்ட வலது மணிக்கட்டு கையில் இருந்து துண்டிக்கப்படும் நிலையில் இருந்தது. அத்தனை வேதனையிலும் ரவி தனது முரட்டுத்தனமான தைரியத்தையும் சமயோஜித புத்தியையும் செயல்படுத்தி, குறுகிய நேரத்தில் மரணப் பொறியில் இருந்து வெளியேறினார்.

ஏதேனும் ஒரு அச்சுறுத்தலான சூழ்நிலையில் நீங்கள் உங்கள் டிரைவரைத் தேர்வு செய்வதில் கவனமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை இந்தச் சம்பவம், எனக்குள் ஏற்படுத்தியது. அவன் ஒரு உயிர் காப்பவன் என்று நிரூபிக்கக் கூடும். 1986—ல் நடந்த தாக்குதலின்போது ஜெனரல் அகஸ்டோ பினோசஸ்ட்டின் காரை சடாரென்று ஒரு திருப்புத் திருப்பி, அவரது டிரைவர் ஜெனரலின் உயிரைக் காப்பாற்றியதை யார்தான் மறக்க முடியும்?

மூன்றாவது அதிர்ஷ்டம்... ஒரு எஸ்.டி.எஃப். மேட்டூர் கேம்ப்பில் நாங்கள் தயார் நிலையில் இருந்தது. ஒவ்வொரு நொடியும் முக்கியம் என்ற நிலையில் அந்த அருகாமைதான் விலைமதிக்க முடியாத நேரத்தைக் காப்பாற்றியது.

வீரப்பன் தேடுதல் வேட்டையில் பல வருடங்களாக நல்ல மனிதர்கள் பலரை இழந்திருக்கிறோம். ஆனால் ஒரு சில நேரங்களில் அதிர்ஷ்ட தேவதை எங்கள் மீது அன்பு காட்டினாள். அவள் அன்று கோபால் ஹோசூரைப் பார்த்து நிச்சயம் புன்னகைத்திருக்கிறாள். அது மட்டுமல்ல அடுத்த இரண்டு நாட்களில் அவள் அதே போல என்னிடத்திலும் கருணை காட்டினாள்.

26 மே 1993, காலை 7.30

எனது ராணுவ உடையில் ஒட்டிக் கொண்டிருந்த இலைகளை உதறிவிட்டுவிட்டு, எனது கை, கால்களை மெல்ல நீட்டி மடக்கினேன். நீண்டநேரம் அப்படியே படுத்திருந்ததால் சதையில் பிடிப்பு ஏற்பட்டிருந்தது. அந்தக் காட்டில் அது ஒரு நீண்ட பலனில்லாத இரவாகக் கழிந்தது. போதமலையின் அடிவாரத்தில் ஒரு சிலர் நடமாட்டம் இருந்ததாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருந்தது. அதனால் நாங்கள் அந்த இரவு முழுவதும் அங்கு பதுங்கி இருந்தோம். ஆனால் எதுவுமே நடக்காமல் அந்த இரவு கடந்து விட்டது.

அடுத்த ஓரிரு நாளில், சென்னையில் எனது பணிக்கு நான் திரும்ப வேண்டியிருக்கிறது. எனது எண்ணத்தை எங்கள் வழிகாட்டிக் குழுவின் கான்ஸ்டபிள் சீமைச்சாமியின் குரல் குலைத்தது. “நாம் வெளியேற வேண்டும்” என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

அடுத்த சில நிமிடங்களில், நாங்கள் புறப்பட்டபோது, எனக்குப் பின்னால் வந்த காவலரின் விரைப்பான செயல்பாடு என்னை சங்கடப்படுத்தியது.

“என்ன?” என்று சைகை செய்தேன்.

அந்த நேரத்தில், ஒரு சத்தமும் கேட்டது.

‘நாய் குரைக்கும் சத்தம்தானே’ என்று அவரிடம் கேட்டதுதான் தாமதம்.

“மனிதர்கள் இல்லாத காட்டில் நாய் குரைக்குமா சார்... யாரோ இருக்கிறார்கள்” என்ற அடுத்த நிமிடம் துப்பாக்கி சுடும் சத்தம்.

அப்படியே கீழே விழுந்து படுத்துக்கொண்டோம்...

# 45 பேரும் கண்ணிவெடியில் ஓடினோம்... ஆனால்...?

கர்நாடக அதிரடிப்படையின் எஸ்.பி. கோபால் ஹோசூரை காப்பாற்றிய அதிர்ஷ்ட தேவதை என்னையும் காப்பாற்றினாள் என்று நினைக்கும் அந்த ஒவ்வொரு நிமிடமும் எனக்கு ஆங்கில த்ரில்லர் படக் காட்சிகள் வந்து நிற்கும்.

ஆம். போதை மலைப்பகுதியிலிருந்து, வழக்கமான எங்களின் சந்திப்பிடத்திற்குச் செல்வதற்கு கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் மலைப்பாதையில் நடந்தோம். சீமைச்சாமி முதல் ஆளாக எனக்கு முன்னே நடந்தார். மற்றவர்கள் அனைவரும் மூன்று படைப்பிரிவுகளாகப் பிரிந்தோம்.

காட்டு வழியே நடந்து சென்று கொண்டிருந்தபோது நான் சுற்றியுள்ள சூழ்நிலையைப் பார்த்தேன். நாங்கள் ஒரு அடர்ந்த காட்டுப்பகுதியில் இருந்தோம். எங்களுக்கு இடதுபுறத்தில் ஒரு ஆழமற்ற ஓடை இருந்தது. வலதுபுறத்தில் செங்குத்தான சரிவு ஒன்று இருந்தது. அது எனக்குக் கவலையை ஏற்படுத்தியது.

அதன் உச்சியில் யாரேனும் இருந்து, எங்கள் மீது தாக்குதல் நடத்தினால், அப்படி உயரத்தில் இருப்பது அவர்களுக்குச் சாதகமாக அமைந்துவிடும். எனது மனதிற்குள் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்த போதும், எனக்கு அடுத்து வந்தவர் விரைப்பாக வந்ததை கவனித்தேன். ஒரு குரைப்புச் சத்தம் கேட்டு அவரிடம் என்ன என்று கேட்டேன்.

“நாய்கள் குரைக்கிற சத்தம்தான்” என்றேன்.

“இந்த அடர்ந்த காட்டில் மனிதர்கள் யாராவது இல்லாமல் நாய்கள் இருக்க வாய்ப்பில்லை” என்று அவர் விளக்கினார்.

அந்த விளக்கம் எனக்கு ஒரு தெளிவைக் கொடுக்க, ஒரு சின்ன வெடிப்புச் சத்தத்தை நாங்கள் கேட்டோம். அனைவரும் உறைந்து போனோம். நான் சீமைச்சாமியைத் தேடினேன். ஆனால் அவரைப் பார்க்க முடியவில்லை. மரங்கள் மறைத்துக் கொண்டிருந்தன.

ஒரு ரைபில் சுடத் தொடங்கியது.

அனிச்சையாக தலையைத் தாழ்த்தி தரையில் விழுந்து படுத்துக்கொண்டோம். மற்ற பையன்களும் தரையில் படுத்துக்கொண்டனர். என்ன நடக்கிறது என்று எனது மூளை புரிந்து கொள்ள ஆரம்பித்த போதே ஒரு சிலர் தண்ணீருக்குள் தெறித்து ஓடும் சத்தத்தைக் கேட்டோம். சீமைச்சாமி உச்சகட்டக் குரலில் கத்தினார். அவர் அங்கு எதையோ பார்த்திருக்கிறார்.

“வாங்க” என்று கத்தியபடியே எழுந்து, அவரை நோக்கி ஓடினோம். நாங்கள் இப்போது தெளிவாகப் பார்க்க முடிந்தது. சீமைச்சாமி ஓடையின் ஓரத்தில் நின்று கொண்டிருந்தார். அந்தப் பகுதியைச் சுற்றிச் சுட்டுக் கொண்டிருந்தார்.

“நாங்கதான் உங்களுக்குப் பின்னாடி இருக்கிறோம்” என்று கத்தினேன். ஒருவர் வாழ்வா சாவா போராட்டத்தில் சுட்டுக் கொண்டிருக்கும் போது, நீங்கள் அவரைக் கலவரப்படுத்த விரும்ப மாட்டீர்கள்.

அவர் சுடுவதை நிறுத்திவிட்டு சுற்றும்முற்றும் பார்த்தார். அவரது அட்ரினிலின் சுரப்பி வேகமாக வேலை செய்ய இப்போதும் கண்கள் விரிய அவர் பார்த்துக் கொண்டிருந்தார். நாங்கள் அவருக்கு அருகே சென்றோம். ஓடையைக் கூர்ந்து பார்த்தோம். இலைகளும் கிளைகளும் இன்னும் அசைந்து கொண்டுதான் இருந்தன. யாரோ ஒருவன் அவைகளுக்கு இடையே ஓடியது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அவன் யார் என்று பார்க்க முடியவில்லை.

“என்ன நடந்துச்சு?”

சீமைச்சாமி தனது நெற்றியைத் துடைத்துக் கொண்டே, “நான் ‘புட்’டுன்னு ஒரு சத்தத்தைக் கேட்டேன். ஒரு மரத்துக்குப் பின்னால இருந்து யாரோ எழுந்ததையும் நடமாடியதையும் பார்த்தேன். நான் அவனைச் சுடப்பாத்தேன். அந்த அயோக்கியப் பய அங்கிட்டும் இங்கிட்டும் ஆட்டம் காட்டிட்டு தப்பிச்சிட்டான்” என்று சொன்னார்.

ஒரு சப்—இன்ஸ்பெக்டரைப் பார்த்து, “அவனத் துரத்திப் போங்க... ஆனா ரொம்ப தூரம் போயிட வேண்டாம். எங்கயும் மாட்டிக்காம எச்சரிக்கையா இருக்கணும்” என்று சொன்னேன்.

அப்படியே வெட்டவெளியைப் பார்த்தபடி, “இப்போ என்ன நடந்துச்சுன்னு” ஆச்சரியப்பட்டேன்.

ஒருவர் எனது தோளில் மெதுவாகத் தட்டி, “சார்... அங்க பாருங்க” என்று தரையில் முறுக்கிக் கிடந்த ஒரு வயரைக் காண்பித்தார். அந்த வயரைச் சுற்றி தரை கருகிப் போயிருந்தது. எச்சரிக்கையுடன் அந்த வயருக்கு அருகே சென்றேன். ஒரு வித்தியாசமான கருகிய நாற்றம் காற்றில் பரவி இருந்தது.

“கார்ட்டெக்ஸ்” (கண்ணிவெடி வகை) என்றபடி ஆழ்ந்த மூச்சு விட்டேன். “இது போல வேற ஏதாவது வயரு இருக்கான்னு பாருங்க. பார்த்து எச்சரிக்கையா இருக்கணும். திடீர்னு அசையக் கூடாது” என்றேன்.

கார்ட்டெக்ஸ் வயர் சுரங்கம் தோண்டப் பயன்படும் ஒரு வகை வெடிபொருள். இந்த வயர் வெடிப்பொருளுடன் இணைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடியை வெடிக்கச் செய்யும்போது, இந்த வயரும் எரிந்துகொண்டே 8 ஆயிரம் மீட்டர் வரையில் வெடிக்கும்.

மயிரிழையில் உயிர்தப்பிய நாள் அது. மரணத்தை இப்படி நெருங்கிப் பார்க்கும் விநாடிகள்தான், நெருக்கடி நிலைகளில் உங்களுடன் இருக்கும் உங்களின் குடும்பம், நண்பர்கள், ஆயுதம் தாங்கிய தோழர்கள் ஆகியோரின் மதிப்பை புரிய வைக்கும்.

அந்த இடத்தை மேலும் சோதனையிட்டதில், ஒரு நீளமான வயரைப் பார்த்தோம். அந்த வயர் மரங்களுக்கு இடையே சென்று வீரப்பன் ஆள் மறைந்திருந்த பகுதி வரைக்கும் சென்றது. ஒரு கண்ணிவெடிப் பகுதியில்தான் நாங்கள் நடந்திருக்கிறோம். அதன் நடுவில்தான் இருந்திருக்கிறோம்.

அங்கே பீடித்துண்டுகளும் காலி வேர்க்கடலைப் பாக்கெட்டுகளும் கிடந்தன. அந்த வயரின் முடிவில் ஒரு பேட்டரி கிடந்தது. யாரோ ஒருவர் எங்களுக்காக அங்கே காத்திருந்திருக்கிறார் என்பது தெளிவாகப் புரிந்தது.

அந்தப் பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு பலமணி நேரம் பிடித்தது. கிட்டத்தட்ட அந்தப் பகுதி முழுவதும் 450 கிலோ டைனமெட் ஜெல்லி மற்றும் அம்மோனியம் நைட்ரேட் குழி தோண்டி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டறிந்தோம். ஒவ்வொரு குழியும் வைரம் வடிவத்தில் தோண்டப்பட்டு கவனமாக மூடப்பட்டிருந்தது.

எங்களை அறியாமலேயே ஒரு மிகப்பெரிய படுகுழியான ரிஸ்க்கில் விழுந்திருக்கிறோம். எங்களில் யாரேனும் அந்த கண்ணிவெடியில் கால்வைத்து வெடித்துச் சிதறியிருந்தாலும், எங்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் படி, நாங்கள் உடனடியாக இடது அல்லது வலது பக்கமாக ஓடியிருப்போம். அப்போதும் அங்கிருக்கும் கண்ணிவெடியில் சிக்கியிருப்போம். அங்கே தோண்டப்பட்டிருந்த கண்ணிவெடிக் குழிகளின் எண்ணிக்கை நாற்பத்தி ஐந்து. எனது தலைமையின் கீழ் அன்று தேடுதல் வேட்டையில் இருந்த நபர்களின் எண்ணிக்கையும் அதே நாற்பத்தி ஐந்துதான். அது ஒரு வியக்கத்தக்க ஒற்றுமைதான்.

கார்ட்டெக்ஸ் வயரோடு இணைக்கப்பட்ட டிவைசை மிதிக்கும்போது வெடித்திருக்க வேண்டும். அதில்தான் நாங்கள் ஓடியிருக்கிறோம். ஆனால் ஏதோ காரணத்தால் அன்றைக்கு அந்த வயர் சரியாகச் செயல்படவில்லை.

எங்களை மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்த வீரப்பனின் ஆள், அந்த கண்ணிவெடியை வெடிக்கச் செய்ய முயற்சித்திருக்கிறான். ஆனால் வயர் வேலை செய்யாததால் அது அவனால் முடியாமல் போயிருக்கிறது.

மரணத்திற்கு அருகே சென்று தப்பித்து விட்டதை உணர்ந்த எனது குழுவினர் ஒருவரை ஒருவர் நிம்மதியுடனும் உற்சாகத்துடனும் கட்டிப்பிடித்துக் கொண்டனர். எனது கைகளைக் குலுக்கினர்.

'வனயுத்தத்தில் யாரும் நாத்திகனாக இருப்பதில்லை' என்ற கூற்று எவ்வளவு உண்மை என்பது எனக்கு அப்போது மிகத் தெளிவாக புரிந்தது.

எனது காவல்துறை வாழ்க்கையில் மயிரிழையில், நான் உயிர் தப்பியது இது முதல் முறையல்ல. ஆனால் வீரப்பனைப் பிடிப்பது ஒரு அச்சுறுத்தும் சவாலாகத்தான் இருக்கும் என்ற எனது நம்பிக்கையை மேலும் அது வலிமைப்படுத்தியது. ஆனால், அந்த கண்ணிவெடி சரியாக வேலை செய்திருந்தால், 45 பேரும் கருகி இருப்போம். அந்த அதிர்ஷ்ட தேவதைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டே முகாமிற்குத் திரும்பியபோது, 'முதல்வர் ஜெயலலிதா மெரீனாவில், காவிரி நீருக்காக உண்ணாவிரதம் இருக்கிறார். உடனே புறப்பட்டு வரவும்' என்ற தகவல் கிடைத்தது.

## “சவரப்பெட்டி ரூபத்தில் கிடைத்த சவப்பெட்டியை தொலைத்தோம்!”

முதலமைச்சரின் செயலாளர் கருப்பண்ணன் “காவிரி நீர் பிரச்சினைக்காக முதலமைச்சர் மெரீனா கடற்கரையில் உண்ணாவிரதம் இருக்கிறார். நீங்கள் உடனே திரும்பி வந்தால் நல்லது” என்று சொன்னார்.

காவிரி நீர் இரண்டு மாநிலங்களையும் பிராந்திய அடிப்படையிலும் உணர்வின் அடிப்படையிலும் பிரித்திருக்கிறது. ஆனால், அந்த ஆற்றுக்கு இருபுறமும் உள்ள எஸ்.டி.எஃப். படையினர் ஒன்றிணைந்து நின்ற அந்தக் காட்சிகள் மனத்தில் வந்து சென்றது. அதுமட்டுமா, நாங்கள் 45 பேர் மயிரிழையில் உயிர் தப்பியதை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

எங்கள் குழுவின் தேடுதல் வேட்டைக்கு ஒரு வாரத்திற்கு முன்புதான் வீரப்பன் அங்கிருந்திருக்கிறான் என்பதை பின்னர் அறிந்துகொண்டோம்.

எஸ்.டி.எஃப்.பில் சேர்ந்த அனுபவமற்ற இருவர், சின்னதண்டா கிராமம் அருகில் சந்தேகத்திற்குரிய ஒரு நபரைப் பார்த்தனர். அவனை விசாரித்து விட்டு பின்னர் அனுப்பிவிட்டனர். அவனது கையை அவர்கள் முகர்ந்து பார்த்திருந்தால், ஒரு நூறு மீட்டர் சுற்றளவில் தேடி இருந்தால் அனைத்து விஷயங்களுமே வேறு மாதிரி மாறியிருக்கும்.

அந்த சோப்பு வாசனையும் ஒரு சவரப் பெட்டியும் ஒரு தேடுதல் வேட்டைக்கு வழிநடத்தி இருக்கும். வீரப்பனுக்கும் அவனது மிக முக்கியக் கூட்டாளிகளுக்கும் முகத்தில் மண்டிக்கிடந்த ஒரு வார தாடியை சவரம் செய்தது அந்தக் கைகள்தான். அவன் அந்த கேங்குக்கான பார்பர். அந்த

பார்பர், புதரில் மறைத்து வைத்திருந்த சவரப்பெட்டியை வைத்து, அவனை தீர விசாரித்து இருந்தால், வீரப்பனின் மரணக்குழியாக அப்போதே அந்தக் காடு மாறியிருக்கும். ஒரு சவரப்பெட்டி மூலம், வீரப்பனின் சவப்பெட்டி தயாராகி இருக்கும். அத்தனையும் கோட்டைவிட்டோம். அந்த சிறிய துப்பு, சரியான அதிகாரிகளிடம் கிடைத்திருந்தால்.

அதிரடிப்படையில் மீண்டும் நான் இணைந்து, வீரப்பனை வதம் செய்வதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே எல்லாமே நடந்து முடிந்திருக்கும்.

ஆகஸ்ட் 2001

முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து வந்த அழைப்புக்குப் பிறகு மீண்டும் சிறப்பு அதிரடிப்படையில் சேர்ந்த சில வாரங்களில், கர்நாடக பீடபூமியின் தென் கோடியில் அமைந்துள்ள ஆசனூர் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன்.

இந்த பிராந்தியத்தில் வீரப்பன் தாக்குதல் அல்லது படுகொலைகளை நிகழ்த்திய ஒவ்வொரு பகுதியையும் வேவு பார்ப்பது எனது திட்டமாக இருந்தது. அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்க்கும்போது, சம்பந்தப்பட்ட சம்பவங்கள் குறித்த தகவல் அறிக்கைகள் மற்றும் விசாரணை குறித்து நிறையப் படிக்க விரும்பினேன். ஆனால் அது பரிதாபகரமாகத் தோல்வி அடைந்தது.

விறுவிறுப்பான வாசிப்பாக இருந்திருக்க வேண்டிய அது நம்பமுடியாத அளவுக்கு அர்த்தம் தெரிந்து கொள்ளவே கடினமாக இருந்தது. காரணம் அவை கோழி கிறுக்கியதை போல இருந்தன. வெறுத்துப்போன நான், அருகில் நின்றிருந்த எழுத்தரையும் இன்ஸ்பெக்டர் மோகன் நவாஸையும் பார்த்தேன்.

நவாஸ், தேடுதல் வேட்டை பற்றி எழுதுவதைக் காட்டிலும் அதில் ஈடுபடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது. மோகன் நவாஸ் எஸ்.டி.எஃப்.பின் ஒரு முக்கியமான நபர், மேலும்

உள்ளூர் இன்ஸ்பெக்டர். அவரது கட்டுப்பாட்டிற்குக் கீழ் கிட்டத்தட்ட 30 கிராமங்கள் வரை இருந்தன. கர்நாடக அதிரடிப்படையில் இருந்த ஷகில் அகமதுவைப் போலவே வீரப்பனைப் பிடிக்கும் வரையில் திருமணம் செய்து கொள்வதில்லை என்று உறுதி எடுத்திருந்தார்.

உள்ளூர் கிராமவாசிகளுக்கு நவாஸை பிடிக்கும். நவாஸ் அவரது குறைந்த வருமானத்தில்கூட கிராமவாசிகளின் நலனுக்காகச் செலவு செய்பவர். ஆசனூரில் சுமார் பத்து வருடங்கள் பணியாற்றியதன் விளைவாக நம்பகமான ரகசிய இன்ஃபார்மர் நெட்வொர்க் ஒன்றை அவர் உருவாக்கி இருந்தார்.

நவாஸின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியில் பழக்கமில்லாத நிலப்பரப்பும் சாலை வசதியும் முக்கியமான பிரச்சினையாக இருந்தது. கிராம மக்களை ஒருங்கிணைத்து அந்தப் பகுதியில் சாலை அமைத்தார். அது அவரது பிரபலத்தை மேலும் அதிகரித்தது.

வீரப்பன் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு என்ன என்பது குறித்து, நவாஸூடன் விவாதித்தபோது, ஒருவர் வாசலை நோக்கி வந்தார்.

நவாஸ் என்னிடம் ‘எக்ஸ்க்யூஸ்’ கேட்டுக் கொண்டு மோசமான ஆடையணிந்திருந்த அவரிடம் சென்று சிறிது நேரம் பேசினார்.

“சார் ஜடையன்! நீங்க இங்கே இருக்கிறீங்கன்னு தெரிஞ்சுகிட்டு, உங்களுக்கு மரியாதை செலுத்த விரும்புகிறார்” நவாஸ் திரும்பி என்னை நோக்கி வந்தபடியே சொன்னார்.99

‘ஜடையன்?’ எனது புருவங்கள் மேல் நோக்கி உயர்ந்தன. “1993—ல் வீரப்பன் கேங்கிற்கு ஒரு பெரிய சேதாரத்தை ஏற்படுத்துவதற்கு உதவும் ஒரு துப்புக் கொடுத்தவர்தானே?” என்று கேட்டேன்.

எனது கள அறிவுக்கு நவாஸ் ஒப்புதல் கொடுத்தார். “ஆமா சார். அவரேதான். அவரோட தோற்றம்தான் மாறி இருக்கு” என்றார்.

செப்டம்பர் 1993.

ஆசனூர் போலீஸ் ஸ்டேஷனில் இருந்து கல்லெறி தூரத்தில் இருந்த எஸ்.டி.எஃப். கேம்ப் வெளியே இருந்த காவலர் எரிச்சலோடு நின்றுகொண்டிருந்தார். காரணம், தெரு நாய்கள் கேம்ப்பைச் சுற்றி குரைத்துக் கொண்டிருந்ததால். அந்த நேரம் பார்த்து, பல நாள் குளிக்காதவர் போலத் தோற்றமளித்த ஒரு மனிதர் வந்தார். தனது கையில் ஒன்றும் இல்லை என்பதை தெரியப்படுத்துவதில் அவர் கவனமாக இருந்தார்.

"உனக்கு என்ன வேணும்?" என்று உறுமினார் காவலர்.

"மோகன் நவாஸ் சாரைப் பாக்க வந்திருக்கேன்" என்றார் அவர்.

"சார், இப்ப இங்க இல்ல."

வந்தவர் அலட்சியமாக, "நான் காத்திருக்கேன். நான் சொல்ல வந்த விஷயத்தை அவர்கிட்ட மட்டும்தான் சொல்லணும்" என்றார்.

"தொலைஞ்சு போடா... இங்கயே சுத்திக்கிட்டுத் திரியாத" என்று காவல்காரர் வெறுப்பை உமிழ்ந்தார்.

அந்த அந்நியர் அங்கிருந்து சென்றுவிட்டார். அடுத்த நாள் நவாஸ் கேம்ப்புக்குள் நுழைந்தபோது, அதே மனிதர் மறைவிடத்தில் இருந்து வெளியே வந்து அவரை நோக்கி நடந்தார்.

"மறுபடியும் வந்துட்டியா? நான் ஒன்னைப் போகச் சொன்னேன்" என்று ஆத்திரத்துடன் பாய்ந்து சுட தயாராகிவிட்டார் அந்த கேம்ப் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த காவலர். "பொறு. அவரை எனக்குத் தெரியும்" என நவாஸ் இடைமறித்தார்.

அவரது தோற்றம் வேறுமாதிரி போல இருந்தாலும், ஜடையன் சோலிகா பழங்குடியினரைக் கொண்ட கெடாசல் கிராமத்தின் தலைவர். பக்கத்தில் இருந்த மற்ற முப்பது கிராமங்களில் அவர்களின் சொந்த பந்தங்கள் இருந்தனர். அந்தப் பகுதியில் ஜடையனுக்கு தெரியாமல் எதுவும் நடக்காது. "நீ ஏதாவது சொல்லணுமா?" என்று கேட்டார் நவாஸ்.

‘ஆம்’ என்று தலையசைத்த அவர் வாயிலிருந்து வார்த்தைகள் அவசரமாக தடுமாற்றத்துடன் வெளியே வந்தன. “அய்யா... அந்தக் காட்டுல... நிறைய... நிறைய...”

“என்ன?” நவாஸ் கடுப்புடன் கேட்டார்.

“மனுஷ மலம்” என்றார் ஜடையன்.100

நவாஸ் முகத்தை சுழித்தார்.

“ஆனா அது எங்க ஆட்களோடது இல்ல. வெளியாட்களோடது. அரிசி சாப்டுறவங்களோடது. அந்த மலம் காப்பிக் கலர்ல இல்லாம மஞ்சளா இருக்கு. எங்க பசங்கள நெறயப் பேர அங்க அனுப்பிப் பாத்தேன். அங்க கூரை போட்டு குழந்தைகள் உட்பட நிறைய மனிதர்கள் தங்கியிருக்கிறதை அவங்க பார்த்தாங்க. அவங்கதான் நீங்க தேடிக்கிட்டு இருக்கிறவங்களா இருக்கணும்” என்றார் ஜடையன்.

நவாஸ் சிந்தித்தவாறே தனது தலையைச் சொறிந்தார். உள்ளூர் ஆட்கள் ராகியும் தானியங்களும்தான் சாப்பிடுவார்கள். அவர்களின் மலம் கருப்பாகத்தான் இருக்கும். ஜடையன் சொல்லும் ஆட்கள் நிச்சயமாக வெளி ஆட்களாகத்தான் இருக்கும் என்று கருதினார் நவாஸ்.

# நடுக்காட்டில் தப்பி ஓடிய முத்துலட்சுமி சிக்கியது எப்படி?

கெடாசல் கிராமத்தின் சோலிகா பழங்குடியினத்தைச் சேர்ந்த தலைவன் ஜடையன் சொன்ன தகவலை கேட்டதும் நவாஸ் சிறிது யோசிக்கத் தொடங்கினார்.

“நல்லது. சோதித்துப் பார்ப்போம்” என்று நவாஸ் சொன்னார். அவரது அலுவலகமும் வீடுமான ஒற்றைத் தனி அறைக்கு விரைவதற்கு முன் அவரது பாஸ் சஞ்சய் அரோராவிடம் தகவல் சொன்னார். வீரப்பனின் பதுங்குமிடத்தில் கடைசியாக இவர் நடத்திய தேடுதல் வேட்டை அவன் தப்பித்துப் போனதால் தோல்வியில் முடிந்திருந்தது.

சஞ்சய் வெற்றியை இருமடங்கு உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பி, வால்டர் மற்றும் சங்கர் பிதாரியையும் இதில் இணைத்துக் கொண்டார். இந்தச் செயல்பாட்டில் கர்நாடக எஸ்.டி.எஃப். மற்றும் எல்லைப்பாதுகாப்புப் படையும் (மத்தியில் இருந்து கர்நாடகத்திற்கு இரவலாக வந்தது) இறங்கியது.

அடுத்த நாள் காலையில், கணிசமான ஆட்களைக் கொண்ட குழு ஒன்று ‘பாரத் மாதா கீ ஜே’ என பெரும் ஆர்வத்துடன் குரல் எழுப்பியது. பின்னர் காலை உணவருந்தினர். ஒரு சில இட்லிகளைச் சாப்பிடுவதற்காக சில நிமிடங்கள் மட்டுமே அவர்கள் இளைப்பாறினர்.

ஒருமுறை யாரோ ஒருவர் சொன்னார்.

“ஒரு காட்டில் போராடும் போராளியும்... ஒரு கவிஞரைப் போல. இலைகளின் சலசலப்பையும் கிளைகள் முறிவதையும் ஆற்றின் சலசலப்பையும்

கூர்ந்து கவனிப்பார்."

ஒவ்வொரு எஸ்.டி.எ.ஃப். வீரனும் இப்போது ஒரு கவிஞன்தான். அவனது இயக்கங்கள் மிகுந்த நுட்பமாகியிருக்கின்றன. அவனது கண்களும் காதுகளும் விரியத் திறந்து இருக்கின்றன.

படையினர் மூன்று பிரிவாக அணிவகுத்தனர். அது மூன்று நீளமான பாம்புகள் மலையின் மீது சறுக்கிச் செல்வதைப் போலத் தோற்றமளித்தது. மாலைக்குள், அவர்கள் வெவ்வேறு வழிகளில் பயணித்து அந்த கேம்ப் இருக்கும் இடத்தில் ஒருங்கிணைய வேண்டும். எனினும் மற்ற இரு குழுவினருக்கு முன்னால் அரோரா குழு, கேம்ப்பை சென்றடைந்தது.

அரோரா குழுவில் உள்ள படை வீரர்கள் மெல்லச் சென்று, அடர்ந்த காட்டுக்குள் இருந்த அந்தக் கேம்ப்பைக் கண்டுபிடித்தனர். மார்பு வரை வளர்ந்திருந்த புற்களால் அந்த இடத்திற்குச் செல்லும் பாதை அடைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு காவலர், சத்தமில்லாமல் புல்லை விலக்கிக் கூர்ந்து பார்த்த போது கண்ணில் பட்ட அந்தக் காட்சி அவரைத் திகைக்கச் செய்தது.

ஒரு டஜன் அல்லது அதற்கும் மேற்பட்ட குடிசைகள் அங்கு இருந்தன. பெண்கள் அவர்களின் வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். குழந்தைகள் வெளியில் விளையாடிக் கொண்டிருந்தனர். ஆண்கள் மரத்துண்டுகளை வெட்டிக் கொண்டும் தங்களது துப்பாக்கிகளைத் துடைத்துக் கொண்டும் இருந்தனர்.

அக்காவலர், வேகமாக பின்பக்கமாக நகர்ந்து அரோராவிடம் அங்கு பார்க்கும் படி சைகை செய்தார். அரோரா தனது பைனாக்குலரை உயர்த்தினார். 300 மீட்டருக்கு அப்பால் இருந்தும் அந்த முகாமை அவரால் பார்க்க முடிந்தது. அந்தக் கேம்ப்பில் இருந்து வெளியான சத்தத்தில் இருந்து, ஒரு சில பெண்கள் தானியங்களை அரைத்துக் கொண்டிருந்தது தெளிவாகத் தெரிந்தது.

வேறு சில பெண்கள் மசாலா அரைத்துக் கொண்டிருந்தனர். ஏதேனும் ஆபத்து வரும் என்ற எதிர்பார்ப்பு எதுவுமின்றி அவர்கள் இயல்பாக இருந்ததற்கான ஆதாரமாகவும் அந்தக் காட்சிகள் இருந்தன. ஒருவன் மட்டமான ஒரு பாறையில் அமர்ந்தபடி தனது துப்பாக்கியைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்ததையும் அவனுக்கு அருகில் இருந்த மற்றொருவன் அவனுக்கு உதவி செய்து கொண்டிருந்ததையும் அரோரா பார்த்தார்.

“காலாட்படை சிப்பாய்கள் இருக்கிறார்கள். ஜெனரல்களைக் காணோமே?” என்ற கேள்வியோடு ஏதேனும் தெரிந்த முகங்கள் இருக்கிறதா என்று கேம்ப்பைக் கண்காணித்தார் சஞ்சய்.

அப்போதுதான் ஒரு துரதிர்ஷ்டம் நடந்தது. பி.எஸ்.எப். வீரர் ஒருவரின் பக்கத்தில் இருந்த புதரில் இருந்து மலை ஆடு குதித்து வெளியே வந்தது. கலவரமடைந்த அவர், அவர்கள் அனைவருக்கும் உணவு வைத்திருந்த அலுமினியப் பாத்திரத்தை கைதவறி கீழே போட்டுவிட்டார். அதோடு, ஏதோ மூர்க்கமான மிருகம் தன்னைத் தாக்க வருகிறது என்று நினைத்துக்கொண்டு கத்திவிட்டார்.

அவரது டீமில் இருந்த மற்றவர்கள் அவர்கள் ஏற்கனவே பதற்றத்தில் இருந்தனர் — துப்பாக்கி எடுத்துச் சுடத் தொடங்கினர். இத்தனைக்கும் அவர்கள் உரிய பொசிஷனில் நின்றிருக்கக்கூட இல்லை. அமளி உருவானது. கேம்ப்பில் இருந்த ஒவ்வொருவரும் அவசர அவசரமாக ஓடினர்.

கேம்ப்பில் இருந்த வீரப்பனின் தம்பி அர்ஜுனன், அவனது அண்ணி முத்துலட்சுமியைப் பிடித்து இழுத்துக் கொண்டு காட்டுக்குள் ஓடினான். அந்த நேரத்தில், வீரப்பன் கோபிநத்தம் அருகே பணம் பெறுவதற்காக ஒரு ரகசிய இடத்திற்குச் சென்றிருந்தான். பணம் பெறுவதற்கென்றே அவன் வைத்திருந்த ரகசிய இடங்களில் ஒன்று அது. (நாங்கள் அதை அவனது காட்டு ஏ.டி.எம். என்று விளையாட்டாகப் பேசிக் கொள்வோம்)

அந்த பரபரப்பான கணத்தில் அர்ஜுனனும் முத்துலட்சுமியும் ஒருவரை ஒருவர் பிரிந்தனர். முத்துலட்சுமி தன்னைத் தற்காத்துக் கொள்ள

போலீசிடமிருந்து தப்பி ஓடினார்.

அடுத்த நாள் காலையில், வயதான ஐந்து பேரைச் சந்தித்த அவள், தனக்கு உதவுமாறு கெஞ்சினார். அவர்கள் முத்துலட்சுமியை அங்கிருந்த ஒரு குன்றில் ஒளிந்து கொள்ளச் சொல்லிவிட்டு, பிறகு வருகிறோம் என்று உறுதி அளித்துவிட்டுச் சென்றனர். அந்த நேரத்தில் யாராவது சந்தேகத்திற்குரிய நபர்கள் அந்தப் பகுதியில் தெரிந்தால் உடனடியாக எஸ்.டி.எஃப். படைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்ற அறிவிப்பு ஏற்கனவே பரவி இருந்தது.

அந்த ஐந்து பேரும் திரும்பி வந்த போது போலீசுடன் வந்தனர்.

முத்துலட்சுமி கைது செய்யப்பட்டு கர்நாடக எஸ்.டி.எஃப். கேம்ப்புக்கு கொண்டு செல்லப்பட்டார். அந்தத் தேடுதல் வேட்டையின் போது என்ன நடந்தது என்பதை முத்துலட்சுமி சொன்னார். பின்னாளில், தன்னை போலீசார் சித்ரவதை செய்தனர் என குற்றம்சாட்டினார் முத்துலட்சுமி.

மொத்தத்தில் வீரப்பனுக்கு மிகப்பெரிய இழப்புகளை ஏற்படுத்திய அது ஒரு வெற்றிகரமான வேட்டைதான். கர்நாடகாவில் இருந்த எனது சக அதிகாரிகளிடமிருந்து வந்த தகவல்கள், வீரப்பனின் கேங் சிதறிவிட்டது என்று தெரிவித்தன.

வீரப்பன் ஒன்றுக்கு மேற்பட்ட இழப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. முத்துலட்சுமி மட்டுமல்ல அவனது நம்பிக்கைக்குரிய கூட்டாளிகள் மாரியப்பன், என்.எஸ்.மணி ஆகியோரையும் அவன் இழந்திருந்தான். அந்த வேட்டை ஆரம்பித்த ஒரு சில நாட்களில் அவர்கள் இருவரும் தமிழக எல்லைக்குள் நுழைந்த கர்நாடக எஸ்.டி.எஃப். உடன் நடந்த மோதலில் கொல்லப்பட்டனர்.

வீரப்பனுக்கு இது ஒரு மிகப்பெரிய சேதாரம். அந்த வேட்டைக்குப் பிறகு, வீரப்பனால் அவனது தலைமையின் கீழ் அந்த அளவுக்கு மிகப்பெரிய எண்ணிக்கையில் ஆட்களைத் திரட்டவே முடியவில்லை. அவனது கட்டளைக்குக் கீழ் நூறு பேர் இருந்த நிலை மாறி தற்போது ஒரு நேரத்தில் வெறும் பத்திலிருந்து பதினைந்து பேருக்கு மட்டுமே தலைமை தாங்கும்

நிலைக்கு இறங்கிவிட்டான். முத்துலட்சுமி சிறையில் அடைக்கப்பட்டது வேறு அவனது நிம்மதி இழப்புக்கு மிகப்பெரிய காரணமாக இருந்தது. அவளது பாதுகாப்பு குறித்த பயம் மட்டுமல்ல. விசாரணையின் போது அவளை அறியாமலே தகவல்களை சொல்லிவிடக்கூடும் என்ற பயமும் இருந்தது.

தனது கும்பல் பதுங்கி இருந்த இடத்தை காட்டிக் கொடுத்தவர்களையும், அன்பு மனைவி முத்துலட்சுமியை போலீஸ் வசம் சிக்க வைத்தவர்களையும் சும்மா விடக்கூடாது என்று முடிவெடுத்தான். அதற்காக, அவன் கெடாசல் கிராமத்தில் நுழைந்தான். இம்முறை அவனது கும்பல் துப்பாக்கிகளைப் பயன்படுத்தாமல், வெட்டுக்கத்தியும் கொள்ளிக்கட்டையும்...

அந்த கொடூரம்...?

## சுட்டான்...! கழுத்தை வெட்டினான்...! எரித்தான்...?

“போலீசில் போட்டுக் கொடுப்பவர்களை நான் கண்டுபிடிக்க வேண்டும். அவர்களை தீர்த்துக் கட்ட வேண்டும். என்னோடு மோதுபவர்கள் அதற்குரிய மிகப்பெரிய விலையைக் கொடுக்காமல் மோத முடியாது என்று அனைவருக்கும் நினைவுபடுத்த வேண்டும்” என்ற எண்ணம் அவனுக்குள் ஓடிக்கொண்டிருந்தது.

அக்டோபர் 1994

அவனது கேம்ப்பில் தேடுதல் வேட்டை நடந்து கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்குப் பிறகு, கெடாசல் அருகே உள்ள பகுதிக்கு வீரப்பனும் அவனது ஆட்களும் மீண்டும் திரும்பினர். மலைமீது தங்களுக்கு சாதகமான இடத்தில் இருந்தவாறு, அமைதியான அந்த கிராமத்தைக் கவனித்தனர். அங்கே ஒரு முதியவர், தனது பேரனுடன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார்.

அடையாளம் தெரியாத அந்நியர்களான அவர்களைப் பார்த்ததும், அந்த முதியவர் அங்கிருந்து தப்பித்து ஓட முயற்சித்தார். ஆனால் வீரப்பனின் ஆட்கள் சுற்றி வளைத்ததில், அவர் சரணடைந்து விட்டார். “உங்க கிராமத்துல ஒரு சிலர் போலீசுகிட்ட பேசிக்கிட்டு இருக்காங்க. அவங்க பேரெல்லாம் எனக்கு வேணுமே” என்று வீரப்பன் கேட்டான்.

“எனக்கு எதுவும் தெரியாதுங்க. நான் வெறும் ஆடு மேய்க்கிறவன். தயவுசெஞ்சு என்னைய விட்டுடுங்க” அந்த முதியவர் கெஞ்சினார்.

“கவனிக்க வேண்டிய விதத்துல கவனிச்சா, ஒருவேள ஒனக்கு எல்லாம் நினைவுக்கு வருதா பார்ப்போம்” என்றான் வீரப்பன்.

அந்த ஆடு மேய்ப்பவர் சித்திரவதையால் நொறுங்கினார். அதுவே அவர் ரகசியத்தை வெளிப்படுத்தப் போதுமானதாக இருந்தது. ஜடையன் மற்றும் ஐந்து பேர் நவாஸின் இன்ஃபார்மர்கள் என்ற சந்தேகம் இருப்பதாக அவர் உடனடியாகச் சொல்லி விட்டார்.

“பாருங்க.. இது ஒண்ணும் பெரிய கஷ்டமில்ல. இல்லையா?” என்று புன்னகைத்த வீரப்பன், தனது ஆட்களின் பக்கம் திரும்பி, “மதியச் சாப்பாடு சாப்பிடுங்க. அதுக்குப் பிறகு அந்த கிராமத்துக்குப் போறோம்” என்றான்.106

அவர்கள் தயாராவதற்கு முன்பே, கிராமத்தினரை எச்சரிக்க விரும்பிய முதியவர், வலுக்கட்டாயமாகத் தப்பிக்க முயன்றார். ஆனால் அவர் அதிக தூரம் செல்வதற்கு முன்பே சுட்டு வீழ்த்தப்பட்டார். அதன்பிறகு வீரப்பனின் ஆட்கள் அமைதியாக தங்களின் உணவைத் தயார் செய்தனர். சாப்பிட ஆரம்பித்தனர். தனது தாத்தாவின் உடல் அருகே அதிர்ச்சியில் உறைந்து போய் நின்ற சிறுவனையும் சாப்பிடச் சொல்லிக் கட்டாயப்படுத்தி இருக்கிறார்கள். இந்த தகவலை பின்னாளில் அந்தச் சிறுவன் போலீசிடம் சொன்னான்.

“நாங்க கிராமத்துக்கு வரும்போது வாய மூடிக்கிட்டு இருக்கணும். இல்லைன்னா உங்க தாத்தா போன இடத்துக்கே உன்னையும் அனுப்பி வச்சுடுவேன்” என்று வீரப்பன் அந்தச் சிறுவனை எச்சரித்தான்.

அந்திப் பொழுது கிராமத்தின் மீது படர்ந்த நிலையில், வீரப்பன் கும்பல் கெடாசலுக்குள் புகுந்தது. “போலீஸ்” என்று தங்களை அறிமுகப்படுத்திக்கொண்ட அர்ஜுனன், “எங்களுக்கு இந்த ஆட்களை எல்லாம் பார்க்க வேண்டி இருக்கிறது” என்று அந்த முதியவர் கொடுத்த பட்டியலைச் சொன்னான்.

அந்த மங்கிய வெளிச்சத்தில் அவர்கள் யூனிபார்ம் அணிந்திருக்கின்றனர் என்பதையும் கையில் ஆயுதம் வைத்திருக்கிறார்கள் என்பதையும் மட்டும்தான் பார்க்க முடிந்தது. அவர்கள் சொன்ன பொய்யை உண்மை என்று நம்பி, அந்தப் பட்டியலில் இருந்தவர்கள் ஆவலுடன் முன்னே வந்து நின்றனர். ஆனால் ஒருவர் மட்டும் இல்லை.

"ஜடையன் எங்கே?" அர்ஜுனன் கேட்டான்.

"இங்க இல்ல" என்று பதில் வந்தது.

நல்லவேளை அன்று பார்த்து, ஜடையன், மோகன் நவாஸை சந்திக்கப் போயிருந்தார்.

அன்று நடந்ததை கண்ணால் பார்த்த சாட்சிகள், "அர்ஜுனன் தனது சகோதரனைப் பார்த்தான். வீரப்பன் தோள்களைக் குலுக்கியபடி, தலையை ஆட்டி ஒப்புதல் கொடுத்தான். உடனடியாக வீரப்பன் ஆட்கள் செயலில் இறங்கினர். குழப்பத்தில் இருந்த அந்த கிராமத்து மனிதர்களைப் பிடித்து கிராமத்து மத்தியில் கட்டி வைத்தனர்" என்று கூறினர்.

"என்ன செய்றீங்க? நாங்க ஒங்க ஆளுங்கதானே. வீரப்பன எதிர்த்து எப்போதும் உங்களுக்குத்தானே நாங்க உதவி செய்றோம்" என்று அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர் சோகத்துடன் சொன்னார்.

"ஓகோ... நீங்களா...? நீங்களா செய்றீங்களா?" வீரப்பன் ஆத்திரத்தில் உறுமினான். கன்னடத்திலும் தெலுங்கிலும் மாறி மாறி கெட்ட வார்த்தையில் திட்டினான். நான் வீரப்பன்டா. நீங்க பணத்துக்காக உங்க அம்மாவக் கூடக் கூட்டிக் கொடுப்பீங்கடா. துரோகிகளே, எஸ்.டி.எஃப். ஆட்கள் எவ்வளவுடா கொடுத்தானுங்க? நான் உங்களுக்கு அதைவிட அதிகமா கொடுத்திருப்பேன். எஸ்.டி.எஃப்.—க்கு யார் உதவி செஞ்சாலும் அவங்கள நான் கொன்னுடுவேன். இது ஒரு பாடமா இருக்கணும்" என்று உறுமினான்.107

இச்சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சிகள், "வீரப்பன் சைகை காட்ட, அவர்கள் அனைவரையும் வீரப்பன் ஆட்கள் சுட்டனர். பின்னர் அவர்களது

கழுத்தை அரிவாளால் வெட்டினர். பின்னர் அவர்களின் வீடுகளுக்கு தீவைத்து எரித்தனர்'' எனக் கூறியதாக போலீஸ் ஆவணங்களில் உள்ளது.

கருப்புசாமி தலைமையில் எஸ்.டி.எஃப். குழு ஒன்று சில மணி நேரங்களுக்குப் பிறகு அந்த இடத்திற்கு வந்து அந்த ஐந்து பேரைப் பார்த்தபோது, அதிசயமாக ஒருவருக்கு மட்டும் உயிர் இருந்தது. அவர் பெயர் ராமன். துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும்கூட உயிரோடு இருந்தது மட்டுமல்ல. எஸ்.டி.எஃப். ஆட்கள் அங்கு வரும் வரையில் பல மணி நேரங்களாக உடலில் இருந்து ரத்தம் வெளியேறியபடி அவர் அங்கேயே கிடந்திருக்கிறார். அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கெடாசல் கிராமம் ஊடகங்களை ஈர்க்கும் காந்தமாகி விட்டது. அங்கே அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த உயிரோடு இருப்பவர்களின் பயங்கரமான அனுபவங்களை ஊடகங்கள் மறுபடி மறுபடி தூண்டி வெளியே கொண்டு வந்தன. இருபது வருடங்கள் கடந்த பிறகும் ராமன் உயிரோடு இருந்தார். அவரது தொடை, முகம் மற்றும் கழுத்தில் இருந்த வடுக்கள் அக்டோபர் 8—ம் தேதி நடந்த அந்தப் படுகொலையை நினைவுபடுத்திக் கொண்டிருந்தன.

அதிர்ச்சியில் உறைந்திருந்த கிராமத்து மக்கள், இறந்து போனவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர். அப்போது அவர்களில் ஒருவர், கண்ணீர் விட்டபடி, ''தெய்வம் எங்களைக் கைவிட்டுடுச்சு. எங்க கிராமத்து தெய்வம் ஜடையசாமி கோயிலைப் பூட்டி வைக்கணும். எப்ப நீதி கெடைக்குதோ அப்பத்தான் கோயிலை மறுபடியும் தொறக்கணும்'' என்றார்.

2001 ஜுலையில் ஆசனூருக்குப் போகும் வழியில் நவாஸை நான் சந்தித்தபோது, கெடாசல் கிராமத்தை அவரோடு சேர்ந்து போய்ப் பார்த்தேன்.

பூட்டிக் கிடந்த கோயிலின் கதவுகள் அமைதியாக என்னை உறுத்தியது. ''ஒரு நாள், இந்தக் கோயில் மறுபடியும் திறக்கும். நான் இங்கு வந்து பிரார்த்தனை செய்வேன்'' என்று எனக்குள் சபதம் எடுத்துக் கொண்டேன்.

இதன்பிறகு, தட்டக்கரை என்ற இடத்துக்குச் சென்றோம். அங்கே எஸ்.டி.எஃப். அமைத்திருந்த கல்வெட்டுகளில் 44 காவல் மற்றும் வன ஊழியர்களின் பெயர்களையும் பார்த்தேன்.

மனதை பாறாங்கல் அழுத்தியது போல கனத்த உணர்வு.

வீரப்பனின் நேரடித் தாக்குதலில் இறந்த முதல் பலி...

எனக்குள் சொல்ல முடியாத அந்த வலி...

(தொடரும்)

## திம்பம் காட்டில் ஏற்பட்ட திருப்புமுனை!

கொடாசல் கிராமத்தில் பூட்டப்பட்டிருந்த கோயிலைப் பார்த்த பிறகு தட்டக்கரை என்ற இடத்தில் இருந்த எஸ்.டி.எஃப். நினைவிடத்துக்குச் சென்றோம்.

அங்கே கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருந்த அனைத்து தியாகிகளின் பெயர்களையும் பார்த்தேன். எனது சக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் தியாகத்தை நினைவுபடுத்தும் கம்பீரமான கல்வெட்டு அது. அதன் எளிமை அதன் பெருமையை மேலும் பறைசாற்றியது.

நான் அங்கிருந்து திரும்பியபோது, நினைவிடத்திற்கு அருகில் இருந்த மண்ணை குனிந்து தொட்டேன்.

ஒரு சில நாட்களுக்குப் பின்னர், நான் கோவையில் உள்ள சஞ்சய் அரோராவை சந்தித்தேன். அங்கு அவர் கமிஷனராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார். நான் நினைவிடத்திற்குச் சென்றதை குறிப்பிட்டு, ‘‘நாம் நல்ல சகாக்கள் சிலரை இழந்து விட்டோம்’’ என்றேன். எனது மனம் கனத்துக் கிடந்ததையும் அவரிடம் கூறினேன்.

‘‘நிறையப் பேரை இழந்திருக்கிறோம். அந்த முதல் இழப்பு நேற்றுதான் நடந்ததைப் போல இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது. சொர்க்கத்தில் நடந்த தேடுதல் வேட்டையின்போது நானும் இருந்தேன் என்பது இன்னும் கொடுமை’’ என்றார் அரோரா.

‘‘அந்த முரண்பாட்டைப் பற்றிச் சொல்லுங்கள்...’’

“அந்த இடத்தைப் பற்றி எனது டீமிடம் சொன்னபோது, டீமில் இருந்த ஒருவர், வானத்தை நோக்கி விரலை நீட்டி, “நான் சொர்க்கத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறேன்” என்று கூறியது விசித்திரமாக இருந்தது. அது அவருடைய மரண அறிவிப்பாக மாற இருந்தது. அன்று அவர்தான் முதலில் வீழ்ந்தார்.

அந்த மனிதர் எஸ்.ஐ. செந்தில்.

குழுவில் அனைவரோடும் இணைந்து செயல்படும் நபர் அவர். அவரின் வீரம் மட்டுமின்றி தனித்தன்மையான ஒரு சுபாவத்திற்காகவே எப்போதும் நினைவு கூரப்பட்டவர். காட்டில் ஒரு நாள் முழுவதும் நடக்கும் வீணான தேடுதல் வேட்டை முடிந்ததும், உயரமான ஒரு பாறையின் மீது ஏறி நின்று கொண்டு, “வீரப்பா... நீ எங்க இருக்க? நான் உனக்காகவே வந்திருக்கேன்” என்று உரக்கக் கத்துவார்.

செப்டம்பர் 1994!

அந்த இன்ஃபார்மர் திம்பத்தில் உள்ள கர்நாடக எஸ்.டி.எஃப். முகாமில் ஒரு தகவல் சொன்னார். அது தமிழக எல்லைக்குள் இருந்தாலும் சங்கர் பிதாரியின் இரண்டாவது தலைமையிடமாக இருந்தது. அந்த இன்ஃபார்மர் கொண்டு வந்த செய்தி உடனடியாக அதிகாரிகளின் கவனத்தைப் பெற்றது.

“நாங்கள் கட மான் வேட்டைக்காக சொர்க்கம் பள்ளத்தாக்குக்குச் சென்றிருந்தோம். அங்கு வந்த ஒரு கும்பல் எங்களின் துப்பாக்கிகளையும் அரிசியையும் பறித்துச் சென்று விட்டது” என்று அந்த இன்ஃபார்மர் சொன்னார்.

“எத்தனை மணிக்கு இது நடந்தது?” என்று சங்கர் பிதாரி கேட்டார்.

“உச்சி வேளை நேரம்” என்று அந்த நேரத்தை தோராயமாகக் குறிக்கும்படி கையால் சைகை காட்டியபடி அந்த இன்ஃபார்மர் சொன்னார். பிதாரி உடனடியாக அரோராவை அழைத்தார்.

செப்டம்பர் 17 அதிகாலை இரண்டு மணி. தமிழ்நாடு எஸ்.டி.எ.ஃப். ஆட்கள் வேன் மூலம் திம்பத்தை அடைந்தனர். பின்னர் அவர்கள் கால்நடையாக மலைமீது ஏறினர். கர்நாடக குழுவினர் ஏற்கனவே அங்கிருந்த ஒரு பாரஸ்ட் டிப்போவில் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களுடன் லைட் மெஷின் கன்களும், 2—இன்ச் மோர்டர்களும் வைத்திருந்த பி.எஸ்.எப். ஆட்களும் இருந்தனர். அனைவரும் சேர்த்து 150 பேர் இருந்தனர்.

சிறிய ஆலோசனைக்குப் பிறகு, கலவையான ஆட்களைக் கொண்ட சிறு சிறு குழுக்களாக அவர்கள் பிரிக்கப்பட்டனர். தமிழ்நாடு எஸ்.டி.எ.ஃப். டெல்டா குழுவிற்கு எஸ்.ஐ. செந்தில் தலைமை தாங்கினார். பதினைந்து பேர் அடங்கிய அவரது குழுவில் இரண்டு வாரங்களுக்கு முன்பு கணுக்காலில் காயம்பட்ட எஸ்.டி.எ.ஃப். கான்ஸ்டபிள் ரமேஷும் இடம் பெற்றிருந்தார். அவரை நான்கு வாரங்கள் ஓய்வு எடுக்கச் சொல்லியிருந்த போதிலும் இந்த நடவடிக்கை பற்றிக் கேட்டதும் பாதியிலேயே ஓய்வை முடித்துக் கொண்டு முதலாவதாக தாவி வேனில் அமர்ந்தார்.

பத்து நிமிடம் பிரேக் எடுத்துக் கொள்ள, பளிச்சென்று சமிக்ஞை கிடைத்தவுடன் அந்தக் குழு கம்பீரமாக நிலத்தில் பரவியது. அடர்ந்த காட்டுப் பகுதியில் அவர்கள் கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் நடந்தனர். சட்னியில் தோய்த்த ஆறு இட்லிகளை சாப்பிட்டுக் கொண்டே, செந்தில் பக்கம் திரும்பிய ரமேஷ், “நாம இப்போ கடந்து வந்தோமே அந்தக் கோயில்ல புது ஊதுபத்திகள் இருந்ததைக் கவனிச்சீங்களா?” என்று கேட்டார்.

“நானும் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். அந்த ஊதுபத்திகளை அந்த கும்பல் வைச்சதாக இருக்குமோ? இன்னைக்கு நாம ஏ ஒன்னைப் பிடிச்சுடுவோம்னு நெனைக்கிறீங்களா?” என்று செந்தில் கேட்டார்.

அந்த கும்பலுக்குதான் அந்த ஊதுபத்தி குச்சிகளை விற்றதாக பின்னாளில் ஒரு பெட்டிக்கடைக்காரர் சொன்னார். அவர்களிடம் நிறைய துப்பாக்கிகள் இருந்ததைப் பார்த்ததாகவும் அவர் சொன்னார்.

ஒரு சிறு இடைவெளி முடிந்ததும், செந்தில் தனது குழுவினருக்கு சைகை செய்தார். தங்களின் காலுக்கடியில் இருக்கும் உலர்ந்த இலைகளை மிதிக்காமல் வெகு கவனமாக நடந்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பகுதி அவர்களின் இயக்கத்திற்குக் கட்டளை இடத் தொடங்கியது. ஒரு நீர்வீழ்ச்சி எதிர்ப்பட்டது. 15 அடி அகலமும் 10 அடி உயரமும் கொண்ட அந்த அருவி ஒரு சுவரைப் போல செங்குத்தாக விழுந்து கொண்டிருந்தது. அது அவர்களது குழுவை இரண்டாகப் பிரித்தது. ஒரு குழு செந்தில் தலைமையிலும் மற்றொன்று ரவி தலைமையிலும் பிரிந்தன.

பாதை மெல்லத் தேய்ந்து முடிவுக்கு வந்தது. ரவியின் குழு ஒரு செங்குத்தான மலைப்பகுதியை அடைந்தது. அவர் செந்திலைப் பார்த்தார். செந்தில் ‘‘இதுதான் அந்தப் பகுதி’’ என்று சைகையில் சொன்னார். கடைசியாக இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து தலையசைத்து, பின்னர் பிரிந்தனர்.

செந்தில் குழு மிகப்பெரும் மரங்களடர்ந்த தோப்பு ஒன்றைச் சுற்றி வளைத்தது. இரவு கண்ணாடி வழியே பார்க்கும்போது அந்தப் பகுதி நீலமும் பச்சையுமாகக் காட்சியளித்தது. இரவு நேர பைனாகுலர் மூலம் பார்த்தால் அப்படித்தான் தெரியும். அவர்கள் ஒவ்வொருவரின் உடலும் பதற்றத்துடனும் எச்சரிக்கையுடனும் இயங்கியது.

சமீபத்தில் அந்தப் பகுதியில் நடமாட்டம் எதுவும் இருந்ததா என அவர்களின் கண்கள் அந்தப் பகுதியை ஊடுருவி ஆய்வு செய்தன. புதர்கள் குலைந்து இருந்தால்... புற்கள் விலகி இருந்தால்... சிலந்தி வலைகள் சிதைந்து இருந்தால்... இவை எல்லாம் அந்தப் பகுதியை யாரோ ஒருவர் அல்லது ஒரு மிருகம் கடந்திருப்பதற்கான அறிகுறிகளாக இருக்கக் கூடும். திம்பம் காட்டில் இச்சம்பவம் ஒரு திருப்புமுனையாக அமையும் என்று யாருமே நினைக்கவில்லை.

“நில்லுங்கள்” என செந்தில் சைகை செய்தார். அவரது ஆட்காட்டி விரல் தரையைக் காட்டியது. அவரது உள்ளுணர்வு சிலிர்த்தது. ஏதோ தவறாக நடக்கிறது என எச்சரித்தது. இத்தனைக்கும் அவர் எதையும் பார்க்கவில்லை. ஒவ்வொருவரும் நின்றனர். ஒரே ஒருவரைத் தவிர.

ரமேஷ் சுழன்று திரும்பினார். கணுக்கால் காயத்தின் வேதனையைப் பொருட்படுத்தாமல் வேகமெடுக்கத் தொடங்கினார். அவரது வெளிப்பார்வையில் கருப்பு, பச்சை மற்றும் சிவப்பு வண்ணங்கள் திடீரெனத் தோன்றி மறைந்ததைக் கண்டார். எஸ்.டி.எ.ஃப். ஆட்கள் காட்டுக்குள் சிவப்புக்கலர் ஆடை உடுத்துவதை எப்போதுமே தவிர்ப்பார்கள். அவரது மூளைக்குள் அபாய மணி அடித்தது.

ரமேஷ் திரும்புவதை ரவி பார்த்தார். குழப்பமடைந்த அவர் ரமேஷை நோக்கி நடக்கத் தொடங்கினார். அடுத்த சில சம்பவங்கள் வினாடிக்கும் குறைவான நேரத்தில் நிகழ்ந்தன. மரங்கள் அடர்ந்த புதர்களுக்கு இடையில் இருந்து திடீரென்று ஏதோ ஒரு உருவம் எழுந்து வருவதை ரமேஷ் பார்த்தார். அதிர்ச்சியில் உறைந்தார்.

அந்த உருவம்...

மிக பிரபலமான முகம்...?

## அதிரடிப்படையின் முதல் பலி செந்தில்

திம்பம் காட்டில் மூடுபனி விலகிய அதிகாலைப்பொழுதில், இரு மாநில எஸ்.டி.எஃப். படையுடன் பி.எஸ்.எப். படையும் தேடுதல் வேட்டையில் இருந்தது.

மரங்கள் அடர்ந்த பகுதியில், தமிழக எஸ்.டி.எஃப். படையின் வீரர்கள் ரமேஷ், ரவி கண்ட காட்சி...

ஆம்... அந்த பிரபலமான மீசையும் முகமும் தெரிந்தது. படம் எடுத்து நிற்கும் நாகப் பாம்பின் முகம் போதும் அது யாரென சொல்ல, மற்ற உடல்பகுதிகளைப் பார்க்க வேண்டியதே இல்லை.

அட்ரீனல் சுரப்பி அதன் இயக்கத்தில் துரிதப்பட, உள்ளுணர்வால் தூண்டப்பட்ட ரமேஷ் தனது வயிறு தரையில் படும்படி நெடுஞ்சாண்கிடையாகக் குப்புறப்படுத்தார். ஆனால் அதன் மூலம் அவர் ஒரு அபாயகரமான தவறைச் செய்திருந்தார். அது வீரப்பன்தான் என்று ரவிக்குத் தெரிந்துவிட்டது. அவனை நோக்கி அவர் குறி வைத்தபோது, ரமேஷ் சட்டென எழுந்து ரவி குறி வைத்ததை மறைத்தார்.

துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கியதும் சொர்க்கம் நரகமாயிற்று. ரமேஷ் பதிலுக்கு தனது ட்ரிக்கரை அழுத்தினாரா இல்லையா என்ற குழப்பத்திலிருந்து மீளும்முன், புல்லட்டுகள் அவரது உடலைத் துளைத்தன. கனவில் நடப்பதைப் போல, ரமேஷ் தனது முகம் நிலத்தில் பதிய கீழே விழுந்து கிடப்பதை உணர்ந்தார். கற்களும் சரளைகளும் அவரது முகத்தைச் சிதைத்தன. மேலதிக குண்டுகள் அவரை நோக்கிப் பாய்ந்தன. ரமேஷின் உடல்

துள்ளியது. நடனம் ஆடுவதைப் போல அவரது தோள்கள் துடித்தன. இருண்ட உருவங்கள் மங்கலாக அவரைக் கடந்து சென்றன.

ஒரு பி.எஸ்.எப். ஹவில்தார் தன்னிடமிருந்த எல்.எம்.ஜி. துப்பாக்கியோடு சண்டையில் இறங்கினார். ஆனால் புல்லட்டுகள் அவரது உடலைத் துளைத்து, அவர் கீழே சரிந்தார். செந்தில் எதிரிகளை நோக்கிச் சென்றதை காயமடைந்த ரவி பார்த்தார். அதன்பிறகு அவர் சுயநினைவிழந்தார். மீண்டும் நினைவு திரும்பி அவர் எழுந்த போது, ஒரு நர்ஸ் அருகில் நின்றிருந்ததைப் பார்த்தார்.

ரவி சுயநினைவிழந்து விழுந்ததற்குப் பிறகு நடந்த சம்பவங்களைக் கோர்வையாக்கினார். முதலில் அவருக்கு ஒரு தத்துவார்த்த எண்ணம்தான் வந்தது. “அது நானாக இருந்திருக்கலாம்.” சண்டையில் தனது சக படை வீரனைப் பறிகொடுத்த ஒவ்வொருவருக்கும் ஏற்படும், நான் இறந்திருக்கக் கூடாதா? அவர் ஏன் இறக்க வேண்டும் என்ற தாங்கமுடியா குற்ற உணர்வு உடனடியாக வந்தது.

அட்ரீனல் சீற்றத்துடன் சுரந்தது. துப்பாக்கிச் சத்தங்களை நோக்கி ஓடிய செந்தில், மூன்று பேர் கீழே படுத்திருந்ததைப் பார்த்தார். ஆனால் அருகில் யாரும் இல்லை. காயம்பட்டுக் கிடந்தவர்களை நோக்கி அவர் சில அடிகளை எடுத்துவைத்தார். திடீரென அவரது உள்ளுணர்வு ஏதோ சொன்னதால், அப்படியே பின்னால் வந்தார். சில புதர்களைக் கடந்து வந்ததும் அங்கே ஒரு பெரிய பாறை இருப்பதைப் பார்த்தார்.

திடீர் சூரிய வெளிச்சத்தால் கண்களை சுருக்கிய அவர், தனது வலது பக்கத்தில் இருக்கும் ஒரு சிறு பாறையை நோக்கி கழுத்தைத் திருப்பினார்.

செந்திலுக்கு அது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அவரது உள்ளுணர்வு அதைக் கண்டுபிடித்திருந்தது. வீரப்பனின் ஆட்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். ஒரு பிரிவு பெரிய பாறைக்குப் பின்னாலும் மற்றொரு பிரிவு சிறு பாறைக்குப் பின்னாலும் ஒளிந்து கொண்டிருந்தனர். செந்தில் தனது அடுத்த அடியை எடுத்து வைக்க முயற்சித்தபோது ஒரு தோட்டா வெடித்தது.

அந்தத் தோட்டா அவரது இடது கண்ணைத் துளைத்து மூளைக்குள் ஊடுருவியது. மற்றவர்கள் அங்கு வந்து துப்பாக்கி குண்டுகளில் இருந்து அவரை பாதுகாத்து மறைத்தனர். செந்திலின் சக நண்பர் ஒருவர் அவர் அருகில் சென்று கழுத்தில் கைவைத்து துடிப்பு இருக்கிறதா என்று பார்த்தார். பிறகு அவரது நெஞ்சில் கை வைத்துப் பார்த்தார். மணிக்கட்டைப் பிடித்துப் பார்த்தார். விரக்தி மேலிட மீண்டும் ஒருமுறை சோதித்துப் பார்த்தார். உயிர் இருந்ததற்கான அறிகுறி இல்லை.

பக்கத்து மலைகளில் இருந்த அரோராவின் வாக்கி டாக்கி உயிர் பெற்று, “டெல்டா காலிங் ஸ்டார்” எனத் துடித்தது.

“ஸ்டார் ஆன்சரிங்” என அரோரா பதிலளித்தார். மலைகளில் அப்போதுதான் ஓய்ந்த துப்பாக்கிச் சண்டையைப் பற்றிய தற்போதைய தகவல்களைச் சொல்லத்தான் அழைத்திருக்கிறார்கள் என்று யூகித்தார்.

ஆனால், அவரது மனதுக்குள் சந்தேகம் எழுந்தது. எப்படியிருந்தாலும் தான் தலைமை ஏற்கும் டீமின் பெயரான ‘டெல்டா’ எனும் அழைப்புக் குறியீட்டை செந்தில்தான் பயன்படுத்துவார். அவர் தனது நிலையை எதிரியிடம் இழந்து விட்டாரோ என வியப்படைந்தார்.

அவரது மனதுக்குள் இந்தச் சிந்தனைகள் ஓடிக் கொண்டிருந்த போதே தொடர்ந்து வந்த வார்த்தைகள் ஒரு சம்மட்டியைப் போல அவரைத் தாக்கின.

“செந்தில் அய்யா நம்மள விட்டுட்டுப் போயிட்டாருங்கய்யா” என்றது அந்த வாக்கி டாக்கி குரல்.

அரோரா தனது உள்ளங்கையை இறுக மூடினார். தமிழ்நாடு எஸ்.டி.எ.ஃப்.பின் முதல் இழப்பு அது. அந்தப் படையிலேயே மிகவும் பிரபலமான அதிகாரிகளில் ஒருவரை அவர்கள் இழந்திருக்கின்றனர் என்பதுதான் மிகவும் கொடுமையானது.

“பி.எஸ்.எப். ஹவில்தார் பூபேந்தர் சிங்கும் கான்ஸ்டபிள் ரமேஷும் கூட இறந்து விட்டனர்” அந்தக் குரல் தொடர்ந்தது.

அரோரா அதிர்ந்து போனார். அந்த நாளில் அந்தக் குழுக்கள் மூன்று பேரை இழந்து திரும்பின. அந்த மனிதர்களின் இறப்பு அவர்களின் இதயத்தை கனக்கச் செய்திருந்தது. நீங்கள் ஒரு கமாண்டோவாகவே இருந்தாலும், உங்களுக்கு நெருக்கமான ஒருவரின் உடலைச் சுமந்து திரும்பும் பணி நிச்சயம் உங்களை கலங்க வைத்துவிடும். அந்த பயங்கரமான செய்தி பரவ, அவருடைய ஆட்கள் தாங்கள் மனமுடைந்து அழுவதற்கு முன்னால் தங்களின் சகாக்களுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்ததை அரோரா கவனித்தார்.

எனக்கு நினைவிருக்கிறது. அப்போது நான் மதுரையில் இருந்தேன். நான் அந்தச் செய்தியைக் கேட்கும்போது முதலமைச்சரின் மெடல் பரேட் நிகழ்ச்சிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தேன்.

அந்த சோகத்தைப் பகிர்ந்து கொள்ள ஈரோட்டிற்கு நான் விரைந்து கொண்டிருந்த போதிலும், சிறந்த படையினர் தேர்வு செய்யப்படுவதும் அவர்களை இழப்பதும் எனது மனதிற்குள் வந்து போய்க் கொண்டிருந்தது.

முதலமைச்சரின் பாதுகாப்புக் குழுவில் இருந்து நான் தேர்ந்தெடுத்த பதினைந்து பேரில் செந்திலும் ஒருவர். ஆம். அவரே தானாக முன்வந்திருக்கலாம். ஆனால் என்னை அழுத்தும் குற்ற உணர்வு ஒன்றை என்னால் அலட்சியப்படுத்த முடியவில்லை.

ஈரோட்டை நான் அடைந்த போது, மருத்துவமனை தாழ்வாரத்தில் தேசியக் கொடி போர்த்திய மூன்று மரத்தாலான சவப்பெட்டிகளைப் பார்த்தேன். இறுதி ஊர்வலத்திற்கான மிக நீண்ட வரிசையின் முன்னணியில் அமைச்சர்கள் இருந்தனர். அடுத்த மூன்று நாட்களில் மூன்று குக்கிராமங்களில் 21 குண்டுகள் முழங்க மூன்று இறுதிச் சடங்குகள் நடந்தன. இறுதிச் சடங்குக்கான ராணுவ வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. துப்பாக்கிகள் தலைகீழாகத் திருப்பப்பட்டன. அது அந்தத் துப்பாக்கிகள் தாங்கள் செய்த வெட்கப்படத்தக்க காரியத்திற்காக வெட்கப்பட்டதற்கான குறியீடு.

செந்திலின் பணியைப் பாராட்டி அவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் 15 லட்ச ரூபாய் இழப்பீட்டுத் தொகை அறிவித்தார். இந்தியாவில் அப்போது

வழங்கப்பட்ட கருணைத் தொகையிலேயே மிக உயர்ந்த தொகை அது. செந்திலின் பெயர் அவரது தோழர்களுக்கு ஒரு போர் முழக்கமாகவும் உந்து சக்தியாகவும் உருமாறியது.

அதே நேரத்தில் அதிரடிப்படையில் இருந்த ஒரு சிலருக்கு அவரின் மரணம் ஒரு பீதி அலையை ஏற்படுத்தி, அவர்கள் படையை விட்டு வெளியேற வழிவகுத்தது. அவர்கள் தேடியபடி, அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. ஆனால் அதுவே (செந்திலின் மரணம்) நவாஸ், கருப்புசாமி, அசோக்குமார், எப்.எம்.ஹுசேன் போன்றவர்களுக்கு பணியை முடிக்காமல், இப்படையை விட்டுப் போகக் கூடாது என்ற எண்ணம் வருவதற்குக் காரணமாக அமைந்தது.

பின்னர் வந்த வருடங்களில் நாங்கள் நிறைய நல்ல மனிதர்களை இழந்திருக்கிறோம். ஆனால் அவர்கள் அனைவருமே எதிரியின் தோட்டாக்களுக்குப் பலியானவர்கள் இல்லை. அது மட்டுமல்ல. மற்றொரு நாளில் மிகப்பெரிய சம்பவம் நடந்தது. வீரப்பனின் அடுத்த சாகசமானது அவனது தரப்பில் ஒரு தொடர் இழப்பைக் கொடுத்தது மட்டுமல்ல, அவனது இயக்கத்திற்கு முக்கியமானவர்களின் இறப்புக்கும் வழி வகுத்தது.

## டி.எஸ்.பி.யை பிடித்துக்கொண்டு ரூ.1000 கோடி கேட்ட வீரப்பன்!

ஆகஸ்ட் 2001

"கெடசால் படுகொலைக்குப் பின்பு கிராமங்களில் காவலாளி களைப் பணியமர்த்தினோம். காட்டுக்குள் பல ரகசிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து நிறைய ரோந்துப் பணிகளை மேற்கொண்டோம். ஆனால் எதுவுமே வேலைக்காகவில்லை" எஸ்.டி.எஃப். தலைமையகத்தில் அமர்ந்து கொண்டு கருப்புசாமி நினைவு கூர்ந்ததை கேட்டுக் கொண்டிருந்தேன்.

"உங்களுடைய சொந்த அடையாளத்தை மறைச்சு அர்ஜுனனோட நிறைய நேரம் செலவழிச்சிருக்கீங்க... அதைத்தான் ரகசிய நடவடிக்கைகள்னு சொல்றீங்க இல்லையா? அர்ஜுனனோட விருப்பம் என்ன?" என்று கேட்டேன்.

கருப்புசாமி பேச ஆரம்பித்தார்.

"சங்கர் பிதாரி பத்தியும் மோகன் நவாஸ் பத்தியும் பேசும்போது கெட்டவார்த்தைகளை பயன்படுத்துவான். அவனோட அண்ணனைப் போல அவனும் ஒல்லிதான். ஆனால் நல்லா சாப்பிடுவான். அப்ப அவன் ஏதோ வைத்தியம் பாத்துக்கிட்டு இருந்தான். ஆனா அதுனால அவனோட சாப்பாட்டுக்கெல்லாம் எந்தக் கொறையும் வைக்கலை. அவனோட வலது தொடையில ஒரு நீர்க்கட்டி வந்ததுல இருந்துதான் எல்லாமே ஆரம்பிச்சுச்சு.

டிசம்பர் 1994

“அண்ணா வலி உயிர் போகுது. இனியும் என்னால பொறுத்துக்க முடியாது. எதாவது செய்யுங்க” என தனது தொடையைக் காட்டியபடி அர்ஜுனன் புலம்பினான்.

வீரப்பன் விரக்தியில் உறுமினான். அவனது கேம்ப்பில் நடந்த தாக்குதலுக்குப் பிறகு சிதறிய அவனது ஆட்கள் இன்னும் கொஞ்சம் மேற்கு நோக்கி கிழக்கு நீலகிரி மற்றும் பவானிசாகர் அணை அருகே இடம் மாறி இருந்தனர்.

ஆனால் ரோந்து மற்றும் கண்காணிப்புகளை தொடர்ந்து சமாளிக்க வேண்டியிருந்தது. கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் நேரத்தை உருவாக்க, சஞ்சய் அரோராவைப் பொறியில் சிக்க வைக்க வீரப்பன் முயற்சித்தான். அவர் அப்போது, அதிரடிப்படையினரை மேட்டூரில் இருந்து மேற்கில் இருக்கும் பண்ணாரிக்கு மாற்றி அணைக்கட்டுப் பகுதியில் கவனம் குவித்திருந்தார்.

வீரப்பன் அவருக்கு தனது குரலைப் பதிவு செய்த டேப் ஒன்றை அனுப்பியிருந்தான். “நீங்க வடக்கில் இருந்து வந்த ஒரு நல்ல மனுஷன். உங்களுக்கு 25 கோடி ரூபாய் தர்றேன். அதுல 5 கோடி நீங்க எடுத்துக்கலாம். மீதிப் பணத்தை பிரதமருக்கு நன்கொடையா கொடுத்துடுங்க. மேட்டூர்ல தங்கி இருக்கிற உங்க மனைவியும் உங்க குட்டிப் பையனும் நல்லா இருக்கணும்” என்று அந்த டேப்பில் பேசி இருந்தான். அரோரா ஆயுதமில்லாமல் தனியாக அவனைச் சந்திக்க வந்தால் சரணடையத் தயாராக இருப்பதாகவும் சொல்லியிருந்தான்.

கர்நாடக வனத்துறை அதிகாரியான ஸ்ரீனிவாஸ் வஞ்சகமாகவும் கொடூரமாகவும் கொல்லப்பட்ட சம்பவம் இப்போதும் எஸ்.டி.எஃப். ஆட்களின் மனதில் மறையாமல்தான் இருந்தது. எனவே வீரப்பன் சொன்னது அவர்களின் மூளையில் அபாய மணியை ஒலிக்கச் செய்தது. ஆனால் அரோராவுக்கு வீரப்பன் சொன்னதை வைத்து அவனைப் பிடித்து விடலாம் என்ற ஆவல் மேலிட்டது. அவனைச் சந்திக்க விரும்புவதாக அவனுக்கு தகவல் சொல்லி அனுப்பினார்.

வீரப்பன் சந்திப்பதாகச் சொன்ன அந்த நாளில், அவனது தூதன் செல்வராஜ், அரோராவைக் கூட்டிச் செல்ல மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தான். ஆனால் அப்போது அரோரா சிறப்பாக வடிவமைக்கப்பட்ட புல்லட் புரூப் ஜோங்காவில் ஏறிக் கொண்டிருந்தார். அவருடன் அசோக்குமார், மோகன் நவாஸ், பாலசுப்பிரமணியன், கருப்புசாமி ஆகிய மற்ற அதிகாரிகளும் இருந்தனர்.

இதைப் பார்த்த செல்வராஜ் உடனடியாக தனது பைக்கை ஒரு சுற்று சுற்றித் திருப்பி உச்சகட்ட வேகத்தில் பறந்தான். தூரத்தில் இருக்கும் குன்றில் இருந்து அந்த ஜோங்கா வண்டி தன்னை நோக்கி வருவதைக் கவனித்தான் வீரப்பன். அந்தத் தோற்றம் அவனுக்குப் புதிராக இருந்தது. அதை ஒரு மினி டேங்க் என்று தவறாக நினைத்தான் வீரப்பன். தான் அனுப்பி வைத்த தூதன் செல்வராஜின், எச்சரிக்கையை கேட்டதும் அடுத்த விநாடியே வீரப்பன் ஓட ஆரம்பித்தான்.

அவனது தம்பியிடமிருந்து வந்த தாங்க முடியாத முனகல் சத்தம் கேட்டு வீரப்பன் சுயநினைவுக்குத் திரும்பினான். வலியால் அவனது அழுகை அதிகமாக, அவசரமாக ஏதாவது செய்தாக வேண்டும் என்று உணர்ந்தான்.

“கேங்கில் இருக்குற யாருக்கும் வைத்தியம் பார்க்கத் தெரியாது. அவனை ஆஸ்பத்திரிக்குத்தான் கூட்டிட்டுப் போகணும். ஆனா ஆஸ்பத்திரிக்குப் போனா, எஸ்.டி.எஃப். நிச்சயம் கைது செய்து விடும். நம்மள காப்பாத்திக்கிறதுக்கு யாராவது ஒரு பணயக் கைதி வேணும்” என நினைத்தான் வீரப்பன்.

அவனது நம்பிக்கைக்குரிய ஆள் ஒருவன், “அண்ணே இங்க பக்கத்துல உள்ள பண்ணைக்கு டி.எஸ்.பி. சிதம்பரநாதன் அடிக்கடி வந்து போவாருன்னு கிராமத்து ஆட்கள் சிலபேரு சொல்லியிருக்காங்க.. நினைவிருக்கா” என்று கேட்டான்.

வீரப்பனின் முகத்தில் சிரிப்பு தெரிந்தது. “அவனைப் போய் பார்த்திருவோம்” என்றான்.

அன்று டிசம்பர் 3, மாலையில் டி.எஸ்.பி. சிதம்பரநாதன், அவரது சகோதரர், பள்ளிக்கூட ஆசிரியராக இருக்கும் அவரது மச்சான், ஒரு ஹெட் கான்ஸ்டபிள் ஆகியோரை வீரப்பன் கடத்தினான். அந்தப் பகுதியில் சர்வசாதாரணமாக நடமாடுவது பாதுகாப்பில்லை என்று சிதம்பரநாதனை அசோக்குமார் அடிக்கடி எச்சரித்திருக்கிறார். ஆனால் அவரது அறிவுரையை சிதம்பரநாதன் கண்டு கொள்ளவில்லை.

சிதம்பரநாதன் கடத்தல் சம்பவம் உடனடியாக தலைப்புச்செய்தியானது. ஆனால் வீரப்பன் கும்பல் அமைதியாக இருந்தது. அவர்களது நோக்கம் என்ன என்பது குறித்த அறிக்கையோ அல்லது வேறு ஏதாவது ஒரு கோரிக்கையோ இல்லை. பதற்றம் நிறைந்த ஒரு காத்திருப்பாக இருந்தது.

ஆறாவது நாள் வீரப்பனிடமிருந்து ஆடியோ கேசட் ஒன்று கோவை மாவட்ட ஆட்சியருக்கு வந்தது. அந்த ஆடியோவில், சிதம்பரநாதனையும் மற்றவர்களையும் அவன் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் அவனது நம்பிக்கைக்குரிய லெப்டினன்ட் பேபி வீரப்பனை பேச்சு வார்த்தைக்கு அனுப்புவதாகவும் சொன்னான்.

பேபி வீரப்பனும், வீரப்பனும் உறவினர்கள். ஆறு வருடத்திற்கு முன்பு அந்தக் கூட்டத்தில் சேர்ந்தான். வீரப்பன் படையில் விறு விறு என்று உயர்ந்தவன். வீரப்பனுக்கு அவனை மிகவும் பிடிக்கும் என்பார்கள். தனது மூத்த மகள் வயதுக்கு வந்ததும், அவளை பேபிக்குத் திருமணம் செய்து கொடுப்பதாக பேச்சு இருந்தது. நீளமான முடி, முதுகில் தொங்கும் பெரிய பை, பகட்டான தோற்றம் என்று அவனைப் பார்க்கும் யாரும் 1960—களின் சம்பல் பள்ளத்தாக்குப் பகுதியைச் சேர்ந்தவன் என தவறாக நினைத்து விடுவார்கள்.

மாவட்ட ஆட்சியர் உடனடியாக அரோராவுடன் ஆலோசனை நடத்தினார். வீரப்பன் கேங்குடன் ஒரு வருவாய்த்துறை அதிகாரியைப் போல கருப்புசாமியை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்துவது என்று முடிவானது. அதிரடிப்படையில் மூத்த அதிகாரிகளில் ஒருவரான கருப்புசாமி அந்தப் பாத்திரத்திற்கு பொருத்தமானவராக இருந்தார். அவரது கம்பீரமான பண்பான தோற்றம் சந்தேகம் எதையும் ஏற்படுத்தாது.

கோவை மாவட்டத்தில் உள்ள லிங்கபுரம் காட்டுப் பகுதியில் கருப்புசாமி பேபியைச் சந்தித்தார். பேபி, காட்டில் இருந்து ஒரு 303 ரைபில் உடனும் மற்றொரு கேங் உறுப்பினருடனும் வந்தான். அந்த அரசு ஜீப்பைப் பார்த்த அவன், சைகை செய்து வண்டியை நிறுத்தி ஏதோ டாக்சியில் ஏறுவதைப் போல அதில் உற்சாகத்துடன் ஏறிக் கொண்டான்.

கோவை முனிசிபல் இன்ஸ்பெக்ஷன் பங்களாவுக்குச் சென்று சேர்ந்ததும், கருப்புசாமியிடம் புதிதாக ஒரு கேசட்டைக் கொடுத்தான்.

அந்த டேப்பில், அர்ஜுனனுக்கு சிறந்த மருத்துவ வசதியும் பாதுகாப்பும் செய்து கொடுக்க வேண்டும் என்று வீரப்பன் கேட்டிருந்தான். அதற்கடுத்து அவன் கேட்ட கோரிக்கை, மாவட்ட ஆட்சியரை அதிர வைத்தது. டி.எஸ்.பி.யை உயிரோடு திருப்பி அனுப்ப வேண்டுமானால் 1000 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என்று வீரப்பன் கேட்டான். அப்படிப்பட்ட ஒரு பணயத் தொகை உண்மையில் ஒரு பெரிய ரெக்கார்டுதான்.

அடுத்தடுத்து நடந்த விஷயங்கள் அத்தனையுமே சினிமா பாணியிலான சுவாரஸ்யங்களே...!

## “கிரானைட் குவாரி... கமாண்டோ பாதுகாப்பு...?” கேட்டது வீரப்பன் கிறுகிறுத்தது அரசு

“1000 கோடி ரூபாய் கொடு” என்று வீரப்பன் கேட்டிருந்த தொகையை மாவட்ட ஆட்சியர், மூத்த அதிகாரிகளிடம் சொல்ல அவர்களும் அவரைப் போலவே ஸ்தம்பித்துப் போயினர்.

முதலில் அவன் வைத்த கோரிக்கையை ஏற்று, தாசில்தாருடன் அவருடைய ஜீப்பில் சென்று அர்ஜுனனை காட்டில் இருந்து அழைத்து வருமாறு கருப்புசாமிக்கு உத்தரவிடப்பட்டது.

காட்டில் இருந்து வெளியில் வந்த அந்த பயணம் ஒரு மீடியா சர்க்கஸ் போல் ஆகிவிட்டது. அர்ஜுனன் தனது லுங்கியை உயர்த்தி, கட்டியை மீடியாவிடம் காட்டினான். பிளாஷ்கள் மின்னின, மீடியாக்காரர்களின் குரல்கள் காற்றை நிறைத்தன. நல்லவேளையாக, அவன் பேட்டி எதுவும் கொடுக்கவில்லை.

இருபத்தேழு நாட்கள் கருப்புசாமியும் அர்ஜுனனும் ஒரே அறையில் இருந்தனர். ஒரு தீவிர அய்யப்ப பக்தரான கருப்புசாமி அர்ஜுனனின் ராட்சஷ சாப்பாட்டைப் பார்த்து அசந்து போனார். மீன், நண்டு, மட்டன், முட்டை என அவன் வெளுத்து வாங்கினான். கூடவே பழச்சாறுகளையும் ஒரு கைபார்த்தான்.

கருப்புசாமி தொடர்ந்து பேசப்பேச, அர்ஜுனன் நீண்ட உரையாடல்களுக்குள் வந்தான். அந்தப் பேச்சுவார்த்தையில் வீரப்பன் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட நபர் என்றும், தெய்வபக்தி மிக்கவன் என்றும் ஒரு நல்ல தலைவன் என்றும் அர்ஜுனன் வலியுறுத்திச் சொன்னான்.

கருப்புசாமி ஒருமுறை ‘‘அவன் யாரை அதிகம் வெறுக்கிறான்?’’ என்று கேட்டார்.

அர்ஜுனன் உடனடியாக பதிலளித்தான். ‘‘சங்கர் பிதாரியும் மோகன் நவாஸும்’’ சொல்லிவிட்டு அவர்கள் இருவரையும் கெட்ட வார்த்தைகளால் திட்டத் தொடங்கினான்.121

கருப்புசாமியும் அர்ஜுனனும் பேசிக் கொண்டிருந்த போது, பியூன் போல வேஷம் போட்டிருந்த இன்ஸ்பெக்டர் அசோக்குமார் தனது மேலதிகாரி ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் கட்டளைகளை தலைகுனிந்து செய்து கொண்டிருந்தார்.

‘‘ஆயிரம் கோடியை மறந்து விடு... ஒரு ரூபாய்கூட பணயத் தொகையாகக் கிடைக்காது’’ என்ற செய்தியை நேரடி வார்த்தைகளில் இல்லாவிட்டாலும் தெளிவாக அர்ஜுனனுக்குச் சொல்லப்பட்டு விட்டது. ஆனால் தனிச்சிறப்பான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, வசதியாக பார்த்துக் கொள்ளப்பட்டதால் அவனும் பேச்சுவார்த்தையை உடனே முடிக்க வேண்டும் என அவசரம் காட்டவில்லை.

அர்ஜுனன் இன்ஸ்பெக்ஷன் பங்களாவில் பாதுகாப்பாக தங்கி இருக்க, மற்றொரு புறம் பேபி வீரப்பன் கோரிக்கைக்கு மேல் கோரிக்கைகளை வைத்துக் கொண்டு வந்து சென்று கொண்டிருந்தான்.

எம்.எம். ஹில்ஸ்சில் அடைத்து வைக்கப்பட்டிருந்த வீரப்பன் கேங் ஆட்களைப் பார்க்க வேண்டும் என்றும் குறிப்பாக முத்துலட்சுமியை சந்தித்து, அவரது உடல்நலம் பற்றி விசாரிக்க வேண்டும் என்றும் அவன் கோரிக்கை வைத்தான். அவனது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

அவர்கள் சந்திக்கும் போது, முத்துலட்சுமியிடம் வீரப்பன் கொடுத்த கேசட் ஒன்றை பேபி வீரப்பன் கொடுத்தான். பதிலுக்கு முத்துலட்சுமி, கர்நாடக எஸ்.டிஎப். படையினர் தன்னை எப்படி நடத்தினார்கள் என்பது குறித்து கவலையுடன் பதிவு செய்து அனுப்பினார்.

எம்.எம். மலையில் இருக்கும் கர்நாடக எஸ்.டி.எஃப். தலைமை அலுவலகத்திற்குக்கூடச் சென்றான் பேபி வீரப்பன். இதுவெல்லாம் கர்நாடக எஸ்.டி.எஃப்.க்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் அவர்களின் சக அதிகாரியின் வாழ்க்கை அச்சுறுத்தலில் உள்ளதால் பல்லைக் கடித்துக் கொண்டு ஒத்துழைப்பு கொடுத்தனர்.

சில நாட்களுக்குப் பிறகு ஆப்பிளும் ஆரஞ்சும் அடங்கிய கூடைகளோடு பேபி காட்டுக்குத் திரும்பினான். அந்த ஆயிரம் கோடி ரூபாய் பணயத் தொகை கேட்ட விஷயம் வெளியே கசிவதற்கு அதிக அவகாசம் ஆகவில்லை. அந்தச் செய்தி அனைத்து உள்ளூர் தினசரிகளிலும் முதல் பக்கத்தில் இடம்பெற்றது. அந்தச் செய்தியின் விளைவாக வீரப்பனை கிண்டல் செய்து நிறைய ஜோக்குகள் கிளம்பின. ஆனால் கணக்கில் குழம்பி இருக்கிறானோ என்று யாராவது அவனைச் சந்தேகப்பட்டிருந்தால், அவர்களின் சந்தேகத்தை எல்லாம் ஒரு மூலையில் தூக்கி வைத்து விட்டது அவனது அடுத்த கோரிக்கைப் பட்டியல்.

நூறு வருடத்திற்கு ஒரு கிரானைட் குவாரியை அவனுக்கு குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமாம். நூறு துப்பாக்கிகளுக்கான லைசென்ஸ் கொடுக்க வேண்டும், குறிப்பாக அவனது சொந்தப் பாதுகாப்புக்காக. அதுவும் தமிழக முதலமைச்சருக்கு முதல்வரை பாதுகாக்கும் அதே கருப்பு பூனை குழுதான் அவனுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டுமாம். (வேடிக்கை என்னவென்றால், நான்தான் வீரப்பனுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டி இருக்கும்.) எது எப்படி இருந்தாலும், அவனது மிக அவசரமான கோரிக்கை உடனடியாக அதிரடிப்படையை அகற்ற வேண்டும் என்பதுதான்.

இதற்கிடையில் உயிருக்கு ஆபத்தான விபத்தொன்றில் சிக்கி சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வால்டர் தேவாரம், 12 வாரங்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என்ற மருத்துவர்களின் உத்தரவை மீறி, களத்திற்குத் திரும்பினார். உடம்பில் பல இடங்களில் எலும்புகள் உடைந்து அதற்குப் பதில் ராட் வைக்கப்பட்டிருந்த நிலையில் எட்டே வாரங்களில்

ஓய்வை முடித்துக் கொண்டு ரயிலிலும் சாலை வழியாகவும் 500 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து வந்து சேர்ந்தார்.

“இந்த முட்டாள்தனமெல்லாம் போதுமான அளவு நடந்திருச்சு. இதை முடிக்க வேண்டிய நேரம் வந்திருச்சு” என்று அவர் கொதித்தார்.

அவரது வருகை அதிரடிப்படையின் மன உறுதிக்கு ஒரு உடனடி உத்வேகத்தைக் கொடுத்தது. கூடவே ஒரு அதிர்ஷ்டமும் வந்தது.

வீரப்பன் விரைவில் பத்திரிகையாளர்களைச் சந்திக்கப் போகிறான் என்ற தகவல் டிசம்பர் 28—ல் அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்தது. கடத்தல், நடைமுறைக்கு ஒத்துவராத கோரிக்கைகள் என அவனது பெயர் மிகவும் கெட்டுப் போயிருந்தது குறித்து அவன் கவலைப்பட்டான். எனவே, அவனது நியாயத்தை எடுத்துச் சொல்ல விரும்பினான். முதல் நாள் மாலையில் ஒரு புதிய டேப் ரெக்கார்டரும் ஒரு புது செட் துணிமணிகளும் காட்டுக்குள் சென்றிருந்தன.

பிணைக் கைதிகள் லிங்கபுரம் என அழைக்கப்படும் ஒரு கிராமத்திற்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கலாம் என மோகன் நவாஸின் ஆட்கள் கூறினர். இந்த தகவலின் அடிப்படையில், சஞ்சய் அரோரா ஒரு விரிவான நடவடிக்கைக்குத் திட்டமிட்டார். டிசம்பர் 20—ல் ஒரு டஜன் குழுக்கள் அந்தப் பகுதியில் தேடுதல் வேட்டையில் இறங்கின. ஒரு சரிவில் இறங்கிக் கொண்டிருந்த போது ஒரு டீம் உறுப்பினர் அருகில் இருந்த புதர்களுக்கு அருகே இளஞ்சிவப்பு வண்ணத்தில் ஏதோ படபடத்ததைப் பார்த்தார். நெருங்கிக் கண்காணித்த போது அது அந்த கேங்கின் கூடாரமாக இருக்க வேண்டும் எனத் தெரிந்தது. அது காலியாகத்தான் இருந்தது. ஆனால் காய்ந்த இறைச்சி கொஞ்சம் கிடந்தது.

எதிர்பாராதவிதமாக அந்த டீமை பேபி வீரப்பன் பார்த்து விட்டான். இத்தனைக்கும் டீம் அங்கிருந்து கிளம்ப ஆரம்பித்திருந்தது. ஆனாலும் அதிரடிப்படையை நோக்கி அவன் சுடத் தொடங்கினான்...

# வீரப்பன் தம்பி சயனைடு சாப்பிட்டது எப்படி?

தமிழக அதிரடிப்படை சஞ்சய் அரோரா தலைமையின் கீழ், தேடுதல் வேட்டையில் வீரப்பன் கூடாரத்தை நெருங்கியது. அதிரடிப்படையினரை, எதிர்பாராத விதமாக பேபி வீரப்பன் பார்த்து விட்டான். அவன் சுடத் தொடங்கினான். இதில் கான்ஸ்டபிளுக்கு முதலில் காயம் ஏற்பட்டது.

இத்தாக்குதலைப் பயன்படுத்திக்கொண்ட வீரப்பனின் மிகுந்த நம்பிக்கைக்குரிய ஆட்கள், பிணைக் கைதிகளை அவசரமாக அங்கிருந்து வெளியேற்றத் தொடங்கினர். ஆனால், எல்.எம்.ஜி.யின் பாய்ந்து சென்ற தோட்டாக்கள் அவர்களை காட்டுக்குள் செல்ல விடாமலும் அதற்குப் பதிலாக கிழக்கில் லிங்கபுரத்தை நோக்கியும் ஓடச் செய்தன.

பின்னாளில் இந்தச் சம்பவம் பற்றிச் சொன்ன சிதம்பரநாதன், அதிரடிப்படை ஆட்கள் பொறுப்பில்லாமல் சுட்டதில் தானும் கொல்லப்படலாம் என நினைத்ததாக கூறினார். “எங்களை யாரும் காப்பாற்றவில்லை. நாங்களே எங்களைக் காப்பாற்றிக் கொண்டோம்” என்றார் அவர்.

அந்தச் சம்பவத்தில் வீரப்பனின் இரண்டு ஆட்கள், அவர்களுக்கு நெருக்கமானவர்கள் இறந்து போனதால் கலங்கிப் போயிருந்தனர். தாங்கள் தங்களின் கேங்கை விட்டு பிரிந்து விட்டதையும் எஸ்.டி.எஃப். தங்களை நெருங்கி வந்து பிடிக்க வேண்டியதுதான் பாக்கி என்றும் உணர்ந்தனர்.

அவர்களின் பாதிப்பை உணர்ந்து கொண்ட சிதம்பரநாதன், அவர்கள் இருவரிடமும் கொல்லப்படுவதைவிட சரணடைந்து உயிரோடு வாழலாம் எனக் கூறி சம்மதிக்க வைத்திருக்கிறார். இதைப் பின்னாளில் அவர் கூறினார். அன்று

இரவு அவர்கள் ஐந்து பேரும் கந்தவாயல் என்ற கிராமத்திற்கு அருகே வந்தனர். பின்னர் அவர்கள் அந்த கிராமத்திற்குள் சென்றனர்.

அன்று அதிர்ஷ்டம் வேலை செய்திருக்க வேண்டும். அந்த தாக்குதல் நடந்தபோது வீரப்பன் அந்தக் கூட்டத்தோடு இல்லை. அவன் பத்திரிகையாளரைச் சந்திக்கச் சென்றிருந்தான். ஆனால் அவன் அந்த மறைவிடத்திற்குச் சென்ற போது மரத்தில் இருந்து பல்லி ஒன்று அவனது இடது தோளில் விழுந்தது.

“இது ஒரு கெட்ட சகுனம்” என்று சொன்ன வீரப்பன், உடனடியாக பத்திரிகையாளர் சந்திப்புத் திட்டத்தைக் கைவிட்டான். முகாமுக்கு அவன் திரும்பிய போது கடுமையான துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டு உடனடியாக பின்வாங்கித் திரும்பினான் என பின்னாளில் போலீசில் சரணடைந்த அவனது ஆட்கள் கூறினர்.

டிசம்பர் 30!

இது எதுவுமே தெரியாமல் அர்ஜுனன் மகிழ்ச்சியோடு தனது அறையில் ஆசுவாசமாக இருந்தான். சற்றே பருத்த மனிதர் அறைக்குள் நுழைந்தார். கருப்புசாமிக்கு சல்யூட் அடித்தார்.

“இவரை யாருன்னு தெரியுதா?” என்று அர்ஜுனனைப் பார்த்துக் கேட்டார் கருப்புசாமி.

“தெரியாது. யாரு இவரு?” இப்போதும் கவலை எதுவுமின்றிக் கேட்டான் அர்ஜுனன்.

“நீ அடிக்கடி சொல்லுவியே... அதே மோகன் நவாஸ்தான்” என்று சொல்லிச் சிரித்தார் கருப்புசாமி.

அர்ஜுனனும் வீரப்பனும் மோகன் நவாஸை இதுவரையில் நேருக்கு நேர் பார்த்ததில்லை. அர்ஜுனனின் நடத்தை உடனடியாக மாறியது. அவன்

வெளிறிப் போனான். நடுங்க ஆரம்பித்தான். அவனது முழி பிதுங்கி வெளியே விழத் தயாரானது.

“ஹலோ அர்ஜுனன், கடைசியா உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி” நவாஸ் சந்தோஷமாகச் சொன்னார். பிறகு கருப்புசாமியைக் காண்பித்து, “இவரு யாருன்னு தெரியுமா?” என்று கேட்டார்.

அர்ஜுனன் மெதுவாக, ‘தெரியாது’ எனத் தலையை ஆட்டினான். மாறி மாறி இருவரையும் பார்த்தான்.

“அதிரடிப்படையில் என்னோட சீனியர். இன்ஸ்பெக்டர் கருப்புசாமி” நவாஸ் இப்படிச் சொன்ன போது, அர்ஜுனனுக்கு வியர்த்துக் கொட்டியது.

“ஒரு பியூனை நீ சந்தித்துருக்கணுமே. அவரு இன்ஸ்பெக்டர் அசோக்குமார். கிளம்பு. உனக்காக ஒரு நல்ல சிறை காத்துக்கிட்டு இருக்கு. இப்ப உன்னோட அண்ணன் உனக்கு எந்த உதவியும் செய்யப் போறதில்ல” என்றார் நவாஸ்.

அர்ஜுனன் கைது செய்யப்பட்ட ஒரு சில நாட்களில் கர்நாடக போலீசார் விசாரணைக்காக தங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டனர். நீதிமன்றத்திற்குச் சென்று அதற்கான நீதிமன்ற உத்தரவையும் பெற்றனர்.

1995 ஜூன் 26—ல் அர்ஜுனனும் வீரப்பனின் இரண்டு கூட்டாளிகளும் முறைப்படி கர்நாடக போலீஸ் கஸ்டடிக்கு மாற்றப்பட்டனர். அவர்கள் உடனடியாக போலீஸ் வேனில் ஏற்றப்பட்டு, அங்கிருந்து கிட்டத்தட்ட 140 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எம்.எம்.ஹில்ஸ் பகுதியில் இருந்த கர்நாடக அதிரடிப்படை தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பின்னாளில் இந்தச் சம்பவம் குறித்து பொறுப்பு இன்ஸ்பெக்டர் மதுக்கார் மவுசாலே தாக்கல் செய்த ரிப்போர்ட் படி, அந்த வேன் 40 கிலோ மீட்டர் தூரம் சென்ற பின்னர், அவர் தனக்குப் பின்னால் இருந்து ஒரு விசித்திரமான சத்தத்தைக் கேட்டிருக்கிறார். வேனை நிறுத்திவிட்டு, என்ன என்று விசாரிப்பதற்காக கீழே இறங்கி இருக்கிறார். பின்னால் வந்த வேனை திறந்து

பார்த்த போது, அந்த மூன்று பேரும் தரையில் சுருண்டு விழுந்து வலிப்பு வந்ததுபோல் துடித்தனர். பிறகுதான் தெரிந்தது அவர்கள் சயனைட் விழுங்கினர் என்பது. உடனடியாக அவர்களின் உயிர் பிரிந்தது.

அவர்களின் மரணம் பல கேள்விகளை எழுப்பியது. அதில் பல கேள்விகளுக்கு இன்னும் விடை தெரியவில்லை. இவ்வளவு உயர் பாதுகாப்பில் இருந்தவர்கள் எப்படி சயனைட் வைத்திருந்தனர்? ஆறு மாதம் வரையில் தமிழ்நாடு போலீஸ் காவலில் இருந்த அவர்கள் இப்போது திடீரென்று தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள அவர்களை எது தூண்டியது?

கர்நாடக எஸ்.டி.எஃப்.தான் வேண்டுமென்றே அவர்களைக் கொன்று விட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்து, பின்னர் விசாரணைக் குழு அந்தக் குற்றச்சாட்டில் இருந்து கர்நாடக எஸ்.டி.எஃப். விடுவிக்கப்பட்டது.

அர்ஜுனன் இறந்தது குறித்து அறிந்ததும், வீரப்பன் ஆத்திரப்பட்டான். அவனது தம்பி மற்றும் தங்கை மாரியம்மாளின் இறப்பு நிகழ்ந்த சூழல் சந்தேகத்திற்குரியது என்று அவன் நினைத்தான். அவனது மனைவி சிறைப்பிடிக்கப்பட்டதும் முடிவே இல்லாமல் அவன் மனதில் உறுத்திக் கொண்டே இருந்தது. அடக்கி வைக்கப்பட்ட அவனது கோபம் வெடித்துச் சிதற வேண்டியதுதான் பாக்கி.

1995 ஆகஸ்ட் 9—ம் தேதி பஞ்சனூர் கிராமத்தில் நுழைந்த வீரப்பன் ஊர்த் தலைவர் வீட்டிற்குச் சென்று கெட்ட வார்த்தைகளால் திட்டினான். அந்த ஊர்த் தலைவரின் மகன், தங்களின் குடும்பம் அளித்த தகவலை வைத்துத்தான் முத்துலட்சுமியை கைது செய்தார்கள் என்று பத்திரிகையில் பெருமையாகச் சொல்லி இருந்தான்.

இந்தத் தகவல் தெரிய வந்ததும், இந்த விஷயத்தை தானே நேரடியாகக் கவனித்துக் கொள்ள வீரப்பன் முடிவு செய்ததாக, அவனது பழைய கூட்டாளிகள் கூறினர்.

இந்தச் சம்பவம் பற்றி போலீஸ் கூறிய தகவலின்படி, வீரப்பன் உள்ளே நுழைந்த சத்தத்தைக் கேட்ட உடனேயே, ஊர்த் தலைவரின் மகன், பின்பக்க வாசலை சத்தமில்லாமல் திறந்து தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி விட்டான். ஆனால், அந்தக் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவர்கள் அனைவரையும் வீட்டின் முன்பு வரிசையாக நிற்க வைத்த வீரப்பன், துப்பாக்கியை மிக நெருக்கமாக வைத்து சுட்டுக் கொன்றான்.

தோட்டா சத்தத்தைக் கேட்டு, அங்கே ஓடிச் சென்று பார்த்த கூலித் தொழிலாளி ஒருவரும் காயமடைந்தார். அவரது இடது தோளில் சுடப்பட்டு, பிறகு அந்தக் கையே எடுக்கப்பட்டு விட்டது.

அந்த கிராமத்தில் வீட்டு வாசலில் மனிதனை வேட்டையாடும் புலியோ, சிறுத்தையோ உலவிக் கொண்டிருப்பதைப் போல அந்த மக்கள் அச்சத்துடன் வீடுகளுக்குள்ளேயே முடங்கி இருந்தனர். அந்தப் பகுதி முழுவதும் வீசும் காற்றில் அச்சம் கலந்திருந்தது.

## வீரப்பன் பதுங்கிய கிராமத்தை சுற்றி வளைத்ததும்...!

ஆகஸ்ட் 2001

அப்போதுதான் நாங்கள் கடந்து சென்ற ஒரு ஆலமரத்தைக் காட்டி "பதுங்கித் தாக்குவதற்கு ஏற்ற ஓர் அற்புதமான இடம்" என்றேன்.

"நாம ஒரு பொறியை வைச்சுடலாம். ஆனால்" என்று எனக்கு அருகில் இருந்த ஒல்லியான மனிதர் சொன்னார். அவர் டி.எஸ்.பி. எப்.எம்.ஹுசேன்.

திரும்பி அவரைப் பார்த்தேன். அவர் வருத்தத்துடன் தலையை ஆட்டினார். அப்போதுதான் பிடித்த மீன்களை கைநிறைய அள்ளி களிமண் அடுப்பில் போட்டார். அதிகப் புகையோ வாசனையோ அல்லது சத்தமோ இல்லாமல் நல்ல உணவைச் சமைக்கும் சாமர்த்தியம் கொண்ட புத்திசாலி ஹுசேன்.

உள்ளூர் ஆட்கள் 'விண்மீன் கடுவு' என்று அழைக்கும் இடத்தில் நாங்கள் இருந்தோம். மேலே வெள்ளி போலவும் அடியில் வெளிறிய நிறத்திலும் உள்ள அந்தப் பகுதியில் மீன்கள், கூட்டமாக தண்ணீருக்கு மேலே வரும்போது முழு நிலவு இரவுகளில் நட்சத்திரங்களைப் போல மின்னும்.

ஹுசேனின் 303 துப்பாக்கி அருகில் இருந்த ஒரு புதரைக் குறிபார்த்தது. அதன் பேரல் வழக்கத்திற்கு மாறாக பாதியாக நறுக்கப்பட்டிருந்தது. மரியோ பூசோவின் புத்தகத்தில் பிரபலப்படுத்தப்பட்டிருந்த சிசிலியன் லுபாரா எனப்படும் துப்பாக்கியை நினைவுபடுத்தியது. ஹுசேனும் அது போன்ற துப்பாக்கி நிபுணர்களில் ஒருவர். இந்த வகை துப்பாக்கிகளை மரங்கள் அடர்ந்த பகுதியில் எளிதாகக் கையாள முடியும் என்பதில் நம்பிக்கை வைத்திருப்பவர்.

ஹுசேன் அவரது ஆயுதத்தை தனக்கென மாற்றி அமைத்திருந்தார். போலீஸ் துறை மட்டுமின்றி மற்ற விஷயங்களிலும் அவர் ஆராய்ச்சி செய்பவர். அவருடைய தொடர்பு எல்லை மிகவும் பரந்து விரிந்தது. பெங்களூருவில் உள்ள இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் விஞ்ஞானிகளில் இருந்து ஏதேனும் சிறிய நகரத்தில் தெருவோரத்தில் உள்ள மெக்கானிக்குகள் வரையில் அவருக்குத் தொடர்பு இருந்தது.

ஒரு துப்பாக்கி சுடும் வீரன், துப்பாக்கி வடிவமைப்பாளன், சமையல்காரன் என ஒவ்வொரு பாத்திரத்திலும் சிறந்து விளங்கியவர் அவர். ஹுசேனும் ஒரு பழைய ஆள்தான். காடுகளில், ஜங்கிள் பேட்ரோல் என்று சொல்லப்படும் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட ஆரம்பித்த காலத்தில் இருந்து இருக்கிறார். இதற்கிடையில் சென்னையில் பன்றிக் காய்ச்சல் பரவிய நேரத்தில் சென்னைக்கும் சென்று வந்தார். அந்த நேரத்தில் தெருவில் சுற்றித் திரியும் பன்றிகளின் எண்ணிக்கையை உடனடியாகக் குறைக்க வேண்டிய தேவை இருந்தது. மற்றொரு துப்பாக்கி வீரன் சாமியும் ரைபிள்களுடன் சுற்றித் திரிந்தார். ஒரு சில நாட்களில் சென்னையில் சுற்றித் திரிந்த சுமார் 5 ஆயிரம் பன்றிகளைப் பிடித்து விட்டதாக வதந்தி ஒன்று கிளம்பியது. அதில் இருந்து சாமியின் நண்பர்கள் அவரை ‘பன்றிச்சாமி’ என்று அழைக்க ஆரம்பித்தனர். ஹுசேன் அந்தப் பட்டத்தை மயிரிழையில் தவற விட்டிருந்தார்.

படையினர் மத்தியில் ஹுசேனின் திறமை பிரபலமாகி இருந்தது. போலீசில் சேர்ந்த ஆரம்ப காலத்தில் அவர் ஊட்டியில் பணியமர்த்தப்பட்டிருந்த போது அவரது பாஸ், விழாக் காலங்களில் குதிரை மீதேறி வரவும், உச்சபட்ச டூரிஸ்ட் சீசன் நேரங்களில் ரோந்துப் பணியில் ஈடுபடவும் குதிரைப்படை இல்லை என்று புலம்பினார்.

ஒரே இரவில் ஹுசேன் அந்த மலைப்பகுதியில் சுற்றித் திரிந்த குதிரைகள் அனைத்தையும் கொண்டு வந்து நிறுத்தினார். அடுத்த நாள் காலை எஸ்.பி. உற்சாகம் கொள்ளும் அளவுக்கு, அவர் முன்பு கொஞ்சம் ஒழுங்காக இல்லை என்றாலும் பரேடை நடத்தினார். இந்தச் சம்பவம் நடந்து பல வருடங்கள்

கடந்து விட்டன. இப்போதும் இந்தச் சம்பவத்தை நினைக்கும்போது ஹுசேன் வெடித்துச் சிரிக்கிறார்.

இப்போது, அவரது கடுமையான முகத்தில் புன்னகைக்கான அறிகுறி எதுவுமில்லை. நாங்கள் இருந்த இடத்தில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஒரு இடத்தைக் காட்டி, “நானும் எனது படையில் உள்ள பையன்களும் சாதாரண உடை உடுத்தி இருந்தோம். எங்களை வீரப்பன் ஆட்கள் என்று நினைத்துக் கொண்டு கர்நாடக அதிரடிப்படையினர் சுட இருந்தனர்” என்று சொன்னார். “உண்மையாகவா? பிறகு எப்படித் தப்பிச்சீங்க?” என்று கேட்டேன்.

“எங்க அதிர்ஷ்டம். ரேடியோ செட் மூலம் அவங்க பேசிக்கிட்டு இருந்ததை நான் கேட்டேன். சுடாதீங்கன்னு கத்தினேன்.”

இந்தப் பகுதியில் சும்மா துப்பாக்கிச் சூடு நடத்துவதுகூட ஆபத்தாக முடியும். அதன் பாதிப்பை அனஞ்ஜெயகுமார் நன்றாகவே உணர்ந்தவர் என்றார் ஹுசேன்.

ஜூன் 1995

அனஞ்ஜெயகுமாரின் வயிறு கடாமுடாவென சத்தமிட்டுக் கொண்டிருக்க, அதை மெதுவாக சபித்தார். கண்களை இமைத்து தூக்கத்தைத் துரத்தியபடி, தனது கைக்கடிகாரத்தின் மேல்பகுதியில் மூடியிருந்த சிறிய மறைவுப் பகுதியைப் பார்த்தார். அதிகாலை 2 மணி. சரியாகச் சொன்னால் ஜூன் 26 தொடங்கி இரண்டு மணி நேரம் ஆகி இருந்தது.

“இந்த நேரத்துல போய் வயிறு தகராறு பண்ணுது” எரிச்சலுடன் நினைத்தார். இரவு நேர விழிப்புணர்வுடன் அவர் இருந்த போதிலும் ஈரம் தோய்ந்த அந்த நேரம் அவரது மூச்சுத்திணறலை அதிகரித்தது. அவரது இயற்கை உபாதை இன்னும் அதிகரித்தது.

கடந்த ஏழு நாட்களாக அனஞ்ஜெயகுமார் அதிரடிப்படையைச் சேர்ந்த மற்ற மூவரும் மோயர் ஆற்றிற்கும் பவானிசாகர் அணைக்கும் இடையே அந்த

இடத்தில் முகாமிட்டிருந்தனர். வீரப்பனும் அவனது ஆட்களும் அந்தப் பகுதியில் இருப்பதாகவும் அவர்கள் எந்த நேரமும் ஆற்றைக் கடக்கலாம் என்றும் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவர்கள் அங்கு முகாமிட்டிருந்தனர்.

அந்தப் பகுதியில் எதிரியுடன் நேருக்கு நேர் மோத வேண்டி இருந்ததால், தாக்குதலுக்கு ஏற்ற இடமாக அது தெரிந்தது. எனவே, அந்த டீம் இன்சார்ஜ் ஆன அனஞ்ஜெயகுமார், வீரப்பனுக்காக அங்கே காத்திருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார்.

கான்ஸ்டபிளான அனஞ்ஜெயகுமார், இது போன்ற ஒரு அசைன்மென்ட்டுக்கு கொஞ்சம் ஜூனியர்தான். ஆனால், ஒரு வருடத்திற்கு முன்பு கர்நாடக அதிரடிப்படை உயரதிகாரிகள் மத்தியில் நல்ல பெயரை எடுத்திருந்தார்.

வேலம்பட்டி காட்டிற்குள் வீரப்பனும் அவனது ஆட்களும் இருப்பதாகவும் அவனுக்குத் தேவையான பொருட்கள் நல்லூரில் இருந்து செல்வதாகவும் அதிரடிப்படைக்கு செய்தி கிடைத்திருந்தது. ஆனால், அந்த கிராமத்திற்குப் பக்கத்தில் கேம்ப் அமைத்தபோது அந்த கிராமத்தில் இருந்த ஆண்களும் பெண்களும் மனிதக் கேடயமாக அந்த கேம்ப்பை சூழ்ந்து, வீரப்பன் கும்பல் தப்பி ஓட வழி வகுத்தனர்.

பல்வேறு விதமான மனிதர்கள் அடங்கி இருந்த அந்தக் கூட்டத்தின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால், துணிச்சலாக ஒரு எதிரிக்கூட்டம் போல அதிரடிப்படையை சூழ்ந்தனர்.

அந்தக் கூட்டத்தை நோக்கி அனஞ்ஜெயகுமார், அரிவாளைத் தூக்கிக் கொண்டு முன்னேறிய போது, சூழ்நிலை இன்னும் மோசமானது. சினிமாவில் வரும் ஹீரோ போல, ஒரு கோட்டைக் கிழித்து, “இந்தக் கோட்டைத் தாண்டி யாராவது வந்தா, உயிரோடு இருக்க மாட்டீங்க. நான் சும்மா இப்படி சொல்றேன்னு நெனச்சீங்கன்னா தாண்டிப் பாருங்க” என்று கத்தினார் அனஞ்ஜெயகுமார். அங்கே ஒரு இறுக்கமான சூழ்நிலை நிலவியது. அந்தக்

கூட்டம் லேசாக பின்வாங்கியது. அந்த வீரமான அனஞ்ஜெயகுமாருக்கு ஏற்பட்ட கதி...?

## 17 தோட்டாக்கள் அந்த வீரனின் உடலை துளைத்தன!

அனஞ்ஜெயகுமார் ஒரு சினிமா ஹீரோ போலவே செயல்பட்டார்.

அரிவாள் எடுத்து கோடு கிழித்து, 'யாராவது இந்த கோடு தாண்டி வந்தால்... உயிர் இருக்காது' என்று மிரட்டிய அந்த நொடி அக்கூட்டம் அப்படியே நின்றது. உறுதியோடு கையில் ஆயுதத்தோடு நின்று கொண்டிருந்த அந்த இளைஞரை, பார்த்தது.

அவரது கண்கள் மெல்ல அங்கிருந்த ஒவ்வொரு முகமாக பார்த்தது. முடிந்தளவு அதிக சேதாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் போல அந்த பார்வை இருந்தது. அதனால் யாரும் அசைய துணியவில்லை. அவரது பார்வையையும் யாராலும் எதிர்கொள்ள முடியவில்லை. சற்று நேரத்திற்குப் பிறகு அந்தக் கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

அன்று முதல் அனஞ்ஜெயாவுக்கு அவரது உயர் அதிகாரிகளிடம் நற்பெயர் ஏற்பட்டது.

அனஞ்ஜெயாவும் அவரது குழுவினரும் மேற்கொள்ள வேண்டிய அப்போதைய நடவடிக்கை குறித்து உடனடியாக விளக்கப்பட்டு, அந்தப் பகுதியில் விடப்பட்டனர். அந்தப் பகுதி அவர்களுக்கு மிகுந்த துயரத்தைத் தந்தது என்பதில் சந்தேகம் இல்லை.

"கண்காணிப்பு போஸ்ட் ஒன்றை நீங்கள் ஏற்படுத்தலாம். அங்க ஒரு பெரிய ஆலமரம் இருக்கு. அதுக்குக் கீழே முகாமிடலாம். ஆனா அந்த மரத்தை விட்டு ஒரு இன்ச் நகந்தீங்கனா கூட இரண்டு பக்கத்துல இருக்குற

மலை மேல இருந்து உங்களை பாத்துட முடியும்'' என தாக்குதல் குழுவுக்கு விளக்கப்பட்டது.

நான்கு பேர் எச்சரிக்கையுடன் அங்கு முகாமிட்டனர். அந்தப் பெரிய ஆலமரம் அவர்களுக்கு சிறந்த மறைவிடத்தை வழங்கியது. அவர்கள் அமைத்திருந்த தற்காலிக முகாமை அமைதியாக சோதித்தனர். இளஞ்சிவப்பு, மஞ்சள் மற்றும் பிரவுன் என சுற்றியுள்ள புதர்களின் நிறத்தோடு நன்கு கலந்திருந்தது.

அனஞ்ஜெயா மென்மையாகப் பெருமூச்சு விட்டபடி, ஒரு காலில் இருந்த உடலின் பாரத்தை மறுகாலுக்கு மாற்றினார்.

அவரது வயிறு மறுபடியும் வலிக்க, அந்த வேதனையை வெளிப்படுத்தினார். அந்தத் தற்காலிக முகாமை ஓரக்கண்ணால் கவனித்தார். அங்கு அனைவரும் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். ‘‘எனது இயற்கை உபாதை கழிக்க சில நிமிடங்கள்தான் ஆகும். இதற்காக யாரையும் எழுப்புவதில் அர்த்தமில்லை'' என்று தனக்குள் சிந்தித்த அவர் ஒரு பாட்டிலில் தண்ணீர் எடுத்துக் கொண்டு 10 மீட்டர் தள்ளிச் சென்றார்.

ஒரு சில நிமிடங்கள் கழித்து, கான்ஸ்டபிள் சுரேஷ் திடுக்கிட்டு எழுந்து கொண்டார். அனஞ்ஜெயாவுக்கு முன்பு அவர்தான் சென்ட்ரி டூட்டி பார்த்துக் கொண்டிருந்தார். ‘இங்கேதான் நின்று கொண்டிருந்தார் துப்பாக்கியோடு. எங்கே போய்விட்டார்' என யோசித்த அவருக்கு தூக்கம் வரவில்லை.

தூக்கக் கலக்கத்தோடு அனஞ்ஜெயாவைத் தேடினார். அவர் காணவில்லை!

தன்னந்தனியாக ஆந்தை ஒன்று அலறியதும், தவளைச் சத்தமும் அவரது குழப்பத்தை மேலும் அதிகரித்தன.

அவருக்குள் நடுக்கமும் பீதியும் ஓடின. என்ன நடந்துச்சு? அனஞ்ஜெயா அவரோட எடத்துல ஏன் இல்ல? அவரை தாக்கி, சத்தமில்லாம தூக்கிட்டுப்

போயிட்டாங்களா? யாரேனும் எதிரி நமக்குத் தெரியாமல் ஊடுருவி இருந்து, அது தெரியாமல்தான் நாம இருக்கோமா?

இந்த எண்ணங்கள் அவரது மனதில் எரிந்து கொண்டிருக்க, இரண்டு தெளிவில்லாத சத்தங்களைக் கேட்டார். ஏதோ ஒரு பொருளை வீசி எறிந்து அது நிலத்தில் விழும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து காலடிச் சத்தம் கேட்டது. “யாரோ நம்மை நோக்கி வராங்க” என்ற எண்ணம் சுரேஷுக்கு ஓடியது.

அவர்களின் மறைவிடத்தில் யாராலும் சத்தமில்லாமல் நுழைய முடியாதவாறு அந்தப் பாதை அமைக்கப்பட்டிருந்தது சுரேஷுக்கு நினைவுக்கு வந்தது. ஒரு சில மட்டமான கற்கள், டைல்சுகள், பாறைச் செதில்கள் மற்றும் உலர்ந்த இலைகளைப் பரப்பி அதன் மீது மரப்பட்டைகளையும் எச்சரிக்கையாகப் போட்டு வைத்திருந்தனர். அந்தப் பாதையில் ஒரு எலி கூட சத்தமில்லாமல் நடமாட முடியாது. சத்தம் அங்கிருந்துதான் வருகிறது.

சிறிது நேரம் அமைதி. பிறகு மீண்டும் காலடிச் சத்தம் கேட்டது.

சுரேஷுக்கு உறுதியாகத் தெரிந்தது. இது கற்பனை அல்ல. உண்மைதான். எதுவோ அல்லது யாரோ நம்மை நெருங்கி வருகின்றனர்.

தன் மேல் போர்த்தியிருந்த ஷீட்டை நகர்த்திவிட்டு சத்தமில்லாமல் எழுந்த சுரேஷ், தனது ஏகே 47 துப்பாக்கியை எடுத்துக் கொண்டு எழுந்து நின்றார். அந்த சுற்றுப்புற வெளிச்சத்தில் தனது பார்வையைக் குவித்து ஆலமரத்திற்கு அருகில் இருந்த பகுதியை பார்த்தார். ஒரு நிழல் நகர்ந்து வருவது தெரிந்தது.

சுரேஷ் பதற்றமானார். அவரது உயிரைப்பற்றி மட்டுமல்ல, பக்கத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் மற்ற இருவரின் உயிருக்கும் ஆபத்து என்று நினைத்தார். துப்பாக்கியின் லாக்கை நீக்கி சுடுவதற்கு வசதியாகப் பிடித்தார்.

“யாரு நீ?” என்று கத்தினார். அவரது குரல் அவராலேயே அடையாளம் காண முடியாதவாறு இருந்தது.

இயற்கை உபாதை கழித்த அனஞ்ஜெயாவுக்கு ஓரளவுக்கு வயிற்று வலி நீங்கியதாக உணர்ந்தார். வீரப்பனைத் தேடிக் கொண்டிருப்பதைப் பற்றியோ, தான் பாதுகாப்பு பணியில் இல்லாததைக் கண்டு சுரேஷைப் பதற்றமடையச் செய்ததைப் பற்றியோ அறியாமல் முன்னோக்கி நடந்து கொண்டிருந்தார்.

“எதிரிதான். அவன் நம்மை நோக்கித்தான் வருகிறான்” என்று நினைத்தார் சுரேஷ்.

அவரது சிந்தனை முடிவுக்கு வர, அவரது விரல்கள் ட்ரிக்கரை அழுத்தின. ஒரு ஐந்து மீட்டர் தொலைவில் இருந்து பாய்ந்த 17 தோட்டாக்கள் அனஞ்ஜெயாவின் உடலைத் துளைத்தன. அவர் அப்படியே தரையில் சரிந்தார். அவரது உடலில் இருந்த காயங்களில் இருந்து ரத்தம் ஆறாகப் பெருகியது.

வலியையும் பொருட்படுத்தாமல், “டேய் சுட்டுட்டியேடா” என்றார்.

சுரேஷ் உறைந்து போனார். அவரது செயலின் பயங்கரம் அவரை சோகத்தில் ஆழ்த்தியது. துப்பாக்கியை வீசி எறிந்துவிட்டு, அனஞ்ஜெயாவை நோக்கி ஓடினார், கட்டுப்படுத்த முடியாமல் அழுதார். துப்பாக்கிச் சத்தம் கேட்டு மற்ற இருவரும் எழுந்தனர். அவர்களும் அனஞ்ஜெயாவை நோக்கி ஓடினர்.

இந்த சோகத்திலும் சோகம் என்னவெனில், சுரேஷுக்கு ஆறுதல் சொன்னார் அனஞ்ஜெயா. “பரவாயில்லை” என்றபடி அவர் தனது சகாவின் கரங்களில் சாய்ந்தார், பிறகு அவரது சகோதரியின் பெயரை இரண்டு முறை கூறிய அனஞ்ஜெயா, “அவள நல்லா பாத்துக்கோ” என்று சொன்னார்.

அதுதான் அனஞ்ஜெயாவின் கடைசி வார்த்தைகள்.

அனஞ்ஜெயாவின் உடல் அங்கே கிடக்க, சுரேஷ் கீழே கிடந்த துப்பாக்கியைப் பாய்ந்து எடுத்து, தனது வாயில் வைத்து தன்னைத்தானே சுட்டுக் கொள்ள முயற்சிக்க, அருகில் இருந்த மற்ற இருவரும் அவரைப் பிடித்து, துப்பாக்கியைப் பிடுங்கினார்கள். இந்த தகவலை சுரேஷுடன் இருந்த போலீஸ்காரர்கள் கூறியதாக ஹுசேன் சொன்னார்.

“துப்பாக்கிய கொடுங்க... என்னால உயிரோட இருக்க முடியாது” என்று சுரேஷ் கெஞ்சியதாக அவர்கள் கூறினர். கடைசியாக அவர் முழுவதுமாக அழுது ஓய்ந்த பிறகுதான் விடுவித்தனர்.

சுரேஷின் சகாக்களும் அவரது உயர் அதிகாரிகளும் அவருக்கு நிறைய ஆறுதல் கூறினர். “இது உன்னோட தப்பு இல்ல. யாருக்குன்னாலும் இது நடந்திருக்கும்தான். தைரியமா இரு. அந்த நெனப்புல இருந்து மீண்டு வா” என்று அவர்கள் ஆறுதல் கூறினர்.

ஆனால் சுரேஷை ஒன்றுக்கு மேற்பட்ட நினைவுகள் வேதனைப்படுத்திக் கொண்டே இருந்தன. அதிரடிப்படை மறைவிடம், அவர்கள் எடுத்துச் சென்ற பை, பச்சை விரிப்புகள், முகாம்கள் என்று ஒவ்வொன்றும் அனஞ்ஜெயாகுமாரையும் அந்த கொடூரமான இரவையும் நினைவுபடுத்தின. அதற்கு மேலும் தாங்க முடியாமல் சுரேஷ் அதிரடிப்படையை விட்டு விலகினார்.

மூன்று நாட்களுக்குப் பிறகு வீரப்பன் தனது கேங்குடன் அந்த இடத்தைக் கடந்தபோது, “டேய், இங்கதான் அவனுங்களுக்குள்ளேயே சுட்டுக்கிட்டானுங்களாம். நல்லதுதான்” என்று சொல்லி இருக்கிறான். இதை வீரப்பனின் ஆட்கள் கூறியதாக ஹுசேன் சொன்னார்.

# வீரப்பனும் நவாஸும் நேருக்கு நேர் துப்பாக்கியோடு...!

**ஆ**கஸ்ட் 2001

ஆசனூர் எஸ்.டி.எ.ஃப். முகாம்.

“கவலைப்படாதீங்க பசங்களா, உங்க எல்லோருக்கும் இருக்கு” என்று கூறியபடி மோகன் நவாஸ் சிரித்தார். நான்கு தெரு நாய்கள் அவரை ஆர்வத்துடன் சூழ்ந்து கொண்டிருந்தன. வாலை ஆட்டிக் கொண்டிருந்த நாய்களுக்கு உணவிட்டுக்கொண்டிருந்தார்.

“உங்களுக்கு அவங்க மேல ரொம்ப பாசம் போல” என்று நான் புன்னகைத்தேன்.

“என்னோட உயிரைக் காப்பாத்தினவங்களோட ஞாபகார்த்தமா அவங்களுக்குப் பேர் வைச்சிருக்கேன்” என்று அவர் சீரியசாகச் சொன்னார்.

“அவங்கதான் எனக்கு சிறந்த பாதுகாவலர்கள். வீரப்பன் திட்டமிட்டு நடத்துன ஒரு தாக்குதலில் இருந்து எங்களை அதுங்க காப்பாத்துனதை பின்னாடிதான் கண்டு பிடிச்சோம். என்னோட அந்த நான்கு நாய்களும் இல்லாட்டி நாம இப்ப இங்க நின்னுக்கிட்டிருக்கவே முடிஞ்சிருக்காது” என்றார் நவாஸ் பெருமூச்சு விட்டபடி.

“வீரப்பன் அன்று என்னையும் தமிழ் சாரையும் தாக்கியபோது அந்த பழைய நான்கு நாய்களும் இல்லாமல் போனது பெரிய இழப்பு” என்றார்.

“இன்னைக்கு அங்கதானே போறோம் இல்லையா? நீங்களும் எங்கூட வர்றீங்களா?” என்று கேட்டேன்.

மலைப்பாதையில் ஜீப் கிளம்பியதும், நவாஸ் தனது அற்புதமான அந்தக் கதையை விவரிக்கத் தொடங்கினார்.

பிப்ரவரி 1996.

திம்பம் மலைகளின் மேற்குச் சரிவுகளுக்கு கீழே முகாமை அமைத்து சிதறிப்போன தனது கேங்கை மறுபடியும் ஒழுங்கமைக்க முயற்சித்துக் கொண்டிருந்தான் வீரப்பன். துப்பாக்கிச் சித்தன் எனும் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவனையும் அவனது மனைவி கும்பியையும் வீரப்பன் தனது கூட்டத்தில் சேர்த்திருந்தான்.

துப்பாக்கியின் உதவியால் வீரப்பன் கேங்கில் நிறைய பழங்குடியினர் சேர்ந்தனர். அவனது படை ஒரு கணிசமான எண்ணிக்கையாக உயர்ந்தது. பலம் பெற்ற வீரப்பன் அடுத்து ஒரு துணிச்சலான தாக்குதலுக்குத் திட்டமிட்டான்.

பிப்ரவரி 10.

நவாஸ் வழக்கமாகத் தங்கும் ஆசனூர் அதிரடிப்படை கேம்ப் அருகே, இரவு நேரத்தில் நான்கு தெரு நாய்கள் சத்தமாகக் குரைத்துக் கொண்டிருந்தன. பதட்டமடைந்த காவலர் இருட்டுக்குள் கூர்ந்து கவனித்தபடி தாக்குதலுக்குத் தயாரானார்.

“யாரு அது?” என்று குரல் கொடுத்தார்.

நாய்கள் குரைப்புச் சத்தத்தை இருமடங்காக்கின. கேம்ப்பில் இருந்த மற்ற போலீஸ்காரர்களும் எழுந்து தங்களின் துப்பாக்கிகளுடன் வந்தனர். ஆனால் எதையும் காண முடியவில்லை.

கேம்ப் அருகே இருந்த மரங்களை நோக்கி அந்த நான்கு நாய்களும் ஓடின. வெறித்தனமாகக் குரைத்தன. இப்போதும் தாக்குதலைத் தொடுத்தால், அது ஆபத்தை அதிகரிக்கும் என்று உணர்ந்து, இன்று தாக்குதல் வேண்டாம் என்று தனது கூட்டத்தினருக்கு சைகை மூலம் தெரிவித்தான். அவனும் அவனது கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் சத்தமில்லாமல் காட்டுக்குள் சென்று மறைந்தனர்.

அந்த நாய்கள் முறையாகப் பயிற்சி அளிக்கப்பட்டவை அல்ல எனினும், அத்தனை போலீஸ்காரர்களின் உயிரையும் அவை காப்பாற்றியிருந்தன.

ஆனால் வீரப்பன் நவாஸை பிடித்து விட வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தான். பல வருடங்களாக நவாஸ் மீது அவனுக்குள் வெறுப்பு வளர்ந்திருந்தது. அயராத தேடுதல் வேட்டையால் அவனுக்கு ஏற்படுத்திய அத்தனை கேடுகளுக்கும் — அது கற்பனையோ உண்மையோ — நவாஸ்தான் காரணம் என்று அவன் நினைத்தான். சட்டத்தில் இருந்து வெகு நாட்களாகத் தப்பித் திரியும் அவன் அடைந்த தோல்விகள் மற்றும் ஏளனத்திற்கான ஒரு குறியீடாக இருந்தார் நவாஸ்.

இப்போது ஆள்பலம் கிடைத்துவிட்டது. வீரப்பன் திம்பம் — ஜெர்மலம் சாலையில் மேல்நோக்கிக் செல்லும் மலைப் பாதையில் ஒரு குறுகிய இடத்தைத் தேர்வு செய்தான். யாரேனும் வந்தால் அவர்களை அந்தப் பாதையின் நடுவில் கொண்டு சென்று பொறியில் மாட்டிவிடும் விதமாக இரு முனையிலும் ஆட்களை நிறுத்தினான்.

ஆறு நாட்கள் கடந்தன. ஏழாவது நாள், அவனது ஆள் ஒருவன் நரி போல் ஊளையிட்டான். அதைத் தொடர்ந்து கூட்டமாக ஊளைச் சத்தம் கேட்டது. நவாஸின் வாகனம் அந்த வழியாக வந்தது. அந்த வாகனத்தின் வித்தியாசமான பச்சை நிறத்தை பல மைல் தூரத்தில் இருந்து கூடப் பார்த்து விட முடியும்.

பெரும்பாலான நாட்கள், நவாஸ் முன்பக்கம் டிரைவருக்குப் பக்கத்து சீட்டில்தான் அமர்வார். ஆனால், அன்றைக்கு அந்த இடத்தை அப்போதைய

எஸ்.பி. தமிழ்ச்செல்வனுக்குக் கொடுத்திருந்தார். டிரைவர் இளங்கோவன், கான்ஸ்டபிள் ரகுபதி, ஹெட் கான்ஸ்டபிள் செல்வராஜ், சப்—இன்ஸ்பெக்டர் லயோலா இக்னேஷியஸ் ஆகியோரும் அவருடன் சென்றனர்.

வாகனம் மேல்நோக்கிச் செல்லத் தொடங்கிய பொழுது தமிழ்ச் செல்வனும் நவாஸும் பல விஷயங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்தனர். மலை மேல் ஏற என்ஜின் போராடியது, அளவுக்கு மீறி இரைச்சலுடன் திணறியது. இதனால் தமிழ்ச்செல்வன் பேசுவது நவாஸுக்குக் கேட்கவில்லை. செல்வராஜிடம் இடத்தை மாற்றிக் கொள்ளும்படி சைகை செய்தார் நவாஸ். இப்போது நவாஸ் தமிழ்ச்செல்வனின் பின்புறத்தில் அமர்ந்திருந்தார்.

இமைப்பொழுதில் திடீரென சாலையின் வலது புறத்தில் மேலே இருந்து துப்பாக்கி குண்டுகள் பாய்ந்து வந்தன. அதில் செல்வராஜ் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

ஜீப்பில் இருந்து மற்றவர்கள் நவாஸின் வீராவேச பேச்சுக்களைக் கேட்டவர்கள். இப்படிப்பட்ட திடீர் தாக்குதலை எப்படி எதிர்கொள்வது என்பதில் நன்கு பயிற்சி எடுத்திருந்தனர். இந்த இடத்தை கடக்கும் போதெல்லாம் நவாஸ் ஏற்கனவே ஒரு விதமான அசௌகர்யத்தை உணர்ந்திருக்கிறார். அந்தத் தாக்குதலில் காயமடைந்த இளங்கோவன், அந்த நிலையிலும் மலைக்குப் பக்கத்தில், யாரும் பார்க்க முடியாதபடி ஜீப்பை நிறுத்தினார்.

அவர்களைத் தாக்க காத்திருந்தவர்கள் உக்கிரமடைந்தனர். டிரைவரின் இந்த திடீர் செயலால் அவர்கள் குறி பார்த்து தாக்க முடியாமல் போனது. இதுபோதாதென்று அந்த ஜீப் வாகனமே நவாஸுக்கும், மற்றவர்களுக்கும் கேடயம் போல் இருந்தது. அவர்கள் இப்போது அந்த வாகனத்திற்கும், மலைக்கும் இடையில் பதுங்கி இருந்தனர்.

இப்போதும் சூழல் பயங்கரமாகவே இருந்தது. ஒரு புல்லட் பாய்ந்து வந்து எஸ்.ஐ. லயோலா இக்னேஷியஸ் தலையைத் துளைத்து அவரை நினைவிழக்கச் செய்தது. அவரது தலைக்குள் சிக்கலான இடத்தில் பாய்ந்த அந்த புல்லட்டை அதன்பிறகு அறுவை சிகிச்சை செய்து வெளியே எடுக்கவே

முடியவில்லை. பல ஆண்டுகளாக அது தனது இடத்தை மாற்றிக் கொண்டிருந்த போதிலும் இப்போது கூட அவரது தலைக்குள்தான் இருக்கிறது.

தமிழ்ச்செல்வனுக்கு இடது கையில் குண்டுபட்டது. ஆனால் உடனடியாக ஜீப்புக்கு அடியில் உருண்டு சென்ற அவர், அங்கிருந்தபடியே வழக்கமாகவே தன்னிடம் தயாராக இருக்கும் ஏ.கே.47—ஐ வைத்து சுடத் தொடங்கினார், ரகுபதியும் சுட ஆரம்பித்தார்.

தலையின் வலது பகுதியிலும் இடது தோளிலும் மூக்கின் இடது பகுதியிலும் உலோகத் துண்டுகளால் தாக்கப்பட்ட நவாஸ், ஒரு சிலர் கீழ்நோக்கி ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனடியாக அவர் ஜீப்பின் அடியில் உருண்டு, மறுபக்கமாக வெளியே வந்து அவர்களைப் பின்தொடர ஆரம்பித்தார். ஆனால் அந்தச் சரிவு அவர் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மோசமாக இருந்தது. உருண்டு விழுந்து ஒரு பாறையில் சென்று மோதினார். அந்த அதிர்ச்சியில் அவரது ஏ.கே.47 அவரின் கையில் இருந்து நழுவியது. அதை எடுப்பதற்கு அவர் கடுமையாக போராடி, அதைக் கைப்பற்றியதும், அவருக்குள் நிம்மதி.

மிகுந்த சிரமப்பட்டு, நவாஸ் எழுந்தார். அவருக்கு எதிரே வீரப்பனும் அவனது ஆட்களும் நின்று கொண்டிருந்தனர்.

திடுக்கிட்ட அவரை நோக்கி வீரப்பன் தனது நாட்டுத் துப்பாக்கியையும் எஸ்.எல்.ஆரையும் தூக்கினான். வீரப்பன் நேருக்கு நேராய் துப்பாக்கியோடு நிற்கும் காட்சி.

நவாஸ் அப்போதிருந்த நிலையில், ஏ.கே. 47—ஐ பிடிக்கக்கூட அவரது உடலில் பலம் இல்லை. ரத்தமும் வியர்வையும் அவரது முகத்தில் வழிந்தன. தனது விலா எலும்புகள் நொறுங்கும்படி உச்சகதியில் கத்தியபடி சுடத் தொடங்கினார்.

## பிடிபட்டால் தற்கொலை செய்யும் முடியில் நவாஸ்? நேருக்கு நேராக வீரப்பன் துப்பாக்கியோடு...

இந்த உயிரை எடுக்கத்தானே காத்திருந்தேன் என்று நவாஸ், ரத்தம் சிந்தியபடியும் தனது ஏ.கே. 47 மூலம் உச்ச ஸ்தாயியில் கத்தியபடி சுடத்தொடங்கினார்.

தோட்டாக்கள் தாறுமாறாகப் பாய்ந்தன. பயந்துபோன வீரப்பனும் அவனது ஆட்களும் அவசரமாக அங்கிருந்து தப்பிச்சென்றனர். வீரப்பனுக்கு நவாஸை அடையாளம் தெரிந்திருக்காது. அப்படித் தெரிந்திருந்தால் அவரை உயிரோடு விட்டுச் சென்றிருக்க மாட்டான்.

நவாஸ் தனது சக்தி முழுவதையும் இழந்து மறுபடியும் தரையில் சரிந்து விழுந்தார். லேசாக சுயநினைவு இருப்பதை அவரால் உணர முடிந்தது. நிறைய ரத்தம் போய் விட்டது என அவர் நினைத்தார். முகத்தில் வழிந்த ரத்தத்தை கையில் எடுத்துக் குடித்தார். அது மூர்க்கமான செயல் என்று அவர் அறிந்திருந்த போதிலும் அதைச் செய்தார்.

மலையின் மீது என்ன நடந்தது என்று தெரியவில்லை. அனைவரும் இறந்து போயிருக்கலாம். நான் வேறு வழியாக மேலே செல்ல வேண்டும். அங்கிருந்தபடி வாகனத்தைப் பார்க்க முடியும் என்று நினைத்த நவாஸ், வலியுடனும் மெதுவாகவும் தவழ்ந்து மேலே ஏறத் தொடங்கினார். கடும் காயங்களும் ரத்தமும் வடிந்த அவரால் பாதி தூரத்திற்கு மேல் நகர முடியவில்லை.

“என்னால் முடியவில்லை. ஆனால் என்னை வீரப்பன் பிடித்துவிட மட்டும் அனுமதித்து விடக்கூடாது. நான் யார் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டால் நிச்சயமாக அவமானப்படுத்தி மோசமாகக் கொலை செய்வான்” என்று நினைத்தார் நவாஸ்.

தனது முழு சக்தியையும் திரட்டி உட்கார்ந்தபடியே நகர்ந்து சென்று ஒரு மரத்தில் சாய்ந்து கொண்டார் நவாஸ். பின்னர் தனது ஏ.கே. 47 துப்பாக்கியை எடுத்து குறிபார்ப்பது போல தனது முகவாய்க்கட்டையில் வைத்துக் கொண்டார். விரல்களை டிரிக்கரில் வைத்திருந்தார். காத்திருந்தார். நினைவிழந்து விழ ஆரம்பித்தார்.

அப்போது கேட்ட காலடிச் சத்தம் அவரை உலுக்கி எழச் செய்தது. “நான் இங்கே இருந்து போயிருக்க வேண்டும்” என்று நினைத்தார். காலடிச் சத்தம் நெருங்கி வந்தது.

“மோகன் நவாஸ்... எஸ்.ஐ. மோகன் நவாஸ்” பழக்கமில்லாத குரல் ஒன்று அழைத்தது.

நவாஸ் தனது கண்களை மூடி கடவுளைப் பிரார்த்தித்தார். டிரிக்கரில் தயாராகக் கையை வைத்திருந்தார்.

“ஆல்பா த்ரீ.. அங்க இருக்கீங்களா ஆல்பா த்ரீ” இன்னொரு குரல் அழைத்தது. நவாஸ் உறைந்து போனார். ‘ஆல்பா த்ரீ’ என்பது அவரை அழைப்பதற்கான சங்கேதக் குறியீடு. சக எஸ்.டி.எஃப். ஆட்களுக்கு மட்டும்தான் அது தெரியும். இது ஏதாவது ஒரு தந்திரமா? இது என்னன்னு கண்டுபிடிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கு.

“நான் இங்கதான் இருக்கேன்” கம்மிய குரலில் சொன்னார் நவாஸ். அவரது விரல்கள் டிரிக்கரில் தயாராக இருந்தது.

பழக்கமான எஸ்.டி.எஃப். முகங்கள் திடீரென்று முன்னால் தோன்றின. நான் காண்பது நிஜம்தானா என உறுதிப்படுத்திக்கொள்ள நவாஸ் முயன்று கொண்டிருந்தார். பின்னர், லேசான நிம்மதியுடன் நினைவிழந்து விழுந்தார்.

பிறகு கர்நாடக எஸ்.டி.எஃப். வீரர்களின் குரல்கள் கேட்டன. அவர்களும் நவாஸைத் தேடிக் கொண்டிருந்திருக்கின்றனர். கர்நாடக எஸ்.டி.எஃப். இன்ஸ்பெக்டர் ஜெயமாருதியும் அவரது ஆட்களும் துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில் அந்தப் பகுதியில்தான் இருந்திருக்கின்றனர்.

துப்பாக்கிச் சத்தம் கேட்ட உடனேயே அவர்கள் அந்த இடத்திற்கு வந்திருக்கின்றனர். திடீரென்று அவர்கள் வந்ததால் வீரப்பன் தாக்குதலைக் கைவிட்டுத் தப்பிச் சென்றிருக்கிறான். அன்றைக்குத் தற்செயலாக நடந்த குறிப்பிடத்தக்க பல சம்பவங்களில் இதுவும் ஒன்று.

மைசூர் மருத்துவமனைக்கு விரைந்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. தமிழ்ச்செல்வனை அந்த மருத்துவமனைக்குத்தான் முதலில் கொண்டு போயிருந்தனர். அதன்பிறகுதான் அவர் சென்னை மலர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அதே போல நவாஸும் அங்கு சேர்க்கப்பட்டு, அவர்கள் இருவரையும் முதலமைச்சர் ஜெயலலிதா, மலர் மருத்துவமனைக்கு வந்து பார்த்து நலம் விசாரித்தார்.

தமிழுக்கு இடது கையில் மூன்று விரல்கள் சேதமடைந்திருந்தன. ஆனால் விரைவிலேயே அவர் பணிக்குத் திரும்பலாம் என மருத்துவர்கள் கூறி, அவர் மீண்டும் பணிக்குத் திரும்பினார். அவரது சகாக்களும் பணியாளர்களும் ஏற்கனவே அவர் மீது வைத்திருந்த அளவு கடந்த மதிப்பு தற்போது மேலும் உயர்ந்தது.

அவரது காயம் ஒருபுறமிருக்க, தமிழ்ச்செல்வன் மறுபடியும் துப்பாக்கிகளைக் கையாளத் தொடங்கி விட்டார். அவரது துப்பாக்கி சுடும் திறனையும் மேம்படுத்திக் கொண்டார்.

இதற்கிடையில் வீரப்பன் தனது குற்ற நடவடிக்கைகளைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டான். வீடியோ டேப்புகளை வெளியிடுவதில் மும்முரமானான். அந்த டேப்புகள் தொலைக்காட்சிகளில் பெரிய அளவில் பிரபலமாயின. அந்த டேப்புகளில் அவன் ஜெயலலிதாவை எதிர்த்து தீவிரமாகப் பிரசாரம் செய்தான். அப்போது சட்டமன்றத் தேர்தலுக்கு மூன்று மாதங்கள்தான்

இருந்தன. ஜெயலலிதாவை ஆட்சியிலிருந்து இறக்க வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தான்.

வீரப்பனை விடுவதாக இல்லை நவாஸ். வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும் என்ற மருத்துவர்களின் ஆலோசனையைப் புறம் தள்ளிவிட்டு, மருத்துவமனை படுக்கையில் இருந்து நேரடியாக அவரது அலுவலகத்திற்குத்தான் சென்றார். விரைவிலேயே ஒரு நல்ல இன்ஃபார்மரைப் பிடித்துவிட்டார். அந்த இன்ஃபார்மர்தான் பின்னாளில் வீரப்பனின் பெரும் துயரத்திற்குக் காரணமாக அமைந்தார்.

ஆகஸ்ட் 2001

ஒரு நாள் காலை, வீரப்பனைப் பற்றிய கோப்புகளையும் எங்களது நம்பிக்கைக்குரிய தகவல்களையும் மோகன் நவாஸுடன் ஆராய்ந்து கொண்டிருந்தேன். அப்போது, மிக மோசமாக அழுகிப் போன ஒரு உடலின் புகைப்படங்கள் கண்ணில்பட்டன.

இந்த புகைப்படங்கள் எடுப்பதற்கு முன்பு ஒரு சில நாட்கள் அந்த உடல் வெட்ட வெளியில் கிடந்திருக்கும் எனத் தோன்றியது. இயற்கை சுத்திகரிப்பு உயிரினங்களான நுண்புழுக்கள், ஈக்கள் மற்றும் வண்டுகள் அந்த உடலின் மீது ஏற்கனவே தங்களது பணிகளைச் செய்திருந்தன. இருப்பினும், அந்த மனிதனின் இடுப்பு வரையில் வளர்ந்திருந்த முடி அவன் யாரெனச் சொன்னது.

பேபி வீரப்பன்தானே? மோசமான மரணம், இல்லையா? என்று கேட்டேன்.

நவாஸ் தலையசைத்தார். “ஆமாம். நாங்க உண்மையிலேயே ஆச்சரியப்பட்டோம். பேபி ஒரு பெண் பித்தன். அவனோட சாவு நம்மைப் பல தொல்லைகளில் இருந்து காப்பாத்தி இருக்கு. அவன் வீரப்பனைவிட மோசமா வந்திருப்பான்” என்றார்.

ஏப்ரல் 1997

1994—ல் டி.எஸ்.பி. சிதம்பரநாதன் கடத்தப்பட்ட போது பேபி வீரப்பன்தான் பேச்சுவார்த்தைத் தூதுவராகச் செயல்பட்டான். பேபி வீரப்பன் சட்டென்று கோபப்படக் கூடியவன், இரக்கமற்றவன், திமிர்பிடித்தவன். பேபி தனது தலைமுடி மீது அதிக அக்கறை வைத்திருந்தான்.

வீரப்பனுக்கு அவனது முறுக்கு மீசையைப் போலவே இவனுக்கு தலைமுடி சொந்த அடையாளமாக இருந்தது. முடியை விரித்துப் போட்டு விட்டு, அவ்வப்போது தலையை உலுக்கி முடியை அசைப்பது அவனுக்குப் பிடிக்கும். பெண்களுக்குப் பிடித்தமானவன் என்று அவனே அவனைப் பற்றிக் கற்பனை செய்து கொண்டிருந்தான். அவன் ஆசைப்படும் பெண் திருமணம் ஆனவளா இல்லையா என்பது பற்றியெல்லாம் அவனுக்குக் கவலை இல்லை.

1998 ஏப்ரல், பேபி எதிர்பாராதவிதமாக தொடக்கூடாத பெண்ணைத் தொட்டு விட்டான். அவள் கும்பி. துப்பாக்கி சித்தனின் மனைவி. உள்ளூர் சோழிகாஸ் பழங்குடியினர் மத்தியில் செல்வாக்கு மிக்க சித்தன் அதன் காரணமாகவே வீரப்பனிடம் செல்வாக்குப் பெற்றவன்.

ஒரு நாள் கேம்ப்பில் வீரப்பன் முன்னால் வந்து நின்றான் சித்தன். வீரப்பனிடம் ஏதோ சொல்ல வந்து தயங்கினான்.

“பேசு.. என்ன பிரச்சினை உனக்கு?” என வீரப்பன் கேட்டான்.

சித்தன் தலையில் அடித்துக் கொண்டான். கால்களை உதறினான். அழ ஆரம்பித்தான். “நான் சொல்றத நீங்க நம்ப மாட்டீங்க... ஆனா கடவுள் மேல ஆணையா அது உண்மை” என்றான்.

“என்ன?” என்று கேட்ட வீரப்பன், அருகில் நின்றவர்களை வெளியே போகச் சொல்லி சைகை செய்தான்.

“அய்யா, பேபி என்னோட பொண்டாட்டிய தொந்தரவு செய்றான்யா” என்று அவசரமாகச் சொன்னான் சித்தன்.

“கும்பியா” அதிர்ச்சியுடன் கேட்டான் வீரப்பன்.

‘ஆமாம்’ என்று தலையசைத்த சித்தன் முகத்தை மூடிக் கொண்டு மேலும் அழுதான்.

வீரப்பனின் முகம் கடுமையாக மாற, தனது இடது கையை தூக்கி துப்பாக்கி சித்தனை அழாதே என்று சைகை காட்டினான்.

பேபி வீரப்பனை ஆத்திரம் பொங்க அழைத்தான்...

# பேபி வீரப்பனை என்கவுன்ட்டர் செய்தது யார்?

தன் மனைவியிடம் தகாத முறையில் பேபி வீரப்பன் நடந்து கொள்கிறான் என்று துப்பாக்கி சித்தன் புகார் அளித்ததும் வீரப்பன் முகம் மாறியது.

“நீ போ” என்றான் வீரப்பன்.

உடனடியாக தனது இரு கைகளையும் கூப்பி வணக்கம் சொல்லிவிட்டு கேம்ப்பை விட்டு வெளியேறினான் சித்தன்.

அந்த சம்பவத்தைப் பற்றி இன்ஃபார்மர்கள் சொன்னபோது, சித்தன் வெளியே போனதும் வீரப்பன், ஆத்திரம் பொங்க பேபி வீரப்பனை அழைத்தான் என்றனர்.

பேபி வந்ததும், வீரப்பன் தனது கோபத்தை வெளிப்படுத்தினான். “முட்டாளே, நீ என்னதான்டா நெனச்சிக்கிட்டு இருக்க? அவன் நமக்கு முக்கியமானவன். அவனோட பொண்டாட்டி பின்னாடி போயிருக்க... உன்னோட வெறியக் கொஞ்சம் அடக்கு” என்று கத்தினான்.

பேபியின் முகம் சிவந்து விட்டது. வீரப்பன் தன்னிடம் இவ்வளவு கடுமையாகப் பேசி சந்தித்ததில்லை. ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், விருட்டென்று வெளியேறினான்.

பேபி சமாதானம் ஆனதைப் போல் தெரிந்தது. ஆனால் வீரப்பனுக்கும் அவனுக்கும் இடையிலான முரண்பாடு அதிகரித்தது. அதற்குப் பிறகு வீரப்பன், தன் கேங்கை விட்டு பேபி வெளியேற அனுமதித்தான். தூரத்து உறவினன் என்ற பாசத்தில் அவன் கையில் இருக்கும் 303 துப்பாக்கியை வைத்துக் கொள்ள அனுமதித்ததோடு, ஒரு ஜோடி தந்தத்தையும் பரிசாகக் கொடுத்தான்.

அதை விற்று அவன் புதிய வாழ்க்கையைத் தொடங்க ஏதுவாக அதைக் கொடுத்தான்.

பேபி உடனடியாக கிட்டாபாய் குள்ள பாச்சாவை சந்திக்கச் சென்றான். அண்டர்வேர்ல்டு உலகத்தில் சட்டவிரோத தந்தத்தைக் கைமாற்ற வேண்டுமென்றால் நீங்கள் குள்ள பாச்சாவைத்தான் சந்திக்க வேண்டும். எனவே பேபி அவனை முதலில் சந்திக்கச் சென்றதில் ஆச்சரியமில்லை. ஆனால் பேபி அவனது திமிர்த்தனத்தால் ரகசியமாகச் செயல்படாமல் அலட்சியமாகத் திரிந்தான்.

அதனால் குறுகிய காலத்திலேயே அந்த தகவல் வெளியே கசிந்துவிட்டது. ‘‘கண்ணுக்குட்டி தனியா சுத்துது’’ நவாஸின் காதுக்குள் இன்ஃபார்மர் ஒருவர் ரகசியம் சொன்னார்.

‘‘சமயம் பார்த்து அந்த கண்ணுக்குட்டிய கொண்டுவா’’ என்று நவாஸ் சொன்னார்.

அந்த இன்ஃபார்மர் கந்தவேல் தலையை அசைத்தான். ‘‘விரைவில்’’ என்றான். குள்ளபாச்சா கேம்ப்புக்குச் சென்றான்.

பேபியைப் போலவே கந்தவேலும் ஒருகாலத்தில் வீரப்பனின் ஆயுதக் குழுவில் இருந்தவன்தான். மூன்று வருடங்களாக அங்கு இருந்தான். அவனுக்கும் கேங்கில் இருந்த மற்ற சிலருக்கும் இடையில் ஒரு சின்ன சண்டை ஏற்பட்டு, அவன் கேங்கை விட்டு வெளியேறினான்.

ஆனால் அந்தப் பழைய பழக்கத்தில் அந்த கேங்குக்கு கொரியர் வேலை பார்த்துக் கொண்டுதான் இருந்தான். கந்தவேல் கேங்கை விட்டு வெளியேறியதற்குப் பிறகு, நவாஸ் அவனை வெகு ஜாக்கிரதையாக பயன்படுத்தி இருக்கிறார் என்பதை வீரப்பன் அறியவில்லை.

குள்ள பாச்சாவை சந்திக்கச் செல்லும் வழியில் கந்தவேல் தாளவாடி காட்டில் உள்ள பேபியைச் சந்தித்தான். பேபி உப்புமா சமைத்துக் கொண்டிருந்தான். பாச்சாவிடம் வேலை செய்த மூன்று பையன்கள் அவனோடு

பேசிக் கொண்டிருந்தனர். பாச்சா தந்தத்தைப் பற்றி டீல் பேச அங்கே வருவதற்குள் அங்கே எல்லாம் சரியாக இருக்கிறதா என்று வேவு பார்க்க வந்தவர்கள் அவர்கள்.

சிறிது நேரம் கழித்து பாச்சாவின் ஆட்கள் போனதற்குப் பிறகு, கந்தவேல் அங்கே தரையில் கிடந்த பேபியின் துப்பாக்கியைப் பார்த்தான். அப்போது அவர்கள் இருவர் மட்டுமே தனியாக இருந்தனர்.

‘‘இது சரியான சந்தர்ப்பம்’’ என்று கந்தவேல் நினைத்தான். பேபியைப் பிடித்து அவனை எஸ்.டி.எ.ஃப். முன் நிறுத்த வேண்டுமானால், தந்திரம் மிக்க எதிரியின் அச்சுறுத்தல் நிறைந்த ஒரு பகுதியில் மைல்கணக்கில் நடந்து செல்ல வேண்டும் என்று நினைக்கும் போது அவனுக்கு சிறிது வேடிக்கையாக இருந்தது.

‘‘ஆபத்தான வேலை. இப்பவே செய்யணும். இப்பவே’’ என்று கந்தவேல் முடிவு செய்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் துப்பாக்கியைக் கைப்பற்றினான். ட்ரிக்கரை இழுத்தான். அந்த சக்திவாய்ந்த 303 துப்பாக்கி எதிரி 600 கெஜ தூரத்தில் இருந்தாலும் அவனைச் சுட்டு வீழ்த்தக் கூடியது. பேபி ஒரு கெஜ தூரத்தில்தான் இருந்தான். தோட்டாக்கள் அவனது உடலை சல்லடையாகத் துளைத்தன.

அமைதியான அந்தக் காட்டில் வெடித்த அந்த துப்பாக்கிச் சத்தம் பாச்சாவின் ஆட்களுக்குக் கேட்டது. அவர்கள் பீதியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

‘‘போலீஸ்’’ அதிர்ச்சியோடு ஒருவன் சொன்னான். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் ஓடத் தொடங்கினர். அடுத்த சில நாட்கள் அவர்கள் பாச்சாவைச் சந்திக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. அந்த சம்பவம் போலீஸ் தாக்குதல் இல்லை. பாச்சா உயிரோடுதான் இருக்கிறான் என்று தெரிந்த பிறகுதான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவர்கள் பாச்சாவை மீண்டும் சந்திக்கச் சென்றனர்.

இதற்கிடையில் பேபியின் சாவைப் பற்றி அறிந்த வீரப்பன் ஆத்திரமானான். அதிர்ஷ்டம்தான் வேலை செய்திருக்க வேண்டும். அந்தச் செய்தியை வீரப்பன் கேள்விப்படும்போது கந்தவேல் அங்குதான் இருந்தான். பாச்சாவின் ஆட்கள் அந்த துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டார்கள் என்ற விஷயமும் கந்தவேலுக்குத் தெரியாது. எனவே பேபியின் கதை முடிந்தது பற்றி எதுவுமே தெரியாத மாதிரி காட்டிக்கொள்வதுதான் சிறந்த வழி என்று நினைத்தான்.

‘‘துப்பாக்கி சித்தன் எங்க? அவன்தான் பேபியப் பத்தி புகார் சொன்னான். அவனைப் பிடிங்கடா’’ என்று கத்தினான்.

அதற்குள் துப்பாக்கி சித்தனுக்கும் பேபியின் சாவுச் செய்தி தெரிந்துவிட்டது. அவனைத்தான் முதலில் சந்தேகப்படுவார்கள் என்பதை யும் உணர்ந்தான். உடனடியாக தண்டனை வழங்கும் அவனிடமிருந்து தப்பிக்க தனது மனைவியுடன் தலைமறைவாகி விடுவதுதான் நல்லது என்று துப்பாக்கி சித்தன் முடிவு செய்தான்.

இது, பேபியைக் கொன்றது துப்பாக்கி சித்தன்தான் என்ற வீரப்பனின் எண்ணத்தை மேலும் வலுப்படுத்தியது. இந்த தவறான புரிதல் வெகு நாட்களுக்கு நீடித்துக் கொண்டிருந்தது. ஆனால் கந்தவேலுக்கு துரதிர்ஷ்டம் நேரம் நெருங்கியது.

பாச்சா வீரப்பனைச் சந்திக்க முடிவு செய்திருந்தான். பேபியின் மரணம் குறித்து துக்கம் விசாரிக்கவும், தனக்கு அந்தக் கொலையில் சம்பந்தமில்லை என விளக்கவும்தான் பாச்சா அவனைச் சந்தித்தான்.

‘‘பேபி சாவைப் பத்திக் கேள்விப்பட்டதும் அப்படியே அதிர்ச்சியாயிட்டேன். நான் அன்னைக்கு அவனைச் சந்திக்க போயிட்டிருந்தேன். என்னோட ஆட்களும் கந்தவேலும்தான் பேபி கடைசியா சந்திச்ச நண்பர்களா இருக்கும்’’ என்று அவன் வீரப்பனிடம் சொன்னான்.

வீரப்பன் தனது மீசையைத் தடவியபடி மௌனமாகத் தலையை ஆட்டிக் கேட்டுக் கொண்டிருந்தான். திடீரென்று பாச்சாவைப் பார்த்து, ‘‘கந்தவேல் ஏன்

அங்கே வந்தான்?'' என்று கேட்டான்.

''பேபி சாவுறதுக்கு கொஞ்சம் முன்னாடி அவனும் என்னோட பசங்களும் பேபியை சந்திச்சிருக்காங்க. கடைசியா பேபியையும் கந்தவேலையும் தனியா விட்டுட்டு என்னோட பசங்க வந்துட்டாங்க. அதுதான் பசங்க அவங்கள கடைசியா பாத்தது. அப்புறம் கொஞ்ச நேரம் கழிச்சு துப்பாக்கிச் சத்தம் கேட்டிருக்கு'' என்று சொன்னான் பாச்சா.

வீரப்பனின் கண்கள் மெதுவாக விரிந்தன. கோவிந்தன் பக்கம் திரும்பி, ''பேபி சாவைப் பத்தி செய்தி கேள்விப்பட்ட அன்னைக்கு கந்தவேல் இங்க இருந்தான்ல்ல?'' என்று கேட்டான்.

தலையை ஆட்டிய கோவிந்தன், ''ஆனா அவன் பேபிய சந்திச்சதைப் பத்தி சொல்லல'' என்றான்.

வீரப்பனும் கோவிந்தனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களின் ஆத்திரம் உச்சகட்டத்தை அடைந்தது. வீரப்பன் தலையில் அடித்துக் கொண்டான். ''துப்பாக்கி சித்தனை பத்தி அன்னைக்கு நாம பேசிக் கொண்டிருந்தபோது அந்த தே... மகன் இங்கதான் உக்காந்திருந்தான். எல்லாத்தையும் மனசுக்குள்ள சிரிச்சிக்கிட்டே கவனிச்சிக்கிட்டு இருந்திருப்பான்'' என்றான்.

''முள்ள முள்ளாலதான் எடுக்கணும்'' என தெளிவாகச் சொன்ன வீரப்பன், ''கந்தவேல துண்டு துண்டா கிழிச்சுப் போடணும். அவன இங்க வரச்சொல்லு. தாமதப்படுத்தாத... அவனுக்கு சந்தேகம் வந்துடக் கூடாது. பாச்சா நீ அவனைக் கூட்டிட்டு வா'' என்றான்.

# வீரப்பன் கொடுத்த 2 மரண தண்டனை!

பேபி வீரப்பனை சுட்டுக்கொன்றது போலீஸ் இல்லை என்ற மர்மம் தெரிந்ததும் தன்னிடம் கூலி வேலை பார்த்த கந்தவேல் மீது வீரப்பனுக்கு சந்தேகம் வந்தது.

‘கந்தவேலை அழைத்து வா’ என்று பாச்சாவுக்கு உத்தரவிட்டான்.

ஒரு சில நாட்களுக்குப் பிறகு, எதுவும் தெரியாத கந்தவேல் வீரப்பன் வைத்த பொறியில் மாட்டினார். வீரப்பனை அவர் சந்தித்த அந்த இடத்திற்குப் பெயரே கெஞ்சிமடுவு. ஒரு புன்னகையுடன் வீரப்பனை சந்தித்த அவர், அவனது முகம் கல்லாக இறுகி இருந்ததைப் பார்த்து வெளிறிப்போனார்.

அந்த மயான அமைதியை கோவிந்தன்தான் உடைத்தான். “எஸ்.டி.எஃப். படையில நீ யாரையாவது சந்திச்சியா? என்று அவன் கந்தவேலைப் பார்த்துக் கேட்டான்.

“இல்லை” கந்தவேல் பலவீனமாகச் சொன்னான்.

கோவிந்தன் மேலும் கடுமையானான். அவனது கண்களில் இருந்த கொடூரத்தைப் பார்த்த கந்தவேலுக்கு தப்பிக்கவே முடியாது எனத் தோன்றியது. “பாச்சாகிட்ட இன்னும் கொஞ்சம் நெருக்கமா விசாரிச்சிருக்கணும்” என்று நினைத்தான். ஆனால் இப்போது காலம் கடந்து விட்டது.

இப்போதும் அவர் பொய் சொல்ல முயற்சித்தார். “எதைப் பத்தி பேசுறீங்க?” என்று கேட்டார்.

கோவிந்தன் தனது துப்பாக்கியை கந்தவேல் நெஞ்சில் வைத்து, “பேபி சாகுறதுக்கு கொஞ்சம் முன்னாடி அவனை நீ பாத்தியா?” என்று கேட்டான்.

கந்தவேலின் தைரியம் முழுவதும் போய்விட்டது. அவரது கால்கள் நடுங்க ஆரம்பித்தன. தோல்வியில் அவரது தோள்கள் துவண்டு விட்டன. இழுத்து மூச்சு விட்டபோது, தொண்டை கரகரத்தது. வறண்டு போனது.

“தே... பையா, நாங்க சித்தனை சந்தேகப்பட்டோம். அவனைக் கொன்னிருப்போம். அன்னைக்கு நாங்க அவனைத் திட்டிக்கிட்டு இருந்தபோது எங்க மடியில கிடந்த பாம்பு போல இங்கதானடா உக்காந்திருந்த” கோவிந்தன் உறுமினான்.

“என்னைய மன்னிச்சிடுங்க. நான் அப்படி நெனைக்கல... அது மோகன் நவாஸ்னு நெனைச்சேன்” கந்தவேல் உளறினார்.

நவாஸ் பெயரைக் கேட்டதும் வீரப்பனுக்கு ஷாக் அடித்ததைப் போல இருந்தது. “அந்தத் தே... மகன் மறுபடியும் வந்துட்டானா” என்று உறுமினான்.

கந்தவேலின் துரோகச் செயல்களை நிஜமோ கற்பனையோ வரிசையாக நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் அவனது ஆட்கள் கந்தவேலை அடித்து உதைத்துக் கொண்டிருந்தனர். கந்தவேல் உடல் நடுங்கத் தொடங்கியது. அன்றைய தினம் ஏற்கனவே அதிகக் குளிராக இருந்தது.

கந்தவேல் முழங்காலிட்டிருந்தார். வேதனையில் நினைவிழந்தார். அவருக்கு அருகே கோவிந்தன் நின்று கொண்டிருந்தது மங்கலாகத் தெரிந்தது. கடைசியாக வீரப்பனிடம் மன்னிப்பு கேட்பதைப் போல கெஞ்சலான ஒரு பார்வை பார்த்தார். ஆனால் அதை வீரப்பன் கண்டு கொள்ளவில்லை.

துப்பாக்கியை சொடுக்கும் சத்தம் கடைசியாக இருந்த ஒரு சிறு நம்பிக்கையையும் விழுங்கியது. ஒரு அச்சுறுத்தும் அமைதி நிலவியது. அதன் பிறகு ஒரே ஒருமுறை துப்பாக்கி வெடித்தது.

இன்ஃபார்மரின் மரணம் எஸ்.டி.எஃப். முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதுபோன்ற இன்ஃபார்மர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் விதத்தில் கந்தவேலின் கடைசி நிமிடங்களை வீரப்பன் கேமராவில் படம் பிடித்திருந்தான். ஒரு சில நாட்களுக்குப் பிறகு அவரது கோரமான மரணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் “வீரப்பன் கோர்ட்டில் விசாரணை துரோகிக்கு மரண தண்டனை” என்ற அலறும் தலைப்புடன் வார இதழ் செய்தி வெளியிட்டது.

வீரப்பன் நடமாட்டம் உள்ள மலைகளிலும் காட்டுப் பகுதிகளிலும் உரத்த குரலில் இந்தச் செய்தி பரவியது, ஒவ்வொருவர் சொல்லும் போதும் அந்தக் கதை மேலும் மேலும் பயங்கரமானது. “நீங்க எனக்கு எதையும் செய்ய விரும்பலைன்னா... எனக்கு எதிரா எதையும் செய்யாம இருங்க அது போதும்” என்ற தனது செய்தியை வீரப்பன் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி இருந்தான்.

ஒரு வருடத்திற்குப் பிறகு வீரப்பன் கேங்கைச் சேர்ந்த மற்றொருவன் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டதற்காக வீரப்பனின் ஆத்திரத்திற்கு ஆளானான். அவன் பெயர் மெய்கி ரங்கசாமி. வீரப்பன் கேங்கைச் சேர்ந்தவன்.

அவனைப் பற்றி விவசாயி ஒருவர், தனது மனைவியிடம் தவறாக நடந்து கொள்வதாக வீரப்பனிடம் புகார் செய்தார். வீரப்பன் அந்த நேரத்தில் தமிழ் தீவிரவாத குழுக்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலன் என்ற இமேஜை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருந்தான்.

பேபியை இதற்கு முன்பு வீரப்பன் எளிதாக விட்டு விட்டான். ஆனால் ரங்கசாமி விஷயத்தில் அத்தகைய கருணையை அவன் காட்டவில்லை. கொடூரமாக கொலை செய்தான். மீண்டும் ஒருமுறை வீரப்பனின் நீதி காமிராவில் பதிவானது.

இதற்கிடையில் வேறு சில வதந்திகள் பரவின. வீரப்பன் கடுமையான இருமலால் அவதிப்படுவதாகவும் ரங்கசாமி கொலைக்கு ஒரு சில நாட்களுக்கு

முன்பு அவன் உள்ளூர் வைத்தியர் ஒருவரிடம் மருந்து வாங்கியதாகவும் வதந்திகள் பரவின. எஸ்.டி.எ.ஃப். புலனாய்வுப் பிரிவுக்கு வீரப்பன் கடுமையாக நோய் வாய்ப்பட்டிருப்பதாக செய்தி வந்தது.

இதே மாதிரியான ரகசியச் செய்திகள் வரத் தொடங்கின. ஒரு சிலர் அவன் காச நோயால் அவதிப்படுவதாகச் சொன்னார்கள். அவனால் நடக்கக்கூட முடியவில்லை என்றார்கள். அவன் இறந்துவிட்டான் என்ற தகவல் உண்மையா என்று அதிரடிப்படையினர் விசாரிக்க ஆரம்பித்தனர். இதைத் தொடர்ந்து, மணிகரை என்ற மலை கிராமத்தின் அருகில் வீரப்பன் இறந்து கிடப்பதாக ஒரு செய்தி காட்டுத் தீ போலப் பரவியது. அந்தப் பகுதி கடுமையான வறட்சி காரணமாக பல பத்தாண்டுகளுக்கு முன்பே கைவிடப்பட்ட ஒரு பகுதி.

வீரப்பன் இறந்து விட்டான். ஆனால் அவனது கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக அவனது சடலத்தின் மீது போலீஸ் கை படக்கூடாது என்று அவனது கூட்டத்தினர் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

வீரப்பன் இறந்த செய்தி அதிரடிப்படைக்கு வந்த போது, அதை உற்சாகமாகவும் அதே சமயத்தில் ஏமாற்றமாகவும் அவர்கள் எதிர்கொண்டனர். வீரப்பன் கடைசியாக முடிந்தான் என்பதில் அவர்கள் உற்சாகமடைந்தனர். அதே சமயத்தில் சாவின் மூலம் நீதியை ஏமாற்றி விட்டானே என்பதில் ஏமாற்றமடைந்தனர்.

உண்மை என்ன என்று கண்டறிவதற்காக அந்தப் பகுதிக்கு அசோக்குமார் தலைமையில் தேடுதல் குழு ஒன்று சென்றது. அங்கு தோண்டிப் பார்த்த போது, ஒரு வார இதழ், நாட்டுத் துப்பாக்கிகள், துணிமணி வைத்திருந்த பேக்குகள், காற்றுப்புகாவண்ணம் சீல் வைக்கப்பட்ட டைரிகள், பாலிதீன் பைகளில் கட்டி வைக்கப்பட்டிருந்த அரிசி, எண்ணெய் மற்றும் உணவுப் பொருட்கள் கிடைத்தன.

அதன் மூலம் அங்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆட்கள் தங்கி இருந்திருக்கின்றனர் என்பது தெரிந்தது. ஒரு சிரட்டை, உடைந்து போன மண் பானை கடைசியாக ஒரு எலும்புக் கூடு (வீரப்பனின் உயரத்தோடு அது ஒத்துப்போனது) ஆகியவையும் அங்கு கிடைத்தன. அந்த சிரட்டையும் உடைந்து போன பானையும் சோத்துக்குளி கோவிந்தன் வீரப்பனுக்குச் செய்த இறுதிச் சடங்கின் அடையாளங்கள் என்று ஆனது.

பிறகு எஸ்.டி.எஃப். கிட்டத்தட்ட இறந்தது மெய்கி ரங்கசாமிதான் என்று முடிவு செய்து விட்டனர். எனினும் அது வீரப்பனாக இருக்குமோ என்று சிறு சந்தேகம் இருந்து கொண்டிருந்தது. தடயவியல் நிபுணர்கள் இதனை உறுதிப்படுத்துவதற்கு முன்பே, வீரப்பனை வேறு இடத்தில் பார்த்ததாக நம்பகமான தகவல்கள் வந்தன.

ஆனால் உண்மையான பல பூதங்கள், வீரப்பனின் டயரி ஒன்றின் மூலம் வெளியே வர ஆரம்பித்தன.

இதன் மூலம் முதல்முறையாக, வீரப்பனின் நீண்டகாலத் திட்டங்கள் என்ன என்பது தெரிய வந்தது. தமிழ்நாடு விடுதலைப் படை என்ற தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த நெல்லிக்குப்பம் ரமேஷ் என்பவன் வீரப்பன் கேங்கில் இருந்தான். தமிழ்நாடு போலீசின் க்யூ பிராஞ்ச் ஆட்கள் இந்த தமிழ்நாடு விடுதலைப் படை மட்டுமின்றி தமிழ்நாடு மீட்பு குழுக்களுக்கும் வீரப்பன் கூட்டத்திற்கும் இருந்த பயங்கரமான தொடர்புகள் என்னவென்பதைக் கண்டறிந்தனர்.

இந்த நிலையில், வீரப்பன் இரண்டு முறை துப்பாக்கித் தாக்குதலில் இருந்து தப்பித்தது என்னை வியப்புக்குள் ஆழ்த்தியது.

# 24 மணி நேரத்தில் இரண்டு முறை தப்பித்த வீரப்பன்!

ஆகஸ்ட் 2001

மிகக் குறுகிய இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள், வீரப்பன் இரண்டு முறை மயிரிழையில் தப்பி இருக்கிறான்? என்று நினைத்தேன். நம்ப முடியாததுதான். அதுதான் உண்மை.

ஒரு வருடத்தில் இரண்டு மூன்று முறைதான் பாதுகாப்புப் படையினருக்கு வீரப்பனின் தரிசனம் கிடைத்திருக்கிறது. ஆனால், இப்போது ஒரே நாளில் இரண்டு முறை தரிசனம் தந்து விட்டுப் போயிருக்கிறான். ஆர்வத்துடன் நான் அந்த பைலைத் திறந்தேன்.

நவம்பர் 1998.

அசிஸ்டெண்ட் கமிஷனர் வி.எஸ்.நாயக் சுற்றிப் பார்த்து விட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டார். கர்நாடக எஸ்.டி.எ.ஃப். தேடுதல் குழு ஒன்றுடன், நீர் நிலை ஒன்றின் பக்கத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். நாயக்கின் ஆட்கள் ஒரு சிலர் அங்கு நடந்தபடி தங்களுக்குத் தாங்களே புத்துணர்ச்சி ஊட்டிக் கொண்டிருந்தனர். அப்போதுதான் அவர்களுக்குப் பின்னால் அந்த சலசலப்பைக் கேட்டனர். பதறி அடித்துப் பார்த்தபோது வீரப்பனையும் அவனது ஆட்களையும் பார்த்தனர்.

அந்த எதிர்பாராத தருணத்தில் இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் திடுக்கிட்டுப் பார்த்துக் கொண்டனர். ஒரே சமயத்தில் ஒவ்வொருவரும் அவரவர்

துப்பாக்கியை எடுத்தனர். ஆனால் அந்தக் குழப்பத்தில் அட்ரீனல் சுரப்பியின் வேகத்தில், ஒரு புல்லட் கூட குறிபார்த்த இடத்தில் சென்று தாக்கவில்லை.

காட்டுமிராண்டித்தனமாக கெட்ட வார்த்தைகளை சொல்லிக்கொண்டே வீரப்பன் சுடுவதை நிறுத்திவிட்டு ஓட்டம் பிடித்தான். என்ன நடக்கிறது என்பதை தேடுதல் குழுவினர் புரிந்துகொள்வதற்கு முன், அவர்களின் டார்க்கெட் ஒரு பாறையில் இருந்து மற்றொரு பாறைக்குத் தாவி, கடைசியில் அங்கிருந்து தப்பித்து மறைந்ததை அவர்களால் பார்க்க முடிந்தது.

நாயக்கும் அவரது ஆட்களும் துரத்திப் பார்த்தனர். ஆனால் வாய்ப்பு முடிந்திருந்தது. நெடுங்காலத்திற்குப் பிறகு ஒரு போலீஸ்காரர் வீரப்பனை நேருக்கு நேர் பார்ப்பது இப்போதுதான். நாயக்கால் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை.

ஒரு சில மணி நேரம் கழித்து, தமிழ்நாடு எஸ்.டி.எ்.ப். படையினருக்கும் இதே மாதிரியான சம்பவம் நேர்ந்தது.

மலையில் இருந்த ஒரு உள்ளூர் போலீஸ் ஸ்டேஷனில் இருந்து பண்ணாரி எஸ்.டி.எ்.ப். கேம்ப்புக்கு ஒரு தகவல் வந்தது. வீரப்பன் உள்ளூர் வியாபாரி ஒருவன் வீட்டிற்கு தோசை சாப்பிட வருவதாக கூறியிருக்கிறான் என்பதுதான் அந்த தகவல். அந்த வியாபாரியின் மகன் உடனடியாக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சொன்னதாக எஸ்.டி.எ்.ப்.க்கு தகவல் கிடைத்தது.

துப்பாக்கி சுடுவதில் வல்லவரான ஹுசேன் இந்த முறை அந்தக் குழுவுக்குத் தலைமை தாங்க தானாக முன்வந்தார். அவர்கள் அந்த வீட்டை சுற்றி வளைக்கக் கிளம்பினர். அந்த வீடு ஒரு குடிசையைக் காட்டிலும் கொஞ்சம் பெரிதாக இருந்தது. அவர்கள் புதர்களுக்கு அடியில் மறைந்து மறைந்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறினர். “ஜாக்கிரதை பசங்களா... உற்சாகத்துல ட்ரிக்கரை அழுத்திடக் கூடாது” என்று ஹுசேன் அவர்களிடம் ரகசியமாகச் சொன்னார்.

குழு உறுப்பினர்கள், அவர்களில் நிறைய ஆர்வக் கோளாறுகள் இருந்தனர், ஒருவரை ஒருவர் பார்த்தவாறு சரி என்பதாகத் தலையை அசைத்தனர். உற்சாக மிகுதியில் உணர்ச்சிவசப்பட்டு ஏதாவது செய்துவிட அதிக வாய்ப்பிருக்கிறது என்பது அவர்கள் அனைவருக்கும் நன்றாகவே தெரிந்திருந்தது. அந்த உற்சாகம் விநாடிப் பொழுதில் வாழ்வா, சாவா என்பதை தீர்மானித்துவிடும் என்பதும் புரிந்திருந்தது.

திடீரென்று விசித்திரமான சத்தம் ஒன்றை அவர்கள் கேட்டனர். அந்த சத்தம் யாரோ பறவைகளை விரட்டுவது போன்ற ஓசை கேட்டது. ஹுசேன் அவசரப்பட விரும்பவில்லை. அந்தப் பணிகள் அனைத்தையும் அவர்கள் நான்கு பேரிடம் ஒப்படைத்து விட்டு, அவர் அந்த குடிசையை நோக்கி திருட்டுத்தனமாக நகர்ந்தார். இப்போது அவர்களால் அங்கு என்ன நடக்கிறது என 90 சதவிகிதம் மறைவில் பார்க்க முடிந்தது.

அவர்களுடைய பார்வையில் — குறைந்தபட்சம் அவர்களின் பார்வையிலாவது — படாமல் அந்த வீட்டிற்குள் யாரும் நுழைவதோ அல்லது வெளியேறுவதோ முடியாது. அந்த வீட்டிற்குச் செல்லும் பாதையில் இருந்த பாதி உழப்பட்ட நிலத்தை ஹுசேன் கூர்ந்து கவனித்தார். அவருக்குள் இருக்கும் துப்பாக்கி நிபுணன், “அவனோட தலை பப்பாளிப் பழம் சைசில் இருக்கும்” என்று நினைத்தான். தனது வலது கன்னத்தில் 7.62 ரக செல்ப் லோடிங் துப்பாக்கியை ஒட்டிப் பிடித்து குறிபார்த்தபடி அவர் சத்தமில்லாமல் படுத்திருந்தார்.

திடீரென்று துப்பாக்கி சுடும் சத்தம் அந்த அமைதியைக் குலைத்தது.

ஹுசேன் அதிர்ச்சி அடைந்தார். இதற்கு முன்பு பல வாய்ப்புகள் கைநழுவிப் போனதை நினைத்துப் பார்த்த அவர், “மறுபடியும் அப்படி நடக்கக் கூடாது” என்று நினைத்தார். அவர் தனது டீமைப் பார்த்தார். ஆனால் அதற்கு முன்பே தோட்டாக்களின் சத்தம் வந்த திசையை வைத்து தன்னுடைய ஆட்கள் சுட்டதல்ல என்பதை அவரது மூளை அவருக்குச் சொல்லி விட்டிருந்தது.

இரவு நேர பைனாகுலரை எடுத்து, அதன் மூலம் பார்த்தார். அவரது ஃபோகஸ் ஒரு வேலியில் நின்றது. தன்னந்தனியான அந்த கதவு திறந்திருந்தது.

‘‘சுடுங்க.. அவனுங்க தப்பிச்சுப் போறானுங்க’’ ஹூசேன் கத்தினார்.

அதற்கு முன் விடுக்கப்பட்டிருந்த அனைத்து எச்சரிக்கைகளையும் கைவிட்ட படைக்குழு, அந்தக் குடிசையை நோக்கி ஓடினர்.

ஹூசேனும் அவரது ஆட்களும் குடிசைக்குள் அதிரடியாக நுழைய, ‘‘சுடாதீங்க... இங்க வேற யாரும் இல்ல, நான் மட்டும்தான் இருக்கேன்’’ என்று அந்த வீட்டு உரிமையாளர் பயத்தில் அலறினார். ஹூசேன் சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கு சில காலித் தட்டுகள் கிடந்தன. தோசைக்கல் மிதமாகக் காய்ந்து கொண்டிருந்தது. அடுப்பில் நெருப்புகூட இன்னும் முழுமையாக அணையவில்லை.

‘‘அவன் எங்க?’’ ஹூசேன் கோபத்துடன் கேட்டார்.

‘‘பதினைஞ்சு நிமிடத்துக்கு முன்னாடி அவன் போயிட்டான்’’ என்று பதில் வந்தது.

அந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிச் சத்தம் எங்கிருந்து வந்தது என்ற புதிருக்கு பின்னர் விடை தெரிந்தது.

அந்தச் சம்பவத்தை ஹூசேன் வருத்தத்துடன் தலையை அசைத்தபடி விவரித்தார். அந்த வியாபாரியின் குடிசைக்குக் கீழே 50 அடி தூரத்தில் மற்றொரு விவசாயியின் குடிசை இருந்திருக்கிறது. அந்த விவசாயி பல மாதங்களாக கஷ்டப்பட்டு அவர் வளர்த்திருந்த பயிரை எல்லாம் காட்டுப் பன்றிகள் அழித்து விட்டுச் சென்றது குறித்து கவலையில் இருந்தார். அவர் ஒரு நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்தார்.

அன்று எப்படியாவது அவைகளை அழித்துவிட வேண்டும் என்று முடிவு செய்திருந்தார். அன்று அதிர்ஷ்டம் அவர் பக்கம் இருந்திருக்க வேண்டும்.

சூரியன் மறைந்ததில் இருந்து காத்துக் கொண்டிருந்தார். அவர் சுட்ட சத்தம்தான் ஹூசேனைக் கலவரப்படுத்தி, வீரப்பனையும் விரைந்து கிளம்பச் செய்திருக்கிறது.

எஸ்.டி.எஃப். படையினர், அந்த மனிதனின் வீட்டை அடைந்தபோது, அவன் ஏற்கனவே தன்னிடம் பிடிபட்ட பன்றியை உற்சாகமாக தாள லயத்துடன் வெட்டிக் கொண்டிருந்தான். தனது வேலையை விசிலடித்தபடி ரசித்து செய்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்த எஸ்.டி.எஃப். படையினர், ஒருவரை ஒருவர் பார்த்து, நழுவிப் போன வாய்ப்பை நினைத்து வாய்விட்டுச் சிரித்தனர்.

அதன்பிறகு, வீரப்பன் சும்மா இருப்பானா!

சூப்பரான ஆள் கடத்தலுக்குத் திட்டம் வகுத்தான்.

முதலில் அவன் யாரை கடத்த திட்டமிட்டான். அது நடந்திருந்தால், தமிழகமே குலுங்கி இருக்கும். அதற்கடுத்து, அரசியல்வாதியை கடத்த திட்டமிட்டான். அதை அரங்கேற்ற அவன் முயற்சித்திருந்தால்...

நினைக்கவே அச்சமான விஷயம்தான்!

# ரஜினி இல்ல... மு.க.ஸ்டாலினை கடத்தினால்...? வீரப்பன் முகாமில் விவாதம்

ஸ்ரீ நகர், 2000.

அந்த நூற்றாண்டின் முடிவில் நான் காஷ்மீரில் எல்லை பாதுகாப்புப் படையின் (பி.எஸ்.எஃப்) ஐ.ஜி.யாக 50,000 பேரைக் கொண்ட ஒரு வலிமையான படைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தேன். கார்கில் போரும், பண்டிப்பூரில் ஒரு டி.ஐ.ஜி.யை நாங்கள் இழக்கக் காரணமாக இருந்த தீவிரவாத தாக்குதல்களும், எங்களை எப்போதும் தயார் நிலையிலேயே வைத்திருந்தன.

ஒரு நாள் மாலை, சில்லிகாலன் என அழைக்கப்படும் காஷ்மீரின் உச்சகட்ட பனிக்காலம். ஸ்ரீநகரில் இருந்த நூற்றுக்கணக்கான பதுங்கு குழிகளில் ஒன்றான லால் சவுக் பதுங்கு குழியில் இருந்தேன். கடினமான அந்தச் சூழ்நிலையில் கூட எனது படையிலிருந்த படையினரின் மன உறுதி என்னை வியக்கச் செய்தது.

லால் சவுக்கில் இருந்து நான் வெளியே சென்றிருந்த சில நிமிடங்களில், அந்த பதுங்கு குழி மீது ஒரு வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. சில நாட்கள் கழித்து ஒரு நாள் பின்னிரவு நேரத்தில் கட்டுப்பாட்டு அறையில் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. தீவிரவாதிகள் சிலர் ஸ்ரீநகரில் ஒரு வீட்டில் இருப்பதாகவும் நான்கு விதமான படைப்பிரிவுகள் அந்த வீட்டைச் சூழ துப்பாக்கிச் சண்டை நடப்பதாகவும் தகவல் வந்தது. ராணுவம், ஜம்மு— காஷ்மீர் காவல்துறையின் சிறப்பு நடவடிக்கைக் குழு, மத்திய ரிசர்வ் போலீஸ் மற்றும் பி.எஸ்.எஃப்., ஆகிய நான்கு படைப்பிரிவுகளும் அந்தத் தெருவில் அந்த

வீட்டிற்கு எதிரே சூழ்ந்திருந்தனர். ஆனால் அவர்களால் வீட்டிற்குள் நுழைய முடியவில்லை.

நடமாடும் பதுங்கு குழி என சொல்லப்படும் ஒரு பெரும் கவச வாகனம் அந்த வீட்டின் அருகே நிறுத்தப்பட்டது.

அந்த வாகனத்தை ஏன் யாராவது ஒருவர் உள்ளே ஓட்டிச் செல்லக் கூடாது? படையாட்கள் அதன் பாதுகாப்பில் மறைந்து பின்தொடரலாமே? என்று கேட்டேன்.

“அந்த வாகனத்தின் மேலிருக்கும் ஜன்னலின் சிறிய இடைவெளி வழியாக வந்த தோட்டா ஒன்று அதை ஓட்டிச் சென்ற சி.ஆர்.பி.எஃப். டிரைவர் மீது பாய்ந்து அவர் உயிரிழந்தார். எப்படியோ அந்த உடலை வெளியே எடுத்து விட்டோம். அதன்பிறகு எதுவும் நடக்கவில்லை. நமது படையினரும் மிகவும் கலக்கமடைந்து போயிருக்கின்றனர்” என்று சொன்னார்கள்.

நான் ட்ரக்கில் தாவிக் குதித்து ஏறி டிரைவர் இருக்கையில் அமர்ந்தேன். அது இறந்த மனிதனின் ரத்தம் தோய்ந்து பிசுபிசுப்பாக இருந்தது. ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில், வாகனத்தின் மற்றொரு கதவு திறந்தது. எனது ஸ்டாஃப் அதிகாரி உள்ளே நுழைந்தார். நான் எஸ்.ஓ.பி (ஸ்டாண்டர்ட் ஆபரேட்டிங் ப்ரொசீஜர்) முழுமையாக மீறுகிறேன் என்று சொல்வதைப் போல என்னைப் பார்த்தார்.

பி.எஸ்.எஃப். தான் பொதுவாக நகரத்தின் பொறுப்பு எனினும் இந்தக் குறிப்பிட்ட நடவடிக்கையை ராணுவத்தின் உதவியோடு சி.ஆர்.பி.எஃப்., ஜம்மு—காஷ்மீர் போலீஸ் இணைந்து மேற்கொண்டன. மேலும் ஐ.ஜி.க்களின் பங்களிப்பு என்பது பி.எஸ்.எஃப். குயிக் ரியாக்ஷன் டீம் மற்றும் பிற நபர்களை இதில் தலையிடுமாறு கட்டாயப்படுத்துவது மட்டும்தான்.

என்ஜினைக் கிளப்பி முழு வேகத்தில் ட்ரக்கை செலுத்தினேன். எனது பங்கரில் இருந்த மெட்டல் ஆன்டனா மேலே சென்ற கேபிள் வயர்களில் சிக்கியது. மின்கம்பங்கள் கணிசமான அளவில் சேதமடைந்தன. பங்கர்

கிட்டத்தட்ட முடங்கிய போதும் கடைசியாக அதன் நோக்கத்தை அது நிறைவேற்றியது. ஒரு உற்சாகம் பரவ, படையினர் எனக்குப் பின்னால் வந்தனர். அந்தக் கட்டடத்தின் ஜன்னல்களில் ஒரு சில தோட்டக்கள் பாய்ந்தன. அதன் பிறகு எங்கள் டீமில் இருந்த படையினர் மிகப்பெரிய அளவில் குண்டுமழை பொழிந்தனர்.

அந்த இடைவெளியில் ஒரு துணிச்சலான ஜவான் மெல்ல ஊர்ந்து சென்று, ஜன்னலின் வழியே ஒரு வெடிகுண்டை வீசினார்.

தீவிரவாதிகளும் அடுத்தடுத்து நிலையை மாற்றி பதில் தாக்குதலை தீவிரப்படுத்தினர். ஒரு சில தோட்டாக்கள் ட்ரக்கை தாக்கின. ஆனால் அவற்றால் அந்த கவச வாகனத்தை ஒன்றும் செய்யமுடியவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு துப்பாக்கிச் சத்தம் ஒன்றிரண்டாகக் குறைந்தது. இப்போது அவர்களை முடக்கும் தாக்குதல் ஒன்றை நடத்த வேண்டியிருக்கிறது என்று நினைத்தேன். ட்ரக்கில் இருந்து கீழே இறங்கினேன். சூழ்நிலை கட்டுக்குள் இருப்பது குறித்து திருப்தி அடைந்ததால், வீட்டிற்கு திரும்பினேன்.

ஆனால் தாக்குதல் மறுபடியும் தொடங்கியது எனும் செய்தி கேட்டதும், மீண்டும் —4 டிகிரி செல்சியசில் வெளியே வந்து ஒவ்வொரு அங்குலம் விடாமல் தேடுதல் வேட்டையைத் தொடர வேண்டியிருந்தது.

இதுதான் எல்லைப் பாதுகாப்புப் படையினரின் வாழ்க்கை!

வீரப்பனைத் தேடும் பகுதிக்கு வெகு தொலைவில் ஒரு மாறுபட்ட தீவிரமான சண்டையில் ஈடுபட்டிருந்த போதிலும், அவனது தப்பித்தல்களையும் போலீசுடனான அவனது உரசல்களையும் தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

சில மாதங்களுக்குப் பிறகு, நான் டெல்லிக்கு மாற்றப்பட்டேன். நான் பொதுவாக மாறுதல்களை கேட்டுப் பெறுவதில்லை. இருப்பினும் என்னுடைய புதிய பணியில் முற்றிலும் அமைதியில்லாமல்தான் இருந்தேன். தமிழ்நாட்டில்

இருந்து வந்த செய்திகள் மீண்டும் நான் எஸ்.டி.எ.ஃப்க்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தைத் தீவிரப்படுத்தின.

காட்டில் கொஞ்ச நாட்கள் அமைதியாக இருந்த பிறகு, ஒரு பிரபலத்தைக் கடத்த வேண்டும் என்று வீரப்பன் நினைத்தான். 1992—ல் ஒரு கிரானைட் சுரங்க உரிமையாளரின் மகனைக் கடத்தியதில் ஆரம்பித்து அவன் ஏற்கனவே பல ஆண்டுகளாக ஆள்கடத்தலில் நிபுணத்துவம் பெற்றிருந்தான்.

எப்படியோ, சிறுத்தை தனது புள்ளிகளை மாற்றிக் கொள்வதில்லை. வீரப்பனாலும் சும்மா இருக்க முடியவில்லை. அந்த நேரத்தில் அவனது முந்தைய கடத்தல்கள் தலைப்புச் செய்திகளாக ஆகியிருந்தாலும், மேலும் பிரபலமாக வீரப்பன் ஏங்கியதாக அவனது கேங்கில் இருந்தவர்கள் பின்னாளில் போலீசாரிடம் தெரிவித்தனர். அதற்கு அவன் பெரிய மீனைப் பிடிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தான்.

பின்னர் 2000 ஆண்டு கோடை காலத்தில் அவன் செய்த ஒரு கொடிய செயலால் இந்தியாவில் உள்ள அனைவரின் வீட்டிலும் வீரப்பன் என்ற பெயர் தெரிந்த பெயராக மாறியது. அது தேசம் முழுக்க மட்டும் அதிர்வலைகளைப் பரப்பவில்லை. உலகம் முழுவதும் தலைப்புச் செய்தியானது. இந்தியாவின் மிகப்பெரும் தேடப்படும் நபர் என்ற அந்தஸ்தை அது அவனுக்கு வழங்கியது.

அடர்ந்த காட்டில் பதுங்கி இருந்தபடி வீரப்பன் கும்பல், தாங்கள் குறி வைக்க வேண்டிய சரியான நபர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது.

‘‘அண்ணே, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவோட வீட்டுக்குப் பக்கத்துலதான் ரஜினி வீடு. அவரு ஒரு ஸ்டியோவுக்கு போறதுக்காக வீட்டை விட்டு வெளியே வரும்போது இல்லேன்னா சோழா ஓட்டல் பக்கத்துல அவரைக் கடத்தலாம்’’ என்று ஒருவன் சொன்னான்.

ரஜினிகாந்த் தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டார். அவருடைய ரசிகர்கள் அவர் மீது கடவுளுக்கு நிகரான பக்தி வைத்திருந்தனர். அது சந்தேகமில்லாமல் கவர்ச்சிகரமான இரைதான். ஆனால் சென்னையின் இதயப்

பகுதியில் இருந்து அவரைத் துண்டித்து காட்டுக்குள் கொண்டு செல்வது தர்க்கரீதியான நிறைய சவால்களை முன்னிறுத்தியது.

“ஸ்டாலினக் கடத்தினா என்ன?” அப்போதைய தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் மகனைக் குறிப்பிட்டு ஒருவன் கேட்டான்.

“அவரு சென்னை மேயர். எப்பப் பாத்தாலும் அவரை சுத்தி துப்பாக்கி ஏந்தியவங்க நிப்பாங்க. அது ரொம்ப ஆபத்து” என்று மற்றொருவன் எச்சரித்தான்.

நிறைய யோசனைகள் சொல்லப்பட்டு, அவை நிராகரிக்கவும் பட்டன. ஆனால் இவை அனைத்திலும் வீரப்பன் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் இருந்தான்.

“ராஜ்குமாரைக் கடத்தினா என்ன?” என்று ஒருவன் யோசனை கேட்டான்.

## ராஜ்குமார் கடத்தல்!

“ராஜ்குமாரை கடத்தினா என்ன?” என்று தன்னிடம் கேட்டவனை உற்று நோக்கினான்.

அவன் ஆள் கடத்துவது புதிது அல்ல. பலமுறை ஆட்களை கடத்தியவன். 1997 ஜூலையில் கர்நாடகாவின் பத்து வனத்துறை ஊழியர்களைக் கடத்தினான். நாற்பத்தி நான்கு நாட்கள் அவனது பிடியில் அவர்களை வைத்திருந்து முதல்முறையாக அரசாங்கத் தரப்பில் ‘நக்கீரன்’ ஆசிரியர் கோபால் தூதராகச் செயல்பட்டு பேச்சுவார்த்தை நடத்தி கடைசியாக வீரப்பன் அவர்களை விடுவித்தான். அவன் பிடித்து வைத்திருந்தது சிறிய மீன்தான் என்பது குறித்து அவன் முழுக்க அதிருப்தியில் இருந்தான் என்று வதந்திகள் இருந்தன.

தூதராக கோபால் தேர்வு செய்யப்பட்டது பொதுமக்களின் மனங்களில் தீவிரமான சந்தேகங்களை எழுப்பின. பத்திரிகையாளர்கள் விரும்பினால் வீரப்பனைத் தொடர்பு கொள்ள முடிகிறது. ஆனால் போலீஸ் அதற்குப் போராட வேண்டியிருக்கிறது எனும் கருத்து அப்போது பரவலாக நிலவியது. எனினும் வீரப்பனின் விஷயம் வித்தியாசமான ஒன்றல்ல.

கொலம்பியாவில் இருக்கும் ஒரு அண்டர்வேர்ல்ட் கடத்தல்காரனாக இருக்கட்டும், பெய்ரூட்டில் உள்ள தீவிரவாதியாக இருக்கட்டும், காஷ்மீர் தீவிரவாதியாக இருக்கட்டும் அல்லது ஒரு நக்சல் தலைவராக இருக்கட்டும் அவர்கள் விரும்பும்போது பத்திரிகையாளர்களை சந்திக்கத் தயாராக இருக்கின்றனர்.

பெரும்பாலும் அவை ஒருவழித் தொடர்பாகத்தான் இருக்கின்றன. வீரப்பன் பத்திரிகையாளர்களை சிரத்தையோடு சந்தித்து உற்சாகப்படுத்தும் அதே வேளையில் வேண்டுமென்றே போலீசைத் தவிர்த்தான். அவனது பதுங்குமிடத்திற்கு யாரேனும் ஒருவர் அழைத்துச் செல்லப்படும்போது, வழக்கமாக சுற்றுப்பாதையில்தான் அழைத்துச் செல்லப்படுகிறார். அந்தப் பாதையில் நிறைய வழிகாட்டிகள் இருப்பார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட தூரம் வரையில்தான் பாதை தெரியும். அவனைச் சந்திக்கச் செல்பவர்கள் அவர்கள் சென்ற பாதையை மறுபடியும் கண்டுபிடிப்பது கடினம். அப்படியெல்லாம் வீரப்பனை பிடிப்பது அவ்வளவு சுலபமாக இருந்திருந்தால் பல ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பாக இரு மாநில எஸ்.டி.எஃப்.பிலும் மிகத் திறமையான நபர்கள் இருந்த காலத்திலேயே அது நடந்திருக்கும்.

1997 அக்டோபர் 8—ம் தேதி, காட்டு உயிரின ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்களான க்ருபாகர் மற்றும் சேனானி ஆகியோரை வீரப்பன் கடத்தினான். அடுத்த நாள் பந்திப்பூர் காட்டு வழியே சென்ற பதினைந்து டூரிஸ்டுகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றை நிறுத்தினான். அவர்கள் அனைவரையும் பிணைக் கைதிகளாக்கினான். அந்த பஸ்சை தேடிச் சென்ற கர்நாடக வனத்துறை ஊழியர்கள் ஆறு பேருக்கும் அதே கதி ஏற்பட்டது.

அன்றைக்கே அவன் பெரும்பாலான டூரிஸ்ட்களையும் அவர்களுடன் மூன்று அரசு அதிகாரிகளையும் விடுவித்து விட்டான். எனினும் பெங்களூருவில் உள்ள இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹார்ட்டிகல்சுரல் ரிசர்ச்—ஐ சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் சத்தியபிரதா மைத்தியை மட்டும் விடுவிக்க மறுத்து விட்டான்.

மைத்தி, க்ருபாகர், சேனானி மற்றும் மூன்று வனத்துறையினர் ஆகியோர் பதினைந்து நாட்கள் வீரப்பன் பிடியில் இருந்தனர். அதன்பிறகு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

வீரப்பனுடன் கட்டாயமாக தங்க வேண்டி வந்த சந்தர்ப்பம் குறித்து, பின்னாளில் க்ருபாகரும் சேனானியும், 'பேர்ட்ஸ், பீஸ்ட்ஸ் அண்ட் பேண்டிட்ஸ்' என்ற பெயரில் புத்தகம் ஒன்றை எழுதினர்.

இந்த துணிச்சலான கடத்தல்களுக்குப் பிறகு, 1997 ஆகஸ்டில் இரு மாநில முதலமைச்சர்களும் சந்தித்துப் பேசினர். வீரப்பனின் கோரிக்கைகள் தொடர்பாக ஒன்பது அம்ச உடன்பாடு ஒன்று உருவாக்கப்பட்டது.

எனினும் அந்தக் கோரிக்கைகளில் நியாயமே இல்லாத சில கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. அவற்றில் ஒன்று வீரப்பனை தமிழகத்தில் ஒரு சிறப்பு முகாமில் வைக்க வேண்டும் என்பது. அங்கு அவனைப் பார்வையாளர்கள் சர்வசாதாரணமாகச் சந்திக்க வசதி செய்யப்பட வேண்டுமாம்.

இது எஸ்கோபாவைச் சேர்ந்த போதை மருந்து கடத்தல் தீவிரவாதி பாப்லோ எஸ்கோபாரை நினைவுபடுத்தியது. ஒரு கால்பந்து மைதானம், ஒரு பார், ஒரு குளியல் தொட்டி, அவனுக்கென்று பிரத்யேக பாதுகாவலர்கள், விரும்பிய பெண்கள் என அவன் கேட்ட வசதிகளோடு அவனுக்கு ஒரு சிறைச்சாலை உருவாக்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட அதுபோலவே வீரப்பனும் தனது கோரிக்கைகளை அடுக்கி இருந்தான். இந்த கோரிக்கைக்கு அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

மாறி இருந்த அரசியல் சூழ்நிலையில் வீரப்பன் மென்மையான ஒப்பந்தங்களோடு சரணடைய பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ஊடகங்களில் அனுமானங்கள் பரவின.

'வீரப்பனுக்கு சிறப்பு முகாம் கொடுத்தால் நானே நேரில் சென்று சுட்டுத் தள்ளி விடுவேன்' என்று வால்டர் தேவாரம் வெளிப்படையாக அறிவித்தார். அது வீரப்பனின் எதிர்பார்ப்புகளை தவிடுபொடியாக்கியது.

எங்களில் வால்டரை நன்கு தெரிந்தவர்கள், ‘அவருக்கு துப்பாக்கி கிடைப்பது ஒன்றும் பிரச்சினையாக இருக்காது’ என்று சிரித்துக் கொண்டோம். அவரது பணிக்கென்று கொடுக்கப்பட்ட துப்பாக்கியைத் தவிர்த்து, தனிப்பட்ட முறையிலும் கணிசமான துப்பாக்கிகளை அவர் சேகரித்து வைத்திருந்தார். அவரது உடமைகளிலேயே மிகுந்த மதிப்புக்குரியதாக இருந்தது, 1963 ஐ.பி.எஸ். பேட்ச்சில் முதலிடம் பிடித்ததற்காக உள்துறை அவருக்கு பரிசாக அளித்த ஒரு ரிவால்வர்தான்.

இந்த காலகட்டத்தில்தான், பெரிய பிரபலத்தை கடத்தி, பணமும் பறிக்க வேண்டும். தன்னை உலகிற்கு புதிய வீரப்பனை அறிமுகப்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டான்.

ரஜினி, மு.க.ஸ்டாலினை விட, கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமாரை கடத்தினால் என்ன என்று கூட்டத்தில் ஒருவன் கேட்டதுமே, வீரப்பன் பார்வையை உயர்த்தினான்.

கன்னட சினிமாவின் பிரபலமான சூப்பர் ஸ்டார் டாக்டர் ராஜ்குமார். அவரது ரசிகர்களால் அவர் ஒரு பொக்கிஷம் என கருதப்படுபவர்.

அந்த யோசனையைப் பற்றி அந்த கேங் விவாதிக்க ஆரம்பித்தது.

“அவரோட பூர்வீக ஊர் தொட்டகாஜனூர். அங்க அவருக்குப் பிடித்தமான ஒரு பண்ணை வீடு வச்சிருக்காரு. அங்கதான் இப்ப இருக்காருன்னு நம்ம ஆளுங்க தகவல் சொல்றாங்க. நிறையப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அவர் அங்க விரும்புறதில்ல. இதுதான் சரியான இரை” என்று பேசிக் கொண்டனர்.

“அண்ணே, அது நமக்கு நிறையப் பணம் கொடுக்கும். உங்களோட இமேஜே மாறிடும்” என்று வீரப்பனிடம் சொன்னான் ஒருவன்.

“தொட்டகாஜனூர் எவ்வளவு தூரத்துல இருக்கு?” என்று வீரப்பன் கேட்டான்.

“20 கிலோ மீட்டர். கர்நாடக, தமிழ்நாட்டு எல்லைக்குப் பக்கத்துல இருக்கு” என்று பதில் வந்தது.

வீரப்பனின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. “சரி, ராஜ்குமாரை ஒரு பார்வை பாத்துட்டு வந்துடுவோம்” என்றான்.

30 ஜூலை 2000

வீரப்பன் அந்த தரிசு நிலப்பகுதியில் பொறுமையாகக் காத்துக் கொண்டிருந்தான். அவனது கண்கள் அந்தப் பண்ணை வீட்டின் மீது நிலைகுத்தி நின்றன. அங்குதான் அவனது இரை ஒரு சிலரோடு இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

“நல்லா சாப்பிடு. கொஞ்ச நேரம்தான். ஒரு நாகரிகமான எடத்துல நீ சாப்பிடுற கடைசி சாப்பாடு இதுவாத்தான் இருக்கும்” என்று நினைத்தான் வீரப்பன். “இந்த மாநிலமே உன்னோட பேச்சைக் கேட்கும்” என்று அவனது ஜாதகக் கணிப்பில் இருந்ததை நினைத்துப் பார்த்தான்.

“அது உண்மைதானான்னு பாத்துடுவோம்” என்று முணுமுணுத்தான்.

வீரப்பன் மெதுவாக ஆழ்ந்து ஒரு மூச்சு விட்டான். தலையை அசைத்தான். செயலில் இறங்குவதற்கு இதுதான் சரியான நேரம்.

அந்த கேங்கின் முதன்மைக் குழு கதவைத் தட்டியது. கதவை யாரும் திறப்பதற்கு முன் அவர்களே கதவைத் தள்ளித் திறந்து முரட்டுத்தனமாய் உள்ளே நுழைந்தனர். இதை மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த வீரப்பன் தனது முகத்தில் ஒரு புன்னகையைத் தவழ விட்டான்.

வீரப்பன் உள்ளே நுழைந்ததும், அங்கிருந்த அனைத்துக் கண்களும் அவனையே பார்த்தன. திடீரென்று நடந்த அந்த சம்பவங்களை அங்கிருந்தவர்கள் குழப்பத்துடன் பார்த்தனர். ஆனால் ஒருவர் மட்டும் வீரப்பனைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். அவருக்கு திகைப்பும் அச்சமும் ஏற்பட்டது.

வீரப்பன் ராஜ்குமாரிடம் சென்றான். ‘‘அய்யா போகலாம்’’ என்று அவரை அழைத்தான். பிறகு ராஜ்குமாரின் மனைவி பர்வதம்மாளிடம் ஒரு ஆடியோ கேசட் ஒன்றைக் கொடுத்து, ‘‘இதை எஸ்.எம்.கிருஷ்ணா (அப்போதைய கர்நாடக முதலமைச்சர்) கிட்ட கொடுங்க. எனக்கு என்ன வேணும்னு அவருக்குத் தெரியும். அய்யா பத்திரமா இருப்பாரு’’ என்றான்.

## பர்வதம்மாளுக்கு ஜோதிடர் சொன்ன குறிப்பு!?

ராஜ்குமாரை இருட்டிய வேளையில் கடத்தினான்.

அந்த நேரத்தில், தன் கணவரைக் கடத்துவது வீரப்பன் என்பதை சற்று தாமதமாக உணர்ந்தார் பர்வதம்மாள்.

''தயவு செஞ்சு அவருக்கு அவரோட மருந்தெல்லாம் கொடுங்க. அவரைக் கஷ்டப்படுத்தாதீங்க'' பர்வதம்மாள் கெஞ்சினார். அவரது குரல் கம்மியது.

''காட்டுக்குள்ள அவருக்கு கஷ்டம் எதுவும் வராது. ஆனா கிருஷ்ணாவை இதைக் கேட்க வையுங்க'' என்று வீரப்பன் கூறினான்.

அந்த களேபரத்தில், வீரப்பன் கேங், மருந்து பற்றி ராஜ்குமார் மனைவி வைத்த கோரிக்கையைக் கண்டுகொள்ளவில்லை. பிறகு ஆல் இண்டியா ரேடியோ மூலம் அந்தக் குடும்பம் வீரப்பனிடம் அதை நினைவுபடுத்தியது.

ராஜ்குமாரைத் தவிர அவரது மருமகன் கோவிந்தராஜ், உறவினர் நாகேஷ், உதவியாளர் நாகப்பா ஆகியோரையும் வீரப்பன் கடத்தினான். ராஜ்குமாரின் டிரைவரை விட்டுவிட்டான். காரணம், பர்வதம்மாளை பெங்களூரு அழைத்துச் செல்ல வேண்டி இருக்கும் என நினைத்ததால் அவரை மட்டும் அதிர்ஷ்டவசமாக வீரப்பன் விட்டுவிட்டான்.

''நாங்க இங்க இருந்து போற வரைக்கும் கூச்சல் போடுற சத்தம் எதுவும் கேட்கக் கூடாது. அப்படி ஏதாவது சத்தம் கேட்டுச்சு... நான் என்னோட வேலையைக் காட்டிடுவேன். பிறகு எம் மேல பழி சொல்லக் கூடாது'' என்று வீரப்பன் எச்சரித்தான்.

ஒரு சில கணங்களுக்குப் பிறகு அந்தக் கூட்டம் வெளியேறி இருளில் மறைந்தது. அவர்களின் நடவடிக்கை அவர்கள் நம்பி இருந்ததைக் காட்டிலும் மிகச் சிறப்பாகவே நடந்தேறியது. அந்த கடத்தல் நாடகம் 108 நாட்கள் அரங்கேறி இரு மாநில அரசுகளுக்கும் உறக்கமற்ற இரவுகளை வழங்கியது. உலகத்தின் கவனத்தையும் ஈர்த்தது.

கடத்தலைத் தொடர்ந்து வந்த நான்கு மணி நேரம் ராஜ்குமாருக்கு முழு வாழ்நாள் போல இருந்தது. ஏனெனில் அந்த கும்பல் தாங்கள் கைப்பற்றிய அந்தப் பரிசை ஆறு மைல்கள் நடக்க வைத்தது. வயதான அந்த நடிகருக்கு ஏற்ப மெதுவாகத்தான் சென்று கொண்டிருந்தனர். எழுபது வயதில் ராஜ்குமார் ஆரோக்கியமாகத்தான் இருந்தார், ஆனால் மூட்டுவலி மற்றும் நீரிழிவு நோயால் அவதிப்பட்டு வந்தார். எனவே வீரப்பன் அவரை பெரிதாக கஷ்டப்படுத்தவில்லை.

எதிர் திசையில் இரவு நேரத்தில் பர்வதம்மாள் பதற்றத்துடன் பெங்களூரு நோக்கிச் சென்றார். இடையில் மைசூர் செல்லும் வழியில் குடும்ப ஜோதிடர் பாஷ்யம் சாமியைப் பார்த்து ஆலோசிப்பதற்காக மட்டும்தான் நின்றார். அந்த ஜோதிடர் அவரிடமிருந்த ஜோதிடக் குறிப்புகளைப் பார்த்துவிட்டு பின் ஒரு சில கணக்குகளைப் போட்டு, ஒரு சில நாட்களில் உங்களின் கணவர் பாதுகாப்பாக வீடு திரும்புவார் என்று பர்வதம்மாளுக்கு உறுதி அளித்தார்.

பர்வதம்மாள் பின்னர் நேராக முதலமைச்சரின் வீட்டிற்குச் சென்றார். அதிகாலை மூன்று மணிக்கு அவரை எழுப்பி இந்த அதிர்ச்சி தரக்கூடிய செய்தியைக் கூறினார்.

கிருஷ்ணா உடனடியாக உள்துறை அமைச்சர் மல்லிகார்ஜுன கார்கே, டி.ஜி.பி. தினகரன், உள்துறைச் செயலாளர் எம்.பி.பிரகாஷ் ஆகியோரை அழைத்தார். பின்னர் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஷகீர் அகமது, முதன்மைச் செயலாளர் பி.கே.பட்டாச்சார்யா மற்றும் ராஜ்குமார் மகன் சிவ ராஜ்குமார் (இவரும் ஒரு கன்னட நடிகர்தான்) அனைவரும் நெருக்கடி மேலாண்மைக் குழுவில் சேர்க்கப்பட்டனர். (2016—ல் ராம் கோபால் வர்மா

இயக்கத்தில் வெளியான ‘கில்லிங் வீரப்பன்’ படத்தில் சிவ ராஜ்குமார் எஸ்.டி.எஃப். அதிகாரியாக நடித்திருந்தார்)

அன்று இரவு முதலமைச்சரால் அழைக்கப்பட்ட அனைவரும் பெங்களூருவில் உள்ள அவரது கேம்ப் அலுவலகத்தில் சந்தித்தனர். ஆவி பறக்க அவர்களுக்குப் பரிமாறப்பட்ட காபியை யாரும் தொடாமல் ஆறிக் கொண்டிருக்க, அவர்கள் அனைவரும் வீரப்பனால் கொடுக்கப்பட்ட டேப்பை தீவிரமாகக் கேட்டனர். அந்தப் பேச்சில் கொலை பற்றியோ ஒருவரைச் சிதைப்பது அல்லது சித்திரவதை செய்வது பற்றியோ எதுவுமில்லை. ஆனால் அதில் இருந்த தகவல்களை நுட்பமாகப் பார்த்தால் வெகு பயங்கரமாக இருந்தது.

தான் சொல்வதை அனைவரும் உன்னிப்பாக கவனிப்பார்கள் என்பதை வீரப்பன் நன்கு அறிந்து வைத்திருந்தான் என்பது நன்றாகப் புரிந்தது. அவனது பேச்சு அச்சுறுத்தலாகவும் இருந்தது, நாடகத்தன்மையோடும் இருந்தது.

அவனுடைய முதன்மையான கோரிக்கைகளில் ஒன்று, அவன் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கு ஒரு தூதரை அவனிடம் அனுப்ப வேண்டும் என்பது. மீட்பு முயற்சி எதுவும் கூடாது என்றும் அவன் எச்சரித்தான்.

டேப் முழுவதும் ஓடி முடிந்த போது, அந்த அறையில் இருந்த அனைவரும் பெருமூச்சு விட்டனர். அங்கு சிறு அமைதி நிலவியது. “ராஜ்குமாரை உயிரோடு மீட்க வேண்டும் என்பதுதான் நமது முதல் குறிக்கோள். இதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்” என அங்கிருந்தவர்களில் ஒருவர் மௌனத்தை உடைத்தார்.

சில மணி நேரங்களில், பெங்களூருவும் இந்தியாவின் மற்ற பகுதிகளும் விழித்த உடன் இந்த அச்சமூட்டும் செய்தியைக் கேட்டன. கர்நாடகாவில் பள்ளிகள், கல்லூரிகள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வங்கிகள்கூட அன்று மூடப்பட்டன.

பெரும்பாலான மக்கள் வீட்டிலேயே முடங்கினர். தைரியமாக வெளியே வந்தவர்கள் பேருந்துகள் வெறிச்சோடி நடமாடியதைப் பார்த்தனர்.

ராஜ்குமாரைப் போன்ற ஒரு பிரபலம் கடத்தப்பட்டது ஒரு பேரதிர்ச்சி உருவாக்கும் உளவியல் பாதிப்பை ஏற்படுத்தியது. எந்த ஒரு போலீஸ் அதிகாரியைக் கேட்டாலும் தெருவில் நடக்கும் ஒரு குற்றச்செயலை விட மின் திருட்டின் மூலம்தான் அதிகப் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது என்று சொல்வார். ஆனால் அது போன்ற குற்றங்கள்தான் (தெருவில் நடப்பவை) பொதுமக்கள் மனதில் மிகப்பெரிய அச்சத்தை எழுப்புகின்றன. ஏனெனில் ஒவ்வொருவரும் இது தனக்கும் நடந்திருக்கலாம் என்று தங்களுக்குள் நினைக்கின்றனர். ராஜ்குமாரைப் போன்ற உயர்ந்த இடத்தில் இருக்கும் ஒருவர் கடத்தப்படும்போது பொதுமக்கள் உடனடியாக, "ஒரு வி.ஐ.பி.யையே அரசாங்கத்தால் பாதுகாக்க முடியவில்லையெனில் நம்மைப் போன்ற சாமானியர்களை எப்படிப் பாதுகாக்கப் போகிறார்கள்?" என்று நினைக்கத் தொடங்கி விடுகின்றனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஒரு அரசாங்கத்திற்கு எப்போதுமே சட்டம் சு ஒழுங்கு சீர்குலையாமல் பாதுகாப்பதுதான் முதல் பொறுப்பாக இருக்கிறது. கர்நாடக அரசு உடனடியாக ஆயுதம் தாங்கிய ரிசர்வ் போலீஸ் படையினரை செயலில் இறக்கி விட்டது. மாநிலம் முழுவதும் தன்னெழுச்சியான போராட்டங்கள் நடந்த போதிலும் அதிர்ஷ்டவசமாக கலவரம் எதுவும் நடக்கவில்லை.

கர்நாடக திரைத் துறையினர் தங்களின் தார்மீக ஆதரவை வெளிப்படுத்தும் விதமாக, ராஜ்குமார் பத்திரமாகத் திரும்பும் வரையில் கர்நாடகத்தில் படங்கள் தயாரிப்பதில்லை, வெளியிடுவதில்லை அல்லது திரையிடுவதில்லை என அறிவித்தனர்.

அதிகம் பேருக்குத் தெரியாத உள்ளூர் தினசரிகளில் இருந்து சர்வதேச டி.வி. சேனல்கள் வரையிலான பத்திரிகையாளர்கள் ராஜ்குமாரின் பூர்வீக இல்லத்தை நோக்கிப் படையெடுத்தனர். தவறான காரணங்களுக்காக அந்த தொலைதூர கிராமம் திடீரென உலக வரைபடத்தில் இடம் பெற்றது.

முதலமைச்சர் கிருஷ்ணா தனது மூத்த அதிகாரிகளுடன் தமிழக முதலமைச்சர் கருணாநிதியைச் சந்திப்பதற்காக சென்னைக்கு வந்தார். அவர்களின் சந்திப்பு முடிந்த உடன் டி.வி. நிருபர்கள் அவர்கள் ஒரு பைட் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு மைக்கை நீட்டினர்.

“பேச்சுவார்த்தை அவசியமான ஒன்று. அவனது (வீரப்பன்) பேச்சு வார்த்தைக்கான கதவுகளை அடைத்து விட்டால், அது கர்நாடகாவில் உள்ள தமிழர்களின் பாதுகாப்புக்கு ஆபத்து” என்று ஒரு மூத்த அதிகாரி கேமரா முன்னால் சொன்னார்.

இரு மாநிலத்திலும் பெரும் சலசலப்பு...

## துப்பு கொடுத்தவரை துச்சமாக நடத்தினால்...?

“வீரப்பன் பேச்சுவார்த்தைக்கான கதவை அடைத்துவிட்டால், கர்நாடகாவில் வாழும் தமிழர்களுக்கு ஆபத்து” என்று மூத்த அதிகாரி ஒருவர் கேமரா முன்பு நறுக்கென தெரிவித்தார்.

இரண்டு அரசுகளையும் துரத்திக் கொண்டிருக்கும் வெளியே சொல்லாத பயத்தை அந்த அதிகாரி வெளிப்படுத்தினார். அவரது வெளிப்படையான பேச்சு ஊடகங்களால் பாராட்டப்பட்டது. ஆனால் அந்த அதிகாரியை மேல் அதிகாரிகள் பாராட்டவில்லை.

ஒரு சில வருடங்களுக்கு முன் வனத்துறை அதிகாரிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டதற்கு உதவிய நக்கீரன் கோபால், இரு அரசுகளின் தூதுவராக தற்போதும் செயல்படுவார் என மாலையில் கருணாநிதி அறிவித்தார்.

ஆகஸ்ட், 2000.

ஆகஸ்ட் 2—ம் தேதி கோபால் வீரப்பனைச் சந்திப்பதற்கான பயணத்தைத் தொடங்கினார். இந்த மொத்த நெருக்கடி காலகட்டத்திற்கு இடையில் அவர் ஐந்து முறை காட்டிற்குள் சென்று வந்து விட்டார். அந்தப் பகுதியில் கர்நாடக எஸ்.டி.எஃப்.பின் நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி வைக்கும்படி அம்மாநில அரசும் உத்தரவிட்டிருந்தது. ஒரே ஒரு பணயக்கைதியை அவனது கேம்ப்புக்குள் அனுமதித்ததன் மூலம் வீரப்பன் ஒரு நேர்மையற்ற சண்டையை நடத்தினான்.

எஸ்.டி.எஃப். நடவடிக்கைகள் அதிகாரபூர்வமாக நிறுத்தப்பட்டிருந்த போதிலும் தமிழ்நாடு எஸ்.டி.எஃப்.—பைச் சேர்ந்த சில சாதனையாளர்கள்

மட்டும் அவர்களுடைய நம்பிக்கைக்குரிய இன்ஃபார்மர்களை செயல்பாட்டிலேயே வைத்திருந்தனர். ஆனால் அவர்களுக்கு வெறுமனே கண்காணிக்க மட்டும் செய்ய வேண்டும் எனவும் காட்டிற்குள் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் நடந்தால் அது குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ‘‘எந்த ஒரு சூழ்நிலையிலும் நேரடித் தலையீடு கூடாது’’ என வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆகஸ்ட் 10—ம் தேதி வனத்துறையைச் சேர்ந்த பிளாட் வாட்ச்சர், மோகன் நவாஸைச் சந்தித்தார். அவர் வீரப்பன் கேங்கைச் சேர்ந்த மூன்று பேரையும் நான்கு அந்நியர்களையும் பார்த்ததாக தகவல் சொன்னார். ‘‘அவங்கள்ல ஒருத்தன் பச்சைக் கலர் டிரெஸ் போட்டிருந்தான். மத்தவங்க நல்ல டிரெஸ் போட்டிருந்தாங்க. அவங்க ரோட்டுப் பக்கமிருந்து வந்தாங்க. கொஞ்ச நேரம் அங்க இருந்துட்டு பிறகு கலைஞ்சு போயிட்டாங்க’’ என்று அவர் கூறினார்.

நவாஸ் தனக்குள் ஒரு உடனடி உற்சாகம் ஓடுவதை உணர்ந்தார். வீரப்பனும் அவன் பிடித்து வைத்திருப்பவர்களும் வெகு தூரத்தில் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் இந்த துப்பு அடிப்படையில் செயல்படுவதற்குள் வீரப்பனின் நம்பிக்கைக்குரிய உதவியாளன் கோவிந்தன், அந்நியர்கள் சிலர் தங்களது பகுதியைக் கண்டுபிடித்து விட்டனர் எனத் தெரிந்து கொண்டு வீரப்பனிடம் விரைந்தான்.

‘‘அந்த தே... மகனுங்க எஸ்.டி.எஃப். காரனுங்களாத்தான் இருக்கணும். இத கோபால் கிட்ட சொல்லு’’ என்று வீரப்பன் பல்லைக்கடித்தபடி கூறினான்.

கோபால் இதை பெரிய பிரச்சினை ஆக்கிவிட்டார். ‘‘அரசாங்கம்தான் சொன்னபடி நடந்து கொள்ள வேண்டும். அதை மீறினால் ராஜ்குமாருக்கு ஏதாவது நேர்ந்தால் அதற்கு அவர்கள்தான் பொறுப்பு என்று வீரப்பன் தெளிவாகச் சொல்லி இருக்கிறான்’’ என இரண்டு முதலமைச்சர்களிடமும் கோபால் கூறினார்.

எஸ்.டி.எஃப். மீட்பு நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்ற யோசனை, எஸ்.டி.எஃப். வலிமையாக ஒன்று திரட்டப்படுவதற்கு முன்பே நிராகரிக்கப்பட்டு விட்டது. எஸ்.டி.எஃப். ஆட்கள் வேறு பணிகளுக்கு மாற்றப்பட்டனர். நகைப்பிற்கிடமான வகையில் ஒரு சிலர் டிராபிக் டூட்டி பார்க்க அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு டிராபிக்கை ஒழுங்குபடுத்துவதை விட தோல்பையையும் ஏ.கே. 47—ஐயும் தூக்குவது எளிதாக தெரிந்தது. அவர்கள் அனேகமாக ‘டிராபிக்கை சரிப்படுத்துவதை’ விட ‘டிராபிக் நெரிசலுக்குத்தான்’ காரணமானார்கள்.

பண்ணாரி எஸ்.டி.எஃப். கேம்ப் பாலைவனம் போலக் காட்சி அளித்தது. ஸ்டோர் கீப்பர் மற்றும் இரவில் அங்குள்ள பொருட்களைப் பாதுகாக்க சில காவலாளிகள் எனக் குறிப்பிட்ட சிலர் மட்டுமே அங்கு இருந்தனர்.

வீரப்பனின் மறைவிடத்தில் இருந்து பார்த்தால், கேம்பில் விளக்கு எரிவது தெரியும். இதனால் கேம்ப் தொடர்ந்து செயல்படுவதாக எண்ணி ஆத்திரமடைந்த வீரப்பன் தனது கெடுவை மேலும் துரிதப்படுத்தினான். ‘‘எஸ்.டி.எஃபை உடனடியா வாபஸ் வாங்கணும். நவாஸும் ஹுசேனும் மொதல்ல வெளியேறணும்’’ என்றான்.

வீரப்பனுடைய கோரிக்கை நவாஸ் மற்றும் ஹுசேனுக்கு ஒரு நினைவூட்டும் அச்சுறுத்தலைக் கொடுப்பதற்குத்தான் என்று நான் நினைத்தேன். ஏனெனில் அவர்கள் இருவருமே அவனுடைய உறுதிக்கு உளவியல் ரீதியில் சேதத்தை ஏற்படுத்தியவர்கள்.

வீரப்பனின் கோரிக்கைக்கு செவிசாய்க்க இருமாநில அரசுகளும் தீவிரமாக தயாராகிக் கொண்டிருந்தன. இந்த அவசரத்தில் அவர்கள் ஒரு முக்கியமான துப்பை கவனிக்கத் தவறி விட்டார்கள் என்று நான் நினைத்தேன்.

எஸ்.டி.எஃப். நடவடிக்கைகள் பற்றி வீரப்பனுக்கு நன்கு தகவல் சொல்லப்பட்டிருந்தால், அவன் அல்லது அவனது கேங்கில் இருக்கும் ஒரு சிலராவது பண்ணாரி முகாமில் என்ன நடக்கிறது என்பதை நெருக்கமாகக்

கண்காணிப்பார்கள். எனவே, அவர்கள் பூகோள ரீதியில் அதற்கு நெருக்கமாகத்தான் இருக்க வேண்டும்.

இந்த உண்மையை இரு அரசுகளும் ஒருவேளை வெறுமனே கண்டுகொள்ளாமல் விட்டு விட்டிருக்கலாம். ஏனெனில் கோபத்தில் இருக்கும் பொதுமக்களையும் பரபரப்பை ஏற்படுத்தும் ஊடகங்களையும் கையாளும் ஒரு கொடுமையான சூழ்நிலையை அதிகாரிகளுக்கு ஏற்படுத்தும் அபாயத்தை யாருமே விரும்பவில்லை.

பண்ணாரி முகாமில் இருந்து ஐந்தில் இருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில்தான் வீரப்பன் இருந்திருக்கிறான் என்பது பின்னாளில் தெரிய வந்தது. அவனது யுத்த தந்திரம் திறந்த வெளியிலேயே ஒளிந்துகொள்ளும் துணிச்சலான அதே சமயத்தில் மிக எளிதான தந்திரமாக இருந்தது. அவ்வப்போது அவன் தனது முகாமை இடம் மாற்றி இருப்பான். ஆனால் ஒரு கிலோ மீட்டருக்குள்தான் போலீசார் கண்காணிப்புக்கு உட்பட்ட அதே சமயத்தில் அவர்களின் நேரடிப் பார்வையில் விழாத இடத்தில்தான் இருந்திருப்பான்.

இந்த கடத்தலையே எளிதாக நடக்காமல் தவிர்த்திருக்கலாம் என்றும் தெரிய வந்தது. கர்நாடக எஸ்.டி.எஃப்.—பில் பணியமர்த்தப்பட்ட அர்கேஷ் என்ற சி.ஆர்.பி.எப். அதிகாரி ஒரு எச்சரிக்கை அளித்திருக்கிறார். சமீபத்தில் 2000 ஆண்டு மே மாதத்தில் அந்த அதிகாரி, தனக்கு வந்த தகவல்படி ராஜ்குமாரைக் கடத்த வீரப்பன் திட்டம் போடுகிறான் என கர்நாடக அரசை எச்சரித்திருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக அவரது எச்சரிக்கை உரிய இடத்திற்குச் சென்று சேராமல் போய்விட்டது.

அளவுக்கு அதிகமாக வரும் தகவல்களை கையாள்வது என்பது உயர் அதிகாரிகள் சந்திக்கும் பெரும் சவால்களில் ஒன்று. அமெரிக்க அரசு சொன்னதன்படி, 9/11 தாக்குதல் பற்றி முன்கூட்டியே முக்கியமான துப்பு கிடைத்திருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டிருந்தால் அந்தத் தாக்குதலைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் அந்த துப்பு கண்டு கொள்ளப்படவில்லை.

தொடர்ந்து ஏராளமான பொய்யான துப்புகள் மற்றும் தவறாக வழி நடத்தும் தகவல்களை எதிர்கொள்ளும் ஒருவருக்கு புதிதாக வரும் எச்சரிக்கை எதுவும் சோர்வைத்தான் ஏற்படுத்தும். எனவே அவர் அதை உடனடியாக புறம்தள்ளத்தான் செய்வார். அப்படி ஒரு போதும் நடக்காமல் இருப்பது சிறந்தது. ஆனால் ஒவ்வொரு முறையும் அப்படித்தான் நடக்கிறது. அதுதான் 9/11 தாக்குதலின் போதும் வீரப்பன் விஷயத்திலும் நடந்தது. குறைவில்லாமல் நடக்கும் ஏராளமான பயங்கரவாதத் தாக்குதல் விஷயங்களிலும் இதுவே தொடர்கிறது.

ராஜ்குமாரை கடத்திய வீரப்பன் வைத்த பத்து கோரிக்கைகளும், கர்நாடகாவை திகிலில் தள்ளியது!

# “காவிரி பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும்!”

ஆகஸ்ட் 2000

ராஜ்குமார் கடத்தலுக்குப் பிறகு வீரப்பன் வைத்த 10 கோரிக்கைகள் அல்லது பத்திரிகைகள் எழுதியபடி ‘டென் கமாண்ட்மென்ட்ஸ்’ — ஆகஸ்ட் 4—ம் தேதி வெளிவந்தன. நெருக்கடி மேலாண்மைக் குழு அந்த கேசட்டில் ஒலித்த குரலை முழுவதுமாக கேட்டபோது அவர்களின் புருவங்கள் உயர்ந்தன.

அந்த படிக்காத குற்றவாளி, ஒரு தேர்ந்த அரசியல்வாதி போல பேசிக் கொண்டிருந்தான். அவனது பிற கோரிக்கைகளுக்கிடையே காவிரி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அமல்படுத்த வேண்டும் என்றும், காவிரி ஆற்றிலிருந்து 2,05,000 மில்லியன் கன அடி தண்ணீர் தமிழகத்திற்குத் தர வேண்டும் என்றும் (வேடிக்கை என்னவென்றால் வீரப்பனின் பத்தாவது ஆண்டு நினைவு தினத்தின்போது சில இடங்களில் அவனை வாழ்த்தியும், கர்நாடக அரசின் பிடிவாதப் போக்கிற்கு அவன் இல்லாததுதான் காரணம் என்றும் கூறும் போஸ்டர்கள் காணப்பட்டன) கோரிக்கை வைத்தான்.

1991—ம் ஆண்டு கர்நாடகாவில் காவிரி கலவரம் நடந்த போது பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். கர்நாடகாவில் தமிழ் இரண்டாவது ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட வேண்டும். பெங்களூருவில் திருவள்ளுவருக்கு சிலை வைக்க வேண்டும். அதிரடிப்படையால், கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் பழங்குடியினர் ஒன்பது பேரின் குடும்பங்களுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும்.

தமிழ்நாடு தேயிலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண தேயிலைக்கு வழங்கப்படும் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகளையும் அவன் வைத்திருந்தான்.

கிராமத்தினர் மீது அதிரடிப்படையால் நடத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் தாக்குதல் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட சதாசிவம் கமிஷன் இயங்க உயர் நீதிமன்றம் விதித்த தடையை நீக்க வேண்டும் எனவும் வீரப்பன் கேட்டுக் கொண்டான்.

தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மைசூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 51 பேரை விடுவிக்க வேண்டும் எனவும் அவன் கோரிக்கை வைத்தான். சென்னை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விடுதலைப் படை அமைப்பை (டி.என்.எல்.ஏ.) சேர்ந்த ஐந்து பேரை விடுவிக்க வேண்டும் என்றும் அவன் கோரிக்கை விடுத்தான்.

டேப் ஓடி முடிந்ததும், அந்த அறையில் இருந்த ஒருவர், ‘சாத்தான் வேதம் ஓதுகிறது’ என்றார்.

“காட்டுக்குள் உட்கார்ந்துகிட்டு இவ்வளவு அரசியலை அவன் எப்படி தெரிஞ்சிக்கிட்டான்?” என மற்றொருவர் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார்.

“தமிழ் புரட்சிகர குழுவினரோடு அவனுக்குத் தொடர்பு இருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களோட தாக்கமா இருக்கும்.” முதலில் பேசியவர் பதிலளித்தார்.

அந்த அனுமானம் தப்பில்லை. டி.என்.எல்.ஏ. ஆட்கள் ஐந்து பேரை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையே அதற்கு வெளிப்படையான ஆதாரம். 1980—களில் தமிழ் ஈழத்திற்காக போராடிய தீவிரவாதக் குழுக்கள், காட்டில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த பகுதி, அவனது கேங் செயல்பட்டுக் கொண்டிருந்த பகுதிக்கு அருகில்தான் இருந்தது. அப்போது வீரப்பனுக்கு அவர்களோடு தொடர்பு ஏற்பட்டதாக நம்பப்படுகிறது. அவனது சந்தர்ப்பவாத

நட்பு அவனுக்குப் பின்னாளில் பலனளித்தது. அவனது முடங்கிய குழுவை மறுபடியும் கட்டமைக்க பணமும் பொருட்களும் அவர்கள் வெளிப்படையாகவே வழங்கினர்.

வீரப்பன், விடுவிக்க வேண்டும் என்று கேட்ட ஐந்து கைதிகளில் மூன்று பேர் அவனோடு சேர்ந்து 1998—ல் தமிழகத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கிய சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள். மற்ற இருவர் பொன்னிவளவன் மற்றும் ரேடியோ வெங்கடேசன். டிரான்சிஸ்டர் வெடிகுண்டு தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றிருந்ததால் அவனுக்கு ‘ரேடியோ’ என்ற அடைமொழி வந்தது. 1998 மற்றும் 2000—ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் எங்கோ ஒரு இடத்தில் வீரப்பன் தமிழ்தேசக் கொடியை ஏற்றி வைக்கும் காட்சியை புகைப்படங்கள் காட்டின.

இந்தப் புகைப்படங்களைப் பார்த்து, அதிரடிப்படையில் இருந்த ஒரு சிலர் வருத்தமடைந்தாலும், வேறு சிலர் விழுந்து விழுந்து சிரித்தனர். காரணம் வீரப்பன் அந்தப் புகைப்படங்களில் சேகுவேராவைப் போல கியூபாவின் ராணுவத் தொப்பியை அணிந்திருந்தான்.

ஆகஸ்ட் 9—ம் தேதி ஒரு புதிய ஆடியோ டேப் வந்தது. அதன் மூலம் ராஜ்குமார் உயிரோடு நன்றாக இருக்கிறார் எனத் தெரிந்தது. தன்னை வீரப்பன் நன்றாகப் பார்த்துக் கொள்வதாகவும், அவரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் அந்த டேப்பில் ராஜ்குமார் வலியுறுத்திச் சொன்னார். சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் அழைப்பு விடுத்தார். அவர் உணவையும் உறக்கத்தையும் மறக்கும் அளவுக்கு காட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலை மனதிற்கினியதாக உள்ளது என்றும் கூறினார்.

‘‘வீரப்பன் ஒரு சாதாரண மனிதனைப் போல வாழ விரும்புகிறான். இரண்டு அரசாங்கங்களும் அதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். நாங்கள் நல்ல நண்பர்களாகி விட்டோம்’’ என்றும் அவர் சொல்லியிருந்தார்.

சுவாரஸ்யம் என்னவெனில், அவனது அனைத்து டேப்புகளிலும் ராஜ்குமாரைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் பெரியவர் அல்லது

மதிப்புக்குரிய மூத்தவர் என்றுதான் குறிப்பிட்டான். ராஜ்குமார் பதிலுக்கு வீரப்பனைப் பற்றிச் சொல்லும் போது 'நல்ல மனிதன்' என்று சொன்னார். இது பிணைக் கைதிகள் தங்களைக் கடத்தியவர்கள் மீது பச்சாதாபமும் இரக்கமும் கொள்ளும் 'ஸ்டாக்ஹோம் சின்ட்ரோம்' எனப்படும் ஒரு உளவியல் கோட்பாட்டை நினைவுபடுத்தியது.

பேச்சுவார்த்தை நீண்டு தொடர, கடத்தியவருக்கும் பிணைக்கைதிக்கும் இடையே ஆன பிணைப்பு பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருந்தது எனத் தெரியவந்தது. பிணைக்கைதிகள் தாங்கள் உயிரோடு இருப்பதற்கான வாய்ப்பை அதிகரிப்பதற்காக தன்னைக் கடத்தியவர்களுடன் அதிகபட்ச நல்லுறவைப் பேண வேண்டும் என்று தங்களை அறியாமல் வகுக்கும் தந்திரத் திட்டம்தான் இது என பரிணாம கோட்பாட்டு உளவியலாளர்கள் விளக்குகின்றனர்.

ஆனால், வீரப்பன் இந்த நல்லுறவை தனது பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் குறுக்கிட விடுவதாயில்லை. ஆகஸ்ட் 11—ம் தேதி கோபால் புதிய நான்கு கோரிக்கைகளுடன் சென்னை திரும்பினார். இந்த முறை அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற இரு அரசுகளுக்கும் எட்டு நாள் கெடு விதிக்கப்பட்டிருந்தது. கோபாலும் வீரப்பனின் நடவடிக்கைகளில் ஒரு மாற்றத்தை கவனித்திருந்தார். இப்போது அவனிடம் ஒரு வேறுபட்ட விட்டேத்தியான வளைந்து கொடுக்காத தன்மை காணப்பட்டது.

பெரும்பாலான கோரிக்கைகள் அந்த டென் கமாண்ட்மென்ட்ஸை ஒரு சில சிறு மாற்றங்களுடன் மீண்டும் வலியுறுத்துவதாகத்தான் இருந்தன. இந்த முறை காவிரி நீர் பிரச்சினையை தி ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றும், டி.என். எல்.ஏ. ஆட்கள் ஐந்து பேரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும், கர்நாடக பள்ளிகளில் பத்தாம் வகுப்பு வரையில் தமிழ் வழிக் கல்வியை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருந்தான்.

இன்னும் சில கோரிக்கைகளை வீரப்பன் வைத்திருந்தாலும், தடா வழக்கில் கைது செய்யப்பட்டு, கர்நாடக சிறையில் இருக்கும் 51 பேரை

விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை பெரும் சட்டச்சிக்கலை எதிர்கொண்டது. வீரப்பனின் கோரிக்கையை எதிர்த்து, அம்மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் வழக்குப் போட்டார். அந்த பரபரப்பு சுப்ரீம் கோர்ட் வரை சென்றது.

## “ராஜ்குமாரை மீட்க காட்டுக்குச் செல்கிறேன்!” வாய்ஸ் கொடுத்த ரஜினி

வீரப்பனின் கோரிக்கைகள் ஒவ்வொன்றும் மக்கள் நலனைக் காப்பாற்றுவது போலவும் தன்னை கிராம மக்களின் ஹீரோவாக வைத்திருக்க வேண்டும் என்பதில் கவனமாகவும் இருந்தது தெரிந்தது.

‘எஸ்.டி.எஃப். அட்டூழியத்தால்... பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட வாச்சாத்தி மற்றும் சின்னாம்பதி கிராமத்துப் பெண்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிக்க வேண்டும்’ என்ற புதிய கோரிக்கை ஒன்றும் இருந்தது.

1992—ல் இந்த கிராமங்களில் கடத்தல் சந்தனக் கட்டைகள் மற்றும் வீரப்பனைத் தேடி நடத்தப்பட்ட வேட்டையில் உள்ளூர் பெண்கள் சிலர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாகவும் தாக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. சின்னாம்பதி வழக்கில் எஸ்.டி.எஃப். ஆட்களுக்குத் தொடர்பு இருக்கிறது என்று நிரூபணம் ஆகவே இல்லை. 1997—ல் கோவையில் எஸ்.டி.எஃப். வீரர்களின் அடையாள அணிவகுப்புடன் இந்த விசாரணை தொடங்கியது.

பெரும்பாலான எஸ்.டி.எஃப். வீரர்கள் அந்தக் கொள்ளைக்காரனை வெளியே கொண்டு வருவதற்கான புலனாய்வில் ஈடுபடுவதற்குப் பதிலாக, நீளமான அபிடவிட்டுகளைத் தயார் செய்து கொண்டிருந்தனர். ரீம் கணக்கில் பேப்பர் செலவழித்து மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குப் பிறகும் யாரேனும் ஒரு சாட்சி, எஸ்.டி.எஃப். வீரர்களில் ஒருவரை தவறாக குற்றவாளி என்று அடையாளம் காட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

கடைசியாக ஒரு எஸ்.டி.எஃப். வீரர்கூட குற்றவாளி என்று நிரூபிக்கப்படவில்லை. ஆனால் படையின் நற்பெயர் பாதிக்கப்பட்டது.

அதன்பிறகு இது போன்ற குற்றச்சாட்டுகளைத் தவிர்க்கும் விதத்தில் முன்னெச்சரிக்கையாகச் செயல்பட்டோம். நான் எஸ்.டி.எஃப்.—பில் பணியாற்றிய நேரத்தில் இன்ஸ்பெக்டர் ராஜராஜனுக்கு எதிரான ஒரு குற்றச்சாட்டு தொடர்பாக நாங்களே ஒரு மாஜிஸ்திரேட் விசாரணைக்கு உட்பட தயார் என்று அறிவித்தோம்.

மூத்த எஸ்.பி.யான சின்னசாமி மலைவாழ் பழங்குடியினர் அசோசியேஷன் மற்றும் சில குழுக்களுடன் தொடர்பு கொண்டார். அவர்கள் ஆரம்பத்தில் எங்களது நோக்கத்தை சந்தேகித்தனர். அதற்குப் பிறகு எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் வரவில்லை. இரு மாநில அரசுகளும் நடத்திய தீவிரமான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு அந்த ஐந்து டி.என்.எல்.ஏ. ஆட்களையும் உடனடியாக விடுவிப்பது என முடிவு செய்யப்பட்டது.

கர்நாடக அரசும் அந்தக் கொள்ளைக்காரனின் கோரிக்கையை அக்கறையுடன் கவனித்தது. 1991 காவிரி கலவரத்தில் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு இழப்பீடாக 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. வீரப்பனின் கோரிக்கைகளை அடக்கத்துடன் இரு மாநில அரசுகளும் தலைகுனிந்து ஏற்றுக்கொண்ட அவலம், ஒரு சில ஊடகங்களுக்கு மிக மோசமானதாகப் பட்டது.

‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ பத்திரிகையின் அப்போதைய எடிட்டர் சேகர் குப்தா பஞ்சாபில் தீவிரவாதத்தை ஒடுக்கியதற்காகப் பாராட்டப்பட்ட கே.பி.எஸ்.கில் போன்ற நபர்கள் கர்நாடக மற்றும் தமிழக போலீசில் இல்லையே எனப் புலம்பினார். அவரது கட்டுரை எனக்குள் எழுந்த ஒரு மிகப்பெரிய வேதனைக்குக் காரணமானது. இச்சம்பவம் நடந்தபோது நான் காஷ்மீரில் இருந்தேன். வீரப்பனை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்பதற்காக உயிரைப் பணயம் வைத்து அபாயத்திற்கிடையில் பணியாற்றிய நிறைய எஸ்.டி.எஃப். அதிகாரிகளுடனும் வீரர்களுடனும் பணியாற்றி இருக்கிறேன். அதில் நிறையப் பேர் இறந்தனர்.

என்னைப் பொறுத்தவரையில் இதுபோன்ற கட்டுரை அவர்களின் தியாகத்திற்கு அவமானம். அவர்களின் சக அதிகாரிகள் உணர்ந்த ஏமாற்றத்தையும் அவமானத்தையும் என்னால் கற்பனையில்தான் பார்க்க முடிகிறது. அந்தக் கட்டுரைக்கு உடனடியாக ஒரு பதிலை எழுதி அனுப்பினேன். அதில் ஏராளமான துணிச்சல் மிக்க போலீஸ்காரர்களின் முயற்சிகளை சிறப்பித்து எழுதி இருந்தேன். அதே பத்திரிகையில் அந்தக் கடிதம் முக்கியத்துவம் அளித்து பிரசுரமானது.

ஆனால் தமிழகத்திற்குத் திரும்பி வீரப்பனைத் தேடும் பணியில் மறுபடியும் சேர வேண்டும் என்று நினைக்கும் ஒருவருக்கு அது மோசமான ஆறுதலாகத்தான் இருந்தது.

இந்த நேரத்தில், வீரப்பன் வைத்த கோரிக்கையில் சட்டச்சிக்கல் உதயமானது. தேடுதல் வேட்டையில் உயிரிழந்த வீரத் தியாகி ஒருவரின் உறவினர்களில் ஒருவர், மைசூரில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் செஷன்ஸ் நீதிபதி ராஜேந்திரப் பிரசாத்தை அணுகினார். தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 51 பேரை விடுவிக்க கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சியை எதிர்த்து அவர் மனுதாக்கல் செய்தார். அந்த மனுதாரர் பெயர் அப்துல் கரீம். 76 வயதான ஓய்வு பெற்ற முன்னாள் டி.எஸ்.பி. இந்தப் புத்தகத்தின் முன் பக்கங்களில் விவரிக்கப்பட்ட வீரப்பன் தாக்குதலில் எஸ்.பி. ஹரி கிருஷ்ணனுடன் கொல்லப்பட்ட எஸ்.ஐ. ஷகில் அகமதுவின் தந்தை அவர்.

“வலுவற்ற குடியரசைப் போல ஒரு அரசாங்கம் குற்றவாளி முன் மண்டியிடுவது வெட்கக்கேடான ஒன்று” என அவர் வருந்தினார். இந்த உணர்வு இந்தியக் குடியரசுத் தலைவரின் சுதந்திர தின உரையில் எதிரொலித்தது. குற்றத்திற்கும் அரசியலுக்கும் இடையில் உள்ள பிணைப்பு, கொள்ளைக்காரர்களை வியப்பது, சென்சேஷசனுக்காக மீடியாக்கள் அலைவது ஆகிய விஷயங்களை அவர் தனது உரையில் குறிப்பிட்டார். இரண்டு நாட்களுக்குப் பிறகு மைசூர் நீதிமன்றத்தில் அந்த உரை மேற்கோள் காட்டப்பட்டது.

ஆகஸ்ட் 19—ம் தேதி, குற்றவாளிகளுக்கு எதிரான தடா குற்றச்சாட்டுகளைக் கைவிட வேண்டும் என்று கோரிய அரசுத் தரப்பு மனுவை நீதிபதி பிரசாத் ஏற்றுக் கொண்டார். அச்சமற்ற கரீம் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார். அந்த நீதிமன்றம் எஸ்.டி.எஃப்—பின் இணைத் தலைவர் வால்டர் தேவாரத்தின் கருத்தைக் கேட்டது.

அந்த மனிதர், அவருடைய அதிரடி பாணிக்கு உண்மையாக இருந்தார். அவர்களை வெளியே விட்டால், அது அரசியலுக்கும் குற்றச் செயல்களுக்கும் இடையே உள்ள கொடிய பிணைப்பை ஊக்கப்படுத்துவதாக ஆகிவிடும் என்று நீதிமன்றத்தில் கூறினார்.

நீதிமன்றம் காலத்தை வீணாக்கவில்லை. சிறையில் அடைக்கப்பட்டிருந்த அந்த 51 பேரின் விடுதலைக்கு காலவரையற்ற தடை உத்தரவைப் பிறப்பித்தது. இதன் காரணமாக கலவரம் வெடித்தால் அது பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தாகி விடும் என்று கர்நாடக அரசு வைத்த முறையீட்டுக்கு நீதிமன்றம் உறுதிபட பதிலளித்தது.

“சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது கர்நாடக அரசின் பொறுப்பு. உங்களால் அதைச் செய்ய முடியவில்லையெனில், நீங்கள் பதவி இறங்கி, அதை யார் செய்வார்களோ அவர்களுக்கு வழிவிடுங்கள்” என்று கூறியது. இந்தப் புதிய திருப்பம் வீரப்பனுக்கு பிடிக்கவில்லை. தனது வாழ்நாளின் பெரும்பகுதியைக் காட்டிலேயே கழித்த அவனை, இந்திய சட்ட வழிமுறைகளில் இருக்கும் சிக்கல், திணறச் செய்தது. ஏமாற்றத்தைக் கொடுத்தது.

அவனுக்குப் பிடித்த தூதர் கோபால் காட்டில் அவனுடன் மற்றொரு சந்திப்பை முடித்து விட்டு வந்து, வீரப்பன் அவனது ஆட்களை விடுவித்தால்தான் ராஜ்குமாரை விடுவிப்பேன் என்று பிடிவாதமாக இருக்கிறான் என எச்சரித்தார்.

செப்டம்பர் 2000

ராஜ்குமாரின் ரசிகர்கள் காட்டுக்குள் செல்லப் போவதாக பயமுறுத்தினர். ரஜினிகாந்தும் தேவைப்பட்டால் தானும் காட்டிற்குள் செல்லத் தயாராக இருப்பதாகக் கூறினார். தமிழர் எதிர்ப்பு போஸ்டர்களும் கன்னடர் எதிர்ப்பு போஸ்டர்களும் மோதிக் கொண்டன. தமிழக அரசைப் பொறுத்தவரையில், ராஜ்குமாருக்கு மிரட்டல் இருப்பதாக தங்களுக்கு வந்த தகவலை கர்நாடக அரசுக்குச் சொல்லி விட்டதாக கூறியது. இந்த விஷயத்தில் கர்நாடக அரசு அசட்டையாக இருந்துவிட்டதாக உச்ச நீதிமன்றம் விமர்சித்தது. ஆனால் ராஜ்குமார் அவரது பண்ணை வீட்டிற்குச் செல்வது குறித்து தங்களுக்கு தகவல் சொல்லவில்லை என்று கர்நாடக அரசு விளக்கமளித்தது. இரு மாநிலங்களிலும் நடக்கும் உச்சபட்ச அணிவகுப்புகள் என்ன நடக்குமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் செப்டம்பர் 20–ம் தேதி ராஜ்குமார் மனைவி பர்வதம்மாவிற்கு நெஞ்சுவலி ஏற்பட்டு அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த பரபரப்புக்கிடையே வீரப்பன் பிடித்து வைத்திருந்த ராஜ்குமார் கூட்டத்திலிருந்து ஒருவர் தப்பினார்...?

## வீரப்பனை வெட்ட அரிவாளை எடுத்து ஓங்கிய போது...?

ராஜ்குமார் மனைவி பர்வதம்மாவுக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. அவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மரணத் தறுவாயில் இருப்பதாகவும் மாநிலம் முழுவதும் வதந்திகள் பரவின. ஆனால், நல்ல வேளையாக அது உண்மையாகவில்லை. மன அழுத்தமும் பதற்றமும் அவரது உடலை வெகுவாகப் பாதித்திருந்தாலும், மாலையிலேயே உடல்நலம் தேறி அவர் வீடு திரும்பிவிட்டார்.

ராஜ்குமார் குடும்பத்தினரும் அவருடைய ரசிகர்களும் பெரும்பாலும் வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதற்கு ஆதரவாகத்தான் கருத்துத் தெரிவித்தனர்.

“கந்தஹார் கடத்தலின் போது அரசாங்கத்தால் பேச்சுவார்த்தை நடத்த முடியும்போது எனது கணவர் விஷயத்தில் மட்டும் அது ஏன் முடியாது?” என்று பர்வதம்மா கேட்டார். மேலும் தமிழ்நாடு அரசும் தனது அபிடவிட்டில், 1989—ல் அப்போதைய மத்திய உள்துறை அமைச்சர் மறைந்த முப்தி முகமது சயீத்தின் மகளான ரூபியா சயீத்தை மீட்பதற்காக தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்ட சம்பவத்தை முன்னுதாரணமாகக் குறிப்பிட்டிருந்தது. இதுபோன்ற சாமர்த்தியப் பேச்செல்லாம் விஷயத்தை சிக்கலாக்கவே உதவின.

பிணைக் கைதிகளை மீட்பதற்கான பேச்சுவார்த்தை நடத்துவது குறித்த வாதப் பிரதிவாதங்களும் ஊசலாட்டங்களும் கடத்தல் என்பது ஒரு சர்வதேச விஷயம் என்ற கருத்தை வலுப்படுத்தியது. மிகுந்த கட்டுப்பாடான பேச்சுவார்த்தை கொள்கைகளை வைத்திருக்கக்கூடிய இஸ்ரேலில்கூட 2011—

ல் அந்நாட்டின் படை வீரர் கில்லாட் ஷாலிட்டை மீட்பதற்காக 1,027 கைதிகளை விடுவித்தார்கள். 2006—ல் எந்த ஒரு கடத்தல் சம்பவத்திற்கும் பலியாவதில்லை என்று இந்தியா அதிகாரபூர்வமாக அறிவித்தது. சந்தர்ப்பவசமாக, அந்தக் கொள்கை இப்போது வரையில் பரிசோதித்துப் பார்க்கப்படவில்லை. ஒருபோதும் பரிசோதிக்கப்படாது என்றே தோன்றுகிறது.

இதற்கிடையில் காட்டில் இருந்த வீரப்பன், உடனடியாக பரிமாற்றம் எதுவும் நிகழப் போவதில்லை என உணர்ந்திருந்ததால், நீண்டகால வழி என்ன என்று யோசிக்கத் தொடங்கினான். அவனுக்கு நெருக்கமானவர்களிடம், முதலமைச்சர் கிருஷ்ணா தன்னிடம் தனிப்பட்ட முறையில் தொலைபேசியில் பேசியதாகக் கூறினான். பிறகு அவனது டேப் ஒன்றிலும், ராஜ்குமாரை எதுவும் செய்து விடாதே என்று கிருஷ்ணா அவனிடம் கேட்டுக் கொண்டதாகவும், அது உங்கள் கையில்தான் இருக்கிறது என்று பதில் சொன்னதாகவும் கூறினான்.

பேச்சுவார்த்தை போய்க் கொண்டிருந்தது. வீரப்பன் ஒரு விதமான மனநிறைவுக்கு வந்து விட்டதைப் போலத் தோன்றியது. அவனுடைய பாதுகாப்பைக் கூடத் தளர்த்தி இருந்தான். ஒருநாள் கேம்ப்பில் நான்கே நபர்கள் மட்டும் வீரப்பன், ராஜ்குமார், கோபால், ராஜ்குமாரின் உதவியாளர் நாகப்பா, இருந்தனர்.

அது ஒரு மாலை நேரம். நாகப்பா தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தார். வீரப்பன் அவருக்கு சில அடிகள் தூரத்தில்தான் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். கோபால் ஒரு புத்தகத்தில் மூழ்கி இருந்தார்.

நாகப்பாவின் இதயம் பலமாகத் துடித்தது. அவரது உடல் வியர்வையால் ஜில்லிட்டது. அவர் மற்றொருபுறம் திரும்பிப் பார்த்தார். ராஜ்குமாரும் நன்கு தூங்கிக் கொண்டிருந்தார். இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதை விட்டு விடக் கூடாது. எதையாவது ஆயுதமாகப் பயன்படுத்தலாமா?

உடனடி அசைவு எதுவுமில்லாமல் ஜாக்கிரதையாக சுற்றுமுற்றும் பார்த்தார். அவருக்கு இடது பக்கத்தில் இரண்டு மீட்டர் தூரத்தில் ஒரு

அரிவாள் கிடந்தது. அதைக் கருவியாகவும் பயன்படுத்தலாம். ஆயுதமாகவும் பயன்படுத்தலாம்.

அவருக்குள் ஒரு சில நிமிடங்கள் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. அது முடிவில்லாமல் தொடரும் போலிருந்தது. பின்னர் அவர் எழுந்து அவரது உடல் அமைப்புக்குப் பொருத்தமில்லாத விதத்தில் தாவிக் குதித்து அரிவாளைக் கைப்பற்றினார்.

வீரப்பனின் கழுத்தில் வெட்டும் விதத்தில் அரிவாளைப் பிடித்தார். ஆனால் அவர்கள் தங்கி இருந்த அந்த தற்காலிக முகாமில் கூரை தாழ்வாக இருந்தது. எனவே ஓங்கி வெட்டுவதற்கு அரிவாளை மேலே தூக்க முடியாமல் கூரை தடுத்தது. அரிவாளை அவர் வீசுவதற்கு முன், கோபால் எழுந்து, அவரது தோள்களைப் பிடித்தார்.

“நீங்க என்ன நெனைச்சிக்கிட்டு இதைச் செய்றீங்க?” என்று கோபால் கோபத்துடன் கிசுகிசுத்தார்.

“இது நமக்குக் கிடைச்ச நல்ல சந்தர்ப்பம். என்னை விடுங்க” நாகப்பா ரகசியமாகச் சொன்னார்.

“நல்லது அவனைக் கொன்னுடுங்க. பிறகு? அவனோட ஆட்கள் இங்க பக்கத்துலதான் இருப்பாங்க. அவங்க நம்மள இந்த இடத்தை விட்டுப் போக விட்டுடுவாங்கன்னு நெனைச்சீங்களா? நம்ம எல்லோரையும் கொன்னுடுவாங்க” என்றார் கோபால்.

நாகப்பா கைகளை இறக்கினார். ஆனால் அவரது எண்ணங்கள் துடித்துக் கொண்டுதான் இருந்தன. “என்னால இங்க இருக்க முடியாது. இது வீரப்பனுக்குத் தெரிஞ்சா என்னைக் கொன்னு போட்டுடுவான்” என்று நினைத்தார். விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் வேகமாக ஓட ஆரம்பித்தார். அவரது கால்கள் எந்த அளவுக்கு அனுமதிக்குமோ அந்த அளவுக்கு வேகமாக ஓடினார்.

இரவு முழுக்க காட்டுக்குள் வழி தெரியாமல் குருட்டுத்தனமாக ஓடினார். இரண்டு முறை வழியில் மரத்தில் மோதி கீழே உருண்டு விழுந்து சிராய்த்துக் கொண்டார். ஒவ்வொரு முறை அவரால் நடக்க முடியாமல் போகும் போதும், நிற்காதே போய்க் கொண்டே இரு என்று சோர்ந்து போன தனது உடம்புக்கு கட்டளை இட்டார்.

காலை விடிந்து வெளிச்சம் வந்ததும் ஒரு ஆள் அரவமற்ற காட்டுப் பாதையைக் கண்டார். அந்தப் பாதையில் மன உறுதியோடு நடந்தார். ஒரு சில மணி நேரங்களுக்குப் பிறகு பண்ணாரி செல்லும் தார் ரோட்டை வந்தடைந்தார். போலீசிடம் உதவி கேட்பதற்குப் பதில், ஒரு கிராமவாசியை பிடித்து, அவரிடம் கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டு, பஸ்சைப் பிடித்து ராஜ்குமார் கடத்தப்பட்ட கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஒரு சில நாட்களுக்கு வில்லனிடமிருந்து தப்பி வந்த ஹீரோவாகவே நாகப்பா புகழப்பட்டார். ஆனால் விரைவிலேயே ஒரு சிலர் நாகப்பா தனது ஹீரோவை விட்டுவிட்டு ஓடி வந்த கோழை என்று சொல்ல ஆரம்பித்து விட்டனர்.

அங்கு கேம்ப்பில் வீரப்பன் இடி போல கத்தியவாறு மீதமிருந்த மூன்று பிணைக் கைதிகளையும் மேலும் கீழும் பார்த்துக் கொண்டிருந்தான்.

“இது எப்படி முடியப் போகுதோ” என்று ராஜ்குமார் நினைத்தார்.

ராஜ்குமாருக்கு தன்னைக் குறித்து பயமில்லை. மற்றவர்களைக் குறித்துத்தான் பதற்றமடைந்தார். “நான் ஒரு முழு வாழ்க்கையும் வாழ்ந்து முடிச்சிட்டேன். என்னைய சுட்டுடு. அவங்கள விட்டுடு” என்று அவர் வீரப்பனிடம் கெஞ்சினார்.

அந்தக் கொள்ளைக்காரன் ராஜ்குமாரையே நெடுநேரம் கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர் தலையை உலுக்கிய அவன், “கவலைப்படாதீங்க பெரியவரே. உங்களுக்கு எதுவும் நடக்காது. மத்த எல்லோரையும் விட உங்களை நான் நல்லா பாத்துக்குவேன்” என்றான்.

அதன் பிறகு நடந்தது எல்லாமே வீரப்பனுக்கு பின்னடைவுதான். அவனிடம் பேச்சுவார்த்தை நடத்திய கோபாலை புறக்கணித்துவிட்டு, புதிய தூதரை அனுப்புமாறும், அந்த தூதர் யார் என்பதையும் அவனே கேசட்டில் தெரிவித்திருந்தான்.

புதிய தூதருடன் சென்ற பெண் டாக்டர் ஒருவர் காட்டுக்குள் சென்றதும், ராஜ்குமாரை பரிசோதித்தார். பின்னர் வீரப்பனை தனியாக அழைத்து, பெண் டாக்டர் ரகசியமாக சொன்னதைக் கேட்டு வீரப்பன் ஆத்திரம் அடைந்தான்.

அப்படி என்ன சொன்னார் அந்த பெண் டாக்டர்?

# ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பன் முடிவெடுத்தது ஏன்?

அக்டோபர் 2000

நாகப்பா தப்பித்து வந்தது பேச்சுவார்த்தைக்கான அவசரத்தை கூட்டி இருந்தது. அந்தக் கொள்ளைக்காரன் தனது கேசட்டுகளில் அந்த விஷயம் குறித்து எச்சரிக்கையுடன் பேசாமல் மவுனம் காத்தான். ஆனால் வீரப்பன் இன்னும் அந்தச் சம்பவம் குறித்து எரிச்சலுடன்தான் இருக்கிறான் என்று கோபால் சொன்னார். அரசாங்கங்கள் தீவிரமான பதில் நடவடிக்கை வருமே என்று அஞ்சின. டாக்டர் ராஜ்குமாரின் உணர்ச்சிமயமான ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து தசராவிற்கு முதல் நாள் நடந்த முழு அடைப்பு போராட்டம் அமைதியாக நடந்தேறியது.

இந்த ஒட்டுமொத்த ஆரவாரங்களுக்கு மத்தியில் ஒரு டேப் வந்தது. அதில், வீரப்பன் இப்போது மற்றொரு கூடுதல் தூதுவராக தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் வர வேண்டும் என விரும்புவதாக ராஜ்குமார் கூறினார். நெடுமாறன் மனித உரிமை ஆர்வலர் பேராசிரியர் கல்யாணியுடன் காட்டுக்குள் சென்றார்.

ஒரு சில காரணங்களால் வீரப்பன், பழைய தூதர் கோபால் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டதாகத் தோன்றியது. ஒரு காலத்தில் அவனது நம்பிக்கைக்குரிய தூதுவராக இருந்த கோபால், அவனுக்கு துரோகம் செய்வதாக அவன் சந்தேகப்பட்டதாக வதந்திகள் பரவின. கோபாலுக்கு எதிரான எந்த ஆதாரமும் இல்லாத போதிலும், அவர்கள் இருவரின் நட்பும்

வீரப்பன் ஒருமுறை அவனது நம்பிக்கைக்குரியவர்களிடம், அந்த மனிதனுக்கு ஒரு பாடம் புகட்டுவேன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு கெட்டுப்போனது.

அடுத்த முறை கோபால் காட்டிற்குச் சென்றபோது அவருடன் நெடுமாறன், பேராசிரியர் கல்யாணி, மற்றொரு தமிழ் உரிமை ஆதரவாளர் ஜி.சுகுமாறன் ஆகியோர் சென்றனர். எனினும் ஒரு கட்டத்தில் கடுமையான விமர்சனங்கள் வந்ததால், நெடுமாறன் தூதுவர் பணியில் இருந்து விலகி விடப்போவதாக மிரட்டினார். ஆனால் நெருக்கடியைக் கையாளும் குழுவினர் எப்படியோ அவரைச் சமாதானப்படுத்தி விட்டனர்.

அக்டோபர் 16—ம் தேதி ராஜ்குமாரின் மருமகன் கோவிந்தராஜை வீரப்பன் விடுவித்தான். கோவிந்தராஜ் சர்க்கரை மற்றும் இதய நோயாளி. காட்டில் நிலவிய துன்பமான சூழ்நிலை அவரது உடல்நலத்தை வெகுவாகப் பாதித்தது. எனவே வீரப்பன் அவரை விடுவிக்க சம்மதித்திருந்தான். ஆனால் ராஜ்குமார் விடுவிப்பு குறித்து பேச்சே இல்லை. அவனது ஆட்களை விடுவித்தால்தான் அவன் ராஜ்குமாரை விடுவிப்பான். இந்த இழுபறி நிலை தொடர்ந்தது.

நவம்பர் 6.

ராஜ்குமார் வீரப்பன் பிடியில் 100 நாட்களை முடித்தார். அடுத்த நாள் தடா கைதிகள் ஒருவரைக்கூட விடுவிக்க முடியாது என உச்ச நீதிமன்றம் அறிவித்தது. மேலும் ரேடியோ வெங்கடேசன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கைவிடும் தமிழக நீதிமன்றத்தின் உத்தரவையும் அது ரத்து செய்தது.

டி.என்.எல்.ஏ.வைச் சேர்ந்த சத்தியமூர்த்தி, மணிகண்டன் மற்றும் முத்துக்குமார் ஆகியோரைக் கைது செய்யும் உத்தரவை திரும்பப் பெறுவது என கருணாநிதி அரசு எடுத்த முடிவையும் நிராகரித்தது. ராஜ்குமாருக்காக கைதிகளை விடுவிப்பதற்கான சாத்தியக் கூறு இல்லாமல் போனது. நவம்பர் 9—ம் தேதி கல்யாணி மற்றும் சுகுமாறனுடன் நெடுமாறன் மீண்டும் காட்டுக்குத் திரும்பினார். அவர்களுடன் பெங்களூருவைச் சேர்ந்த பிசினஸ்மேன் ஒருவரும், டாக்டர் எனக் கூறிக்கொண்டு ஒரு தமிழ்ப் பெண் பானுவும் சென்றனர்.

அவர்கள் கேம்ப்புக்குச் சென்று சேர்ந்ததும் பானு நேராக ராஜ்குமாரிடம்தான் சென்றார். அவரது உடலை முழுமையாகப் பரிசோதித்தார். பானுவின் முகத்தில் வருத்தம் தெரிந்தது.

அதைப் பார்த்து கவலையடைந்த வீரப்பன், பானுவிடம் சென்று, ''என்ன விஷயம்?'' என்றான்..

கொஞ்சம் பொறு என்பது போல வீரப்பனிடம் கையை உயர்த்தி சைகை செய்தார் பானு. மீண்டும் பரிசோதனையைத் தொடர்ந்தார். ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு, வீரப்பனை அந்த இடத்தை விட்டு கொஞ்சம் தள்ளி வருமாறு சைகை செய்தார்.

அங்கு வைத்து வீரப்பனிடம் மெதுவாகவும் அவசரமாகவும், ''அவர் இன்னும் எப்படி உயிரோடு இருக்கிறார் என்று என்னால் நம்பவே முடியவில்லை. மருத்துவப் பரிசோதனையில் எல்லாமே அவருக்கு நெகட்டிவாக இருக்கிறது. உனது பிடியில் இருக்கும்போது அவர் எப்போது வேண்டுமானாலும் இறந்து விட வாய்ப்பு இருக்கிறது'' என்று பானு சொன்னார்.

வீரப்பனின் முகத்தில் ஆத்திரம் அதிகரித்தது. ''வீரப்பன் பிடியில் இருக்கும்போது ராஜ்குமார் இறக்கிறார்'' என்பது அவனது பார்வையில் நல்ல தலைப்புச்செய்தி அல்ல. அதன்பிறகு கலவரம் வெடிப்பது நிச்சயம். அவனது பிடியில் ராஜ்குமார் இறந்தால், அவனது இமேஜ் மீண்டும் சரி செய்ய முடியாதபடி கெட்டுப் போய்விடும் என்று அவன் அறிந்திருந்தான்.

ராஜ்குமாரை அவன் உயிரோடு வைத்திருக்கிறான் என்பதற்காகத்தான் இதுவரையில் அதிகாரிகள் அவனிடம் மென்மையாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த விலைமதிப்பற்ற பனயப் பொருளை இழந்துவிட்டால் அவன் மீது போலீசும் துணை ராணுவமும் முழு ஆத்திரத்துடன் பெரும் தாக்குதல் நடத்தும்.

நவம்பர் 9—க்குப் பிறகு நிறைய சஸ்பென்ஸ்கள் தொடர்ந்தன. பிணைக் கைதிகள் எந்த நேரமும் விடுவிக்கப்படலாம் என அனுமானங்கள் உலவின.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. பின்னர் இறுதியாக நவம்பர் 15—ம் தேதி 108 நாட்களுக்குப் பிறகு ராஜ்குமாரும் நாகேசும் சந்தடி எதுவுமில்லாமல் விடுவிக்கப்பட்டனர்.

வீரப்பன் அவர்கள் இருவரையும் விடுவிக்கும்போது மரியாதை நிமித்தமாக அவர்களுக்கு சால்வையைப் பரிசளித்தான். பண்ணாரிக்கு அருகே அவர்கள் காட்டை விட்டு வெளியே வந்தனர். அங்கிருந்து 90 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அம்மாபேட்டை அதிகாரபூர்வமாக அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும் இடமாக அறிவிக்கப்பட்டிருந்தது. ராஜ்குமாருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹெலிகாப்டர் மூலம் அவர் வந்து இறங்கியபோது ஆயிரக்கணக்கானோர் அவரை வரவேற்கத் திரண்டிருந்தனர்.

பெங்களூரு நகரம் முழுவதும் விழாக் கோலம் பூண்டிருந்தது. மகிழ்ச்சியில் திளைத்த ரசிகர்கள் ராஜ்குமார் பாதுகாப்பாகத் திரும்பியதை உற்சாகத்துடன் பட்டாசு வெடித்தும் இனிப்பு வழங்கியும் கொண்டாடினர். அவரைக் கொண்டாடும் ரசிகர்கள் புடை சூழ, வாகனங்கள் அணிவகுக்க அவர் கம்பீரமாக கர்நாடக சட்டமன்றக் கட்டடமான விதான் சவுதாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், அவருடைய அனுபவங்களை எவ்விதக் கசப்புணர்வும் இன்றி நினைவு கூர்ந்தார். அதில் வீரப்பன் குறித்த அனுதாபம்கூட அடங்கி இருந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆபரேஷன் குக்கூனில் வீரப்பன் இறந்த பிறகு, 'ஒரு தீய சக்தி அழிக்கப்பட்டது' என்றார் ராஜ்குமார்.

வீரப்பன் தன்னை தமிழ் ராபின் ஹூட் போல முன்னிறுத்திக் கொள்வதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டான் என்பது ராஜ்குமார் மற்றும் நாகேஷிடம் விரிவாக பேசியதில் இருந்து தெரிய வந்ததாக போலீஸ் கூறியது.

ராஜ்குமார் விடுவிப்புக்குப் பிறகு, வீரப்பனுக்குப் பெருந்தொகை கொடுக்கப்பட்டதாக நிறைய வதந்திகள் பரவின. 20 கோடியில் இருந்து 50 கோடி வரை இருக்கும் எனவும், அந்தப் பணம் ஒருவேளை தவணை

முறையில் கொடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் அனுமானிக்கப்பட்டது. கடைசித் தொகை ராஜ்குமாரை அவன் விடுவித்த அன்று கொடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்பட்டது. உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி, அந்தப் பணம் பல்வேறு வகைகளில் திரட்டப்பட்டிருந்தன. கிரானைட் குவாரி உரிமையாளர்கள், சாராய ஒப்பந்ததாரர்கள் மற்றும் தாங்களாக முன்வந்து தொழிலை நிறுத்தியதால் பாதிக்கப்பட்டிருந்த கர்நாடக திரைத்துறையினரிடம்கூட அந்தப் பணம் திரட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

ஆனால், ராஜ்குமாரை விடுவிப்பதற்காக பணம் எதுவும் கொடுக்கப்படவில்லை என கர்நாடக அரசு மறுத்தே வந்தது. நூறுநாள் தனது பிடியில் ராஜ்குமாரை வைத்திருந்த வீரப்பன் எதையாவது பெறாமல் அவரை விடுவித்திருப்பானா என பலர் சந்தேகம் கிளப்பினர்.

ராஜ்குமாரை விடுவிடுத்ததுமே, இரு மாநிலங்களும் வீரப்பன் வேட்டையில் அசூரத்தனமாக குதித்தன.

# சபரிமலை பக்தர் வேடத்தில் தப்பித்த வீரப்பனை காட்டிக் கொடுத்த அய்யப்பன்?

ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பனுக்கு பெரிய தொகை கிடைத்து விட்டதாக பலர் பேசிக்கொண்டதைப் போல ஊடகங்களும் எழுதத்தொடங்கின.

அப்படி பலர் பேசியதற்கும், சில ஊடகங்கள் எழுதியதற்கும் ஒரு சில வித்தியாசமான சம்பவங்கள் வலு சேர்த்தன. வீரப்பனும் அவனது கேங் ஆட்களும் அடிக்கடி நடமாடும் கிராமங்களிலும் அவர்களுடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் என அறியப்பட்டவர்களிடமும் 500 ரூபாய் நோட்டுகள் திடீரென புழங்க ஆரம்பித்தன.

பின்னர் ஒருநாள், காட்டில் கவனமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த பணக்குவியல் ஒன்றை எஸ்.டி.எஃப் மற்றும் சேலம் போலீசார் கைப்பற்றினர். அதுபோன்ற பல குவியல்கள் இருந்திருக்கலாம். அதேசமயத்தில், வீரப்பன் கும்பலில் டெலிபோன் மூலம் நடந்த சம்பாஷனைகளை இடைமறித்துக் கேட்கப்பட்ட சில உரையாடல்களில் 'நான்கு' என்ற வார்த்தை அடிக்கடி அடிபட்டது. ஆனால் பணம் கைமாறியது பற்றிதான் அந்த பேச்சு குறிப்பிடுகிறதா என்பது தெளிவாகப் புலனாகவில்லை. பின்னர் அதுபற்றி எந்த பேச்சும் இல்லை, என்றார் புலனாய்வுப் பிரிவின் சென்னை மையத் தலைவரான மறைந்த ஜோஸ் டராயில்.

ராஜ்குமார் கடத்தப்படுவதற்கு முன் வீரப்பன் பணத்திற்கு மிகவும் சிரமப்பட்டிருக்கிறான் என எஸ்.டி.எஃப். புலனாய்வுத் துறை தெரிவித்தது. ஒரு முறை சாராய வசூலை எடுத்துச் சென்ற ஜீப்பை திருடி அவன் சமாளித்திருக்கிறான். மேலும் அவசியமான பணத்தேவைக்கு தனது தங்கச்

சங்கிலியை அடமானம் வைத்து சமாளித்திருக்கிறான். ஆனால் அந்த நடிகரின் விடுவிப்புக்குப் பிறகு அவனது ஆட்கள் 500 ரூபாய் நோட்டை சரளமாக புழக்கத்தில் விடுகிறார்கள் என்றால் அவர்களுக்கு அந்த அளவுக்கு பணம் எங்கிருந்து வந்தது?

ராஜ்குமார் கடத்தல் சம்பவம் சந்தேகமில்லாமல் வீரப்பனின் பிரபலத்தை உச்சத்திற்கு ஏற்றியது. ஆனால் தனக்கு கிடைத்த வாய்ப்புகளில் கொஞ்சம் அதிகமாகவே விளையாடி விட்டான். எல்லையை மீறி விட்டான். இதனால் அவமானமும் கோபமும் அடைந்த இரு மாநில அரசுகளும் ஒரு பெரும் தேடுதல் வேட்டையைத் தொடங்கின. அது கர்நாடக மற்றும் தமிழக எல்லைகளைத் தாண்டி கேரள எல்லை வரையில் விரிவடைந்தது.

ராஜ்குமார் விடுவிக்கப்பட்டபோது நான் புது டெல்லியில்தான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். எனினும் வீரப்பனைத் தேடும் நடவடிக்கைகள் குறித்து ஆர்வம் காட்டினேன். அது குறித்து அதிரடிப்படையில் இருந்த எனது சக அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக பேசி தகவல்களைத் தெரிந்து கொண்டிருந்தேன். ராஜ்குமார் குறித்த பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தபோது, தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனச் சொல்லப்பட்டது குறித்து அதிரடிப்படையினர் கடும் கோபத்தில் இருந்தது. அது தனது முழு ஆற்றலையும் முடக்கி வைத்திருந்தது.

2001 ஜனவரியில் பி.எஸ்.எப்., ஐ.ஜி என்ற முறையில் பி.எஸ்.எப்.—லிருந்து 117 பட்டாலியனை தமிழ்நாட்டிற்கு அனுப்பி அவர்களை வீரப்பன் தேடுதல் வேட்டையில் இருக்கும் அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என என்னிடம் கேட்டுக் கொண்டிருந்தனர். அந்த பட்டாலியன் பர்மா எல்லையில் இருந்து விமானம் மூலமாக கோவையில் வந்து இறங்கியது.

வழக்கமாக அத்தகைய பணி ஜூனியர் அதிகாரியிடம்தான் ஒப்படைக்கப்படும். எனினும் நானே எனது பழைய தேடுதல் களத்திற்கு மறுபடியும் மகிழ்ச்சியுடன் சென்றேன். மீண்டும் ஒருமுறை எனது பழைய கமாண்டர்கள் பலரை சந்தித்தேன். அவர்களின் நடவடிக்கைகளில் நானும் பங்கேற்க வேண்டும் என விரும்பியதாக அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

அந்த உணர்வு இருதரப்பிலும் இருந்தது. நான் அவர்களுக்கு உறுதி அளித்தேன்.

தமிழ்நாட்டில் எனது பணியைத் தொடர வேண்டும் என பி.எஸ்.எப். என்னிடம் கேட்டுக் கொள்ளும் என உள்ளுக்குள் நம்பினேன். நான் முதலமைச்சர் கருணாநிதியை சந்தித்தபோது எனது சக பணியாளர்கள் சொன்னதை அவரும் உறுதிப்படுத்தினார். ராஜ்குமார் விவகாரம் முடிந்த உடன் என்னை தமிழக அதிரடிப்படைக்குத் திரும்ப அழைக்க வேண்டும் என தான் எடுத்திருந்த முடிவை முதலமைச்சர் வெளிப்படுத்தினார்.

ஆனால் ஒருசில காரணங்களால் அது நடைபெறவில்லை. சில நாட்களுக்குப் பிறகு டெல்லிக்கு அரைகுறை மனதோடு திரும்பினேன். எனினும் இங்கு நடப்பவற்றை தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருந்தேன். ஒருசில மாதங்களில் நான் தமிழ்நாடு அதிரடிப்படைக்கு செல்லப் போகிறேன் என்று எனக்கு அப்போது தெரியாது.

ஜோஸ் டராயில் (பின்னாளில் அவர் மாரடைப்பால் இறந்து விட்டார்) மற்றும் பிறர் செம்மந்தி மலைகளில் வீரப்பன் நடமாட்டமுள்ள அபாயகரமான பகுதிகளை எனக்கு நினைவுப்படுத்தினர்.

நவம்பர் 2000

ராஜ்குமார் விடுவிக்கப்படுவதற்கு முதல் நாள் இரவு, சில அடையாளம் தெரியாத நபர்கள் காட்டில் இருந்து வெளிப்பட்டனர். சத்தமில்லாமல் ஒரு கார் மற்றும் ஒரு வேனில் ஏறி விரைவாகச் சென்றனர். அவர்கள் எங்கு சென்றார்கள் என்பது தெரியவில்லை. அது அதிரடிப்படையினருக்குத் தெரியாமல் இருந்தது அல்லது அவர்கள் முகாம்களை விட்டு வெளியே வரக்கூடாது என்று சொல்லப்பட்டிருந்தது.

ஒரு மெட்டடோர் வேனில் கோவிந்தன் உட்பட ஏழு பேருடன் சென்ற வீரப்பன் பதற்றமாக இருந்தான். இன்னொரு மூன்று பேர் ஒரு அம்பாசிடரில்

இருந்தனர். அவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த வாகனங்கள் அவர்களுக்கு தரப்பட்டிருக்கலாம்.

வீரப்பனுக்கு குறிப்பாக வாகனங்களைப் பிடிக்காது. அவை அவனுக்கு துரதிர்ஷ்டமானவை என்ற ஜோசியத்தை நம்பினான். ஆனால் அந்த நேரத்தில் அவனுக்கு வேறு வழி இல்லை. ராஜ்குமார் பாதுகாப்பாக இருக்கிறார் என்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவனது அதிரடி கடத்தல் நடவடிக்கைக்கு, அதிகாரிகளிடமிருந்து பதில் தாக்குதல் வரும் என்று வீரப்பன் எதிர்பார்த்தான். அப்படி தாக்குதல் நடத்தினால், அவர்களிடம் இருந்து தப்பிக்க, வெகு தூரத்திற்கு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் சென்று விட வேண்டிய தேவை இருந்தது.

அங்கிருந்து மேற்கில் 300 கிலோ மீட்டர் தொலைவில் கேரளாவில் உள்ள அய்யப்பன் கோயில் இருக்கும் சபரி மலைக்குச் செல்லும் பக்தர்களைப் போல அவர்கள் மாறுவேடமிட்டனர். அவனது ஆட்களில் சிலர் கருப்பு உடையையும் மற்றும் சிலர் நீல நிற உடையையும் அணிந்திருந்தனர். தாடியும் நெற்றியில் விபூதியுமாக அவர்கள் காட்சியளித்தனர். அவர்களின் துப்பாக்கிகள் துணியால் அல்லது போர்வையால் மறைக்கப்பட்டு கால்களுக்கு அடியில் வைக்கப்பட்டிருந்தது. அந்த வருடம் அந்த நேரத்தில் சபரி மலைக்குச் செல்லும் சாலைகள் முழுவதும் பக்தர்கள் கூட்டத்தால் நிரம்பியிருந்தது. வீரப்பனும் அவனது ஆட்களும் அந்தக் கூட்டத்தில் இரண்டறக் கலந்தனர்.

இடையூறு எதுவுமில்லாமல் பயணம் அமைந்தது. அந்த நேரத்தில் வீரப்பன், “டேய் ஏண்டா இவ்வளவு சண்டாளனுங்க?” என்று கேட்டதாக பின்னாளில் அவனது ஆட்கள் போலீசில் சொன்னார்கள். அவன் அந்தக் கூட்டத்தைப் பார்த்து அப்படிச் சொல்லவில்லை. அந்தப் பயணம் முழுக்க எதிர்ப்பட்ட ஏராளமான போலீஸ் ரோந்து வாகனங்கள், செக்போஸ்ட்டுகள் பார்த்து அப்படிக் கேட்டான்.

அவர்கள் சென்ற காருக்கும் மெட்டடோருக்கும் இடையில் வயர்லெஸ் தொடர்பு வைத்திருந்தனர். இரண்டு வாகனங்களுமே பரஸ்பரம் மற்றொரு வாகனத்தைப் பார்க்கும் தூரத்திலேயே பயணம் செய்தன. ஆனால் ஒரு சிறு

நகரத்திற்கு அருகே ஒரு மூலையில் திரும்பியபோது இரு வாகனங்களுக்கு இடையேயான தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

''வயர்லெஸ்சில் கூப்பிட்டுப் பாரு'' என்று வீரப்பன் கட்டளையிட்டான். எந்த பதிலுமில்லை. கோவிந்தன் மீண்டும் முயற்சித்தான். பதில் இல்லை. ''ஏண்டா கோவிந்தா எங்கடா வண்டி?'' வீரப்பன் அவனுக்குள் எழுந்த பீதியை கட்டுப்படுத்த முயற்சித்தவாறு கேட்டான். காரில் இருந்த வாக்கி டாக்கியில் இருந்த பேட்டரி செத்துப் போனது வீரப்பனுக்குத் தெரியவில்லை. அவன் அடுத்த 45 கிலோ மீட்டர் பயணம் முழுவதும் அவனுடைய சகாக்களை போலீஸ் பிடித்து விட்டதோ? ஒரு வேளை போலீசுக்கு தகவல் சொல்லி இருப்பார்களோ? என்ற பயத்திலேயே இருந்தான்.

கடைசியாக அந்தப் பயணம் கேரள எல்லைக்கு அருகே வெள்ளியங்கிரி மலைகளின் அடிவாரத்தில் முடிவடைந்தது. அந்த மலையின் பெரும்பகுதி மேற்குத் தொடர்ச்சி மலையில் நீலகிரி மாவட்டத்துக்கு அருகே அமைந்திருந்தது. அந்த மலை செங்குத்தாகவும் ஏறுவதற்கு கடினமாகவும் இருந்தது. அந்த மலை குளிர்காலத்தில் குளிர் காற்று வீசியபடியும் எங்கும் பனி நிறைந்தும் ஜில்லென்று காணப்படும்.

இருட்டிய நேரத்தில் அந்த வாகனங்கள் நின்றன. அவர்கள் அனைவரும் ஆளுக்கொரு திசையில் பிரிந்தனர். ஒரு வார்த்தையோ சைகையோ இல்லாமல் அவர்கள் தங்களின் பைகளை எடுத்துக் கொண்டு மலையில் வேகமாகவும் அமைதியாகவும் ஏறத் தொடங்கினர். அய்யப்பனின் பெயர்தான் அவர்களை பாதுகாப்பாக கொண்டு சென்றது. ஆனால் ஒரு மாதத்திற்குப் பிறகு அதே பெயருடைய ஒரு மனிதன்தான் அவர்களின் வீழ்ச்சிக்கு கிட்டத்தட்ட காரணமாகப் போகிறார் என்று அவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை.

# உலகத்திலே முதல்முறையாக 3 பேருக்காக மொபைல் டவர்!

சபரி மலை பக்தனாக வேடமிட்டுத் தப்பித்த வீரப்பனுக்கு உதவியதும் அய்யப்பன்தான். உபத்ரவம் கொடுத்ததும் அய்யப்பன்தான்.

ஜனவரி 2001

மதுக்கரை போலீஸ் ஸ்டேஷனில் உள்ள ஹெட் கான்ஸ்டபிள் தனது கண்ணாடியைக் கழற்றினார். மூக்கைத் தேய்த்துவிட்டு மெதுவாக மீண்டும் அதை மாட்டியபடி, தனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த சாதாரண பழங்குடியின மனிதனை நம்ப முடியாமல் பார்த்தார்.

“என்ன சொன்ன?”

“என்னோட பேரு அய்யப்பன். ஒரு சில மணி நேரத்துக்கு முன்னாடி ஆயுதங்கள் வச்சிருந்த சில பேரு எங்கிட்ட வந்து, அவங்களுக்கு பலசரக்கு சாமான் ஏற்பாடு பண்ணச் சொன்னாங்க. அவங்க இந்த ஏரியாக்காரங்க இல்ல. பாக்கிறதுக்கு குற்றவாளிகள் போல இருக்காங்க. இந்த மலைப்பகுதியில ஏராளமான போலீஸ்காரங்க தேடுதல் வேட்டையில இருக்கிறதா கேள்விப்பட்டேன். போலீஸ் தேடக்கூடிய அந்த மனிதர்கள் அவங்களாத்தான் இருக்கும்னு நெனச்சேன்” — என்று அய்யப்பன் மறுபடியும் சொன்னான்.

அந்த ஹெட்கான்ஸ்டபிள் தலையை அசைத்தார். அவருடைய உடம்புக்குள் உற்சாகம் ஓடிக் கொண்டிருந்தது.

“இங்க இரு” என்று சொன்ன அவர் தொலைபேசியில் பேச ஆரம்பித்தார்.

அந்த செய்தி மூத்த எஸ்.டி.எஃப். அதிகாரிகள் முகாமிட்டிருக்கும் கோவைக்குப் பறந்தது. அசோக்குமார் மற்றும் பெரியய்யா ஆகிய அதிகாரிகள் உடனடியாக அந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்தனர்.

அய்யப்பனிடம் விசாரணை நடத்திய போது, அவனிடம் பேசியது வீரப்பன்தான் எனத் தெரிந்து கொண்டனர். உடனடியாக ஒரு திட்டத்தை வகுத்தனர்.

“நல்லது. அய்யப்பன் வீட்டை சுத்தி வளைங்க. ஆனா ரொம்பப் பக்கத்துல போயிடக் கூடாது. இல்லைன்னா அவனுக்கு சந்தேகம் வந்துடும். ஏதாவது ஒரு பொய்க்காரணத்தைச் சொல்லி வீரப்பனை கொஞ்ச நேரம் உன்னோட குடிசையில இருக்க வைச்சுட்டு, பிறகு ரகசியமாக எங்ககிட்ட வந்து விஷயத்தைச் சொல்லு. மொதல்ல அந்த இடத்தைச் சுற்றி வளைப்போம். அங்க இருந்து வேலையைத் தொடங்குவோம்” என்று தெரிவித்தனர். ஒரு சில நூறு ரூபாய் நோட்டுகள் கைமாறின.

அவன் ஏற்கனவே வீரப்பன் கும்பலிடம் ஒரு கணிசமான பணம் பெற்றிருந்தான். அய்யப்பன் அவனது வாழ்நாளில் அவ்வளவு பணத்தைப் பார்த்ததில்லை. போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்த அவனது மனம் தள்ளாடியது.

“இதை வச்சு என்ன வாங்கலாம்?” — தனக்குள் முணுமுணுத்தான். வழியில் ஒரு மதுபானக் கடையைப் பார்த்தான். “கொஞ்சம் குடிச்சா இந்தப் படபடப்பு அடங்கிடும். கொஞ்சம் குடிச்சுட்டு போகலாம்” என்று நினைத்தான்.

ஆனா, பலசரக்கு வாங்க வீரப்பன் வரவில்லை. கோவிந்தன் வந்திருந்தான். அந்த நேரத்தில் அய்யப்பன் நிறையக் குடித்திருந்தான். பலசரக்குப் பொருட்களை வாங்கிக் கொண்ட கோவிந்தன், ‘போலீசுல சொல்ல முயற்சி செஞ்ச.. உன்னோட கொடல உருவிடுவேன்’ என்று மிரட்டினான்.

நடுங்கிய அந்த பழங்குடி தனது நடுக்கத்தைக் கட்டுப்படுத்த மேலும் குடித்தான். அதன்பிறகு அவனது தோளை யாரோ உலுக்குவது தெரிந்தது.

‘என்ஞ்ஞ்ஞ்ஞ்?’ உளறினான். உலர்ந்து போன அவனது வாய்க்குள் நாக்கு தடித்திருந்தது. இரண்டு முறை சத்தமாகக் கொட்டாவி விட்டான். தூக்கத்தில் இருந்து விழித்த அவன், தன்னை கோபத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் எஸ்.டி.எஃப். வீரரைப் பார்த்தான்.

அவனது குடிசையில் காலியான மது புட்டிகள் பல உருண்டு கிடந்தன. அத்தனையும் அவன் குடித்திருக்கிறான் என்பதை அவனது வாயில் இருந்து வந்த வாசனை சந்தேகமின்றிச் சொன்னது.

“நாங்க எவ்வளவு நேரமாக காத்திருக்கிறோம். இப்ப காலையில நாலரை மணி ஆயிடுச்சு. நாசமாப் போனவனே ஏண்டா வரல? அந்த கொள்ளைக்காரனுங்க உன்னைக் கொன்னு போட்டுட்டானுங்கன்னு நெனைச்சோம். அதுதான் பாக்க வந்தோம். அவனுக எங்க?”

“ஓ அவங்களா? அவங்க ரொம்ப நேரத்துக்கு முன்னாலேயே வந்துட்டுப் போயிட்டாங்களே” என்று சொன்ன அய்யப்பன், மறுபடியும் திரும்பிப்படுத்துக் கொண்டான்.

போலீஸ்காரர்கள் கிராமத்தை விட்டு வெளியேறியதை வீரப்பன் ஆட்கள் பார்த்து விட்டனர். அவர்கள் அவனுக்குத் தகவல் தெரிவித்தனர். வீரப்பன் மலை மீதிருந்து அந்தப் பகுதியைக் கவனித்தான்.

“அந்த தே... மகன் மேல ஒரு கண்ணை வச்சிருக்கிறது நல்லது” என்றான் கோவிந்தன். வீரப்பன் எரிச்சலுடன் உறுமினான். ஆபத்து நெருங்கிக் கொண்டிருந்தது. அவர்களின் ரேஷன் பொருட்கள் குறைந்து கொண்டே வந்தன. வீரப்பன் தனது முன் கையைத் துளைத்துக் கொண்டிருந்த அட்டை ஒன்றை அடித்தான்.

“இந்த எடத்த மாத்த வேண்டிய நேரம் வந்துடுச்சு. எவ்வளவு நாளைக்கு இந்த நரகத்துல இருக்க முடியும்?” என்று கடுப்புடன் சொன்னான் வீரப்பன்.

வீரப்பன் தனது அடுத்த கட்ட நடவடிக்கையைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும்போதே, போலீசார் ஒரு புதிய திட்டத்தைத் தயார் செய்து

வைத்திருந்தனர். அவனுக்கு மிகப் பெரிய சேதாரம் ஏற்படுத்தப் போகும் அந்த விஷயங்களைப் பற்றி அவனுக்குத் தெரியாது.

தமிழ்நாடு உளவுப்பிரிவுத் தலைவர் ராமானுஜம், மத்திய புலனாய்வுப் பிரிவு இணை இயக்குனர் ஜோஸ் டராயில் ஆகியோரின் கூட்டு முயற்சியால் வீரப்பன் தேடுதல் வேட்டை உயர் தொழில் நுட்ப மயமாக மாறி இருந்தது.

அமைதியான, அதிகம் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாத மனிதரான ராமானுஜம், பெரிய உருவம் கொண்ட, உணர்ச்சிகரமான மனிதரான ஜோஸ் டராயிலுடன் நெருங்கிய நண்பராகி விட்டார்.

சென்னை, புதுடெல்லி மற்றும் வேறு சில இடங்களில் ஜோஸ் டராயில் தளராத முயற்சி செய்ததன் விளைவாக 20,000 அடி உயரத்தில் பறக்கும் திறனுடைய ஒரு சிறப்பு கண்காணிப்பு விமானம் வரவழைக்கப்பட்டது. கோவையில் இருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சூலூர் விமானத் தளத்தில் அது இறங்கியது. அதிரடிப்படையைச் சேர்ந்த தேர்ந்தெடுத்த 60 பேருக்கு அக்கம்பக்கமாக ஹெலிகாப்டரில் இருந்து எதிரியின் நிலப்பரப்பில் கயிறு மூலம் இறங்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. அந்த ஹெலிகாப்டர், வீரப்பனின் இடத்தைக் கண்டறிந்து விட்டால், குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை வெற்றிகரமாக முடிக்க எஸ்.டி.எஃப். குழுவினரை அங்கு எடுத்துச் செல்லும்.

நவீன மின்னணு சாதனங்களை எப்போதுமே வெறுப்புக்குரியதாகக் கருதியவன் வீரப்பன். 2000 ஆண்டுக்குப் பிறகு அப்படிக் கருதியதே அவனுக்குத் தவறாகப் போயிற்று. தொழில்நுட்பம் அவனது கேம்ப்புக்குள் எட்டிப் பார்த்தது. அவனைக் கயிற்றில் கட்டிய நாடோடியாக்கியது.

விளைவு, வீரப்பன் அவனது செல்போனில் இருந்து யாருக்கேனும் பேசினால் அதை புலனாய்வு அமைப்புகள் இடைமறித்துக் கேட்க முடிந்தது. அந்த அழைப்பு அவன் ஐந்து ஆறு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள்தான் எங்கோ இருக்கிறான் என்பதை உறுதி செய்தது. ஆனால் துல்லியமாக அவன் எங்கிருக்கிறான் என்று கண்டறிய முடியவில்லை.

ஜோஸ் டராயில் ஒரு சிலருடன் தொலைபேசியில் பேசினார். அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்தில் மலைகளில் கீழ் சரிவில் ஒரு புதிய செல்போன் டவர் எழுந்தது. மூன்றே மூன்று வாடிக்கையாளர்களுக்காக ஒரு மொபைல் டவரே அமைக்கப்பட்டது அதுதான் முதல் முறையாக இருக்கும். அந்த மூன்று வாடிக்கையாளர்கள் ஜோஸ் டராயில், ராமானுஜம், வீரப்பன்.

6 கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கிறான் என்று கண்டறிய முடிந்தது, அந்த டவரின் மூலம் ஒரு சில நாட்களில் இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவிற்கு சுருங்கியது.

ஜோஸ் டராயிலிடமிருந்து ராமானுஜத்திற்கு மிக நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட தொலைபேசி அழைப்பு வந்தது. “பறவை பாடுகிறது” என்று டராயில் சொன்னார். ‘பறக்கலாம்’ என சூலூர் விமானப் படைத்தளத்திற்கு செய்தி சொல்லப்பட்டது.

இந்த ஆபரேஷனில் அதிர்ஷ்டம் வீரப்பனுக்கா... அதிரடிப்படைக்கா...?

## ₹₹₹₹₹ஈஷா ஆசிரமத்திலிருந்து வெளிநாட்டுப் பயணிகளைக் கடத்த திட்டம்?

வீரப்பன் பதுங்கிய இடத்தை வளைத்து விட்டது எஸ்.டி.எஃப். வெள்ளியங்கிரி மலைகளின் உச்சியில் அடர்ந்த மேகங்கள் சூழ்ந்திருந்தன. சிறப்பு விமானத்தின் அடிவயிற்றுப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சென்சார்களால் மேகமூட்டத்திற்கு இடையில் ஊடுருவ முடியவில்லை. சென்சார்கள் செயல்படவில்லை எனில் அந்த சிறப்பு விமானத்தால் பயனில்லை. வீரப்பன் மறைந்திருக்கும் இடத்தைத் துல்லியமாக கண்டுபிடிக்க முடியாது.

எஸ்.டி.எஃப். அதிகாரிகள் பிளான் ‘பி’ பற்றி ஆலோசித்தனர். கண்காணிப்பு விமானம் இல்லாமல் ஹெலிகாப்டர் மூலம் வீரர்களை காட்டிற்குள் இறக்கி விடலாம் என யோசித்தனர். ஆனால் விமானிகள் இந்த யோசனையை நிராகரித்து விட்டனர்.

“அதிக செயல்திறன் கொண்ட சென்சார்களுடன் கூடிய விமானம் அனுப்ப முடியுமா?” என்று ஜோஸ் கேட்டார்.

“அதற்கு ஒரு வாரம் பிடிக்கும்” என்று பதில் சொன்னார்கள்.

எஸ்.டி.எஃப். சிறப்பாகத் திட்டமிட்டிருந்த திட்டங்கள் எடக்குமடக்காக முடிந்திருந்தது. கடைசியாக வெள்ளியங்கரி மலைகளில் இருந்து மேகங்கள் விலகியதற்குப் பிறகு அந்தக் கொள்ளைக்காரன் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தான். சிக்னலும் கிடைக்கவில்லை.

ஒரு மிகப்பெரிய வாய்ப்பை இழந்து விட்டோமே என்று நினைத்தார் ஜோஸ் டராயில். அவரால் தன்னை சமாதானப்படுத்திக்கொள்ளவே

முடியவில்லை. எனினும் இப்போதும் தனது திட்டத்தை அவர் கைவிடத் தயாராயில்லை.

அடுத்து, ரஷ்யன் எம்.ஐ.—8 ஹெலிகாப்டர் வீரப்பன் தலைக்கு மேல் பறக்க, அவன் ஆத்திரமடைந்தான். அதன் அதிர்வுகள் அவனது உடலை ஊடுருவிச் சென்றன.

“இந்த கேடு கெட்ட பறவை (ஹெலிகாப்டர்) நம்மை மூணு நாளா விடாம தொரத்திக்கிட்டு இருக்கு” என்றான் வீரப்பன்.

பின்னாளில் கைப்பற்றப்பட்ட அவர்களின் டைரிகளில் அந்த வாரம் முழுவதும் அந்த கும்பலுக்கு நரகமாகவே அமைந்தது என்று குறித்து வைத்திருந்தனர். அந்த நரகத்தில் எஸ்.டி.எ.ஃப். ஆட்களும் அட்டைகளும் வீரப்பனை நோக்கி அணிவகுத்தன. பி.எஸ்.எப். பட்டாலியன் ஒன்று அந்தப் பகுதியை முற்றுகையிட்டதோடு, அனைத்து வாயில்களையும் அடைத்தது. வீரப்பன் ஆட்கள் தொடர்ச்சியாக பசியில் சோர்வடைந்தனர்.

இதற்கு முன்பு இதே போல அட்டைகள் அதிகமுள்ள நச்சிபோலியில் வீரப்பன் முகாம் அமைத்திருந்த போது, அவனது மறைவிடத்தைச் சுற்றி உப்பு மூட்டைகளைப் பயன்படுத்தி 3 இன்ச் உயரச் சுவர் எழுப்பி வைத்திருப்பான். அதன் மூலம் அட்டைகளை நெருங்காது தடுத்திருந்தான். ஆனால் அவனது சோத்துக்குக்கூட உப்பு கிடைக்கவில்லை. அந்த கும்பலுக்கு வர வேண்டிய, ஆங்காங்கே நின்று போய்விட்ட, உணவுப்பொருட்கள் அங்காங்கே தடைப்பட்டது. காரணம் எஸ்.டி.எ.ஃப். குழுவினரின் சோர்வடையாத ரோந்து பணிகள்.

அந்த மலையில் ஏறி வரும் போது வீரப்பன் வழியில் ஈஷா அறக்கட்டளையின் ஆசிரமம் ஒன்றைப் பார்த்தான். அந்தப் பகுதியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நடமாட்டம் இருக்கும் என்பதும் அவனுக்குச் சொல்லப்பட்டிருந்தது. வெளிநாட்டு பிரஜைகள் கடத்தலுக்குரிய இலக்கு என்று அடையாளம் கண்டான் வீரப்பன். ஆனால் எஸ்.டி.எ.ஃப். நடமாட்டம், அதனால்

ஏற்பட்ட நெருக்கடி காரணமாக அவனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனது.

மேலே பறந்து கொண்டிருக்கும் ஹெலிகாப்டர் என்ஜின் சத்தம் வீரப்பனை சுயநினைவுக்கு வரச் செய்தது. பெரிய மரங்களின் உச்சி அசைந்து கொண்டிருந்தது. மெலிந்த மரங்கள் ஹெலிகாப்டர் இறக்கைக்கு ஏற்றவாறு நடனமாடியதைப் போலத் தோன்றியது. வீரப்பன் கீழே குனிந்து கொண்டான். அவனது உடலில் எந்த வினாடியிலும் குண்டு பாயலாம் என்ற எதிர்பார்ப்பில் கூசியது. ஒரு மரத்தை நோக்கி சறுக்கிச் சென்று, முதுகை மரத்தில் சாய்த்து நின்றபடி கோவிந்தா, கோவிந்தா என்று முணுமுணுத்தான்.

இவ்வளவு நெருக்கமாக ஒரு போதும் அவன் ஹெலிகாப்டரைப் பார்த்ததில்லை. ஒரு கழுகைப் போல இருந்தது.

அவர்கள் தன்னைப் பார்த்து விட்டார்கள் என்றே நினைத்தான். இடி இடித்ததைப் போல ஹெலிகாப்டர் திரும்பிச் சென்ற சத்தத்தைக் கேட்டான். ஒருவேளை பார்க்கவில்லையோ? ஆனால் அது திரும்ப வரக் கூடும். எப்போதும் அது அப்படித்தான் செய்தது.

உண்மையில், மங்கலான வெளிச்சத்தில் ஹெலிகாப்டரில் இருந்தவர்களால் தரையில் என்ன இருக்கிறது என்று பார்ப்பது கடினமாகவே இருந்தது. ஆனால் வீரப்பன் கும்பலுக்கு அது தெரியாது. ஏற்கனவே மன உறுதி குலைந்து போயிருந்த அவர்களின் மனதில் அந்த ஹெலிகாப்டர் ஒரு மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

அது நகர்ந்ததும், வீரப்பன் குருட்டுத்தனமாக ஓட ஆரம்பித்தான். உடனடியாக கோவிந்தன் அவனது தோளைத் தொட்டு நிறுத்தினான். ‘‘நீ இப்படி ஓடினா குண்டடி பட்டுத்தான் சாவ. ஜாக்கிரதையா இரு’’ என்றான்.

வீரப்பன் அவனை முறைத்தான். எனினும் அவன் சொல்வது சரி என ஏற்றுக் கொண்டான்.

முந்தைய நாள், இப்படித்தான் கண்மூடித்தனமாக ஓடி தாக்குவதற்காக மறைந்திருந்த பி.எஸ்.எப். படையிடம் சிக்க இருந்தார்கள். உஷார்த்தனம்தான் அவர்களை அந்த ஆபத்தில் இருந்து காப்பாற்றியது. கோவிந்தனைப் பார்த்துத் தலையசைத்த அவன், ‘‘இன்னைக்கு ராத்திரியும் நாம பட்டினியாத்தான் படுக்கப் போறோம்’’ என்றான்.

டி.ஐ.ஜி. சைலேந்திரபாபு தலைமை வகித்த ஒரு டீம் ஒரு மாதம் முழுக்க ஹெலிகாப்டரில் இருந்து சறுக்கி இறங்க பயிற்சி எடுத்து வந்தது. கண்காணிப்பு விமானம் போய் விட்டது. தயாராக இருந்த எஸ்.டி.எஃப். அழைப்புக்காகக் காத்திருந்தது.

பிறகு வீரப்பன் கூத்தடைக்கல் என்ற பகுதியில் இருக்கிறான் என்று ஒரு துப்புக் கிடைத்தது. கூத்தடைக்கல்லில் ஒரு பாழடைந்த கட்டடம் இருக்கிறது. அந்தப் பகுதி எலும்புகளைச் சில்லிட வைக்கும் குளிர் நிறைந்த பகுதி.

ஹெலிகாப்டர் மூலம் நடக்கும் ஆபரேஷனுக்கான நேரம் என உற்சாகத்துடன் எண்ணிய சைலேந்திர பாபு, அது ஓரிரு நாள் வேலை அவ்வளவுதான் என்று நினைத்தார். செய்வதைவிட சொல்வது எளிதுதான். பயிற்சிக்காக ஹெலிகாப்டர் ஒன்றைப் பெறுவது எளிது. ஆனால் இது போன்ற நடவடிக்கைகளுக்குப் பெறும் போது அதற்கான அனுமதியைப் பெற ஒரு நீண்ட சுற்றுப்பாதையில் பயணிக்க வேண்டும். ஐ.ஜி. (புலனாய்வு)யில் ஆரம்பித்து டி.ஜி., மாநில உள்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர், புதுடெல்லியில் உள்ள மத்திய உள்துறைச் செயலாளர், பாதுகாப்புத்துறைச் செயலாளர், விமானப்படை தலைமையகம் மற்றும் தெற்கு ஏர் கமாண்ட்டென்ட் டெஸ்ட் என்று அனைவரிடமும் அனுமதி பெற்ற பிறகுதான் நாம் ஹெலிகாப்டர் கேட்கிறோம் என்ற வேண்டுகோள் சூலூர் விமான தளத்தையே அடையும். ஆனால் இதற்கு மாறாக, அப்போதைய மத்திய உள்துறைச் செயலாளர் தீரேந்திர சிங் உடனடியாக அனுமதி வழங்க நடவடிக்கை எடுத்தார்.

கடைசியாக அந்த விமான தளத்தில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் ஹெலிகாப்டர் டேக் ஆப் ஆனது. ஆனால் எஸ்.டி.எஃப். ஆட்களுக்கு ஒரு புதிய பிரச்சினை முளைத்தது.

வீரப்பன் இருக்கும் இடம் குறித்து துப்புக் கொடுத்த இன்ஃபார்மர், வீரப்பனின் ஆட்களுக்கு பயந்து போய் தலைமறைவாகி விட்டான். இப்போது அதிரடிப்படைக்கு வழிகாட்ட ஆள் இல்லை. ஆனாலும் அந்தப் பகுதி முழுவதும் தேடினர். வீரப்பன் ஆட்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

தோல்வியில் முடிந்த இந்த ஹெலிகாப்டர் ஆபரேஷனுக்கான பயிற்சி, காத்திருப்புக் கட்டணம் எல்லாம் சேர்த்து ரூ.70 லட்சம் வரையில் செலவு. இந்தத் தொகையை 2007—ல் வீரப்பன் கொல்லப்பட்டு மூன்று வருடத்திற்குப் பிறகுதான் செட்டில் செய்தார்கள்.

ஹெலிகாப்டர் ஆபரேஷன் தோல்வி அடைந்தது நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட விளைவை ஏற்படுத்தியது; வீரப்பன் வேறு எங்கும் தப்ப முடியாதபடி, அந்தப் பகுதியிலேயே தொடர்ந்து இருந்தான். அது எஸ்.டி.எஃப். குழுவினருக்கு அங்கேயே தங்கி வீரப்பன் கும்பலுக்கு நெருக்கடியை அதிகரிக்க வேண்டும் என்ற உந்துதலைக் கொடுத்தது.

இதனையடுத்து, உயிருக்காக வீரப்பன் ஓடிய ஓட்டம்... மயிரிழையில் கோவிந்தன் உயிர் தப்பிய காட்சியும் அரங்கேறியது.

# பசி—குளிர்_நரக வேதனையில் துடித்தான் வீரப்பன்!

பிப்ரவரி 2001

அந்த எஸ்.டி.எஃப். கான்ஸ்டபிள் தனது சட்டைக் கையில் மறைத்துக் கொண்டு மெதுவாக இருமினார். ஆனாலும் அந்த சத்தம் மெதுவாகக் கேட்கத்தான் செய்தது. எஸ்.ஐ. வின்சென்ட் அந்த கான்ஸ்டபிள் பக்கம் திரும்பி முறைத்துப் பார்த்தார். காட்டில் சூழ்ந்திருந்த கடும் பனி மூட்டத்திற்கிடையே அவன் முகம் சரியாகத் தெரியவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் விடிந்து விடும்.

இன்ஸ்பெக்டர் ராமலிங்கம் தலைமையில் இயங்கிய டீம் சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் இந்தக் குழுவுக்கு வின்சென்ட் தலைமை ஏற்றிருந்தார்.

ஒரு சில அடிகள் முன்னே சென்ற எஸ்.டி.எஃப். வீரர் திடீரென தனது நடையை மெதுவாக்கினார். அவர் எதையும் பார்க்கவில்லை. எனினும் பல ஆண்டு கால எச்சரிக்கை உணர்வால் கூர்மைப்படுத்தப்பட்டிருந்த அவரது உள்ளுணர்வு உச்சபட்ச விழிப்புணர்வில் இருந்தது.

பிப்ரவரி மாதம் இரண்டாம் நாள் விடிந்திருந்த அந்தக் காலைப் பொழுதில் ஏதேனும் தடயம் கிடைக்கிறதா என காதுகளைக் கூர்மையாக்கிக் கேட்டார். காற்றில் ஏதேனும் வாசனை வருகிறதா என மென்மையாக முகர்ந்து பார்த்தார். எதுவுமில்லை. ஆனால் அவரது இதயம் துடித்ததை அவரால் உணர

முடிந்தது. அவரது ஆழ்மனதில் தோன்றிய சில குறியீடுகளின் அர்த்தத்தை அவரது மூளையால் அறிய முடியவில்லை.

‘‘எதிரி முன்னால் சென்றிருக்கிறான்’’ என்று அவர் சைகை செய்தார்.

அவர் அப்படி சைகை செய்தபோது, ஒரு பிளாஸ்டிக் ஷீட்டை மடித்தது போன்ற சத்தம் ஒன்றை அவர் கேட்டார். உடனடியாக தனது டீம் ஆட்களிடம் பதுங்கிக் கொள்ளுமாறு சைகை செய்தார். ஒரு துப்பாக்கி சுடுவதற்குத் தயாராகும் வித்தியாசமான சத்தம் ஒன்றையும் அவர் கேட்டார். ஆனால் அது அவரது டீம் ஆட்கள் மத்தியில் இருந்து கேட்கவில்லை.

மென்மையாக அவரது ஏ.கே. 47 துப்பாக்கியின் சேஃப்டி லாக்கை விடுவித்து, சுடுவதற்குத் தயாரானார். அந்தக் குழுவில் அது ஒன்றுதான் ஏ.கே. 47. மற்றவர்கள் எல்லாம் 9 எம்.எம். கைத்துப்பாக்கி வைத்திருந்தனர். தனது டீம் ஆட்களை உரக்கக் கத்தி எச்சரிக்க வேண்டுமே எனப் பதறினார். ஆனால் அவர் அப்படிச் செய்வதற்கு முன், ‘எஸ்.டி.எஃப்.’ என்ற ஒரு அலறல் சத்தம் அந்தக் காட்டின் அமைதியைக் குலைத்தது. அதோடு ஒரு துப்பாக்கியும் தன்னிடமிருந்த தோட்டாக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தது.

அது வீரப்பன் கும்பலின் சமையல்காரன். அவன்தான் எச்சரிக்கை செய்துவிட்டு சுடத்தொடங்கினான். அவன் பிளாஸ்டிக் ஷீட்டை மடித்துக் கொண்டிருந்தபோதே, அந்த சத்தம்தான் எஸ்.டி.எஃப். வீரரை எச்சரித்தது. ஆனால், அந்த சமையல்காரன் எப்படியோ எஸ்.டி.எஃப். குழுவினரைப் பார்த்து விட்டான். இத்தனைக்கும் குழுவினர் லுங்கி, வேட்டி என சாதாரண ஆடைகளையே அணிந்திருந்தனர்.

ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில் அந்த சமையல்காரனின் மூளை அலசி ஆராய்ந்து எச்சரிக்கை ஒலியை எழுப்பி சுடவும் தொடங்கினான்.

வீரப்பன் காலைக்கடனைக் கழித்துக் கொண்டிருந்தபோது, முரட்டுத்தனமாய்க் குறுக்கிட்ட அந்தத் துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டான். பீதியடைந்த அவன் தனது ரைபிளைத் தேடினான். அது மூன்று அடிகளுக்கு

அப்பால் கிடந்தது. தாவி எடுத்த அவன், ஒளிந்து கொள்ள இடம் தேடிப் போராடினான்.

என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள சுற்றும்முற்றும் பார்த்தான். அவனது பீதி நிறைந்த கண்கள் கோவிந்தன் தனது நெஞ்சைப் பிடித்தவாறு கீழே விழுந்ததைப் பார்த்தன. அதைப் பார்த்து, முடிந்து விட்டது என்று நினைத்துக் கொண்டிருக்கும்போதே கீழே விழுந்த கோவிந்தன் திடீரென்று எழுந்து வீரப்பனுக்குத் திகைப்பை ஏற்படுத்தினான். கோவிந்தன் கீழே விழுந்ததைப் பார்த்த வீரப்பனின் ஆட்கள் பின்னாளில் போலீசில் கூறுகையில், வீரப்பனின் நம்பிக்கைக்குரிய கோவிந்தன், பணம் நிறைந்த ஒரு பவுச்சை தனது நெஞ்சோடு அழுத்திப் பிடித்திருந்தான் என்றும் லோ காலிபர் துப்பாக்கியில் இருந்து வந்த 9 எம்.எம். தோட்டா அந்த பவுச்சில் பட்டுத் தெறித்துக் கீழே விழுந்துவிட்டது என்றும், அவன் லேசாகக் காயம்பட்டதோடு தப்பித்து விட்டான் என்றும் தெரிவித்தனர்.

கோவிந்தன் மயிரிழையில் உயிர் தப்பியது ஒரு திரைப்படக் கதையைப் போலத் தோன்றலாம். ஆனால் வரலாற்றில் இது போன்ற சம்பவங்கள் ஏற்கனவே நடந்திருக்கின்றன. அமெரிக்க அதிபர் தியோடர் ரூஸ்வெல்ட், தான் பேச வேண்டிய பேச்சை எழுதி தனது பாக்கெட்டில் வைத்திருந்தார். அவரது உயிருக்குக் குறி வைத்த புல்லட்டை அதுதான் தடுத்தது. துருக்கி அதிபர் 1915—ல் கமால் அட்டாட்டுர்க் உயிரை ஒரு பாக்கெட் வாட்ச் காப்பாற்றியது.

வீரப்பன் கேங், பெருமளவில் சுட்டுக் கொண்டே காட்டுக்குள் பின்வாங்கியது. எஸ்.டி.எஃப். படையினரும் அதே தீவிரத்தோடு பதில் தாக்குதல் நடத்தினர். வீரப்பனின் கேங் ஒரு மான் கூட்டத்தைப் போல சிதறி ஓடியது. சில நூறு மீட்டர்கள் அல்லது அதற்குக் கொஞ்சம் தள்ளிச் சென்ற பிறகு, அவர்களை யாரும் பின்தொடர்வதற்கான அறிகுறி இல்லை. அவர்கள் அனைவருமே ஒரு சில கருவிகளை விட்டுவிட்டு ஓடியிருந்தனர். அதில் ஒரு வயர்லஸ் செட்டும் அடக்கம். எஸ்.டி.எஃப். ஆட்கள் பேசுவதை ஒட்டுக் கேட்கவும் அவர்களின் நடவடிக்கைகளை தெரிந்து கொள்ளவும் அது வீரப்பனுக்கு உதவியது. இந்த முக்கியமான கருவியை யாரோ ஒரு

சுயநலவாதிதான் (இதற்கு உறுதியான ஆதாரமில்லை எனினும்) வீரப்பனிடம் கொடுத்திருக்க வேண்டும்.

எப்போதுமே வீரப்பன் ஆட்கள் பிரிவதற்கு முன்பு ஒரு மறைவிடத்தை நிர்ணயித்து விடுவார்கள். ஆனால் இந்த திடீர் மோதல் அவர்களுக்கு குறுகிய அவகாசமே கொடுத்திருந்தது. எனினும் வீரப்பன், கோவிந்தன் அவர்களின் சமையல்காரன் சந்திரகவுடா ஆகியோர் ஒரே இடத்தில் தங்கி இருந்தனர்.

இவை எல்லாவற்றையும் கவனித்த பிறகு ராமலிங்கம் வயர்லெஸ்சை நெருங்கினார். ‘‘சார், நாங்கள் அந்த கேங்கை விரட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்களை எங்கேயும் காணவில்லை’’ என்றார்

இதற்கிடையில் வீரப்பன் குளிரில் நடுங்கியபடி, ஒரு பேயைப் போல நகர்ந்து கொண்டிருந்தான். ராமலிங்கம் டீமோடு நடந்த மோதல் முடிந்து ஒரு சில நாட்கள் கடந்திருந்தது.

ஒரு சன்னமான குரல் வீரப்பனின் காதுகளை வந்தடைந்தது. ஒரு பெரிய பாறைக்குப் பின்னால் நின்றபடி அவன் அதைக் கேட்டான். சத்தம் வந்த திசையில் மெதுவாகத் திரும்பி, அது எங்கிருந்து வருகிறது எனக் கண்டறிய முயற்சித்தான்.

சுமார் 30 மீட்டர் தூரத்தில் பச்சை நிற உடைகள் அணிந்த ஒரு கூட்டம் இருந்ததை அவன் பார்த்தான். அந்த கூட்டத்தினர் குளிருக்காக தீ மூட்டி இருந்தனர். அந்த வெளிச்சத்தில் அவர்களின் முகம் ஒளிர்ந்தது. இதைப் பார்த்ததும் வீரப்பன் கொலை வெறியுடன் புன்னகைத்தான்.

மறைந்திருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் காட்டில் தீமூட்டுவது மிகப்பெரும் தவறு. நெருப்பை அணைத்த பிறகு தெரியும் சிறு தீப்பொறி கூட ஒருவர் இருக்கும் இடத்தை எதிரிக்குக் காட்டிக் கொடுத்துவிடும். ஆனால் கடுமையான விதிகள் எப்போதும் மனிதனின் இயல்புக்கு முன்பு செயலிழந்து போய்விடுகின்றன. அது ஒரு குளிர் நிறைந்த இரவு. அவர்களும் அவர்களின் மேலதிகாரிகளின் நேரடிப் பார்வையில் இருந்து வெகு தூரம் தள்ளி இருந்தனர்.

அசையக் கூடாது, சத்தம் எழுப்பக் கூடாது, வெளிச்சம் காட்டக் கூடாது என்ற கடுமையான விதிகள் இருந்தாலும் அருகே இருந்த ‘சைலன்ட் வேலி’ குளிர் அவர்களின் உறுதியை குலைத்துவிட்டது. வீரப்பன் பல மைல்களுக்கு அப்பால் இருக்கிறான் என்று அவர்கள் நினைத்திருக்க வேண்டும்.

வீரப்பனும் அவனது ஆட்களும் மறைந்து கொண்டனர். “எங்கிட்ட நிறைய ஆட்களும் ஆயுதங்களும் மட்டும் இப்போ இருந்திருந்தா, அவனுகளோட உயிர எடுத்திருப்பேன்” என்று வீரப்பன் சொன்னான்.

காலை விடிந்தபோது, நரக அனுபவத்தைக் கொடுத்த இது போன்ற பகுதிக்கு மறுபடியும் ஒருபோதும் வரக் கூடாது என உறுதி கொண்டான். ஒரு சில நேரங்களில் போக்குக் காட்டுவதற்காக அந்தப் பகுதியில் இருப்பதைப் போல பாசாங்கு காட்டினாலும், வீரப்பன் தனது சபதத்தில் உறுதியாக இருந்தான்.

பிறகு அந்த மிகப்பெரிய துப்பாக்கிச் சண்டை குறித்து விசாரணை நடத்த எஸ்.டி.எஃப். அல்லாத போலீஸ் அதிகாரிகள் சிலர் கேரளாவில் செம்மந்தியின் சரிவுகளில் ஒரு பகுதிக்குச் சென்றனர். அப்போது அவர்களிடம் இருந்த ஆயுதங்கள் வெறும் லத்திகள்தான். இந்த நாட்டின் மிகப்பெரிய கொடூரமான குற்றவாளி ஒருவனை எதிர்க்க அவர்கள் தேர்வு செய்திருந்த ஆயுதங்கள் வெறும் லத்திகள்.

இந்த நேரத்தில் தான், யானை துரத்தியது என்னை. அதில்...

## ஜெயலலிதாவின் கேள்வியும் தர்மசங்கடமும்!

ஜூலை 2001.

"நமது சந்திப்பிடம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?" அமைதியாக எனது நெற்றி வியர்வையைத் துடைத்தவாறே வெப்பத்தை சபித்தவாறே கேட்டேன்.

நான் எனது வயதுக்கு ஏற்ப வலுவுடன் இருந்து, எனது சகாக்களின் வேகத்திற்கு ஈடு கொடுத்து சமாளித்தேன். ஆனால் அந்தக் கடினமான நிலப்பரப்பும் சுட்டெரிக்கும் சூரியனும் எங்கள் மொத்த டீமையும் பாதித்தது.

தமிழ்நாடு எஸ்.டி.எஃ.பில் பொறுப்பேற்குமாறு முதலமைச்சர் என்னைத் திரும்ப அழைத்து ஒரு சில மாதங்களில் இந்த மலையேற்றம் திட்டமிடப்பட்டது.

காலை ஆறு மணிக்கு பயணத்தைத் தொடங்கினோம். வழியில் சாப்பாட்டிற்காக நின்ற இடத்தில் மொத்த நபர்களில் பாதிப்பேர் உணவு சாப்பிட, மற்றவர்கள் சுற்றிலும் கண்காணித்தனர். அவர்களில் சிலர் மரத்தின் மீதேறி கண்காணிப்பை மேற்கொண்டனர். பின்னர் கண்காணிப்புப் பணியில் இருந்தவர்கள் சாப்பிட, ஏற்கனவே சாப்பிட்டு முடித்தவர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

ஆழமற்ற குட்டை ஒன்றைச் சூழ்ந்து நின்ற எங்கள் ஆட்களில் சிலர், பச்சை நிற பாட்டிலில் இருந்து தண்ணீர் குடித்தனர். "இங்கே எப்படி ஸ்பிரைட் கிடைத்தது உங்களுக்கு?" என்று நான் கேட்டேன்.

அந்தத் தண்ணீரை உன்னிப்பாகப் பரிசோதித்ததில், அந்தத் தண்ணீரே பச்சை நிறமாக இருந்தது தெரிய வந்தது. குளத்தைச் சுற்றிலும் மற்றும் குளத்திலும் யானைச் சாணம் கிடந்தது. தங்களின் தடயத்தை விட்டுச் செல்லாத காட்டுப்பூனை அல்லது புலி போல இல்லை யானைகள். அது கன்னாபின்னாவென்று சாணம் போடும் அசுத்தமான மிருகம். காடுகளுக்குள் செல்லும்போது பொதுவாக நாங்கள் தண்ணீர் சுத்திகரிப்பு மாத்திரைகள் வைத்திருப்போம். அந்தக் கருவியில் சுத்திகரிப்பு செய்த பிறகும், அந்தத் தண்ணீர் பச்சை நிறமாகவும் சேறு நிறைந்ததாகவுமே இருந்தது.

உடம்பில் நீர்ச்சத்து குறைவதைத் தடுப்பதற்கு அந்தத் தண்ணீரை குடித்தாக வேண்டும். அதைக் குடித்து வைத்தால் குறைந்தபட்சம் சற்று நேரத்துக்கு தாகமாவது எடுக்காமலிருக்கும். ஆனால் நான் இரண்டே இரண்டு மடக்கு மட்டுமே குடிக்க முடிந்தது. அதற்குள் வாந்தி வருவதைப் போலிருந்தது.

‘‘வாகனம் இருக்கும் இடத்திற்குப் போக ஒரு மணி நேரம் ஆகும்’’ என்றார் இன்ஸ்பெக்டர் ராஜராஜன். நான் கேட்காமலே, என் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தைத் தெரிந்து அவராகவே சொன்னார்.

அந்த மலையேற்றத்தின் தலைவர் அவர்தான். ராஜராஜன் ஒரு தேர்ந்த எஸ்.டி.எ஀ப். அதிகாரி. காட்டை தனது புறங்கையைத் தெரிந்து வைத்திருந்ததைப் போலத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார்.

முற்றிலும் சோர்வடைந்த எனது உடம்பில் அவரது அறிவிப்பு திடீர் தெம்பைப் பாய்ச்சியது. ‘‘இனி ரொம்ப தூரம் இல்லை’’ என்று நான் நினைத்தேன்.

‘‘கொஞ்சம் ஓய்வெடுப்போம்’’ என்றார் ராஜராஜன்.

அப்பாடா என்று கால்களை நீட்டி கீழே சாய்ந்தேன். காலில் அப்போதுதான் தசைப்பிடிப்புகள் ஆரம்பித்திருந்தன. ஆனால் பூட்ஸைக் கழட்டவில்லை. ஆனால் லேசை மட்டும் கழட்டியிருந்தேன். அது வலி நிறைந்த

என் பாதங்களுக்கு கொஞ்சம் இதமாக இருந்தது. எனது தோழன் எனக்கு ஒரு சில பேரீச்சைகளையும் கொஞ்சம் வெல்லம் தோய்த்த வேர்க்கடலையும் கொடுத்தார். அதை மென்றபடியே நீல நிற வானத்தை ரசித்துக் கொண்டிருந்தேன். இன்னும் சில நிமிடங்களில், நாங்கள் ஒரு மிகப்பெரிய பிரச்சினையை எதிர்கொள்ளப் போகிறோம் என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை.

காட்டைப் பற்றி அதிகம் அனுபவமில்லாத ஒரு இளம் கான்ஸ்டபிள் கடைசிப் பிரிவில் இருந்தார். நாங்கள் இருந்த இடத்திலிருந்து சிறிது தூரம் தள்ளி, தாய் யானை ஒன்று குட்டி யானைக்குப் பால் கொடுக்கும் காட்சியைப் பார்த்து ஆர்வமானார். கையில் கேமராவுடன் அருகே சென்றார். யானை உடனே தனது குட்டியை பக்கவாட்டில் நகர்த்தி, அவரைப் பார்த்தது.

அந்த எச்சரிக்கை அறிகுறியைப் புரிந்துகொள்ளாமல் அவர் மேலும் நெருங்கினார். உடனடியாக யானை தனது துதிக்கையைத் தூக்கி அடித்தது.

யானையின் துதிக்கை அற்புதமான வளையும் திறன் பெற்றது. அதே சமயத்தில் அதில் 40,000 கடினமான தசைகள் இருக்கின்றன. அது விறைக்கும்போது ஒரு இரும்புக் கம்பியைக் காட்டிலும் கடினமாகி விடும். அது தனது துதிக்கையை வைத்து கான்ஸ்டபிள் தோளில் அடித்தது. அதுவே அவரது மூன்று எலும்புகளை முறிக்கப் போதுமானதாக இருந்தது.

ராஜராஜன் உடனடியாக வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். மற்றுமொருவர் அலறினார். இதனால் நிதானமிழந்த யானை தனது பிரதான இலக்கில் இருந்து விலகியது.

சத்தம் கேட்டு நான் திரும்பிய பொழுது, அங்கு எனக்கு 20 மீட்டர் தூரத்தில் யானை பிளிறிக் கொண்டிருந்தது. 25 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடி வந்தாலும், 3 வினாடியில் அது என்னைப் பிடித்துவிடும். என்னை நோக்கியே அது ஓடி வந்தது.

சடாரென எனது ஏ.கே.—47 துப்பாக்கியை எடுத்தேன். எடுத்த வேகத்தில் அது எனது உள்ளங்கையில் பெரிதாக கிழித்து விட்டது. அடுத்த வினாடி, அதிரடிப்படையில் திடகாத்திரமாக இருந்த வீரர், யானையைப் பார்த்தபடியே, என் மீது விழுந்ததால் நான் கீழே உருளத் தொடங்கினேன். அவர் குறைந்தது 90 கிலோ எடையாவது இருப்பார். ஏதோ உடையும் சத்தம் கேட்டது, அதைத் தொடர்ந்து கடுமையான வலியை உணர முடிந்தது.

ஆனால் நான் தொடர்ந்து சரிவில் உருண்டு கொண்டிருந்தேன். ஒரு வினாடிக்குப் பிறகு பாறைகளுக்கும் முட்களுக்கும் இடையே 90 டிகிரி செங்குத்தாக சரிந்து கொண்டிருந்தேன்.

10 அடி சரிந்து கடைசியாக ஒரு இடத்திற்கு வந்து சேர்ந்த போது என்னை அறியாமல் அமர்ந்த நிலையில் இருந்தேன். குறி வைத்த மனிதர்கள் அனைவரும் கண்காணாத இடத்திற்குச் சென்று விட்டதால் எரிச்சலடைந்த யானை தரையில் அடித்துக் கொண்டு அவசர அவசரமாக எங்களின் ஒரு டஜன் ‘ஷோல்டர்’ பைகளைத் தூக்கி வீசியது. அங்கிருந்து தப்பித்துச் செல்லும் வழியைப் பார்த்து ஓடியது. அதே வழியில்தான் நானும் இருந்தேன்.

இப்போதும் ஏ.கே. 47 துப்பாக்கியை நான் பிடித்துக் கொண்டுதானிருந்தேன். அந்த மிகப்பெரும் விலங்கு என்னை நோக்கி வருவதை என்னால் பார்க்க முடிந்தது. ஒருவேளை அந்த யானை என்னைத் தாக்கினால், துப்பாக்கி ரவைகளால் பெரிய பிரயோஜனம் எதுவும் இருக்காது. ஆனால் என்னைத் தாக்க வரும் அந்த விலங்கிடமிருந்து தப்பித்து ஓட முடியாமல் அப்போதுதான் சிகிச்சை அளிக்கப்பட்டிருந்த எனது வலது கால் கதறியது.

அந்த யானை சிறிது நின்றது. எனது மூச்சைப் பிடித்துக் கொண்டேன். கதை முடிந்தது என்று நினைத்தேன். அந்த யானை என்ன நினைத்ததோ தெரியவில்லை. அந்தத் தாய் யானை உடனடியாக குட்டியை இழுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு விலகியது.

ஒரு வழியாக நான் ஆசுவாசமடைய, எஸ்.டி.எஃப். ஆட்கள் அனைவரும் நீண்ட பெருமூச்சு விட்டனர். பெரும் போராட்டத்திற்கிடையில் என்னை நோக்கி

பதற்றத்துடன் இறங்கி வந்த எனது தோழன் சுந்தரத்தின் தோள்களில் அப்படியே மயங்கி விழுந்தேன்.

அதிரடிப்படை வீரர்கள் என்னையும் அந்தப் புதிய கான்ஸ்டபிளையும் தோளில் தூக்கியபடி அங்கு காத்திருந்த வாகனத்தை நோக்கிச் சென்றனர். நான் பெரும் தர்மசங்கடமாக உணர்ந்தேன்.

அந்த கான்ஸ்டபிளை கங்கா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். நான் வேறு ஒரு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். கோவை கங்கா மருத்துவமனையில் உள்ள டாக்டர் ராஜசேகர் எஸ்.டி.எ.ஃப். படை வீரர்களின் முறிந்த எலும்புகளைச் சரி செய்ய எப்போதும் தயாராகவே இருந்தார்.

வாழ்க்கையிலேயே முதன்முறையாக எனக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டது. காயமடைந்த பாதத்தில் ஒரு சிறு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனது வலது முட்டியில் இரண்டு தசை நார்கள் காயமடைந்திருந்தன. எனினும் அதற்கு அறுவை சிகிச்சை தேவைப்படவில்லை. சென்னையில் வலுக்கட்டாயமாக மூன்று வாரங்கள் ஓய்வெடுக்க வேண்டியிருந்தது.

எஸ்.டி.எ.ஃப். நடவடிக்கைகள் நான் இல்லாத நேரத்தில் முடிந்துவிடுமோ என்று வீட்டில் படுக்கையில் படுத்தபடி அடிக்கடி கவலைப்பட்டேன். வீரப்பனைப் பிடிக்க ஒரு புதிய திட்டத்தை எனது மனதிற்குள் தயார் செய்தேன்.

அந்த நேரத்தில், எனக்கு மீண்டும் பணி மாறுதல்.

“மேடம்... எனது டாஸ்க் இன்னும் முடியவில்லையே?” என்று முதல்வரிடம் கேட்டேன்.

“வீரப்பனைப் பிடிக்க நாள் குறித்து விட்டீர்களா?” என்றார் முதல்வர்.

அந்த கேள்வி என்னை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது!

# ஒரு என்கவுன்டரில் ரவுடி காலி...! அடுத்த என்கவுன்டரில் சிக்கல்?

“அவனைப் பிடிக்க ஏதேனும் காலக்கெடு வச்சிருக்கீங்களா?” என்று முதலமைச்சர் கேட்டார்.

‘இல்லை’ என்றே தர்மசங்கடத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட 20 வருடங்களாக அந்த கொள்ளைக்காரன் தப்பித்துக் கொண்டிருப்பதைக் கணக்கில் வைத்த என்னால் அவனைப் பிடிப்பதற்கான தேதியைத் தெளிவாகச் சொல்ல முடியவில்லை.

எப்படியாவது அதிரடிப்படைக்குத் திரும்பி எனது குறிக்கோளை முடிப்பேனா என்ற ஏக்கத்துடனேயே நான் சென்னை போலீஸ் கமிஷனராக பதவியேற்கச் சென்றேன்.

சென்னை போலீஸ் கமிஷனராகப் பதவி ஏற்றதும், பிரபல ரவுடிக் கும்பலைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் ‘ஏ, ஏ ப்ளஸ்’ என்று ஆரம்பித்து ‘டி’ வரையில் இறங்கு வரிசையில் வகைப்படுத்தினேன். ஒவ்வொருவரும் கண்காணிப்பில் வைக்கப்பட்டனர்.

‘டி’ கிரேட் ரவுடிகளைத் தேடுவது அல்லது அவர்களைப் பிடிப்பது ஒரு ஹெட் கான்ஸ்டபிளின் பொறுப்பு. அதே போல் ஒரு ‘பி’ கிரேட் ரவுடியைத் தேடுவது மற்றும் பிடிப்பது ஒரு இன்ஸ்பெக்டரின் பொறுப்பு. துணை மற்றும் இணை கமிஷனர்கள் ‘ஏ’ மற்றும் ‘ஏ ப்ளஸ்’ வகை ரவுடிகளைக் கவனித்துக் கொண்டனர். ‘ஏ டபுள் பிளஸ்’ வகை ஒன்றும் இருந்தது. அவர்களின் நடவடிக்கைகளை நானே நேரடியாகக் கவனித்துக் கொண்டேன்.

என்னுடைய சென்னை போலீஸ் கமிஷனர் பதவிக் காலத்தில் நடந்த பயனுள்ள விஷயங்களில் ஒன்று எஸ்.ஐ. வெள்ளதுரையுடன் (இவர் துரை என்று அழைக்கப்பட்டார்) எனக்கு ஏற்பட்ட அறிமுகம். சென்னையின் பிரபல நிழல் உலக தாதா வீரமணியால்தான் வெள்ளதுரையுடனான தொடர்பு ஏற்பட்டது.

வீரமணி ஒரு தெளிவான 'ஏ டபுள் ப்ளஸ்' வகையைச் சேர்ந்தவன்தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பிரவுன் சுகர் கடத்தலின் மூலம் அவன் பணத்தில் கொழித்தான். அவனது பணம் பறிக்கும் வர்த்தகத்தின் மூலம் சென்னையையே அச்சுறுத்திக் கொண்டிருந்தான். பெரிய பைனான்சியர்கள் பலர், கடனை வசூலிக்க முடியாத போது, அதை வசூலிப்பதற்கு வீரமணியின் உதவியை நாடினர்.

திரைத்துறையைச் சேர்ந்த சிலர், பணம் கொடுத்தவர்களோ அல்லது வாங்கியவர்களோ வீரமணி முன்பு ஆஜரானதாக வதந்திகள் இருந்தன. ஒரு சில அரசியல்வாதிகள்கூட அவனது உதவியை நாடியதாகவும் சொல்லப்பட்டது.

அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களுடன், கடலுக்குள் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் நிலவு வெளிச்சத்தில் கட்டுமரத்தில் அமர்ந்துதான் வீரமணி கட்டப்பஞ்சாயத்தில் ஈடுபடுவானாம். அவர்கள் இவனது வழிக்கு வரவில்லை எனில், அடுத்த முறை அவர்கள் கடலில் தள்ளி விடப்பட்டு மீனுக்கு இரையாக்கப்படுவார்கள் என்று அச்சம் அவர்களை உலுக்கியது.

இப்படியே அவன் பலரிடமிருந்து வெற்றிகரமாக பணத்தை வசூலித்துக் கொடுத்தான். அவனது அச்சமூட்டும் பெயரை மட்டுமே பயன்படுத்தி கேரளா மற்றும் ஆந்திராவில்கூட பல பஞ்சாயத்துக்களை முடித்தனர்.

வீரமணிக்கு நிறைய பெண்கள் தொடர்பு இருந்தது எனவும் கூறப்பட்டது. அவன் பதுங்கிக்கொள்ள பாதுகாப்பான வீடுகள், குறிப்பாக கடற்கரையோரத்தில் நிறைய இருந்தன என்பார்கள். அவனுக்குப் பிடித்த

பதுங்குமிடம் மீனவக் குப்பமான அயோத்தியா குப்பம்தான். வேடிக்கை என்னவெனில், அது மெரீனா பீச்சில் உள்ள காவல்துறை தலைமையகத்தில் இருந்து ஒரு கல்லெறி தூரத்தில்தான் இருந்தது.

வீரமணி நன்கு தேர்ச்சி பெற்ற கண்காணிப்பு ஆட்களை வைத்திருந்தான். அவர்கள் மூலம் அவனது ஏரியாவிற்கு போலீஸ் வரப்போகிறது என்பதை முன்கூட்டியே அறிந்து கொண்டு, தலைமறைவாகி விடுவான்.

அவனைப் பிடிக்க வேண்டுமானால் அது ரகசிய நடவடிக்கையாகத்தான் இருக்க வேண்டும் என எனது இணை ஆணையர் ஜே.கே.திரிபாதியிடம் சொன்னேன்.

“அப்படின்னா அது அந்த மனுஷனாலதான் முடியும்” என்று திரிபாதி ஒரு நபரைப் பற்றிச் சொன்னார். திரிபாதி அதிகம் பேசுவதைவிட வெற்றிலை பாக்கு மெல்லுவதைத்தான் அதிகம் விரும்புவார்.

‘ட்ரிப்பி’ — நான் அவரை அப்படித்தான் அழைப்பேன். ஆந்தையைப் போல இரவெல்லாம் கண் விழித்திருப்பார். காவல் நிலையங்களில் அவர் திடீர் சோதனைக்குச் செல்வதெல்லாம் பெரும்பாலும் இரவு நேரங்களில்தான். திருச்சியில் கமிஷனராக இருந்த போது கம்யூனிட்டி போலீசிங் பணிக்காக உலக அளவில் பாராட்டுகள் பெற்றிருக்கிறார்.

இங்குதான் அவர் துரையைச் சந்தித்தார். துரை ஒரு காலத்தில் வரலாற்றுப் பேராசிரியர். பாடம் நடத்துவதைக் காட்டிலும் கிரிமினல்களுக்கு பாடம் புகட்டுவது மேல் என பின்னாளில் முடிவு செய்தவர். அவர் காவல்துறையில் சேர்ந்து விரைவிலேயே மேற்கொண்ட துணிச்சலான என்கவுன்டர்கள் மூலம் திருச்சி போலீஸ் மத்தியில் பிரபலமானார். ஆனால் அவரைப் பற்றி சென்னையில் தெரியாது.

ஜூலை 2003

வழுக்கைத் தலையும் ஒழுங்கற்ற தாடியும் கொண்டிருந்த பிச்சைக்காரன் ஒருவன் சூரிய வெளிச்சத்தில் சோம்பேறித்தனமாக தன்னைத்தானே சொறிந்து

கொண்டு சென்னை மெரீனா கடற்கரையில் படுத்துக் கிடந்தான். அங்கு உலவிய சில மனிதர்களை அவன் கண்களை இடுக்கிப் பார்த்தான்.

தூரத்தில் இருந்து பார்த்தாலும் அந்த ஆஜானுபாகுவான சுருட்டை முடி ஆள் தெரிந்தான். அவன் கழுத்தில் அணிந்திருந்த பெரிய தங்கச்சங்கிலி சூரிய ஒளியில் ஜொலித்தது.

பிச்சைக்காரன் அவனது கந்தல் காவித் துணியை சுருட்டி எடுத்துக் கொண்டு தலையை ஆட்டினான். அவன் பல நேரம் செலவழித்து, அந்த மனிதனின் புகைப்படங்களை உற்றுப் பார்த்து அதன் ஒவ்வொரு அம்சத்தையும் நினைவில் நிறுத்தியிருந்தான். மிக நீண்ட நாட்களாக அவன் தேடிக் கொண்டிருந்த ஆள் அவன்தான்.

“வா வீரமணி ரொம்ப நேரம் காத்திருந்தாச்சு” துரை நினைத்தார்.

வீரமணியைப் பிடிப்பதற்காக துரைதான் தலையை மழித்துக் கொண்டு காவித் துணியுடன் பிச்சைக்காரன் வேஷத்தில் கண்காணித்துக் கொண்டிருந்தார். வீரமணி வழக்கமாகத் தங்கும் சேரிக்கு எதிரில் ஒரு குரோட்டன் செடிக்குப் பக்கத்தில் அமர்ந்தபடி அவ்வப்போது வானத்தைப் பார்ப்பதும், சில நேரங்களில் தனக்குள் முணுமுணுப்பதுமாக இரவும் பகலுமாக ஒரு சில நாட்களை அவர் கழித்தார்.

அவர் போலீஸ் ஆள் என்ற சந்தேகம் வராமல் இருக்க அந்தப் பக்கம் போலீஸ் ரோந்து எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஒரே ஒரு எஸ்.ஐ. மட்டும் ஒரு வாகனத்தில் கொஞ்ச தூரத்தில் நின்று கொண்டிருந்தது மட்டும்தான் அவருக்குப் பாதுகாப்பு.

அந்த வருடம் ஏராளமான மேல்மருவத்தூர் பக்தர்கள் கடற்கரையில் குழுமி இருந்தனர். ஜூலை 27, காலை விடிந்து, நண்பகலைத் தொடுவதற்கு தயாராகி இருந்தது. அப்போதே நிறையப் பேர் வந்திருந்தனர். வீரமணி அந்த நாளைத்தான் கடற்கரையில் காலாற நடக்கத் தேர்வு செய்திருந்தான். அவன்

நடக்க அவனுடைய உதவியாளர்கள் அவனைப் பின்தொடர்ந்தனர். அவர்கள் வழக்கமாக ஆயுதங்களுடன்தான் இருப்பார்கள்.

அவன் நடந்து துரையை நெருங்கிய போது, துரை மெதுவாக எழுந்து, தன்னிடம் மறைத்து வைத்திருந்த 9 எம்.எம். துப்பாக்கியை எடுத்து நீட்டினார். ''போலீஸ். ஹேண்ட்ஸ் அப். சரணடைந்து விடு'' என்றார்.

அந்த வினாடியில் வீரமணியைத் தவிர அவனைச் சுற்றி இருந்தவர்கள் அனைவரும் உறைந்து போய் நின்றனர். கண் இமைக்கும் நேரத்தில் என்ன நடந்தது என்பதே தெரியவில்லை.

அனைத்தும் முடிந்த பிறகு, வீரமணி தனது சக்தியை முழுவதும் இழந்து கீழே கிடந்தான். அவனது ஆட்கள் பீதியில் சிதறி ஓடி இருந்தனர். அவர்கள் மறுபடியும் ஆட்களைத் திரட்டிக் கொண்டு திரும்ப வரலாம். துரை ஆம்புலன்ஸ்சை அழைத்தார்.

சட்டப்படி அவனைக் கைது செய்ய முயற்சித்தபோது, அவன் வன்முறை மூலம் அவரைத் தடுத்திருக்கிறான். அவர் தன்னைத் தற்காத்துக் கொள்ள தேவையான நடவடிக்கையை எடுத்தார் என மாஜிஸ்திரேட் விசாரணை உறுதிப்படுத்தியது.

வீரமணியின் சாவு சென்னை தலைமறைவு குற்றவாளிகள் உலகத்தில் உடனடியாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. நிறையப் பேர் சரணடைந்தனர். சிலர் மியான்மர் எல்லையில் உள்ள மோர்ரேவுக்குத் தப்பிச் சென்றனர்.

சென்னைவாசிகள் பலர் திடீரென்று மோர்ரே வந்து சேர்வதைப் பற்றி அப்போதைய மணிப்பூர் மாநில கூடுதல் டி.ஜி.பி. (புலனாய்வு) பீட்டர் கான்யூய் என்னிடம் சொன்னது நினைவிருக்கிறது.

சிறைக் கைதிகள் பலர், சிறையிலேயே பாதுகாப்பாக இருக்கலாம் என தங்களுக்குக் கிடைத்த பெயிலைக்கூட மறுத்து விட்டதாக வதந்திகள் உலவின. ஒரு சிலர் தங்களுக்கு பெயிலே வேண்டாம் என நீதிமன்றத்திலேயே எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்தக் குறிப்பிட்ட சம்பவம் பொதுவாக வெற்றிகரமாகவே நடந்திருந்த போதிலும் சென்னையில் நடந்த இதேபோன்ற மற்றொரு என்கவுண்டரில் சிக்கல்!

# வீரப்பனை வளைக்கும் திட்டத்தில் கேரள மதத்தலைவர்?

மத்திய குற்றப்பிரிவு துணைக்கமிஷனர் கிருஷ்ணமூர்த்தி குழுவினர் பண்ணையார் என்று அழைக்கப்பட்ட தாதாவை சுட்டுக் கொன்றிருந்தனர். இது போன்ற என்கவுன்டர்கள் பற்றி பத்திரிகையாளர்கள் என்னிடம் கேள்வி எழுப்பியபோது, “ஒரு போலீஸ்காரரிடம் நீங்கள் நம்பிக்கையோடு துப்பாக்கியைக் கொடுத்தீர்கள் எனில், அதை அவர் சட்டத்திற்குட்பட்டு புத்திசாலித்தனமாகவும் சிறப்பாகவும் பயன்படுத்துவார் என்றும் நம்ப வேண்டும். ஆயுதங்களை நாங்கள் அணிகலன்களாக அணிவதற்கு வைத்திருக்கவில்லை” என்று சொன்னேன். என்னுடைய இந்தக் கருத்து ஊடகங்களில் ஒரு பிரிவினர் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியது. இதுபோன்ற கொலைகளை சந்தோஷமாக நான் தூண்டி விடுவதாக என்னைக் குற்றம் சாட்டினர்.

இந்தச் சம்பவம் கிளப்பிய பரபரப்பு அடங்குவதற்குள் மற்றொரு சர்ச்சை கிளம்பியது. ‘தி இந்து’ ஆங்கிலப் பத்திரிகையில் ‘சகிப்பற்ற தன்மை’ எனும் கட்டுரை ஒன்று பிரசுரமானது.

அந்தக் கட்டுரை சட்டமன்ற உரிமையை மீறுவதாகக் குற்றம்சாட்டி, சபாநாயகர், இந்து பத்திரிகையின் அப்போதைய எடிட்டர் என்.ரவி, பதிப்பாளர் எஸ்.ரங்கராஜன், அப்போதைய எக்சிக்யூட்டிவ் எடிட்டர் மாலினி பார்த்தசாரதி, மூத்த பத்திரிகையாளர்கள் வி.ஜெயந்த் மற்றும் ராதா வெங்கடேசன் ஆகியோரைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்தார்.

சட்ட வல்லுனர்கள் கருத்துப்படி அந்த உத்தரவை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் நான் இருந்தேன். ஆனால் அதன்பிறகு உச்ச நீதிமன்றம் அந்த

உத்தரவை நிறுத்தி வைக்க உத்தரவிட்டது. எது எப்படியோ, சங்கிலித் தொடர்போல் நடந்த இந்த சம்பவங்கள் என்னை பிரபலப்படுத்தி விட்டன. குறிப்பாக பத்திரிகையாளர்கள் மத்தியில்.

அதன்பிறகு ஒரு சில நாட்களிலேயே எனக்கு மற்றொரு உத்தரவு வந்தது. இந்த முறை நான் சென்னையை விட்டுக் கிளம்ப வேண்டும் எனவும் எஸ்.டி.எஃபுக்கு திரும்பி கூடுதல் டி.ஜி.பி.யாகப் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அந்த உத்தரவு கூறியது.

இதில் சுவாரசியம் என்னவென்றால், எனது வழியனுப்பு விழாவில் 'தி இந்து'வின் முதன்மை செய்தியாளர் ஜெயந்த் உட்பட 100க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் பங்கேற்றனர். ஊடகங்களிடம் இருந்து கடுமையான விமர்சனங்களைப் பெற்ற நான், இறுதியில் அவர்களின் பாராட்டுகளையும் பொக்கேக்களையும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டேன்.

எஸ்.டி.எஃபுக்கு மாற்றலாவதற்கு முன் சென்னை கமிஷனராக நான் பணியாற்றிய போது, வீரப்பனை ஒழித்துக் கட்டுவதற்கு அறிவுப்பூர்வமான திட்டம் ஒன்றை எஸ்.டி.எஃப். படையினர் வகுத்திருந்தனர். மத அமைப்பு ஒன்றின் தலைவரை மையமாக வைத்து வீரப்பனை வளைக்கும் தந்திரத்தை உள்ளடக்கிய திட்டம் அது.

அந்த நடவடிக்கையில் காப்பாற்றப்பட்ட ரகசியமே அந்த திட்டத்திற்கு எதிராக வேலை செய்து விட்டது. இதற்கு முழு எச்சரிக்கையுடன் செயல்பட்ட திட்டம் வகுத்தவர்களைக் குறை சொல்வது கடினம். பல சந்தர்ப்பங்களில் கடைசி நேரத்தில் ரகசியம் கசிந்ததால் பல நடவடிக்கைகள் ஏடாகூடமாக முடிந்திருக்கின்றன.

செப்டம்பர் 2003.

தமானி ஒரு மத அடிப்படைவாதத் தலைவர். தென்னிந்தியாவின் பல நகரங்களில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சதியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கோவை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

ஒரு நாள் கொஞ்சம் கருப்பான ஒரு மனிதர் அவரது சிறை அறைக்குள் வந்தார். அந்த மனிதர் தமானிக்கு அந்நியரல்ல. இதற்கு முன்பு பல நேரங்களில் தமானிக்கு பிசியோதெரபி சிகிச்சை அளிப்பதற்காக வந்த மருத்துவர் குழுவில் அவரும் இருந்திருக்கிறார். தமானிக்கு தசை மற்றும் எலும்பு பலவீனம் உட்பட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

ஆனால் இந்த முறை அந்தப் பார்வையாளர் தனியாக வந்திருந்தார்.

“இங்க என்ன விஷயமா வந்தீங்க?” தமானிக்கு அந்த மனிதரின் பெயர் நினைவுக்கு வரவில்லை.

“கண்ணன்” மென்மையாகக் கூறிய அந்த மனிதர், “உங்களுக்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். அது இரு தரப்புக்குமே பலனளிக்கக் கூடியதாக இருக்கும்” என்றார்.

அந்த மனிதரின் மேல் ஆர்வம் மேலிட, “சொல்லுங்க கேட்கிறேன்” என்றார் தமானி.

“மாதையனுடன் நீங்க கணிசமான நேரம் செலவழிக்கிறீங்க” என்றார் கண்ணன்.

மாதையன் வீரப்பனோட அண்ணன். அவன் அதே சிறையில் தமானி அடைக்கப்பட்டிருந்த சிறை அறையில் இருந்து ஒரு சில அறைகள் தள்ளி அடைக்கப்பட்டிருந்தான்.

“நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குத் தெரியல” தமானி முணுமுணுத்தார்.

“தயவு செஞ்சு நம்ம ரெண்டு பேரோட நேரத்தையும் வீணாக்காதீங்க. அது உண்மைதான்னு எங்களுக்குத் தெரியும். வீரப்பன் மாதையனோட தொடர்புலதான் இருக்கான்னும் எங்களுக்குத் தெரியும். இந்தத் திட்டம் நம்ம

ரெண்டு பேருக்குமே பிரயோஜனமானது. இது என்னன்னு தெரிஞ்சிக்க விரும்புறீங்களா?''

தமானி கொஞ்சம் யோசித்தார். ''செய்யலாம்... ஆனால், நான் ஏன் செய்யணும்? இதுல எனக்கு என்ன இருக்கு?'' என்று கேட்டார்.

கண்ணன் புன்னகைத்தார். ''அடுத்த முறை உங்களைச் சந்திக்க வரும்போது இன்னொருத்தரைக் கூட்டிட்டு வர்றேன். அப்போ நாங்க எல்லா ரகசியத்தையும் விரிவா சொல்றோம்'' என்றார்.

எஸ்.பி.யான என்.கே.செந்தாமரைக்கண்ணன் அல்லது கண்ணன் பற்றி 1991—ல் ஜெயலலிதாவுக்காக எஸ்.எஸ்.ஜி. அமைக்கப்பட்டபோது முதன்முதலாக நான் கேள்விப்பட்டேன். எஸ்.எஸ்.ஜி.க்கு அவரைக் கொண்டு வர நான் செய்த முயற்சி நடக்கவில்லை. கொஞ்ச நாட்கள் மார்ச் 1999—ல் இருந்து மே 2000 வரையில் அவர் எஸ்.டி.எ ஃபில் இருந்தார். அதன்பிறகு அவர் டைரி டெவலப்மென்ட் கார்ப்பரேஷனில் புலனாய்வு அதிகாரியாகப் பணியாற்றினார். நான் பி.எஸ்.எ ஃபில் இருந்து எஸ்.டி.எ ஃப். போன பின்பு, அவரை எஸ்.டி.எ ஃபுக்கு மீண்டும் இடம் மாற்றி அழைத்துக் கொண்டேன். லேக்டோமீட்டர் வைத்து அளந்து பார்த்து கலப்படக்காரர்களை பிடிப்பதைவிட கண்ணன் இங்கு கபடதாரிகளை பிடிக்க முடியும் என்று நினைத்தேன்.

அவர் தனது சரளமான இந்தியால் என்னையும் ஊடகத்தையும் கவர்ந்தவர். அவர் ஒரு ஏர் ஃபோர்ஸ் அதிகாரியின் மகன். இந்தியா முழுவதும் அவரது குடும்பம் சுற்றியதில், சின்ன வயதிலேயே அவர் இந்தியில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். கூடுதல் டி.ஜி.பி. நட்ராஜுக்கு அவர் ஒரு விலைமதிக்க முடியாத பொக்கிஷம். நட்ராஜ் எனது பேட்ச்மேட். சென்னைக்கு நான் மாற்றலாகிச் சென்ற போது என்னிடமிருந்து எஸ்.டி.எ ஃப். தலைமைப் பொறுப்பை ஏற்றவர்.

தமானியோடு தனது வேட்டையைத் தொடங்கிய அவர், நட்ராஜுடன் சேர்ந்து சிறைக்கும் பல குறிப்புகளைக் கொடுத்தார். அந்த இருவரும் சேர்ந்துதான் அந்தத் துணிச்சலான சதித்திட்டத்தைச் செயல்படுத்தினர்.

எஸ்.டி.எஃப். அதன் நம்பிக்கைக்குரிய இன்ஃபார்மர்களிடமிருந்து வீரப்பன் தனது தேய்ந்து போன குழுவை பலப்படுத்துவதற்காக உடனடியாக ஆட்களைச் சேர்க்க வேண்டிய அவசியத்தில் இருந்தான் எனத் தெரிந்து கொண்டது. இது தவிர சிறைக்கு வரும் ஒரு உறவுக்கார இளைஞன் மூலம் மாதையனுடன் வீரப்பன் தொடர்பு வைத்துக் கொள்கிறான் என்றும் அவர்கள் அறிந்திருந்தனர்.

எஸ்.டி.எஃப். வகுத்த திட்டம் எளிமையான அதே சமயத்தில் துணிச்சலானது. அதன்படி வீரப்பனுக்கு ஆதரவாக ஒரு சில தீவிரவாதிகளை அனுப்ப விரும்புவதாக தமானி மாதையனிடம் சொல்வார். ஆனால், உண்மையில் அவர்கள் எஸ்.டி.எஃப். படையினர். அவர்கள் வீரப்பனின் கேங்கிற்குள் ஊடுருவுவார்கள்.

இதற்கு முன்பு கர்நாடக எஸ்.டி.எஃப். ஐ.ஜி. மிர்ஜியும் உதவி போலீஸ் கமிஷனர் பாவாவும் இதே போன்றதொரு திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்து, வீரப்பன் கேங்கில் ஊடுருவ பெங்களூரு அண்டர்வேர்ல்ட் ஆட்கள் சிலரைப் பட்டியல் போட்டும் வைத்திருந்தனர். வீரப்பன் நடமாட்டம் இருக்கும் காட்டுப்பகுதிக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனால் நகர வாசிகளான அவர்கள் மூன்று நாட்களிலேயே காட்டில் இருக்க முடியாமல் நழுவி விட்டனர்.

பின்னர் கர்நாடக எஸ்.டி.எஃப். ஆட்கள் இதே திட்டத்தைச் செயல்படுத்துமாறு தமிழ்நாடு அதிரடிப்படையினரைக் கேட்டுக் கொண்டனர். இந்த வேண்டுகோளை நட்ராஜும் கண்ணனும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டனர்.

அத்திட்டத்தைத்தான் செயல்படுத்தப் போகிறார் என்று தமானிக்குத் தெரியாது. அவருக்குத் தெரிந்ததெல்லாம் வீரப்பனுக்கு அவர் ஆட்களை சப்ளை செய்யப் போவதாகச் சொல்லப் போகிறார் அவ்வளவுதான். அதற்குப் பதிலாக அவரது பெயில் விண்ணப்பம் விரைவாகப் பரிசீலிக்கப்படும். அவரது கால் சிகிச்சையையும் அவர் வீட்டிலேயே வச தியாக மேற்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருந்தது.

தமானி இந்தத் திட்டத்தை உடனடியாக ஒப்புக் கொண்டார். விரைவில் சில நபர்களைச் சந்திக்கத் தயாராக இருக்குமாறு வீரப்பனிடம் சொல்லுமாறு மாதையனிடம் தமானி கூறினார்.

அதன் பிறகுதான் அந்த தந்திரமான காட்சி வந்தது.

எஸ்.டி.எஃப். தனது திட்டத்தை நிறைவேற்ற ஆரம்பித்தது. மாதையன் தமானியைச் சந்திக்க விடாமல் அவர்களின் உறவைத் துண்டித்தனர். இதே போல மாதையனின் மைத்துனனையும் அடுத்த ஒரு சில வாரங்களுக்கு சந்திக்க விடவில்லை. வீரப்பனுக்கு அவனது கேம்ப்பிற்கு வரும் ஆட்கள் தமானியால் அனுப்பப்பட்டவர்கள் இல்லை எனத் தெரியாமல் இருக்க இந்த ஏற்பாடு.

ஒரு சீரான வேகத்தில் எல்லாம் முன்னேற்றமாக போய்க் கொண்டிருக்கிறது என்றுதான் தோன்றியது. இந்த நேரத்தில் ‘தினமலர்’ ஒரு குண்டை தூக்கிப்போட்டது.

# வீரப்பன் தலை மீது பாறாங்கல் தூக்கிப் போடும் நொடியில்...?

கேரளா முஸ்லிம் மதத்தலைவர் தமானியை வைத்து எஸ்.டி.எஃப். வகுத்த திட்டம் வேறு. அதைப்பற்றி ‘தினமலர்’ செய்தி வெளியிடவில்லை. ஆனால், அடிக்கடி கோவை சிறைக்கு நட்ராஜ் ஏன் சென்று வருகிறார் என்பதோடு பல யூகங்களை வெளியிட்டது. வீரப்பனின் எதிரியான நட்ராஜ் தனது மீசையோடு பத்திரிகையாளர்களின் பார்வையில் படாமல் சென்று வருவது கடினமாகவே இருந்திருக்க வேண்டும். அந்த கட்டுரை மற்றபடி திட்டம் குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றாலும், அது நட்ராஜையும் கண்ணனையும் பல இரவுகள் தூங்க விடாமல் செய்தது.

ஆனால் மிகப்பெரிய கேள்வி, அந்த ஊடுருவல்காரர்களுக்கு யார் தலைமை ஏற்பது? என்பதுதான்.

திருடனைப் பிடிக்க திருடன் தான் சரி என்ற வெகுநாட்களாகப் பழக்கத்தில் இருக்கும் பழமொழிப்படி, நட்ராஜும் கண்ணனும் சேர்ந்து சென்னை தலைமறைவு குற்றவாளிகளில் ஒருவனை இத்திட்டத்தில் செயல்படுத்த முடிவு செய்தனர். அவனது பிற குற்றங்கள் குறித்து கருணை காட்டப்படும் என்ற உத்தரவாதத்திற்குப் பதிலாக அவனும் அவர்கள் சொன்ன வேலையைச் செய்வதாக ஒப்புக் கொண்டான். ஆள் வாட்டசாட்டமாக இருந்தான்.

ஆனால் அவனது முகம் கொடூரமும் வேடிக்கையும் சேர்ந்த ஒரு ஆர்வமூட்டும் கலவையாக இருந்தது. அவனது வலது கண்ணுக்கு மேல் ஒரு

தழும்பு இருந்தது. அவன் ஒற்றைக்கண்ணன் வேறு. அவனைப் பார்ப்பதற்கு பழங்காலத்து கடற்கொள்ளையனைப் போல இருந்தான்.

எஸ்.டி.எஃப். ஆட்கள் அவனை ‘ஒற்றைக்கண் ஜாக்’ என்று அழைத்தனர்.

அவனுடன் பேச்சுவார்த்தை பிரச்சினை இன்றியே நடந்தது. ஒரு எஸ்.டி.எஃப். குழுவினர் ‘ஒற்றைக்கண்’ ஜாக்கை நட்ராஜுடன் இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தை நடத்த அழைத்துச் சென்றனர். ஆனால் எஸ்.டி.எஃப். டீம் குறிப்பிட்ட இடத்திற்கு வருவதற்கு முன்பு சென்னை க்ரைம் பிராஞ்ச் போலீசார் மறைந்திருந்து அதிரடியாக அவனைக் கைது செய்தனர்.

எஸ்.டி.எஃப். டீம் ஜாக்குடன் நடத்திய பேச்சுவார்த்தை ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அது குறித்து சென்னை போலீசுக்குத் தெரியாது. அப்போது நான் சென்னை கமிஷனராக இருந்தேன். ஆனால், எனக்கும் இந்தத் திட்டம் பற்றித் தெரியாது. அப்படி முன்னரே தெரிந்திருந்தால் நான் அந்த நடவடிக்கை வெற்றிகரமாக நடப்பதை உறுதி செய்திருப்பேன்.

உடனே குறுகிய காலத்தில் நட்ராஜும் கண்ணனும் மற்றொரு ஏற்பாடு செய்தனர். அவர்கள் இதயத்துல்லாவை நாடினர். அவன் அவனது சில நண்பர்களோடு கன்னியாகுமரியில் இருந்து வரவழைக்கப்பட்டான். ஜாக்கோடு ஒப்பிடும் போது இதயத்துல்லாவின் குற்றப்பட்டியல் குறைவுதான். ஆனால், இந்த அனுபவமின்மை ஒரு பெரும் பாதகமாக பிறகு அமைந்தது.

இதயத்துல்லாவும் அவனது ஆட்களும் வீரப்பன் கேம்ப்புக்குள் நுழைந்தனர். அவர்களை உற்சாகமாக வரவேற்றான் வீரப்பன். அவர்கள் அங்கு ஒரு கடினமான சூழ்நிலையைத்தான் எதிர்பார்த்தனர். ஆனால் ஆச்சரியப்படும் விதத்தில் அது ஏதோ அவர்களுக்கு உல்லாசப் பயணம் வந்ததைப் போல அமைந்தது.

அவர்கள் பெரும்பாலும் காவிரியின் தமிழக எல்லையில் ஒகேனக்கல் அருவி அருகேதான் தங்கி இருந்தனர். அந்தப் பகுதி ஒப்பீட்டளவில் அடர்த்தி குறைந்த வனப்பகுதி.

அவர்கள் அங்கு தங்கி இருந்த நேரத்தில் பெரும்பாலும் எவ்விதப் பிரச்சினையுமின்றி சாதாரணமாகத்தான் கழிந்தது. ஆனால், ஒரு நாள் திடீரென ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அந்தப் பகுதியில் ஏதோ நடமாட்டம் இருப்பதை உணர்ந்த கோவிந்தன், தனது பைனாகுலர் வழியே துளாவிப் பார்த்தான். அவனது உடல் அசைவில் பீதி தெரிந்தது. பதினோரு பேர் கொண்ட எஸ்.டி.எஃப். படையினர் இருப்பது தெரிய வந்தது. உடனடியாக வீரப்பன் கேங் ஆட்கள் பதுங்கினர்.

இதயத்துல்லாவும் அவனது ஆட்களும் இக்கட்டான நிலையை உணர்ந்தனர். அவர்களின் மனதிற்குள் பலவிதமான எண்ணங்கள் ஓடின. எஸ்.டி.எஃப். தாக்கினால் என்ன செய்வது? தாங்கள் யார் என்ற அடையாளத்தைச் சொல்லிவிட்டு சரணடைந்து விடலாமா? அதை அவர்கள் நம்புவார்களா? நட்ராஜுக்கும் கண்ணனுக்கும் மட்டும்தான் இந்தத் திட்டம் தெரியும். பேசாமல் அதிரடிப்படையுடன் சண்டை போடலாமா? அந்தச் சண்டையில் ஒரு வேளை செத்துப் போய் விடுவோமா? என அவர்களுக்குள் பலவிதமான எண்ணங்கள்.

அவர்களது எண்ணங்களை ஒரு நிலைப்படுத்துவதற்குள், எஸ்.டி.எஃப். ஆட்கள் நூறு அடி தூரத்தில் ஒரு மரத்திற்குக் கீழ் வந்து அமர்ந்தனர். உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு பின்னர் அங்கிருந்து நடந்து சென்றனர்.

இதயத்துல்லாவும் அவனுடைய ஆட்களும் அப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். வீரப்பனிடமிருந்து நாம் சில அடிகள் தூரத்தில்தான் இருந்திருக்கிறோம். அதிலும் அவனைப் பிடிப்பதற்காக நாம் நியமித்த ஆட்களே நம்மைப் பார்த்திருக்கிறார்கள் என்ற விவரம் எஸ்.டி.எஃப். படையினருக்குத் தலைமை வகித்த எஸ்.ஐ.க்கு பின்னாளில் தெரியவந்த போது தன்னைத்தானே நொந்து கொண்டார்.

இதயத்துல்லா ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுதான். அவனது வேலைகளை நேர்த்தியாகச் செய்தான். இதை எல்லாம் பார்த்த வீரப்பனுக்கு அவனைப் பிடித்துப் போயிற்று. ஒரு நாள் இதயத்துல்லாவிடம் வீரப்பன், ஒரு சிறு அரசியல் குழுவின் தலைவர் தன்னிடம் பணம் வாங்கி ஏமாற்றி

விட்டதாகக் கூறினான். அவன் சொன்ன அந்த அரசியல் குழு பின்னாளில் எல்.டி.டி.இ. ஆதரவுக்குழு என்ற முகாந்திரத்தில் தடை செய்யப்பட்டது.

''நான் ஒரு ஆம்புலன்ஸுக்காக அவனிடம் 2 லட்ச ரூபாய் கொடுத்தேன். அவன் ஒரு சித்தாந்தவாதி என நம்பினேன். ஆனால் ஆம்புலன்ஸ் வரவில்லை. அவன் பணத்தோடு ஓடி விட்டான்'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான் வீரப்பன். அவனது குரலில் ஏமாற்றம், பழிவாங்கும் எண்ணம், கோபம் என அனைத்தும் கலந்திருந்தது.

''அடப்பாவமே'' என்ற இதயத்துல்லா, ''உங்களுக்கு எதுக்கு ஆம்புலன்ஸ் தேவைப்பட்டுது'' என்று கேட்டான்.

''ஓ... ஒண்ணுமில்லை'' என்று அவசரமாகச் சொன்ன வீரப்பன் எழுந்து நடக்கத் தொடங்கினான். அவன் பாதை குறித்துத் தடுமாறியது போலத் தெரிந்தது. வேகமாக நேராக நடக்கத் தொடங்கிய அவன் யாரேனும் தன்னைப் பார்க்கிறார்களா என சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான்.

இதயத்துல்லா அதை அவனது கண்களின் விளிம்பில் பார்த்தான். ஆனால் தான் எதையும் பார்க்கவில்லை என்பதைப் போல பாசாங்கு செய்தான்.

அடுத்த சில நாட்களில் வீரப்பன் கேங் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் போது எப்போதுமே இரவில் செல்வதையும், வீரப்பன் அனைவருக்கும் பின்னால் செல்வதையும் இதயத்துல்லா கவனித்தான். ஆரம்பத்தில் இது ஒரு பாதுகாப்பு ஏற்பாடு என்றுதான் அவன் நினைத்தான். ஆனால் அவன் மேலும் ஒன்றையும் கவனித்தான். வீரப்பன் நடக்கும்போது எப்போதும் கைத்தடி போன்ற குச்சியை ஊன்றுகோலாக வைத்துக் கொண்டுதான் நடந்தான். மேலும் புதர்களுக்கு மத்தியில் அல்லது மரக்கிளைகளுக்கு மத்தியில்தான் அவன் நடந்தான்.

வீரப்பனுக்கு ஒரு தீவிரமான கண்பார்வை பிரச்சினை இருக்கிறது என்று விரைவிலேயே இதயத்துல்லாவுக்குத் தெளிவானது. ஒரு நாள் அது உறுதியானது. வீரப்பனுக்கு அன்று டீ கொடுக்கச் சென்றான் இதயத்துல்லா.

அப்போது வீரப்பன் கோவிந்தனிடம், ‘‘எப்படியாவது நாம ஒரு டாக்டரைப் பார்க்கணும்’’ என்று சொல்லிக் கொண்டிருந்ததை அவன் கேட்டான்.

இதயத்துல்லா அங்கு சென்றதும், அவர்களின் உரையாடல் உடனடியாக நின்றுவிட்டது. இதயத்துல்லா காட்டிற்குள் சென்றபோது, அங்கு தான் ஒரு பெரிய பிசாசைச் சந்திக்கப் போகிறோம் என்றுதான் எதிர்பார்த்தான். ஆனால் இதயத்துல்லா சந்தித்த வீரப்பன், ரத்த தாகம் கொண்ட அழிக்க முடியாதவன் என்று பல வருடங்களாக அவனைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்த இமேஜுக்கு முற்றிலும் மாறானவனாக இருந்தான்.

வீரப்பன் பிரியக்கார அப்பாவாக இருந்தான். குறிப்பாக அவனது இரண்டாவது மகள் மீது அதிகப் பாசத்துடன் இருந்தான். இதயத்துல்லா உள்ளிட்ட அவனது கேங்கில் ஊடுருவிய அனைவரிடமும் வீரப்பன் அந்த மகளின் புகைப்படத்தைக் காட்டியிருக்கிறான். பின்னிரவு நேரத்தில் தூரத்தில் வெளிச்சப்புள்ளிகளாகத் தெரியும் தான் பிறந்த கிராமத்தை ஏக்கத்துடன் சுட்டிக்காட்டுவான். இப்போது வீரப்பன் இதயத்துல்லாவை முழுமையாக நம்பினான்.

ஒரு நாள் கோவிந்தனும் மற்றவர்களும் வேட்டைக்காகக் காட்டுக்குள் சென்றிருந்தனர். அப்போது இதயத்துல்லாவும் அவனது ஆட்களும் மட்டும் தனியாக வீரப்பனுடன் இருந்தனர்.

அது நல்ல பகல் வெளிச்சமாக இருந்த போதிலும், வீரப்பன் தனது முகத்தை மூடிக் கொண்டு தூங்க ஆரம்பித்தான். ஒரு சில நிமிடங்களில் அவன் ஆழ்ந்து உறங்கி விட்டான். அவனது குறட்டைச் சத்தம் அந்தப் பகுதி முழுவதும் எதிரொலித்தது.

இதயத்துல்லா வீரப்பன் படுத்திருந்த இடத்திற்கு அருகே சென்றான். அவனது மூளை அதிவேகமாக ஓடியது. இதயமும் வேகமாக அடித்துக் கொண்டது. பக்கத்தில் ஒரு பெரிய கல் கிடந்தது. ‘‘அந்தக் கல்லைத் தூக்கி இவன் மேல போட்டாப் போதும். எல்லாம் முடிஞ்சு போயிடும். நான் ஹீரோ ஆயிடுவேன்’’ என்று இதயத்துல்லா நினைத்தான்.

அப்போது...?

## ஊடுருவிய 4 பேரை பத்திரமாகவிட்ட வீரப்பன்

வீரப்பன் நன்றாக குறட்டை விட்டுக்கொண்டிருக்கும் போது, அருகில் இருந்த பாறாங்கல் ஒன்றைத் தூக்கிவிட்டான் இதயதுல்லா. ஆனால், ஒரு நொடியில் அவனது தொண்டையும் வாயும் சுத்தமாக வறண்டு போனது.

தூங்கிக் கொண்டிருக்கும் நிராயுதபாணியான ஒருவனைக் கொலை செய்யலாமா? அல்லது நூற்றுக்கணக்கான அப்பாவிகளின் உயிரைக் குடித்த இவனை உயிரோடு விட்டு விடலாமா? என்று இதயத்துல்லாவின் மனதிற்குள் போராட்டம் நடந்தது. எது சரி என இதயத்துல்லா சீர் தூக்கிப் பார்த்துக் கொண்டிருந்தபோது, வீரப்பன் தூக்கத்தில் புரண்டு படுத்தான். வீரப்பன் தனது மகள்களின் போட்டோக்களைக் காட்டியது, தனது குழந்தைத்தனத்தை மறைக்க முடியாமல் தான் பிறந்த கிராமத்தைக் காட்டியது ஆகிய காட்சிகள் இதயத்துல்லாவின் மனதில் தோன்றி மறைந்தன.

இதயத்துல்லா தனது நடுங்கும் கைகளை மெதுவாக இறக்கி கல்லைக் கீழே வைத்துவிட்டு மறுபடியும் தனது படுக்கைக்குச் சென்றான். இதயத்துல்லாவின் ஆள் ஒருவன் அவனது செய்கைகளை விசித்திரமாகப் பார்த்தான். இதயத்துல்லா தனது தலையை உலுக்கி, இந்த கொடூரமான செயலை எப்படியாவது செய்துதான் ஆக வேண்டுமா என அவனிடம் சைகையிலேயே கேட்டான். அந்த மனிதன் சிறிது யோசித்துவிட்டு, தலையை அசைத்து வேண்டாம் என்று சொன்னான்.

அந்த இடத்தில் ‘ஒற்றைக்கண்’ ஜாக் இருந்திருந்தால் நிச்சயம் வீரப்பனின் கதையை முடித்திருப்பான் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. ஆனால் இதயத்துல்லாவோ அவனது ஆட்களோ ஒருபோதும் கொலை செய்ததில்லை. எனவே அவர்களால் அதை அன்று செய்ய முடியவில்லை.

வீரப்பனே இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவனிடம் மாட்டியவர்களிடம் இப்படி நடந்து கொள்வதில்லை. கருணை காட்டியதற்காக அவர்களை யாரும் குற்றம் சொல்ல முடியாது.

இந்தச் சம்பவம் முடிந்து சில நாட்களில், உயரமான ஆள் ஒருவன் வீரப்பனைச் சந்திக்க வந்தான். அவனைப் பார்த்து உற்சாகமான வீரப்பன், அவனைக் கட்டிப்பிடித்து வரவேற்றான். அப்போது அந்த இளைஞனின் முகத்தில் ஒரு தீவிரம் தெரிந்ததை வீரப்பன் கவனித்தான்.

“உனக்கு ஏதாவது பிரச்சினையா?” என்று கேட்டான்.

அந்தப் பையன் தலையை ஆட்டியவாறு, “இரண்டு வாரத்துக்குப் பிறகு நேத்துத்தான் நான் ஜெயிலில் மாதையன் மாமாவைப் பார்த்தேன். அவரு சமீபத்துல போட்ட லெட்டருக்கெல்லாம் நீங்க ஏன் பதில் போடலைன்னு தெரியலைன்னு சொன்னார்” என்றான்.

வீரப்பன் புருவங்களை உயர்த்தினான்.

“போன வாரமும் அதற்கு முந்தின வாரமும் பார்வையாளர் நாளில் நான் மாதையனைப் பார்க்கப் போன போது என்னைப் பார்க்க விடலை. அதே சமயத்துல உங்களுக்கு யாரும் பார்வையாளர்கள் வரலைன்னு மாதையன் மாமா கிட்டவும் ஜெயிலர் சொல்லி இருக்காரு. மாதையன் மாமாவுக்கு இங்க வந்திருக்கிற நாலு பேரு மேல டவுட் வந்து, அதைப் பத்தி அவரோட நண்பர்கிட்ட கேட்க முயற்சி செஞ்சிருக்காரு. ஆனா அவரையும் மாமாவால சந்திக்க முடியல” என்றான்.

வீரப்பன் பீதியின் உச்சத்திற்கே போய் விட்டான்.

காட்டிற்குள் இந்த உரையாடல் நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில், சிறையில் மாதையன் எப்படியோ தமானியைச் சந்தித்து விட்டான். அப்போது தமானி, தற்போது வீரப்பனிடம் இருக்கும் நான்கு பேரை தான் அனுப்பவில்லை என்று கூறிவிட்டார். ஆனால் வீரப்பனுக்கு இது தெரியாது. எனவே, அந்த நான்கு பேர் யார் என்பது குறித்து எந்த முடிவுக்கும் வர முடியாமல் வீரப்பன்

ஊசலாட்டத்தில்தான் இருந்தான். உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்க அவன் விரும்பவில்லை.

கோவிந்தனிடம் சிறிது ஆலோசித்துவிட்டு, இதயத்துல்லாவிடம் சென்றான். ‘‘எனக்கு ஒரு அவசர வேலை வந்திருச்சு. நாம இப்ப பிரிவோம். ஒரு சில நாள் கழிச்சு உங்களைப் பார்க்கிறேன்’’ என்று சொன்னான். அவனது குரல் அளந்து வைத்ததைப் போன்று இருந்தது.

ஒரு சந்திப்பிடத்தையும் சொன்னான். அந்த முழு உரையாடலிலும் வீரப்பனின் நடத்தை வெகு இயல்பாக இருந்தது.

கோவிந்தன் அவர்களை அங்கிருந்து காவிரியின் மேற்கு திசையில் 3 கிலோ மீட்டர் தூரம் அழைத்துச் சென்றான். வீரப்பன் வழக்கம் போல பின்னால் வந்து கொண்டிருந்தான்.

காவிரிக் கரையில் இதயத்துல்லா திரும்பிப் பார்த்தான். வீரப்பன் பாதியிலேயே நின்று விட்டான். இதயத்துல்லா கையை அசைத்து விடை கொடுத்துவிட்டுச் சென்றான். அவன் வீரப்பனை இனி ஒருபோதும் பார்க்கப் போவதில்லை.

அந்த நான்கு பேரும் கண்பார்வையை விட்டு மறையும் வரையில் வீரப்பனும் கோவிந்தனும் பார்த்துக் கொண்டிருந்தனர். பின்னர் ஒருவருக்கொருவர் பார்வையைப் பரிமாறிக் கொண்டனர்.

‘‘நாம ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்’’ என்று கோவிந்தன் சொன்னான்.

வீரப்பன் கசப்புடன் தலையாட்டினான். ‘‘ஆமா. நாம இங்க இருந்து எவ்வளவு தூரம் தள்ளிப் போக முடியுமோ அவ்வளவு தூரம் தள்ளிப் போயிடணும்’’ என்றான். அவர்கள் காவிரியைக் கடந்தனர். அவர்கள் சென்ற இடம் 1990 ஏப்ரலில் எஸ்.ஐ. தினேஷ் மீது தாக்குதல் நடத்திய இடத்தில் இருந்து பக்கமாகத்தான் இருந்தது.

வீரப்பன் கேங்கில் ஊடுருவ வேண்டும் என நட்ராஜ் மேற்கொண்ட முயற்சி மேலோட்டமாகப் பார்த்தால் தோல்வி போலத் தெரியலாம். ஆனால், அது எஸ்.டி.எஃப். படைக்கு நிறைய விலைமதிக்க முடியாத தகவல்களைக் கொடுத்திருந்தது. முதல்முறையாக, (இந்த ஒரு முறைதான்) வீரப்பன் தன்னைக் கொல்ல வந்த ஆட்களுக்கே அடைக்கலம் கொடுத்து, அவர்களை 21 நாட்கள் தன்னுடன் வைத்திருந்தது அப்போதுதான் நடந்திருக்கிறது.

இந்த உறைய வைக்கும் சம்பவம் வீரப்பனின் உள்வட்டத்தை மேலும் இறுக்கமாக்கியது. இதனால் எஸ்.டி.எஃபுக்கு அந்த வட்டத்திற்குள் ஓட்டை போட்டு உள்ளே நுழைவது மேலும் கடினமானது.

மேலும் வீரப்பனுக்கு கண் சிகிச்சை அவசியமாகத் தேவைப்படுகிறது என்ற தகவலையும் எஸ்.டி.எஃப். அறிந்து கொண்டது. அந்த தகவல் பிற்காலத்தில் மிகவும் உதவிகரமாக இருந்தது.

இதயத்துல்லா வீரப்பனைப் பற்றிச் சொல்லும் போது, அவனுக்கு பக்கத்து கிராமத்திலிருந்து வரும் சமைக்கப்பட்ட ஆட்டுக்கறியும் கோழிக்கறியும் மிகவும் பிடிக்கும் என்றும் குறிப்பிட்டான்.

கண்ணனுக்கு இதைக் கேட்டதும் தலையில் பொறி தட்டியது. "சாப்பாட்டை யார் கொண்டு வருவாங்க?" என்று கேட்டார்.

"ஒரு மூணு நாலு பேரு வழக்கமா கேம்ப்புக்கு வருவாங்க. அவங்க எப்பவுமே அந்தி மயங்குற நேரத்துலதான் வருவாங்க. ரெண்டு பேரா சில சமயம் வருவாங்க. ஆனா எப்பவுமே அவங்க எல்லாம் ஒண்ணா சேர்ந்து வந்ததில்லை. வீரப்பன் அவங்களை மாப்பிள்ளை, மருமகன் என்றுதான் கூப்பிடுவான். ஒரு செவத்த பையனை செவத்தையன் என்று கூப்பிடுவான். (கிராமத்தில் சிவப்பாக இருப்பவர்களை அப்படி அழைப்பார்கள்). இன்னொருத்தன் இருக்கான். வரும் போதெல்லாம் முக்காடு போட்டு முகத்தை மூடிக்கொண்டுதான் வருவான்" என்று இதயத்துல்லா பதில் சொன்னான்.

வீரப்பனுக்குத் தகவல் சொல்லும் ஆட்களை பின்தொடர்ந்த எஸ்.டி.எஃப். அவனது இருப்பிடத்திற்குச் சென்று வரும் முக்காடு போட்டவனையும் அவனது மருமகனையும் பிடித்தனர். பின்னாளில் முக்காடு போட்டவனைப் ‘போர்வை’ என்ற ரகசியப் பெயரில் அழைத்தனர்.

அந்த மருமகன் சின்னப்பையன்தான். எனவே, அவனைத் தங்கள் பக்கம் கொண்டு வந்துவிடலாம் என எஸ்.டி.எஃப். நம்பியது. ஆனால், அவன் கடினமான ஆளாக இருந்தான். அவனைப் பிடித்து பொய் அறியும் கருவியை வைத்தெல்லாம் சோதனை செய்து பார்த்தனர். ஆனால் அவனிடமிருந்து எந்த ஒரு தகவலையும் பெற முடியவில்லை. வீரப்பனைப் போலவே அவன் தந்திரசாலியாக இருந்தான். அவனிடம் எழுப்பிய கேள்விகளெல்லாம் விழலுக்கிறைத்த நீரைப் போல் வீணானது.

பின்னர் விசாரணை ‘போர்வை’ பக்கம் திரும்பியது. கேள்விகளால் தொடர்ந்து துளைத்தெடுத்த பிறகு கடைசியாக அவன் வாயைத் திறந்தான். “என்னோட மகனுக்காகத்தான் நான் வீரப்பனோட இருக்கேன்” என்று சொன்னான்.

“கவலைப்படாத. ஒன்னோட பையனை நாங்க பாத்துக்கிறோம். அவனோட தேவையை நாங்க நெறைவேத்துறோம்” என்று வாக்குறுதி அளித்தனர். ஒருவன் தன் மகன் மீது வைத்துள்ள அன்பு நன்றாக வேலை செய்தது. ‘போர்வை’ ஒத்துழைப்பதாக ஒப்புக் கொண்டான். அதன்பிறகு எஸ்.டி.எஃப். குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது.

ஆனால், வீரப்பனின் அடுத்த அட்டாக், இரு மாநிலத்தையும் நிலை குலையச் செய்தது...!

## மாஜி அமைச்சர் கடத்தல்! ரூ.100 கோடி பேரம்?

வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் மீதான பிடி இறுகிக் கொண்டிருந்த போதிலும் மற்றொரு துணிச்சலான நடவடிக்கை ஒன்றை அவன் அரங்கேற்றினான். அதுதான் அவனது கடைசி நடவடிக்கை.

ஆகஸ்ட் 2002.

முன்னாள் கர்நாடக அமைச்சர் எச்.நாகப்பாவின் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு பணியாளர் புட்டநஞ்சா, அந்த லுங்கி கட்டியிருந்த அந்நியனைப் பார்த்து 'என்ன' என்று கேட்டார்.

அந்த மனிதன், தனது கிராமத்தில் நிலத்தகராறு தொடர்பாக தன்னை சிலர் தொந்தரவு செய்வதாக ஒரு புகாருடன் வந்திருந்தான். லிங்காயத் சாதியில் மிகப் பிரபலமான தலைவராக விளங்கிய அமைச்சர் நாகப்பாவைச் சந்தித்தே ஆக வேண்டும் என்பதில் அவன் பிடிவாதமாக இருந்தான்.

அந்த அந்நியனை அழைத்த நாகப்பாவின் பாதுகாப்புப் பணியாளர், "ஐயா பிசியா போன் பேசிக்கிட்டு இருக்காங்க. இங்க காத்திரு" என்று சொன்னார்.

ஆனால், அந்த அந்நியன் உடனடியாக வாசலை நோக்கி ஓடினான். சாலையில் இருந்த சிலரை நோக்கிக் கையசைத்தான். ஒரு சில நிமிடங்களில் ஆலிவ் பச்சையில் உடை அணிந்திருந்த துப்பாக்கி ஏந்திய எட்டுப்பேர் புயலைப் போல அந்தப் பண்ணை வீட்டிற்குள் நுழைந்தனர். ஆபத்தை உணர்ந்த புட்டநஞ்சா உடனடியாக முன் அறையின் கதவைப் பூட்டி, உள்ளே இருந்து சுடத் தொடங்கினார்.

ஆனால், அவரது தடுப்பு நடவடிக்கை வீணானது. அவர்கள் பூட்டின் மீதே சுட்டு அதைத் தகர்த்து உள்ளே நுழைந்தனர்.

வீரப்பன் தன்னிடம் சிக்கியவர்களைப் பார்த்தவாறு புன்னகைத்தான். நாகப்பாவைத் தவிர அங்கு அவரது மனைவி பரிமளா, மகள் பிரியங்கா, பேரன் சபான், தனிச் செயலாளர் சிவமூர்த்தி, டிரைவர் மகாதேவசாமி மற்றும் ஒரு வேலைக்காரன் ஆகியோர் இருந்தனர். அவர்கள் அனைவரையும் கண்டுகொள்ளாத வீரப்பன், துப்பாக்கியால் நாகப்பாவைக் குறிவைத்தான்.

''நாம போகலாம்'' என்றான்.

பரிமளா வீரப்பனிடம் கெஞ்ச ஆரம்பித்தார். ''அவர் ஒரு சர்க்கரை நோயாளி என்றும் அவரால் காட்டிற்குள் இருக்க முடியாது'' என்றும் கூறினார்.

வீரப்பனும் அவனது ஆட்களும் அதைக் கண்டுகொள்ளவில்லை. 66 வயதான நாகப்பாவை வெறுங்காலுடன் அழைத்துச் சென்றனர். ராஜ்குமார் கடத்தல் சம்பவத்திற்குப் பின் மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பெரிய ஆளை வீரப்பன் கடத்தியிருந்தான்.

இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்ற பிறகு மற்றொரு பண்ணை வீட்டின் வாசலில் வீரப்பன் நின்றான். நாகப்பா தனது வீட்டின் வாசலில் அமர்ந்திருந்ததையும் சுற்றி துப்பாக்கி ஏந்திய ஆட்கள் நின்றிருந்ததையும் பார்த்து அந்த வீட்டின் உரிமையாளர் அதிர்ச்சி அடைந்தார்.

''அவருக்கு செருப்பு கொடு'' என்று வீரப்பன் சொன்னான்.

அந்த வீட்டின் உரிமையாளர் அவசரமாக தான் காலில் அணிந்திருந்த செருப்பைக் கழற்றி நாகப்பாவிடம் கொடுத்தார்.

பிறகு வீரப்பன் அவரிடம் ஒரு கேசட்டைக் கொடுத்து, ''இதை நாகப்பா மனைவியிடம் கொடு. அவங்கக்கிட்ட ஒண்ணும் கவலைப்பட வேண்டாம், அவங்க வீட்டுக்காரரை ஒரு சில நாட்கள்ல விட்டுடுவேன்னு சொல்லு'' என்றான்.

அந்த கேசட்டில், வீரப்பன் தனது நெடுநாள் கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தி இருந்தான். ராஜ்குமார் மீட்பு நடவடிக்கையில் முக்கிய நபர்களாகச் செயல்பட்ட கொளத்தூர் மணி மற்றும் பழ.நெடுமாறன் ஆகியோரை போலீஸ் காவலில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று அவன் கேட்டிருந்தான். பெங்களூருவில் திருவள்ளுவர் சிலை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் மறுபடி நினைவுபடுத்தி இருந்தான்.

வீரப்பன் தனது ஆட்களுக்கு வழிகாட்ட, அவர்கள் புருடே வனப்பகுதியை நோக்கிச் சென்றனர். அன்று இரவு 12.30 மணியளவில் ஒரு சில மனிதர்கள் கொல்லேகால் பகுதியிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் தனியார் பேருந்து ஒன்றை நிறுத்தினர். அவர்களில் இரண்டு பேர் பேருந்தில் ஏறி, அதில் இருந்த பயணிகளை கீழே இறங்கச் சொன்னார்கள். பயணிகள் இறங்கிக் கொண்டிருந்தபோது, வயல்வெளியில் மறைந்திருந்த வீரப்பனும் மற்றவர்களும் நாகப்பாவுடன் அங்கு வந்தனர்.

பெண்கள் வீரப்பனைப் பார்த்து மிரண்டு போய் முழிக்க, ஒரு சில ஆண் பயணிகள் பீதியடைந்தனர். அவர்களைப் பார்த்து வீரப்பன், ‘‘கவலைப்படாதீங்க. ஒங்கள எதுவும் செய்ய மாட்டேன். எங்க வேலை முடிஞ்சதும் பஸ் திரும்பி வந்துரும்’’ என்று சொன்னான்.

பஸ்சைக் கடத்தி ஒரு அரை கிலோ மீட்டர்தான் போயிருக்கும். அதற்குள் ஒரு ஜீப் ஒன்று பின்தொடர்வதை வீரப்பன் கேங் பார்த்தது. ‘‘அவங்க ஒருவேளை போலீஸா இருக்கலாம். வண்டிய நிறுத்து’’ என்று டிரைவருக்கு வீரப்பன் கட்டளை இட்டான்.

அந்தக் கொள்ளைக்காரர்கள் உடனடியாக பேருந்தை விட்டு இறங்கி, காட்டுக்குள் சென்று மறைந்தனர். அவர்களை யாரும் பின்தொடராமல் இருப்பதற்காக, வீரப்பன் அவனது பலமான பதுங்குமிடமான நல்லூரைச் சென்றடைய கலமத்தூர் மலையை நோக்கிச் சென்றான்.

சரி... வீரப்பன் நாகப்பாவை ஏன் கடத்தினான்? 1994 மற்றும் 1999—க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் நாகப்பா, அமைச்சராக இருந்த போது வீரப்பனை

எதிர்த்து அடிக்கடி பேசினார் என்ற பழைய கோபம் ஒரு காரணம் எனச் சொல்லப்பட்டது. மேலும் சந்தனக் கடத்தலுக்கு எதிராக கடுமையாக இருந்ததோடு, கிராமத்தினரை வீரப்பனுக்கு உதவி செய்யாதீர்கள் என்றும் வலியுறுத்தியவர் நாகப்பா.

ஒருமுறை சட்டமன்றத் தேர்தலில் நாகப்பா தனது அரசியல் எதிரி ராஜகவுடாவை வீழ்த்தி வெற்றி பெற்றார். அதற்கு காரணம் தான்தான் என வீரப்பன் நம்பினான். அதனால் அமைச்சர் நாகப்பா தனக்கு உதவி செய்வார் என்றும் எதிர்பார்த்தான். இதற்கு முன்பு இரண்டு முறை நடந்த தேர்தல்களில் ராஜகவுடாவை தான் ஆதரித்ததால்தான் வெற்றி பெற்றார் என்று வீரப்பன் நம்பினான்.

ஆனால் அதை கவுடா மறுத்தார். இந்த முறை வீரப்பன் கவுடாவுக்கு ஆதரவளிக்கவில்லை. வீரப்பனின் சகோதரன் அர்ஜுனனும் மற்றவர்களும் கர்நாடக போலீஸ் காவலில் இருந்த போது மர்மமான முறையில் இறந்தனர். நாகப்பா உரிய நேரத்தில் தலையிட்டிருந்தால் அவர்களின் உயிரைக் காப்பாற்றி இருக்க முடியும் என்று வீரப்பன் கூறினான்.

ஆனால், ராஜ்குமார் கடத்தல் காலத்தோடு ஒப்பிடும்போது தற்போது நெருக்கடியில் சிக்கி இருந்தான் என்பதில் சந்தேகமில்லை. அவனும் கோவிந்தனும் கேங்கில் உள்ள பிற நபர்களுக்குத் தெரியாமல் ரகசியமாக ஒரு இடத்தில் பணத்தைப் புதைத்து வைத்தனர். கர்நாடக மற்றும் தமிழக அதிரடிப்படையின் கூட்டு நடவடிக்கை காரணமாக வீரப்பனால் அந்தப் பணத்தை மறுபடியும் எடுக்கவே முடியாமல் போனது.

நாகப்பாவைக் கடத்தியது மிகப்பெரும் தவறு என வீரப்பன் விரைவிலேயே உணர்ந்தான். அந்த அரசியல்வாதி மிகவும் பிரபலமானவர். அவருக்கு நிறைய ஆதரவாளர்கள் இருந்தனர். வீரப்பனின் செல்வாக்கு மிக்க பகுதி எனக் கருதப்படும் கிராமப்பகுதிகளில் இருந்தவர்கள் மத்தியில் கூட அவருக்கு செல்வாக்கு இருந்தது. இந்தக் கடத்தலின் மூலம் பொதுமக்கள் மத்தியில் தனக்கு இருந்த அனுதாபத்தை இழந்தான் வீரப்பன்.

இப்போது அவனே உருவாக்கிய சூழ்நிலையில் அவனே மாட்டிக் கொண்டான். ஏதேனும் பெறாமல் நாகப்பாவை அவனால் விட்டுவிடவும் முடியாது. அரசு தரப்புத் தூதராக ராஜு கவுடா பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்றும் அவன் கோரிக்கை வைத்தான்.

கவுடா இதை சுத்தமாக மறுத்து விட்டார். எனினும் நாகப்பாவுக்கு நம்பிக்கையான ஒரு உள்ளூர் ஜனதா தள தலைவர் காட்டுக்குள் சென்று வீரப்பனைச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். ஒடக்கஹெல்லா என்ற இடத்தில் வீரப்பன் கேங்கை அவர் சந்தித்ததாகச் சொல்லப்பட்டது. ஆனால் அவர் நாகப்பாவைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. அவர் கொண்டு சென்ற உடைகள் மற்றும் மருந்துகளை மட்டும் வீரப்பன் ஆட்கள் பெற்றுக் கொண்டனர். மேலும் கர்நாடக அரசு 100 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என்று அவரிடம் சொல்லி அனுப்பினர். இது ரகசியமாக இருக்க வேண்டும் என்றும் வீரப்பன் தெரிவித்திருந்தான்.

அந்த ரகசியத்தை தமிழக அதிரடிப்படையின் வீரர் மோப்பம் பிடித்தார்.

# நாகப்பா மரணமும் வீரப்பனின் சரிவும்!

வீரப்பனைச் சந்தித்த உள்ளூர் ஜனதா தள கட்சியின் பிரமுகர், வீரப்பன் சொன்ன ரகசிய தகவலை, கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா டி.ஐ.ஜி. கொம்பையா மற்றும் நாகப்பாவின் மனைவியிடமும் இந்தத் தகவலைச் சொன்னார். அந்தச் செய்தி ரகசியமானதாகத்தான் இருந்திருக்க வேண்டும். அதை தமிழக அதிரடிப்படையின் ஆற்றல் மிகுந்த வீரர் மோகன் நவாஸ் தெரிந்து கொண்டார்.

கர்நாடக எஸ்.டி.எ◌ஃப். கலமத்தூர் காடுகளுக்குள் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தது. ஆனால் நாகப்பாவின் மனைவியும் நாகப்பாவை பாதுகாப்பாக அழைத்து வர வேண்டும் என்று விரும்பிய அவரது ஆதரவாளர்களும் கண்ணீர் மல்க லாரிகளில் காட்டுக்குள் கிளம்பினர். இது தேடுதல் வேட்டையைச் சிக்கலாக்கியது.

கர்நாடக எஸ்.டி.எ◌ஃப். கலமத்தூரை நெருங்கிய போது, வீரப்பன் அங்கிருந்து தப்பித்து செங்கடியை நோக்கிச் சென்றான். ஆனால், அரை நாளில் நடந்து செல்ல வேண்டிய தூரத்தைக் கடக்க அவனுக்கு மூன்று நாட்கள் ஆனது. எஸ்.டி.எ◌ஃப். ஆட்களும் நாகப்பா ஆதரவாளர்களும் காடுகளுக்குள் நிறைந்திருக்க, வீரப்பன் நிறைய கிராமங்களைத் தவிர்த்து விட்டுத்தான் செல்ல வேண்டியிருந்தது.

இது போன்ற கடத்தலின் போது வீரப்பன் ஒரு மாநிலத்தில் இருந்து அடுத்த மாநிலத்திற்குச் சென்று விடுவான். ஆனால் இந்த முறை அவன் கர்நாடகத்திற்குள்ளேயே சுற்றிக் கொண்டிருந்தான். குறிப்பாக அவனோடு எந்தவிதமான பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை என்று முதல்வர் ஜெயலலிதா திட்டவட்டமாகச் சொல்லி விட்ட பிறகு.

தமிழக முதலமைச்சரின் இந்த உறுதியான நிலைப்பாட்டைத் தொடர்ந்து, திருமதி பரிமளாவே முதலமைச்சர் ஜெயலலிதாவை நேரடியாகப் பார்த்து, தமிழக அதிரடிப்படையை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். முதலமைச்சரும் தமிழக எஸ்.டி.எ.ஃப். எல்லையைத் தாண்டாது என்று உறுதி அளித்தார்.

இந்த நெருக்கடியானது மூன்று மாதங்களுக்குப் பிறகு திடீரென்று ஒரு நாள் எதிர்பாராமல் முடிவுக்கு வந்தது.

டிசம்பர் 8 காலை நேரம். நாகப்பாவின் வீட்டில் இருந்து சிறிது தூரத்தில் ஒரு மரத்திற்கும் கம்பத்திற்கும் இடையே பேனரைப் போல வேட்டி ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதில் நாகப்பா — வீரப்பன் என்ற வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தன. உடன் ஒரு கேசட்டும் கட்டி வைக்கப்பட்டிருந்தது.

அந்த கேசட் சோகச் செய்தியைச் சுமந்து வந்திருப்பதாக விரைவில் வதந்தி பரவியது. ஆனால் வதந்தி உண்மையாக இருந்தது. செங்கடி காட்டில் நாகப்பா தங்களது கும்பலை விட்டுப் பிரிந்து விட்டதாக அதில் வீரப்பன் சொல்லி இருந்தான்.

அந்தச் சம்பவத்தை கேசட்டில் வீரப்பன் இப்படி நினைவுகூர்ந்திருந்தான்:

ஒரு கெட்ட சகுனம் தோணுச்சி. ஒரு ரத்தக்களறி நடக்கப் போகுதுன்னு கோவிந்தன்கிட்ட சொன்னேன். நாம இங்க இருந்து கௌம்பனும்னு சொன்னேன். அந்த நேரத்துல திடீர்ன்னு எங்கள சிலர் சூழ்ந்துகிட்டாங்க. ஏ.கே. 47 துப்பாக்கியால சுட்டாங்க. நிறைய துப்பாக்கி சுடுற சத்தமா கேட்டுது. ‘நாம போயிடுவோம்னு’ அந்த வயசானவர் கிட்ட சொன்னேன். அவரு பயந்து போயிருந்தாரு. அவரால நகரவே முடியல. நாங்க ரெண்டு போலீஸ்கரங்கள சுட்டோம். நாங்க ஒளிஞ்சிக்கிட்டோம். எங்களை நோக்கி கடுமையா துப்பாக்கியால சுட்டாங்க. அதுக்குப் பிறகு நான் பார்க்கும்போது நாகப்பா உருண்டுக்கிட்டு இருந்தாரு. நாங்க எங்களோட பைய அங்கேயே விட்டுட்டு ஓடினோம். நாகப்பா உயிரோட இருக்காரா செத்தாரான்னு எங்களுக்குத் தெரியாது. ஆனா பழி என்மேலதான் விழும். ஆனா எப்போதுமே

நான் கடத்தினவங்கள சந்தோஷமாத்தான் வச்சிருந்திருக்கிறேன். ராஜ்குமார் எங்கள விட்டுப் பிரிஞ்ச போது கண்ணீர் விட்டாரு. நான் நாகப்பாவுக்கு கொப்பரைத் தேங்காவும் நெய்யும் கொடுத்திருக்கேன். அவரோட குடும்பத்தைப் பத்தி அவரு எங்ககிட்ட சொன்ன போது, 'நாங்களும்தான் எங்க குடும்பத்தை விட்டுட்டு இருக்கோம். அதுக்கு போலீஸ்காரங்கதான் காரணம். இப்ப நீங்க உங்க குடும்பத்தை விட்டுட்டு இருக்கிறதுக்கும் போலீஸ்காரங்கதான் காரணம்'னு நாங்க சொன்னோம். இச்சண்டையிலதான் நாகப்பா இறந்திருப்பார்" என்று அஞ்சுவதாக வீரப்பன் கூறினான். இல்லையென்றால் தமிழ்நாடு எஸ்.டி.எஃப். அவரைக் காப்பாற்றி அதை மீடியாவில் பெரிதாகப் பேசி இருக்கும் என்றான். கடவுள் மேல சத்தியமாக நாகப்பாவை தான் கொல்லவில்லை என்று ஐந்து முறை சத்தியம் செய்தான்.

அன்றைக்கு மாலையில் நாகப்பாவின் பண்ணை வீட்டில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு பாறையில் மோதிய நிலையில் நாகப்பாவின் உடல் கிடந்தது. பிரேதப் பரிசோதனைகளும் தடயவியல் சோதனைகளும் அவர் மூன்று நாட்களுக்கு முன்பே இறந்திருக்க வேண்டும் எனத் தெரிவித்தன.

அருகாமையில் உள்ள கிராமங்களில் இருந்து பொதுமக்கள் நாகப்பாவின் பண்ணை வீட்டில் கூடினர். அரசாங்கத்தை எதிர்த்தும் போலீசை எதிர்த்தும் அவர்கள் கோஷம் எழுப்பினர். ஏடாகூடமான என்கவுன்டரை நடத்திய தமிழ்நாடு எஸ்..டி.எஃப். தான் அனைத்துக்கும் காரணம் என அவர்கள் குற்றம் சாட்டினர். எஸ்.டி.எஃப். இந்தக் குற்றச்சாட்டை வலிமையாக மறுத்தாலும் உணர்ச்சிமயமாக குற்றச்சாட்டு வைக்கும் அந்தக் கூட்டம் அதைக் காது கொடுத்துக் கேட்கும் நிலையில் இல்லை.

நாகப்பாவின் மரணச் செய்தி பரவ ஆரம்பித்த அந்த நேரத்தில், மோகன் நவாஸ் அங்குதான் இருந்தார். பிரச்சினையை உணர்ந்த அவர் மெதுவாக கூட்டத்தினர் மத்தியில் நடந்து, கொஞ்ச தூரத்தில் நின்றிருந்த தனது வாகனத்திற்குச் சென்றார். அமைதியாக அந்த இடத்தைவிட்டு செல்லுமாறு டிரைவரிடம் கூறினார். கார் கிளம்பி ஒரு சில நிமிடங்களில் கூட்டத்தில் இருந்து

காரின் மீது கற்கள் வீசப்பட்டன. தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று அடித்து நொறுக்கப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டது.

நவாஸுக்கு தொலைபேசியில் பேசிய அவரது நண்பர், நெடுஞ்சாலையில் ஆத்திரம் கொண்ட கூட்டம் கூடி நவாஸை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதாகவும் எனவே, அவர் அந்தப் பாதையைத் தவிர்க்குமாறும் அறிவுரை கூறினார்.

அன்று இரவு நவாஸ், தனது நண்பரின் வீட்டில் ஒளிந்து கொண்டிருந்தார். ஒரு சில மணி நேரங்கள் பதற்றமாக இருந்தது. கடைசியாக அதிகாலை மூன்று மணி வாக்கில் அங்கிருந்து சென்று தமிழ்நாட்டு எல்லைக்குள் நுழைந்தார்.

நாகப்பாவின் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட், அவர் 20 அடி தூரத்தில் (ஏழு மீட்டர் தொலைவில்) இருந்து சுடப்பட்டதில் ஒற்றைத் தோட்டா பாய்ந்து இறந்திருக்கிறார் என்று தெரிவித்தது. சாப்பிட்ட ஒரு மணி நேரத்தில் அவர் சுடப்பட்டிருக்க வேண்டும். அவர் சுடப்பட்ட தேதி டிசம்பர் 4 அல்லது 5 ஆக இருக்க வேண்டும். அவரது மார்பின் இடது பக்கத்தில் நுழைந்த தோட்டா, அவரது நுரையீரல் மற்றும் இதயத்தைத் துளைத்து உடனடி மரணத்திற்கு காரணமாக அமைந்துள்ளது என அந்த அறிக்கை தெரிவித்தது.

சரி, யார் அந்த புல்லட்டை ஏவியது? இந்தக் கேள்விக்கு இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. இதில் பல்வேறு சதிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

வீரப்பனுடன் தொடர்பு வைத்திருந்த சில செல்வாக்குமிக்க நபர்கள், தங்களின் தொடர்பை நாகப்பா பிடிபட்டிருந்த சமயம் தெரிந்து கொண்டிருக்கலாம் என்பதால், அவரை அச்செல்வாக்கு மிகுந்த கும்பல் அச்சத்தில் இந்தக் கொலையைச் செய்திருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

வீரப்பன் ஆட்களுக்கும் ஒரு வேட்டைக் கும்பலுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் நாகப்பா கொல்லப்பட்டதாகவும் சிலர் கூறினர். அந்த

வேட்டைக் கும்பலை எஸ்.டி.எ.ஃப். என வீரப்பன் கேங் நினைத்துக்கொண்டதால் வெடித்த மோதல் அது.

ஆனால், சந்தேகத்திற்கு இடமின்றி உண்மை நிரூபிக்கப்படவே இல்லை. ஒன்று மட்டும் நிச்சயம். வீரப்பனின் இமேஜ் கடுமையாக சேதமடைந்தது. அந்த முன்னாள் அமைச்சரின் மரணம், வீரப்பனின் சூழ்ச்சி வேலைகளுக்கான வாய்ப்புகளைச் சுருக்கியது. இப்போது அவனுக்கு வரும் உதவி மற்றும் உதவி செய்பவர்களை மிகுந்த எச்சரிக்கையுடன் கையாள வேண்டி இருந்தது.

வீரப்பன் கடத்திய ஆட்களில் மறுபடியும் பத்திரமாகத் திரும்பி வராத முதல் நபர் நாகப்பாதான். அதேபோல் வீரப்பன் பொறுப்பேற்க வேண்டிய மரணங்களில் 124—வது மரணம் நாகப்பாவுடையது.

ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கும் நாகப்பாவின் ஆதரவாளர்கள் வீரப்பனை அவனது இருப்பிடத்தை விட்டு வெளியே வரமுடியாதபடி முடக்கினர். வீரப்பன் தான் எங்கிருக்கிறோம் என்று எஸ்.டி.எ.ஃப். கண்டுபிடிக்க முடியாதவாறு தவறாக வழிநடத்த முயற்சித்தான். ஆனால் அது நீண்ட நாட்களுக்கு முடியவில்லை.

கிரகணத்தில் மறைந்திருந்த வீரப்பனை ராஜ்குமாரின் கடத்தல் சம்பவம் வெளியே கொண்டு வந்தது. தற்போதைய கடத்தல் சம்பவம் அவனது முடிவுக்கு வழிவகுத்தது.

# சர்வதேச பத்திரிகைகளில் வலம் வந்த வீரப்பன்?

இருபது ஆண்டுகளுக்குள்ளாக வீரப்பனின் சகாப்தம் சர்வதேச பரிணாமத்தைப் பெற்றிருந்தது. ஒரு குற்றவாளியால் இருபது ஆண்டுகளாக சட்டத்தில் இருந்து தப்பிக்க முடிகிறது எனும் நம்ப முடியாத கதையை, அமெரிக்காவின் ‘டைம்’ வார பத்திரிகையில் இருந்து சென்னை உள்ளூர் பத்திரிகை வரையில் எழுதின.

அனைத்துப் பத்திரிகைகளிலும் வீரப்பன் தலைப்புச் செய்தியில் இடம் பிடித்தான். ஒரு சில இந்தியப் பத்திரிகைகள், வீரப்பனை ஒசாமா பின்லேடன் மற்றும் சதாம் உசேனுக்கு இணையாக வைத்து ‘அதிகம் தேடப்படும் மூன்று பேர்’ என எழுதின. அவனது சர்வதேச முகத்திற்கு மாறாக வீரப்பன் படை இல்லாத தளபதியைப் போல இருந்தான். ஒரு சிறு படையும் ஒரு தப்பிக்கும் திட்டமும் அவனது உடனடித் தேவையாக இருந்தன.

அவனது மறைவிடத்தில் இருந்து அடுத்தடுத்து ஆடியோ டேப்புகள் வந்து கொண்டிருந்தன. ஒரு டேப்பில் ஆந்திராவில் இருக்கும் மக்கள் யுத்தக் குழுவோடு அவன் கூட்டணி வைப்பதற்கான வாய்ப்புகள் பற்றிப் பேசினான். மற்றொரு டேப்பில் அவனது மனைவி மற்றும் இரண்டு பெண் குழந்தைகளுடன் காரில் பயணம் செய்ய வேண்டும் என்ற கனவை வெளிப்படுத்தினான். மற்றொரு டேப்பில் ரஷ்யாவுக்குத் தப்பிச் செல்வதைப் பற்றிப் பேசினான். இந்தப் பேச்சையெல்லாம் கேட்டு எஸ்.டி.எஃப். ஆட்கள் விழுந்து விழுந்து சிரித்தனர்.

அவனது உள்ளார்ந்த அரசியல் ஆசை ஒரு டேப்பில் வெளிப்பட்டது. அந்த டேப்பில் அவன் கொள்ளைக்காரியாக இருந்து அரசியல்வாதியான பூலான்தேவியை ஆதரித்துப் பேசினான். பூலான்தேவி புதுடெல்லியில் அவரது எம்.பி. பங்களாவிற்கு வெளியே சுட்டுக் கொல்லப்பட்டார். 'ஆளும் அரசியல்வாதிகளைவிட பூலான்தேவி என்ன அவ்வளவு தீங்கானவரா?' என்று அவன் கேள்வி எழுப்பினான்.

ஆனால் இரண்டு முக்கியமான டேப்புகள் இரண்டு நபர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அவர்கள் முதலமைச்சர் ஜெயலலிதாவும் வால்டர் தேவாரமும். முதலமைச்சருக்கு அவன் அனுப்பிய டேப்பில், செம்மந்தி தேடுதல் வேட்டையை நடத்தியதற்காக கருணாநிதியை அவன் பத்மாசுர அரக்கனுடன் ஒப்பிட்டுக் கூறியிருந்தான். வால்டர் தேவாரத்திற்கான டேப்பில், முன்பு திட்டியதை மறக்குமாறு வேண்டியிருந்தான்.

அதிரடிப்படையில் சேருவதற்கு நான் சென்னையை விட்டுக் கிளம்பும் முன் முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்தேன். பத்திரிகைச் செய்திகளுக்கு மாறாக, என்னை அதிர்ஷ்டசாலி என்று அவர் வாழ்த்தினார். தனது முழு ஆதரவும் எனக்கு இருப்பதாக உறுதி அளித்தார்.

இதற்கு முன்பு அதிரடிப்படையில் நான் பணியாற்றிய போது, சேட்டிலைட் போனில் இருந்து பொலீரோ ஜீப்புகள் வரையில் வால்டர் தேவாரம் வைத்த கோரிக்கைகள் அனைத்தும் உடனடியாக மாநில அரசால் நிறைவேற்றப்பட்டிருந்தன என்பது எனக்கு நினைவுக்கு வந்தது.

முதலமைச்சர் நாங்கள் கேட்டதை எல்லாம் கொடுத்தபோதும், ஒருபோதும் வேலையை சீக்கிரம் முடிக்கும்படி எங்களுக்கு நெருக்கடி கொடுத்ததே இல்லை. ஒரே ஒருமுறை மட்டும் 2004 மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, சத்திய மங்கலத்தில் உள்ள எஸ்.டி.எ.ஃப். தலைமையகத்தின் அருகே, ஜெயலலிதாவைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. "வேலை எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது?" என்று மட்டும் கேட்டார்.

‘‘மும்முரமாக முயற்சித்து வருகிறோம்’’ என்று அவருக்கு நான் உறுதி அளித்தேன்.

‘சரி’ எனத் தலையசைத்த அவர் அத்துடன் அந்த விஷயத்தை விட்டுவிட்டார்.

சென்னை போலீஸ் கமிஷனராக இருந்துவிட்டு, மீண்டும் வீரப்பனைப் பிடிக்கும் அதிரடிப்படையில் எனக்கு பணி கிடைத்ததும், மீடியாவின் பசிக்கு தீனி போட்டது. என்னை காட்டுக்கு அனுப்பி விட்டார்கள் என்று ஒரு சில மீடியாக்கள் எழுதின. பத்திரிகைத்துறையிலும் காவல்துறையிலும் இருந்த எனது நலம் விரும்பிகள் பலர் என் மீது பரிதாபப்பட்டனர்.

வீரப்பனைப் பிடிப்பது அவ்வளவு சுலபமில்லை என எனக்குத் தெரியும். ஆனால், அத்தகைய சவால்கள்தான் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகின்றன. இதற்கெல்லாம் மேலாக, ஏ.சி. அறையில் உட்கார்ந்துகொண்டு தூசி படிந்த பைல்களுடன் வாழ முடியாது என்பதுதான் எனது இயல்பு.

எனது பணிகளுக்கு உறுதுணையாக இருக்கும் எனது மனைவி மீனாவும் என்னுடன் சத்தியமங்கலத்துக்கு வந்தார். எனது மகள் தனது முதுநிலைப் படிப்பைத் தொடர அவரை சென்னையிலேயே விட்டு விட்டோம். அதிர்ஷ்டவசமாக எனது மகளைப் பார்த்துக் கொள்வதாக நம்பிக்கைக்குரிய சில நண்பர்கள் ஒப்புக் கொண்டனர்.

பயணம் கிளம்புவதற்கு பேக் பண்ணிக் கொண்டிருக்கும் போது மீனா, ‘‘எட்டு வருஷம் இன்னும் உங்களுக்கு சர்வீஸ் இருக்கு. நீங்க உங்க பணியை முடிக்கிறதுக்கு நிறைய நாள் ஆனாலும் முடிச்சிடலாம். கவலைப்படாதீங்க’’ என்றார்.

‘‘வீரப்பனைப் பிடிக்கிறதுக்கு எனக்கு எட்டு வருஷம் ஆகும்னு நீ நினைக்கிற? உன்னோட நம்பிக்கைக்கு நன்றி’’ என்று சீண்டினேன்.

“வீட்டுல சொந்த செருப்பை கண்டுபிடிக்க முடியலை. உண்மையிலேயே நீங்க வீரப்பனை மட்டும் பிடிச்சுட்டீங்கன்னா அது பெரிய சாதனைதான்” என்று மீனா சுருக்கென்று பதிலளித்தார்.

அந்த பதிலை ஏற்றுக்கொள்ளவே செய்தேன். ஆனால் மீனா கேலியாகச் சொன்ன அந்த பதிலில் எனது திறமை மீது வைத்திருந்த அளவு கடந்த நம்பிக்கை மறைந்திருந்தது. ‘வீரப்பனைப் பிடிக்க, யாராலும் முடியாது’ என்று சொன்ன உறவினரிடம் மீனா மாதக்கணக்கில் பேசாமல் இருந்ததும் உண்டு.

சத்தியமங்கலத்தில் உள்ள ஒரு திருமண மண்டபம் எங்களின் எஸ்.டி.எஃப். தலைமை அலுவலகமாக மாறியிருந்தது. அந்த மண்டபத்தின் மணமகன் அறையில் இருந்து வெளியே வந்த நான் புன்னகைத்தேன். பல்வேறு நிறங்களில் இருந்த வரைபடங்கள் அனைத்துச் சுவர்களிலும் ‘பிரேம்’ செய்து மாட்டி வைக்கப்பட்டிருந்தன.

“உங்களில் பலர் 40 வயதை நெருங்கிவிட்டீர்கள். உங்களுக்கு அந்த சந்தோஷமான நாள் வரும்போது, இந்த மண்டபத்தையே நீங்க தேர்ந்தெடுக்கலாம்” என்று சொன்னேன்.

நான் சொன்னதைக் கேட்டு அங்கிருந்த அனைவரும் புன்னகைத்தனர். வீரப்பனைப் பிடிக்காமல் திருமணம் செய்து கொள்வதில்லை என்று அங்கிருந்த பலர் சபதம் மேற்கொண்டிருந்தனர். அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன் என்று அவர்கள் அறிந்திருந்தனர்.

“இந்த வேலையை நாம முடிக்கணும். தர்க்கரீதியா எவ்வளவு பெரிய ஏரியாவுல நாம தேட வேண்டியிருக்கும்?” என்று கேட்டேன். ஹுசேன் இதற்கு பதில் சொன்னார்.

“வீரப்பன் கிட்டத்தட்ட 14 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்குள் எங்கோ ஓரிடத்தில் ஒளிந்து கொண்டிருக்கலாம். அதில் கர்நாடகா மற்றும் தமிழகத்தில் தலா 6000 சதுர கிலோ மீட்டரும், கேரளாவில் 2000 சதுர கிலோ மீட்டரும் அடக்கம். அதில் பெரும்பாலான பகுதி முற்றிலும் இலையுதிர்

காடுகள் அல்லது பாதி இலையுதிர் காடுகளாக இருக்கிறது. அந்தக் காட்டுப்பகுதி முட்களும் பாறைகளும் புதர்களும் நிறைந்தது.

உதுத்தோரி ஹல்லா பள்ளத்தாக்கு போன்ற ஒரு சில இடங்களில் 10 அடிக்குக் கீழ் என்ன இருக்கிறது என்பதே தெரியாது. இது தவிர 400 சிறிய கிராமங்களும் இருக்கின்றன. அவை அனைத்தையும் நாம் ஒரே சமயத்தில் கண்காணிப்பது கடினம். ஆனால், அவற்றில் ஏதோ ஒரு இடத்தில் இருந்து வீரப்பன் அடிக்கடி உணவு பெறலாம். தங்கலாம்'' என்றார். அந்த அறையில் இருந்த மற்றவர்கள் இதை ஆமோதித்தனர்.

``நம்முடைய வழக்கமான சில நடவடிக்கைகள் தவறாக இருக்கும் என்றும் நினைக்கிறேன். நாம் பெரிய பெரிய குழுவாகச் செல்வதால், எதிரியால் அதை எளிதில் அறிந்துகொள்ள முடிகிறது. எப்போது தேடுதல் வேட்டையை திட்டமிட்டாலும், உணவுப்பொருட்களை மொத்தமாக நிறைய வாங்குகிறோம். அம்மாதிரியான நேரங்களில் வீரப்பன் தனது தெளிவான தகவல் நெட்வொர்க் மூலம் நம்முடைய திட்டத்தை எளிதாக அறிந்து கொள்கிறான்'' என்றும் ஹுசேன் கூறினார்.

``இந்த விஷயங்களில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். ரேஷன் பொருட்களைப் பெரிய அளவில் வாங்கி இங்கு இருப்பு வைக்கத் தொடங்குங்கள். ஐந்து நாட்களுக்குத் தேவையான பொருட்கள் இங்கிருந்து எடுத்துச் செல்லும் வகையில் எப்போதும் இங்கு தயாராக இருக்க வேண்டும்'' என்று சொன்ன நான், அடுத்த விஷயத்திற்குச் சென்றேன்.

``வீரப்பன் கேங்கில் இப்போது எத்தனை பேர் இருக்கின்றனர்?'' என்று கேட்டேன்.

# புதிய திட்டம்...! புதிய உற்சாகம்...!

"வீரப்பன் குழுவில் எத்தனை பேர்?"

"4 பேரிலிருந்து 6 பேர் வரையில் சார்" உடனடியாக பதில் வந்தது.

வீரப்பனுக்கு ஆதரவாளர்களும் தகவல் சொல்பவர்களும் எல்லா இடத்திலும் இருந்தாலும், அவனது குழு கைக்கடக்கமாகத் தேய்ந்து போயிருந்தது.

"நாமும் ஏன் 6 பேர் குழுவை ஏற்படுத்தக் கூடாது?" என்று கேட்டேன்.

நான் நகைச்சுவைக்காக இதைச் சொல்லவில்லை. தீவிரவாதிகள் ஒழிப்பு நடவடிக்கையில் நன்கு அறியப்பட்ட ஒரு அமெரிக்க நிபுணர் கர்னல் ஜான் மெக்கூனின் கோட்பாட்டில் இருந்து இதை நான் சொன்னேன். முதலில் எதிரியை நகலெடுப்பது. அதன்பிறகு அவனை விடச் சிறப்பாகச் செயல்படுவது என்பது அவரது கோட்பாடு.

"முதன்முதல் தேடுதல் வேட்டையின் போது, எல்.எம்.ஜி.யுடன் கூடிய 15 பேர் கொண்ட எஸ்.டி.எஃப். டீம்களைத்தான் வைத்திருந்தோம் நினைவிருக்கா சார்" என்று ஒருவர் கேட்டார்.

உண்மைதான். ஆனால் அதன்பிறகு அதைச் சுருக்கி விட்டோம். ஏனெனில் காட்டில் பெரிய டீமை மறைப்பது கடினம்.

எனக்கு உடனடியாக அமெரிக்க ராணுவ சிறப்புப் படையைக் கட்டமைத்த பிரிகேடியர் ரஸ்ஸல் டபிள்யூ. வோல்க்மான் வகுத்துக் கொடுத்த

யுத்த தந்திரம் நினைவுக்கு வந்தது. கொரில்லா போர் முறையில் முன்னணியில் இருக்கும் அதிகாரிகளில் அவரும் ஒருவர். பிலிப்பைன்சில் ஜப்பான் ராணுவம் ஊடுருவிய போது, அதை எதிர்த்த கொரில்லாப் படைக்குத் தலைமை தாங்கிய இளம் கர்னல் அவர்.

ஜப்பான் ஜெனரல் டோமோயுகி யாமஷிட்டா பின்னாளில் இதைப் பற்றிக் கூறிய போது, வழக்கமாக தான் சந்தித்த சண்டைகளில் பெரிய ராணுவம் அளித்த தொல்லையைக் காட்டிலும் அதிகமான தொல்லையை வோல்க்மானின் சிறிய கொரில்லா குழு கொடுத்தது என்றார். வோல்க்மானும் அவரது ஆட்களும் காட்டிய வீரதீர சாகசங்கள் பெரிதும் பேசப்பட்டன.

ஜப்பான் படைகள் இறுதியில் சரணடைந்தபோது, அந்த இடத்தில் வோல்க்மானும் கவுரவிக்கப்பட்டார். வோல்க்மானின் செயல்பாடுகள் சிறிய குழுக்களுக்கும் அபார சக்தி உள்ளது என்ற கருத்தை என்னை ஏற்றுக்கொள்ள வைத்திருந்தது.

கியூபா போராளிகளின் பயிற்சியாளர் ஆல்பெர்ட்டோ பயோவின் பாதையைக் கடைப்பிடிக்க முடியுமா என்று எனது வீரர்களிடம் நான் கேட்டேன். "உங்களில் பெரும்பாலான பேர் காட்டுலயே நிறைய நாட்கள் இருந்திருக்கீங்க. 15 மணி நேரம் அப்பப்ப சிறு சிறு ஓய்வெடுத்துக் கொண்டு விடாப்பிடியா உங்களால நடக்க முடியுமா?" என்று கேட்டேன்.

எளிமையான டெக்னிக்குகளைப் பயன்படுத்தி இரவில் நாம் கடினப் பயிற்சியில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தினேன். "இப்போது பயிற்சியின் போது, உங்கள் கண்களில் கர்ச்சீப்பைக் கட்டிக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பகல் இரவாகி விடும். சத்தமில்லாமல் எச்சரிக்கையாக நடக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ள உலர்ந்த இலையின் மீது நடந்து பாருங்கள்" என்றேன்.

அதிக காலம் காட்டிலேயே இருந்ததால் அந்த வாழ்க்கைக்கு பழகிப் போன வீரப்பனுக்கு எஸ்.டி.எஃப். ஈடுகொடுக்க வேண்டுமானால் இதுபோன்ற

பயிற்சிகள் தேவை. கடினமான பயிற்சி மற்றும் அளவு கடந்த கட்டுப்பாட்டின் மூலம் மட்டுமே நாம் அதை அடைய முடியும்.

“முதல்ல நாம சின்னதா சிறப்பான குழுக்களா மாறணும்” என்றேன்.

எனது வார்த்தைகள் உற்சாக விவாதத்தைக் கிளப்பியது. பல்வேறு ஆய்வுகளுக்குப் பிறகு, கடைசியாக தனது தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய ஆறு பேர் கொண்ட டீம்களாகச் செயல்படுவது எனவும் டீம் ஒவ்வொன்றும் இரவில் அணியும் கண்ணாடி உட்பட தேவையான உபகரணங்கள் என சாத்தியப்பட்ட அனைத்து வசதிகளையும் கொண்டவையாக இருக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இப்போது நிறைய டீம்கள் உருவாகி இருந்தது. தலைமைப் பொறுப்புகளும் முடிவு செய்யப்பட்டு விட்டன. ஒரு சில டீம்களுக்கு எஸ்.ஐ—,கள் தலைமை தாங்கினர். சில டீம்களுக்கு ஹெட் கான்ஸ்டபிள்கள் தலைவர்களாக இருந்தனர். ஆனால் பெரும்பாலான டீம்களில் முழுவதும் கான்ஸ்டபிள்கள் என ஒரே ரேங்க் உடையவர்கள்தான் இருந்தனர்.

காட்டிற்குள் நடக்கும் சண்டையைப் பொறுத்த வரையில் தலைமைப் பொறுப்பை யாருக்கும் திணிக்க முடியாது. காட்டில் அந்நியமான சத்தம் மற்றும் பழக்கமில்லாத இடத்தைப் பார்த்து நடுங்கக் கூடிய உறுதியற்றவர்கள் தலைவர்களாக இருந்தால், அவர்களுக்குக் கீழ் இருப்பவர்கள் மத்தியில் பீதியைத்தான் பரப்புவார்கள்.

படைப்பிரிவுகளையும் அதற்குரிய தலைவர்களையும் உருவாக்குவது அதிக கால அவகாசம் பிடிக்கும் என்பதால், ஒவ்வொரு பிரிவினரும் அவர்களுக்குரிய தலைவர்களை அவர்களே தேர்வு செய்து கொள்ளுமாறு வலியுறுத்தினோம்.

ஒரு சில டீம்களில் ஒருவர் தானே தலைமைப் பொறுப்பை ஏற்க முன்வருவதும், அதை மற்றவர்கள் ஏற்றுக் கொள்வதும் நடந்தது. வேறு சில டீம்களில் ஒருமனதாக தலைவரைத் தேர்வு செய்தனர். எனக்கு ஆச்சரியமாக

இருந்தது. அவர்கள் உணர்ச்சி பொங்கப் பேசுபவர்களை தங்களின் தலைவர்களாகத் தேர்வு செய்யவில்லை. அமைதியான, பதற்றமில்லாத, டீமை பத்திரமாக வீட்டிற்குத் திரும்பி அழைத்துச் செல்லக் கூடியவர்களைப் பார்த்துத் தேர்வு செய்தனர். நிர்வாக மேலாண்மை பாடத்தில் இது வலியுறுத்தப்படுகிறது. அழுத்தமான சூழ்நிலையில், தங்களது தலைவர் அமைதியானவராக, நம்பிக்கைக்குரியவராக, விடாப்பிடியானவராக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றனர்.

மற்றொரு முக்கியமான விஷயம் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் மன உறுதி. பல ஆண்டுகள் நடந்த பயனில்லாத தேடுதல் வேட்டை அவர்களை ஊக்கமிழக்கச் செய்திருக்கும் என்று நான் கவலைப்பட்டேன். ஆனால் அது தவறு. ஹுசேன், மோகன் நவாஸ், கருப்புசாமி, ராஜராஜன், அசோக்குமார், சம்பத் மற்றும் ராமலிங்கம் போன்ற அதிகாரிகள் வீரப்பன் தேடுதல் வேட்டையில் குறிப்பிடத்தக்க பங்காற்றி இருக்கின்றனர். மேலும் அவர்களிடம் அதிரடிப்படையில் இணைந்து முதல் நாள் பணியாற்றும் போது இருந்த அதே உற்சாகம் இப்போதும் இருக்கிறது.

எஸ்.டி.எஃப்.பில் பணியாற்ற விரும்பாத அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை உடனடியாக விடுவித்து விடுவதாக நான் அவர்களிடம் உறுதி அளித்திருந்தேன். எனக்கு உறுதியான அதிகாரிகள்தான் தேவை. நான் அளித்த உறுதிமொழி யாருக்கும் தேவைப்படவில்லை.

ஒரு சிலர் மட்டுமே காலப்போக்கில் கழன்று கொண்டனர். சிலர் சரக்கு பராமரிப்பு போன்ற, படை ஆட்களுடன் தினமும் பேச வாய்ப்பு இல்லாத வேலைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

இளம் அதிகாரிகள் பலர் சேர ஆர்வமாக இருப்பதாக எனக்குத் தெரியவந்தது. எனது ஆளெடுப்புப் பணி மிகவும் எளிமையானது. இவர்களின் கணிப்பு சரியாக இருக்கும் என்று நான் நம்பும் என் சக அதிகாரிகள் சிலரிடம் பேசுவேன், அவர்களிடம் தமிழ்நாடு போலீசில் உள்ள சிறந்த தைரியமான, திறமையான ஆட்களின் பட்டியலைக் கேட்பேன்.

ஒன்றுக்கு மேற்பட்ட பட்டியலில் ஒரே நபரின் பெயர் இடம்பெற்றிருந்தால், உடனே அவர்களின் மேலதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, அவர்களை, அதிரப்படைக்கு இடமாற்றம் செய்யச் சொல்லி கேட்டுக் கொள்வேன். இந்த முறையில் திறமையான பலரை எங்களால் பணியில் சேர்க்க முடிந்தது.

அதே சமயம் மூன்று மாதங்கள் சுழற்சி முறையில் எஸ்.ஐ.—கள் பணியாற்றும் முறையை நிறுத்திவிட்டேன். இந்தக் குறுகிய சுற்றுப்பயணத்தில் வரும் அவர்களுக்கு காட்டில் சண்டையிடுவதில் பயிற்சியிருக்காது. ஆழமான பயிற்சி அவர்களுக்குத் தேவைப்படும். பயிற்சி முடிந்து அவர்கள் வேலைக்குத் தயாராகும்போது, அவர்கள் இங்கிருந்து கிளம்ப வேண்டிய நேரம் வந்து விடும்.

இது நேரம், சக்தி, ஆற்றல் அனைத்தும் விரயமாகும் நடைமுறை என்று தெரிந்தது. இந்த நடைமுறை நிறுத்தப்பட வேண்டும் என மேலதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டேன். அதனால் எஸ்.டி.எ.ஃப். ஆட்களின் எண்ணிக்கை குறையும் அபாயம் இருந்த போதிலும் நிறுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன். குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து செல்லும் நிறைய ஆட்களைக் காட்டிலும் நிலையான ஒரு சிலர் இருந்தாலும் போதும் என்று நான் சொன்னேன். எனது இந்த அணுகுமுறையை முழு மனதோடு ஏற்றுக் கொண்டார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. அதற்கேற்ப, எஸ்.டி.எ.ஃப்.பில் பணியாற்றியவர்கள் நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தனர். புதிய திட்டத்தோடு புறப்பட்ட எங்களுக்கு புதிய உற்சாகம் பிறந்தது.

# ஏ.கே. 47 துப்பாக்கி ஏந்திய கைகளில் பைபிள்?

புதிய திட்டத்தின்படி, இறுதித் தாக்குதலுக்கான எங்களின் தயாரிப்பில் உடனடியாகக் கவனிக்க வேண்டிய மூன்று விஷயங்கள் இருந்தன.

1. ஒத்துழைப்பு
2. புலனாய்வு
3. பயிற்சி

முதலில் கர்நாடக வீரர்களுடன் எங்களின் ஒத்துழைப்பு குறித்து மதிப்பீடு செய்தேன். நான் எப்பொழுதுமே ‘கூட்டு அதிரடிப் படை’ என்ற சொல் பிரயோகத்தில் சொக்கிப் போய்விடுவதில்லை. ‘கூட்டு’ என்ற சொல் ஒத்திசைவையும் சக்தியையும் வெளிப்படுத்துவதாக இருக்கலாம். ஆனால், ‘கூட்டு’ என்ற இடம்தான் பழிபோடுவதற்கு ஏற்ற இடமாக இருக்கிறது என அழித்தல் கையேடுகள் அடித்துச் சொல்கின்றன.

கடந்த காலங்களில் இரு மாநில வீரர்களும் ஒருவருக்கொருவர் தெரியாமல் மற்றவர்களின் பதுங்குமிடத்திற்குச் சென்றிருக்கின்றனர். ஒருமுறை அதிரடிப்படை வீரர்கள் சிலர் காவிரியில் பரிசலில் சென்று கொண்டிருந்தபோது, அவர்கள் மீது மற்றொரு அணியினர் துப்பாக்கிகளால் சுட்ட சம்பவம் நடந்தது. அப்போது பரிசலில் சென்ற வீரர்கள் காவிரியில் குதித்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர்.

உளவு சொல்லும் ஆட்களை கையில் எடுப்பதில் போட்டி மற்றும் தமிழ்நாட்டு எல்லைக்குள் பிதாரி நடத்திய துணிச்சலான தேடுதல் வேட்டை போன்றவை இரண்டு அதிரடிப்படையினரிடையே அவ்வப்போது மோதல் வருவதற்குக் காரணமாக அமைந்தன. கொளத்தூர் மணியை கர்நாடக படையினர் கைது செய்தது பிரச்சினையை அதிகரிக்கத்தான் செய்தது.

தமிழ்நாடு அதிரடிப்படையின் கண்காணிப்பு வளையத்தில் இருந்த மணி கைது செய்யப்பட்டதால், அவரிடம் இருந்து முக்கியமான தகவல்களைச் சேகரிப்பதற்கான நம்பிக்கை முற்றிலும் முடிந்து போய்விட்டது.

இரண்டு அதிரடிப்படைகளும் இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவில் நெருக்கமாக இணைந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது என்பது தெளிவு. கர்நாடக அதிரடிப்படை ஐ.ஜி.யான பி.ஜி. ஜோதிப்ரகாஷ் மிர்ஜியுடன் ஒரு டஜன் மீட்டிங் போட்டுப் பேசினேன்.

இரு தரப்புக்கும் இடையில் உள்ள பல பிரச்சினைகளை ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் தீர்ப்பது என்றும் இரு படையினரும் இணைந்து தேடுதல் வேட்டை மற்றும் முகாம்களை அமைப்பது என்றும் முடிவு செய்தோம். இதன் விளைவு வீரப்பனை ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் முடங்கச் செய்தது.

இரண்டாவதாக நான் எடுத்துக்கொண்ட விஷயம் உளவுத் தகவல்களும் இன்ஃபார்மர்களும். அவர்களுக்குத் தர வேண்டிய பழைய பாக்கிகளைத் தீர்ப்பதை உறுதி செய்தோம். கர்னல் வோன் கிளாஸ்விட்ஸ்சின் ‘யுத்தத்தின் பணம் ரத்தம்’ எனும் மேற்கோளைப் போல, ‘புலனாய்வின் ரத்தம் பணம்தான்’ என்று புதிய மேற்கோளை உருவாக்கினேன்.

எந்த ஒரு போலீஸ் படையிலும் 80 சதவிகிதம் பேர் கான்ஸ்டபிள்கள்தான். எனவே, தகவல் மற்றும் இன்ஃபார்மர்களை உருவாக்கும் திறனை கான்ஸ்டபிள்களுக்கு வளர்க்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்தினேன். கடைசியாக ஒரு கான்ஸ்டபிளின் தனிப்பட்ட

இன்ஃபார்மர் கொடுத்த தகவல்தான் முக்கியமான திருப்புமுனையை ஏற்படுத்தியது.

உள்ளூர் பொதுமக்களின் மனதைக் கவரவும் அன்பைப் பெறவும் அதிரடிப்படையில் உள்ள அனைவரும் முயற்சிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினேன். இந்த விஷயத்தில் நமக்கு முன்பு அதிரடிப்படை தலைவராக இருந்த நட்ராஜ் மேற்கொண்ட பணியை நாம் வலுப்படுத்த வேண்டும் என்று கூறினேன். “அவர்களுக்கு நண்பர்களாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பகைவர்களாக மாறாமலாவது இருக்க வேண்டும்” என்று திரும்பத் திரும்பக் கூறினேன்.

வீரப்பன் கேங்கிற்கு வெளியில் இருப்பவர்கள் ஆசையிலோ அச்சத்திலோ அவனுக்கு செய்யும் உதவிகள் இல்லாமல் அவனால் வாழ முடியாது. எனவே அந்த மக்களை வெற்றிகொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. இதற்காக கிராமங்களில் மருத்துவ முகாம்கள் உட்பட விரிவான பல திட்டங்களை அமல்படுத்தினோம்.

பல ஆண்டுகளில் ஒரு சிறந்த மருத்துவர் அந்த மக்களைப் பரிசோதிப்பது அதுதான் முதல்முறையாக இருந்தது. இது தவிர இன்ஸ்பெக்டர் தர்மராஜ் போன்ற ஆன்மிக டாக்டர்களும் இருந்தனர். ஒரு காலத்தில் வீரப்பன் கேங் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த மார்தெள்ளி கிராம மக்களை கையில் ஏ.கே. 47 துப்பாக்கிக்குப் பதில் பைபிள் கொண்டு சென்று கவர்ந்தனர்.

அந்த ஏழை கிராம மக்களிடம் வீரப்பனைப் பிடித்துத் தந்தால் 5 கோடி ரூபாய் பரிசு தருவதாகவும் அறிவித்தோம். ஆனால், அன்றாட சோற்றுக்கு அல்லாடும் அவர்களுக்கு அவ்வளவு பெரிய தொகை பற்றி பெரிதாக ஒன்றும் தெரியவில்லை.

“அந்தப் பணத்தை வைத்து எத்தனை ஆடுகள் வாங்கலாம்?” என்று ஒரு கிராமவாசி கேட்டார்.

ஒரு ஆடு 2,500 ரூபாய் என்றால், அதுபோல 20 ஆயிரம் மடங்கு பணம் என்று கூறினேன்.

"அவ்வளவு ஆட்டை வைத்து நான் என்ன செய்ய? இப்படி சமாளிக்க முடியாத பரிசைத் தர்றதுக்கு ஒருத்தரோட உயிரைப் பாதுகாக்கலாம். அந்தப் பணத்தை நாங்க அனுபவிக்கக்கூட முடியாது" என்றார் அவர். அவரோட நேர்மையான பதிலைக் கேட்டு என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. அதே சமயத்தில் எங்களுக்கு எதிரில் உள்ள சவால்களையும் அது வெளிக்காட்டியது.

மூன்றாவதாக நான் எதிர்கொண்ட விஷயம் பயிற்சி. ரோசி பள்ளியில் நான் இருந்தபோது, ஆல்ப்ஸ் மலைகளை மூச்சு முட்ட ஏறிய அனுபவமும், என்னுடைய பிற பதவிகள் கொடுத்த அனுபவமும் எனக்கு கைகொடுத்தன. அதைக்கொண்டு கடினமான பயிற்சிகளை எங்கள் டீமுக்கு உருவாக்கினேன். சத்தியமங்கலம் காடுகளில் எப்படி நம்மைப் பாதுகாத்துக் கொள்வது என்பதற்கான வழிகாட்டுதல்களை, இலங்கையிலும் ஜம்முகாஷ்மீரிலும் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் வழங்க 9 பாராசூட் ரெஜிமென்ட்டைச் சேர்ந்த எனது பழைய நண்பர் கர்னல் பிரிட்டோவையும் உதவிக்கு அழைத்தேன்.

எனது ஆட்கள் மிகக் கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டார்கள். 'ஒரு நிமிட மேனேஜர்' சீரியல் தாக்கத்தில் நான் உருவாக்கிய 'ஒரு நிமிட ட்ரில்' உத்தி மிகுந்த பயனைத் தந்தது.

நான் சிறுவனாக இருந்தபோது, தமிழக காவல்துறையின் நூற்றாண்டு அணிவகுப்பை வாய்பிளந்து பார்த்திருக்கிறேன். அதில் உதாரணமாக போலீஸ்காரர்கள் முழு அணிவகுப்பு சீருடையில் இருந்து வெறும் பனியன், டிராயர் உடைக்கு மாறுவார்கள். அதேசமயம் பேண்டு வாத்தியத்தை இசைத்துக் கொண்டே 100 மீட்டரை ஓடிக் கடந்து பிரமிக்க வைப்பார்கள். இவை அனைத்தும் ஒரே நிமிடத்தில் நடந்து முடியும்.

வேகம், துல்லியம் மற்றும் மன அழுத்த மேலாண்மைப் பயிற்சியாக அதை மாற்றி அமைத்தேன். இந்த ஐடியா, எஸ்.டி.எஃப். ஆட்கள் எப்போதும்

விழிப்போடு இருப்பதை உறுதி செய்தது. நகர்ப்பகுதி மற்றும் காட்டுப்பகுதியில் பயிற்சிகள் நடந்தன. அவற்றில் ஒரு சில பயிற்சிகள் வேடிக்கைக்காக மட்டுமே வடிவமைக்கப்பட்டிருந்தன. ஒரு விஷயம் தெளிவு. எந்தப் பயிற்சியாக இருந்தாலும் குறுகிய நேரத்திற்குள் முடிக்க வேண்டும். அந்த அவகாசம் எப்போதும் 60 வினாடிகளாக இருப்பதில்லை.

ஆயுதங்களைக் கழற்றி பின் பொருத்துவது போன்ற ஒரு சில பயிற்சிகள் குறைந்த அளவு நேரமே எடுத்துக் கொள்ளும். ஒரு குறிப்பிட்ட தூரம் வரையில் ஒருவரைத் தூக்கிக் கொண்டு ஓடுவது, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து திடீரென்று விழித்து சண்டைக்குத் தயாராவது, 303 அல்லது ஒரு எஸ்.எல்.ஆர். துப்பாக்கியில் இருந்து 20 ரவுண்ட் சுடுவது போன்ற பயிற்சிகளுக்கு அவகாசம் ஒரு நிமிடத்திற்குள். இந்தப் பயிற்சிகள் வழக்கமான பயிற்சிகள் அளிக்கும் சலிப்பை உடைத்தன. வியர்வை ஊற்றிக் கொண்டிருந்தாலும் ஒருவர்கூட பயிற்சியை எதிர்க்கவில்லை.

அதிரடிப்படையின் பணியை முடித்துவிட்டு, நான் வெளியே வந்த பிறகு, அந்த ஒரு நிமிடப் பயிற்சி காவல்துறை மற்றும் துணை ராணுவப் படையினர் மத்தியிலும் வைரலாகப் பரவியிருந்ததைப் பார்த்தேன். இந்தப் பயிற்சியை அவர்கள் மேற்கொண்டதோடு அதை மேம்படுத்தவும் செய்தனர். ஒருவேளை அந்தத் துறைகளில் பணியமர்த்தப்பட்ட எஸ்.டி.எஃப். ஆட்கள் இந்தப் பயிற்சியை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்கலாம். அல்லது அவர்களே தங்களுடைய சொந்த அனுபவத்தில் இந்த ஐடியாவுக்கு வந்திருக்கலாம்.

2003—ம் ஆண்டின் இறுதியில் எஸ்.டி.எஃப். வீரர்கள் கடுமையான பயிற்சி செய்து கொண்டிருந்தனர்.

2004—ம் ஆண்டு பிறந்தது. தட்டாக்கரையில் உள்ள எஸ்.டி.எஃப். நினைவிடத்தில் கூடிய நாங்கள், எங்களின் பணியை முடிக்கும் வரையில் ஓய்வே எடுப்பதில்லை என சபதம் மேற்கொண்டோம்.

ஆனால், அந்தப் புதிய ஆண்டு முடிவதற்குள் எங்களின் பணி முடிந்துவிடும் என்று அப்போது எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

## ஊட்டி கெஸ்ட் அவுசில் முத்துலட்சுமி — வீரப்பன் சந்திக்கும் திட்டம்!

“சார், இதுவரைக்கும் நாம என்ன தப்பு செஞ்சிக்கிட்டு இருந்திருக்கோம்னு உங்களுக்குத் தெரியுதா சார்?” — கர்நாடக எஸ்.டி.எஃ.பில் இருந்து அப்போதுதான் விடுவிக்கப்பட்ட அந்த அதிகாரி கேட்டார்.

எம்.எம். ஹில்ஸ்சில் அவருக்கு பிரிவு உபசார விழாவின்போது, சாப்பிட்டபடியே அவருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவரிடம் சொல்வதற்கு சில விஷயங்களை நான் நினைத்திருக்கலாம். ஆனால் அவர் மனதில் ஒரு சில விஷயங்களை வைத்திருந்தார். அதைக் கேட்க காத்திருந்தேன்.

“காட்டுக்குள்ள பல வருடங்களா நாம வீரப்பனைப் பிடிக்க முயற்சி செஞ்சிக்கிட்டு இருக்கோம். அவனோ தண்ணிக்குள்ள முதலையைப் போல காட்டுக்குள்ள கச்சிதமா ஒளிஞ்சிக்கிட்டு இருக்கான். நாம பலமா இருக்கிற ஏரியாவுக்கு அவன இழுத்துட்டு வரணும். அவனோட மனைவி முத்துலட்சுமி சேலத்துல வசதியா செட்டிலாயிட்டா. முத்து லட்சுமியை அங்க இருந்து வெளியேத்த முயற்சிக்கலாம். அப்போது நிச்சயம் வீரப்பன் கேங்கோட தொடர்புகொள்ள முத்துலட்சுமி முயற்சிப்பார். அல்லது அந்த கேங், முத்துலட்சுமியைத் தொடர்புகொள்ள முயற்சிக்கலாம்” என்று அவர் பரிந்துரைத்தார்.

நானும் கண்ணணும் மறுபடியும் பாலாறு செக்போஸ்ட்டுக்கு வந்தோம். கர்நாடக அதிகாரி சொன்ன ஆலோசனையைப் பற்றி பரிசீலித்தோம். அடுத்த சில நாட்களில் அந்த யோசனை, ஒரு ஆபரேஷனாகப் பரிணமித்தது. எங்களின் திட்டப்படி ஊட்டியில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தில் அந்த

ஆபரேஷனின் இறுதிக்கட்டம் நிகழும். அந்த ஆபரேஷனுக்கு பிரபலமான போஸ்டன் டீ பார்ட்டியின் நினைவாக போஸ்டன் என்ற சங்கேதப் பெயரை வைத்தோம்.

"நாம் சிறு குழுக்களாகப் பரவி இருக்கிறோம். வீரப்பன் காட்டைவிட்டு வெளியே வந்தால் நன்றாக இருக்கும்" என்றார் கண்ணன்.

"வீரப்பனுக்கு கண்ணுல ஒரு பிரச்சினை இருக்கு. பல வருடங்களா அவன் அவனோட குடும்பத்தினரைப் பார்க்கல. முத்துலட்சுமி அவனுக்கு ஒரு தகவல் அனுப்பிச்சா, அவன் ரிஸ்க் எடுத்து வெளியே வந்து சிகிச்சை பெற முயற்சிக்கலாம்" என்று சொன்னேன்.

"அவன் சேலம் வரமாட்டான். அது வேற இடமா இருக்கணும். முத்துலட்சுமி தான் பாதுகாப்பாத்தான் இருக்கிறதா, நாம உணர வைக்கணும்" என்று கண்ணன் பதில் சொன்னார்.

"முத்துலட்சுமிக்கு யாரையாவது நம்மளால நட்பா ஆக்க முடியாதா? முத்துலட்சுமியோட பழக ஒரு பெண் போலீசை மாறுவேடத்துல அனுப்பிச்சா எப்படி இருக்கும்?" என்று கேட்டேன்.

"எனக்கு ஒரு போலீஸ் அல்லாத பெண்மணியைத் தெரியும். அவர் நமக்கு உதவ விரும்பலாம்" என்றார் கண்ணன்.

திட்டம் ஒரு வடிவத்திற்கு வர ஆரம்பித்தது. நானும் கண்ணனும் உற்சாகமானோம். ஆனால் அதை வெற்றிகரமாக முடிப்பதற்கு நிறைய விஷயங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதையும் அறிந்திருந்தோம். குறிப்பாக முத்துலட்சுமிக்கு ஆபத்து எதுவும் வராமல் பாதுகாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம்.

வீரப்பனை நாங்கள் தீவிரமாக விரட்டிக் கொண்டிருந்தபோது, முதன்முதலாக முத்துலட்சுமி கர்நாடக அதிரடிப்படை காவலில் வைக்கப்பட்டார். பின்னர் ஒரு சில வாரங்களில், அவர் தமிழ்நாடு அதிரடிப்படைக்கு மாற்றப்பட்டார். அவர் கைது செய்யப்படவில்லை. ஆனால்

கண்காணிப்பில் வைக்கப்பட்டார். ராஜ்குமார் விடுவிப்புக்குப் பிறகு, அவர் டி.எஸ்.பி. ராமலிங்கத்தின் கண்காணிப்பில் வைக்கப்பட்டார். கொஞ்ச நாள் மேட்டூர் மேச்சேரியில் இருந்தார். பிறகு, சேலத்திற்கு இடம் மாறினார்.

முதல் வேலையாக சேலத்தில் இருந்து நாங்கள் தேர்வு செய்யும் இடத்திற்கு அவரை இடமாற்றம் செய்ய வேண்டியிருந்தது. டி.எஸ்.பி. ராமலிங்கம் அந்த நேரத்தில் வெளி வேலையாக வேறு இடத்தில் இருந்தார். ஆனால் முத்துலட்சுமி டி.எஸ்.பி. அசோக்குமார் மீதும் நல்ல நம்பிக்கை வைத்திருந்தார். முத்துலட்சுமியை வெளியே கொண்டு வரும் வேலை அசோக்குமாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

முத்துலட்சுமி ஒரு போன் செய்வதற்காக, வீட்டிற்கு அருகில் உள்ள கடைக்குச் சென்றார். அப்போது கர்நாடக பதிவு எண் கொண்ட ஜீப் நின்றதைப் பார்த்தார். அதில் சாதாரண உடை அணிந்த நான்கு பேர் இருந்தனர். அவர்கள் முடியை ஒட்ட வெட்டி இருந்தனர். அவர்களில் யாருக்கும் 40 வயதுக்கு மேல் இருக்காது. முத்துலட்சுமி பீதியுடன் வீட்டை நோக்கி விரைந்தார்.

இரண்டு நாள் கழித்து அதே ஜீப் அந்தத் தெரு முனையில் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தார். வீரப்பன் மனைவி என்ற அடிப்படையில் நிறைய வழக்குகளில் முத்துலட்சுமி பெயர் இருந்தது. கர்நாடக நீதிமன்றம் ஒன்று அவர் மீது வாரண்ட் பிறப்பித்திருந்ததையும் தமிழ் பேப்பர்களில் படித்திருந்தார்.

‘‘அவங்க நம்மளத் தேடித்தான் வந்திருக்காங்க. திரும்பவும் நம்மள அவங்க கூட்டிட்டுப் போக விடக்கூடாது’’ என்று அவர் சிந்தித்தார்.

அந்தப் பதற்றத்தில், ராமலிங்கத்தை போனில் தொடர்புகொள்ள முயற்சித்தார். ஆனால் அவரது போன் தொடர்பு எல்லைக்கு வெளியே இருந்தது.

கொஞ்ச நேரத்தில் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

“யாரது?” நடுக்கத்தில் இருந்து தனது குரலைப் பாதுகாத்தவாறு கேட்டாள்.

“நான்தான் அசோக்குமார்!”

அது பழக்கமான குரல். கதவைத் திறந்தார். “சார்... என்னைக் காப்பாத்துங்க” என்று கெஞ்சினார் முத்துலட்சுமி.

“கவலைப்படாதே. உன்னை பாதுகாப்பான ஒரு இடத்துக்குக் கூட்டிட்டுப் போறேன். ஆனா, நான் என்னை அடையாளம் காட்டிக்க முடியாது. நான் உன்னோட பிரதர் சங்கர். இப்பதான் வளைகுடா நாட்டில இருந்து உன்னைப் பார்க்க வந்திருக்கேன். உனக்கு ஒரு வீடு பார்த்து தங்க வைக்கிறதுக்காக போறோம். சீக்கிரம் கிளம்பு. அவசியமான பொருட்களை மட்டும் எடுத்துக்கோ. இப்ப கிளம்புனா அவ்வளவுதான். பிறகு இங்க திரும்ப வரமாட்டோம்” என்று அசோக்குமார் சொன்னார்.

அவர்கள் இருவரும் சேலத்தில் இருந்து ஈரோடு சென்று பின்னர் திருப்பூர் சென்றனர். அங்கு எஸ்.டி.எஃப்.பின் புலனாய்வுப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த வீடுகளுக்குச் சென்றனர். ஒவ்வொரு வீட்டிலும் அசோக்குமார், அந்த வீட்டு உரிமையாளர்களிடம் வீடு வாடகைக்குக் கேட்பது போல பேரம் பேசுவதும் கெஞ்சுவதுமாக நன்றாக நடித்தார். முத்துலட்சுமி ஜீப்பில் காத்திருந்தார்.

ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் (அவர்கள் அனைவருமே சாதாரண உடையில் இருந்த எஸ்.டி.எஃப். ஆட்கள்) வீடு தரமாட்டேன் என்று மறுத்தார்கள். அந்த நாளின் முடிவில் கடைசியாக அவர்கள் கோவையின் புறநகர் பகுதியான வடவள்ளி போய்ச் சேர்ந்தனர். முத்துலட்சுமி மிகுந்த வேதனையில் இருந்தார்.

“கடைசியா இங்க ஒரு தரம் முயற்சி செஞ்சு பாத்துடுவோம்” ஒரு டுலெட் போர்டைக் காட்டி அசோக்குமார் கூறினார். ஒரு அம்மா, மகள் (எங்கள் இன்ஃபார்மர் ரம்யா), பாட்டி என அந்த வீட்டில் அனைவரும் பெண்கள்தான் இருந்தனர்.

முத்துலட்சுமி அந்த வீட்டைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார். அந்த நாள் முழுவதும் கடுமையான பல சோதனைகளுக்குப் பின்னர் கடைசியாக ஒரு வீடு கிடைத்தது மகிழ்ச்சியாக இருந்தது. பல வருடங்களாகத் தனியாக வசித்த முத்துலட்சுமிக்கு, தன்னைவிட பத்து வயது இளையவளைப் போலத் தோற்றமளித்த ரம்யாவின் பழக்கம், ஒரு வரவேற்கத்தக்க மாற்றமாக இருந்தது.

சில நாட்களிலேயே, முத்துலட்சுமி அந்த வீட்டில் முழுமையாகக் குடியேறி விட்டார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட அசோக்குமார், விடை பெற்றார். அங்கிருந்து ஜீப்பில் கிளம்பிய அவர் உடனடியாக கண்ணனைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

பிப்ரவரி 2004

ரம்யா எங்கள் எதிர்பார்ப்பை எல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விட்டார். வெகு விரைவிலேயே முத்துலட்சுமியின் தோழியாகி, பியூட்டி பார்லருக்கே அழைத்துச் சென்று விட்டார் ரம்யா. வாழ்க்கையிலேயே முதல்முறையாக அப்போதுதான் பியூட்டி பார்லருக்குப் போனார் முத்துலட்சுமி. பல ஆண்டுகள் மன அழுத்தத்திலேயே இருந்த முத்து லட்சுமிக்கு, வடவள்ளி நிம்மதியாக இருந்தது. விரைவிலேயே ரம்யாவுடன் நாள் முழுவதும் அரட்டை அடிக்க ஆரம்பித்து விட்டார் முத்துலட்சுமி.

இரவில் மார்க்கெட்டுக்குப் போவது போலப் போய், கண்ணனைச் சந்தித்து அன்றாடம் நடந்ததை அவரிடம் சொல்வார் ரம்யா.

குடும்ப டிரைவரைப் போல வேடம் போட்டிருந்த எஸ்.டி.எஃப். வீரர் ஒருவர் முத்துலட்சுமியின் நடவடிக்கைகளைக் கண்காணித்தார். அதேசமயம் முத்துலட்சுமியின் தனிப்பட்ட விஷயங்களில் தலையிடக் கூடாது என்று அவருக்கு கண்டிப்பான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆபரேஷனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல முடிவு செய்தோம். முத்துலட்சுமியிடம் வீரப்பனைக் கொண்டு வருவதற்கு, ஒரு

ஜனசந்தடி இல்லாத இடத்திற்கு முத்துலட்சுமியைக் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. வீரப்பன் ரிஸ்க் எடுத்து கோவை வருவதற்கு வாய்ப்பே இல்லை.

அதற்குப் பொருத்தமான ஒரு இடத்தையும் நாங்கள் கண்டுபிடித்தோம். ஊட்டியில் இருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தில் உள்ள ஒரு கெஸ்ட் ஹவுஸ்தான் அது. இயற்கை எழில் சூழ்ந்த இடம். மிக முக்கியமாக எங்கள் பார்வையில் அது முற்றிலும் தனியாக இருந்தது. இதுதான் அந்த போஸ்டன் எஸ்டேட். அங்கு எஸ்டேட்டைப் பார்த்துக் கொள்ளும் சமையல்காரர் என்ற போர்வையில் ஒரு எஸ்.டி.எஃப். ஆளை நியமித்தோம்.

ஒரு நாள் ரம்யாவும் முத்துலட்சுமியும் அங்கு சென்றனர்.

# முத்துலட்சுமியின் தோழியாக நடித்தவருக்கு ஏற்பட்ட பயம்?

ஊட்டி டீ எஸ்டேட் கெஸ்ட் ஹவுஸை பார்த்ததும் முத்துலட்சுமிக்கு பல ஆசைகள் பிறந்தன.

“இந்த இடம் ரொம்ப அழகா இருக்கு. யாரோட இடம் இது?” என்று முத்துலட்சுமி கேட்டார்.

ரம்யா ஒரு பெரும் பணக்காரியைப் போன்ற பாவனையைக் காண்பித்தார். “இந்த வீடும் இதைச் சுத்தி இருக்கிற எஸ்டேட்டும் எங்க குடும்பத்துக்குச் சொந்தமானதுதான். நான் அடிக்கடி இங்க வருவேன்” என்றாள்.

அந்த சமையல்காரர் முத்துலட்சுமிக்கு எஸ்டேட்டை சுற்றிக் காட்டினார். அந்த எஸ்டேட் பரப்பளவு 20 ஏக்கர்தான். ஆனால் கொஞ்ச தூரத்தில் உள்ள ஒரு நீர்வீழ்ச்சி வரைக்கும் விரிவுபடுத்தி நம்முடையதுதான் என உற்சாகத்துடன் உரிமை கொண்டாடினார் அந்த சமையல்காரர்.

கடைசியாக அந்த எஸ்டேட் பகுதியிலிருந்து பார்த்தபோது திம்பம் மலைப்பகுதி தென்பட்டது. முத்துலட்சுமியால் அந்த இடத்தை அடையாளம் காண முடிந்திருக்கும். அவரது மனம் பழைய நினைவுகளால் நிரம்பியது. எஸ்.டி.எஃப். வேட்டையின் போது, இங்குதான் தனது கணவரைப் பிரிந்தார். கெஸ்ட் ஹவுஸ் திரும்பும் போது வருத்தமான மனநிலையில் இருந்தார் முத்துலட்சுமி.

ஒருபுறம் முத்துலட்சுமி ரம்யாவுடன் நெருக்கமாகிக் கொண்டிருக்க, மற்றொருபுறம் எஸ்.டி.எஃப். ஆட்கள், முத்துலட்சுமியுடன் இரண்டாவது மகள்

பிரபாவைச் சேர்த்து வைக்க சத்தமில்லாமல் வேலை செய்து கொண்டிருந்தனர்.

பிரபா பிறந்த உடனேயே, குழந்தையைத் தனது பெற்றோரிடம் விட்டுவிட்டு காட்டுக்குத் திரும்பியிருந்தார் முத்துலட்சுமி. பிறகு பிரபாவை ஒரு தெலுங்கு தம்பதியிடம் எஸ்.டி.எஃப். கொடுத்திருந்தது. அவர்கள் பிரபாவை வளர்த்தனர். அவள் மீது மிகுந்த பிரியமாக இருந்த அந்தத் தம்பதியினர் பிரபாவை பிரியத் தயங்கினர். பின்னர் டி.எஸ்.பி. ராமலிங்கம்தான் பிரபாவை அவளது அம்மாவிடம் மீண்டும் சேர்க்க வேண்டும் என்று அவர்களிடம் பேசி சம்மதிக்க வைத்தார். முதல் மகள் வித்யா ஒரு போர்டிங் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்

முத்துலட்சுமி தான் யார் என்பதை ரம்யாவிடம் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் பிப்ரவரி 26—ம் தேதி, ஒரு இனிமையான நாளில், அந்த நீர்வீழ்ச்சிக்கு பிக்னிக் சென்ற போது, தனது மனதில் இருந்ததை வெளியே கொட்டி விட்டார் முத்துலட்சுமி.

“நீ எனக்கு நெருங்கிய தோழியாயிட்ட. என்னைப் பத்தி நான் உன்னிடம் உண்மையைச் சொல்ல விரும்புறேன். ஆனா, அதை நான் சொன்னதுக்கு அப்புறம் நம்மோட உறவு முறிந்துவிடுமோன்னு பயமா இருக்கு” என்ற முத்துலட்சுமி கண்களில் கண்ணீர் வழிய தயங்கித் தயங்கிச் சொன்னார்.

“நான் ஒரு பிரபலமான ஆளோட மனைவி. அவரை போலீஸ் தேடிக்கிட்டு இருக்கு!”

“என்ன சொல்ற நீ” அந்தச் சூழ்நிலைக்குப் பொருத்தமான அதிர்ச்சியை வெளிப்படுத்திய ரம்யா ஆச்சரியப்பட்டார்.

“நான் சொல்றதைக் கேட்டு முடிக்கிறதுக்குள்ள என்னைப் பத்தி ஒரு முடிவுக்கு வந்துடாதே” என்று முத்துலட்சுமி கெஞ்சினர்.

வீரப்பனுடன் திருமணம் எப்படி முடிந்தது, அதற்குப் பிறகு நடந்தது என அனைத்துக் கதையையும் விவரித்தார். தனது கதையை முடித்த பிறகு, முத்துலட்சுமி கண்களில் வழிந்த கண்ணீரை ரம்யா துடைத்து விட்டார்.

ஆரத் தழுவியபடியே, ‘‘எவ்வளவு கஷ்டத்தைக் கடந்து வந்திருக்கிற. கவலைப்படாத. நீ எவ்வளவு நாள் விரும்புறயோ அவ்வளவு நாள் எங்களோட இருக்கலாம்’’ என்றார் ரம்யா.

இந்த உரையாடல் முடிந்த அடுத்த சில நிமிடங்களில், கண்ணனுக்கு விவரம் வந்து சேர்ந்தது. அவர் எனக்குத் தகவல் சொன்னார். இறுதி விளையாட்டை ஆரம்பிக்க வேண்டிய நேரம் இது.

ரம்யாவிடம் சுருக்கமாக அனைத்தையும் விளக்கினோம். இந்தக் கட்டத்தில் ரம்யா பீதியடைந்தார். ‘‘ஒரு என்கவுண்டரில் நான் ஈடுபட விரும்பவில்லை’’ என்றார் ரம்யா. என்கவுண்டர் என்ற வார்த்தையை ரம்யா சொன்ன போது அவரது குரல் உடைந்திருந்தது.

‘‘அவ்வளவு எக்ஸ்ட்ரீம் ஆக்ஷன் எதுவும் இருக்காது. வீரப்பனை உயிரோடு பிடிப்பதுதான் எங்களோட நோக்கம்’’ கண்ணன் உடனடியாக உறுதி அளித்தார்.

அடுத்த நாள் முத்துலட்சுமி வீரப்பனைப் பற்றிய பேச்சை எடுக்கும்போது, ரம்யா அதற்கே தயாராக இருந்ததைப் போலப் பேச ஆரம்பித்தார்.

‘‘நான் நைட்டுப் பூராவும் யோசித்துப் பார்த்தேன். உன்னோட வீட்டுக்காரருக்கு கண் மருத்துவம் பார்க்கணும்னு சொன்ன இல்லையா? எனக்கு ஒரு டாக்டரைத் தெரியும். அவரு அதைப் பார்ப்பாரு. கேள்வியும் கேட்க மாட்டாரு. அது தவிர அவரும் பிரபாவை இன்னும் பார்க்கலை இல்லையா? நீ ஏன் அவரை வரச் சொல்லக் கூடாது? இது மூலமாக பிரபாவையும் அவர் பார்க்கலாம்’’ என்றார் ரம்யா.

முத்துலட்சுமி இதைக் கேட்டு உற்சாகமானார். இந்த ஐடியாவை வீரப்பனிடம் சொல்வதாகவும் கூறினார். ரம்யா இத்தகவலைச் சொன்னதும், அதற்கான தயாரிப்பு வேலைகளில் ஆர்வத்துடன் இறங்கினோம்.

சில நாட்களுக்குப் பிறகு முத்துலட்சுமியும் ரம்யாவும் ஊட்டியிலிருந்து கோவைக்குத் திரும்பினர். அவர்கள் இல்லாத போது இன்ஸ்பெக்டர் உமாபதி,

அதிரடிப்படையில் அல்ட்ரா என்று அறியப்படுபவர் ஒரு செயலில் இறங்கினார். எலக்ட்ரானிக்ஸ் துறையில் நிபுணர். அந்த வீட்டிற்கு வெளியே அங்கு வரும் சந்தேகத்திற்குரிய நபர்களைக் கண்காணிக்க கேமராவைப் பொருத்தினார். கேமராவில் பதிவாகும் காட்சிகளைப் பார்ப்பதற்கு அந்த கெஸ்ட் அவுஸ் அருகிலேயே மற்றொரு மறைவிடத்தில் அவர் இருந்தார்.

தளவாடங்களைக் கையாளும் அந்த இன்ஸ்பெக்டர், ஒரு மகேந்திரா ஜீப்பையும் ஒரு இண்டிகாவையும் வாடகைக்கு அமர்த்தினார். நானும் கண்ணனும் அந்த ஜீப்பில் கோத்தகிரி வரையில் சென்றோம். பிறகு இண்டிகாவில் கெஸ்ட் ஹவுஸுக்குச் சென்றோம். போலீஸ் வாசனையே இருக்கக் கூடாது என்பதால், அலுவலக வாகனம் எதையும் பயன்படுத்தக் கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையாக இருந்தோம்.

அந்த கெஸ்ட் ஹவுஸில் ஒரு பரண் இருந்தது. கூரையில் இருந்த ஒரு திறப்பு மூலம் அந்த பரணுக்குச் சென்றுவிட முடியும். ‘வீரப்பன் அறைக்குள் இருக்கும்போது, ஒரு கிரனேடை தூக்கி உள்ளே போட்டு அவனை அதிர்ச்சியடைய வைக்க இது மிகவும் கைகொடுக்கும்’ என்று குறித்துக் கொண்டேன்.

அனைத்து ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கும்போது, திடீரென்று ஒரு சிக்கல் வந்தது. டிரைவராக நியமிக்கப்பட்டிருந்த எஸ்.டி.எஃப். வீரர் அந்த வேலையை விட்டுவிட்டு போகப் போவதாகச் சொன்னார். ‘‘சார், எனக்கு இங்கு மூணு பொம்பள பாஸ்கள் இருக்காங்க. அதிலயும் அந்த வயசான அம்மா பெரிய தலைவலி. காரை கிளீன் பண்ணச் சொன்னா நல்லது. ஆனா அவங்க வீட்டை தொடைக்கணும். நாய் கக்கா போனா அதைக்கூட எடுத்துப் போடணும்னு எதிர்பார்க்கிறாங்க. அதிரடிப்படையில இந்த வேலைக்கா சார் நான் வந்தேன்’’ என்று புலம்பினார்.

வெண்ணெய் திரண்டு வர்ற நேரம் தாழியை உடைத்த கதையாகி விடக்கூடாதுன்னு பழைய பழமொழியைச் சொல்லி கண்ணன் அவரைச் சமாதானப்படுத்தினார்.

வடவள்ளியில் இருந்து முத்துலட்சுமி வீரப்பனுக்கு ஒரு ஆடியோ கேசட்டைக் கொடுத்தனுப்பினார். அதில், தனது கடந்த காலத் துயரங்களையும் எதிர்கால நம்பிக்கையையும் பற்றிப் பேசினார்.

ஒரு கணவனாக, ஒரு தகப்பனாக வீரப்பன் எப்படி தனது கடமைகளில் இருந்து தவறினான் என்பதைப் பட்டியலிட்டு, அவனிடத்தில் ஒருவிதமான குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தினார். ஒரு சில இடங்களில் அழுதார். இப்போது முத்துலட்சுமி, ரம்யா மீது முழு நம்பிக்கை வைத்திருந்தார். தனது மகள் பிரபாவை, ரம்யாவுடன் சென்னைக்கு சில நாட்கள் தனியாக அனுப்பக்கூடச் செய்தார்.

இதற்கிடையில், முத்துலட்சுமியிடமிருந்து வீரப்பனுக்கு நிறைய டேப்புகள் சென்றன. அதில் அந்த அழகான தேயிலைத் தோட்டம் பற்றியும் கெஸ்ட் ஹவுஸ் பற்றியும் தெரிவித்தார்.

இத்திட்டம் எங்களுக்கு பெரும் நம்பிக்கை அளித்த நேரத்தில்...

## டீ எஸ்டேட் திட்டம் தவிடுபொடியானது!

வீரப்பனுக்கு முத்துலட்சுமி அனுப்பும் ஆடியோ டேப் செல்லும் பாதையைப் பின் தொடர்ந்து அவனது பதுங்குமிடத்தைக் கண்டுபிடிக்க எஸ்.டி.எஃப். முயற்சித்தது. ஆனால் அது பலனளிக்கவில்லை. ஒரு முறை ஒரு ஒல்லியான உயர்ந்த கூரியர் மனிதனை ஈரோடு பஸ் ஸ்டாண்டு வரையில் பின்தொடர்ந்து சென்றனர். ஆனால், அந்த பஸ் ஸ்டாண்டோடு அவனைத் தவற விட்டுவிட்டார்கள்.

வீரப்பனைப் பற்றி ரம்யாவிடம் முத்துலட்சுமி பகிர்ந்து கொண்ட விஷயங்களைப் பொறுக்கி எடுத்துப் பார்க்கும் போது வீரப்பன் தூண்டிலில் மாட்டி விடுவான் போன்ற அறிகுறி தெரிந்தது. கண்ணன் மதுரைக்கு விரைந்து அங்கு ஒரு கண் மருத்துவரைப் பார்த்துப் பேசினார். யாருக்கு சிகிச்சை என்று பெயர் சொல்லாவிட்டாலும், அவர் ஒரு முக்கியமான நபருக்கு சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று மட்டும் கூறினார். ஒரு நர்ஸும் தயார் நிலையில் வைக்கப்பட்டார். நல்ல வேளையாக அந்த டாக்டர் கேள்விகள் எதுவும் கேட்கவில்லை.

ரம்யா அளித்த தகவல்களின்படி, வீரப்பன் பண்ணாரி அருகேதான் காட்டில் இருந்து வெளியே வருவான் எனத் தோன்றியது. திம்பத்தின் அடிவாரத்தில் சில குன்றுகள் இருக்கின்றன. அங்குதான் அவன் ராஜ்குமாரைப் பிடித்து வைத்திருந்தான். அவன் வருவதற்கு வாய்ப்புள்ள பாதை அதுதான்.

அந்தப் பகுதியில் சுள்ளி பொறுக்கும் பெண்களைப் போல சில பெண் கமாண்டோக்களைப் போடலாமா? என்று கண்ணனும் நானும் ஆலோசித்தோம். தமிழ்நாடு ஸ்பெஷல் போலீசில் உள்ள 3 ஆயிரம் பெண்களில் தேர்வு செய்து சில பெண்களின் பட்டியலைத் தயார் செய்தோம்.

ஆனால் திடீரென்று நிலைமை வேறு மாதிரி மோசமாகத் திரும்பியது.

மார்ச் 23—ம் தேதி தனது மொபைலுக்கு இரண்டு நிமிடத்திற்குள் மூன்று மிஸ்டு கால்கள் வந்ததைப் பார்த்துவிட்டு, பக்கத்தில் உள்ள போன் பூத்துக்குச் சென்று பேசினார் முத்துலட்சுமி. திரும்பி வந்தபோது அவரது நடத்தை மாறியிருந்தது. ரம்யாவிடம் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. ஆனால், அந்த நேரத்தில் அவர்கள் வால்பாறைக்கு பிக்னிக் போவதாகத் திட்டமிட்டிருந்தனர். எனவே, அவர்கள் அங்கு சென்றனர். வால்பாறையில் நிதானமாக லஞ்ச் சாப்பிட்டுவிட்டு ஒரு நான்கு மணிக்குத் திரும்புவது என்று திட்டமிட்டிருந்தனர்.

சாப்பாட்டு நேரத்தில் ரம்யாவின் அம்மா கண்ணனுக்கு போன் செய்து பேசினார். ‘‘முத்துலட்சுமி தன்னை யாரோ கண்காணிக்கிறார்கள் என்று சந்தேகப்படுவதாக ரம்யா சொன்னார்’’ என்று ஒரு குழப்பமான குரலில் கூறினார்.

‘‘கவலைப்படாதீங்க அதை நாங்க பாத்துக்கிறோம்’’ என்று கண்ணன் பதில் சொன்னார்.

போனை வைத்தவுடன் டிரைவரை அழைத்தார். ‘‘காரில் என்ஜின் கோளாறு வந்து விட்டதாகச் சொல்லி விடு. என்ன செய்வியோ தெரியாது. 6 மணிக்கு முன்னால அங்கிருந்து கிளம்பாதே’’ என்று சொன்னார். பிறகு அல்ட்ராவை அழைத்தார். ‘‘தெருவில் இருக்கும் கேமரா எல்லாத்தையும் மறைச்சிடுங்க. முத்துலட்சுமி எதையும் பார்க்கக் கூடாது’’ என்று சொன்னார்.

அந்த இரண்டு பெண்களும் திரும்பி வந்தபோது, அல்ட்ராவின் அடையாளம் எதுவும் இல்லை. ஆனால் அவர்கள் இருவரும் அதன்பின் எப்போதும் மாதிரி பழைய நிலையில் இல்லை. தனது மகள் பிரபாவுடன் ரம்யா நேரம் செலவழிப்பதைக் கூட முத்துலட்சுமி தடுத்து நிறுத்தினார்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த கண்காணிப்புக் காமிரா ஒரு பனி மூட்டமான நாளில் அதிகாலையில் யாரோ ஒருவன் அந்த பகுதியில்

சுற்றிக்கொண்டிருந்த காட்சியைப் பதிவு செய்திருந்தது.

நெடுநேரம் அந்தக் காட்சியை ஆய்வு செய்தும் அந்த நபர் யார் என அடையாளம் காண முடியவில்லை. முத்துலட்சுமிக்கு தொலைபேசியில் ஏதோ தகவல் வந்திருக்கும் நேரத்தில், இப்படி நடப்பதை சாதாரணமாக புறம்தள்ள முடியாது. போட்டோ லேபில் கொடுத்து படத்தை பெரிதாக்கிப் பார்த்தோம். ஆனால் புள்ளிபுள்ளியாகத் தெரிந்ததால் யாரென அடையாளம் தெரியவில்லை.

“அது யாராக இருக்கும்?” நான் கண்ணனைக் கேட்டேன்.

“அது ஒரு மோசமான போலீஸ்காரனாகவோ, ஒரு சிவிலியனாகவோ இருக்கலாம்” என்றார் கண்ணன் கடுமையாக. ஆனால், அவரது பதில் ஏற்புடையதாக இல்லை. அடுத்து அவர் கேட்ட கேள்வி என்னைக் கவலைக்குள்ளாக்கியது. இந்த நடவடிக்கையை நாம் கைவிட வேண்டுமா?

நீண்ட தயக்கத்திற்குப் பிறகு, போஸ்டன் நடவடிக்கையைத் தொடர்வது என்று முடிவு செய்தோம். முத்துலட்சுமியைப் பார்க்க அடையாளம் தெரியாத நபர் வந்திருந்தாலும் (அவர் யார் என்று நாங்கள் கண்டுபிடிக்கவே இல்லை) அவருக்கு எங்களின் நடவடிக்கை பற்றித் தெரிந்திருக்காது. ஏனெனில் அவசியமானவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கும்படி ரகசியமாக நாங்கள் அந்த நடவடிக்கையை மேற்கொண்டோம். கண்ணன், டிரைவர் செல்வராஜ், அந்த சமையல்காரர், அல்ட்ரா பிறகு நான் ஆகிய ஐந்து பேருக்கு மட்டுமே இந்த ரகசியம் தெரியும்.

ஒரு நாள் வீரப்பன் திடீரென்று முத்துலட்சுமியைப் பார்க்க வரும் திட்டத்தை ரத்து செய்தான்.

அதற்கு நிறையக் காரணங்கள் இருக்கலாம். வெளியே தெரிந்த காரணம் இதுதான். ஒரு ஜோசியன், வீரப்பனுக்கு கெட்ட நேரம் இருப்பதாகச் சொல்லி இருக்கிறான். அதுவே வீரப்பன் அந்தத் திட்டத்தைக் கைவிடக் காரணமாக அமைந்திருக்கலாம்.

இது தவிர மோகன் நவாஸும் ‘ஆஞ்சநேயா’ (இது அனுமனின் பல பெயர்களில் ஒன்று) என்ற பெயரில் ஒரு கொரில்லாப் படையைக் கட்டமைத்திருந்தார். ஆஞ்சநேயா படைகள் மிகவும் சிறியவையாக இருந்தன. ஒவ்வொரு குழுவிலும் நான்கு அல்லது ஆறு பேர் இருப்பார்கள். சில நேரங்களில் ஒரு குழு முன்னே போக, அதன் ஜோடிக் குழு பின்னே அதைக் கண்காணிக்கும். அவர்கள் நாளொன்றுக்கு இரண்டு முறை ராகி உணவைச் சாப்பிட்டு உயிர் வாழ்ந்தனர்.

இது, கர்நாடக அதிரடிப்படை தலைவர் பிதாரி வைத்திருந்த ஐந்து சிவிலியன்களைக் கொண்ட ‘ராகி ஸ்குவாட்’டின் அடுத்த கட்ட வளர்ச்சி. அவர்கள் பழங்குடியினரைப் போல உடை அணிந்திருந்தனர். சிறிய பண்டல்கள் அவர்களின் தலையில் இருந்தன. அதில் அவர்களுக்குப் பிடித்தமான அறுத்துச் சிறிதாக்கப்பட்ட .303 ரைபில்கள் மற்றும் ஷாட்கன்கள் இருந்தன.

ஒரு ஆஞ்சநேயாவுக்கும் ஒரு பழங்குடிக்கும் இடையே ஒரே ஒரு வித்தியாசம்தான். வாழ்நாள் முழுவதும் காட்டுப்பகுதியில் செருப்பில்லாமல் நடக்கும் அவர்களுக்கு இருக்கும் நீண்ட கால்களோ விரிந்த விரல்களோ ஆஞ்சநேயாக்களுக்கு இல்லை. ஆனால், உற்றுப்பார்த்தால் தான் இதைக் கண்டறிய முடியும். கடமையே கண்ணாக இருந்த அந்தக் கமாண்டோக்களால் வீரப்பன் வெறுப்பும் பயமும் அடைந்திருந்தான். மிக முக்கியமான திம்பம் ஹில்ஸ் பகுதியில் அவர்களின் பேட்ரோல்கள், வீரப்பனின் நடவடிக்கைகளை கடுமையாக முடக்கிப் போட்டிருந்தன.

மொத்தத்தில் 90 ஆஞ்சநேயாக்கள் இருந்தார்கள். உண்மையில் அவர்களால் பத்துக்குப் பத்து கிலோ மீட்டர் பரப்பளவை மட்டுமே தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். ஆனால் அவர்களின் நடவடிக்கை தந்த உளவியல் விளைவாக அவர்கள் அந்த அளவைப் போல கிட்டத்தட்ட 50 மடங்கு பெரிய பகுதியைத் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

ஆஞ்சநேயா நடமாட்டம் உள்ள திம்பம் மலைகளைக் கடப்பதில் இருந்த அச்சம்தான் வீரப்பனை முத்துலட்சுமியைச் சந்திக்க விடாமல் தடுத்துவிட்டதா? அப்படித்தான் என்றால் அது உண்மையில் முரண்பாடுதான். ஏதோ ஒரு

விதத்தில் எஸ்.டி.எஃப். தலையீடு இருக்கிறது என்று அவன் ஏற்கனவே உணர்ந்திருந்தான். அந்த எண்ணமே அவன் பயப்படுவதற்குப் போதுமானதாக இருந்தது.

காரணம் எதுவாக இருந்தாலும் ஆபரேஷன் போஸ்டன் தோல்வி அடைந்தது. பிரபலமான போஸ்டன் டீ பார்ட்டி நிகழ்வின்போது, பெட்டி பெட்டியாக டீத்தூள் சமுத்திரத்தில் கொட்டப்பட்டது. அதேபோல, இந்த போஸ்டன் நடவடிக்கையில் எங்களின் நம்பிக்கைகள், திட்டங்கள், ஏராளமான நேரம், கடினமான முயற்சிகள் அனைத்தும் தடயம்கூட இல்லாமல் மூழ்கி விட்டன.

இந்த ஆபரேஷனில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தவர்கள் மத்தியில் இது மனச்சோர்வை ஏற்படுத்தியது. நல்லவேளையாக விரைவிலேயே வீரப்பனைப் பிடிக்க மற்றொரு வாய்ப்பு வந்தது.

அது...?

## வீரப்பனைக் குழப்ப உதவியது தொழில்நுட்பம்!

ஆகஸ்ட் 2003.

வீரப்பன் அவனது கிராமமான கோபிநத்தத்தைச் சுற்றி ஒரு 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள்தான் பதுங்கி இருக்கிறான் என அனைத்துத் தரப்பிலுமிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன. வரைபடத்தில் ஒரு வட்டம் வரைய ஆரம்பித்தேன். வீரப்பன் எம்.எம். மலைப்பகுதியைக் கடக்கும் போதெல்லாம் அவனுக்கு சூடான உணவு கிடைக்கிறது என இதயத்துல்லாவின் தகவல்கள் தெளிவாகத் தெரிவித்தன.

‘‘அவனுக்கு உணவு வரும் வழியை அடைத்துவிட முடியுமா? அவனுக்கு கிராமத்தினரிடம் கிடைக்கும் ஆதரவை வற்றச் செய்ய முடியாது. ஆனால் இந்தப் பகுதியில் நமது டீம்களை பெருகச் செய்தால் என்ன?’’ என்று எனது வார்த்தைகள் வந்து விழுந்ததும், அங்கிருந்த அதிகாரிகள் சிலர் தங்களுக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து நான் பேச்சை நிறுத்தினேன்.

‘‘என்ன விஷயம் ஜென்டில்மேன்?’’ என்று கேட்டேன்.

கொஞ்ச நேரம் அமைதி. பின்னர் ஹூசேன் பேசினார்.

‘‘சார், மன்னிக்கணும். இதுக்கு முன்னாடி நாம மேற்கொண்ட பெரிய ஆபரேஷன்களின் போதுகூட நம்மால மிகச் சின்ன அளவுலதான் சாதிக்க முடிஞ்சது. அதுதான் நம்ம டீம்ல சந்தேகப்படுறாங்க’’ என்றார்.

2000—ம் ஆண்டு ஜூனில் அதிரடிப்படை மேற்கொண்ட ‘ஆபரேஷன் ஜங்கிள் ஸ்டார்ம்’ எனும் ஆகப்பெரிய நடவடிக்கையைத்தான் ஹூசைன்

குறிப்பிட்டுச் சொல்கிறார் என எனக்குத் தெரிந்தது. ஐ.ஜி. பாலச்சந்திரன் தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சுமார் 2 மாத காலம் காட்டில் போராடினர். பாலச்சந்திரன் வெகு கவனமாகத் தயார் செய்திருந்த திட்டம் அது.

ஆனால் ‘ஜங்கிள் ஸ்டார்ம்’ எதிர்பார்த்த விளைவைத் தரவில்லை. அடர்ந்த காட்டில் தேடுவதற்குப் பதிலாக, அன்றாடம் அவர்கள் கடக்க வேண்டிய கிலோ மீட்டர் தூரம், சந்திக்க வேண்டிய கிராமங்கள் மற்றும் இன்ஃபார்மர்கள் என்று அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இலக்கிலேயே சிக்கிக் கொண்டனர். அழிக்கப்பட்ட பாதைகளில் அவர்கள் ஸ்தம்பித்து நின்றனர்.

“இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்திலும் சீற்றமும் துணிச்சலும் ஏராளமாக இருந்தன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனினும் தற்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்கிறேன்” என்றேன்.

அந்த எண்ணத்திலே, ‘ஆபரேஷன் இன்—அன் டேஷன்’ (தமிழில் பெருவெள்ளம் என்று பொருள்) தொடங்கியது. அதிரடிப்படையின் டி.எஸ்.பி.யான திரு என்று எங்களால் அழைக்கப்படும் திருநாவுக்கரசு அந்த ஆபரேஷனை வழிநடத்தினார்.

இந்த முறை மிகப்பெரிய டீம்களின் தேடுதல் வேட்டைக்குப் பதிலாக, சிறிய சண்டைக்குப் பொருத்தமான, சுறுசுறுப்பான டீம்களை ஜி.பி.எஸ்., இரவு நேரக் கண்ணாடி உள்ளிட்ட சாதனங்களுடன் களத்தில் இறக்கினோம். கர்நாடக அதிரடிப்படை கட்டுப்பாட்டில் இருந்த ஒரு குறிப்பிட்ட பகுதியும் எங்களின் தேடுதல் வேட்டைக்குள் வந்தது. ஆனால் அவர்கள் பெருந்தன்மையாக எங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ள சுதந்திரம் அளித்தனர்.

ஆச்சரியம், வேகம், எளிமை ஆகியவைதான் எங்களின் நோக்கமாக இருந்தன. எனினும் நடவடிக்கை மேற்கொள்ளும்போது இரண்டு

பிரச்சினைகளை எதிர்கொண்டோம். முதலாவது அந்த மலைகள் எங்களின் சிக்னல்களைத் தடுத்தது. எங்களுக்கு சிக்னலே கிடைக்கவில்லை. எங்கள் வாக்கி டாக்கிகளை இயக்க முற்படும்போது, அதில் இருந்து தெளிவற்ற சத்தம்தான் கேட்டது.

பிறகு போலீசாரின் புத்திசாலித்தனமான மூளையில் ஒரு யோசனை உதித்தது. யாராலும் அவ்வளவு எளிதில் போக முடியாத எம்.எம். மலையின் உயரத்தில் ஆளில்லா ரிபீட்டர்ஸ் எனும் சாதனங்களை வைத்து அதன் மூலம் பலவீனமான சிக்னல்களைப் பலப்படுத்தலாம் என யோசித்தனர்.

ஒரு வேளை அந்த ரிபீட்டர்களை அந்த கேங் உடைச்சுப் போட்டுட்டா? என்று ஒரு சந்தேக ஆசாமி கேட்டார்.

"அவங்க அந்தப் பகுதியிலதான் இருக்காங்கன்னு அது நமக்கு உறுதிப்படுத்தும்" அல்ட்ரா உமாபதி பதில் சொன்னார்.

100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சென்னிமலையைப் (பருத்தி மெத்தை விரிப்புகளுக்கு பெயர் போன ஊர்) பார்த்தபடி ஒரு குன்றும் அதன் உச்சியில் ஒரு கோவிலும் இருந்தது. அதற்கு பக்கத்தில் ஒரு வயர்லெஸ் ஸ்டேஷன் இருந்தது. போலீஸ் நெட்வொர்க் சங்கிலித் தொடரின் ஒரு பகுதி அது. மோட்டோரோலாவின் அதிநவீன போர்ட்டபிள் ரிபீட்டர் ஒன்றை சத்தமில்லாமல் அங்கு வைத்து இயங்கச் செய்தோம்.

எம்.எம்.மலையைக் கடந்து காவிரிக்கு அப்பால் உள்ள ஒருவரிடம் உடனடியாகப் பேசிப் பார்த்தபோது பக்கத்து வீட்டுக்காரரிடம் பேசுவது போல அவ்வளவு துல்லியமாகக் கேட்டது. அந்தக் கணத்தில் எனது கவலையெல்லாம் பறந்தது.

அடுத்த பிரச்சினை இன்னும் கவலைக்குரிய ஒன்று. அதிரடிப்படையின் குழுக்கள் ஒரு சிறு நிலப்பரப்பில் சுற்றி வரும்போது, அவர்களே தெரியாமல் ஒருவருக்கு ஒருவர் சுட்டுக்கொன்றுவிட வாய்ப்புகள் அதிகம். மோசமான தொலைத்தொடர்பு வசதிகள் இந்த ஆபத்தை அதிகரிக்கவே செய்யும்.

கர்நாடக காவலர் அநஞ்சயக்குமாரின் சோகமான மரணத்தை அதிரடிப்படையினர் இன்னும் மறக்கவில்லை. கடைசியாக இப்போது இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

தேர்ந்த பயிற்சியின் மூலமும் பொறுப்புகளை பிரித்துக் கொண்டதன் மூலமும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. இரண்டு கிலோ மீட்டர் சதுரப் பரப்பை, 16 சதுரங்களாக அந்தப் பகுதி பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆறு சதுரங்களுக்கும் ஒரு கிச்சன் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு சதுரத்திலும் இரண்டு ஆறு பேர் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒரு குழு இயக்கத்திலும் மற்றொரு குழு தயார் நிலையிலும் இருந்தது.

அதிரடிப்படையின் மிக நீண்ட வரலாற்றில் இதுவரையில் இவ்வளவு சிறிய நன்கு வரையறுக்கப்பட்ட போர்க்குழுக்கள் ஒருபோதும் அமைக்கப்பட்டதில்லை. ஒவ்வொரு குழுவும் மற்ற குழுக்களோடு தொடர்ந்து நிலையான தொடர்பு வைத்திருந்தது. ஒருவேளை வீரப்பன் கேங், ஏதேனும் ஒரு குழுவைத் தாக்கினால் மற்ற முப்பது பேர் கொண்ட அந்தக் குழுவின் உதவிக்கு விரைவார்கள்.

'ஐகாம்' எனப்படும் விலை உயர்ந்த ஒரு வயர்லெஸ் செட் வைத்திருந்தான் வீரப்பன். எல்.டி.டி.இ. போன்ற அமைப்பினர் வைத்திருந்ததைப் போன்ற செட் அது. அதன் மூலம் அதிரடிப்படையினர் பேசும் தகவல்களை, அவனால் ஒட்டுக் கேட்க முடிந்தது. எங்கள் படையினர் குரலைக் கேட்டே யார் என்று, வீரப்பன் அடையாளம் கண்டுவிடுவான் என்று அவனது கேங் ஆட்கள் பின்னாளில் சரணடைந்த போது, கூறினர்.

அதிலும் குறிப்பாக கருப்புசாமி பேசும் நெல்லைத் தமிழை மிகவும் ரசிப்பானாம். திடீர் வெள்ளத்தில் சிக்கி எஸ்.பி. ஒருவர் அடித்துச் செல்லப்பட்ட செய்தியைக் கேட்ட போது, அந்த கொள்ளைக்காரன் ரொம்ப மகிழ்ச்சியாக வாய்விட்டுச் சிரித்தானாம்.

ஆனால், இப்போது வீரப்பன் அவனது வயர்லெஸ் செட்டில் எங்கள் வார்த்தைகளுக்குப் பதில் வெறும் எண்களை மட்டும் கேட்டுக் குழம்பினான். இந்த பதினாறு சதுரங்களுக்குள் வரும் 60 சதுர கிலோ மீட்டரும் சின்னச் சின்னக் சதுரங்களாகப் பிரிக்கப்பட்டது. அந்த ஒட்டுமொத்த குழுக்களும் ஒரு கற்பனையான கடிகார வடிவில் அமைக்கப்பட்டன.

அதாவது ஒரு கடிகாரத்தில் எந்த எண் எங்கு இருக்குமோ அந்த இடத்தில் உள்ள குழுவுக்கு, அந்த எண் என குறித்துக் கொண்டோம். குழுவுக்குக் கொடுக்கும் எண்ணைப் பொறுத்து அந்தக் குழு எங்கே இருக்கிறது எனத் தெரிந்துகொள்ள முடியும். ஆனால் அந்த எண்ணைக் கேட்கும் அந்நியர்களுக்கு அது தெரியாது.

அந்த எண்களைப் புரிந்துகொள்ள முடியாத வீரப்பன் எந்தத் திசையில் இருந்து அதிரடிப்படை தாக்கும் என்று தெரியாமல் தொடர்ந்து கவலையில் இருந்தான். இது போதாது என்று அவ்வப்போது டீமில் இருப்பவர்கள் வேண்டுமென்றே மீண்டும் தமிழில் பேசி அவனது கொரியர்களைக் கண்டுபிடித்து விட்டதாக (உண்மையில் கண்டுபிடிக்காவிட்டாலும் கூட) கூறி அவனது கவலையை அதிகப்படுத்தினர். வீரப்பன் எப்போதும் அபாய விளிம்பில் இருந்தான். நாங்கள் அவனைக் குழப்பினோம்.

ஒரு முறை வீரப்பன் கேங்கில் இருந்து சரி செய்ய வந்த துப்பாக்கி ஒன்று அதிரடிப்படையின் துப்பாக்கி சரி செய்பவரிடம் வந்தது. அதைக் கைப்பற்றி நாங்கள் அதன் பின்பக்கத்தில் ஒரு சென்சாரை வைத்தோம். அது வீரப்பன் கேங்கிற்குச் சென்றால் தடமறியலாம் என நினைத்தோம். ஆனால் அவர்கள் அந்தத் துப்பாக்கியை வாங்க வரவே இல்லை.

எனினும் எங்களது ஸ்திரமான முயற்சி சில எதிர்பாராத உதவிகளால் மேலும் வலுவடைந்தது.

ஒரு நாள் கருப்புசாமி என்னிடம் வந்து, ‘‘வீரப்பன் கேங்கால் பாதிக்கப்பட்ட சிலர் உதவ விரும்புறாங்க’’ என்று சொன்னார்.

“எப்படி?” என்று நான் கேட்டேன்.

“நம்ம தேடுதல்ல அவங்களும் சேர விரும்புறாங்க. அதுக்குப் பதிலா 6 நாட்டுத் துப்பாக்கி கேக்கிறாங்க. அவ்வளவுதான்” என்றார்.

## எங்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் ‘டிரேடர்’?

“வீரப்பன் கேங்கால் பாதிக்கப்பட்ட சிலர் உதவ விரும்புறாங்க. அவுங்களுக்கு 6 நாட்டுத் துப்பாக்கி கேக்கிறாங்க. அவ்வளவுதான்” என்றார் கருப்பசாமி.

நாங்கள் அந்த ஆறு பேரின் முந்தைய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தோம். அவர்கள் ஆடு மேய்ப்பவர்கள், விலங்குகளை வேட்டையாடுபவர்கள், கிராமவாசிகள், வீரப்பன் கேங்கால் பாதிக்கப்பட்டவர்கள் என்று தெரிய வந்தது. விரைவிலேயே அவர்கள், அதிரடிப்படையின் அதிகாரபூர்வமற்ற சாரணர்களாக பணியைத் தொடங்கினர். அந்தப் பகுதி மற்றும் உள்ளூர் பழக்க வழக்கங்கள் பற்றிய அவர்களின் அறிவு விலைமதிக்க முடியாதது.

வேட்டைக்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நாய்களை அதிரடிப்படைக்குள் கொண்டு வரவும் முயற்சித்தோம். சில நாட்களிலேயே அந்த நாய்கள், அதிரடிப்படை மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட டாபர்மேன், ஜெர்மன் ஷெப்பர்ட் போன்ற நாய்களை விட சிறப்பாகச் செயல்பட்டன. ஆனால், ஒரு நிரந்தரமான அரசாங்க வேலை கிடைத்துவிட்டால் பிறகு அவை சோம்பேறியாகவும் செயலற்றவையாகவும் மாறி விடுகின்றன. பிறகு அந்த நாய்களை அவர்களின் மாஸ்டர்களிடமே அனுப்பினோம். ஆனால் அதன்பிறகு அவற்றின் செயல்பாடு மறுபடியும் மேம்பட்டது.

முதலில் இவை அனைத்தும் ஒரு குறுகிய கால நடவடிக்கைதான் அதுவரை பொறுத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில்தான் இருந்தான்

வீரப்பன். நாட்கள் கடக்கக் கடக்க, இது முற்றிலும் வேறான ஒரு நடவடிக்கை என்று அவன் உணர்ந்தான். அவனைச் சுற்றிப் பிடி இறுகியது. அவன் மேலும் மேலும் தனது எல்லையை உள்சுருக்கிக் கொண்டே போனான். துப்பாக்கிச் சத்தம் எழுப்பும் அபாயம் வேண்டாம் என்ற எண்ணத்தில் அவனும் அவனது ஆட்களும் வேட்டைக்குச் செல்வதை நிறுத்தினர். கிராமத்தில் உள்ள உணவகத்திலிருந்து அவ்வப்போது சூடான அசைவ உணவு வேண்டும் என்று ஆர்டர் செய்வதையும் வீரப்பனின் ஆட்கள் நிறுத்திவிட்டனர். இப்போது அந்த உணவகத்திற்கு அதிரடிப்படையினர் வாடிக்கையாளர்களானதால் வியாபாரம் பரபரப்பாக நடந்தது.

அதிரடிப்படை தன்னை நெருங்கி விட்டது என்பதையும் தான் அபாயத்தில் இருக்கிறோம் என்பதையும் அவன் தெளிவாக உணர்ந்திருந்தான். அவன் நிச்சயம் பிடிபடுவான்; ஆனால் எப்போது என்பது மட்டும்தான் கேள்வியாக இருந்தது.

வீரப்பன் காவிரி ஆற்றைக் கடந்து தமிழகத்திற்குள் மீண்டும் நுழைய முயற்சிப்பான் என்ற அச்சத்தில் படகோட்டிகளையும் நாங்கள் எச்சரித்து வைத்தோம்.

அவனது பாதைகளை அடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், காவிரியைக் கடந்து தமிழக எல்லைக்குள் நுழைய வாய்ப்புள்ள பகுதிகளில் தொடர் பதுங்குமிடங்களை அமைத்தது அதிரடிப்படை. சில நேரங்களில் இதனால் எதிர்பாராத பிரச்சினைகளும் ஏற்பட்டன.

ஒரு முறை ஒரு பதுங்குமிடத்தில் அதிரடிப்படை வீரர் ஒருவர் படுத்திருந்தார். அவரை பாம்பு கடிக்க அலறி எழுந்தார். அதிர்ஷ்டவசமாக உயிருக்கு எதுவும் ஆபத்தில்லை. ஆனால் பின்னர் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இதற்கிடையில், ஒரு மீட்டிங்கிற்காக நான் டெல்லிக்கு அழைக்கப்பட்டேன். வீரப்பனை ஒழித்துக் கட்டுவதற்கான எங்களின் முயற்சிக்கு உதவும் வண்ணம் ஹெலிகாப்டர் கொடுத்து உதவுமாறு அங்கு நான் கேட்டுக்

கொண்டேன். அடுத்த நாளே அவர்கள் ஹெலிகாப்டரை ஏற்பாடு செய்துவிட்டார்கள். எனினும் அது நடைமுறைக்கு வரவில்லை.

ஒரு நாள், கர்நாடக அதிரடிப்படை தலைவர் மிர்ஜி, என்னை அழைத்து, அவரது படை ஆட்கள், வீரப்பன் பதுங்குமிடம் ஒன்றைப் பார்த்ததாகவும், அவன் சில நாட்களுக்கு முன்தான் அங்கிருந்து வெளியேறியதாகவும் தகவல் சொன்னார்.

“நாம் அதை ஒரு முறை பார்க்கலாமா?” என்று கேட்டேன்.

அந்தப் பதுங்குமிடம் எங்கள் ஆபரேஷன் திட்டத்தின் மையப்புள்ளியில் இருந்து அதிக தூரமில்லை. அந்த இடம் நன்கு மறைக்கப்பட்ட, அதே சமயம் தற்காப்பு நடவடிக்கை மேற்கொள்ள ஏற்ற இடமாக இருந்தது. எம்.எம். மலைத்தொடரில் ஒன்றான மயிலமலை உச்சியில் இருந்து 50 அடிக்குக் கீழே உள்ள ஒரு பாறைக்கு பக்கத்தில் அமைந்திருந்தது அந்த இடம். மற்றொருபுறம் செங்குத்தாக 2 ஆயிரம் அடி கீழே ஒரு பெரிய தட்டையான பாறை இருந்தது.

அந்த இடத்தை அடைய வேண்டுமென்றால் ஒருவர் உச்சிக்குச் செல்ல வேண்டும். பிறகு 50 அடி கீழே செல்ல வேண்டும். கீழ்நோக்கிச் செல்லும்போது நாலாபுறமும் கவனமாக இருக்க வேண்டும். கைப்பிடியை நழுவச் செய்துவிட வேண்டும் என்ற பேராசையில் காற்று கடுமையாக வீசிக் கொண்டிருந்த அந்த இடம், இலகிய மனம் படைத்தவர்களுக்கு ஏற்ற இடமாக இல்லை. பாறை மீது ஏறுவதில் உள்ள சிரமங்கள் குறித்து போலீஸ் அகாடமி எனக்குக் கற்றுக் கொடுத்திருந்தது. எச்சரிக்கையாக இறங்க ஆரம்பித்தேன்.

கடும் சோதனைக்குப் பிறகு இயற்கையான குகை போன்று இருந்த அந்த இடத்தை அடைந்தேன். அங்கு குளிர்ந்த, இனிப்பான தண்ணீர் ஊற்று இருந்தது. சிறிது உணவுப் பொருட்களுடன் இந்த இடத்தில் பல வாரங்களுக்கு ஒரு சிறிய குழுவால் வசிக்க முடியும். நிறைய முட்டை ஓடுகள் பாறைக்கு அடியில் சிதறிக் கிடந்தன. ஆனால் நிரந்தரமாக சமையல் செய்ததற்கான அடையாளம் எதுவுமில்லை.

இவ்வளவு வலிமையான பதுங்குமிடத்தை வீரப்பன் ஏன் கைவிட்டான்? அவனது முரட்டுத்தனமோ அல்லது அவநம்பிக்கையோ அல்லது இரண்டுமோ காரணமாக இருக்கலாம் என்ற முடிவுக்குத்தான் வரமுடியும். இது மகிழ்ச்சிதான். ஆனால் புதிதாக ஒரு கவலையையும் அது கிளப்பியது. மறுபடியும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள, மீண்டும் ஒரு பெரிய கடத்தலில் ஈடுபடுவானோ?

அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினர் வீரப்பனின் பதுங்குமிடங்களில் முதன்மையான ஐந்து இடங்களைப் பட்டியலிட்டனர். அவை அனைத்துமே வீரப்பன் கடத்திய ஆட்களை வைத்திருந்த இடங்கள்.

கிழக்கில் காவிரியில் செங்கம் அருகே காரிபோர் அவற்றில் முதல் இடத்தைப் பிடித்திருந்தது. பிரபலமான மீன் பிடிக்குமிடமாகத் திகழ்ந்த அங்கு அரிதான 200 பவுண்ட் எடை கொண்ட கெண்டை மீன் கிடைக்கும். அந்த மீனுடன் வீரர்கள் படம் எடுத்துக் கொண்டனர். மீன் பிடிப்பதில் ஆர்வம் உள்ளவர்களுக்கு ஏற்ற இடம் அது. இப்படி மீன் பிடிக்க வரும் சுற்றுலாப் பயணிகள் உள்ளூர் மீன்காரர்களுக்கு டிப்சாக குறைந்தது ரூ.1000 கொடுத்து அசத்துவார்கள். நல்லவேளையாக சீசன் நவம்பரில் இருந்து மார்ச் வரைதான். அது ஆகஸ்ட் மாசம்தான் என்பதால் அங்கு டூரிஸ்டுகள் இருக்க மாட்டார்கள்.

மேற்கில் பந்திப்பூர் சரணாலயம் இருந்தது. காட்டு எருமைகள் மற்றும் ராயல் பெங்கால் புலிகளுக்குப் பெயர் போனது. ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் சரணாலயம் அது.

அடுத்து அதற்கு அருகிலேயே மசினகுடி ரிசார்ட்ஸ். அது முதுமலை காடுகளின் இதயப் பகுதியில் அமைந்திருந்தது. பிரபல பாலிவுட் நடிகர் மிதுன் சக்கரவர்த்தி இங்கு ஒரு ஹோட்டலும் கொஞ்சம் நிலமும் வைத்திருக்கிறார். அடிக்கடி இங்கு வந்து செல்வதை வழக்கமாக வைத்திருக்கிறார். அங்கிருந்து இன்னும் கொஞ்சம் தள்ளி மேற்கே சென்றால், ஈஷா யோகா மையம் இருந்தது. அதுவும் கூட்டத்தை ஈர்க்கும் இடம்தான். அதே மலையடிவாரத்தில் உலகம் முழுவதிலுமிருந்து பறவை ஆய்வாளர்களைக் கவர்ந்திழுக்கும் சலிம்

அலி மையம் இருந்தது. இதில் ஏதாவது ஒரு இடத்தில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் ஒருவரை கடத்திச் செல்வது வீரப்பனுக்கு வெகு சுலபமானது.

ஆனால், அவனது விருப்பமான எண்ணம் மைசூருக்கு அருகே உள்ள ஒரு மடாதிபதியைக் குறி வைத்து சுற்றி வந்தது. ஆனால் மிர்ஜி நுணுக்கமாக செயல்பட்டு, அந்த கடத்தலுக்கான வாய்ப்பே இல்லாமலாக்கி இருந்தார். கண்பார்வையில் கோளாறு, மனஉறுதியும் குலைந்த நிலையில் அந்தக் கொள்ளைக்காரனின் முதல் எண்ணம் தற்போது எப்படியாவது, மூச்சுத் திணறச் செய்யும் காவல் வளையத்தில் இருந்து வெளியேறி விட வேண்டும் என்பதில்தான் இருந்தது.

ஒரு அமைதியான நட்சத்திரங்கள் மின்னும் இரவில் வீரப்பன் பரிசலில் காவிரியைக் கடந்து ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி அருகே தமிழகத்திற்குள் நுழைந்தான்.

1970—களின் ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் புரட்சியாளர் சாருமஜூம்தார் ஒகேனக்கல் அருவிக்கு அருகேதான் ஒரு ரகசியக் கூட்டத்தை நடத்தினார். எங்களின் ரகசிய புலனாய்வுத்துறையில் முணுமுணுக்கப்பட்ட தகவலின்படி, மஜூம்தாரும் கனுசன்யாலும் மேற்குவங்கத்தைக் கடந்து நாடு முழுவதும் நக்சல்பாரி இயக்கத்தைக் கட்டமைக்கத் திட்டமிட்டிருந்தனர்.

தென்னிந்தியாவில் இரண்டு மும்மாநில சந்திப்பு உடைய பகுதி இது. ஒன்று கிழக்கில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா சந்திக்கும் இடம். மற்றொன்று மேற்கில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா சந்திக்கும் இடம். இந்தப் பகுதி தங்களின் இயக்கத்தை வளர்ப்பதற்குத் தகுதி வாய்ந்த பகுதி என்று அவர்கள் இருவரும் கருதினர். இதற்கு விந்தையாக வீரப்பனும் இந்த இரு மும்மாநில சந்திப்புப் பகுதிக்கிடையேதான் செழித்து வளர்ந்தான்.

ஆனால் வறண்ட சின்னாற்றை ஒட்டி அடர்த்தியற்ற காட்டுப்பகுதியில் அந்த கேங் வந்திறங்கிய இடமோ அதைத் தொடர்ந்து அவர்கள் தஞ்சம் புகுந்த இடம் குறித்தோ எங்களுக்கு எதுவும் உறுதியாகத் தெரியவில்லை.

இன்னொருபுறம் அதிரடிப்படையில் குறிப்பிட்ட சில நபர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாத மற்றொரு நடவடிக்கையைச் செயல்படுத்திக் கொண்டிருந்தோம். அந்த நடவடிக்கை ‘டிரேடர்’ என்ற சங்கேதப் பெயருடைய ஒரு மனிதர் குறித்தது.

இந்த ‘டிரேடர்’ தான் பெரிய விருதை பெற்றுத்தர காரணமாக இருந்தார்.

# ஒற்றனின் உறவு திடீர் துண்டிப்பு?

டிரேடர்' என்ற ஒரு மனிதர் மூலம் எங்களுக்குக் கிடைத்த பொக்கிஷம். ஆனால், அதற்கு எத்தனை ரிஸ்க் எடுக்க வேண்டி இருந்தது.

தொலைபேசி மணி ஒரு முறை அடித்து நின்றது.

'ஒரு மிஸ்டுகால்' போன் ஸ்கிரீனை ஆர்வத்துடன் பார்த்தவாறு கூறினார் எஸ்.பி. சண்முகவேல்.

உயரமான, ஒல்லியான உருவம் கொண்டவர். கொஞ்சம் கருப்பு நிறத்தவர், கொஞ்சம் கூச்ச சுபாவம் கொண்டவர். அதேசமயம் மிகுந்த கவனமானவர் சண்முகவேல். மேட்டூர் அதிரடிப்படை கேம்ப் அவரது பொறுப்பில் இருந்தது. சத்தியமங்கலத்துக்கு தலைமையகம் மாறுவதற்கு முன்பு அதிரடிப்படையின் உண்மையான தலைமையகம் அதுதான். அவரது அழைப்புக் குறியீடு எஸ்.பி. – 2 (கண்ணனுக்கு எஸ்.பி. – 1). சண்முகவேல் அவருக்குக் கீழ் பணியாற்றுபவர்களை நல்ல ஆலோசனைகளின்படி வழிநடத்துவதால் அவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தார். வீரப்பன் விஷயத்தில் நிகழ்ந்த தொடர் திருப்பங்கள் மற்றும் ஏற்ற இறக்கங்களால் அதிக உற்சாகமும் அடைவதில்லை, சோர்ந்து போய் அமர்ந்து விடுவதுமில்லை எனும் மனப்பக்குவத்தை அவர் கற்றுக் கொண்டிருந்தார்.

எனினும் போனில் பேசுவது யார் என்று தெரிந்ததும், அவருக்குள் உற்சாக அதிர்வு ஒன்றை உணர்ந்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட சந்திப்பு மையத்தை அடைந்தார்.

அங்கு இரண்டு பேர் காத்திருந்தனர். அதில் ஒருவர் கட்டடம் கட்டுபவர். எம்.எம்.ஹில்ஸில் சில மாதங்களாக பள்ளிக்கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்தார். அது கடினமான வேலையாக இருந்தது. உணவு பெரும்பாலும் கஞ்சிதான். அது பசிக்குப் போதுமானதாக இருக்காது. ஆனால் அவர் ஒருபோதும் அதுபற்றிப் புகார் சொன்னதில்லை. அவர் ஒரு கடின உழைப்பாளி. அவரோடு வேலை செய்பவர்களுக்கு அவரை மிகவும் பிடிக்கும். ஆனால், அவர்கள் யாருக்கும் அவர் மாறுவேடத்தில் உள்ள அதிரடிப்படையின் கான்ஸ்டபிள் என்பது தெரியாது.

'என்ன பாண்டிக்கண்ணன்' என்றார் எஸ்.பி. — 2. அடுத்து, இரண்டாவது நபர் பக்கம் திரும்பி, 'இது யார்?' என்று கேட்டார்.

அந்த அந்நியர் சற்று குண்டாக இருந்தார். அடர்த்தியான சுருண்ட முடி. அவர் அறிமுகப்படுத்தப்பட்டபின், எஸ்.பி. — 2 அவருக்கு 'டிரேடர்' என்ற குறியீட்டுப் பெயரைக் கொடுத்தார். ஏனெனில் அவர் ஒரு காலத்தில் பெரிய பிசினஸ்மேனாக வர வேண்டும் என்று கனவு வைத்திருந்தார். இந்த சங்கேதப் பெயர் 'ஆபரேஷன் குக்கூன்' முழுவதும் பயன்படுத்தப்படும்.

'டிரேடர்' சொன்னதை அவர் கவனமாகக் கேட்டார். பிறகு என்னை அழைத்தார்.

“சார்! நான் ஒரு நண்பரோடு உங்களைச் சந்திக்கணும்” என்றார். அந்த உரையாடலில் அவர் வேண்டுமென்றே மேலோட்டமாகப் பேசினார். 'தனியாக' என்று வேறு சொன்னார். அந்த வார்த்தையில் கொஞ்சம் அழுத்தம் கொடுத்தார்.

வழக்கமாக சண்முகவேல் எதற்கும் பரவசமடைய மாட்டார். ஆனால் அன்று அவர் தனது குரலில் கட்டுப்பாட்டைக் காப்பாற்ற முயற்சித்தாலும் குறிப்பிடத்தக்க உற்சாகம் தெரிந்தது.

'குகை, இருட்டிய பிறகு' என்று பதில் சொன்னேன். போனில் எப்போதும் மிகத் துல்லியமாகச் சொல்லாமல் இருப்பது நல்லது.

அன்று இரவு 10 மணிக்கு சத்தியமங்கலத்தில் உள்ள எனது வீட்டின் கதவு தட்டப்பட்டது. எஸ்.பி. — 2, பாண்டிக்கண்ணன், ‘டிரேடர்’ மூவரும் அவசரமாக உள்ளே வந்தனர்.

“யாராவது உங்களைப் பார்த்தாங்களா?” கேட்டேன்.

‘இல்லை’ எனத் தலையை ஆட்டினார் எஸ்.பி. — 2. அடுத்த நொடியில் ‘டிரேடர்’ பற்றிய சிறு அறிமுகம் நடந்தது.

‘டிரேடர்’ பக்கம் திரும்பி, “ஏதும் தகவல் இருக்கா?” என்று கேட்டேன்.

“கொம்புத்தூக்கியில வீரப்பனையும் அவனது கூட்டத்தையும் பார்த்திருக்கேன். இது உண்மை. சத்தியம்” என்றார். அவரோட தலைமேல அடித்துச் சத்தியம் செய்வது போலச் சொன்னார்.

“எப்படி அவங்களைக் கண்டுபிடிச்சீங்க. எஸ்.டி.எஃப். அங்க இல்லையா?” சந்தேகம் தோன்றக் கேட்டேன்.

“நான் பார்க்கல சார். அவங்க என்னைக் கண்டுபிடிச்சாங்க. நான் எம்.எம். ஹில்ஸ் காட்டு ரோட்டுல என்னோட பைக்கில போய்க்கிட்டு இருந்தேன். கோவிந்தன் என்னை வழியில நிறுத்தினான். அவன் என்னைத் தாக்கிட்டு, எங்கிட்ட இருக்கிறத திருடுவானோன்னு பயந்தேன். ஆனா, வீரப்பன் கேங்கிற்கு என்னையத் தெரியும். நானும் வீரப்பனோட அதே சாதிதான். ஆனா சத்தியமா அவனோட எனக்கு எந்த டீலிங்கும் இப்ப வரைக்கும் கிடையாது. எப்படி இருந்தாலும் கோவிந்தனுக்கு என்னைப் பத்தியும் என் குடும்பத்தைப் பத்தியும் எல்லாமும் தெரியும். என்னோட மாமாவைப் பத்தியும் மனைவியைப் பத்தியும் அவன் விசாரிச்சான். பிறகு அவனைப் பின் தொடர்ந்து வருமாறு ஆர்டர் போட்டான். நான் என்ன செய்ய முடியும். அவன் சொன்னதைச் செஞ்சேன்.”

“ஆக நீங்க வீரப்பனைப் பாத்தீங்க?” அவரைத் தொடர்ந்து பேசத் தூண்டினேன்.

‘‘என்னால் அவனது நிழலைத்தான் பார்க்க முடிஞ்சுது. இருட்டா இருந்துச்சு. எனக்கு மேல இருந்த ஒரு பாறையில அவன் உட்கார்ந்து இருந்தான். ஆனா அது அவன்தான். நிச்சயமா அது அவனோட மீசையேதான்’’ என்றார்.

‘டிரேடரிடம்’ இரண்டு மணி நேரம் பேசினேன். அவரது தகவல்கள் உண்மையா என்பதை அறிய அனைத்து விதமான உபாயங்களையும் பயன்படுத்தினேன். ‘டிரேடர்’ ஒரு சுவாரசியமான கதாபாத்திரம். அவர் 12—ம் வகுப்பு வரைதான் படித்திருக்கிறார். பேசும்போது அரைகுறையா ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

‘‘சரி இப்ப அவங்க எங்க இருக்காங்க?’’ என்று கேட்டேன்.

அவங்களோட இப்போதைய இடம் பத்தி நிச்சயமா தெரியல. ஆனா அவங்க திரும்ப என்னைக் கூப்பிடுறதா சொல்லி இருக்காங்க. எங்களோட அடுத்த சந்திப்பு ஆத்தங்கரையில இருக்கும்.

போலீஸ்காரர்கள் அல்லது கொள்ளையர்கள் மத்தியில் ஒற்றர்கள் இருப்பது ஒன்றும் வழக்கத்தில் இல்லாதது அல்ல. ஆனால், வீரப்பன் கேங்கிற்குள் ஒற்றன் என்பது இதுதான் முதலில். விரைவிலேயே ‘டிரேடர்’ அந்த கேங்கில் இருந்து சில உள் விஷயங்களைத் தரலாம் என நம்பினேன்.

‘‘உங்களுக்கு எங்களோட நிதியில இருந்து 1 லட்சம் தரப்போறேன். எங்களுக்கு நீங்க உதவி செய்யணும்னு விரும்புறேன்’’ என்று அவரிடம் சொன்னேன்.

அந்த மனிதருக்கு அது மிகப்பெரிய பணம். கான்ஸ்டபிள் பாண்டிக்கண்ணன் வாங்கும் சம்பளத்தைப் போல ஆறு மடங்கு. வேலை நடந்து முடிந்தால், அது ஒரு நல்ல முதலீடுதான்.

ஒரு பெரிய எதிர்ப்பைக் காட்டியதற்குப் பிறகு கடைசியாக ‘டிரேடர்’ அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ள சம்மதித்தார். அவரது மனைவி ஒரு ஆஸ்துமா நோயாளி. சின்னக் குழந்தைகளை வைத்திருக்கிறார். அந்தப் பணம்

அவருக்கு உதவியாகவே இருக்கும். அவர் கிளம்பும்போது, ‘‘சார், எனக்குப் பயமா இருக்கு. என்னோட மனைவிக்குத் தெரியாது. பாண்டிக்கண்ணனால, நான் இந்த ரிஸ்க் எடுக்கிறேன்’’ என்று உடைந்த வார்த்தைகளால் சொன்னார்.

ஒரு பயங்கரமான மனிதனை வேவு பார்க்க வேண்டும் என்று ‘டிரேடரை’ எது தூண்டியது என சண்முகவேலும் நானும் புரிந்துகொள்ள முயற்சித்தோம். நிச்சயம் அது பணத்திற்காகவோ கொள்கைக்காகவோ கட்டாயத்திற்காகவோ அல்லது உற்சாகமான பழிவாங்கலுக்காகவோ அல்ல. சண்முகவேல் அது ‘வெறும் நட்புக்காக’ என்று சொன்னார்.

‘‘பிறகு ஏன் அப்படி அவருக்கு வேர்த்துக் கொட்டிச்சு?’’ என்று கேட்டேன்.

‘‘சார் அவர் உங்களைப் பார்த்ததும் எக்சைட் ஆயிட்டார் சார்.’’

‘‘நம்ம நண்பரை சந்தித்ததைப் பத்திச் சொன்னபோதும் இதையேதான் சொன்னார். அந்த நெருக்கடியான நேரத்துல அவர் தன்னோட பேன்ட்டுல ஒண்ணுக்குப் போயிட மாட்டாருன்னு நம்புறேன்’’ என்றேன்.

வீரப்பனைச் சந்திக்கும்போது அவர் நிதானமாக இருக்க வேண்டும் என ஆர்வத்துடன் கடவுளை வேண்டிக் கொண்டேன். என்னுடைய நீண்ட அனுபவத்தில் அவருக்கு பாதுகாப்பை வழங்கிவிட முடியும் என்று எனக்குத் தெரிந்தாலும் அவரது பாதுகாப்புக் குறித்து கவலை அடைந்தேன். அவரைப் பாதுகாக்க என்னால் முடிந்த அளவு முயற்சிப்பதில் உறுதியாக இருந்தேன்.

அடுத்த இரண்டு வாரங்களில் அந்த ஆபரேஷன் ஒரு நெருக்கடியான கட்டத்தை அடைந்தது. கண்ணனிடம் அவ்வப்போது தகவல்களை அளிக்குமாறு நான் ‘டிரேடரிடம்’ கேட்டுக் கொண்டேன். டிரேடரை என்னிடம் அழைத்து வந்த எஸ்.பி. — 2 அதன்பிறகு இந்த ஆபரேஷனில் இல்லை. குறுகிய நோக்கம் உடையவராக இருந்தால், இத்தகைய முடிவுக்கு கோபமடைந்திருப்பார். ஆனால் எஸ்.பி. — 2 எந்த வம்பும் செய்யாமல் எனது முடிவை ஏற்றுக் கொண்டதன் மூலம் அவரது உண்மையான தொழில்சார் மனப்பான்மையைக் காட்டினார்.

பாண்டிக்கண்ணனும் ‘டிரேடருடன்’ அவர் வைத்திருந்த அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொண்டார். இந்த ஆபரேஷனில் கடின உழைப்பு செலுத்திய அவரும்கூட இந்த முடிவை மிகப்பெரும் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டார். இதற்கிடையில், நமக்குக் கிடைத்த ஒற்றனின் உறவு துண்டிக்கப்பட்டதும் சற்று களைப்பு ஏற்பட்டது.

ஒரு சில நாட்கள் கழித்து எஸ்.பி. — 1 அதாவது கண்ணன் அழைத்தார். ‘‘சார் எங்களுக்கு தொடர்பு கிடைச்சிருச்சு. டிரேடரை, வீரப்பன் குழுவோடு அனுப்பிட்டோம்’’ என்று சொன்னார்.

# “அவரு எம்.ஜி.ஆரின் மருமகனா?” உறுமிய வீரப்பன்

வீரப்பன் கேங் ஆட்களின் பாதுகாப்போடு, ‘டிரேடர்’ ஒரு சக கிராமவாசியால் கேங்கின் புதிய பதுங்குமிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அந்த கிராமவாசியின் சங்கேதப் பெயர் ‘ரெட்’. வீரப்பன் கேங்கோடு தொடர்பு வைத்திருந்தவன். ‘டிரேடரை’ ஒரு பேருந்தில் ஏற்றிச் சென்ற ‘ரெட்’, அடுத்த ஸ்டாப்பில் அவரை இறக்கி அங்கிருந்த ஒரு புதிய வழிகாட்டியிடம் ஒப்படைத்தான்.

‘டிரேடர்’ அதன் பிறகு மேலும் சில பேருந்துகள் மற்றும் வழிகாட்டிகளிடம் மாற்றப்பட்டு கடைசியாக ஒரு குள்ளமான, சுருட்ட முடி நிறைய வளர்த்திருந்த, அதே சமயத்தில் அந்த மலைவாசிகளைப் போன்ற அவ்வளவு சதைப்பிடிப்பில்லாத உருவம் கொண்ட ஒருவனால், சேர வேண்டிய இடத்திற்குச் சென்று சேர்ந்தார்.

ஒகேனக்கல் அருவிக்குப் பக்கத்தில் தான் வந்திருப்பதாக டிரேடருக்குத் தெரிந்தது. இங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில்தான் அவர் பயணத்தைத் தொடங்கிய இடம் இருந்தது. சுற்றி வளைத்த பாதைகளின் வழியே 200 கிலோ மீட்டர் பயணம் செய்து இந்த இடத்திற்கு வந்திருந்தார். யாரும் பின்தொடரக் கூடாது என்ற நோக்கத்தில் இப்படி அவர் அழைத்து வரப்பட்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

வந்து சேர்ந்ததும், கேங்கில் இருப்பவர்களின் முகத்தை அருகில் பார்ப்பதற்கான தைரியத்தை ‘டிரேடர்’ வரவழைத்துக் கொண்டார். வீரப்பனை

அவர் பார்த்த போது அதிர்ச்சியடைந்தார். முழுவதும் நீர்ச்சத்து இழந்தவனைப் போலவும் சலிப்புடன் இருப்பவனைப் போலவும் அவன் காட்சியளித்தான்.

வீரப்பனைக் காட்டிலும் கிட்டத்தட்ட பத்து வயது குறைவான கோவிந்தன், பார்ப்பதற்கு நல்ல உடல்வாகைப் பெற்றிருந்தான். நடுத்தர உருவமாக இருந்த போதிலும் அவன் வலிமையான தோள்களைப் பெற்றிருந்தான். அவனது கண்கள் எப்போதும் அலைபாய்ந்து கொண்டிருந்தன.

மேலும் அங்கு இருந்த இருவர் சந்திரகவுடாவும் சேத்துக்குளியும்தான். கூட்டத்தில் இருந்து, சேத்துமணி கொஞ்சம் தள்ளி இருந்தான். அவனை மற்றவர்கள் எடுபிடியாக நடத்தினர் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவனுக்கு அது கோபத்தை வரவழைத்தாலும் அதை அவன் நன்கு மறைத்துக் கொண்டான்.

‘டிரேடரின்’ ரகசியம்மிக்க கண்கள் அந்தப் பிரபலமான கொள்ளைக்காரனின் காட்டு பங்களாவை முழுமையாகப் பார்த்தன. அங்கு ஒரு சில பிளாஸ்டிக் ஷீட்டுகள் காணப்பட்டன. பெட்ஷீட்டுகள், போர்வைகள் ஒரு சில அலுமினிய மற்றும் சில்வர் பாத்திரங்கள் இருந்தன. அவர்கள் அடிக்கடி டீ போட்டுக் குடித்தனர்.

அங்கிருந்த திறந்தவெளி சமையலறையில் மசாலா அல்லது பருப்பு இல்லையாயினும் அவற்றின் கவர்ச்சியான டீ வாசனை வீசிக் கொண்டிருந்தது. ஊதுபத்தியின் மணமும் காற்றில் கலந்து வந்தது. ஒரு பாறைக்குக் கீழே சிறிய சிலை இருந்ததை அவர் பார்த்தார்.

அவனது கூட்டத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஒரு சில நபர்களும் சில கிராமவாசிகளும் வீரப்பனுக்கு இப்போதும் உதவிக் கொண்டுதான் இருந்தனர். எனினும் அவன் இந்த மூன்று பேருடன் தனது நெருக்கத்தைச் சுருக்கிக் கொண்டான். அவர்கள் மூவரும் ஆண்டுக்கணக்கில் அவனோடு இருப்பவர்கள். அவர்கள் நான்கு பேரும் எப்போதும் ஒரே இடத்தில் ஒன்றாகத் தூங்குவதில்லை. இரண்டு இரண்டு பேராக இரு ஜோடிக்கும் இடையில் சிறிது இடைவெளி விட்டுத் தூங்குகின்றனர்.

‘டிரேடர்’ வீரப்பனை மரியாதையுடன் வாழ்த்தினார்.

வீரப்பன் உறுமியவாறே கேட்டான். “இந்த எஸ்.டி.எஃப். நாயுங்க ஏன் நம்ம உசிர எடுக்கிறானுங்க?”

‘டிரேடரின்’ இதயம் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டது. அமைதியாக இருப்பதைப் போலக் காட்டிக் கொள்ளப் போராடினார். அவருடைய மூளை வெகு வேகமாக ஓடியது. ‘நம்மைப் பற்றி இவனுக்குத் தெரிந்துவிட்டதோ? ஏதாவது சொல்லி அது எனக்கே பாதகமாகப் போய்விட்டால்’ என்று குழப்பமும் பயமும் ஏற்பட்டது.

அவனாக கட்டாயப்படுத்திக் கேட்டால் ஒழிய எதையும் சொல்வதாக இல்லை என்று முடிவு செய்தார். அது ஒரு புத்திசாலித்தனமான முடிவாகத்தான் இருந்தது.

வீரப்பன் அவரை சந்தேகப்படவில்லை. அவன் கசப்பான அனுபவங்களைப் பற்றிப் பேசினான். வசைமாரி பொழிந்தான். கடைசியாக, “எம்.ஜி.ஆரோட மருமகன் இங்க அடிக்கடி வந்து போய்க்கிட்டு இருக்காப்ல” என்று அவன் சொன்னதோடு அந்த உரையாடல் முடிந்தது.

அவன் என்னைத்தான் அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தான். 1983–85 காலகட்டத்தில் நான் சேலம் மாவட்டத்தில் எஸ்.பி.யாக வேலை பார்த்துக் கொண்டிருந்த போது, நான் அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் உறவினர் என்று ஒரு வதந்தி பரவியது. எனது தந்தை வழித் தாத்தாவும் எம்.ஜி.ஆரின் தந்தையும் கேரளாவின் அக்கம்பக்கத்து கிராமத்துக்காரர்கள் என்று சொல்வார்கள். ஆனால், அவர்கள் இருவருக்கும் தொடர்பு இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. எனவே, நான் எம்.ஜி.ஆரின் உறவினர் அல்ல என்று தொடர்ந்து மறுத்து வந்தாலும் அந்த வதந்தி மறைய மறுத்தது.

ஆனால், வீரப்பன் தன்னுடைய எதிரிகளின் பின்னணி குறித்து அறிந்து வைத்திருந்தான் என்பது இதன் மூலம் தெரிய வந்தது. நான் அவனைப்

பின்தொடர்ந்து கொண்டிருந்த வேளையில், அவனும் கிட்டத்தட்ட அதே வேலையைத்தான் செய்து கொண்டிருந்திருக்கிறான்.

வீரப்பன் தனியாகப் பேசிக் கொண்டிருந்ததை ‘டிரேடர்’ அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். தனக்கு என்ன வேலை சொல்லப் போகிறான் என்ற எதிர்பார்ப்போடு அவர் காத்திருந்தார். ஆனால் வீரப்பன் அவரை ‘‘போ... பிறகு கூப்பிடுறேன்’’ என்று சொல்லி அனுப்பி விட்டான்.

‘டிரேடர்’ குழப்பத்துடன் வீடு வந்து சேர்ந்தார். ரகசியமாக கொஞ்ச காலம் காத்திருந்த பிறகு, கண்ணனிடம் விஷயத்தை விளக்கிச் சொன்னார்.

‘‘இதை வச்சி என்ன செய்யப் போறீங்க?’’ என்று கண்ணனிடம் கேட்டேன்.

‘‘அவரை நம்பலாமான்னு அவங்க பரிசோதனையில இருக்காங்கன்னு நான் யூகிக்கிறேன். ஒரு விஷயம்தான் என்னைக் கவலைப்பட வைக்குது. ‘டிரேடரோட’ வேலை என்னன்னு நமக்குள்ள சிலருக்கு மட்டும்தான் தெரியும். அந்தப் பகுதியில எஸ்.டி.எஃப். ஆட்கள் ஆக்டீவா இருக்காங்க. ஒருவேளை அவங்களே தெரியாம அவரைப் பிடிச்சிட்டாங்கன்னா?’’ என்றார்.

இந்தச் சூழ்நிலையில் ரகசியம் காப்பது தலையாயது என்று எனக்குத் தெரியும். ‘‘டிரேடரைப் பத்தி அதிகம் பேருக்கு நாம தெரியப்படுத்த முடியாது’’ என்றேன்.

தொடர்ச்சியான ஆலோசனைக்குப் பிறகு, கண்ணனும் நானும், ‘டிரேடர்’ வீரப்பனைச் சந்திக்கப் போகும் நேரத்தில் எஸ்.டி.எஃப். ஆட்களை வேறு இடத்தில் ரோந்துப்பணிக்கு மாற்றுவது என முடிவு செய்தோம்.

எனினும் ‘டிரேடர்’ காட்டுக்குள் போகும்போதெல்லாம் அவரது பாதுகாப்பு குறித்து எனக்கும் கவலை இருந்தது. அவர் ஒருவேளை எஸ்.டி.எஃப். துப்பாக்கியில் சிக்கி விட்டால் அது உண்மையில் நகை முரணாகத்தான் இருந்திருக்கும். ஆனால் நல்லவேளையாக அப்படி ஒருபோதும் நடக்கவில்லை.

ஒரு சில நாட்கள் கழித்து, இரண்டாவது முறை சந்திக்க வருமாறு ‘டிரேடருக்கு’ வீரப்பனிடமிருந்து அழைப்பு வந்தது. மீண்டும் அவர் ஒரு சுற்றுப்பாதை வழியாக சென்றார். அந்த சுருட்ட முடி நபர் மறுபடியும் அவரை வழிகாட்டி வீரப்பனின் பதுங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார். அதே பகுதிதான். ஆனால், அந்த இடம் வேறு ஒரு இடமாக இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து ‘டிரேடர்’ மேற்கொண்ட பயணத்தின் கடைசி வழிகாட்டியாக செயல்படப் போகும் ஒருவனிடம் ஒப்படைக்கப்பட்டார்.

‘டிரேடரும்’ அந்த வழிகாட்டியும் ஒரு டீக்கடையில் நின்றனர். வீரப்பன் கேங்கிற்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்கள் அங்கு இருந்தன. அவற்றை எடுத்துக் கொண்டனர். அதன்பிறகு மறுபடியும் ஒரு சிறு பயணத்திற்குப் பிறகு அவர்கள் சென்று சேர்ந்தனர்.

சேத்துக்குளி கோவிந்தன் அங்கு பெரும்பாலான நேரம் ஊசி ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு தனது கிழிந்து போன ஆடைகளைத் தைத்துக் கொண்டே இருந்தான். தனது பழைய துணிகள் கிழிந்து போய் விட்டதால், புதுத் துணிகள் ஏற்பாடு செய்ய முடியுமா என ‘டிரேடரிடம்’ கேட்டான். வீரப்பன் அவரிடம் ஒரு ஆடியோ டேப்பைக் கொடுத்தான். அதை அதிகாரிகளிடம் உறுதியாகச் சேர்த்து விட வேண்டும் என்று கூறினான். அந்த டேப் முழுவதும் அதிரடிப்படையை தவறாக வழிநடத்தும் தகவல்கள் நிறைந்திருந்தன.

அந்த டேப்பில் வீரப்பன், எம்.எம்.ஹில்சை விட்டு நெடு நாட்களுக்கு முன்பே இடம் பெயர்ந்து விட்டதாகவும் தற்போது ஆந்திராவில் இருப்பதாகவும் கூறியிருந்தான். இரண்டு வருடங்களுக்கு முன்பு அவன் அனுப்பி இருந்த டேப்பில் ஆந்திராவில் உள்ள மாவோயிஸ்டுகளான மக்கள் யுத்தக் குழுவைப் பற்றிப் பேசியிருந்தான்.

அந்த டேப்பைக் கேட்ட போது நானும் கண்ணனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். “கொஞ்ச நாட்களுக்கு முன்பு வரை எம்.எம். ஹில்ஸ்சில்தான் இருந்தேன் என்றாவது குறைந்தபட்சம் அவன் ஒத்துக் கொண்டிருக்கிறான்” என்றேன்.

ஆனால் ‘டிரேடர்’ இப்போது வரையில் அவன் எம்.எம்.ஹில்ஸ் பகுதியில் தமிழ்நாட்டு எல்லையில் ஆற்றுக்கு அந்தப்பக்கம்தான் இருக்கிறான் என்று உறுதிப்படுத்தினார்.

கண்ணனும் நானும் ‘டிரேடர்’ சொன்ன தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியில் ஒரு தேடுதல் வேட்டையைத் தொடங்குவது குறித்து சுருக்கமாக விவாதித்தோம். ஆனால் இரண்டு முறையும் ‘டிரேடரை’ வீரப்பன் ஒரே இடத்தில் சந்திக்கவில்லை. அவன் தொடர்ந்து தனது கேம்ப்பை மாற்றிக் கொண்டிருக்கிறான்.

கடந்த காலத்தில் மயிரிழையில் தவறவிட்ட சம்பவங்களை எல்லாம் பரிசீலித்த பிறகு, முழுமையான நம்பகமான தகவல் கிடைக்காத வரையில் தேடுதல் வேட்டையை நடத்த வேண்டாம் என முடிவு செய்தோம்.

“நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு எந்தத் தகவலும் ‘டிரேடரிடமிருந்து’ இதுவரையில் நாம் பெறவில்லை. ஆனால் டிரேடரைப் பொறுத்தவரையில் வீரப்பனின் கேங் புத்துணர்ச்சி பெற்றிருப்பதைப் போலத் தெரிகிறது. கொஞ்சம் அவகாசம் கொடுப்போம்” என்று கண்ணன் கூறினார்.

ஏதோ ஒரு வழியில், டிரேடர் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாகத் தோன்றியது. எனவே நாங்கள் பொறுமையாக இருக்க முடிவு செய்தோம்.

மூன்றாவது சந்திப்பு நிச்சயமாக ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. அந்த சந்திப்பின்போது ‘டிரேடர்’ முழுமையாக ஒரு பகல், ஒரு இரவு அந்த கேங்குடன் தங்கி அவர்களை கொஞ்சம் அதிகமாகக் கவனிக்க முடிந்தது.

# எலிப்பொறியில் சிக்கிய தொழிலதிபர்?

வீரப்பனுக்கு கண்ணில் பிரச்சினை மிகவும் மோசமாகப் போயிருந்தது. அவன் தள்ளாடியதை டிரேடர் கவனித்தார். கோவிந்தனும் வீரப்பனும் பேசிக் கொண்டிருப்பதை 'டிரேடரால்' கேட்க முடிந்தது. அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் எனத் தெளிவாக கேட்க முடியாவிட்டாலும் கண் பிரச்சினை, டாக்டர், துப்பாக்கி போன்ற வார்த்தைகள் 'டிரேடரின்' காதில் அடிக்கடி விழுந்தன.

பேசிக்கொண்டிருந்த அவர்கள் இருவரும் 'டிரேடரை' பார்த்துவிட்டு அமைதியாகி விட்டனர். வீரப்பன் அடுத்து என்ன செய்வான் என்று தெரியாத நிலையில், 'டிரேடர்' அந்த இடத்தைவிட்டு நடக்க ஆரம்பித்தார். வீரப்பன் சைகை காட்டி அவரை அழைத்தான். டிரேடர் இதயம் பயத்தில் படுவேகமாக அடித்துக் கொண்டது.

வீரப்பன் 'டிரேடரை' கண்ணுக்குக் கண் பார்த்தான். "நீ என்னோட சொந்த ஜாதிக்காரன். எனக்கு உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டான்.

"அண்ணா என்னை தர்மசங்கடத்துக்கு ஆளாக்காதீங்க. வேலை முடிஞ்சுதுன்னு நெனச்சிக்குங்க. சொல்லுங்க என்ன செய்யணும்?" என்று கேட்டார் 'டிரேடர்'.

'டிரேடரின்' தோளில் தட்டியவாறு, "எனக்கு கொஞ்சம் துப்பாக்கிகள் வேணும். எனக்கு வேண்டியவர் ஒருவர் இருக்கார். ஜெயிலில் இருக்கார். இன்னொரு வேண்டியவர் டவுனில் இருக்கார். அவங்க எனக்கு உதவி செய்ய முடியும். நீ அவரை ஜெயிலில் சந்திக்கணும். அவரோட பேரு..." என்று

வீரப்பன் முடிப்பதற்குள் இடைமறித்த கோவிந்தன், ‘‘ஏற்கனவே அவங்க தர வேண்டியது என்னாச்சுன்னு மொதல்ல பார்க்க வேணாமா?’’ என்றான்.

வீரப்பன் என்ன பதில் சொல்லப் போகிறான் என ‘டிரேடர்’ கவனித்தார். ஆனால் வீரப்பன் வெறுமனே தலையசைத்து விட்டு, ‘‘ஆமா நீ சொன்னது சரிதான்’’ என்றான்.

அந்த உரையாடல் ‘டிரேடருக்கு’ ஒரு தெளிவைக் கொடுத்தது. வீரப்பன் கோவிந்தனைத்தான் நம்பி இருக்கிறான் என்று அவர் உணர்ந்தார். இதைத்தான் இதயத்துல்லாவிடம் நடத்திய விசாரணையின் போதும் சொல்லியிருந்தார். பெரும் அளவிலான துப்பாக்கிகள் பெறுவதற்காக 5 லட்ச ரூபாய் அட்வான்ஸ் தொகையை, யாரோ ஒருவரிடம் வீரப்பன் கொடுத்ததாகவும், அவர் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடி விட்டதாகவும் இதயத்துல்லா சொல்லி இருந்தார்.

தன்னை அவன் முதுகில் குத்திவிட்டான் என்பதை ‘‘அந்தத் தே... மகன் எனக்குக் காது குத்திட்டுப் போயிட்டான்’’ என்று வீரப்பன் சொன்னான். அவனது குரல் உணர்ச்சிகரமாய்த் துடித்தது. தான் ஏமாற்றப்பட்டோம் என்பதில் அவன் ஆத்திரப்பட்டான். அதைவிட அவனைப் பழிவாங்க முடியாத நிலையில் இருந்தது வீரப்பனை அதிகமாகக் காயப்படுத்தியது.

‘டிரேடர்’ மிகவும் இரக்கம் தோய்ந்த குரலில், ‘‘நான் என்ன உதவி செய்யணும்?’’ என்று கேட்டார்.

‘‘திருச்சி பக்கத்துல ஒரு பெரியவர் இருக்காரு. அண்டர் கிரவுண்டில் நடக்குற ஒவ்வொண்ணும் அவருக்குத் தெரியும். நம்ம பணத்தோட ஓடுன அந்த துரோகி எங்க இருக்கான்னு அவரால சொல்ல முடியும்’’ என்றான் கோவிந்தன்.

அன்று இரவு, வீரப்பன் சகஜமாகப் பேசும் மனநிலையில் இருந்தான். அவன் தனது குடும்பத்தினரைப் பார்க்க முடியாமல் தவிப்பதாகக் கூறினான். ஊட்டிக்குப் பக்கத்தில் ஒரு இடத்தில் தனது மனைவியையும் மகளையும்

பார்க்க திட்டமிட்டதாகவும் கடைசி நிமிடத்தில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகவும் அவன் கூறினான்.

அவன் போஸ்டன் டீ எஸ்டேட் பற்றியும் சொல்லியிருக்கிறான். ‘டிரேடர்’ எங்களிடம் அந்த தகவலைச் சொன்னபோது, அவர் அதை நேரடியாக வீரப்பன் வாயால் கேட்டிருக்கிறார் என்பது உறுதியானது. அதைவிட, இன்னொரு புதிர் அவிழ்ந்தது.

வீரப்பன் குறிப்பிட்ட அந்தப் பெரியவரைச் சந்திப்பதற்கு முன் நானும் கண்ணனும் ‘டிரேடரை’ சந்தித்தோம். அடையாளம் தெரியாத ஒரு வாகனத்தில் அந்தச் சந்திப்பு நடந்தது. அந்தப் பெரியவரை, அதிரடிப்படையில் இருக்கும் கிண்டல் பிடித்த சிலர், பான்ட்டோம் காமிக்ஸில் வரும் ‘ஊஸ் கிழவன்’ என்று கூறினர்.

கண்ணன் ஒரு ஒட்டுக்கேட்பு கருவியை உருவாக்கி இருந்தார். அதைப் பார்த்ததும் ‘டிரேடர்’ பதறிப் போய்விட்டார்.

“இது என்ன?” அவரது குரல் நடுங்கியது.

“இது அங்க நடக்கிற எல்லாத்தையும் கேட்க உதவும்” கண்ணன் அவரிடம் இதமான குரலில் சொன்னார்.

‘டிரேடரின்’ வியர்வைச் சுரப்பி படுவேகமாக வேலை செய்தது. நான் அவரது தோளில் தட்டி, “என்னைப் பொறுத்தவரையில் ஒரு தைரியமான போலீஸ் மாதிரிதான் நீங்க. அதை மனசுல வச்சிக்கிட்டு யோசிங்க” என்றேன். அசௌகரியமாகச் சிரித்தார். அவருக்கு வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

கண்ணனிடம் சைகை செய்தேன். அங்கிருந்து இருவரும் கொஞ்சம் தள்ளிச் சென்று “வீரப்பன் சோதனை போட்டுட்டா என்ன செய்றது? அதைக் கண்டுபிடிச்சிட்டா அவர்கள் அவரைக் கொன்று போட்டுவிடுவார்கள். ஆனா அதுக்கு முன்னாடி ‘டிரேடர்’ ஹார்ட் அட்டாக்குல செத்துடக் கூடாது. அவர் உண்மையில பயந்து போயிருக்கிறார்” என்றேன்.

‘‘அவனுங்களே சோதனை போடவில்லை என்றாலும்கூட, இவரே பயத்துல உளறி காட்டிக் கொடுத்தாலும் கொடுத்திடலாம். இந்தத் திட்டத்தை நாம கைவிட்டு விடுவோம்’’ என்றதும் கண்ணன் ஒப்புக் கொண்டார்.

டிரேடரிடம் திரும்ப வந்து, ‘‘நீங்க இந்த டிவைசை எடுத்துக்கிட்டு போக வேணாம்’’ என்று சொன்னோம். அவர் ஆசுவாசமடைந்தது போலத் தெரிந்தது.

திட்டமிட்டபடி ‘டிரேடர்’ ஊஸ் கிழவனைச் சந்தித்தார். ஆனால் அந்த புத்திசாலிக் கிழவன் தனக்கு எந்த விவரமும் தெரியாது எனக் கூறி திருப்பி அனுப்பி விட்டான். இந்தப் பயணம் எங்களுக்கோ, வீரப்பனுக்கோ எந்தப் புதிய தகவலையும் அளிக்கவில்லை. அடுத்த முறை ‘டிரேடர்’ வீரப்பனைச் சந்திக்கும் போது, அவன் சிறையில் பார்க்க விரும்பும் நபர் யார் என்பதைச் சொல்லலாம் என்று நானும் கண்ணனும் நம்பினோம்.

அதற்குப் பதில் ‘டிரேடர்’ ஒரு அதிர்ச்சித் தகவலோடு திரும்பியிருந்தார். ஒரு பெரிய நகரத்தில் வசிக்கும் குறிப்பிட்ட ஜென்டில்மேன் ஒருவரை டிரேடர் சந்திக்க வேண்டும் என்று கூறியிருந்தான் வீரப்பன்.

அந்த நபரை நாம் ‘மிஸ்டர். எக்ஸ்’ என்று அழைப்போம். வீரப்பன் அளித்த தகவலின்படி ‘மிஸ்டர். எக்ஸ்’ இலங்கையைச் சேர்ந்த விடுதலைப்புலிகள் சிலரோடு தொடர்பு வைத்திருந்த ஒருவர். அவரைப் பயன்படுத்தி, துப்பாக்கிகளை வாங்க முடியும். மேலும் தனக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யும்படியும் வீரப்பன் கேட்டுக் கொண்டான்.

மிஸ்டர் எக்ஸின் பெயரைச் சொன்ன போது எனது கண்கள் அதிர்ச்சியில் விரிந்தன. ‘டிரேடருக்கு’ அந்த எக்ஸைப் பற்றித் தெரியாது. ஆனால் எனக்கும் கண்ணனுக்கும் தெரியும். அவர் ஒரு செல்வச் செழிப்பான மனிதர். ஒரு கவுரவமான குடிமகன் என்ற பெயரோடு இருப்பவர். அவர் மோசமானவர்கள் பக்கம் இருந்திருந்தால், இவ்வளவு ஆண்டுகளாக அவர் முகமூடி அணிந்து வாழ்ந்திருக்கிறார் என்றுதான் அர்த்தம். அபாயகரமான ஒரு கிரிமினலுடனும்

இந்தியாவுக்கு எதிரான சக்திகளோடும் அவர் தொடர்பு வைத்திருக்கிறார் என்பது வெளிப்பட்டது.

நானும் கண்ணனும் உடனடியாக ஒரு திட்டம் போட்டோம்.

வீரப்பன் சங்கடங்களை மீறி ஒரு செல்வாக்குமிக்க மனிதரைச் சந்திக்க ஆர்வமாக இருக்கிறான். அவனது கண்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. காட்டுக்கு வெளியே ஒரு டாக்டர் அவனைப் பரிசோதிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான். துப்பாக்கி வாங்கும் முயற்சி தோல்வி அடைந்தது. அவனால் தனது படைக்குக்கூட புதிய ஆட்களைப் பெற முடியவில்லை. இந்தப் புதிய சூழ்நிலைகளின் அடிப்படையில் நாங்கள் ஒரு திட்டத்தை வகுத்தோம். ஒரு புதிய புதிரை அவிழ்க்க இந்தத் துண்டு துண்டான விஷயங்களை மறுபடி வேறு மாதிரி ஒன்றிணைக்க வேண்டியிருந்தது.

இதற்கிடையில், மிஸ்டர் எக்ஸை, ‘டிரேடர்’ சந்தித்தார். தன்னை ஒரு நண்பர் என அறிமுகப்படுத்திக் கொண்டார். வீரப்பன் ‘டிரேடரிடம்’ சொல்லி அனுப்பிய பாஸ்வேர்டு கேட்டார். ‘டிரேடர்’ அந்தப் பாஸ்வேர்டைச் சொன்னதும் அவன் வீரப்பனின் தூதர்தான் என்பதை எக்ஸ் உறுதிப்படுத்திக் கொண்டார். பின்னர் அங்கிருந்து மற்றொரு நகரில் உள்ள கெஸ்ட் ஹவுஸ் ஒன்றில் சந்திக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த முறை ‘டிரேடரிடம்’ அந்த ஒட்டுக்கேட்பு கருவியைக் கொடுத்து ஒரு உத்தரவாதமும் கொடுத்தோம். ஏதேனும் தவறாக நடந்துவிட்டால், உடனடியாக அவருக்கு உதவ ஒரு குழு தயாராக இருக்கும் என்று கூறினோம்.

“அண்ணன் என்ன சொல்லி விட்டாரு?” என, அந்த அறைக்குள் ‘டிரேடர்’ நுழைந்தபோது, எக்ஸ் கேட்டார்.

“அவரு நல்லா இருக்காரு. ஆனா அவருக்கு சில உதவிகள் தேவைப்படுது. ஒரு கண் மருத்துவரை நீங்க ஏற்பாடு செய்ய முடியுமா?

அதுவுமில்லாம, இலங்கையில உங்களுக்கு இருக்கிற தொடர்பை வச்சி, ஆயுதங்கள் ஏற்பாடு செய்ய முடியுமா?'' என்று 'டிரேடர்' கேட்டார்.

''எனக்கு கொஞ்ச நாள் அவகாசம் வேணும். என்னோட ஆள்கிட்ட தகவல் சொல்லி அனுப்புறேன்னு அவர்கிட்ட சொல்லுங்க'' என்றார் எக்ஸ்.

'டிரேடர்' அந்த கெஸ்ட் ஹவுசை விட்டு வெளியே போன உடன், சாதாரண உடையணிந்த அதே சமயத்தில் கடுமையான தோற்றத்துடன் சிலர் அதிரடியாக உள்ளே நுழைந்தனர். அவர்களில் ஒருவர், தான் எஸ்.டி.எஃப். அதிகாரி என அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அவர்களைப் பார்த்ததும் எக்ஸின் முகம் வெளுத்துப் போய் விட்டது. இடிந்து போய் இருக்கையில் உட்கார்ந்தார். உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. இவ்வளவு நாட்களும் அவருடைய நிழலுலகத் தொடர்பை மறைத்து வைத்திருந்தது ஆச்சரியம்தான். அவர் ஒரு மோசமான நிழலுலக நடவடிக்கைகளை மேற்கொள்பவராக இருந்திருக்க வேண்டும்.

''என்னை என்ன செய்யப் போறீங்க?'' என்றபடி அவர் கிட்டத்தட்ட அழுதேவிட்டார்.

## [ஆயுத வியாபாரியாக மாறிய அதிரடிப்படை வீரர்!]

வீரப்பனுடன் ரகசியத் தொடர்பிலிருந்த மிஸ்டர் எக்ஸ் எங்களிடம் வசமாக சிக்கினார்.

பெரிய மனிதர் போர்வையில் இருந்த, தனது வேடம் கலைந்து விட்டதே என்ற குற்ற உணர்ச்சியில் அழுது முடித்தார்.

அவர் தப்பிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்று அவருக்குச் சொல்லப்பட்டது. வீரப்பனைப் பிடிக்க உதவினால், அவரைக் காப்பாற்றுவதற்கான பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று சொன்னோம்.

நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவருக்கு ஒரு துடுப்புக் கிடைத்தது போல உடனடியாக அந்த வாய்ப்பை எக்ஸ் பற்றிக் கொண்டார். “எதுன்னாலும் சொல்லுங்க. செய்றேன். ஆனா என்னை விட்டுடுங்க” என்று அவர் சொன்னார்.

நல்லது. சில நாட்கள் கழிச்சு, நீங்க வீரப்பன்கிட்ட உங்க ஆளை அனுப்புங்க. அது உங்களோட தகவல் உண்மைன்னு வீரப்பனை நம்பச் செய்யும். இலங்கையில இருக்கிற உங்களோட நண்பர்களுடன் தொடர்பு கொண்டதாகவும், அவங்க ஒரு ஆளை அனுப்புவாங்க அப்படீன்னும், அந்த ஆள் வீரப்பனை திருச்சி அல்லது மதுரைக்கு பாதுகாப்பா கூட்டிட்டு வருவார். அதன்பிறகு வீரப்பனை இலங்கைக்கு அழைத்துச் செல்வார்கள். இங்கே ஆயுதப் பேச்சுவார்த்தை முடிந்து ஆயுதங்கள் கைமாறியதும், வீரப்பன் திரும்ப இந்தியாவுக்கு வந்துடலாம் என்றும் உங்க ஆள்கிட்ட சொல்லி அனுப்புங்க.

“அந்த ஆள் யாரு? அவனைப் பாதுகாப்பா அழைச்சிட்டுப் போகப் போறது யாரு?” எக்ஸ் கேள்வி கேட்டார்.

“அதைப்பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். இந்தத் தகவலை அனுப்புறதோட உங்களோட வேலை முடிஞ்சுது. இடையில ஏதாவது ஏடாகூடம் செய்ய முயற்சிக்காதீங்க. அப்புறம் எல்லாமே வில்லங்கமா போயிடும்.”

எக்ஸ் தனது அறையைச் சுற்றிலும் பார்த்தார். தப்பிப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவுதான். “நீங்க அவனைக் கொன்றுவிடக் கூடாது. அப்படிச் செய்வீங்களா?” என்று கேட்டார்.

“அவனை உயிரோடு பிடிப்பதற்கு உரிய அத்தனை வாய்ப்புக்களையும் முயற்சி செய்வோம்” என்று அந்த எஸ்.டி.எஃப். அதிகாரி உறுதி அளித்தார்.

எக்ஸ் தனது முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டார். அவரது தோள்கள் குலுங்கின. சிறிது நேரத்திற்குப் பின் அவரது வார்த்தைகள் மிகக் குறைந்த சத்தத்தில் வெளியே வந்தன. ஆனால் அவற்றை அவரால் திரும்பப் பெற முடியாது.

“நல்லது. நான் செய்றேன்.”

சில மணி நேரம் கழித்து, நானும் கண்ணனும் அடுத்து என்ன செய்வது என்பது பற்றி ஆலோசனையில் இறங்கினோம்.

“நாம் ஒரு ஒற்றனை நியமிப்பதாக இருந்தால், அவரை வீரப்பனுக்கு மட்டுமல்ல, அதிரடிப்படையில் இருக்கும் பெரும்பாலானவர்களுக்கும் அடையாளம் தெரியக் கூடாது. மேலும் அந்த மனிதர் புத்திசாலியான, தைரியமான, ஆற்றல்மிக்க அதே சமயத்தில் துப்பாக்கி சுடுவதில் வல்லவராகவும் இருக்க வேண்டும். பெரிய சவாலான வேலைதான்” என்று பதற்றத்துடன் சொன்னார் கண்ணன்.

அப்படி பொருத்தமான ஒருத்தர் யார் என்று எனது மூளையை ஓட விட்டேன். எனக்கு துரை நினைவுக்கு வந்தார். நான் சென்னையில் போலீஸ் கமிஷனராக இருக்கும்போது ரவுடி வீரமணியைச் சமாளிப்பதற்காக திருச்சியில் இருந்து சென்னைக்கு அவரை அழைத்து வந்ததும் மெரினா பீச்சில் அந்த கேங்ஸ்டருடன் நடந்த வியக்கத்தக்க என்கவுன்டரும் நினைவுக்கு வந்தது.

“அப்படிப்பட்ட ஒரு ஒருத்தர் என் வசம் இருக்கிறார்” என்று புன்னகைத்தேன்.

ஜூலை 2004.

துரை சிலையைப் போல கச்சிதமாக அமர்ந்திருந்தார். அவரது கண்கள் நிலைகுத்தி நின்றன. இடதும் வலதும் பின்னர் சுற்றிலும் பின்னர் பின்னாலும் பார்த்தார். நிலவில்லாத அந்த இரவில் கும்மிருட்டில் அவரால் எதையும் பார்க்க முடியாமல் போராடினார்.

“நான் இங்கே என்ன செஞ்சிக்கிட்டு இருக்கேன்?” துரை பதற்றப்பட்டார்.

காட்டில் பழக்கமில்லாதவர் என்றாலும் இந்தகந் காட்டில் இதுவே முதல்முறை துரைக்கு.அதுவும் இப்படி ஒரு துணிச்சலான வேலைக்காக காட்டிற்குள் வந்ததில்லை. காட்டின் ஒரு ஓரத்தில் டிரேடர் மட்டுமே தன்னுடன் இருக்க, வீரப்பன் கேங்கைச் சந்திப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தார். குறுகிய காலத்தில் துரை, அதிரடிப்படையின் முன்னணிப் படை வீரராகி விட்டார்.

அந்த மிகப்பெரும் பொறுப்பின் சுமை அவரை அழுத்த ஒரு கணம் தொண்டை அடைத்துக் கொண்டதைப் போல உணர்ந்தார். இதற்காக அவரை அடுத்த நாளே அதிரடிப்படையில் சேர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டபோது அவர் மறுப்பேதும் சொல்லவில்லை.

ஒரு அடையாளம் தெரியாத கார் துரையை சத்தி பேருந்து நிலையத்தில் இருந்து அதிரடிப்படையின் பையரிங் ரேஞ்சுக்கு அழைத்துச் சென்றது. அங்கு தானே பயிற்சியாளராகவும் தனது பயிற்சிக்கு தானே மாஸ்டராகவும்

இருப்பதை உணர்ந்தார். அவரின் கூர்மையான நெடுநாள் திறனை 12 டார்கெட்டுகளை வைத்து மேலும் மெருகேற்றினார். அந்த டார்கெட்டுகளில் பெரும்பாலானவை வீரப்பனின் உருவம் வரையப்பட்ட கார்ட்போர்டு அட்டைகள். ஓய்வுபெற்ற தமிழ்நாடு சிறப்புப் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுவாமிநாதனின் கண்காணிப்பில் அவர் பயிற்சி எடுத்துக் கொண்டார்.

அங்கே ஆயுதங்களின் அணிவகுப்பே இருந்தது. எனினும் துரை கவனம் செலுத்தியது 9 எம்.எம். புரோனிங் மற்றும் அதே காலிபரில் உள்ள ஒரு ஹெக்லர் அண்ட் கோச் சப் மெஷின்கன் ஆகிய துப்பாக்கிகளில்தான்.

காட்டு வாழ்க்கையில் அவர் பெற்ற சிறு பயிற்சி, பரிதாபகரமானதாகவும் போதுமானதாகவும் இல்லை என்றும் அவர் உணர்ந்தார்.

"என்னால் இதைச் செய்ய முடியாது" என்று நினைத்தார். பீதி உருவானது. ஆனால் பிறகு அவர் எனது விளக்கத்தைக் கேட்டு தனக்குத்தானே உறுதியை வரவழைத்துக் கொண்டார். "இது ஒரு கடினமான, அபாயமான பணிதான். இங்கே இதற்கான ஆட்கள் இல்லை என்பதில்லை. நீங்கள் எத்தகைய சிக்கலான சூழலிலும் நிதானமாக இருப்பீர்கள். அதனால்தான் நான் உங்களைத் தேர்வு செய்தேன்" என்று அவருக்கு விளக்கினேன்.

காட்டில் குத்துக்காலிட்டு அமர்ந்த அவர், வாயில் இருந்து வந்த ரத்தத்தை காறித் துப்பினார். அவர் உடம்பைக் கவனித்துக் கொள்ள மாட்டேன் என்கிறார் என்று அவரது மனைவி, தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு புகார் சொல்லியிருந்தார். நான்கூட அவரது உடம்பைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி கூறியிருக்கிறேன். ஆனால் இப்படி ஒரு பதற்றமான நடவடிக்கையின் போது அது சாத்தியமற்றது என நாங்கள் இருவருமே அறிந்திருந்தோம்.

துரைக்கு அருகே அமர்ந்திருந்த டிரேடர் நடுங்கிக் கொண்டிருந்தார். "அது இவருதானா?" என்று துரையைக் காட்டி கேட்டார் வழிகாட்டி.

டிரேடர் தலையசைத்தார். “ஆமாம் இவர் ஒரு ஆயுத வியாபாரி. இவரு அண்ணனுக்கு பயன்படுவார்” என்றார்.

வழிகாட்டி துரையை தலையில் இருந்து கால்வரை பார்த்தார். துரை பதிலுக்கு அச்சமின்றிப் பார்த்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு, தன்னைப் பின்தொடருமாறு வழிகாட்டி சைகை செய்தார். துரையும் டிரேடரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு டிரேடர் தலையை அசைத்தார். இருவரும் அந்த வழிகாட்டியைப் பின்தொடர்ந்து காட்டுக்குள் சென்றனர்.

ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அதிரடிப்படையின் இரண்டு குழுக்கள் துரையைப் பின்தொடர்ந்தன. ஒரு குழுவை ராஜராஜன் வழி நடத்தினார். மற்றொரு குழுவை நான் வழி நடத்தினேன். திடீர் சத்தம் எதுவும் வராமல், பாறைகள், புதர்கள் மற்றும் அந்தப் பாதையில் சிதறிக் கிடக்கும் கூழாங்கற்களில் நழுவி அல்லது தடுக்கி விழுந்து விடாமல் நாங்கள் எச்சரிக்கையுடன் நடந்தோம்.

துரை ஒளிரும் குச்சிகளை ஒவ்வொரு 100 மீட்டர் தொலைவிலும் போட்டுக் கொண்டே சென்றார். நாங்கள் அணிந்திருந்த இரவு நேரக் கண்ணாடி வழியே அவை ஒளிர்ந்து, ‘ஹான்செல் அண்ட் கிரிடெல்’ கதையில் ஹான்செல் விட்டுச் சென்ற கூழாங் கற்களைப் போல, எங்களுக்குப் பாதை காட்டின.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அந்தக் குச்சிகள் மறைந்து விட்டன. துரை நிச்சயம் தனது இலக்கை அடைந்திருப்பார் என்று தோன்றியது. எங்களுக்குப் பதற்றம் அதிகரித்தது. மலைப்பாதையில் நடந்து அனுபவம் வாய்ந்தவர்கள் முன்வந்து, துரையும் மற்றவர்களும் நடந்து சென்ற பாதச்சுவடுகளைப் காண்பித்தனர். அதைப் பின்தொடர்ந்தோம்.

இதற்கிடையில் அவர்கள் மூவரும் ஒரு காய்ந்து போன ஓடையை அடைந்தனர். வழிகாட்டி அவர்கள் இருவரையும் அங்கேயே நிற்குமாறு சைகை காட்டினார்.

“எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும்?” என துரை சைகையிலேயே கேட்டார்.

தெரியாது என்பதைப் போலத் தோளைக் குலுக்கிய வழிகாட்டி திரும்பிச் சென்றார்.

அது ஒரு நீண்ட காத்திருப்பாகத்தான் இருந்தது.

அதிகாலை மூன்று மணி ஆனது. டிரேடர் பொறுமை இழந்தவராக அங்கிருந்த ஒரு பாறையில் சிறு கல்லை வைத்து அரை நிமிட இடைவெளியில் மூன்று முறை தட்டி ஒலி எழுப்பினார். அதற்குப் பதிலாக மரத்தில் ஒரு மரக்கட்டையை வைத்து மூன்று முறை தட்டும் ஒலி எழுப்பப்படும். அப்படி ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று காதைத் தீட்டிக் கேட்டுப் பார்த்தார். எந்த சத்தமும் இல்லை.

நிமிடங்கள் தாங்க முடியாத அளவுக்கு மெதுவாக நகர்ந்தன. திடீரென துரை வாந்தியெடுத்தார்.

# காட்டிலிருந்து வெளியே வருகிறான் வீரப்பன்?

திடீரென துரை வாந்தி எடுக்க, தன்னிடம் இருந்த கடைசி சில சொட்டுத் தண்ணீரை ஒரு துணியில் ஊற்றி, அதைக் கொண்டு தனது உதட்டை துடைத்துக் கொண்டார். அதன்மூலம் உதட்டில் இருந்த கசப்புச் சுவையைப் போக்க முயற்சித்தார். எலும்புகளின் ஆழம் வரையில் சோர்வு ஊடுருவ, இரவு மறைந்து மகத்தான வண்ணங்களுடன் விடியல் வந்தது.

நாம் கிளம்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது என வழிகாட்டி சைகை செய்தார். துரை எழுந்தார். உடல் வலியைப் போக்க முறுக்கிக் கொண்டார். கால் மரத்துப் போனதைப் போல உணர்ந்தார். அந்த கேங் வரவில்லை என்பதால் தனக்கு வெறுப்பு ஏற்பட்டதா அல்லது நிம்மதி ஏற்பட்டதா என அவருக்கு உறுதியாகத் தெரியவில்லை. வழிகாட்டி பல்லைக் காட்டிச் சிரித்தார். அவரது பற்கள் கூர்மையாகவும் மஞ்சள் நிறத்திலும் காட்சியளித்தன. அது துரைக்கு ஆதிகால மனிதனை நினைவுபடுத்தியது. பல மணி நேரத்திற்குப் பிறகு அந்த வழிகாட்டி முதல்முறையாகப் பேசினார். “பொறுமையா இரு... நாம மறுபடியும் சந்திப்போம்.”

வீரப்பன் திடீர் திடீரென்று தனது திட்டத்தை மாற்றுவதை எஸ்.டி.எஃப். பல ஆண்டுகளாக அனுபவித்து வந்திருக்கிறது. எனவே, இப்போது அவன் வாக்குப்படி நடந்துகொள்ளவில்லை என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவன் அந்த மூன்று பேரிடம் ஏதேனும் சந்தேகப்படும் படியான விஷயம் இருக்கிறதா எனக் கண்காணித்திருக்கலாம். எங்களின் உள்ளுணர்வு சரிதான் என நெடுநாட்களுக்குப் பின் உறுதியானது.

துரை நீண்ட நாள் தாமதமான தனது மருத்துவப் பரிசோதனைக்காக சென்னைக்குத் திரும்பினார். இரண்டு நாட்களில் டிரேடர் மறுபடியும் ‘வரும்

வாரத்தில் அந்த ஆயுத வியாபாரியை காட்டிற்குள் அழைத்து வருமாறு' வீரப்பன் தன்னிடம் கேட்டுக் கொண்டதாகக் கூறினார்.

துரையின் மருத்துவ சிகிச்சை மறுபடியும் பாதியில் நிறுத்தப்பட்டு, அவர் சத்திக்கு விரைந்தார்.

ஜூலை 27.

டிரேடர், வழிகாட்டி மற்றும் துரை ஆகிய மூவரும் மீண்டும் காட்டிற்குள் நுழைந்தனர். அப்போது சென்னையில் வீரமணி என்கவுன்டர் செய்யப்பட்டு சரியாக ஒரு வருடம் முடிந்திருந்தது. துரை அதை தனக்கு நல்ல சகுனம் என எடுத்துக் கொண்டார். அவர்களின் சந்திப்பிடம் சின்னார் ஆற்றுக்கும் பெண்ணாகரத்திற்கும் இடையே இருந்தது.

இந்த முறை துரைக்கு காடு அதிக சவால்களைக் கொடுக்கவில்லை. ஆனால், அவரை யாரோ கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று மட்டும் உணர்ந்தார். ஒரு பெரிய புளிய மரத்தின் நிழலில் அவர்கள் காத்திருந்தனர்.

திடீரென்று இரண்டு உருவங்களின் நடமாட்டம் தெரிந்தது. இரண்டு மனிதர்கள். அனிச்சையாக துரையின் உள்ளங்கை மறைத்து வைதந்திருந்த துப்பாக்கியை வருடிக் கொடுத்தது. வழிகாட்டிக்கு அந்த மனிதர்களைத் தெரிகிறதா என துரை கவனித்தார். வழிகாட்டி வெறுமையாகப் பார்த்தார். அந்த இரண்டு மனிதர்களும் காட்டில் மூன்று அந்நியர்களைப் பார்த்ததால் அவசரமாகப் பின்வாங்கினர்.

அந்தக் கணத்தில் சந்தடிமிக்க நகர வாழ்க்கை அவருக்கு நினைவுக்கு வந்தது. இப்படி முடிவற்றுக் காத்திருப்பதைவிட ஏதேனும் நடந்தால் நல்லது என்று அவர் நினைத்தார். இந்த சோர்வைப் போக்க ஒரு துப்பாக்கிச் சண்டை நடந்தால்கூட அது வரவேற்கத்தக்கது என்று அவர் எண்ணினார்.

ஆனால், அவரது விருப்பம் நிறைவேறவில்லை. அந்த இரவு முழுவதும் எந்தத் தொடர்பும் இன்றிக் கழிந்தது.

கடைசியாக துரை சோர்ந்து போய், வழிகாட்டியைப் பார்த்து தனது புருவத்தை உயர்த்தினார். வழிகாட்டி ஒன்றும் நடக்க வாய்ப்பில்லை என்று தலையாட்டினார். துரை தனது புலம்பலை அடக்கிக் கொண்டு எழுந்தார்.

“எனக்கான அந்த நாள் வரும்” என்று தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக்கொண்டு திரும்பினார்.

அக்டோபர் 2004

என் அறைக்குள் கண்ணன் உற்சாகத்துடன் அதிரடியாக நுழைந்தார்.

“சார் ஒரு நல்ல செய்தி. அந்த கேங் மறுபடியும் மிஸ்டர். எக்ஸை தொடர்பு கொண்டிருக்கிறது. தர்மபுரியில இருக்கிற ஒரு டீக்கடையில சந்திக்கச் சொல்லி அவங்க கேட்டிருக்காங்க.”

நான் கூர்மையாகப் பார்த்தேன். வீரப்பனை துரை சந்திக்க முயற்சித்துத் தோல்வி அடைந்து இரண்டு மாதங்கள் கடந்திருந்தன. அதன் பிறகு அந்தப் பாதை முற்றிலும் அடைக்கப்பட்டு விட்டது.

அந்த நேரத்தில் மிஸ்டர். எக்ஸ் தனது பயன்பாட்டை மற்றொரு ரகசிய நடவடிக்கையில் நிரூபித்தார். இந்த முறை கண்ணனின் தந்தையை எங்களின் கொரியராக பயன்படுத்தினோம். எஸ்.டி.எஃப். ஆளாக இருக்குமோ என்ற சந்தேகம்கூட எழாத வகையில் ஒருவரைப் பயன்படுத்த வேண்டும் என்று நினைத்ததால் அவரைப் பயன்படுத்தினோம். கண்ணனின் தந்தை நவநீதகிருஷ்ணன் இந்திய விமானப் படையில் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அறுபது வயதிலும் ஆரோக்கியமாகவும் விழிப்போடும் இருந்த அவர் அந்தப் பணியை மிகச் சிறப்பாகச் செய்தார். அந்த பேக்கேஜை வாங்கிக் கொண்டு தன்னை யாரும் பின்தொடராமல் இருப்பதற்கான அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, ஒரு தேர்ந்த உளவாளியைப் போல வெற்றிகரமாகத் தனது பணியைச் செய்து முடித்தார்.

எக்ஸ் உடன் புதிதாகத் தொடர்பு கிடைத்தது என்ற செய்தி, நானும் கண்ணனும் தவிப்புடன் காத்துக் கொண்டிருந்ததை முடிவுக்குக் கொண்டு

வந்தது.

“அவர்கள் எப்படி தொடர்புக்கு வந்தார்கள்?” என்று கேட்டேன்.

“போர்வையை நினைவிருக்கா சார்?” என்றார் கண்ணன்.

“அவரோட குழந்தையின் படிப்பை நாம பாத்துக்கிட்டா நமக்கு இன்ஃபார்மரா வேலை பார்க்கிறதா அவர் ஒத்துக்கிட்டு இருந்தாரில்லையா? அதிர்ஷ்டவசமா எக்ஸ்கிட்ட தகவல் சொல்ல போர்வையைத்தான் வீரப்பன் கேங் கொரியரா பயன்படுத்தி இருக்கு. போர்வை நம்மகிட்ட தகவலைச் சொல்லிட்டார். அதேசமயம் எக்ஸும், நாங்கள் கேட்காமலே எங்களிடம் அந்த தகவலைச் சொல்லிவிட்டார். ஆக நமக்கு இரண்டு இடத்துல இருந்து ஒரே மாதிரியான தகவல் கிடைச்சிருக்கு. ஆனா, ஒருத்தர் நம்மகிட்ட தகவல் சொன்னது இன்னொருத்தருக்குத் தெரியாது. இதை விட இந்தச் செய்திக்கு வேற நம்பகத்தன்மை தேவை இல்லை” என்றார்.

“அவங்க டிரேடரை தொடர்பில் இருந்து கழட்டிவிட முடிவு பண்ணிட்டாங்க போலத் தோணுது” என்று சொன்னேன். தொடர்ந்து, “தர்மபுரியில எக்ஸ் மேல ஒரு கண் வச்சிருக்கணும். ஒரு சில ஆளுங்க சாதாரண உடையோட அவரை நிழல் போலத் தொடரணும். ஒரே ஆளே திரும்பத் திரும்ப ரொம்ப நேரம் அவரைச் சுத்திக்கிட்டே இருக்காம பாத்துக்கணும்” என்றேன்.

அக்டோபர் 16.

மிஸ்டர் எக்ஸ் குறித்த நேரத்துக்கு அந்த டீக்கடைக்கு வந்துவிட்டார். தான் ஒரு பெரும் பணக்காரர் என்று காட்டிக் கொள்ளக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார். கொஞ்ச நேரம் கழித்து ரெட் அங்கு வந்தார். அவருக்கு எதிரே அமர்ந்து ஒரு டீக்கு ஆர்டர் செய்தார். அதுவரை எக்ஸை, ரெட் கண்டுகொள்ளவே இல்லை. சில நிமிடங்களுக்குப் பிறகு, டீ வந்தது. ரெட் எடுத்து இரண்டு வாய் குடித்து விட்டு, எக்ஸ்க்கு முன்னாள் ஒரு சின்னக் கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந்த சர்க்கரையை தன் பக்கமாக நகர்த்துமாறு கேட்டார். எக்ஸ் அந்தக் கிண்ணத்தை அவர் பக்கம் நகர்த்தினார்.

“நீங்க இந்த டவுனுக்குப் புதுசு இல்லையா?” என்று ரெட் கேட்டார். “ஆமா இந்தப்பக்கம் ஒரு வேலையா வந்தேன்” என்று அவரோடு சேர்ந்து எக்ஸும் நடித்தார்.

இதைப் பார்ப்பவர்களுக்கு, இரண்டு முன்பின் தெரியாதவர்கள் உரையாடிக் கொண்டிருப்பது போலத்தான் தெரிந்தது.

சிறிது நேரத்திற்குப் பின் ரெட் இந்த நாடகத்தை நிறுத்தினார். எக்ஸ் அருகில் வந்து மெதுவாக, “அண்ணன், வெளிய வரத் தயாரா இருக்காரு” என்றார்.

“அவரு இவ்வளவு நாள் எங்க இருந்தாரு? நான் அனுப்புன ஆள ஏன் சந்திக்கல?” என்று எக்ஸ் கேட்டார்.

ரெட் தோளைக் குலுக்கியபடி, “அண்ணனை உங்களுக்குத் தெரியும். ஒண்ணுக்கு மூணு தரம் எதையும் செக் பண்ணுவாரு. அவங்க நம்பிக்கையானவங்க தானான்னு பாத்தாரு. தூரத்துல இருந்து பார்த்து உங்க ஆளுங்க நம்பிக்கையானவங்கதான்னு திருப்தி ஆயிட்டாரு. ஆனா எஸ்.டி.எஃப். நடமாட்டம் அந்தப் பகுதியில அதிகமா இருந்துச்சு. இப்ப கொஞ்சம் பரவாயில்ல” என்றார்.

“மொத மொதல்ல எனக்குத் தகவல் கொண்டு வந்த அந்த ஆள் எங்க?” என்று எக்ஸ் கேட்டார். அவர் டிரேடரைக் குறிப்பிட்டார்.

“அவரோட வேலை முடிஞ்சிடுச்சு. அண்ணனோட திட்டத்தைப் பத்தி அதுக்கு மேல அவர் தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமில்ல” என்று கடுப்போடு சொன்ன ரெட், “உங்க கேள்விய எல்லாம் உங்களோட வச்சிக்கிறீங்களா. நான் இப்ப அண்ணனோட தகவலைச் சொல்லட்டுமா?” என்றார்.

“கட்டாயமா” என்று பின்வாங்கிய எக்ஸ், “என்ன சேதி?” என்றார்.

“அண்ணன் வெளியே வரப்போறாரு” என்றார் ரெட்.

அதாவது காட்டை விட்டு வீரப்பன் வெளியே வரப்போகிறான் என்பதுதான் அந்த சேதி.

## ஆபரேஷன் குக்கூன்! மிஸ்டர் எக்ஸிடம் தெளிவாக சொன்னார் ரெட்.

“அண்ணன் அக்டோபர் 18—ம் தேதி வெளியே வருவாரு. உங்க ஆளு பாரப்பட்டி போலீஸ் ஸ்டேஷன் பக்கத்துல இரவு 10 மணிக்கு காத்திருக்கணும். எங்ககிட்ட இருந்து அந்த ஆளுக்கு அன்னைக்குத் தகவல் போகலைன்னா, அவரு அக்டோபர் 20—ம் தேதி மறுபடியும் வரணும். அந்தத் தேதியும் நடக்கலைன்னா, அதுக்குப் பிறகு 22—ம் தேதி உங்க ஆளை அண்ணன்கிட்ட கூட்டிட்டுப் போவாங்க.

பிறகு ரெட் தங்களை வேறு யாராவது கவனிக்கிறார்களா என சுற்றுமுற்றும் பார்த்தார். அப்புறம் ஒரு லாட்டரி டிக்கெட்டை எடுத்தார். அந்த டிக்கெட்டை எக்ஸுக்கு காட்டினார். அதில் 007710 என்ற எண் இருந்தது. பின்னர் அந்த டிக்கெட்டை அவர் கச்சிதமாக பாதியாகக் கிழித்தார். ஒரு பாதியை எக்ஸிடம் கொடுத்தார். அதில் அந்த நம்பர் 007 வரையில் இருந்தது. ரெட் வைத்துக் கொண்ட மற்றொரு பாதியில் 710 என்ற மீதி எண்கள் இருந்தன.

“இது அண்ணனோட பயணச் சீட்டு மாதிரி. உங்க ஆளு, எங்க ஆளுங்களைச் சந்திக்கும்போது அவங்க இந்த இரண்டு துண்டு டிக்கெட்டையும் சரி பார்ப்பாங்க. நாலு பேரை வெளியே கொண்டு வர்றதுக்கு ஏத்த மாதிரி வண்டி ஏற்பாடு செய்யுங்க” என்றார் ரெட்.

“எங்க ஆளும் இருப்பார். கூடவே ஒரு டிரைவர். ஆக மொத்தம் ஆறு பேர். ஒரு பெரிய வண்டியா இருக்கணும். ஆம்புலன்ஸ் வண்டியை ரெடி

செய்யறேன். வேகமாவும் போகும். சந்தேகமும் வராது. போலீஸ் வழியில அதை நிறுத்துறதுக்கும் வாய்ப்பு குறைவு'' என்றார் எக்ஸ்.

இந்த யோசனை நானும் கண்ணனும் நடத்திய ஆலோசனையின் விளைவு. ஒரு வாகனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வீரப்பனுக்காக நாங்கள் பலவிதமான வாகனங்களை யோசித்தோம். கார், ஜீப் எனப் பலவிதமாக யோசித்தோம். அந்த வாகனத்தில் 'Govt' அல்லது 'Press' என்று ஸ்டிக்கர் ஒட்டலாமா அல்லது அதில் ஏதேனும் கட்சிக் கொடியைப் பறக்க விடலாமா என்றுகூட ஆலோசனை செய்தோம். ஏனென்றால் இந்த வாகனங்களை சோதனை செய்ய போலீசார் கொஞ்சம் யோசிப்பார்கள். கடைசியாக நீண்ட விவாதங்களுக்குப் பிறகு ஆம்புலன்ஸ்தான் சரி என முடிவுக்கு வந்தோம். இந்த நடவடிக்கைக்கு 'ஆபரேஷன் குக்கூன்' என்று சங்கேதப் பெயர் வைத்தோம். வீரப்பன் அந்தக் கூட்டுக்குள் அடைபடுவான். அவனால் வெளியே பறக்க முடியாது எனும் நம்பிக்கையில் குக்கூன் (கூடு) என்று பெயர் வைத்தோம். அதன்பிறகு இது பற்றி எக்ஸிடம் விளக்கினோம். வீரப்பன் வெளியே வரும் திட்டம் குறித்த பேச்சுவார்த்தையின்போது ஆம்புலன்ஸ் ஆலோசனையைச் சொல்ல வேண்டும் என அவரிடம் கூறினோம்.

ரெட் தலையை ஆட்டியபடி, ''நல்ல யோசனைதான். உங்க ஆளும் ஆம்புலன்ஸும் திட்டமிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் கண்டிப்பா வரணும்கிறதை நீங்க உறுதிப்படுத்துங்க'' என்றார்.

இரண்டு பேருமே இரண்டு துண்டாகக் கிழிக்கப்பட்ட லாட்டரி டிக்கெட்டில் முழு எண்ணைப் பார்த்தனர். பிறகு ரெட் தனது மீதி டீயைக் குடித்து முடித்துவிட்டு, திடீரென்று எப்படி வந்தாரோ அப்படியே அந்த இடத்தை விட்டுக் கிளம்பி விட்டார்.

மிஸ்டர். எக்ஸ் தர்மபுரியில் இருந்து தனது சொந்த வாகனத்தில் கிளம்பினார். எஸ்.டி.எஃப். குழு ஒன்று சாதாரண உடையில் ஒரு ஆம்னி வேனில் அவரைப் பின்தொடர்ந்தது. குறிப்பிட்ட தூரம் சென்ற பிறகு ஆளரவமற்ற சாலையில் ஆம்னி வேன் எக்ஸ் போகும் வாகனத்தை முந்திச்

சென்று மறித்து நிறுத்தியது. எக்ஸ் தனது வாகனத்தை நிறுத்திவிட்டு அதில் இருந்து இறங்கினார்.

வேனில் இருந்து வெளிப்பட்ட கண்ணன், எக்ஸ் அருகே சென்று, ‘‘எப்படிப் போகுது?’’ என்று கேட்டார்.

நடந்த விபரங்களைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு உடனடியாக தன்னிடமிருந்த பாதி டிக்கெட்டைக் கண்ணனிடம் கொடுத்தார் எக்ஸ்.

‘‘என்னோட வேலை முடிஞ்சிடுச்சு. இதோட தயவு செஞ்சு என்னை விட்டுடுங்க’’ என்று கையெடுத்துக் கும்பிட்டார்.

கண்ணன் அந்த டிக்கெட்டில் இருந்த ‘007’ என்ற எண்ணைப் பார்த்துப் புன்னகைத்தார். அதில் கடைசியாக இருந்த ‘07’ என்ற எண்ணைப் பார்த்தபடி, மற்றொரு பாதி டிக்கெட்டில் இருக்கும் முதல் இரண்டு நம்பர் என்ன என்று கேட்டார்.

‘71’ என்று பதில் சொன்ன எக்ஸ் குழப்பத்துடன் ‘‘ஏன்’’ என்று கேட்டார்?

கண்ணன் பெரிதாகப் புன்னகைத்தார். ஆனால், பதில் ஏதும் சொல்லவில்லை. பின்னர் என்னிடம் விளக்கினார். ‘‘என் அப்பாவோட முதல் பியட் கார் நம்பர் 0771. அது பல வருஷமா எங்களுக்கு உண்மையா உழைச்சுச்சு. ஒருமுறைகூட அது பிரேக் டவுன் ஆனதில்ல. எனக்கு இது ஒரு நல்ல சகுனமா தெரியுது’’ என்றார்.

18 அக்டோபர் 2004

வீட்டில் நான் வழக்கமாக ஆழ்ந்து உறங்கக் கூடியவன். எனது அலாரம் எப்போதும் மீனாதான். நான் வழக்கமாக மரக்கட்டை போலப் படுத்திருப்பேன்.

‘‘காட்டுல அப்படி இருக்க மாட்டீங்கன்னு நம்புறேன். நீங்க தூங்கும்போது வீரப்பன் உங்களைத் தூக்கிட்டுப் போக விட்டுடாதீங்க’’ என்று அடிக்கடி என்னைக் கேலி செய்வார் மீனா.

‘‘அது ஒரு பிரச்சினை இல்லை. என்னோட சகாக்கள் கூப்பிடும் தூரத்தில்தான் இருப்பாங்க. அவங்களுக்கு கூர்மையான காது’’ என்று பலவீனமாக பதிலளிப்பேன்.

ஆனால், முந்தைய இரவு வித்தியாசமாக இருந்தது.

எனது படுக்கை பக்கத்தில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். அதிகாலை நாலு மணி. மறுபடியும் கண்ணை மூடினேன். திரும்பத் தூங்க விரும்பினேன். ஆனால் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதாக உணர்ந்தேன். ஒரு சின்னத் தூக்கம் போட்டாலும் அதுவே எனக்கு ஒரு ஓய்வாக இருந்திருக்கும். நான் படுக்கையில் இருந்து எழுந்தேன். மீனாவுக்கு இடையூறு ஏற்படாதபடி முடிந்த வரையில் சத்தமில்லாமல் எழ முயற்சித்தேன். அவ்வளவு தூரம் நான் கவலைப்பட்டிருக்க வேண்டியதில்லை. ஒரு சில நிமிடங்களில் மீனா எழுந்து விட்டார்.

‘ஒண்ணும் பிரச்சினை இல்லையே’ என்று கேட்டார். தனது துணையைப் பற்றிய இந்த உள்ளுணர்வு நிறைய மனைவிகளிடமும், வெகு சில கணவன்களிடமும் காணப்படும். நான் ஒன்றும் இல்லை என்று தலையாட்டினேன்.

சமாதானம் ஆகாமல் என்னைப் பார்த்தார். ‘‘நான் உங்களுக்குக் கொஞ்சம் காபி கொண்டு வர்றேன்’’ என்றார்.

என்னுடைய வழக்கமான காலைப் பணிகளைத் துவக்கினேன். எள் எண்ணெய் 10 மில்லி எடுத்து வாயில் ஊற்றி ஓசையுடன் 20 நிமிடங்கள் கொப்பளித்துக் கொண்டிருந்தேன். காலை எழுந்து பல் துலக்குவதற்கு முன்பு இப்படிச் செய்தால் அது உடலில் உள்ள நச்சுத்தன்மையைப் போக்கி விடும் என நம்பப்படுகிறது. அது நல்ல மவுத் பிரஷ்னராக இருக்கும் என என்னால் உறுதி அளிக்க முடியும்.

எனினும் இன்றைக்கு நான் அதை பாதியோடு கைவிட்டேன். எனது மூளைக்குள் அளவுக்கு மீறிய எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

நான் டைனிங் டேபிளில் அமர்ந்தேன். மீனா காபி கொண்டு வந்தார். எனக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் எனக்கு அருகில் அமர்ந்தார். நான் காபியைக் குடித்துக் கொண்டிருந்தபோது, அவர் மீது எனக்கு நன்றி உணர்வு பெருக்கெடுத்தது. எங்கள் மகள் அஸ்வினி சென்னையில் இருந்தார்.

தனது கோல்டன் ரெட்ரீவர் நாய்க்குட்டி இறந்து போனதால் மனமுடைந்து இருந்த மகளை தனியாகத் தவிக்க விட்டுவிட்டு, எனது மனைவி எனக்குத் துணையாக சத்தியமங்கலத்துக்கு வந்து விட்டார்.

நான் மீனாவுக்கு நிறையக் கடன்பட்டிருக்கிறேன். ஆனால் அதைச் சொல்ல எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை.

ஆபரேஷன் குக்கூன் பற்றி அவரிடம் நான் பேசவில்லை. எனினும் அவர் என்னை அறிவார். ஏதோ ஒரு பெரிய விஷயம் நடந்து கொண்டிருக்கிறது என்று நன்கு புரிந்து வைத்திருந்தார்.

காலை 6.30—க்கு நான் கண்ணனைப் பார்க்கச் சென்றேன். அடுத்த இரண்டு மணி நேரத்திற்கு தொடர்ச்சியாக மீட்டிங்குகள் நடந்தன. முதலில் சரவணனுடனும் துரையுடனும் பேசினோம். அவர்கள் இருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தினோம். அவர்களுக்குத் தெளிவாகச் செய்ய வேண்டியவை குறித்து விளக்கினோம்.

பிறகு நவாஸ், ராஜராஜன், ஹுசேன் ஆகியோரிடம் தனித்தனியாக விளக்கினோம். போனில் டி.எஸ்.பி. திருநாவுக்கரசு, சம்பத், இன்ஸ்பெக்டர்கள் கந்தசாமி மற்றும் கருப்புசாமி ஆகியோரிடம் பேசினோம்.

காலை 10 மணி. எல்லா நாளும் போலவே நான் எனது அலுவலகத்தில் இருந்தேன்.

நடவடிக்கைகளில் ரகசியத்தைக் காப்பாற்றும் விதத்தில் அலுவலகம் வழக்கம் போலவே தோற்றமளிக்க வேண்டும். முதல் நாள் அதிரடிப்படை தலைமையகத்தில், ஒரு பெரிய மருத்துவ முகாமை நடத்தியிருந்தது. அதற்கு

நன்றி தெரிவிப்பதற்காக நான் டாக்டர்களைச் சந்தித்தேன். பிறகு துப்பாக்கி பயிற்சி எடுக்கும் இடத்திற்குச் சென்றேன்.

அங்கிருந்து கிளம்பும்போது கண்ணன் என்னிடம் வந்து மெதுவாக, ‘‘பங்க்கர் தயார். ஸ்வீட் பாக்ஸுல கரும்பு ஏத்தியாச்சு’’ என்று யாருக்கும் கேட்காதவாறு முணுமுணுத்தார். .

ஆபரேஷன் குக்கூன் பற்றி அதிரடிப்படையில் பலருக்கே தெரியாது.

## ஆம்புலன்சில் ஏற்பட்ட தவறு?

ஆபரேஷன் குக்கூன் திட்டத்தின்படி, சத்தியமங்கலத்திலிருந்து நான் மாலை 5 மணிக்குக் கிளம்பினேன்.

நான் மேட்டூரை வந்தடைந்தபோது இருட்டிவிட்டது. பதினோரு வருடத்திற்கு முன்பு தேவாரம் அவர்கள் இந்த இடத்தில் அதிரடிப்படையைத் தொடங்கியது எனக்கு நினைவுக்கு வந்தது.

எனக்கு பிடித்த ஜீன்ஸும் பச்சைக் கலர் டீஷர்ட்டும் அணிந்திருந்தேன். எனது பர்சில் இருந்த ஐயப்பன் டாலரை அடிக்கடி தொட்டுப் பார்த்துக்கொண்டேன். அந்த பர்சில் பல நேரங்களில் பணம் இல்லாமல்கூட இருந்திருக்கிறது, ஆனால் 1993—ல் இருந்து ஐயப்பன் டாலர் அதில் தொடர்ந்து இருக்கிறது. நான் சபரிமலைக்குப் போகும்போது முதன்முதலாக அந்த டாலரை உருத்திராட்ச மாலையில் பொருத்தி இருந்தேன். எனது வாழ்க்கையில் ஏற்பட்ட அனைத்து ஏற்ற இறக்கங்களையும் அந்த டாலர் பார்த்து வந்திருக்கிறது. தோல்வி ஏற்படும்போது ஆறுதல் வழங்கிக் கொண்டிருக்கிறது. வெற்றி ஏற்படும்போது கடவுளை நன்றியோடு நினைத்துப் பார்க்குமாறு அது என்னை அறிவுறுத்துகிறது.

நான் ஒரு டாடா சுமோவில் இருந்தேன். தேவாரம் அவர்கள் பயன்படுத்திய அதே டாடா சுமோ. அதில் இருந்த டிரைவர் பார்முலா—1 பந்தயத்தில் கார் ஓட்டுபவராக இருந்திருக்க வேண்டும். ஒன்றும் அவசரமில்லை என்று அவரிடம் சைகை காட்டினேன். அவசரமாகப் போக வேண்டிய அவசியமில்லை. சுமோவில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கரில் குருவாயூரப்பன் டிராவல்ஸ் என்று கருப்பு பின்னணியில் தங்க எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. எனது ஏ.கே. 47 மடியில் இருந்தது. 9 எம்.எம். துப்பாக்கி ஜீன்ஸ் பேன்ட்டில் இருந்தது.

கண்ணன் எனக்கு முன்பே ஒரு சிவப்பு ஆம்னியில் சத்தியை விட்டுக் கிளம்பி இருந்தார். பதுங்கி இருக்கும் எஸ்.டி.எஃப். படையின் ஒரு அங்கம் அவர். மற்ற வாகனங்கள் ஆட்களையும் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு எங்களின் சந்திப்பிடமான தர்மபுரியில் உள்ள ஒரு இன்ஸ்பெக்ஷன் பங்களாவுக்குச் சென்றன.

இதற்கிடையில், மிக முக்கியமான வாகனமான ஆம்புலன்ஸ் கோவையில் இருந்து வந்து கொண்டிருந்தது. அந்த ஆம்புலன்ஸுக்கு தான் குக்கூன் என்று பெயர் வைத்தோம்.

கோவையின் நெருக்கடி மிகுந்த சாலைகளை விட்டு வெளியே வந்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார் சரவணன். வெள்ளைக்கலரில் சட்டையும் பேன்ட்டும் அணிந்திருந்தார். குக்கூனின் பயண நேரம் கோவையில் இருந்து தர்மபுரிக்கு நான்கு மணி நேரம். சரவணன், அதிரடிப்படைக்கு சொந்தமான தனக்குப் பிடித்த டெம்போ டிராவலரில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

சரவணன் ஏற்கனவே அந்த வண்டியை பலமுறை ஓட்டி இருக்கிறார். ஆனால் கடந்த ஐந்து நாட்களில் அது அடையாளமே தெரியாத அளவிற்கு மாறி இருந்தது. எங்களின் நிலைய கேட்ஜெட் நிபுணர் உமாபதியும் சரவணனும் அந்த வாகனத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏராளமான மாற்றங்களை அருகே இருந்து கவனித்தனர்.

வடக்குக் கோவையில் உள்ள ஒரு சாதாரண ஒர்க்ஷாப்பில் அந்த வாகனம் மாற்றப்பட்டது. அந்த ஒர்க்ஷாப்பின் ஒரே வித்தியாசமான அம்சம் அதன் பெயர் கண்ணன் ஒர்க்ஷாப்.

நாங்கள் அதை நல்ல சகுனமாக எடுத்துக் கொண்டோம். சரவணன் ஆம்புலன்ஸை ரிப்பேர் செய்யும் இடத்தைவிட்டு நகராமல் காலத்தைக் கழித்தார். டீ சமோசாவிலேயே பொழுதைக் கழித்தார்.

அதில் இருந்த பெரிய சுழலும் முன் இருக்கை ஜெட் விமானத்தில் இருக்கும் வி.ஐ.பி. இருக்கை போன்ற தோற்றம் உடையது. பல மூத்த

எஸ்.டி.எஃப். அதிகாரிகள் பயன்படுத்திய அந்த இருக்கை நீக்கப்பட்டது. பக்கவாட்டு சீட்டும் மாற்றி அமைக்கப்பட்டது. முன்பக்கமும் பின்பக்கமும் பிளைவுட் பலகை வைத்து இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன.

எனினும் அந்தப் பலகையில் ஒரு ஓட்டை வைக்கப்பட்டிருந்தது. ஒரு ஸ்ட்ரெச்சர் அமைக்கப்பட்டது. மூன்று கடவுள் படங்கள் வைக்கப்பட்டன. அதில் நடுவில் இருந்த வெங்கடேஸ்வரா படத்தில் அவரது முன் நெற்றியில் ரகசிய கேமரா பொருத்தப்பட்டிருந்தது. அவ்வப்போது என்ன நடக்கிறது என்ற தகவலை எங்களுக்குச் சொல்ல அந்த ஏற்பாடு. வாகனத்தில் மேற்கூரையில் சுழலும் நீல விளக்கு பொருத்தப்பட்டது. பனியை ஊடுருவும் மஞ்சள் விளக்குகளும் கூடுதலாகப் பொருத்தப்பட்டன.

சரவணன் திருப்தியாக வண்டி ஓட்டிக் கொண்டிருந்தார். அவரது சக பயணி துரையைப் பார்த்தார். அவர் ஒரு சிலையைப் போல அமர்ந்திருந்தார். அவருடைய புஜங்கள் ஜன்னலில் அழுந்திக் கொண்டிருந்தது.

அன்று காலையில்தான் அவர்கள் இருவரும் கண்ணனின் அறையில் சந்தித்துக் கொண்டனர். கண்ணனும் நானும் சரவணனைத்தான் முதலில் அழைத்தோம். உண்மையான திட்டப்படி சரவணன் வாகனம் ஓட்டுவதாக இல்லை. வாகனத்தைத் தயார் செய்வதை மேற்பார்வை செய்வதோடு அவரது பணி முடிவதாகவும், அதன்பிறகு அவர் வாகனத்தை மற்றொரு டிரைவரிடம் ஒப்படைப்பதாகவும்தான் இருந்தது.

சரவணன் ஸ்மார்ட்டானவர். எதையும் விரைவில் புரிந்துகொள்ளக் கூடியவர். ஆனால், அவரிடம் ஒரு மென்மைக்குணம் இருக்கும். அதுதான் என்னைக் கவலைப்பட வைத்தது. இந்த வேலைக்கு அவர் பொருத்தமானவரில்லை என நான் நம்பினேன்.

எனினும் தனக்குப் பிடித்தமான வாகனத்தை விட்டுப் பிரிவதற்கான வாய்ப்பிருப்பதாகத் தெரியவந்த போது அவர் அமைதியாகத்தான் இருந்தார். ஆனால், தன்னை அந்த வாகனத்தில் இருந்து பிரித்தால் அது தனது

பிணத்தின் மீதுதான் நடக்க வேண்டும் என பிடிவாதமாக எனக்கு உணர்த்தினார்.

அது அவருக்கு கவுரவப் பிரச்சினை. எவ்வளவு பெரிய அபாயமான வேலையாக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலை இல்லை. தனது சக எஸ்.டி.எஃப். தோழர்களை கைவிட மாட்டேன் என்பதில் சரவணன் உறுதியாக இருந்தார். சரவணனுக்காக நான் சரி என்று ஒப்புக் கொண்டாலும், எனது முடிவு சரிதானா என்ற சந்தேகம், அடுத்து வந்த பதற்றமான நேரங்களிலும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

சரவணன் தான் வாகனத்தை ஓட்டப் போகிறார் என்று முடிவு செய்ததும், துரை அறைக்குள் அழைக்கப்பட்டார். அதன்பிறகு இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர். அவர்கள் இருவருக்கும் ஆட்களை ஏற்றிக் கிளம்ப வேண்டிய இடமும், அது இறுதியில் சென்று சேர வேண்டிய இடமும் சொல்லப்பட்டது. இது முக்கியமான இடம் என்பதால் கண்ணும் கருத்துமாக விளக்கினோம்.

அந்த வாகனத்தில் சில அபாயகரமான மனிதர்களை பாதுகாப்பாக அழைத்து வரப் போகிறார்கள் என்பது மட்டும்தான் துரைக்கும் கண்ணனுக்கும் தெரியும். ஆனால் அவர்கள் யார் எனச் சொல்லப்படவில்லை.

காலை எட்டு மணி. துரையும் சரவணனும் கண்ணனின் அறையை விட்டு வெளியேறினர். அவர்கள் ஒர்க்ஷாப்புக்குச் சென்றனர். கடைசி நிமிட மாற்றங்கள் சில மேற்கொள்ளப்பட்டன. பக்கவாட்டுக் கதவை வெளியில் இருந்து பூட்டும் விதத்தில் பூட்டு ஒன்று இருந்தது. ஆனால் சந்தேகப்பட்டு வீரப்பன் கேங் ஆட்கள் அந்தப் பூட்டை பூட்டிவிட்டால் என்ன செய்வது என்பதற்காக அந்தப் பூட்டை அகற்ற முடிவு செய்தோம்.

அந்தப் பூட்டு அகற்றப்பட்டதும் அவர்கள் இருவரும் வாகனம் முழுவதும் உன்னிப்பாகக் கவனித்தனர். தங்களது ‘செக்லிஸ்ட்’ பட்டியலைக் கவனித்தனர். சாப்பாட்டு நேரம். அது அவர்களின் மதியச் சாப்பாடு. அன்றைய நாள் முழுவதும் அது ஒன்றுதான் அவர்களின் சாப்பாடு.

ஓர்க்ஷாப்புக்கு எதிரே சென்று தயிர் சாதம் சாப்பிட்டுவிட்டு வந்தனர். வேனில் மேற்கொள்ளப்பட்ட கடைசிக் கட்ட வேலைகளைப் பார்வையிட்டனர்.

ஒரு ஸ்டென்சில் கட் மீது பெயின்ட் ஸ்ப்ரே செய்யப்பட்டது. அதைத் துடைத்து எடுத்த பிறகு இரண்டு பக்கமும் பளிச்சென்ற நிறத்தில் பெரிதாக வார்த்தைகள் தெரிந்தன. SKS Hospital. Selam.

துரை புன்னகைத்தார். திரும்பி ‘‘அடக்கடவுளே’’ என்று கத்தினார்.

‘‘என்ன?’’ சரவணன் பதற்றத்துடன் கேட்டார். ‘‘Salem ஸ்பெல்லிங் தப்பு’’ துரை அந்தத் தப்பை சுட்டிக்காட்டினார். ‘‘நம்முடைய இலக்கு அந்த தப்பைக் கண்டுபிடிக்காமல் விட்டுவிடலாம். ஆனால் போற வழியில யாராவது இதைப் பார்த்துவிடக் கூடாது’’

இருவரும் மெக்கானிக்கைக் கூப்பிட்டு இதைச் சரி செய்ய முடியுமா? என்று கேட்டனர். செய்யலாம். ஆனால் கொஞ்ச நேரம் ஆகும் என்று அவன் சொன்னான்.

‘‘நமக்கு நேரமில்லை. கிளம்புவோம் பார்த்துக்கலாம்.’’ துரை முடிவெடுத்துச் சொன்னார்.

சரவணன் கடைசியாக குக்கூனைத் துடைத்தார். அவசரமாக குளித்துவிட்டு உடை மாற்றிக் கொண்டார். நெற்றியில் குங்குமம் வைத்து அவசரமாக சாமி கும்பிட்டார். பின் இருவரும் கிளம்பினர்.

அப்போதே மணி மாலை 5 ஆகிவிட்டது.

சரவணன் ஒரு அவசரக் கணக்குப் போட்டார். 60 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றாலே போதும் தர்மபுரிக்கு சரியான நேரத்திற்குப் போய்ச் சேர்ந்து விடலாம்.

எப்போதாவது தனது சக பயணியிடம் அவர் பேச முயற்சித்தார். ஆனால் உறுதியாகவும் சிறப்பாகவும் செயல்படக் கூடியவராக இருந்தாலும், பேச்சு

என்பது நமக்கு சரிப்பட்டு வராது என்பதை உணர்ந்ததும், சரவணன் தோளைக் குலுக்கிக் கொண்டு சாலையில் தனது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தார்.

‘‘போலீஸ்காரர்கள் யாரும் நம்மை வழியில் நிறுத்தமாட்டாங்கன்னு நம்புறேன்’’ என நினைத்தார்.

# “யாரை கடத்தப் போகிறோம்” என்ற உண்மையை...?

வீரப்பன் வேட்டையில் இறுதி அத்தியாயத்தை நோக்கி குக்கூன் என்று பெயரிடப்பட்ட எங்களது ஆம்புலன்ஸ் சீராக பயணித்துக் கொண்டிருந்தது.

அந்த ஆம்புலன்சை வழியில் போலீசார் மறித்தால் என்னாகும் என்ற எண்ணம் மேலோங்கியது. அப்படியே ஏதாவது நடந்தாலும், வாகனத்தில் இருப்பவர்கள், எப்போது வேண்டுமானாலும் என்னையோ அல்லது கண்ணனையோ போனில் அழைத்துவிட முடியும். ஆனால் அது எங்களின் நடவடிக்கை ரகசியங்களுக்கு பாதிப்பாக அமைந்துவிடும்.

இதற்கிடையில் துரை தனது மௌன உலகிற்குச் சென்று விட்டார். தனது தோள்கள், இடுப்பு, தொடை, கால்கள் ஆகியவற்றை அடிக்கடி தட்டிக்கொடுத்துக் கொண்டே இருந்தார். போரடிப்பதைத் தவிர்க்க தனது வயர்லெஸ் செட், இயர்பீஸ் மற்றும் ஸ்டென் கிரனெடுகளைப் பரிசோதிக்க ஆரம்பித்தார். அவருடைய பெரும்பான்மை கவனம் அவரின் எம்.பி. 5 ஹெக்லெர் அண்ட் கூச் சப் மெஷின்கன் மீதும் 9 எம்.எம். பிரவுனிங் மீதும்தான் இருந்தது. முடிவில், தனது இருக்கைக்கு அடியில் இருந்த பிளவை குனிந்து பார்த்துவிட்டு தலையாட்டினார். ஸ்டென் கிரனெடை எதிராளிகளுக்குத் தெரியாமல் மறைத்து வைக்க ஏற்ற இடமாக அது இருந்தது.

திருப்தியடைந்த துரை பின்னால் நகர்ந்து ஒருவிதமான தியான நிலைக்குச் சென்றுவிட்டார். வண்டி தோப்பூர் மலைத்தொடரைக் கடக்கும்போது செல்போன் ஒலித்ததால் அவரின் தியானம் கலைந்தது. எதிர்முனையில்

பேசுவதைக் கூர்ந்து கவனித்துக் கேட்டார். ஆனால் பதிலுக்கு இரண்டுமுறை தொண்டையைச் செருமியதோடு சரி. வேறு எதுவும் பேசவில்லை.

அந்த தொலைபேசி அழைப்பு பற்றிய தகவலை அவர் சொல்வார் என்ற எதிர்பார்ப்பில் சரவணன் காத்துக் கொண்டிருந்தார். ஆனால் அவரிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. சரவணன் மறுபடியும் தோளைக் குலுக்கியபடி வாகனம் ஓட்டுவதில் கவனத்தைத் திருப்பினார். சிறுநீர் கழிக்கவோ, டீ குடிக்கவோகூட நிற்காமல் வாகனம் சென்று கொண்டிருந்தது.

சிறிது நேரம் கழித்து தர்மபுரியின் புறநகர்ப் பகுதியை அவர்கள் அடைந்தனர்.

சரவணனுக்கு அதுதான் சொந்த ஊர். எனவே, விரைவில் அந்தச் சாலை இரண்டாகப் பிரியும். ஒன்று பெங்களூருவையும் மற்றொன்று சென்னையையும் நோக்கிச் செல்லும் என்று அவர் அறிந்திருந்தார். வாகனம் அந்தப் பிரிவை அடைவதற்கு முன், துரை வாகனத்தை நிறுத்தச் சொல்லி சரவணனிடம் சைகை செய்தார்.

அவர்கள் ஒரு பெரிய புளிய மரத்தின் நிழலில் குக்கூனை நிறுத்தினர். அங்கு ஏற்கனவே அவர்களுக்காக ஒரு சிவப்பு ஆம்னி காத்துக் கொண்டிருந்தது. அந்த வாகனம் அவர்களை ஏற்கனவே திட்டமிட்டிருந்த சந்திப்பிடமான தர்மபுரி டிராவலர்ஸ் பங்களாவுக்கு அழைத்துச் சென்றது. நாங்கள் அனைவரும் ஏற்கனவே அங்கு சென்று சேர்ந்திருந்தோம். இங்கிருந்துதான் எங்களின் இறுதித் தாக்குதலைத் தொடுக்கப் போகிறோம்.

எங்களது பங்களாவில் அனைத்து செல்போன்களும் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தன. போருக்குத் தயாரான நடவடிக்கைகளில் இருக்கும்போது வீட்டில் இருந்து வரும் தொலைபேசி அழைப்பு அவற்றைக் குலைத்துவிடக் கூடும். சப்—இன்ஸ்பெக்டர் ராஜேஷ் கண்ணாவுக்கு வந்த ஒரு தொலைபேசி அழைப்பு குறித்து தகவல் சொன்னார்கள். தொலைபேசியில் பேசிய அவரது மனைவி, அவரின் தாலி படுக்கையில் உள்ள ஆணியில் மாட்டிக்

கொண்டதாகவும், அதனால் அவரின் பாதுகாப்பு குறித்து பயமாக இருப்பதாகவும் கூறியிருந்தார்.

நான் சுற்றிலும் பார்த்தேன். மிக முக்கியத்துவம் வாய்ந்த கடைசிக்கட்ட விளக்கத்திற்கான நேரம். பாதுகாப்புக் கருதி இலக்கு என்ன என்று சொல்லாமல், ஆனால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மட்டும் விளக்க வேண்டிய கடுமையான பணியை எதிர்கொண்டேன்.

ஒருவிதமான குற்ற உணர்வு திடீரென ஏற்பட்டது. அதிரடிப்படையின் குக்கூன் டீமை பிற ஆபத்துகளுக்கு எதிராக நான் நிறுத்தவில்லையா? துரை மற்றும் சரவணனின் உயிருக்கு நான் ஆபத்தை உருவாக்கவில்லையா? டீம் மெம்பரில் யாராவது ஒருவர் தவறாக ஏதேனும் செய்து விட்டால் என்ன ஆகும்? ஒருவரின் சிறு கண்ணசைவு அல்லது கையசைவில் கூட அனைத்தும் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாகி விடலாம்.

இத்திட்டத்தை, நான் வெளியே சொல்வதற்கு முன்புவரையில் கூட ஹுசேனும் ராஜராஜனும் இது ஒரு வழக்கமான பயிற்சி என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தனர்.

ஹுசேனை நாங்கள் திரும்ப அழைத்தபோது அவர் புனித ரம்ஜான் மாதத்தில் விடுமுறையில் சென்னையில் இருந்தார். அவர் உடனடியாக எந்த பதிலும் சொல்லாவிட்டாலும் ஒரு சாதாரண பயிற்சி நடவடிக்கைக்காக அவரது விடுமுறை ரத்து செய்யப்பட்டது அவருக்கு உறுத்தலாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் அன்று இரவு ஒரு சில கேங்ஸ்டர்ஸ் அல்லது கடத்தல்காரர்கள் அந்த வாகனத்தில் பயணம் செய்வார்கள் என்று நான் கூறியபோது, அவருடைய மனதில் ஏதேனும் உறுத்தல் இருந்திருந்தால்கூட அவை அனைத்தும் காணாமல் போயிருக்கும்.

அவரது முகத்தில் ஒரு புன்னகை தோன்றியது. அவரது வீட்டில் விருந்தாளிகளுடன் இஃப்தார் சாப்பாட்டை ருசித்தபடி இருப்பதைவிட இங்கு

மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தார் என்பது தெளிவாகத் தெரிந்தது. 'ஹுசைன், உத்தரவுக்குமுன் துப்பாக்கிச் சத்தம் எதுவும் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்', இது ஒன்றுதான் நான் அவரிடம் சொன்னது. யாரேனும் ஒரு சிறுபையன் கொஞ்சம் முன்னாடி டிரிக்கரை இழுத்துவிட்டால், அது துரைக்கும் சரவணனுக்கும் மிகப்பெரிய ஆபத்தை உருவாக்கிவிடும். அவர்கள் மிக அருகில் இருந்தபடி துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகி விடுவார்கள்.

திடீரென ராஜராஜன் எனர்ஜி பொங்கியபடி காணப்பட்டார். அங்கும் இங்கும் சுற்றி வந்தபடி, தனது ஆட்களுடன் பேசினார். சிலருக்கு குதிக்கும் பயிற்சி அளித்தார். அப்படி குதிக்கும்போது, உங்களிடம் இருக்கும் ஏதேனும் பொருட்களில் இருந்து சத்தம் எழுந்தால் நீங்கள் தோற்றுவிட்டீர்கள் என்று அர்த்தம்.

எஸ்.பி. சின்னச்சாமி அனைத்துத் தளவாடங்களையும் கையாள்வதில் பிசியாக இருந்தார்.

நான் அனைவரையும் கவனித்துக் கொண்டிருந்தபோது, கண்ணன் வந்து எனது காதில் மெதுவாகச் சொன்னார், "குக்கூன் வந்துவிட்டது"!

'கோ அஹெட்' என்பதாக நான் தலையை ஆட்டினேன். பின்னால் இருந்த காம்பவுண்ட் சுவரை நோக்கி அவர் சென்றார். துரையும் சரவணனும் நிழலில் இருந்து வெளிப்பட்டு, அவருக்கு வணக்கம் சொன்னார்கள். 'ஆப்பிளும் பிரட்டும் சாப்பிடுங்கள்' என கண்ணன் கூறியதற்கு அவர்கள் வேண்டாம் என்று கூறிவிட்டனர். கண்ணன் கிழிந்த அந்த பாதி நம்பர் உடைய லாட்டரிச் சீட்டுத் துண்டுப் பேப்பரை அவர்களிடம் ஒப்படைத்தார். துரை தலையசைத்து அந்தப் பேப்பரை மடித்து பாக்கெட்டில் வைத்துக்கொண்டார். அவரும் பச்சை நிற டீ சர்ட் அணிந்திருந்தார்.

அவர்கள் இருவரிடமும் துரித உரையாடலை நடத்த வெளியில் வந்தேன். அவர்கள் தங்களால் முடிந்த அளவு சிறப்பாகச் செயலாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது அவர்களின் நடவடிக்கையில் தெரிந்தது.

கண்ணன் என்னைக் கேள்விக்குறியோடு பார்த்தார். கடைசியில் உண்மையைச் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது.

“கோ அஹெட்” என்று சொன்னேன்.

கடைசியாக கண்ணன் அவர்களிடம், அவர்கள் பாதுகாப்பாக அழைத்து வர வேண்டிய நபரைப் பற்றிச் சொன்னார்.

துரையின் முகத்தில் எந்தவிதமான ரியாக்ஷனும் இல்லை. ஆனால் சரணவனின் முகத்தில் கணிசமான பதற்றத்துடன் கூடிய ஒரு உற்சாக உடைப்பு ஏற்பட்டிருந்தது. உடனடியாக அவர் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு என்னைக் கண்களால் பார்த்தார். வார்த்தைகள் எதுவும் பரிமாறிக் கொள்ளப்படவில்லை. ஆனால் அவர் பார்வையாலேயே கடத்திய செய்தி சத்தமாகவும் தெளிவாகவும் கேட்டது. “நான் உங்களைத் தோல்வியடைய விடமாட்டேன்.”

மனதளவில் குக்கூனின் ஓட்டுனர் இருக்கையை ஏற்றுக்கொண்டபடி, நான் தலையசைத்தேன்.

அந்த இருவரும் ஆம்னியில் ஏறினர். பாத்திரங்களில் இருந்த பிரியாணி மணம் வண்டிக்குள் வீசியது. கூடுதலாக மோர் பாட்டில்கள் மற்றும் பழங்கள் மற்றும் உலர்ந்த பழங்களின் பெட்டிகளும் இருந்தன. அனைத்தும் உடனடியாக குக்கூனுக்கு இடம் மாற்றப்பட்டன.

சரவணனும் துரையும் பாரப்பட்டி போலீஸ் ஸ்டேஷன் அருகே உள்ள அடுத்த ஸ்டாப்புக்குக் கிளம்பினர். அந்த நேரத்தில் நான்கு போலீஸ்காரர்கள் அவசரமாக சைக்கிளை ஓட்டிக் கொண்டு குக்கூனை நோக்கி வந்ததைப் பார்த்த போது பயம் அதிகரித்தது. பதற்றத்துடன் திரும்பி துரையைப் பார்த்தார். அவர் வழக்கம் போல வாயை இறுக மூடிக் கொண்டிருந்தார்.

அந்த போலீஸ்காரர்கள், எதற்காக இந்த வழியாக வந்தார்கள்? என்று பதைபதைத்தார் சரவணன்.

## லாட்டரிச் சீட்டு பரிசாக வந்தான் வீரப்பன்!

இறுதித் திட்டத்தில் எந்தவித தடங்கலும் வந்துவிடக் கூடாது என்ற பதைபதைப்பிலே, சரவணன், வாகனத்தை செலுத்திக் கொண்டிருந்தார். ஆனால், திடீரென சில போலீஸார் எதிரே வந்ததும் துரையை நோக்கி பார்வையைத் திருப்பினார்.

“ரிலாக்ஸ்” முணுமுணுத்த துரை, “கல்லெறி தூரத்தில் இருக்கும் நம்மைப் பிடிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பியிருந்தால், அதற்கு சைக்கிளைப் பயன்படுத்த மாட்டார்கள்” என்றார்.

சரவணன் தனது உதட்டைக் கடித்துக் கொண்டார். அந்த போலீஸ்காரர்களின் சைக்கிள்கள் கடந்து சென்றுவிட்டன. அவர் மூச்சைப் பிடித்துக் கொண்டார். மெதுவாக மூச்சை வெளியே விட்டு ஒரு சிறு பிரார்த்தனையும் செய்தார்.

துரை வேனை விட்டுக் கீழே இறங்கி அதன் அருகில் நின்றார். அவரது பின்னால் ஏதோ ஆள் நடமாட்டம் தெரிவதை உணர்ந்தார். இடது பக்கத்தில் உள்ள நிழலில் இருந்து ஒரு மனிதன் தோன்றினான். அவரை நோக்கி வந்தான். முதலில் துரை அவனை வழிகாட்டி என்று நினைத்தார். அந்த கேங்கைத் தொடர்புகொள்ள முடியாமல் தோல்வி அடைந்தபோது அவரை அழைத்து வந்த வழிகாட்டி அவன்தான் என்று நினைத்தார். நெருங்கிப் பார்த்தபோது, இந்த மனிதனும் ஒரு வேளை உள்ளூர் பழங்குடியாக இருக்கலாம், ஒருவேளை அவனது உறவினனாகக்கூட இருக்கலாம் என்று துரை நினைத்தார்.

அந்த மனிதன் துரையின் அருகே வந்து தொண்டையைச் செறுமினான். அவன் கையில் இருந்த கிழிந்து போன லாட்டரி டிக்கெட்டை எடுத்து நீட்டினான். துரை தனது பாக்கெட்டுக்குள் கையை விட்டுத் துழாவி தன்னிடமிருந்து துண்டு டிக்கெட்டை எடுத்தார். இரண்டையும் ஒட்டி வைத்துப் பார்த்தபோது அதில் 007710 என்ற எண் இணைந்து தெரிந்தது.

அந்த அந்நியன் அதைப் பார்த்து மெலிதாகப் புன்னகைத்தான்.

''இந்த நம்பருக்குத்தான் இன்று இரவு பரிசு விழப் போகிறது'' என்று துரை நினைத்தார். ஆனால், அவரது உணர்வு முகத்தில் தெரியக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்.

துரையும் அந்த அந்நியனும் குக்கூனில் ஏறி அமர்ந்தனர். சரவணன் ஸ்டியரிங்கைச் சுழற்றி, நான்கு கிலோ மீட்டர் தூரம் சென்றிருப்பார். ஒரு கிராமத்தின் எல்லையில் ஒரு வாட்டர் டேங்க் அருகே அந்த வாகனம் சென்று கொண்டிருந்தபோது அந்த அந்நியன் ''நிறுத்துங்க'' என்று சொல்லிவிட்டு வேன் சென்று கொண்டிருந்த போதே அதில் இருந்து கீழே குதித்தான்.

துரையும் சரவணனும் வேன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தனர். ''இனி என்ன நடக்கப் போகிறதோ'' என்று துரை நினைத்தார். ''இன்று இரவு அவன் வெளியே வருவானா?''

அவன் மூன்று தேதிகள் கொடுத்திருந்தான்: அக்டோபர் 18, 20 மற்றும் 22.

''இப்பவே அவன் வந்து எல்லாம் இதோடு முடியட்டும்'' என்று துரை வேண்டிக் கொண்டார். இதே ஏற்பாடுகளை இரண்டாவது முறை செய்வது தாங்க முடியாததாக இருக்கும். ஆபத்து வாய்ப்புகளையும் அதிகரிக்கும்.

அவர்கள் காத்திருந்தனர். இரண்டு உருவங்கள் அருகில் இருந்த புதரில் இருந்து வெளிப்பட்டன. முதலில் வந்தவன் சேதுமணி. அவனைத் தொடர்ந்து சந்திரகவுடா வந்தான். இருவருமே குக்கூனிற்குள் எட்டிப்பார்த்து, ஆழமாக மூச்சை இழுத்து விட்டனர். வாகனத்தின் உள்ளே கமழ்ந்து கொண்டிருந்த

செழிப்பான வாசனையை அவர்கள் அனுபவித்தனர். அவர்கள் இருவரையும் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த போதும், துரையின் கவனம் முழுவதும் புதர்களின் மீதே இருந்தது.

பிறகு சேதுமணியும் கவுடாவும் புதரை நோக்கி சைகை செய்தனர்.

ஒரு உயரமான திடகாத்திரமான உருவம் அங்கே வெளிப்பட்டது. துரைக்கும் சரவணனுக்கும் நேரம் அப்படியே ஸ்தம்பித்து விட்டது போலத் தோன்றியது. அவனது கடா மீசை ட்ரிம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவனை அடையாளம் காண்பதில் தவறு எதுவும் நடக்கவில்லை. சரவணன் தனது மூட்டுகளில் இருந்த சக்தி வெளியேறுவதைப் போல உணர்ந்தார். அவர் துரையை நடுக்கத்துடன் பார்த்தார். துரை அவரை வேண்டுமென்றே கண்டுகொள்ளாமல் தவிர்த்தார். அதற்குப் பதிலாக அவர் வீரப்பனைப் பார்த்து இரு கைகளையும் கூப்பி வணக்கம் சொன்னார்.

தனது பீதியை மறைக்க நினைத்த சரவணன், துரையைப் போல நடந்துகொள்ள முயற்சித்தார். வேனின் பக்கவாட்டில் சென்று தன்னைத்தானே சீட்டில் பொருத்திக் கொண்டார். சீட்டில் அமர்ந்ததும் ஸ்டியரிங்கைக் கெட்டியாகப் பிடித்தார். நேராகப் பார்த்தார். இழந்து போன சக்தி மீண்டும் தனது மூட்டுப் பகுதிகளுக்கு வந்து சேர்ந்து விட்டதாக உணர்ந்தார்.

இரண்டு நிமிடங்கள் கடந்து விட்டன. ஒருவரும் வாகனத்தில் ஏறவில்லை. அவர்கள் வேறு ஏதோ ஒன்றிற்காகக் காத்திருந்ததாகத் தோன்றியது.

“அவர்கள் சந்தேகப்படுகிறார்களோ?” என்ற எண்ணம் சரவணனுக்கு ஏற்பட்டது. அந்த நினைப்பில் அவரது ரத்த அழுத்தம் அதிகரித்தது. அவரது பதற்றத்தை மறைக்க கடுமையாக முயற்சித்தார். தெய்வம் துணையிருக்க வேண்டும் எனப் பிரார்த்தனை செய்தார்.

அதிர்ஷ்டவசமாக அந்த கேங்ஸ்டர் ஆட்கள் சரவணனின் மனத்தில் என்ன ஓடுகிறது என்பதை அறிந்திருக்கவில்லை. அப்படியே அவர்கள் அதை

அறிந்திருந்தாலும், வீரப்பன் இருக்கும்போது ஒருவர் இப்படித்தான் நடந்து கொள்வார் என்றுதான் நினைத்திருப்பார்கள்.

அதன்பிறகு கோவிந்தன் வந்தான். அந்த மூன்று பேரும் வாகனத்தில் ஏறியபோது அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்காக அவன் காத்திருந்தான். அவனைப் பின்தொடர்ந்து ஆயுதம் எதுவுமில்லாத சிலர் வந்தனர். அவர்களில் ஒருவன், ''அண்ணனை பத்திரமா கூட்டிட்டுப் போங்க'' என்றான்.

துரையின் வலது புருவம் சிறிது உயர்ந்தது. வீரப்பனின் கோர் டீம் நான்கு பேராகச் சுருங்கி விட்டாலும், அவன் மீது இரக்கம் வைத்திருப்பவர்கள் இன்னும் இருக்கிறார்கள். ''இன்னைக்கு இரவு இதைத்தவிர வேறு எந்த ஆச்சரியமும் நடந்துடாதுன்னு நம்புறேன்'' என்று நினைத்தார் துரை.

எங்களின் ஒற்றனான போர்வையும் அந்த குழுவில் இருந்தான் என்பது பின்னர் தெரிய வந்தது. ஆனால் துரையோ போர்வையோ ஒருவரை ஒருவர் அறிந்தவர்கள் இல்லை. போர்வை தனக்கு லிஃப்ட் தருவீர்களா என்று கேட்டான்.

''இல்லை'' என்றார் துரை. தொடர்ந்து, ''எனக்கு நாலு பேருன்னு சொன்னாங்க. அதுல நான் ஒண்ணும் மாற்றம் செய்ய மாட்டேன்'' என்றார்.

கோவிந்தன் தலையாட்டி, ''நானும் அதைத்தான் சொல்றேன்'' என்றான்.

துரையோட முடிவு அவனின் உயிரைக் காப்பாற்றி இருக்கிறது என்பதை போர்வை அப்போது அறிந்திருக்கவில்லை. நாங்கள் அந்த வாகனத்தை இடைமறிக்கும் போது அவன் அதில் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? பல நேரங்களில் ஒரு 'ஆமா'வோ அல்லது 'இல்லை'யோ வாழ்க்கையை மரணத்தில் இருந்து காப்பாற்றி விடுகிறது.

அந்த நான்கு பேரும் சட்டென ஏறி தங்களின் இருக்கைகளில் அமர்ந்தனர். அதில் இரண்டு வரிசைகள் முன்னாள் பார்த்தபடி அமைந்திருந்தன. கடைசி வரிசையில் ஒரு இருக்கை பக்கவாட்டை பார்த்தபடி

இருந்தது. அதன் எதிரே இருந்த இருக்கை ஸ்ட்ரெச்சர் அமைப்பதற்காகவும் உணவுப் பொட்டலங்கள் வைப்பதற்காகவும் நீக்கப்பட்டிருந்தது. கோவிந்தன், ஏ.கே. 47 துப்பாக்கியை ஏந்தியபடி பக்கவாட்டு இருக்கையில் அமர்ந்திருந்தான். மற்றவர்கள் முன்னால் இருந்த இரண்டு வரிசையில் அமர்ந்திருந்தனர். சேதுமணியும் சந்திரகவுடாவும் நடுவில் இருந்த வரிசையில் இடமும் வலமுமாக அமர்ந்திருந்தனர். வீரப்பன் முன் இருக்கையில் தனியாக அமர்ந்திருந்தான்.

துரை கதவை உறுதியாகப் பூட்டினார். திடீரென அவருக்குள் கிளம்பிய உற்சாகத்தை காலை கீழே அழுத்தி அடக்கிக் கொண்டார். அவர் எப்போதுமே உணர்ச்சி வசப்படுவதை அனுமதிப்பதில்லை.

18 – அக்டோபர் 2004 இரவு 10 மணிக்கு, க்ளட்ச் விடுவிக்கப்பட்டு குக்கூன் ஒரு குலுக்கலோடு பாய்ந்து கிளம்பியது.

அமாவாசை முடிந்து நான்காவது இரவு அது. ஏற்கனவே இருண்டு தெரியும் அந்தச் சூழ்நிலையை அங்கிருந்த நான்கு பிரம்மாண்டமான புளிய மரங்கள் மேலும் இருட்டாக்கின. நன்கு பயிற்சி பெற்ற கமாண்டோக்களுக்கு அது பிரச்சினையாக இருந்தாலும் நிச்சயம் அவர்கள் அதை வெளிக்காட்டவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரே ஒரு துப்பாக்கிச் சூட்டை அரங்கேற்ற இருட்டில் மணிக்கணக்கில் காத்திருப்பது என்பது அவர்களின் நிபுணத்துவத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. கடந்த காலத்தில் மிக மோசமான சூழ்நிலைகளில் புதர்களுக்குள் காத்துக் கிடந்திருக்கின்றனர்.

ஆனால், இந்த முறை காத்துக்கிடப்பது, எங்களின் கமாண்டோக்களுக்கு ஒரு புதிராகவே இருந்தது!

என்ன நடக்கும்?

## குறுக்கே வந்த மோட்டர் சைக்கிள்?

எங்களிடம் சிக்கப் போகும் வீரப்பன் என்ற மிகப்பெரிய இலக்கு இலகுவாக ஆம்புலன்ஸ் வாகனத்தில் வந்து அமர்ந்துவிட்டது. அதற்காகவே காத்து இருக்கிறோம்.

'இதற்குத்தானே அதிரடிப்படை வீரர்கள் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்' என்ற எண்ணம் வந்துவந்து போய்க் கொண்டிருக்கிறது.

அவனைச் சிக்க வைக்கப் போகும் அந்த இடத்தை மீண்டும் ஒருமுறை ஆய்வு செய்தேன். கடவுள் உண்மையில் எங்கள் பக்கம்தான் இருக்கிறார். அவர் கிட்டத்தட்ட மிகச் சரியான இடத்தையே எங்களுக்கு அளித்திருக்கிறார். ஒரு நாள் முன்புதான் நானும் கண்ணனும் இந்த இடத்தைக் கண்டுபிடித்தோம். மாருதி 800 காரை கண்ணன் ஓட்ட, நான் ரகசியமாக இந்த சாலையை முழுவதும் வீடியோ எடுத்தேன். அதன் பிறகுதான் இந்த இடத்தைக் கண்டுபிடித்தோம். இந்த இடத்தைத் தேர்வு செய்ததில் ஏதோ கடவுளின் சக்தி வேலை செய்திருக்கிறது என்று நம்பினேன். ஏனெனில் ஏதோ ஒரு விதத்தில் அனைத்துமே சரியாக நடந்து கொண்டிருந்தது.

தர்மபுரியில் இருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பாடி என்ற பகுதியில், பள்ளிக்கூடம் ஒன்றுக்கு அருகே நானும் கண்ணனும் நின்று கொண்டிருந்தோம். இப்பள்ளி ஒரே அறை கொண்ட பள்ளியாகும். அந்தப் பள்ளி சாலையைப் பார்த்து இருந்தது. அதன் கூரை மீதிருந்து சரியாக குறி பார்த்து துப்பாக்கியால் சுட முடியும்.

எங்கள் கமாண்டோக்களில் 6 பேர் அந்தப் பள்ளியின் கூரை மீது நெருக்கியடித்துக் கொண்டு, துப்பாக்கியுடன் தயாராக இருந்தனர். அவர்கள்

வரிசையாக அமர்ந்திருந்தபோது அது ஒரு சீட்டுக் கட்டைப் போல எனக்குத் தெரிந்தது. அந்தக் காலத்தில் செல்பி போட்டோ எடுக்கும் பழக்கம் எல்லாம் புழக்கத்தில் இல்லை. ஆனால் அவர்கள் அனைவரும் ஏதோ செல்பி எடுப்பதைப் போல நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

ஆறு கலாஷ்னிகோவ் துப்பாக்கிகள் சாலையைக் குறி பார்த்தபடி உறுதியுடன் நின்றிருந்தன. அதை ஏந்தியிருந்தவர்களின் கரங்கள் அந்த ஆயுதங்களின் நீட்சியைப் போல காட்சியளித்தன.

சாலையின் நடுவில் போலீஸ் வாகனம் ஒன்று கரும்பு லாரியைப் போல வேஷம் போட்டு நின்று கொண்டிருந்தது. ஸ்வீட் பாக்ஸ் என்று எங்களால் பெயரிடப்பட்டிருந்த அந்த லாரியில், அருகே இருக்கும் சர்க்கரை ஆலைக்கு ஏற்றிச் செல்வதைப் போன்ற பாவனையில் கரும்பு ஏற்றப்பட்டிருந்தது. அந்த லாரி அந்தச் சாலையில் வந்து கொண்டிருக்கும் குக்கூனின் பாதையை மறிப்பதற்காக நின்று கொண்டிருந்தது. அதில் மூன்று தொழில்நுட்ப நிபுணர்களும் இருந்தனர். ஆம்புலன்ஸ்சில் ரகசியமாக வைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் காமிராக்களின் சிக்னல்கள் அவர்களுக்கு வந்து சேரும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குக்கூனை வழி மறிப்பதற்கு முன் ‘டார்கெட்’ அதற்குள் இருக்கிறதா என்பதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

அந்தச் சாலையின் மற்றொரு புறத்தில் மணல் மூட்டைகளும் அதிரடிப்படை கமாண்டோக்களுமாக மொபைல் பங்கர் என்று சங்கேதப் பெயர் வைக்கப்பட்டிருந்த மற்றொரு லாரி நிறுத்தப்பட்டிருந்தது. அந்த லாரி பள்ளியில் இருந்து 45 டிகிரி கோணத்திலும் மரம் ஒன்றால் கொஞ்சம் மறைக்கப்பட்டும் நின்று கொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் சார்லஸ் எங்களின் தளவாடப் பொருட்களின் நிர்வாகி. மெல்ல தனது தளவாடப் பொருட்களை வெளியே எடுத்து வைக்க ஆரம்பித்தார். அதில் ஒரு லவுட் ஸ்பீக்கர், காற்றால் நிரப்பக்கூடிய விளக்கு போன்று 100 விதமான பொருட்கள் இருந்தன. முதலில் அவர் செல்பி ஸ்டிக் போன்ற ஒன்றை எடுத்தார். அதன் முனையில் லைட் பொருத்தப்பட்டிருந்தது.

அந்த விளக்கை இந்த முனையில் இருந்து ஆன் செய்யலாம். பிறகு அவர் ஒரு சில ஒளிரும் ஆரஞ்சு வண்ணமடிக்கப்பட்ட கோன்கள் சிலவற்றை வெளியே எடுத்தார். அவை டிராபிக் போலீசாரால் பயன்படுத்தப்படுபவை. அதுபோன்ற எட்டு கூம்புகளை ஒரு மரத்தின் மீது சாய்த்து வைத்தார்.

கொஞ்ச தூரம் தள்ளி சாலையில் ஒரு சாதாரண வாகனத்தில் டி.எஸ்.பி. திரு என்ற திருநாவுக்கரசு தலைமையில் ஒரு குழு தயாராக இருந்தது. ஆம்புலன்ஸ் வந்தவுடன் அதற்குப் பின்னால் இந்த வாகனம் செல்லும். ஒரு வேளை ஆம்புலன்ஸ் பின்பக்கம் திரும்பி தப்பி விடாமல் தடுப்பதற்கு இந்த ஏற்பாடு. மேலும் போலீசுக்கும் ஆம்புலன்சுக்கும் இடையே வேறு எந்த வண்டியும் வராமலும் அந்த வாகனம் பார்த்துக் கொள்ளும்.

அனைத்தும் நல்லபடியாக நடந்துவிட்டால், ஆம்புலன்ஸ் வரும் போது ஸ்வீட் பாக்ஸ், மொபைல் பங்கர், அந்தப் பள்ளிக்கூடம் மற்றும் திரு குழுவினர் என நாலா திசைகளிலும் அதைச் சுற்றி வளைத்து விடுவார்கள். தர்மபுரியை நோக்கிச் செல்லும் கிழக்குத் திசையில் மற்றொரு டி.எஸ்.பி. காத்திருந்தார். அந்த வழியே வரும் அனைத்து வாகனங்களையும் வேறு வழியில் திருப்பி விடுவது அவருடைய வேலை. பெரிய சேதாரம் எதுவும் நடக்காமல் இருக்க அந்தச் சாலை ஆளரவமற்று இருக்க வேண்டிய அவசியம் இருந்தது.

ஒரு சில மீட்டர் தூரம் தள்ளி பரோட்டா கடை ஒன்றில், அதிரடிப்படையின் பழைய ஊழியர் குமரேசன் காத்திருந்தார். அரைகுறை மனதோடு கொஞ்சம் சாப்பிட்டார். டிரைவர், துரை, கண்ணன், நான் தவிர நாங்கள் குறிவைக்கும் டார்கெட் யார் என்று அடையாளம் தெரிந்த மற்றொரு நபர் அவர்தான்.

ஆம்புலன்ஸ் அந்த இடத்தை விட்டுக் கடந்த போது துரை சாதாரணமாக ஜன்னலுக்கு வெளியே கையை நீட்டி தனது கட்டைவிரலை மிக லேசாக அசைத்து சைகை செய்தார். குமரேசன் உடனடியாக அதே போல் கையசைத்தார். வேறு ஒரு இரண்டு விஷயங்களையும் அவர் கவனித்தார். நீலக்கலர் சுழல் விளக்கு ஆம்புலன்சில் எரிந்து கொண்டிருந்தது. கேங்கில்

உள்ள அனைவரும் ஆம்புலன்சுக்குள் இருக்கிறார்கள் என்பதற்கான அறிகுறி அது. பனி விளக்கும் எரிந்து கொண்டிருந்தது. உள்ளே இருக்கும் அத்தனை கேங் உறுப்பினர்களும் ஆயுதங்களுடன் இருக்கிறார்கள் என்பதற்கான அறிகுறி அது.

மைனஸ் 10 நிமிடங்கள்.

கண்ணனின் செல்போன் ஒலித்தது. ஒரு சில அடிகள் நடந்து சென்ற பின் அவர் அதை எடுத்துப் பேசினார்.

‘தபால் அனுப்பியாச்சு’ என்று குமரேசன் ரத்தினச் சுருக்கமாகச் சொன்னார்.

கண்ணன் என்னைப் பார்த்து கட்டை விரலை உயர்த்திக் காட்டினார்.

அதன் பிறகு, எங்களின் அமைதியான வயர்லெஸ் செட்டில் ஒரு சின்ன க்ளிக் சத்தம் கேட்டது. அது திருவிடம் இருந்து வந்த சிக்னல். எங்களின் இலக்கு பார்வைக்குள் வந்துவிட்டது என்பதற்கான சிக்னல்.

கண்ணன் சொன்னார், “குக்கூன் பத்து நிமிடத்தில் வந்துவிடும்.”

அவன் இப்படித்தான் வருவான் என்று அனுமானித்து அப்படிச் சொன்னார். ஆனால் அவனுக்கு வேறு வாய்ப்புகளும் இருந்தன. “பாப்பாரப்பட்டி சந்திப்பில் அவன் வலதுபுறம் திரும்பி விட்டால் என்ன செய்வது? அவன் திடீரென்று கையெறி குண்டுகளை வீசி விட்டால் என்ன செய்வது? திடீரென்று கெட்ட சகுனமாக அவன் பல்லியின் சத்தத்தைக் கேட்டு விட்டால்?” என்று நினைத்தேன்.

“கண்ணன், அப்போது அது நவாஸ் காத்திருக்கும் பாதைக்குச் செல்லாது. எனவே ஒகேனக்கல் சாலையில் உள்ள சண்முகவேலை அலர்ட் செய்ய வேண்டும்” என்று நான் மெதுவான குரலில் சொன்னேன்.

கண்ணன் தலையசைத்தார். ஒவ்வொரு சின்னச் சின்ன விவரங்களும் கொண்டாட்டத்திற்கும் ஏமாற்றத்திற்கும் இடையிலான வேறுபாட்டை மாற்றிவிடும் என்று என்னைப் போலவே அவரும் அறிந்திருந்தார்.

மைனஸ் 5 நிமிடங்கள்.

கடைசியாக எங்கள் படையை மீண்டும் ஒரு முறை பார்த்தேன். அவர்களின் இடம் எது என்று இரண்டு நாட்களுக்கு முன் முடிவு செய்த இடங்களில் எங்கள் படையினர் பதுங்கி இருந்தனர்.

பள்ளியின் வடமேற்கு திசையில் உள்ள ஒரு புளியமரத்தின் அடியில் சந்திரமோகனின் கோப்ரா படையினர் ஒரு உடனடி ஒத்திகையில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்தேன். பிரசன்னாவின் ஏஞ்சல் குழுவினர் தங்களின் பங்க்கரில் பதுங்கி தயாராக இருந்தனர். ராஜேஷ்கண்ணாவின் ராக்கி குழு பள்ளியின் கூரையை செல்பி எடுக்கும் பாணியில் ஆக்ரமித்திருந்தது.

கடந்து சென்ற ஒவ்வொரு நிமிடமும் முடிவே இல்லாதது போல நீளமாகத் தோன்றியது. “குக்கூன் வருவதற்கு ஏன் இவ்வளவு நேரம் எடுக்கிறது?” என்று பரபரத்தேன்.

பரபரப்பாகத் துடித்துக் கொண்டிருந்த எனது மனதுக்கு, ‘அமைதியாக இரு, அமைதியாக இரு’ என்று எனது மூளை கட்டளை இட்டுக் கொண்டிருந்தது.

அனைவரும் தயாராக இருக்கும்படி நாங்கள் சிக்னல் தர ஆரம்பித்தோம். திடீரென்று ஒரு மோட்டார் சைக்கிள் வாகனம் மெதுவாக எங்களை நோக்கி வரும் சத்தம் கேட்டது. அதுவும் கணவன் மனைவியாக அந்த வாகனத்தில்.

“எங்கள் இலக்கு ஆம்புலன்ஸ் வரும் நேரத்திலா இப்படி” அனைவரும் பதைபதைத்தனர்.

# வீரப்பனுக்கு இறுதி வாய்ப்பு!

வீரப்பனை அழைத்து வரும் ஆம்புலன்சை எதிர்பார்த்துக் காத்திருக்க...

அச்சமயத்தில்... அச்சாலையில், மோட்டார் சைக்கிளில் கணவனும் மனைவியும் சண்டை போட்டபடி வந்தால் எப்படி இருக்கும்?

அந்த நொடிகள் சினிமா க்ளைமாக்ஸையே நிலைகுலையச் செய்தது போல் இருந்தது.

அவர்கள் ஏதோ தீவிரமான வாக்குவாதம் செய்து கொண்டிருந்ததைப் போலத் தோன்றியது. அந்த அர்த்தராத்திரியில் அவர்களின் சத்தம் தெளிவாகக் கேட்டது.

'சீக்கிரம் கடந்து போய்விடுங்களேன்' எனது மூச்சின் அடியாழத்தில் இருந்து கோபத்துடன் முணுமுணுத்தேன். அந்த ஆம்புலன்ஸ் வரும்போது அந்த தம்பதியினர் அங்கிருந்து சென்றிருக்க வேண்டுமே என்பதுதான் எங்களது கடைசித் தேவையாக இருந்தது. நல்லவேளையாக அவர்கள் மெதுவாக மறைந்தனர்.

கோப்ரா குழுவினர் மணல் மூட்டைகளை தரையில் இறக்கி ஒரு கோட்டை கட்டத் தயாராயினர். கடந்த வாரம் அந்தக் குழுவினர் அவர்களின் தலைவரான சந்திரமோகனின் கழுகுக் கண்ணுக்குக் கீழே ஓய்வில்லாமல் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். 144 மணல் மூட்டைகளை வைத்து 5 அடி உயரத்திற்கு தாங்கள் ஒளிந்து கொள்வதற்கு வசதியாக ஒரு சுவரை எழுப்பினர். மூன்று நிமிடத்தில் இந்த வேலையை முடிக்க பழக்கப்பட்டனர். ஆனால், அந்த நேரத்தில் வந்து கொண்டிருந்த அந்த மோட்டார் சைக்கிள்

அவர்களின் பணியை பாதியில் நிறுத்த வைத்து விட்டது. எனினும் அதிர்ஷ்டவசமாக அவர்கள் இருவரும் தங்களின் சூடான வாக்குவாதத்தில் கவனமாக இருந்ததால் சாலையில் இருந்த மணல் மூட்டைகள் அவர்களின் பார்வையில் படவில்லை.

ஸ்வீட் பாக்ஸ் குழுவினரும் அந்த திடீர் விருந்தாளிகளின் தாக்கத்தை உணர்ந்தனர். மோட்டார் சைக்கிள் அங்கிருந்து மறைந்ததும் அத்தனை டீம்களும் மறுபடி செயலில் இறங்கின.

எனது ஏ.கே. 47 தோளில் தொங்கிக் கொண்டிருந்தது. என் கண்கள் அனைத்து டீம்களையும் கவனித்துக் கொண்டே, யார் யார் எந்தெந்த பகுதியில் சுட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டினேன்...

மைனஸ் 120 வினாடிகள்.

“கேமரா ஆக்டிவேட் பண்ணுங்க” கண்ணனிடம் மெதுவாக முணுமுணுத்தேன்.

அவர் தலையசைத்தவாறு ஸ்வீட் பாக்சை நோக்கிச் சென்றார்

ஒரு சில வினாடிகளுக்குப் பிறகு, வேகமாகத் திரும்பி வந்தார். அவரது முகத்தில் கலவரம் தெரிந்தது.

“குக்கூனில் பின் பக்கத்தில் நான்கு பேர் அமர்ந்திருக்கின்றனர் என டெக் டீம் உறுதி பண்ணிட்டாங்க. ஆனால் கேமராவுல இருந்து வர்ற படம் தெளிவில்லாம இருக்கு. நாம அவங்க முகத்தைத் தெளிவா பார்க்க முடியல. சாரி சார்” அவர் உளறினார்.

‘இந்த தாக்குதலைத் தொடர வேண்டுமா?’ என்று எனக்கு நானே கேட்டுக்கொண்டேன். இது தவறாகப் போனால் அதற்கு நான்தான் முழுப்பொறுப்பேற்க வேண்டும். ‘எல்லாம் கடந்து போகும்’ என்று வழக்கமாகச் சொல்வார்கள். ஆனால் என் விஷயத்தில், கஷ்டம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தது.

ஆம்புலன்சில் இருந்து வந்த விளக்கொளி மேலும் மேலும் நெருங்கி வந்து கொண்டிருந்தது. அனைத்து வாய்ப்புகளையும் தீவிரமாகப் பரிசீலிக்க முயற்சித்தேன். முடிவெடுக்க ஒரு சில வினாடிகளே இருந்தன. பின்னர் ஏதோ ஒரு சக்தி உள்ளே நுழைந்து, முடிவு எடுக்கும் உரிமையை எனது கையில் இருந்து எடுத்துக்கொண்டது.

நான்கு சக்திவாய்ந்த விளக்கொளி இருளைக் கிழித்தபடி வந்து கொண்டிருந்தது. அதில் இரண்டு குக்கூனின் சாதாரண முகப்பு விளக்குகள். மற்ற இரண்டும் பனி விளக்குகளில் இருந்து வந்த மஞ்சள் வெளிச்சம்.

நான் தலையசைத்தேன். கண்ணன் ஒரு ஆர்க்கெஸ்ட்ரா கண்டக்டரைப் போல கையை அசைத்தார். ஹூசேனும் ராஜராஜனும் அதேபோல் செய்தனர். டீம்கள் தயாராக நின்று கொண்டிருந்தன.

“அவர்கள் குறித்த இடத்தில் நிற்பார்களா?” என எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். அவர்கள் அப்படி நிற்க வேண்டியது மிகவும் முக்கியம். ஏனெனில் ஒரு இடத்தில் நிலையாக நிற்கும் டார்கெட்டைக் காட்டிலும் இயங்கிக் கொண்டிருக்கும் டார்கெட் சுடுவதற்குக் கடினமானது.

ஏ.கே. 47 துப்பாக்கியில் இருந்து வெளியேறும் தோட்டாக்கள் 2500 கி.மீ. வேகத்தில் செல்லும். அப்படி பார்க்கும்போது, வேன் வெறும் 60 கிலோ மீட்டர் வேகத்தில்தானே சென்று கொண்டிருக்கிறது என்று தோன்றும். ஆனால் அது தாக்குதல் நடத்துவதில் மிகப்பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிடலாம்.

மைனஸ் 60 வினாடிகள்.

கோன்கள் ஒளிர்வதைப் பார்த்து சரவணனின் இதயம் படபடத்தது. அவரால் பள்ளியை சரியாகப் பார்க்க முடியவில்லை. அவர்களது வழியில் குமரேசன் தனது இருசக்கர வாகனத்தை மெதுவாக ஓட்டிச் சென்று அதை அவருக்குக் காண்பித்தார்.

“பிரேக்கை அழுத்து. பின்னால் உள்ள கேபின் லைட்டை ஆன் செய். உள்ளே இருக்கும் பயணிகள் எதையும் பார்த்துவிடக் கூடாது. அதே

சமயத்தில் அவர்கள் இருப்பது வெளிச்சத்தில் தெரிய வேண்டும்'' சரவணன் தனக்குத்தானே மேலும் ஒருமுறை கட்டளைகளைச் சொல்லிப்பார்த்துக் கொண்டார்.

பிறகு அவரது விரல்கள் தட்டுத்தடவி ஒரு ஸ்விட்சைப் போட்டன. குக்கூனின் மூன்று கேபின் லைட்டுகள் எரிந்தன. அதே சமயத்தில் தனது வலதுகாலில் உள்ள முழு சக்தியையும் பிரயோகித்து பிரேக்கை அழுத்தினார். குக்கூன் முன்னோக்கிச் சென்று, நிர்ணயிக்கப்பட்ட இடைவெளியில் கிரீச்சிட்டு நின்றது. டயர் எரிந்த வாசனை காற்றில் நிறைந்தது.

குக்கூன் அதிர்ந்து நிற்க, அந்த நேரத்தில் பக்கவாட்டில் இருந்து ஒரு வாகனம் வேகமாக வந்தது. திரு. அலட்டிக்கொள்ளாமல் குக்கூனை யாருக்கும் சந்தேகம் வராத வண்ணம் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தார். ஆனால், குக்கூன் பொறியில் வந்து சேர்ந்ததும் அவர் உடனடியாக வழியை மறைக்கும் பொசிஷனுக்கு நகர்ந்தார். அவரது வாகனத்தில் இருந்து வந்த விளக்கு வெளிச்சம் குக்கூனின் பின்புறத்தில் விழுந்தது. அதன் வெளியேறும் கதவை நோக்கி ஏற்கனவே நான்கு துப்பாக்கிகள் குறிபார்த்துக் கொண்டிருந்தன. இரண்டு பள்ளியின் கூரை மீதிருந்தும் மற்றொரு இரண்டு பங்கரில் இருந்தும் குறிபார்த்துக் கொண்டிருந்தன.

அனைவரின் கண்களும் நின்று கொண்டிருந்த ஆம்புலன்ஸ் மீதே இருந்தது. கட்டை விரல்கள் சேப்டி லீவர்களைத் தளர்த்தின. சுட்டு விரல்கள் டிரிக்கரை இழுக்கத் தயாராக இருந்தன.

மைனஸ் 5 வினாடிகள்.

அந்தப் பரபரப்பான நேரத்தில், சரவணன் ஹெட் லைட்டுகளையும் சுழல்விளக்கையும் அணைக்க மறந்துவிட்டார். எரிந்து கொண்டிருந்த விளக்குகளால் குக்கூனின் முன்பக்கத்தை ஒரு மெல்லிய ஒளிவட்டம் விழுங்கி இருந்தது. அது சாலையின் நடுவில் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. ஒரு படகின் மீது அலை மோதிக் கொண்டிருப்பதைப் போல, அந்த ஆம்புலன்சின் டபுள் பீம் லைட்டுகள் மேலும் கீழுமாக ஓடிக்கொண்டிருந்தன.

இரண்டு பேர் துப்பாக்கியில் இருந்து வெளியேறும் தோட்டாக்களின் வேகத்தில் குக்கூனில் இருந்து வெளியே குதித்தனர். கேப்டனும் மாலுமியும் தங்களின் கப்பலை விட்டுவிட்டு வெளியேறி விட்டனர்.

சரவணனின் குரல் தெளிவாகக் கேட்டது. “கேங் உள்ள இருக்காங்க!”

அந்த நேரத்திலும் சரவணன் அவரை நான் கவனிக்க வேண்டும் என்று ஆவலோடு இருந்ததைப் பார்த்தேன். பொருட்களை சரியாக டெலிவரி செய்து விட்டதற்கான அங்கீகாரத்தை அவர் என்னிடம் எதிர்பார்த்ததைப் போல இருந்தது அவரது பார்வை. பாராட்டும் விதமாக தலையசைத்தேன். என்னைக் கடந்து ஓடியவரை, அவசரமாக முதுகில் தட்டிக் கொடுத்தேன்.

ராஜராஜன் சரவணனைப் பிடித்து ஒரு பெரிய மரத்துக்குப் பின்னால் எனது பொசிஷனுக்கு அருகே தள்ளினார். இதற்கிடையில் துரை தனது மொட்டைத்தலையால் தனியாகத் தெரிந்தவர் திடீரென்று குக்கூனை நோக்கித் திரும்பினார். அவர் தனது சீட்டின் அடியில் இருந்த ரகசிய வழியில், ஸ்டென் கிரனேடின் பாதுகாப்பு பின்னை இழுத்துவிட்டு, அதனை குக்கூனின் பின்பக்கம் உருட்டி விட்டிருந்தார்.

‘அந்த நாசமாப் போன கிரனேட் ஏன் இன்னும் வெடிக்கவில்லை’ என்று யோசித்தார். ஆனால் அது வெடிப்பதற்கு 4 விநாடி நேரம் எடுத்துக் கொள்ளும் என்பது அப்புறம்தான் அவரது நினைவிற்கு வந்தது. கடைசியில் அது வெடித்தது.

குக்கூன் அதன் சக்கரத்தில் குலுங்கி நின்றது. துரை எனக்கு எதிர் பொசிஷனில் இருந்த ஹூசேன் பிரிவின் பாதுகாப்பு வளையத்திலிருந்து நான்கு மீட்டர் தூரத்தில் இருந்தார். அதை நோக்கி தடகள வீரர் உசேன் போல்ட் போல ஓடினார். துப்பாக்கிச் சண்டை எந்த நேரம் வேண்டுமானாலும் துவங்கக் கூடும். எனவே இடையில் சிக்கிக்கொள்ளும் எண்ணம் அவருக்கு அறவே இல்லை. நான் எனது வலது கையை உயர்த்தினேன்.

கண்ணன் மெகாபோனில், ‘‘சரணடைந்து விடுங்கள். சுற்றி வளைத்து விட்டோம்’’ என்றார்.

சில நிமிடங்கள் கடந்தன.

பிறகு அந்த வாகனத்தின் பின்புறத்தில் இருந்து ஏ.கே. 47 துப்பாக்கி ஒலித்தது.

## 20 வருடப் போராட்டம் 20 நிமிடத்தில் முடிந்தது!

“சுற்றி வளைத்துவிட்டோம். சரண் அடைந்துவிடுங்கள்” என்று மெகா போனில் எச்சரிக்கை விடுத்த சில நொடிகளில் துப்பாக்கியால் சுடத்தொடங்கினர்.

உடைந்த கண்ணாடித் துண்டுகள் குக்கூனின் பின்புறத்தில் இருந்து பறந்தது. மற்றவர்கள் தங்களின் துப்பாக்கிகளைத் தேடி எடுப்பதற்கு முன் கோவிந்தன்தான் முதலில் சுட்டிருக்க வேண்டும் என பிறகு நாங்கள் முடிவுக்கு வந்தோம்.

அவர்கள் நான்கு பேரும் வெளியே வந்து தங்களின் ஆயுதங்களோடு கைகளை மேலே தூக்கி இருந்தால், நாங்கள் அவர்களின் சரண்டரை ஏற்றுக் கொண்டிருப்போம். ஆனால் அவர்கள் சுடத் தொடங்கியதும் அவர்களே வாய்ப்பை தவறவிட்டனர். நான் எனது ஆட்களில் ஒருவரைக்கூட இழக்க விரும்பவில்லை.

ஏற்கனவே போலீஸ்காரர்கள் வனத்துறையினர் என மொத்தம் 44 பேர் இவர்களால் உயிரிழந்து விட்டனர். குறைந்தது 80 அப்பாவிகளும் அவர்களால் கொல்லப்பட்டு விட்டனர். அதற்கு மேலும் நிறையப் பேர் உயிரிழந்திருக்கலாம். ஆனால் அதெல்லாம் பதிவாகவில்லை. அவர்கள் அனைவருமே மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருக்கின்றனர். அதெல்லாம் இன்று இரவோடு முடிவுக்கு வந்துவிட வேண்டும்.

எங்களின் பதில் தாக்குதலும் உடனடியாகவும் பெருமளவிலும் இருந்தது. அத்தனை பக்கமிருந்தும் தோட்டாக்கள் குக்கூனைத் துளைத்தன. துப்பாக்கிகளில் இருந்து தோட்டாக்கள் வெளியேற ஒரு ரிதத்துடன் பளிச் பளிச்சென்று நெருப்பு ஒளிர்ந்தது.

எனது கழுத்தில் ஏதோ சூடாக விழுந்ததைப் போல உணர்ந்தேன். பக்கத்தில் இருந்த சுந்தரத்தின் ஏ.கே. 47 துப்பாக்கியிலிருந்து இருந்து தெறித்த காலி ஷெல்கள் தான் அவை. நாங்கள் அருகருகே நின்று கொண்டிருந்ததால் அவற்றில் சில என் கழுத்தின்மீது தெறித்தன.

நான் இடதுபக்கத்திற்கு நகர்ந்தேன். துப்பாக்கியை சுடுவதற்குத் தயாராகப் பிடித்தேன். சுட ஆரம்பித்தேன்.

ஒரு சில தோட்டாக்களுக்குப் பின் சிறிது நிறுத்தினேன். மற்றவர்களும் சுடுவதை நிறுத்தியிருந்தனர். ஒரு செல்ஃப் லோடிங் ரைஃபில் மற்றும் கைத்துப்பாக்கி ரவைகள் குக்கூனில் இருந்து வந்தன.

கண்ணன் மீண்டும் சரணடையுமாறு எச்சரித்தார்.

மறுபடியும் அங்கிருந்து சில தோட்டாக்கள் வந்தன. அதைத் தொடர்ந்து அதிரடிப்படையின் துப்பாக்கிகள் சரமாரியாக சுட்டன. சிறிது நேரத்திற்குப் பிறகு நான் அத்தனை டீம்களையும் நிறுத்துமாறு சைகை காண்பித்தேன்.

மறுபடி அமைதி. இந்த முறை எதிர்த்தாக்குதல் இல்லை.

அந்த துப்பாக்கிச் சண்டை மெதுவாக மறைந்து ஒரு மந்தமான முணுமுணுப்பானது. சில பறவைகள் தங்களின் கூடுகளுக்குத் திரும்பின. ஆனாலும் ஒலி எழுப்பிக் கொண்டே இருந்தன. தூரத்தில் இன்னும் நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. குக்கூன் புகையும் தூசியும் சூழ்ந்து காட்சியளித்தது.

நான் ராஜராஜன் மற்றும் ஹூசேனுக்கு சைகை காண்பித்தேன்.

மற்றொரு வெடிகுண்டு குக்கூன் மீது எறியப்பட்டது. நெருப்பு ஜுவாலையுடன் ஒரு பெரும் சத்தம் கேட்டது. பின்னர் ராஜராஜன் டார்ச் அடித்தார். துப்பாக்கி பேரலுக்குக் கீழ் அந்த டார்ச்சை தொங்க விட்டிருந்தார். ஹுசேனும் டார்ச் அடித்தார். இரு ஒளிக்கற்றைகளும் ஒன்றிணைந்தன.

அவர்கள் இருவரும் எச்சரிக்கையாக குக்கூனை நெருங்கினர். ஒரு கலகலவெனும் ஓசை கேட்டது. பின்னர் சைக்கிளில் காற்று வெளியேறும்போது எழும் புஸ் என்ற சத்தம் கேட்டது. நுரையீரலுக்கும் மார்புக்கும் இடையில் மாட்டிக் கொண்டதைப் போல அந்தக் காற்றின் சத்தம் கேட்டது. காயம்பட்ட யாரோ காற்றை சுவாசிக்க போராடிக் கொண்டிருக்கிறார்.

பிறகு அமைதி நிலவியது.

ராஜராஜனும் ஹுசேனும் "எல்லாம் முடிந்தது" என்று கூறியது, இறுதியாக அங்கு நிலவிய அமைதியைக் குலைத்தது.

இந்த என்கவுன்டர் 10.50க்குத் தொடங்கியது. 20 வருடக் காத்திருப்பு 20 நிமிட கிளைமாக்ஸுடன் முடிந்து விட்டது.

ரத்தமும் உடலில் இருந்து வெளியேறிய நீர்மப் பொருட்களும் குக்கூனின் சுவர்கள், தரை, இருக்கைகள், உணவுப் பொட்டலங்கள் மற்றும் ஸ்ட்ரெச்சரில் சிதறிக் கிடந்ததை ஹுசேனும் ராஜராஜனும் பார்த்தனர். அவர்கள் அங்கிருந்து இரண்டு ஏ.கே. துப்பாக்கிகள், ஒரு 12 போர் ரெமிங்டன் பம்ப் ஆக்ஷன் துப்பாக்கி மற்றும் பிரபலமான 7.62 எம்.எம். எஸ்.எல்.ஆர். துப்பாக்கி ஆகியவற்றை எடுத்தனர்.

மூன்றுபேர் அங்கு ஒன்றாகக் கிடந்தனர் இறப்பதற்கு முன் அவர்களின் கடைசி சங்கமம். அவர்களின் உயிர் போகத் துடித்துக் கொண்டிருந்தபோது ஒருவரை ஒருவர் இறுகப்பிடித்துக் கொண்டிருந்திருக்கின்றனர். கொஞ்ச தூரத்தில் மற்றொரு உருவம் இறந்து கிடந்தது. அது கோவிந்தன் என பின்னர் அடையாளம் காணப்பட்டது.

அந்த நான்கு பேரும் குக்கூனில் இருந்து விரைவாக வெளியே எடுக்கப்பட்டு தரையில் கிடத்தப்பட்டனர். அருகில் வருமாறு கண்ணனுக்கு சைகை செய்துவிட்டு, எனது சதைப்பிடிப்பையும் பொருட்படுத்தாமல் அவர்கள் கிடத்தப்பட்டிருந்த இடம் அருகே சென்றேன்.

அந்தக் காட்சியை அப்படியே விவரிக்க வேண்டுமானால், இப்போதுதான் நான் வீரப்பனை நேருக்கு நேர் முதல்முறையாகப் பார்க்கிறேன். அவனால் பேச முடியவில்லை. இறந்து கொண்டிருக்கிறான். ஒரு தோட்டா அவனது இடது கண்ணைத் துளைத்திருந்ததைப் பார்த்தேன். பத்து வருடத்திற்கு முன் சொர்க்கம் பள்ளத்தாக்கில் செந்திலுக்கும் இப்படித்தான் துளைத்திருந்தது. அவன் மீசையை டிரிம் செய்திருந்தான். தனது வழக்கமான பச்சை உடை பிரவுன் பெல்ட் அணியாமல் சாதாரண உடை உடுத்தியிருந்தான். அவன் தனது பழைய அடையாளத்தை இழந்தவனைப் போலத் தோன்றினான்.

யுத்த தந்திரத்திலும் யுக்திகளிலும் அவன் ஒரு புத்திசாலித்தனமான எதிரியாக இருந்து வந்தவன். 52 வயதிலும் அவன் ஆரோக்கிய மானவனாகவும் பலசாலியாகவும் இருந்தான். பிறகு அவனது உடலை பிரேதப் பரிசோதனை செய்த டாக்டர் வள்ளிநாயகம், அவனது உடல்வாகு கண் பிரச்சினையைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் 25 வயதுக்காரனுடையது போல இருந்ததாகச் சொன்னார்.

அவன் தனது பெருமையாக நினைக்கக்கூடிய மீசைக்கு ஒரு முறை டை அடிக்கும்போது தெரியாமல் கண்ணில்பட்டு கண் பாதிக்கப்பட்டு விட்டதாக வதந்திகள் இருந்தன. அது ஓ.ஹென்றி கதையில் வந்த ஒரு வேடிக்கையைப் போல இருந்தது. அந்த மீசைக்கார கொள்ளைக்காரன் கடைசியாக தனது கண் சிகிச்சைக்காக மீசையை டிரிம் செய்தான். ஆனால் அது அவன் கண்களையும் உயிரையும் இழந்ததில் போய் முடிந்தது.

இந்த என்கவுன்டர் பற்றி மதிப்பீடு செய்தேன். எனது குழுவினர் தரப்பில் எந்த மரணமோ, படுகாயங்களோ இல்லை. அதற்காக நான் நன்றியுடன் கடவுளை நினைத்துக் கொண்டேன். மொத்தம் எங்கள் தரப்பில் இருந்து 338 தோட்டாக்கள் சுடப்பட்டிருந்தன. அதில் ஏழு புல்லட்டுகள் கோவிந்தன்

உடலில் இருந்தது. இரண்டு வீரப்பன் உடலைத் துளைத்து மறுபுறம் வெளியேறி இருந்தது. ஒரு தோட்டா அவனது உடலில் தங்கி இருந்தது.

ஒரு துப்பாக்கிச் சண்டையில் எத்தனை தோட்டாக்கள் இலக்கைத் தாக்கும் என்று முன்கூட்டியே கணிப்பது கடினம். அருகருகே இருக்கும் இருவர் மீது கூட ஒரே எண்ணிக்கையிலான தோட்டாக்கள் பாயாமல் இருந்திருக்கலாம் அல்லது அவர்களின் காயங்களும் ஒரே அளவில் இல்லாமல் இருக்கலாம். 1980ல் லண்டனில் ஈரான் தூதரகத்தில் இருந்த 26 பணயக் கைதிகளைக் காப்பாற்ற எஸ்.ஏ.எஸ். நடத்திய தாக்குதலில் 82 தோட்டாக்கள் ஒரே ஒரு பயங்கரவாதி மீது பாய்ந்திருந்தன. அதே சமயத்தில் அவனுடைய மற்ற சகாக்கள் ஐந்து பேர் மீது பாய்ந்திருந்த தோட்டாக்களின் எண்ணிக்கை ஓரிலக்கத்தில்தான் இருந்தன.

இந்த துப்பாக்கிச் சண்டையில் முதலில் தாக்குதலுக்குள்ளானது செல்பி ஸ்டிக்கில் இருந்த லேம்ப்தான். உடைந்த அந்த பல்ப்பின் கண்ணாடித் துண்டுகள் எஸ்.ஐ. ராஜேஷ் கண்ணாவின் கண்களுக்கு நெருக்கமாக வந்தது. நல்லவேளையாக அவருக்கு பெரிய காயம் எதுவும் ஏற்படவில்லை. சொல்லப்போனால் அந்த விளக்கு வெளிச்சம் எங்களுக்கு பெரிதாக தேவைப்படவில்லை. காரணம், குக்கூனில் இருந்த வெளிச்சமே போதுமானதாக இருந்தது.

சார்லஸ் ஒரு மாயாவியைப் போல, பெட்ஷீட்டைப் போன்ற கருப்புத் துணி ஒன்றை வெளியே எடுத்தார். தலையில் கைக்குட்டை போல் கட்டிக்கொள்வதற்காக சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டுவதற்காக அந்த துணியை வைத்திருந்தார். ஆனால் அந்த உற்சாகத்தில் அனைவரும் அதை மறந்தே போய் விட்டோம். ஆனால் இப்போது அவர்கள் நான்கு பேரையும் போர்த்துவதற்கு அந்தத் துணி பயன்பட்டது.

கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் அதிரடிப்படை குழுவினர் மத்தியில் முணுமுணுப்பு அதிகரித்ததை நான் கவனித்தேன்.

குக்கூனில் வருவது யார் என்று எங்கள் வீரர்களுக்குத் தெரியாது. எனவே, இப்போது அவர்கள் யார் என்று தெரிந்ததும், அதை நம்ப முடியாமல் தங்களுக்குள்ளேயே முணுமுணுக்கத் தொடங்கி விட்டனர்.

“இது உண்மையிலேயே அவனாத்தான் இருக்குமா?”

“அவனைப் போலவே இருக்கும் யாரோ ஒருத்தனா?”

அது வீரப்பன்தானா என்ற சந்தேகம் அதிரடிப்படையிலே ஒலித்தது. அனைவரும் அருகே வந்து வீரப்பனை அதிசயக்கண்களோடு பார்த்தனர்.

## பிரதமரின் பிரத்யேக பாராட்டு!

“வீரப்பனா இது” என்று சந்தேகமாக வந்த அதிரடிப்படையினருக்கே, அருகே வந்து பார்த்ததும் ஆச்சரியம்.

“இது வீரப்பனேதான்” சத்தமாகக் கத்த ஆரம்பித்து விட்டனர்.

அவர்கள் நான்கு பேரையும் அவசரமாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று நான் சைகை காட்டினேன். அவர்கள் நான்கு பேரும் ஆம்னி வேனில் ஏற்றப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்டனர்.

திடீரென்று “எஸ்.டி.எஃப். வாழ்க” என்று அவர்கள் கோஷம் போட்டனர்.

உற்சாகம் கொப்பளிக்க அவர்கள் குதிக்க ஆரம்பித்தனர். என்னைத் தோளில் தூக்கிக்கொண்டு சுற்றினர். கண்ணனையும் அதே போல் தூக்கினர்.

அடுத்து ஹுசேன், ராஜராஜன், திரு.சம்பத் மற்றும் சரவணன் முறை.

அங்கிருந்த அதிகாரிகள், டீம் லீடர்கள் அனைவரும் உற்சாகத்தில் மிதந்தனர். இந்த நிமிடத்திற்காக பல ஆண்டுகளாக காத்துக்கிடந்த தலைமைக் காவலர்களும் சொல்ல முடியாத உற்சாகத்தில் இருந்தனர்.

திடீரென ஒரு சிறு அமைதி நிலவியது. கொஞ்ச தூரத்தில் அமைதியாக தனது மொட்டைத் தலையைத் தடவியபடி நின்று கொண்டிருந்த துரையை எஸ்.டி.எஃப். குழுவினர் கேள்விக்குறியோடு பார்த்தனர். அவர்கள் யாருக்குமே துரை யார் என்று தெரியாது. ஆனால், இந்த ஆபரேஷனில் அவர் முக்கியமான

பங்கு வகித்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டனர். துரையையும் தூக்கினர்.

பிறகு என்னை தரையில் இறக்கி விட்டனர். பள்ளியின் படிக்கட்டுகளில் இரண்டு இரண்டாகத் தாவி ஏறினேன். பின்னர் கைப்பிடிச் சுவரில் ஏறி அமர்ந்து, தொலைபேசியை எடுத்துப் பேசினேன்.

''சி.எம். நைட் தூங்கப் போயிட்டாங்க. ஏதாவது அவசரமா?'' ஜெயலலிதாவின் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் கேட்டார்.

''நான் சொல்லப் போறதை அவங்க விரும்புவாங்கன்னு நினைக்கிறேன்'' என்று சொன்னேன்.

கொஞ்ச நேரம் கழித்து தொலைபேசியில் அவரது குரலைக் கேட்டேன்.

''அவனைப் பிடிச்சிட்டோம், மேடம்'' என்றேன். பிறகு அந்த ஆபரேஷன் தகவல் முழுவதும் விரைவாக விளக்கினேன். 'வீரப்பன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும், ஆனால் அவன் உயிர்பிழைக்க வாய்ப்பு குறைவு' என்று தெரிவதாகவும் சொன்னேன். வழக்கம்போல் அவர் தனது நிதானமான மிடுக்குடன் பேசினாலும், அவரது குரலில் இருந்த உற்சாகத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ''உங்களுக்கும் அதிரடிப்படைக்கும் வாழ்த்துக்கள் மிஸ்டர் விஜயகுமார். நான் சி.எம். ஆனதில் இருந்து கேட்ட மிகச் சிறந்த செய்தி இதுதான்'' என்றார்.

வானத்தை அண்ணாந்து பார்த்தபடி, எனது அதிர்ஷ்ட டாலரைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். அதிரடிப்படை வீரர்கள் சிலர் இன்னும் பிறக்காத தங்களின் பேரப்பிள்ளைகளுக்குக் காட்டுவதற்காக அங்கிருந்து சில நினைவுப் பொருட்களை எடுத்து பாக்கெட்டில் வைத்துக் கொண்டனர். துப்பாக்கி வைத்திருப்பவர்கள் துப்பாக்கி சம்பந்தமானவற்றை எடுத்துக் கொண்டனர். சிதறிக் கிடந்த சில துண்டு தோட்டாக்களை எடுத்துக் கொண்டனர். இந்த மறக்க முடியாத இரவு குறித்து யாருக்கேனும் கதை சொல்லும் போது நிச்சயமாக அவர்களுக்கு அளவிட முடியாத பெருமையும் மகத்தான

ஆனந்தமும் ஏற்படும். எனக்கு வேண்டிய நினைவுப் பொருள் எனது மார்புப்பகுதியில் இருந்தது. எனது சகாவால் சுடப்பட்ட அந்த எம்டி செல். தற்போது எனது வியர்வையில் நனைந்திருந்தது. எனது கையில் வைத்து அதைச் சிறிது நேரம் சுழற்றிக் கொண்டிருந்தேன். இன்னும் பிறக்காத எனது பேரக்குழந்தைக்கு அதை நினைவுப் பொருளாகக் காட்டுவதற்காக பத்திரமாக வைத்திருப்பது என்று முடிவு செய்தேன்.

இப்போது பன்னாரி கோயிலுக்குப் போக வேண்டிய நேரம். அங்கு சென்று முடி காணிக்கை செய்துவிட்டு நன்றியோடு பன்னாரி தேவியைக் கும்பிட வேண்டும். இந்த திட்டம் நல்லபடியாக முடிய வேண்டும் என்ற கவலையோடு, தனிமையில் தவித்துக் கொண்டிருந்தபோது மேற்கொண்ட எனது வேண்டுதல் அப்போதுதான் முடிவுக்கு வரும்.

நான் எனது ஜீப்பை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். ஜீப்பில் ஏறுவதற்கு முன் கடைசியாக திரும்பி ஒரு முறை குக்கூனைப் பார்த்தேன்.

அந்த குக்கூனின் மேலிருந்த நீலக்கலர் சுழல் விளக்கு சண்டை முழுவதும் தனக்கே உரிய ரிதத்தோடு சுழன்று கொண்டிருந்தது. ஆச்சரியப்படும் வகையில், அந்த விளக்கின் மீது ஒரு தோட்டாகூட படவில்லை. தற்போது “இலக்கை அடைந்தாயிற்று” என்று சொல்வதைப் போல தனது சுழற்சியை நிறுத்திக் கொண்டுவிட்டது.

மீனாவுக்கு போன் செய்து, ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது பற்றிச் சொல்வதற்கு முயற்சித்தேன். இது வெற்றிகரமாக முடிய வேண்டும் என ஆர்வமாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார் மீனா. ஆனால் நான் சொல்வதற்கு முன்பே பி.பி.சி., சி.என்.என். மற்ற இந்திய சேனல்கள் எல்லாம் இந்தச் செய்தியை ஒளிபரப்பி சஸ்பென்சை உடைத்துவிட்டன. பிறகு நான் சத்தியமங்கலத்தில் என் வீட்டுக்குப் போனபோது ஒரு பெரிய கூட்டமே என்னை ஆரத்தி எடுத்து வரவேற்றது. கண்களில் பெருமிதமும் பாராட்டும் ததும்பியபடி மீனா பின்னால் நின்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மீனாவை தட்டிக் கொடுத்து தழுவிக் கொண்டேன். ஆனால் எனது உண்மையான உணர்வை அவரிடம் வெளிப்படுத்த முடியவில்லை.

வீரப்பன் பிடிக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டு பின் கொலை செய்யப்பட்டதாகவும், இந்த என்கவுன்டர் போலி என்கவுன்டர் என்றும் வதந்திகள் பரவின. மீடியாக்களும் அதை ஊதிப் பெருக்கின. இத்தகைய வதந்திகள் அதிரடிப்படையின் நேர்மைக்கும் வலிமைக்கும் ஒரு அவமானம்.

வீரப்பனின் மனைவி சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி இந்த என்கவுன்டர் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடுமாறு கோரினார். ஆனால் நீதிமன்றம் அந்த மனுவை தள்ளுபடி செய்தது மட்டுமன்றி, அதிரடிப்படையைப் பாராட்டவும் செய்தது.

வீரப்பனின் கைவிரல் முனைகள் கருப்பாக இருந்ததால், அவனது விரல்கள் எரிக்கப்பட்டன என்று சிலர் கூறினர். ஆனால் உண்மையில், அவனது கைவிரல் ரேகைகளை முதல்முறையாக பதிவு செய்வதற்காக அவனது விரல்களில் மை பூசப்பட்டிருந்தது.

இதுதவிர என்கவுன்டர் நடந்ததற்கு சில நாட்களுக்கு முன்பே அந்த ஏரியாவில் அந்த ஆம்புலன்ஸ் நடமாடியது என்றும், எனவே அதிகாரபூர்வமாக போலீஸ் அறிவித்த நாளுக்கு ஒரு சில தினங்களுக்கு முன்பே வீரப்பனைப் பிடித்து விட்டார்கள் என்றும் வதந்திகள் பரவின. அவர்கள் பார்த்ததாகச் சொன்ன அந்த ஆம்புலன்ஸ் உள்ளூர் மக்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக நாங்கள் ஏற்பாடு செய்த ‘மக்களுக்கான மருத்துவ சேவை’ என்ற நிகழ்ச்சிக்காக சுற்றித் திரிந்தது. பாடியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஏற்பட்ட குண்டுக் காயங்களால் வீரப்பன் இறந்தான் என்பதுதான் உண்மை.

18 அக்டோபர் 2004, திங்கள் இரவு 11.10

கூஸ் முனிஸ்வாமி வீரப்பனின் கோப்பு மூடப்பட்டது.

மறுநாள், 19 அக்டோபர் 2004 காலை 10 மணி.

திம்பம் மலையில் இருந்த கெடேசல் கோயிலில், அந்தப் பூசாரி ஒட்டடைகளையும் தூசியையும் கையை அசைத்து சுத்தம் செய்தார். அந்த கிராமத்தின் கோயில் கருவறையின் கதவுகளை ஈரத்துணி வைத்து

மெதுவாகத் துடைத்தார். கதவுகளை அவர் தள்ளித் திறந்தபோது அவருக்கு வியர்த்துக் கொட்டியது. கதவு திறந்தபோது, பல காலம் சேர்ந்திருந்த தூசி அவர் மீது விழுந்தது. அப்போது அவர் ஆசீர்வாதம் பெறுவது போலக் கண்களை மூடி அந்தத் தூசியை ஏற்றுக் கொண்டார்.

அந்தக் கருவறையின் அளவு 6 அடிக்கு 4 அடிதான். அங்கே சிவலிங்கம், சுத்தப்படுத்தப்படாமல் அப்படியே இருந்தது. அந்த கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒருவருக்கு ஜடையன் என்று பெயர் இருக்கும்.

பூசாரி சிவலிங்கத்தைக் கழுவினார். அவரது உடல் நடுங்கியது. “எங்களை மன்னிச்சுடுங்க சாமி. நீங்கதான் எங்களுக்கு எல்லாம். உங்களை எப்படி எங்களால பார்க்காம இருக்க முடியும்?” என்று அமைதியாக பிரார்த்தனை செய்தார்.

கெடேசலில் வீரப்பனும் அவனது ஆட்களும் அந்தக் கொடூரத்தை நிகழ்த்தி பத்து ஆண்டுகளும் பத்து நாட்களும் ஆகிவிட்டது. அதிரடிப்படைக்கு துப்புச் சொல்லும் அந்த கிராமத்துத் தலைவன் ஜடையனைத் தேடி ரத்த தாகத்தோடு அவர்கள் அலைந்து கொண்டிருந்தனர். அந்தத் தேடல் கடைசியாக அந்தக் கோயிலின் அருகே ஐந்து பேரைக் கொலை செய்வதில் போய் முடிந்தது.

“அந்த நேரத்துல தெய்வம் எங்களுக்கு துணைக்கு வரல. அதைத் தினம் தினம் கும்பிடுறதுல அர்த்தமே இல்லையே?” என்று கிராமத்தினர் கூறினர். அன்றோடு அந்தக் கோயில் வாசல் பூட்டப்பட்டது.

இன்று நிலைமை மாறிவிட்டது. வீரப்பன் இறந்துவிட்டான். கெடேசலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட்டுவிட்டது.

பூசாரி மணி அடிக்கத் தொடங்கினார். கிராமத்தினர் அனைவரும் கோயிலுக்கு வெளியே கூடிய சந்தடியை அவரால் கேட்க முடிந்தது. மெதுவாக அவர்களின் குரல்கள் ஒன்றிணைந்து அவர்கள் பாடத் தொடங்கினர்.

பூசாரி புன்னகைத்தார். “எல்லாம் நேரம்தான்... எங்கள மன்னிச்சுடு” என்று நினைத்தார். கடவுள் சிலை முன்பு குனிந்து வணங்கினார்.

அக்டோபர் 19. அப்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் என்னை தொலைபேசியில் அழைத்து, பிரதமர் மன்மோகன்சிங் என்னை பிரத்யேகமாக பாராட்டியதாகச் சொன்னார்.

அக்டோபர் 30, முதலமைச்சர் அரசு விழா ஒன்றையும் விருந்தையும் சென்னையில் நடத்தினார். அதில் எனக்கும், வால்டர், நட்ராஜ், கண்ணன் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. அதிரடிப்படையில் பணியாற்றிய ஒவ்வொருவருக்கும் ஒரு மனையும் ரூ.3 லட்சம் ரொக்கமும் வழங்கப்பட்டது. அனைவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டது. டி.எஸ்.பி. ரேங்க் வரையில் உயர்வு வழங்கப்பட்டது.

## வீரப்பனின் ஜாதகக் கோளாறு!

2001—ம் ஆண்டு இறுதி வாக்கில் எங்களின் புலனாய்வுப் பிரிவு சோர்ஸ் ஒன்று, ஒருவரின் பிறந்த தேதி மற்றும் ஜாதகத்தை, அதிரடிப்படையின் தலைமையகத்தில் கொடுத்தது. அதில் அந்தக் குழந்தையின் தந்தை முனிஸ்வாமி என்றும் தாயார் பொன்னுத்தாயம்மாள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. குழந்தையின் பிறந்த தேதி 1952 ஜனவரி 18. அந்த ஜாதகம் கூஸ் முனிஸ்வாமி வீரப்பனுடையது.

நாங்கள் ஸ்தம்பித்துப் போனோம். ஆனால் உடனடியாக சந்தேகங்களும் எழுந்தன. இந்த ஜாதகம் உண்மையா அல்லது போலியா? வீரப்பனின் சொந்த கிராமமான கோபிநத்தத்தைச் சேர்ந்த முதியவர்கள் சிலர், அந்த ஜாதகம் உண்மையானதுதான் என உறுதிப்படுத்தினர்.

அதிரடிப்படையில் இருந்த சிலரும் ஜோதிடத்தில் ஆழமான நம்பிக்கை வைத்திருந்தனர். ஜாதகம் பார்க்கும் நிபுணர்களை வரவழைத்து, அவர்களிடம் எங்களுக்கு சவால்விட்ட நபரின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று கேட்டனர்.

வீரப்பன் அவனது பதினான்கு, பத்தொன்பது, முப்பத்திரண்டு, நாற்பத்தைந்து மற்றும் ஐம்பத்தைந்து (52 வயதில் அவன் மரணமடைந்தான்) ஆகிய வயதுகளில் சோதனையை அனுபவிப்பான். 65 வயது வரையில் அவன் உயிரோடு இருந்துவிட்டால், அவன் எழுபத்தெட்டு வயது வரையில் உயிரோடு இருப்பான் என்று அந்த ஜாதகம் சொல்லிற்று.

அவனுக்கு சாதகமான சில அம்சங்களும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. எடுத்த காரியம் எதுவாக இருந்தாலும் சிறப்பாக செய்து முடிப்பான் என்று அந்த ஜாதகம் குறிப்பிட்டது. அதே சமயத்தில் சிவப்பு கண்களை

உடையவனாக இருப்பான். படிப்பு குறைவு, நன்றிகெட்டவன், சுயநலமி, பெண் பித்தன், குறுகிய புத்தி உடையவன், முன்கோபி என்றும் அது கூறியிருந்தது. பெரிய மனிதர்கள் அவனைத் தேடுவார்கள் என்றும், அவன் அரசாங்கத்தின் எதிரியாக இருப்பான் என்றும் ஜாதகம் கூறியது.

அவன் வீட்டைவிட்டு ஓடி விடுவான். அவனது சொந்த மாநிலத்தை விட்டு வெளியே வசிப்பான். அவனது பெரும்பான்மையான வாழ்க்கை வனவாசமாகத்தான் இருக்கும். அவனுக்கு ராஜதண்டனை கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றெல்லாம் அந்த ஜாதகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இந்தக் கடைசி கணிப்பு ஜோதிடத்தை நம்புவோரின் நம்பிக்கைக்கு ஒரு பெரிய ஆதாரமாக இருக்கும். சந்தேகப்படுபவர்கள் அதைக் கேலி செய்யலாம். ஆனால் நீங்கள் ஒரு நிச்சயமற்ற எதிர்காலத்துடன் ஆபத்தான வாழ்க்கையை வாழும்போது ஒவ்வொரு சின்னச் சின்ன நம்பிக்கையும் உங்களுக்குக் கைகொடுக்கும்.



**விறுவிறுப்பான ஆனால் சோர்வான நாட்கள் —** எஸ்.பி.ஜி (1986), லேட் ராஜீவ் காந்தி, ராகுல் காந்தி, மற்றும் சிபிடி, ஆர்ஆர்பிஎன் தலைவர்கள், ரவி சஹானி



**ரோஸி மற்றும் விட்னி ஹௌஸ்டன் தாளத்திற்கு (1986) —** கோஸன் மற்றும் டிக்குவிற்கு பின்னால் (வலது புறத்திலிருந்து மூன்றாவது)



பிளவுப்பட்ட ஆற்றின் நடுவில் ஒன்றுப்பட்ட குழு, சந்தானம் அவர்களுடன்.



**துணிவுமிக்கவருக்கு வீர வணக்கம் —** ஹெட் கான்ஸ்டபிள் செல்வராஜுக்கு இறுதி அஞ்சலி. அஷோக் குமார் (இடது புறம் வெள்ளை சட்டையில்), சஞ்சய் அரோரா (இடமிருந்து மூன்றாவது), டிஜஜி. ராதாகிருஷ்ணன், ஷங்கர் பிதாரி, ஏடிஜி குமாரசாமி மற்றும் டிஜிபி வால்டர் தேவாரம்.



**வெற்றியடைபவன் ஓடுவது இல்லை, ஓடுபவன் வெற்றி அடைவதில்லை (1999) —** (இடமிருந்து வலம் — காய்ந்த நதியோரத்தில், ஹுசைன், ராஜராஜன் மற்றும் கண்ணன்.



**தாக்குதலுக்கு தயாரான நிலையில் (2003) –** வன முகாமில் தன் சகாக்களுடன்.



**கர்னாடக ஏஸ்.டி.எஃப்வுடன் (2003) —** (இடமிருந்து) எஸ்.பி. சண்முகவேல், டி.எஸ்.பி. அஷோக் குமார், நான், ஐ.ஜி. மிர்ஜி, எஸ்.பி. மதுகர் ஷெட்டி.



தட்டக்கரை எஸ்.டி.எஃப் நினைவுச்சின்னம் அருகில், புத்தாண்டு தினத்தன்று உறுதிமொழி எடுக்கும் பொழுது (2003)



**தாக்குதலுக்கு முன்னால் (2004) –** உளவுத்துறையுடன் (நடுவில்)



**போரில் இரத்த சொட்டுகளை விட அமைதியான நேரத்தில் வியர்வை அதிகம் வழிகிறது. (2004) —** ‘ஒரு நிமிட பயிற்சி’க்கு முன்னால் இளைஞர்களுக்கு விளக்கவுரை.



**தலைவர் வழிநடத்துகிறார் (2004) —** ‘வாண்டரிங் வயர்’ ஐ தேடி ஹுசைனும், கண்ணனும்.



**காட்டின் தொலைவில் (2004) —** நாங்கள் தங்கும், படுக்கும் பச்சை பாலிதீன் ஷீட் பக்கத்தில் விரைவான தகவல் பறிமாற்றம்.




**துணிச்சலான போர் (2004) —** துப்பாக்கி சூட்டின் பிறகு.



**இலக்கை அடைந்த தருணம் (2004) —** ஆபரேஷன் குக்கூன் வெற்றியில் எஸ்.டி.எஃப் குழு கொண்டாட்டம்.




**ஆபரேஷன் குக்கூன் வெற்றிக்கு பாராட்டு விழா (2004)** (இடமிருந்து) ஏடிஜி நட்ராஜ், நான், டிஜிபி ஐ.கே. கோவிந்த், அன்றைய முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா, மற்றும் இன்னும் சிலர்.



**வீட்டில் (2008) —** (இடமிருந்து) மகன் அர்ஜுன், மருமகன் தீபக் மேனன், மகள் அஷ்வினி, மனைவி மீனா, மருமகள் Dr. கீதா அர்ஜுன், பேரப்பிள்ளைகள் ஆதித்யா, அத்வைத்